# ஸ்ரீ ராகவேந்திர மகா காவியம்

SRI RAGHAVENDRA MAHA KAVIYAM

ஆசிரியர்
புக்குளம் ஸ்ரீ ராகவேந்திரப் புலவர்
ம. இராமன், M.A. M.Ed.,

**குறள் நெறிப் பதிப்பகம்**
12, சீனிவாச லு நாயுடு தெரு,
அயன்புரம், சென்னை-23.

**Publisher**

KURAL NERI PATHIPAGAM
12, SRINIVASULU NAIDU STREET,
AYANAVARAM, MADRAS-600 023.

COPIES 1000
First Edition 1992
ISBN 81-900241-0-8
Price : Rs. 125.00

***Printer***

Sekar Offset Printers
168, Big Street, Triplicane, Madras-600 005.

# பதிப்புரை

நம் தமிழ் கூறும் நல்லுலகம் பண்டைக் காலத்திலிருந்தே தொடர்ந்து திருவருள் ஞானம் கொண்ட வேதாந்திகள், சித்தாந்திகளை, ஈன்று அவனிக்குத் தந்த பெருமையுடையது.

அவர்களது கர்ம, யோக, ஞான சித்துக்களாலும் தவ வலிமையாலும், அருளறத்தாலும் என்றும் வான் புகழ் கொண்டது. அகத்தியர், திருவள்ளுவர், திருமூலர், அப்பர், சுந்தரர், ஞானசம்பந்தர், மாணிக்க வாசகர், ஆதிசங்கரர், இராமானுஜர், மத்வர், ஆழ்வார்கள், தாயுமானவர் வள்ளலார் போன்ற அருளனுபவமுடைய ஞானிகள் அவதரித்தனர். பக்தி, அருள் இகத்தே பெற்று பரத்தை அடைவான் வேண்டி சங்குகர்ணர், ஸ்ரீராகவேந்திர சுவாமிகளாகத் திரு அவதாரஞ் செய்தார்

அந்த மகான் பல அற்புதச் சித்துக்களை மக்கள் நலம் வேண்டி செய்து, அருளினார். மாத்வ நெறியின் மகிமைதன்மை இம்மாநிலம் அறியப் பகர்ந்தார். புவனகிரியில் தோன்றி கும்பகோணத்தில் வளர்ச்சியுற்று, மந்தராலயத்தில் தன்னை ஐக்கியப்படுத்திக்கொண்ட அருளாளர். மேலை நாட்டார்க்கும், புறமதத்தார்க்கும் தம் அற்புதச் செயல்களால் அருளனுபவம் தந்த மகான். பிருந்தாவனங்கள் தோன்றி உலகம் செழிக்க, எங்கும் நிறைந்து இயங்கும் மாத்வ ஜோதியானவர் ஸ்ரீமத் இராகவேந்திர சுவாமிகள் 21ம் நூற்றாண்டில் கதை கவிதைகள், வெளி வந்தனவேயன்றிப் பெருங் காவியம் யாதும் வெளிவரவில்லை. காலப் பொருத்தம் வாய்க்க, இகலோக சௌபாக்கியங்கள் வழங்கும் இராக வேந்திர மகாகாவியம் தமிழ்த் தாயின் திருவடிகளின் திருமலராக உதயமாயிற்று. இப்புனித நூல் நன்னிலையில் துலங்குமாறு 27.5.87 ஆம் நாள் தன் திருக்கரத்தால் "ஸ்ரீஇராகவேந்திரர் துணை" என்று திருச்சுழியிட்டுத் துவக்கி வைத்த சூப்பர் ஸ்டார் திரு ரஜினிகாந்த் அவர்களுக்கு என் நன்றியைக் காணிக்கை ஆக்குகின்றேன்.

இம்மாபெரும் காவியம் வெளிவர எனக்கு உதவ உடல்உழைப்பும், உள்ள உழைப்பும் நல்கிக் கருப் பொருள், பருப்பொருள் நிலைகள் நவின்று ஆக்கமும் ஊக்கமும் தந்த என் உள்ளம் கவர்ந்த பேராசிரியர், மயிலம் திரு. வே. சிவசுப்ர மணியனார், திரு. V. சுப்ரமணியன். டாக்டர் R.K. நாகு, திம்மலை நடேசனார், அருள் விளக்கம், திரு. அண்ணாமலை அடிகளார் அம்பத்தூர் V. குப்புசாமி அவர்கள் திருவருள் பால் நிலையம் தனபாலன் கோ தேவராசன் MA MEd சன்மார்க்க செம்மல் திரு. மகாபாண்டியன், ஆகிய சான்றோர்களுக்கு நான் என்றும் நன்றிக்கடன் பட்டுள்ளேன். என்பதை மனமார தெரிவித்துக்கொள்கின்றேன். பல்காலும் நூல் செப்பனிடப்பாடுபட்ட திரு. P. ஜானகி ராமன் திரு. S. கிருஷ்ணமாச்சாரி, திரு. இரா. உமாபதி ஆகியோர்க்கும் வீனஸ் கம்யூகிராப்பிக்ஸ் சேகர், பிரிண்டர்ஸ், மற்றும் V.இராமு, மானேஜர், S.M.S.O.பர்மனென்ட் நிதி ஆகியோருக்கும் என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இங்ஙனம் அருள் நிறை பக்திப் பணியான ஸ்ரீராகவேந்திர மகா காவியம் நூல் இயற்றுமாறு என்னை உய்யக் கொண்டருளிய சற்குரு ஸ்ரீராக வேந்திரர். என்னுளே மலர்ந்து என்னுளே கனிந்து இந்நூலை யாத்துள்ளார் என்றே எண்ணுகிறேன் அல்லாது,யான் புரிந்தது புரிவது புரிவேன் எனல் ஒன்றுமில்லை. அம்மகானின் திருவடி மலர்களை உச்சி மேற்கொண்டு பாடி உளநிறை வோடு வணங்கி அமைகின்றேன்.

*டாக்டர் நா. சுப்புரெட்டியார் அவர்கட்கும், திருப்பதி தேவஸ்தானத்திற்கும் எனது மனமார்ந்த நன்றி*

இங்ஙனம்

**ஆசிரியர்**



THIS BOOK IS PUBLISHED WITH THE FINANCIAL ASSISTANCE OF TIRUMALA TIRUPATHI DEVASTHANAMS UNDER THIER SCHEME "AID TO PUBLISH RELIGIOUS BOOKS".

# பொருளடக்கம்


| | |
|---|---|
| *காவியச்சுருக்கம்* | IX - L |
| விநாயகர் காப்பு | 1 |
| மாஞ்சாலியம்மன் துதி | 1 |
| அவையடக்கம் | 2 |
| காலம் காரணம் | 4 |
| ஸ்ரீராகவேந்திரர் போற்றிப் பதிகம் | 5 |
| மத்வர் வழிமுறை மகாத்மியம் | 10 |
| திருமிகு மூலராமர் வரலாறு | 12 |


## 1. சம்பவ காண்டம்


| | | |
|---|---|---|
| 1. | நாட்டுப் படலம் | 17 |
| 2. | ஆற்றுப் படலம் | 23 |
| 3. | நகரப் படலம் | 26 |
| 4. | பூர்வ அவதாரப் படலம் | 33 |
| 5. | ஸ்ரீ இராகவேந்திரர் திருவவதாரப் படலம் | 55 |
| 6. | பாலகுமாரப் படலம் | 71 |
| 7. | கலைபயில் படலம் | 79 |


## 2. இல்லற காண்டம்


| | | |
|---|---|---|
| 1. | குலமுறை கிளத்துப் படலம் | 84 |
| 2. | திருமணப் படலம் | 90 |
| 3. | பரிமளப் படலம் | 102 |
| 4. | மகப்பேறு படலம் | 116 |
| 5. | மந்த்ர மகிமைப் படலம் | 120 |
| 6. | உளத்துறவு படலம் | 123 |
| 7. | பற்றறுத்த படலம் | 12[illegible] |

## 3. துறவற காண்டம்


| | | |
|---|---|---|
| 1. | நாமகள் காட்சிப் படலம் | 146 |
| 2. | பட்டிமன்றப் படலம் | 156 |
| 3. | பட்டாபிடேகப் படலம் | 164 |
| 4. | அன்னை சரஸ்வதி பாய்க்கு அருள்செய் படலம் | 171 |
| 5. | ஸ்ரீ ராகவேந்திரர் கடனறி படலம் | 176 |
| 6. | ஸ்ரீ ராகவேந்திரர் தரிசனப் படலம் | 195 |
| 7. | சோதிடப் படலம் | 198 |


## 4. புகழ்நிலைக் காண்டம்


| | | |
|---|---|---|
| 1. | தலயாத்திரைப் படலம் | 200 |
| 2. | பட்ட சங்கரகப் படலம் | 241 |
| 3. | சாதுர் மாத விரதப் படலம் | 244 |
| 4. | முடவனுக்கு முத்தியளித்த படலம் | 247 |
| 5. | வாதுவெல் படலம் | 250 |
| 6. | ஸ்ரீ இராகவேந்திரர் விசயப் படலம் | 253 |
| 7. | மாணவர் மயக்கறு படலம் | 254 |


## 5. அற்புதக் காண்டம்


| | | |
|---|---|---|
| 1. | பட்டமரம் துளிர்த்த படலம் | 265 |
| 2. | பாலை வனக்கேணி படலம் | 269 |
| 3. | சுடுமணலின் மீட்ட படலம் | 271 |
| 4. | மந்த்ராட்சதை நிறம் மாறிய படலம் | 274 |
| 5. | ஸ்ரீ ராகவேந்திரர் நாம மகிமைப் படலம் | 280 |
| 6. | சித்தி மசூத்கானுக்கு அருள்செய் படலம் | 287 |
| 7. | ஸ்ரீ ராகவேந்திரர் தீர்த்த மகிமைப் படலம் | 293 |

## 6. பிருந்தாவன காண்டம்


| | | |
|---|---|---|
| 1. | பிருந்தாவனப் படலம் | 301 |
| 2. | மாஞ்சால மகிமைப் படலம் | 306 |
| 3. | மாஞ்சாலியம்மன் தரிசனப் படலம் | 310 |
| 4. | பிருந்தாவன எழுச்சிப் படலம் | 313 |
| 5. | பஞ்சமுக ஆஞ்சனேயர் தரிசனப் படலம் | 320 |
| 6. | ஸ்ரீ ராகவேந்த்ரர் பிருந்தாவனப் பிரவேசப் படலம் | 322 |
| 7. | அப்பண்ணர்க்கு அருள்செய் படலம் | 335 |


## 7. நிலைபேறு காண்டம்


| | | |
|---|---|---|
| 1. | மந்த்ராலய மகிமைப் படலம் | 339 |
| 2. | தாமஸ் மன்றோவிற்கு அருளிய படலம் | 345 |
| 3. | துங்க பத்திரை மகிமைப் படலம் | 348 |
| 4. | ஸ்ரீ ராகவேந்திரர் வெள்ளிரதப் படலம் | 352 |
| 5. | தாசிக்கு அருள்செய் படலம் | 357 |
| 6. | மேலைநாடு புக்கப் படலம் | 361 |
| 7. | தங்கக் கவசப் படலம் | 364 |
| | வணக்கமும் வாழ்த்தும் | 367 |

*ஸ்ரீ ராகவேந்திரர் துணை*

# பூஜ்யாய ஸ்ரீராகவேந்த்ராய சத்யதர்மரதாயச
# பஜதாம் கல்ப வ்ருக்ஷாய நமதாம் காம தேனவே.

## காவியச்சுருக்கம்

தமிழ் கூறும் நல்லுலகத்துப் பழமையான பதியாகிய சிதம்பரத்திற்கு அண்மையிலே புவனகிரியில் அவதரித்த மகான் ஸ்ரீராகவேந்திரர் ஆவார். இன்றைக்கு சற்றேறக்குறைய 300 ஆண்டுகட்கு முன் ஜீவித பிருந்தாவனத்திற்கு செல்லுமுன் தீர்க்க தரிசனமாகக் கூறியபடி அவரைப் பற்றி இப்பொழுது காவியம் தோன்றியுள்ளது. "முன் சொல் ராகவர் முன்னூறு ஆண்டினில் நன் சொல் காவியம் நலம்பெற த்தோன்றும்" என்பது ஸ்ரீராகவேந்திரரது தீர்க்கதரிசனமாகும்.

அத்தகைய ஸ்ரீராகவேந்திர மகாகாவியம் ஏழு காண்டங்களைக்கொண்டுள்ளது. அவற்றில் முதலாவது சம்பவகாண்டமாகும். இரண்டாவது இல்லற காண்டமாகும், மூன்றாவது துறவற காண்டம், நான்காவது புகழ்நிலை காண்டம், ஐந்தாவது அற்புதகாண்டம் ஆறாவது பிருந்தாவனகாண்டம், ஏழாவது நிலைபேறுகாண்டம் ஆகும்.

மேலே கூறியுள்ள ஏழுகாண்டங்களில் முதலாவது சம்பவ காண்டத்தில் பிரம்மாவிற்கு பூக்குடலை எடுக்கும் அணுக்கத்தொண்டராகிய சங்குகர்ணர் நாம் செய் நல்வினையின் காரணமாகவும் பாரதத்தின் முன்னோர் செய்த தவப்பயன் காரணமாகவும் கடமையில் சற்றுக்காலந்தாழ்த்த பிரம்மாவின் சாபம்பெற்று பூலோகத்தில் அவதரித்தார் அவரது அவதாரமுதல் பிருந்தாவனஞ்சென்று உலக மக்கட்கு என்றும் நிலைபெற்று அருள்செய்யும் நிலைபேறு காண்டம் ஈறாக உள்ள ஏழுகாண்டங்களில் முறையே அவரது தோற்றம், இல்லறம், துறவறம், புகழ், அற்புதம், பிருந்தாவனம் அவர் பூவுலகில் நிலைபெற்றத்தன்மை அனைத்தையும் காண்டங்களாக வடித்துள்ளதே ஸ்ரீராகவேந்திரர் மகாகாவியமாகும். இனி அவரது தோற்றத்தை முதல்காண்டமாகிய சம்பவகாண்டத்தில் காண்போம்.

## 1. சம்பவ காண்டம்

சம்பவ காண்டத்தில் நாட்டுப்படலம் ஆற்றுப்படலம் நகரப்படலம் பூர்வ அவதாரப்படலம் ஸ்ரீ இராகவேந்திரர் திருவவதாரப் படலம் பாலகுமாரப்படலம் கலைபயில்படலம் ஏழுபடலங்கள் இருக்கின்றன.

ஸ்ரீராகவேந்திர மகான் அவதரித்த நாட்டின் சூழலைப்படம் பிடித்துக்காட்டுவதாக அமைந்துள்ளது நாட்டுப்படலம். அவர் தங்கி தியானம் செய்யும் துங்கபத்திரையாறும் குருவுடன் வாழ்ந்த கும்பகோணநகரம் ஆகியவை ஸ்ரீராகவேந்திரமகான் உருவாவதற்கு ஏற்ற சூழ்நிலையை விளக்குவதாக அமைந்துள்ளன.

ஸ்ரீ ராகவேந்திரர் பிரம்மாவிற்கு அணுக்கத்தொண்டரான சங்குகர்ணரேயாவர். அவர் பிரம்மாவின் சாபம்பெற்று பூலோகத்தில் ராக்கதர் கூட்டத்தில் அவதரித்தார். அவ்வாறு ஸ்ரீராகவேந்திரருக்கு முன் அவதரித்த அவதாரங்களில் சிறப்பான ஸ்ரீ வியாசராசர் திருவவதாரத்தைச்சற்று விரிவாகவும் மற்றைய அவதாரங்களாகிய பிரகலாதாழ்வார் விபீஷணாழ்வார் பாகலீக மன்னன் ஆகிய மூவரைப்பற்றியும் பூர்வஅவதாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்ரீ ராகவேந்திரர் திருவவதாரம்: விசயநகர சாம்ராஜ்யத்தில் கிருஷ்ணபட்டர் என்னும் வீணைவித்வான் மரபில் தோன்றிய திம்மண்ணபட்டர் கோபிகாம்பாளுக்கும் ஸ்ரீராகவேந்திரர் அவதரித்த திருவவதார வரலாறும் அவரது இளமைப்பருவமும் குமாரப்பருவமும் பாலகுமாரப்படலத்திலும் கல்வியின் சிறந்து விளங்கிய பகுதி கலைபயில் படலத்திலும் பேசப்படுகிறது.

## 2. இல்லறகாண்டம்

இரண்டாவதுகாண்டத்தில் ஸ்ரீராகவேந்திரர் முன்னோர்களின் சிறப்பை குலமுறைகிளத்துப் படலத்திலும் அவரது திருமணச்சிறப்ப திருமணப்படலத்திலும் வேதத்தில் கருத்தூன்றி கற்று வேதவித்தக னான சிறப்பைப் பரிமளப்படலத்திலும் இல்லறத்தை நல்லறமாக்கிய மகப்பேறு படலமும் மந்திரத்தின் மகிமையைக்காட்டும் மந்திர மகிமைப்படலமும் உள்ளத்தால் துறவு கொண்டும் உலக வாழ்வின் பற்றறுத்து முற்றத்துறப்பதற்கேற்ற நிலையை உளத்துறவு படலம் பற்றறுத்த படலங்களிலும் பேசப்படுகின்றன.

## 3. துறவற காண்டம்

மூன்றாவதான துறவறகாண்டத்தில் நாமகளின் காட்சியைப் பெற்ற செய்தியை நாமகள் காட்சிப்படலத்திலும் தனக்குள் நடந்த இல்லறமாதுறவறமா என்ற மனப்போராட்டத்தை உலகவர் அறியும்படி கற்பனைப்படலமாக வடித்துக்காட்டுவதே பட்டிமன்றப்படலமாகும்.

தஞ்சையில் ஸ்ரீராகவேந்திரருக்கு சுதீந்திரால் அளித்த துறவே பட்டாபிடேகப்படலமாகும். அதன்பின் அன்னை சரஸ்வதிபாய்க்கு அருள் செய்த சிறப்பையும் துறவற மேற்ற ஸ்ரீராகவேந்திரரது நித்திய கடனை கடனறி படலம் மூலம் விவரிக்கப்படுகிறது. மக்களுக்காக ஸ்ரீராகவேந்திரர் தரிசனம் அளிப்பதைக் கூறுவதே ஸ்ரீ ராகவேந்திரர் தரிசனப்படலமாகும். துறவு பூண்டு நித்திய கடனை மூலராமருக்கு ஆற்றும் வேளையில் அவரது சோதிடத்தைக் கேரள சோதிடர்கள் ஆராய்ந்ததைக் கூறுவதே சோதிடப்படலமாகும்.

## 4. புகழ்நிலைக்காண்டம்

ஸ்ரீராகவேந்திரர் துறவு பூண்டபிறகு பல புண்ணிய தலங்களுக்கும் சென்று இறைவனை வழிபட்டுள்ளதையும் ஆங்காங்கு நடந்த நிகழ்ச்சியையும் கூறுவதே தலயாத்திரைப்படலமாகும். இதில் பல்வேறு சமயங்களில் யாத்திரை செய்ததைத் தொகுப்பாகக்கூறப்பட்டுள்ளது. புகழ்நிலைக் காண்டம் காவியத்தின் அடிப்படையில் அமைத்ததேயாகும் ஸ்ரீராகவேந்திரர் புகழ்நிலை எய்துவதற்கு அவரது தலயாத்திரை

யே காரணமாகும். அதனால் தலயாத்திரைப் படலம் முதலில் வைக்கப்பட்டுள்ளது. தஞ்சையில் ஸ்ரீராகவேந்திரர் துறவு பூண்டார். மதுரையை திருமலை நாயக்கர் ஆண்டுவந்தார். ஸ்ரீராகவந்திரரை திருமலை நாயக்கர் தனது பட்டத்து யானை மீதேற்றி வலம்வரச்செய்து பெருமைப்படுத்தி சிறப்புச்செய்தர்.

ஸ்ரீராகவேந்திரர் நஞ்சன்கூடு என்னும் நகரில் சாதுர்மாத விரதங்கொண்டசிறப்பும், பிறகு முடவனுக்கு முத்தியளித்ததும் மாயாவாதிகளை வாதில் வென்றதும் ஸ்ரீராகவேந்திர விசயம் என்னும் நூலின் சிறப்பும், தம்பால் பயிலும் மாணவர்களது ஐயத்தினைப் போக்கி உபதேசம் செய்த செய்திகளையும் நான்காவதான புகழ் நிலை காண்டத்தில் பேசப்படுகின்றன.

## 5. அற்புதக்காண்டம்

ஸ்ரீராகவேந்திரர் தலயாத்திரை செய்த காலங்களில் ஆங்காங்கே நடந்த நிகழ்ச்சிகளை சிலவற்றைத்தொகுத்து கூறுவதே அற்புதக்காண்டமாகும். சிலவற்றைப்புகழ் நிலைக் காண்டத்திலும் சிலவற்றை அற்புதக்காண்டத்திலும் கூறப்பட்டுள்ளன. மனித சக்திக்கு உட்பட்டது புகழ்நிலை யாகும் மனித சக்திக்கு அப்பாற்பட்டசெய்தியை வடித்துக்கூறுவது அற்புதக்காண்டமாகும். வேதத்தின் மகிமையால் பட்டமரம் துளித்ததும் பாலைவனத்தில் கேணியை ஆக்கியதும் சுடுமணலிளின்று பக்தனை மீட்டதும் மந்த்ராசதையின் நிறத்தை மாற்றியதும் ஸ்ரீராகவேந்திரரது நாம மகிமையால், மாடு மேய்த்தவன் மந்திரியானதும் சித்திமசூதகானின் செயலை மாற்றி அவனுக்குப்பு புகழ் சேர்த்ததும், ஸ்ரீராகவேந்திரரின் சங்கு தீர்த்தத்தால் இறந்த குழந்தையின் உயிர் பிழைத்ததும், சாதாரண மனித சக்தியால் நிகழ்வன அல்ல. எனவே மகான்களால் நிகழ்த்தப்படும் அற்புதமே ஆகும். எனவேதான் அற்புதகாண்டத்தில் இவை பேசப்படுகின்றன. ஸ்ரீராகவேந்திரர் காவியமும், மகாகாவியமாக மாறியது.

## 6. பிருந்தாவன காண்டம்

ஸ்ரீராகவேந்திரர் தன்னையுணர்ந்த தனிப்பெருஞானியாவார் தான் செல்லும் பிருந்தாவனத்தைத் தானே நிர்மாணம் செய்ததே பிருந்தாவன படலமாகும். அதன்பிறகு மாஞ்சாலத்தின் மகிமையும் மாஞ்சாலமம்மனின் தரிசனத்தைப்பெற்றதும் பிருந்தாவனத்தை கட்டி முடித்ததும் பிருந்தாவன எழுச்சிப்படலமாகும். பிறகு பஞ்சமுக ஆஞ்சநேயரின் தரிதனத்தைக்கண்டார். அதன்பிறகே ஸ்ரீராகவேந்திரர் பிருந்தாவனத்தில் பிரவேசம் செய்தார். பிருந்தாவனத்தில் பிரவேசம் ஆனதும் அப்பண்ணார்க்கு அருள் செய்கிறார். இத்துணைச்செய்தியையும் பிருந்தாவன காண்டத்தில் பேசப்படுகின்றன.

## 7. நிலை பேறு காண்டம்.

ஸ்ரீராகவேந்திரர் பிருந்தாவனப் பிரவேசமான பிறகு மந்த்ராலயத்தில் சிறப்பினையும், தாமஸ்மன்றோவிற்கு அருள்செய்ததும் துங்கபத்திரையின் மகிமையும் ஸ்ரீராகவேந்திரர் வெள்ளிரதம் உருவானதும் தாசிக்கு அருள்செய்ததும் அமெரிக்காவில் உள்ள ஓர் பக்தருக்கு அருள்செய்ததும், துங்ககவசம் செய்ததும் ஆன செய்திகளைக் கொண்டதே நிலைபேறுகாண்டமாகும். தான் பிருந்தாவனம்

ஆனபிறகும் உலக மக்களுக்கும அருள்செய்து தவத்தின் மூலமாகத்தான் உலகில் நிலை பெற்றுள்ளார் என்பதை உணர்த்துவதே நிலைபேறுகாண்டமாகும்.

# ஸ்ரீமத்வர் மகாத்மியம்

ஸ்ரீமத்வ ஆனந்த தீர்த்தர் துவைதக் கருத்தை உலகுக்கு அருளிய மகான். அவரது வரலாற்றை இம்மகாத்மியத்தில் அமைத்துள்ளது. வாயு பகவானே அனுமனாகவும் பீமனாகவும் அவதரித்தார். அத்தகு சிறப்பு வாய்ந்த வாயு பகவானே மத்வராக அவதரித்தார். வேதவியாசர் அருளிய பிரம்ம சூத்திரதிற்கும் உரை இயற்றினார். அதுவே மகாபாஷ்யம் ஆகும். பூர்ணரஜ்னர், பத்மநாபர் ஆகியோரும் பிரம்ம சூத்திரத்திற்கு உரை எழுதினார்கள். மத்வர் தமது சீடர்களை அழைத்து உலகமெங்கும் தமது கொள்கைகளைப் பரப்ப வேண்டுமென்று கட்டளையிட்டார். பிரம்ம சூத்திரம் ஞானக்கடலாகும். அதற்கு 'அணு' என்றும் 'கீதா' என்றும் 'ரிக்' என்றும் பல உரைகளை மத்வர் அருளினார். அவருக்குப்பின் வந்த சிறந்த ஞானியான பத்மநாபர். அவரது கொள்கையை நிலை நாட்டினார். அதனால் நாத்திகம் அழிந்து ஆத்திகம் தழைத்தது.

பத்மநாபரது பல நூல்களால் உலகோர் தெய்வ வுண்மையை அறிந்து, பிரம்ம சூத்திரத்தின் உட்பொருளை உணர்ந்தனர். அதனால் தெய்வ வழிபாடு உலகில் சிறந்தோங்கியது.

# மூலராமர் விக்ரஹ வரலாறு

ஸ்ரீ மடத்தில், முக்கியமான தெய்வமாக விளங்குவது தங்க மயமான மூலராமர் விக்ரமாகும். சுவர்க்கலோகத்து சிற்பியான விஸ்வகர்மாவின் கைவண்ணத்தில் மூலராமர் விக்ரகம் உருவானது. முதன் முதலில் பிரம்மதேவர் மூலராமரை பூஜித்தார். பின்பு ஜாபாலியிடம் மூலராமரை ஒப்படைத்தார். ஜாபாலியிடம், ஸ்ரீபரமேஸ்வரன், மூலராமரைப் பெற்று பூஜித்தார். இவ்வாறாக, தெய்வாம்சம் பொருந்திய பலர் மாறி மாறி பூஜித்து கஜபதி வம்ச அரசர் ஒருத்தரின் கைக்கு வந்தது. அந்த அரசருக்கு ஒரே ஒரு மகன்தான் இருந்தான். அவன் சிறுபிராயமாக இருந்தபடியால் கஜபதி அரசனின் மறைவிற்குப்பின் அரசு ஏற்கவில்லை. பட்டத்து யானை தேர்ந்தெடுத்த ஸ்ரீநரஹரிதீர்த்தர் அரசரானார். இவர் ஸ்ரீமத்வாசாரியரின் சீடராவார். ஸ்ரீ நரஹரிதீர்த்தர் 12 ஆண்டுகள் செங்கோன்மை தவறாது ஆண்டபின் கஜபதி அரச குமாரனுக்கு முடிசூட்டி, மூலராமர் விக்ரகத்தைப் பரிசாகப்பெற்றார். ஸ்ரீநரஹரிதீர்த்தர் பின்பு மூலராமரை தனது குருநாதராகிய ஸ்ரீமத்வருக்கு சமர்ப்பித்தார். அதுமுதல் ஸ்ரீமத்வ மட ஆசாரியர்களால் நாள்தவறாமல் நியமத்துடன் விமரிசையாக மூலராமர் பூஜை நடத்தப்பட்டுவருகிறது.

# சம்பவ காண்டம்

## நாட்டுப் படலம்

ஸ்ரீராகவேந்திரர் பாரத நாட்டின் பண்பாட்டுச் சின்னமாகத் திகழ்கின்றார். பாரத நாட்டின் பெருமைக்கோர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றார். பாரத நாட்டின் பெருமையும் பாரத நாட்டின் பண்பாடும் உலகின் மனித தத்துவமும் உலகுக்கு விளங்கும்படி தோன்றிய மகான்கள் பலராவர். அவரில் தலைசிறந்தவர்களுள் ஸ்ரீராகவேந்திரர் ஒருவராவார்.

பாரத நாட்டின் பெருமையும் பண்பாடும் நாட்டுப் படலத்தில் பேசப்படுகிறது.

பாரத நாடு உலகில் பழம்பெரும் நாடாகும். கண்ணபிரான் தோன்றிய பெருமைவாய்ந்தது வேத வித்தகர்கள் தோன்றி வேதக் கருத்தை உலகுக்கு அறிவித்த பெருமையுடையது.

இமயமலையைத் தன்னகத்தே உடையது. பரதக்கலை பயில்கின்ற நாடு. இறைவழிபாடுகொண்டது. ஞானிகளின் தோன்றுதற்கு காரணமானது. சித்தர்கள் தோன்றி வாழ்கின்ற பெருமையுடையது. பல புண்ணிய திருப்பதிகளைத்தன்னகத்தேயுடையது. கடவுள் அவதாரம் எடுத்த பெருமையுடையது. தெய்வாம்சம் உடையவர்களும் தோற்றம் எடுத்தற்குரிய பெருமையுடையது. ஆதிசங்கரர், குமர குருபரர், ஞானசம்பந்தர், இராமகிருஷ்ணர் முதலியோர் தோன்றி ஞானமார்க்கத்தை உலகுக்கு போதித்தார்கள். ஈசனின் அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் செய்த பெருமையுடையது. ஆழ்வார்கள், நாயன்மார்கள் தோற்றம் செய்தார்கள். ஆதிசங்கரர், மத்துவாச்சாரியார், இராமானுஜர் போன்றோர் தோன்றி தங்கள் தத்துவத்தைப் போதித்தார்கள்.

சைவசமயாச்சாரியர் நால்வர்கள் தோற்றஞ் செய்து சைவசமயக் கருத்தையும், இறைவனையடையும் வழிகளையும் உலகுக்களித்து பெருமைபெற்றது. இறைவனையடைதற்குரிய வழிகளைக் கூறும் ஞானிகளின் தோற்றத்தைக் கொண்டதால் உலகில் பாரதமே உயர்ந்த நாடாக விளங்குகிறது.

மேலும் 64 கலைகள் தோன்றியதும் ஞானமார்க்கம் கற்பித்ததும் கம்பன், காளிதாசன், சங்கப்புலவர் முதலானோர் தோன்றிய பெருமையுடையதும் ஆகும்.

இக்காலத்திலும் விவேகானந்தர் இராமலிங்கர் தாகூர் அபிராமிபட்டர் முதலானோர் தோன்றியுள்ளனர், சாத்திரங்கற்று நிட்டையிலிருந்து யோகமார்க்கத்தினை உலகுக்குக் கற்பித்தனர். வாழ்வியலை உலகுக்கு அளித்த பெருமையுடையது பாரதம், மனிதன் தன்னைத்தான் அறியும் வழியைககூறும் பெருமை பெற்றது.

வேதாந்த சித்தாந்தத்தின் பெருமையினை இறைவனுக்குச் சமமாயிருந்து உலகோர்க்கு போதித்த பெருமை பாரதநாட்டிற்கே உரியதாகும். அதற்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்வது பகவத் கீதையாகும்.

# ஆற்றுப்படலம்

ஸ்ரீராகவேந்திரர் அவதரித்த நாட்டுப் பெருமையும் அவர் வாழ்ந்த நகரப் பெருமையும் போன்றே அவர் தியானஞ் செய்த துங்கபத்திரையாற்றின் சிறப்பினைப் ஆற்றுப்படலத்தில் கூறப்படுகிறது.

ஸ்ரீராகவேந்திரர் தியானஞ் செய்வதற்கு ஏற்றயிடமாக துங்கபத்திரையாற்றங்கரையைத் தேர்ந்தார். காரணம், வருகின்ற பக்தர்களுக்கு வரமளித்துத் தருகின்ற தீர்த்த துங்கபத்திரைத் தீர்த்தமாகும். மேலும் பிரகலாதாழ்வாராக அவதரித்து யாகம் செய்த மேன்மையுடையதாகும். எனவே கலியுகத்தின் செயலைக்கண்டு கலியுகஞ் சிறக்க வேண்டி ஸ்ரீராகவேந்திரர் அவதாரம் செய்தார்.

சிவபெருமான் கைலைமலையில் வாழ்கின்றார். திருமால் பாற்கடலில் பள்ளிகொண்டுள்ளார். அவர்கள் போலல்லாமல் நதிக்கரையிலே தாம் தங்குவதற்கு விருப்பம்கொண்டார் எனலாம்.

இதற்கு மேலாக பாரத நாட்டின் பெருமையை உலகுக்கு அறிவிக்க வந்த ஸ்ரீராகவேந்திரர் பாரதத்தின் ஏதாவது ஒரு பகுதிக்குச் செல்லாமல் இடைப்பட்ட இடத்தைத் தேர்ந்தார் எனலாம். அன்றியும் மலையினுச்சியும் கடல் மத்தியிலும் வாழாமல் சாதாரண மனிதர்கள் தங்கள் தேவையை அளிக்கக்கூடிய நதிக்கரையையே இடமாக சத்தேர்ந்தார் என்பது சாலப்பொருந்தும். சமரச ஞானியாக விளங்கிய ராகவேந்திரர் சமரசக் கருத்தை உலகுக்கு அளிக்க வந்தவர். தாம் வாழும் இடமும் வடக்குத் தெற்கு என்ற பேதமின்றியும் உயர்வு தாழ்வு என்ற ஏற்றத்தாழ்வின்றியும் அனைவரும் நாடுவதற்கேற்ற இடமாகத் துங்கபத்திரை நதிக்கரையைத் தேர்ந்தார் எனலாம். ஆறு போன்று தாம் மக்கட்கு நன்மை செய்வதே குறிக்கோளாக ஸ்ரீ ராகவேந்திரர் மந்த்ராலயத்தில் தியானத்தமர்ந்து உலக்குக் கடமையாற்றி வருகிறார்

# நகரப்படலம்

பாரத நாட்டில் தோன்றிய ஸ்ரீராகவேந்த்ரர் தாம் துங்கபத்திரைநதிக்கரையில் உள்ள மந்த்ராலயத்தில் இருந்து உலகமக்களுக்கு அருள்பாலித்தாலும் அவரது இளமைப்பருவகாலந்தொட்டு ஞானம்பெற்ற ஞான பூமியாகத் திகழ்வது கும்பகோணமேயாகும்.

கும்பகோணத்தின் பெருமையைக் கூறுவதே இந்த நகரப்படலமா கும்.

இந்த நகரம் தேவருலகத்தின் அமராவதியைவிடச் சிறந்ததாகும் காவிரிநதியால் சூழப்பெற்றது. கற்பகத்தருவையுடையது திருமா லின் அம்சமாக விளங்குகிறது. பிரம்மன் அண்டங்களைப்படைப்பதற்கு முன்னமே இந்த நன்னகரைப்படைத்தான். கருமயோகமாக விளங்குகின்றது.

சூரியன் இந்தநகரின் மதிலைச் சற்றுத்தாமதமாகவே கடக்கின்றான் காவிரிகடல்போல் அகன்றுள்ள பெருமையுடையது. பிரம்மனும் லக்குமியும் திருமாலும் உறைகின்ற காரணத்தால் பலசெல்வங்கள் கொழிக்கின்றன. இந்திரன் வரவால் யானைவருதலும் யானையின் வரவால் மேகஞ்சூழ்தலும் அதனால் மயில்கள் ஆடுதலும் ஆகிய அழகினைக்கொண்டுள்ளது. வேத விளக்கமாக அமைந்துள்ள இந்நகரத்தை அடைந்தவர்களின் மரணத்தைப்போக்கும் ஞானியாக இந்நகரம் விளங்குகிறது. இந்த நகரத்தில் வாழும் பெண்களின் அழகினைப்புலவர்கள் போற்றிப் புகழும் பெருமையைப்பெற்றவர்கள். அவர்களின் அழகுக்கு உவமையே கூற முடியாதபடி சிறப்பாக விளங்குகிறார்கள்.

# ஸ்ரீராகவேந்திரர் பூர்வ அவதாரப்படலம்

வைகுண்டத்தில் இலக்குமி நாரணனை பிரமன் வணங்குவதற்கு மலர்கள் கொணருந்தொண்டினை புரிந்தவர் சங்குகர்ணராவர்.

சங்குகர்ணரது மனமார்ந்த தொண்டினைக் கண்ட பெருமான் சங்குகர்ணரது பெருமையை உலகு உணரவேண்டும் என்ற எண்ணம் ஸ்ரீமத் நாராயனனது உள்ளத்தில் தோன்றியது.

எனவே சங்குகர்ணனது திருத்தொண்டில் சற்றுக்காலம் தாமதம் உண்டாகப்பண்ணினார். அதனால் பூஜைக்கு இடர் விளைந்ததே எனக்கருதி பிரமன் சினந்து சங்குகர்ணரை உலகில் பிறக்கும்படி சாபமிட்டார்.

சாபம் அடைந்த சங்குகர்ணர் வாயுபகவானை வேண்ட வாயுபகவான் சாபம் வந்த விதத்தைக்கூறினார் உலகம் செல்வதால் பலநன்மையும் ஏற்படும் என்றும் கூறினார். சங்குகர்ணர் திருமாலின் அம்சமாவார் சங்குபோன்ற காதுகளைப் பெற்றவர்.

பிரம்மனின் சாபத்தால் நான்கு யுகத்திலும் பூலோகத்தில் தோற்றங்கொள்ளும் பாக்கியத்தைப்பெற்றார் கிரேதாயுகத்திலே பிரகலாதாழ்வாராகவும் திரேதாயுகத்திலே விபீடணாழ்வாராகவும் துவாபரயுகத்திலே பாகலீக மன்னனாவும் தோற்றங்கொண்டார்.

கலியுகத்தில் வியாசராசராகத் தோற்றங்கொண்டார். அதன்பிறகுதான் ஸ்ரீராகவேந்திரராகத் தோற்றங்கொண்டார். இதுவே ஸ்ரீராகவேந்திரரது பூர்வ அவதாரத்தின் சுருக்கமாகும்

இனி பூர்வ அவதாரத்தில் வியாச ராசராகத் தோற்றங்கொண்டதை சற்று விரிவாகப் பார்ப்போம் கர்நாடகநாட்டில் மைசூர் மாநிலத்தில் பன்னூர் என்ற ஊர் ஒன்று உள்ளது அவ்வூரில் அந்தனர் குலத்தில் ராமாச்சாரியாருக்கம் சீதையென்ற கன்னிகைக்கும் கடிமணமாகி வாழ்கின்ற நாளில் ஓர் நாள் ராமாசாரியர் இறந்துவிடுகின்றார் அப்பொழுது சீதையென்றபெண் உடன்கட்டையேறுவதற்குச் சித்தமானாள் அதற்காகக் காவிரிக்கரையில் பிரம்மண்யத்தீர்த்தரைக்கண்டு ஆசிபெறச்சென்றாா.

பிரம்மண்ய தீர்த்தர் திருவடியில் வணங்கிய சீதையைக்கண்டு கணவுடன் கூடிப் பல்லாண்டு வாழ்க வென்று ஆசிபகன்றார். சீதையானவர் கணவர் இறந்த செய்தியைக் கூறியதும் தம்வாக்குக் கலைமகள் வாக்கென்று கருதி பிரம்மண்ய தீர்த்தரே நேரில்சென்று தன்னுடைய கமண்டலத்தீர்த்தத்தை எடுத்து தன்வந்திரி மந்த்ரத்தை உச்சரித்து பிணத்தின்மீது தெளித்தார்

அப்பொழுது ராமாசாரியர் உறங்கியவர் எழுந்ததைப்போல் எழுந்தார் பிறகு அவர்கட்குப்பிறக்கும் குழந்தைகளில் மூத்தவரைத் தனக்குத்தரும்படியும் கட்டளையிட்டுச்சென்றார்.

அவருடைய ஆசிபெற்று முதலில் பிறந்த குழந்தைதான் சங்குகர்ணராவார். அக்குழந்தையைத் தங்கத் தட்டில் ஏந்தி அப்பூரென்றுரைக்கும் ஊரின்பக்கமுள்ள புருடோத்தும குகையில் வாழும் பிரம்மண்யதீர்த்தரிடம் கொண்டு சேர்த்தார்கள். அக்குழந்தைக்கு வியாசதீர்த்தர் என்ற நாமகரணம் சூட்டினார்.

இளமையிலேயே சந்யாசத்தில் விருப்பம் உள்ளவனாய்க்காணப்பட்டான். எனவே ஏழாம் வயதியே சந்யாசத்தை அளித்தார். துறவறத்தைக் கொண்ட வியாச தீர்த்தர் திருமுகுபாகல் என்ற ஊரிலுள்ள பாதராயரைச் சென்றடைந்தார். அவரிடம் 12 ஆண்டுகள் கல்வி கற்றார். பிறகு மீண்டும் பிரம்மண்ய தீர்த்தரிடம் வந்ததார். அப்பொழுது பலகலைகளும் கற்ற வியாசதீர்த்தர் அப்ரோக்ஷதஞானம் என்னும் அருள்ஞானத்தைப்பெற்றார்.

இந்த நிலையில் பிரம்மண்யதீர்த்தர் வாசுதேவனின் வைகுந்த வாழ்வையடைந்தார். வியாசதீர்த்தர் பரஞானம் பெற்றதால் பிரம்மண்ய தீர்த்தரின் வித்யாபீடத்தை யேற்றார். பிறகு பல தெய்வநூல்களை யாத்தார். பல தேயங்களுக்குஞ் சென்றார். கல்வியில் வல்லவர்கள் பலரும் வாதம் செய்தார்கள். அவர்களை வாதில் வென்றார்.

இவ்வாறொழுகுநாளில் சிவகாஞ்சி என்னும் திருப்பதியில் தங்குங்காலை ஓர் வஞ்சகன் வியாச தீர்த்தரை அழிப்பதற்கு எண்ணங்கொண்டான்.

இறைவருக்குப்படைத்த படையலில் யாரும் அறியா வண்ணம் நஞ்சினைச்சேர்த்து வியாச தீர்த்தருக்கக் கொடுக்க முற்பட்டான். இதனை யறிந்த சமயற்காரன் தீர்த்தரிடம் கூறினான் என்றாலும் இறைவனுக்குப் படைத்தபிறகு அதனை உண்ணுவதே சாலச்சிறந்தது என்று கூறி அப்படையலைச் சற்றும் மனக்கலக்கமின்றி உண்டார். இறைவனது திருவடியே நமக்குத்தஞ்சம் என்று கூறிஅதனை நிலைநாட்டினார்.

இவ்வாறிருக்கும் போது பாதராயருடைய நித்திய பூசையையும் ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். நித்திய பூஜையாற்றி வியாசராயர் ஆனார். இவரது அன்புக்கு உருகிய வேணுகோபாலர் இவருடைய பாடலுக்கு ஏற்ப நடனமாடினார்.

அக்காலத்தில் சந்திரகிரியைசாளுக்கிய மன்னர்கள் ஆண்டு வந்தாகள். விசயநகர சமஸ்தானத்தில் சந்திரகிரி மேன்மைபெற்றது. விசயநகரை ஆண்டவர்களுள் நரசிம்மபூபாலன் புகழ் பெற்றவனாக விளங்கினான்.

நரசிம்மபூபாலன், விசயராயர்தான் சங்குகர்ணரின் அவதாரம் என்பதை நன்கு அறிந்தான். எனவே பட்டத்து யானை மீது ஏற்றி பெருமைப்படுத்தி வணங்கினான். பிறகு புரந்தரதாசர் கனகதாசர் முதலானோர் விசயராயரை வணங்கி ஆசிபெற்றார்கள்.

நரசிம்ம பூபாலன் திருப்பதி வேங்கடவன் நித்திய பூஜை செய்யும்படி வேண்டிக்கொண்டான். அவன் வேண்டுகோள்படி பன்னிரெண்டாண்டுகாலம் உள்ளன்பினால் போற்றி செய்த பிறகு, தகுதியுடைய ஒருவரிடத்தில் பூஜை செய்யப்பணித்தபிறகு மீண்டும் விசயநகரம் சென்றார். நரசிம்ம பூபாலன் அப்பொழுது இறைவனடியைச் சார்ந்தான். அவருக்குப் பிறகு வந்தவர்களெல்லாம் வியாசராயரையே குலகுருவாக ஏற்றுத்துதித்தார்கள். அவர் களுள் கிருட்டின தேவராயர்தலை சிறந்தவராகத் திகழ்ந்தார் பல கலைகளையும் வளர்த்தார். அதனால் கிருட்டின தேவராயருககுத் திருட்டிவந்தது.

திருட்டியினால் குகயோகம் எனும் பீடை கிருட்டின தேவராயருக்கு ஏற்படும் பயம் ஏற்பட்டது. நாட்டிற்கு வந்த பீடை நாட்டை யாண்ட மன்னர்க்குவருவதால் மன்னன் வியாசதீர்த்தரை வேண்ட வியாசதீர்த்தர் பீடைசேரும் அமாவாசைக்காலத்து அரசு பொறுப்பேற்று விசாயசதீர்த்தர் வியாசராசரானார்.

வடவாக்கினி போன்ற அந்த பீடை வியாசராசரை அணுகும்போது தம்மீதுள்ள காவியாடையை அதன் மீது போட்டார். அதனால் அப்பீடை அடியோடு ஒழிந்தது. பிறகு அந்த அரசு பொறுப்பை மீண்டும் அரசனுக்கே கொடுத்து விட்டு, வியாசராயர் தலயாத்திரை செய்யலானார். அழியாப் புகழ்மிக்க நூல்கள் பல எழுதினார். தனது 92ம் வயதில் துங்கபத்திரை நதியின்மத்தியில் பிருந்தாவனத்தரானார் பாரத நாட்டில் 732 இடங்களில் ஆஞ்ச னே யர் திருவுருவத்தை ஸ்தாபித்தும் வஞ்சனையற்றோர் வாழ வன்னெஞ்சர் வலியிழக்க அஞ்சனைபெற்றசெல்வன் அவனையே துதித்து வாழ்ந்தார்.

# ஸ்ரீ ராகவேந்திரர் திருவவதாரப்படலம்

சத்யலோகத்திலிருந்து பிரம்மாவும் சரஸ்வதியும் அண்டங்களைக்கண்டுவரும்போது பூலோகத்தைக் கண்டசரஸ்வதியானவள் பூலோகத்தின் தன்மையைப்பற்றி வினவினாள். அதற்குப் பதில் கூறுமுகத்தால் இப்படலம் தொடங்கப்படுகிறது. கலியுகமன்றிமற்ற மூன்று யுகத்திலும் மக்கள் தன்னை யுணர்ந்தார்கள். எனவே தலைவனையுணர்ந்தார்கள். ஆனால் கலியுகத்தில் மக்கள்தன்னையே யுணராததினால் தலைவனை உணரவில்லை என்றுபதிலளிக்கின்றார்.

இவ்வாறு இவர்களின் உரையாடலை நாராணன் கேட்டான். அப்பொழுது நாராணன் அவர்கட்கு ஈசன் குமரன், ஆதிசக்திஆகியவர்களது செயலைக் குறிப்பிட்டுக்காட்டுகிறார்.

இவ்வாறு கூறிக்கொண்டிருக்கும்பொழுது நாரதர் அங்கே வருகிறார் அப்பொழுது நாரணனது முக வாட்டத்தைக்கண்டு வினவுகிறார். உலகில் திருவள்ளுவர் கம்பர் பாரதியார் போன்றோருடைய நல்ல மார்க்கங்களை மக்கள் பின்பற்றவில்லை என்று வருத்தப்படுகிறார்.

இந்த நேரத்திலே நான்முகன் சாபத்தால் உலகம் சென்ற சங்குகர்ணர் வியாசராசராய் வாழ்ந்தார் அவருடைய சாபம் முடிவதற்குள் விண்ணகம் வந்த செய்தியை நாரதர் நாரணனிடம் கூறுகின்றார்.

இந்த சமயத்தில் சங்குகர்ணரும் அவர்கள் கூடியுள்ள அவைக்கு வரு கின்றார் அவரை நாரதர் வரவேற்கின்றார். சங்குகர்ணர் வருகையையேற்ற நாரணன் உலக மக்கள் நலம்பெறுதற்பொருட்டு மீண்டும் உலகம் செல்ல வேண்டுமென்று பணிக்கின்றார்.

இராவணனிடம் சீதையே சென்றார் என்று கூறும் பேதைமையுடைய கலியுகத்தில் தாங்களே சென்று பேதைமையகற்றவேண்டுமென்றும் பணிக்கின்றார். நாரதருக்கும் சங்குகர்ணருக்கும் தர்க்கம் நிகழ்கிறது. முடிவில் சங்குகர்ணர் உலகில் தோற்றம் எடுக்கச் சம்மதிக்கின்றார். மேலும் பாரதப்பெருமையை உலகுக்கோர் அறிவதற்கும். கீதையின் பெருமையை க்கூறுவதற்காகவும் தெய்வ பக்தியற்றவர்களுக்கு வேத சாரத்தைச் சாற்றுவதற்காகவும் சம்மதிக்கின்றார்.

இவ்வாறிருக்க பூலோகத்தில் விசயநகரசாம்ராஜ்யத்தில் கிருட்டி னதேவராயர் காலத்திற்குப்பிறகு அவர்காலத்தில் வீணைவித்வானாக வாழ்ந்த கிருட்டின பட்டர் மரபில் திம்மண்ணபட்டர் நவாபின்வரவால் கடும்போர்ஏற்பட்டு மக்கள் பல திசைகளிலும் செல்லலானார்கள். அவர்களில் திம்மண்ணபட்டர் தெக்கணம் நோக்கிவந்தார். திம்மண்ணபட்டரின் மனைவி கோபிகாம்பாள் இவர்களுக்கு

வேங்கடாம்பாள் என்ற புத்திரியும் குருராஜன் என்று புதல்வனும் பிறந்தார்கள். கலைகளைப்போற்றாத வறுமைக்காலத்தில் மிக்க துன்பமுற்றார்கள். தங்கள் துன்பத்தைப் போக்குவதற்கு ஓர் புதல்வன் வேண்டுமென்று திருப்பதிவேங்கடவனை வேண்டினார்கள். வறுமையைப் போக்க நல்லபுத்திரப் பேறுகேட்கும் தம்பதியர்கள் இவர்களேயான காரணத்தினால் அச்சமயத்திலேயே பரந்தாமன் அவர்களுக்குச் சந்தானப் பேற்றை அருளினார்.

வேங்கடவன் அருளால் கோபிகாம்பாள் சூல்கொண்டாள் பங்குனி மாதத்தில் மிருகசீரிடநட்சத்திரத்தில் உலகம் செல்வச் சிறப்புடன் விளங்குவதற்கு சங்குகர்ணர் திருவவதாரம் செய்தார்.

# பாலகுமாரப்படலம்

வேங்கடநாதன் இளம்வயதிலேயே முகப்பொலிவொடு விளங்கினான். கோபாலனேயெனக்கண்டோர் கூறும்படி விளங்கினான் திருமாலின் அம்சமான வேங்கடநாதனுக்கு வித்யாதரம்பம் செய்து வைத்தார்கள். ஆயர்பாடிமாயன் போல் விளையாடிவந்தான்.

அரசவையில் வாழ்ந்த செல்வ வாழ்வையிழந்த திம்மணபட்டர் தரித்திர வாழ்வைக்கொண்டார் இந்நிலையில் விஜயேந்திரதீர்த்தர் பிருந்தாவனத்தரானார். அதன்பிறகு சுசீந்த்ர தீர்த்தர் மடத்தின் பொறுப்பையேற்ம். திம்மண்ணப்பட்டரை மடத்திலே ஒருவராக ஏற்றுக்கொண்டார். திம்மண்ணப்பட்டருடன் வேங்கட நாதனும் சென்றான் வேங்கடநாதனின் முகப்பொலவைக்கண்டு போற்றினார்.

இந்நிலையில் திம்மண்ணப்பட்டர் குருராஜனை அழைத்து வேங்கடநாதனுக்குத் தந்தையும் தாயுமாய் காப்பவன் நீயே யென்று கூறி அடைக்கலாம் கொடுத்தார் பின் அவர்மடியிலேயே தன் முடிவை யளித்தார்.

அன்னை கோபிகாம்பளிடம் தந்தை யெங்கேயென்று கேட்ட வேங்கட நாதனுக்கு வானைக்காட்டிமேலேயிருக்கிறார் என்றே விடைபகர்ந்தார். வேங்கடநாதனுக்கு கல்வியயிற்ற தமக்கையின் கணவரான நரசிம்மாச்சாரியரிடம் அனுப்பிவைத்தார்.

# கலையியில் படலம்

மதுரை மாநகரில் வாழ்ந்த நரசிம்மாச்சாரியரிடம் நன்கு கல்விகற்ற வேங்கடநாதன் வீணைக்கலைய்யை குருராசனிடம் கற்றுத்தேர்ந்தான் நீந்தும் கலையைத் தானே கற்றான்.

மேலும் மீமாம்ச தர்க்கம் வியாகர்ணம் அனைத்தும் கற்கலானான். சோதிடக்கலையையும் நன்கு கற்றுத்தேர்ந்தான். தம்பியினுடைய கலையார்வத்தைக் கண்ட குருராஜன் தம்மைவிடத் தம்பி சிறப்புற்றான் என்றே மனமகிழ்ச்சியின் திளைத்தான்.

# இல்லற காண்டம்

## குலமுறைகிளத்துப்படலம்

ஒரு நாள் உற்றார் உறவினர் கூடியிருக்கும்பொழுது குருராஜன் என்பவர் தம்பி வேங்கடநாதனுக்குத் தாம் ஆற்றவேண்டிய இல்லறவாழ்க்கையைக் குறிப்பிட்டுரைத்தார். அச்சமயத்தில் ஒழுக்கத்தில் சிறந்த முதியவர் ஒருவர் வந்து நல்ல பண்புள்ள குலத்தில் வந்த திம்மண்ணர் குல முறையைக் கூறினார்.

விசயநகரசாம்ராச்சியத்தில் கிருட்டின தேவனது செங்கோலாட்சிக் கண் சிறந்து விளங்கினவர் கிருட்டின பட்டராவார். வீணை வித்வானாக அரசவையில் அங்கம் வகித்து வந்தார். அவர்கள் வைதீக நெறியில் வாழ்ந்தார்கள். கருநாடகம் என்னு நாட்டில் சிறந்து விளங்கிய பீக முத்திரர் என்னும் பரம்பரையில் கௌதமகோத்திரத்தில் வந்தவராவார்கள். அக்கோத்திரத்திலே வந்த கிருட்டினப்பட்டருக்குப்பின் தோன்றியவர் கனகாசலர். கணகாசலரின் வாரிசாக வந்தவர் திம்மண்ணபபட்டராவார். திம்மண்ணபட்டரின் துணைவியாய் விளங்கியவர் கோபிகாம்பாள் என்னும் குணவதியாவார்.

இத்தம்பதிகளுக்குத் தோன்றியவர்கள் வேங்கடாம்பாளும் குருராஜன் என்னும் மேலோரும் ஆவார். இவர்கள் வாழ்ந்த சிறந்த மறையவர் குலத்திலே வந்தவர்தான் வேங்கடநாதன் என்பவர். மேலும் மத்துவரின் புகழை உலகுக்கு ஓதும் உத்தம சீடராவார் என்று வேங்கடநாதனின் மரபின் பெருமையை எடுத்துரைத்தார்.

அச்சமயத்தில் சிறந்த உள்ளம்கொண்ட ஒருவர் வேங்கடநாதனுக்குத் தன்மகளைக் கன்னிகாதானமாகக்கொடுத்து மணவினையையும் செய்து வைப்பேன் என்று கூறினார்.



# திருமணப்படலம்

மண்ணுலக மாக்களின் மயக்கொழித்து சத்தியம், தர்மம், பக்தி, ஞானம் இவற்றை போதிக்க வந்த இறையம்சம் பொருந்திய வேங்கடநாதனை உறவினர்களின் வற்புறுத்தலும், உயர்பெரும் குருக்களின் அருள் ஆசியும் திருக்கல்யாணம் புரிந்து கொள்ள சம்மதிக் கச்செய்தன.

யோக போகீஸ்வரனும் கிருஷ்ண, பரசுராம, அவதாரங்களும், சிந்தனையை மூட்டின. உறவினர்களின் பெண்பார்க்கும் படலம் ஆரம்பமாயிற்று. சகலர்க்கும் சகலமும் தரும் ஸ்ரீமன் நாராயணின் அம்சம் பொருந்திய வேங்கட நாதனுக்கு மானிடர்கள் தங்கள் பக்தியை செலுத்துவது போல், மணமகளைத் தேர்வு செய்ய முனைந்தனர்.

வேங்கட நாதனுக்குத் தன் மகளைத் தருவேன் என முன் வந்த அந்தணர் வேங்கடநாதன் வாழ்வாங்கு வாழத் கருணையும், பக்தியும் நிறைந்த கன்னட தேசத்து வாழ், அற்புதம் விளங்கும், கற்பனை கடந்த கவின்மிகு நலம் பொருந்தியவளும், இலக்குமிதாயாரின் திவ்ய குணநலன்கள் பொருந்திய சரஸ்வதி பாய் என்னும் மங்கை நல்லாளை வழங்க ஒரு மனதாக முடிவுசெய்தனர். கோடிபல் கோடியென நட்சத்திரங்கள் இருந்தாலும் பௌர்ணமிக்கு முன் அவை எடுபடாதது போலும். சித்தத்தை விட்டு அகலாத பேரழகு பொருந்திய சரஸ்வதி பாயை மங்கலப் பெண்டிர் வேங்கடநாதன் முன், வெள்ளி ஒரு நாளில் வெள்ளிச் சலங்கை கட்டி நிலமகள் துள்ளும் படிக்குச்செய்ய ஞானதீபம் தூண்டும் தன் எதிர்கால துணைவன் வேங்கடநாதனைத் தரிசித்து இருக்கச் செய்தனர். அலைகள் சங்க மிப்பதை யார் தடுக்கக் கூடும். எல்லாம் இறைவன் ஸ்ரீமன் நாராயணனின் செயலன்றோ.

பெண் வீட்டார் மணப்பெண்ணின் குலம், கோத்திரம் அடங்கிய குணநலம் பகர்ந்தனர். அவளைக் கண்டோரும், குலநலம் கேட்டோரும் இவள் இலக்குமியோ எனவும் வேங்கட நாதனை அந்த ஸ்ரீமன் நாராயணனே எனவும் அன்பும் வியந்தனர்.

தக்க சடங்குகள் வேதகாமடபடி திருமணத்திற்கு முன்னும் பின்னும் அந்தணப் பெருங்குடியினரால் செய்து விக்கப்பட்டன. திருமணத்திற்கு முன் காப்பிடல், திருஷ்டி கழித்தல் போன்றவையும் மங்கள நீராடல் புரிதல், திருஷ்டிப்பொட்டிடல் நெற்றிப் பட்டம் கட்டல், காதுகளில் உணவுப்பொள்களான காதணி அணிவித்தல் போன்ற திவ்ய சடங்குகள் நிறைவேறின.

இறை பக்தியும், மக்கட் குலமும் தழைக்க அவதரித்த வேங்கடநாதன் கமண்டலம், புராண நூல், மயக் கொழுக்கும் விசிறி, குற்றம் கடியும் தடி, குவலயத்தார்க்கு மனநிழல் தரும் குடை, திவ்ய பாதங்கள் தரிக்கத் தக்கதே எனும் வண்ணம் பாத ரட்சைகள், மூவுலகு புரக்கும் முகுந்தனின் பேராற்றலால் பெற்ற அஸ்வர்யங்கள் பொருந்திய பொருள் நிறை மூட்டை இவற்றுடன் திருமணத்திற்குப் பின்னும் தன்நிலை ஞானநிலையை உணர்த்தும் சன்யாசி கோலமே என்பதை முன்கூட்டியே பறைசாற்றுவது போல் வேங்கடநாதன் உண்மைக் காட்சி தந்து காசி யாத்திரை புறப்படலானான். சப்தபதி வைக்கப்பட்டன. எழுத்திரைகள் விலக ஏழு அடி எடுத்து வைத்தனர். எழுதிரைகளாவன

கரும்பெருந்திரை - மாமாயை (ஞானம் மறைத்தல்)

நீலப்பெருந்திரை - ஆருயிர்களை மறைத்தல்

பச்சைபெருந்திரை - பரவெளிதனை மறைத்தல்

செம்மைப்பெருந்திரை - சித்துறுவெளியை மறைத்தல்

பொன்மைப்பெருந்திரை - பொருளூறு வெளியை மறைத்தல்

வெண்மைப்பெருந்திரை - மெய்ப்பதிவெளியை மறைத்தல்

கலப்புப்பெருந்திரை - கருது அனுபவங்களை மறைத்தல் ஆகியனவாகும்.

வல்ல வேதியர் வேத மந்திரம் ஓதினார். சரஸ்வதிபாய் அம்மி மிதித்தல் அருந்ததி பார்த்தல் செய்தனள். நெற்பொரி இடுதல் நேர்த்தியுடன் செய்யப்பட்டது.

மோதிரம் அணிவித்து, சரஸ்வதிபாயின் சகோதரன் மகிழ்ந்து இருக்கவும், வேங்கடநாதன் கருமணியும் (நாகமணி) பொன் இலங்க, பெண்மையை முழுமையாக்கும் தாய்மைப்பேறு கிட்டச் செய்யும் இல்லற ஜோதிக்கு ஒளியூட்டும் மங்களநாணை மங்களப்பெண்டிர் துணைபுரியக் சூட்டினார். இறைவி திருமணக் காட்சி போன்று இலங்கிய இவ்வேளை, வேங்கடநாதன் தன் தாயும், தந்தை (திருமிகு. கோபிகாம்பாள், அருள்மிகு திண்ணப்பப்பட்டர்) வானிலிருந்து அருள் பாலித்தனர். அந்தணர் ஆசியும், அயலவர் வாழ்த்தும் மொழிந்தனர்.

உலகம் உய்ய வந்துதித்த குரு மணியான வேங்கடநாதன், தன் எதிர்கால முற்றும் உணர்ந்தவராக "இதென்ன கோலம் எம்பெருமானே" என திருவேங்கடவன் திருத்தாளை எண்ணியபடி மெல்ல நகை புரிந்தார். சற்றே தன் மனையாள் சரஸ்வதி பாயை நோக்கினார். தன்னை நோக்கித் தன் துணைவன் புன்னகை புரிவது கண்டு விளக்கமறிய இளஞ் குழவியான சரஸ்வதி பாய், "தன் கணவன் தன் மீது கொண்ட இகலோகக் காதலால் புன்னகை செ ய்தார் " எனக்கருதி, உளம் பூரித்து, உவகை பொங்க, அச்சம், மடம்,நாணம்,பயிர்ப்பு எனும் நற் குணங்கள் நான்கும் நழுவா வண்ணம் இளநகை புரிந்தாள்.

இகபர சௌபாங்ககியம் அளிக்கும் ஞானத்தின் உயர் ஜோதியும், வைஷ்ணவ திவ்ய தீபமாம் வேங்கடநாதனான ஸ்ரீமத் ராக வேந்திர சற்குருவின் சகல வினையறு படலமான திருக்கல்யாணம் அற்புதமாக நிறைவேறியன. ம . சற்குரு நாதர் திருத்தாளர் போற்றி போற்றி.

## பரிமளப்படலம்

வேங்கடநாதன் பந்தமறுக்கும் பரமனின் பாதத்தையே சிந்தனைசெய்தவண்ணம் வாழ்வு நடத்தினான். மெஞ்ஞானத்தில் ஈடுபட்டதால் வேதவித்தகனாக நாட்டம் கொண்டான். தனது எண்ணத்தை அண்ணனும் குருவராஜனிடம் கூறவே அண்ணனும் உறுதியளித் தான்.

சுதீர்ந்த தீர்த்தர் வாழும் கும்பகோணத்திற்குச் சென்றால் ஞானமார்க்கம் சிறந்தோங்குமென எண்ணினான் எனவே வேங்கடநாதனை குருவின்பால் அனுப்பிவைத்தான். முன்பே சிறுவயதில் வேங்கடநாதனைக் கண்டகுருவும் சீடனாகயேற்று ஆசீர்வதித்தார்.

குருவினிடம் வேங்கடநாதன் பலகாலம் அகலாது ஐயம்போக்கி ஞான குருவின் அருளைப்பெற்றான். இதனைக்கண்ட மற்றசீடர்கள் பொறாமை கொண்டனர். நாதன்பால் பலவித பழிமொழிகளைக் கூறினார்கள் அதனைக் கேட்ட குருவும் அவர்களின் குறையைப்போக்கவுறுதியளித்தார்.

ஒருநாள் இறைவனைப்பற்றி சிலபல கருத்துக்களைக் கூறி இதன் விளக்கத்தை அடுத்தநாள் கூறுவதாகப் பாடத்தை முடித்து விட்டார். அன்றிரவு

சுதீர்ந்த மடத்தில் வசித்து வந்த மாணவர்களைப்பரிசோதிப்பதற்குச் சென்றார். ஆனால் மாணவர்கள் அனைவரும் உறங்கவும் வேங்கடநாதனை மட்டும் காணவில்லை.

மடத்தின் உட்புறத்தில் மரத்தடியின் தரையில் படுத்திருக்கக்கண்டார் அருகில் சருகுகள் எரிந்திருப்பதையும் பக்கத்தில் ஓலைச்சுவடிக இருப்பதையும் கண்டார். சீலமேஉடையவன் வேங்கடநாதன் என்றும் ஞாலமே புகழும் ஞானியாவான் என்றும் அறிந்தார். எனவே தன்மேல் போர்த்தியிருந்த பட்டுப் பீதாம்பரத்தை வேங்கடநாதன் மேல் போர்த்தினார்.

மறுநாள் வேங்கடநாதன் தன்மேல் பீதாம்பரம் இருப்பதைக்கண்டு மனம் பதைத்தான் காலையில் குருவின்பாற் சென்று வணங்கும்போது வேதபாடத்தின் போது கூறுவதாக மொழிந்தார் சூரியனின் தோற்றத்தைக் கொண்டே இறைவனின் உண்மையை விளக்கிய வேங்கடநாதன் திரிபும் ஐயமும் அற்ற நல்ல மாணவன் என்றும் மொழிந்தார் எனவே அனைத்து மாணவரின் முன்பாக வேங்கடநாதனுக்குப் பரிமளாச்சாரியார் என்ற பட்டத்தைத் தந்தார். மூவகையான மாணவர்களில் முதன்மையானவன் என்றும் திருமாலின் அருளைப்பெற்றுள்ளான் என்றும் இறைவன்திருவருளாலே பரிமளர் பட்டம் பெற்றான் என்றும் கூறினர்.

## மகப்பேறு படலம்

ஓராண்டுகாலம் சுதீர்ந்த தீர்த்தரின் உறைந்து அவர் அருளைப்பெற்றபின். தன்மனைவி சரஸ்வதியின் வாழ்வை எண்ணினான். திருமணக் காலத்தில் நீங்காது காப்பேன் என்றவாக்குறுதியை எண்ணி இல்லறத்தை நல்லறமாக்க. தனதில்லஞ்சேர்ந்தார்.

பொருள்தேடும் எண்ணமில்லாது திருவருளையேதுணையாய் எண்ணிவாழ்ந்தார் வறுமைவாழ்வையடைந்தாலும் நிறைகுணச்செம்மலாவான் நிகரில்லாத் தந்தையானார் இல்லறவாழ்வை நடத்த இலக்குமியருளை வேண்டியே தான் பெற்றபிள்ளைக்கு இலக்குமிநாதன் என்றே பெயர் சூட்டினார். சுதீர்ந்த தீர்த்தரின் அருளால் சிறிது பொருளுங்கொண்டுவந்தார் ஆனால் சிலநாளில் பொருளுந் தீர்ந்தது. எனினும் தீர்த்தர்பால் வைத்திருந்த அன்பு சிறந் தே வளர்ந்தது.

## மந்த்ர மகிமைப் படலம்

பொருளிலே சிறிதும் நாட்டமில்லாமல் வாழ்ந்த வேங்கடநாதனுக்கு இலக்குமிநாரணன் தோன்றவே பொருள் பெறவேண்டுமென்றயெண்ணங் கொண்டான் அதனால் தான் கற்ற வேதத்தைக்கூறி பொருள்பெறவேண்டுமென்றோ தன்பால் பாடங்கேட்டமாணவனிடமிருந்து பொருள் பெற வேண்டுமென்றோ எண்ணங் கொள்ளவில்லை உடமையைக் கருதாது கடமையே உயிர்மூச்சாய் வாழ்ந்துவந்தார்.

இங்ஙனம் நிகழுநாளில் அண்மையில் உள்ள குளக்குடி யென்னும் ஊரில் ஓர் அதிகாரிவீட்டின் நடந்த சமாராதனைக்கு வேங்கடநாதரும் சென்றார் வேதங்களை ஓதும் கடமையை யாற்றும் வேளைவாய்த்ததென்றே எண்ணினார்.

ஆனால் கடமையாற்றியபிறகும் பந்தியல் ஒருங்கிருந்து உண்ணாமல் சந்தனம் அறைத்தபின்பே யுண்ணும்படி சிலர் பணித்தார்கள் அடுத்தபந்தியிலும் உணவுண்ண அனுமதிக்கவில்லை எனவே சந்தனம் அறைப்பதிலேயே நெடுநேரம் ஆனதால்

சுதாபரிமளத்தோடு அக்னி சூக்மும் சொல்ல வேண்டியதாயிற்று.

இந்நிலையில் உணவுண்டவர்கள் சந்தனத்தையெடுத்துப் பூசிக்கொண்டார்கள். பூசிய அளவில் அக்கினிபோல் எரிய ஆரம்பித்தது. அருகிருந்தவர்கள் பந்தியினின்று நீங்கியதால் வேங்கடநாதரே இப்பிழையைச்செய்திருக்க வேண்டுமென்று அவரை விசாரித் தார்கள்.

அப்பொழுது பிழையான் செய்யவில்லை யென்றும் காலம் நீண்டு சென்றதால் சுதாமரிமளத்தோடு அக்கினிசூக்கம் சொல்லவேண்டியதாயிற்று எனவே சந்தனம் எரிகின்றது என்று கூறினார்.

எனவே மீதியுளள சந்தனத்தை எடுத்து வரச்சொன்னார். அதனை மீண்டும் வருணசூக்தம் சொல்லியறைத்தார். பின்பு அச்சந்தனத்தை எரிகின்ற உடலின் மீது பூசினார்கள். அவர்களின் உடல் மிகக்குளிர்ந்தது. அனைவரும் பிழையை உணர்ந்து வேங்கடநாதரின் காலில்வணங்கி அவருடைய அருளை வழங்கும்படி வேண்டினார்கள்.

## உளத்துறவு படலம்

அந்தணர்கள் பலரும் தன்னை வணங்கக்கண்ட வேங்கடநாதன் இறைவன்திருவடியையே வணங்கினான். இறைவனிடத்தில் பற்று வைத்தலே நலம் பயக்குமெனவுணர்ந்தார் வாழ்வின் உறுதிப்பொருளையுணர்ந்த வேங்கடநாதர் அகப்பற்றுப்புறப்பற்றினை அற்றவராக வணங்கினார். தெய்வத்திருநாமத்தையோதும் சிறந்தவரானார்.

பொருடையாரை யிவ்வுலகம் புகழ்கின்றது ஆனால் உண்மையில் அருளுடையவரே பெரியர் ஆவார் அத்தகுஞானத்தை ஆண்டவன் பாதத்தைப் பாற்றினாலல்லாமல் உலகவர் புகழும் பொருளால் கிடைப்பதன்று என்பதையுணர்ந்ததால் வேங்கடநாதன் பரந்தாமன் நாமத்தைப் பக்திசிறத்தையோடுபகர்லுற்றார். ஆனால் சத்திய லோகத்தில் நாரதன் தந்த வாக்கினைப்பற்றி நினைவல்லாமலும் பிரமன்சாபமும் நினையாமலும் வாழ்ந்தார் பாரதநாட்டின் பண்போடு வாழ்கின்ற வேங்கடநாதர் உலகத்தை நன்கு கற்றுத் தேர்ந்தார். அதனால் உலகவாழ்வில் பற்றற்றவராய் இறைவனொருவனிடத்திலேயே பற்றுடன் வாழலானார்.

## பற்றறுத்த படலம்

வறுமையிலும் செம்மை வாழ்வுற்ற வேங்கடநாதர் பெற்ற இல்லறத்துணை நலத்தால் மூன்று பிறவிக்கண்ணும் புகழ்பெறுதற்கேற்ற பலம் பெற்றதால் அடுத்த பிறவியின் பயனைப்பற்றிநினையாமல் உளம் சிறக்கும்படி வாழலானார். எனினும் உலகவாழ்க்கைக்குத் தேவையான பொருள் வரும்வழியற்றவராய் வறுமை கொண்டார். வறுமையின் உச்சிக்கே சென்றார். இந்நிலையில் திருடராலும் ஓர்நாள் சில பொருள்கள் களவாடப்பட்டன.

இந்நிலையில் கும்பகோணத்தில் உள்ள மடத்திற்குச் செல்வது என முடிவுசெய்தார்கள். சுதீர்த்த தீர்த்தரும் மடத்திற்குவந்த வேங்க டநாதரின் குடும்பத்தை யேற்றார்.

வேதக்கருத்துக்களைக் கற்க நல்லகாலம் வாய்த்ததென்றே வேங்கட நாதர் எண்ணினார் பிறகு ஆஸ்தான கவிஞராக சுதீர்ந்ததீர்த்தர் அறிவித்தார்.

தீர்த்தர் தலயாத்திரை செய்யுங்கால் வேங்கடநாதரையும் அழைத்துச் சென்றார். தென்துவாரகையென்னும் ராஜ மன்னர் குடிக்குச்சென்றார்கள் ஆங்கே மாயாவதிகள் வாதிடவந்தார்கள்.

வேங்கடநாதரின் மகாபாடியத்தில் புலமைபெற்றதால் அவர்களை எளிதில் வென்றார். எனவே சுதீந்தரர் மகாபாடிய வேங்கடநாதர் என்ற சிறப்புப்பட்டத்தை அளித்தார்.

உயர்ந்த பட்டாச்சாரியார் பட்டம் பெற்றவர்க்கே மூலராமர் பூஜையை செய்வதற்குப் பணிக்க வேண்டுமானாலும் மடத்தின் பொறுப்பான உணர்ந்தவராதலாலும் நல்லொழுக்கத்தாலும் வேங்கடநாதரே மடாதிபதியாக ஆகுந்தகுதிபெற்றவர் எனத்தீர்மானித்தார் மேலும் துறவறங் கொண்டவரே மூலராமர் பூஜையைச் செய்வதற்குரியராவர் எனவே அத்தகுதியையேற்கும் வேங்கடநாதர் இல்லறங்கொண்டாலும் திருவருளைப்பெற்றவர் அவரேயென்பதும் கண்டறிந்தார் எனவே ஓர்நாள் மூலராமர் பூஜைமுடித்த பிறகு நாதரிடம் தம் எண்ணத்தைக் கூறமுற்பட்டார். தீர்த்தரின் குறிப்பினையறிந்த நாதர் தீர்த்தரை அணுகி தாங்கள் கூறும் செய்தி யாதென வினவினார். அப்பொழுது மூலராமர் பூஜையை ஏற்கும்படி கூறினார். ஆனால் வேங்கடநாதர் குடும்பபாரத்தைக் கொண்டிருப்பதால் தன்னால் கூடாதென்பது தனது வாதத் திறமையால் மறுத்தார் இதற்கிடையில் சுதீந்திரர் யாதவேந்திரரை அழைத்து அவரிடம் பொறுப்பை ஒப்படைத்தார். யாகவேந்திரரும் சில காலம் சென்றபின் சுதீந்திரர் தலையாத்திரை சென்றார். அதன் பின் சுதீந்திரர் மிக்க நோய்வாய்பட்டதினால் மூலராமர் பூஜை தவறும் எனக் கருதி வருந்தினார். எனவே சுதீந்திரர் மீண்டும் வேங்கடநாதனிடம் தன் கருத்தைக் கூறினார். அப்போது ஏதும் பேசாமல் வீட்டுக்குச்சென்றார். சுதீந்திரரும் மூலராமரையே தியானம் செய்தார்.

அன்றிரவு தீர்த்தர் கனவில் மூலராமர் தோன்றினார். தேகம் சுகமில்லையென்றாலும் திருவருள் துணையைப்பெற்றால் சோகத்தைத் தவிர்ப்பாய். வேங்கடநாதனின் யோகத்தால் அவனுக்கே மூலராமர் பூஜையை அளிப்பாய் என்றும் ராகவேந்திரர் என்ற பெயரையே சூட்டுவாய் என்றும் கூறினார்.

மேலும் நாளைய தினமே நாமகள் காட்சியாள் துறவறம் பூண்பான். உனது சோகம் நீங்கும் என்றும் கூறினார்.

அவர் கூறியதுபோன்றே மறுநாள் பூஜை ஆரம்பமாகும் வேளையில் வேங்கடநாதர் வந்தார் அப்போது தீர்த்தர் தன் கருத்தைக்கூறினார் என்றாலும், வேங்கடநாதர் செய்வதறியாது வருத்தத்துடனே சென்றார்.

# துறவற காண்டம்

## 1. நாமகள் காட்சிப்படலம்

முந்தின தினம் மூலராமரை கனவிற்கண்ட தீர்த்தர் நாமகளை வணங்கினார். நாமகளும் தற்புகழ்ச்சி இல்லாத வேங்கடநாதர் கனவில் தோன்றினாள். கனவிற் கண்ட வேங்கடநாதர் வீணையின்கிழத்தியை வணங்கினார். அப்பொழுது நாமகள் வியாசராசர் கிருஷ்ணதேவர் கம்பன் சங்கத்துப்புலவர்கள் முதலியோர்களிடத்து சிறப்புடன் வாழ்ந்தேன் என்றும், வியாசர் எழுதிய பிரம்ம சூத்திரத்தினால் நான் மிகவும் வளர்ந்தேன் என்றும், திருவள்ளுவர் எழுதிய திருக்குறளால் சாகாவரம்

பெற்றேன் என்றும், கம்பன் எழுதிய ராமகாதையால், எனது தேகம் வளம்பெற்றது என்றும், சங்கப்புலவர்கள் வாக்கினால் நான் இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கிறேன் என்றும் கூறினாள். இன்று உன்னை நாடி வந்தேன், என்னைக்காப்பாற்றுவாய் என்று கூறினாள்.

சிறந்த இனிமையான நூல்கள் எல்லாம் பாழ்பட்டுப்போனால் பயன்கிடையாது. பாழ்படாமல் காப்பாற்றுபவன் நீயே ஆவாய். உன்னை துறவறம் சூழ்ந்தது என்றால் நான் என்றென்றும் வாழ்ந்திடுவேன். என்னை நீ காப்பாற்றவேண்டும் என்றாள்.

சிறந்த நூல்களை உலகில் காப்பது யாரும் இல்லை. உலகோர் அனைவரையும் ஓர் அணியிலே சேர்த்து காப்பாற்றவைக்கும் காரணியாக வந்த நீயே மூலகாரணன் ஆவாய். என்னை பிழைக்கவைப்பாய்.

ஒழுக்கமுடைய சன்யாசி தான் மூலராமர் பூஜை செய்வார் என்று ஞானியாக உலகில் வேதவியாசர் கூறினார். அவரிடத்தில்தான் நான் இருப்பேன் என்று கூறினாள்.

ஆகவே சந்யாசத்தை நீ ஏற்றுக்கொள்ளவேண்டும். வேத சாம்ராஜ்யத்தின் வேந்தனாக நீ வீற்றிருப்பாய். வாதத் தன்மை இருக்கும் என் வார்த்தையை மறுத்தால் உலகில் வைதீகதர்மம் அழிந்துவிடும், நீதி யொழிந்திடும், புத்தகம் அனைத்தும் அழிந்துவிடும்

மேலும் மடத்தில் வேத வித்தகரர்கள் வாழமாட்டார்கள். நரிதான் ஊளையிடும். நீ சந்யாசம் ஏற்கவில்லையென்றால் மடத்தில் பகலிலும் ஆந்தையே குடிகொள்ளும். மேலும் அக்னி தீபம் எரியாது. கொள்ளிவாய் பிசாசுதான் குடிகொள்ளும். அன்றியும் ஞானியர் வாழும் மலர் படுக்கை இருக்காது தெருப்புழுதியே மிகுதியாகும். இவ்வுலகில் நீ சந்யாசத்தை கொள்ள வேண்டுவது

எனது விருப்பம் என்றாள். நான் மகிழ்ச்சி கொள்வதும் உன்னாலே யாகும் உன்னை விட்டு நான் ஒருகணமும் பிரிந்திருக்க மாட்டேன். நீ பொன்மீது ஆர்வமில்லாய் புகழிலே ஆர்வங்கொண்டாய் தெய்வத்தை உண்மையையாய் வணங்குபவர்கள் உலகத்தில் உன்னைப்போல் யாருமில்லை என்றாள். இறைவன் அருளால் சந்நியாசம் அடையவிருக்கின்றாய். நீ ஒப்புதல் தர வேண்டுமென்றே கூறுகிறேன். இதனின்றும் தப்பமுடியாது உன்னை எப்பொழுது புகழ் சேருவோமென்று ஏக்கம் கொண்டிருககிறது என்று கூறினாள்.

இவ்வாறு நான்காவது சாமத்தில் (விடியற்காலையில்) நாமகள் வேங்கட நாதனிடம் கூறி மறைந்தாள்.

நாமகள் அருளைப் பெற்றதும் வேங்கடநாதர் நல்லொளியை அடைந்தார். தன்னையறிந்ததும் மனமாசகன்றார். வள்ளலாக மாறினார். துறவறத்தை நினைந்தார். புத்தொளி பெற்றார். உத்தமனாக நித்திரை விட்டெழுந்தார். பரிபக்குவமில்லாத மனைவியின்பால் தன் கருத்தைக் கூறுவதற்கேற்ற காலம் வாய்க்க வில்லையெனவே திடீரென்று வீட்டைவிட்டுச் செல்ல வேண்டுமென்று முடிவு செய்தார்.

மனந்தெளிவு பெற்ற காரணத்தால் மனைவியை உள்ளத்தாலும் நினைக்காமல் மேலேயுள்ளஉத்தரியத்தோடே மடத்திற்கு செல்வதாக நினைந்தார்.

அவ்வாறே செல்லும்பொழுது சற்றும் அன்பில்லாமல் இலக்குமிநாராயணனை யும் விட்டுச்சென்றார்.

மாட்சிமையைப் பெற்ற மடத்திற்குச் செல்லும் காட்சியைத்துணைவி

கண்டாள். தாட்சியுறுமோயென்று ஏங்கினாள் தன்னைத்திரும்பியும் பாராது செல்லுகின்ற காட்சியைக் கண்டுகண்களிலே நீர் பொழிய நின்றாள்.

நேற்றோ நொந்து வந்தார் ஆனால் இன்றோ சிந்தை தெளிந்தாரே இது என்ன விந்தைபந்தமற்றுசெல்கின்றாறே என்று எண்ணினாள். காற்றுவீசும் பொழுது எரியும் விளக்கு அலைமோதுதல் போன்று உள்ளம்வருத்தமுற்றாள்.

மடத்திற்குச் சென்று சுதீர்ந்தரர் காலில் வீழ்ந்து அழுது நின்றார். தாங்கள் கூறிய வார்த்தையைக்கேட்கவில்லை. பிழைபொறுப்பீர் என்றார்.

நாமகள் கனவில் தோன்றினாள் மனம் செம்மையானேன். மறுத்துப்பேசவில்லை மலர்தூவி வணங்க வேண்டுமென்ற நினைவு வந்தபேது மறைந்து விட்டாள். மேலும்.

எனக்கு உறுதிப் பொருளைச் சொன்னாள். என்னால் வரும்துன்பத்தையும் சொன்னாள். நான் இமையாது நின்றேன். நான் செய்த பிழையை நினைத்தாலே வறுமையுற்றவர் போன்று வருத்தப்பட்டேன். தங்களிடம் வந்து விட்டேன் என்றார்.

அப்பொழு இருவரும் ஒருவர் கரத்தை ஒருவர் பற்றி மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கினார்கள்.

வேங்கடநாதரே உன்னை நானே விரும்பினேன். நீயும் உயர்ந்த மூலராமர் பூஜை செய்வதனால், குறைகள் அனைத்தும் நீங்கும் உலகம் நலம்பெறும் என்றார்.

மேலும் இலக்குமிநாரணனுக்கு உபநயணத்தை முடிப்பாய் என்று கட்டளையிட்டார்.

அவர் கூறியது போன்றே சிலநாளில் அனைவருக்கும் செய்தியனுப்பி உபநயணத்தைச் செய்து முடித்தார். அருகிலே இருந்தவர்கள். உபநயணத்தில் சடங்கு சடங்காக இல்லாமல் சத்திய வாக்காக அமைந்தது கண்டு உலகவர் பலரும் அறியவேண்டி விழாவொன்றை யெடுப்பதாக முடிவு செய்தார்கள்.

## 2. பட்டி மன்றப் படலம்

வேங்கடநாதன் உள்ளத்தில் உண்டான போராட்டமே பட்டிமன்றப் படலமாக உருவாகியது. இல்லறஞ்சிறந்ததா துறவறஞ்சிறந்ததா என்ற மனப்போராட்டத்தை உலகோருக்கு அறிவிப்பதே பட்டி மன்றப்படலமாகும்.

தீர்த்தரே முன்னிலே வகிக்க வேங்கடநாதரே தலைமை வகிக்க சிறந்த அறிஞர்கள் வாதிட வேங்கட நாதன் மனைவி முதல் பூவுலகோரும் புத்தேளுலகத்தோரும் கூடினார்கள். பட்டிமன்றம் இனிதே முடிந்தது. பட்டாச்சாரியார் என்ற பட்டத்தை சுதீர்ந்த தீர்த்தர் வேங்கடநாதருக்கு வழங்கினார்.

## 3. பட்டாபிடேகப் படலம்

தஞ்சாவூரை ரகுநாத பூபாலன் சிறப்பாய் ஆண்டுவந்தகாலத்தில் சுதீர்ந்த தீர்த்தர் தஞ்சை அரண்மனையின் கண் வேங்கடநாதருக்குத் துறவு அளிப்பதென்று கருத்துட்கொண்டு அரசனுக்குச்செய்தி அனுப்பினார். அரசனும் மிக்க மகிழ்ச்சிகொண்டு தஞ்சை நகரம் விழாக்கோலம் கொள்ளச்செய்தான்.

தேவலோகம் என்று சந்தேகப்படும்படி தஞ்சை மாநகரையலங்கரித்தான். வேதவித்தகர்கள் வேதகோஷங்கள் செய்யவும் பாமரரும் பண்டிதரும் பக்தர்களும் அரண்மனையின் கண்ணே கூடினார்கள்.

நாரணன் அம்சமான சங்குகர்ணரே வேங்கடநாதராக அவதரித் தார் என்பதை உலகம் அறிந்தில அத்தகு மேலோருக்கு ருத்ரோத்காரி யாண்டு பங்குனி மாதத்தில் வளர்பிறை மூன்றாம் நாளில் சூரியன் உதிக்கும் வேளையில் உலக பந்தத்தை யகற்றி துறவறம் பூணச் செய்தார். ஸ்ரீராகவேந்திரர் என்ற நாமத்தைச் சூட்டினா. வேதங்களை வேதியர்கள் கூறும்போதும் மூலராமர் முதலாக வியாசராசர்சால கிராமம் சாத்திர புத்தகம் சாமரம் வெண்குடை தங்கப்பல்லக்கு ஈறாகப்பல கருவிகளும் கொடுத்தார். அன்றியும் சுதீர்ந்த தீர்த்தரரிடமிருந்து சரஸ்வதியும் நீங்கி ஸ்ரீராகவேந்திரரிடம் வந்தாள். ஸ்ரீராகவேந்திரரைப்பற்றி சிறிதும் அறியாத எனக்கே ஸ்ரீராகவேந்திரர் நாமத்தைச் சொல்லிய அளவில் கவிதை வளத்தை நாமகள் அளிக்கின்றாள். எனவே இன்றும் ஸ்ரீராகவேந்திரரிடம் நாமகள் உறைகின்றாள் என்பது உண்மையாகிறது.

ஸ்ரீராகவேந்திரர் பட்டாபிடேகம் பெற்றபின் மத்துவ மடத்தில் வந்த தீர்த்தர்களில் ஒருவராக விளங்கினார். அரசன் அவரைத் தத்துவசிரேட்டர் என வுணர்ந்து பாதத்தைப் பணிந்தான். வானில் உள்ள தெய்வம் நாம் காணும்படி நம்பால்வந்ததாக வுணர்ந்து பலகாணிக்கைகளைக் கொடுத்து வணங்கினார் அப்பொழுது ஸ்ரீராகவேந்திரர் நாமகள் அருளினால் வாழ்த்து கூறினார்.

## 4. அன்னை சரஸ்வதிபாய்க்கு அருள்செய்படலம்

மனைவியாகிய சரஸ்வதிபாய் தன்னை வெறுப்பாளெனக்கருதி தஞ்சையின் கண்சென்று துறவறமேற்றார். இதுவரை தாரமாக விளங்கிய சரஸ்வதி இப்பொழுது தாயாயக ஆனாள் இந்நிலையை அடைந்ததும் சரஸ்வதிபலவாறாகப் புலம்பினாள். தன் கருத்தை கங்கையாம் பெண்ணிடம் கூறுவள்போல் கங்கையின் அடியிற்போய்ச் சேர்ந்தாள்.

மறுநாள் கங்கைக்கரைக்குக் கடனாற்றவந்த ஸ்ரீராகவேந்திரர் பாதத்தில் கங்கையானவள் சரஸ்வதியைச் சேர்த்தாள். கண்முன்நிற்கின்ற, முன்பு தாரமான சரஸ்வதிபாயைச்கண்டு அவள் தன்னையுணர்ந்ததையறிந்து அவள் அல்லல் நீங்கி சாந்தியடையவும் துறக்கம் எய்த அருள்பாலித்தார். எனவே தன்னிடமுள்ள கமண்லநீரைத் தெளித்ததும் சுவர்க்கத்தை யடைந்தாள.

## 5. ஸ்ரீராகவேந்திரர் கடனறிபடலம்

ஸ்ரீராகவேந்திரர் பூமியில் மக்கள் பொருளொடு அருளும் கொண்டால்தான் அவர் கட்கு இன்பம் பயக்கும் என்பதை உணர்த்துவதற்காகவே திருவவதாரம் செய்தார்.

சூரியன் உதிக்கும் அதிகாலையில் மடத்தினுள் சீடர்கள் திருப்பள்ளியெழுச்சி பாடவும் தினமும் ஆற்றும் கடமையைக் கருத்திற்கொண்டு நித்திரையினின்றும் எழுந்தார். யானைக்கு முத்தியளித்த ஆதிமூலனின் பெருமையையெண்ணித்தினமும் வணங்கினார். பிறகு அண்மையிலுள்ள காவிரி சென்று காலைக்கட னை முடித்து நீராடிவருவார்.

அதன்பிறகு மந்திரங்களை ஓதியும் தியானம் செய்தும் திருமாலுக்கு நித்திய ஆராதனை செய்வார். அதன்பிறகு மாயாவாதிகளுடன் தர்க்கம் செய்வார் பிறகு உச்சிப்பொழுதிலும் அந்திப்போழ்திலும் நீராடி இறைவனை வணங்குவார். இவ்வாறு மூன்று வேளையும் தவறாது இறைவனை வணங்கிவருகிறார்.

மறுநாள் கங்கைக்கரைக்குக் கடனாற்றவந்த ஸ்ரீராகவேந்திரர் பாதத்தில் கங்கையானவள் சரஸ்வதியைச் சேர்த்தாள். கண்முன்நிற்கின்ற, முன்பு தாரமான சரஸ்வதியாயைச்கண்டு அவள் தன்னையுணர்ந்ததையறிந்து அவள் அல்லல் நீங்கி சாந்தியடையவும் துறக்கம் எய்த அருள்பாலித்தார். எனவே தன்னிடமுள்ள கமண்டலநீரைத் தெளித்ததும் சுவர்க்கத்தை யடைந்தாள்.

## 6.ஸ்ரீராகவேந்திரர் தரிசனப்படலம்

ஸ்ரீராகவேந்திரர் தகுதியான காலத்தைப்பார்த்தார். சீடர்கள் கூடியிருக்கும்பொழுது உலகம் நற்கதியடையும் பொருட்டு பக்தர்களின் வேண்டுகோளையேற்று அன்புடனே தனது தரிசனத்தைக் கொடுத்தார். தன்னையடைந்தவர்க்குத் துன்பத்தைப்போக்கும் ஸ்ரீராகவேந்திரர் மண்டபத்திற்கு வந்தார். திருமாலின் அம்சமானார் ஸ்ரீராகவேந்திரர் வாடினவர்களின் வருத்தம்போக்கும் வள்ளலாக வாழ்கிறார்.

உலக மக்கள் எல்லாம் மழையென அருளைச் செய்தும் என்றும் தனியாக அமர்ந்து ஆட்சிசெய்யும் ஞானியாகவும் ஆகமப்பொருளை அவரவர் நிலைக்கு கேற்ப வழங்கும் மேலோனாகவும் தன்னை வணங்குவர்க்குத் தெய்வமாகவும் விளங்குகிறார்.

## 7.சோதிடப்படலம்

ஸ்ரீராகவேந்திரர் மூன்று காலத்தையும் உணர்ந்த ஞானியாவார். இறையருள்பெற்று இக்காலம் வாழ்க்கின்ற மேலோர் ஆவார். முன்பு சோதிடத்தால் தன்னைத்தான் அறிந்ததாலே எக்காலத்திலும் வாழுகின்ற தெய்வமாவார்.

கேரள நாட்டின் உள்ள சோதிடர்கள் மூவர் ஸ்ரீராகவேந்திரரது சாதகத்தைக் கணித்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாக ஆயுட்காலத்தைக் கூறினார்கள் ஒருவர் 100 வயது என்றார் மற்றவர் 300 வயது என்றார் மற்றொருவர் 700 வயது என்றார். உடலோடு வாழுங்காலம் 100 வயது என்றும் மடமை போக்கும் நூலால் 300 ஆண்டென்றும் கடமையையாற்றுதல் 700 ஆண்டுகாலம் என்றும் கூறினார். ஸ்ரீராகவேந்திரர் தன்னை யுணர்ந்ததனிப் பெருஞானியானதாலே இன்னமும் உலக மக்கட்கு அருள்செய்து கொண்டிருக்கின்றார்.

# 4புகழ்நிலைக்காண்டம்

## தல்யாத்திரைப்படலம்

ஸ்ரீராகவேந்திரர் பாரதகண்டம் முழுவதும் தலயாத்திரைசெய்ய புண்ணியத்தலங்களுக்குச்சென்றார் ஆங்காங்கே இறைவனை வழிபட்டார். இடையில் பல விரதங்களைக்கொண்டார். அவருடைய தலயாத்திரையின்போது நடந்த சம்பவங்கள் அனைத்தும் அவரது புகழுக்குரியவனவாகின்றன. எனவேதான் புகழ்நிலைக்காண்டத்தில் முதலில் தலயாத்திரைப் படலம் அமைக்கப்பட்டுள்ளது.

இதில் குறிப்பிடக்தக்க புகழுக்குரிய சிலவற்றைப் படலமாகவும் அமைத்தும் ஆங்காங்கே நடந்த சில செய்திகளை தலயாத்திரையில் சுருக்கமாகவும் செய்யப்பெற்றுள்ளது. மனிதசக்திக்கு அப்பாற்பட்டதும் அற்புத சக்திகளைக்கொண்டது ம் வேதத்தின் பெருமையை நிலை நாட்டுவதுமாகியவற்றை

அற்புதக்காண்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன. முதலில் இந்திரன் திசையாங் கிழக்கின் கண்சென்றார். திருவாரூரில் உள்ள கமலாலயத்தில் கண்ணனை வழிபட்டார். அதன்பறகு சிவபெருமானை வழிபட்டார்.

பிறகு புகார் நகரஞ்சென்றார். கடல்நீராடினார். முராவெனும் அரக்கனை அழித்த முராரியை வணங்கினார். அதன்பிறகு பல தேயங்களுக்குஞ் செல்லலானார். தேவர்கள் வணங்குஞ் சிறப்புடைய ராஜமன்னார் குடிக்கண் சென்றார். திருமாலை வழிபட்டதனால் உள்ளந்தூய்மை யடைந்தார். தியானம் செய்து இறைவன் பாதத்தை மனத்தில் நிறுத்தினார். பலவாறாக இறைவனை துதித்து வழிபாடு செய்தார். பிறகு இராமேஸ்வரம் சென்றார். ஆங்கே கடல் நீராடி யோகசனத்மர்ந்து தியானம் செய்தார். பிறகு யதோத்திரிக்குச் சென்றார்.பத்ம நாபரை அங்கே வணங்கினார். அதன்பிறகு கல்லிடைக்குறிச்சிக்குச்சென்றார்.

ஆங்கே அந்தணர் ஒருவர் செய்த பிழையினால் அந்தணசமுதாயத்தில் உள்ளோர் அவனை சமுதாயத்தினின்றும் விலக்கி வைத்தார்கள். அதனால் துன்பப்பட்ட அந்தணர் ஸ்ரீராவேந்திரரின் மூலராம பூஜைக்கண் வந்து அவரை வணங்கினார். ஸ்ரீராகவேந்திரர் அவருக்கு தீர்த்தம் வழங்கி பாபத்தைத் தீர்த்தார் இதையறிந்த அந்தணர்கள் மிகவன்மையாக எதிர்த்தனர் அப்பொழுது ஸ்ரீராகவேந்திரர் கடுக்காய்மையில் நனைந்த நல்ல வெள்ளை ஆடை கறுப்பான பிறகு அவர்கள் முன்னாலேயே சங்கு தீர்த்தத்தின் பெருமையை யுணர்த்த வேண்டி அதன் மேல் தெளித்தார். ஆடை முழுவம் தூயவெள்ளையாயிற்று. அதனைக்கண்ட அந்தணர்கள் தங்கள் தவற்றை யுணர்ந்து ஸ்ரீராகவேந்திரரைப் பணிந்து சென்றனர்.

## பீஜப்பூர்செல்லுதல்

ஒரு சமயம் பீஜப்பூர் நகரில் இருந்து கிருஷ்ணா ஆற்றின் கரைக்குச் சென்று ஆங்கேவுள்ள ஆலூரில் தங்கினார். அவ்விடத்தில் பல நூல்களை எழுதினார். தத்வ மஞ்சரி என்னும் நூலும் பாவதீபம் என்னும் நூலும் செய்தார். அதன் பிறகு ரெஸ்ச்சூர் வட்டம் சென்றார் அப்பொழுது சதுர் மாத விரதம் கொண்டார் மாணவி என்னும் ஊரில் தங்கி மூலராமர் பூஜை செய்தார். ஆஞ்சநேயர் கோயில் கொடிக்கம்பத்தருகே ஒருபக்தர் இருப்பதைப் பார்த்து அவருடைய முன் ஜென்மத்தையறிந்து சொன்னார் அவரே கனக தாசர் ஆவார்.

புலையனாய்ப் பிறந்திருந்தும் முன்பிறவி வாசனையால் முத்தியை நாடினான் ஸ்ரீராகவேந்திரர் மூலராமர் பூசைக்கண் அவர் கொடுத்த கடுகைச் சேர்த்துப் புகழைச் சேர்த்தார் இறுதியில் முத்தியடைந்தான் ஆஞ்சநேயர் கோயிலுக் கெதிரிலேயே அவர் சிலையை வடித்து வைத்தார் ஒரு சமயம் கும்ப கோணத்திலிருந்து வெளியூர் செல்ல ஆயத்தமான போது ஒரு சீடர் திருமணம் நடந்தது. அவருக்கு ஆசிவழங்கினார். ஆனால் சில மணித்துளிகளுக்குள் அவர் இறந்து போனார். மணமகள் ஸ்ரீராக வேந்திரரிடம் வந்து முறையிட்டு வணங்கினார்.திருமிகு மூலராமரின் நடக்கையென்றறிந்த ஸ்ரீராக வேந்திரர் தன்னுடைய கமண்டல நீரையெடுத்து தன் வந்திரி மந்திரத்தை யுச்சரித்து சடலமீதில் தெளித்தார் இறந்தவர் உறங்கினான் போல் எழுந்தார்.

## தஞ்சாவூர் செல்லுதல்

கும்பகோணத்திலிருந்து தஞ்சாவூருக்குச் செல்லலானார். அப்பொழுது தஞ்சையை ஆண்ட ரகுநாத பூபாலன் வரவேற்றான். அப்பொழுது தஞ்சை பஞ்சத்தில் ஆழ்ந்திருந்தது. அரசனது முறையீட்டால் ஸ்ரீராக வேந்திர களஞ்சியத்தில்

பிரணவத்தை எழுதினார். அது முதல் களஞ்சியத்தின் பொருள் எடுக்க எடுக்க வளர்ந்து கொண்டே வந்தது. மக்களெல்லாம் பஞ்சந்தீர்ந்து பரமனை வழிபட்டார்கள். மக்கள் பிரணவப் பொருளை யுணர்ந்தார்கள்.

அரசன் ஸ்ரீ ராக வேந்திரருக்குக் காணிக்கையாக விலையுயர்ந்த வைர மாலையைக் கொடுத்தான். ஸ்ரீராக வேந்திரர் அதனை யாககுண்டத்திலே போட்டார். மன்னன் மிகவும் வருந்தினார். ஆனால் ஸ்ரீராக வேந்திரரிடம் கூறவில்லை. சிறிது நேரத்திற்கெல்லாம் அந்த வைரமாலை மிகவும் சிறப்பாக வந்தது. அதனை அரசன் கையிலே கொடுத்துச் சொன்னார். உலகில் மக்கள் படும் துன்பத்தை போக்குவது வைர மாலையன்று ஜீவரத்தினங்களேயாகும். உலகில் உள்ள பொருள்கள் எல்லாம் ஆண்டவன் நமக்கு கொடுத்ததாகும் என்றெண்ணி அதனை நாம் ஆண்டவனுக்குஅர்ப்பணித்தால் நாம் அழியும்படி இறைவன் செய்யமாட்டான். உலகில் நிலைத்து வாழ்வதற்கே அருள்புரிவான் என்று கூறினார்.

## அந்தணர் ஐயம் போக்கியது.

ஸ்ரீராகவேந்திரர் மீண்டும் கும்பகோணமே வந்தார். காவிரியில் நீராடும் அந்தணர் மூவர் ஸ்ரீ ராக வேந்திரர் அற்புத சக்தியைப் பற்றி ஐயப்பட்டாகள். அப்பொழுது ஸ்ரீராக வேந்திரரது காவியாடையைத் துவைத்துக் கொண்டிருந்த சீடர் இவர்கள் பேசியதைக் குறிப்பா ல் உணர்த்தினார். பிறகு மூவரும் சீடரை அணுகி வினவின பொழுது அவனுடை வார்த்தையால் அறிவற்றவன் என்பதையுணர்ந்தார்கள் என்றாலும் சீடர் சொன்ன ாலின் பெருமை காவியாடையை வைத்திருந் ததாலேயே என உணர்ந்தனர். . பின்நேரிலே மடத்திற்குச் சென்றார்கள். ஸ்ரீ ராக வேந்திரர் அவர்களைப் பார்த்து, இப்போது திருப்திதானே என்று கேட்டதும் தாங்கள் ஐயப்பட்டது பிழையென்றும் ஸ்ரீராக வேந்திரர் மகானேயென்றும் உணர்ந்து வணங்கினார்கள்.

## மண்ணைக் கொடுத்து மணவினை முடித்தது

ஒரு சமயம் பணிபுரியும் சீடர் ஒருவர் தமக்கு திருமணம் செய்து கொள்ளத் திரவியம் இல்லையென்று கருதி ஸ்ரீராக வேந்திரரிடம் தன் கருத்தைக் குறிப்பால் உணர்த்தினார்ஸ்ரீராக வேந்திரரும் அதனையறிந்து ... கொண்டு வந்த காவிரி மண்ணையே கொடுத்து வாழ்த்தியனுப்பினார். அம்மண்ணைப் பத்திரமாக ஒரு பேழையில் வைத்துக் கொண்டு புறப்பட்டான். இடையில் இருள்சூழ்ந்த இரவு நேரத்தில் ஓர் சிற்றூரில் ஒரு திண்ணையில் உறங்கினான். அப்பொழுது பூதம் ஒன்று வந்து அவனை யெழுப்பியது பெட்டியில் உள்ளபொருள் தன்னைச் சுட்டெரிப்பதாகவும் தாங்கள் பிரம்மத்தைக் கண்ட பெரியவர் என்றும் தாம் பிரம்மராக்கதன் என்றும் இவ்வீட்டின் சொந்தக்காரனின் குழந்தையைக் கொல்ல வந்தேனென்றும் கூறியது.

என்னை வீட்டினுள் செல்லாமல் இந்த பெட்டியிலுள்ள பொருள் எரிக்கிறது. தங்கட்கு பொன்னும் பொருளும் இதோ வைத்திருக்கிறேன் எடுத்துக் கொண்டு என்னை உள்ளே போக அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டான். ஆனால் சீடன் பேழையைத் திறந்து ஸ்ரீராக வேந்திரர் கொடுத்த திருத்திகையை பிரம்மராக்கதன் மேல் போட்டான். பிரம்மராக்கதன் சாபம் நீங்கி நற்கதியடைந்தான். அப்பொழுது ஒளியொன்று தோன்றியது கண்ட வீட்டார் செய்தியை அறிந்தார்கள். தமது மூத்த பெண்ணை சீடனுக்கே திருமணம் செய்து வைத்தார்கள் முறையாக ஊர் சென்று திருமண முடித்து ஸ்ரீராக வேந்திரரிடம் கூறி ஆசிபெற்றார்கள்.

ஒரு சமயம் கொல்லாப் பூரினின்றும் வடநாட்டில் பயணம் செய்யும் பொழுது. வடநாட்டரசன் ஒருவன் சந்நியாசியென்றாலே போலியென்று எண்ணிவந்தான். ஆனால் ராணி மட்டும் நம்பிக்கை வைத்துவந்தாள். ஸ்ரீராக வேந்திரர் பெருமையைக் கூறியுங்கூட அரசன் நம்பிக்கை கொள்ளவில்லை. உரையாடிக் கொண்டிருக்கும் பொழுதே நல்ல படியாய் இருந்த மகன் கைகால் வலித்துக் கொண்டு துன்பப்பட்டான். மருத்துவர்களாலும் வலி நிற்கவில்லை. அருகிருந்த அரசியானவள் ஸ்ரீராகவேந்திரர் பெருமையைக் கூறினாள். அரசன் நம்பிக்கைக் கொண்டு ராகவேந்திரரைப் பார்க்கப் புறப்படார்கள் சற்று நேரத்திற்கெல்லாம் படுக்கையினின்ற பையன் சுகமாகி எழுந்து ஓடிவந்தான் ஸ்ரீராக வேந்திரரிடம் சென்று நடந்ததைக் கூறினார்கள். அதனைக் கேட்ட ராகவேந்திரர் புன்முறுவல் கொண்டார்.

## விளையாட்டால்விளைந்தவினை

ஒரு சமயம் ஸ்ரீராக வேந்திரர் தலயாத்திரை செல்லும் பொழுது சிறிய வழிப் பாதையில் சிலவந்தனர் இந்த பையன் உண்மையாகவே இறந்து விட்டான். நாங்கள் என்ன செய்வோம் இவனை உயிர்ப் பிழைக்க வையுங்கள் என்று கூறினார்கள். ஸ்ரீராக வேந்திரர் அவருடைய அறியாமைக்கு அருள் செய்ய வேண்டியிறைவனிடம் வேண்டினார் மூலராமரும் படுத்திருந்த பையனுக்கு நற்கதியளித்து விட்டார் என்பதையறிந்த ஸ்ரீராகவேந்திரர் இறந்தவனை என்னால் எழுப்பமுடியாது என்றும் நானும் உங்களைப் போல் வழிப்போக்கனேயென்றும் சாதாரண மக்களைப் போன்றே கூறினார்

ஆனால் நாடகமாக நடிக்க வைத்த பையனை வந்தவர்கள் எழுப்பினார்கள் முடியவில்லை அவன் இறந்தது கண்டு ஸ்ரீராக வேந்திரரை வணங்கி மன்னிப்பு கேட்டார்கள் திருமாலின் அம்சமான ஸ்ரீராகவேந்திரரை அறிந்து கொள்ளாமல் பிழை செய்ததால் அவர்கள் பெரும் துன்பத்திற்கு உள்ளானார்கள் அவர்கட்கு ஸ்ரீராவேந்திரா புத்திமதிகளை கூறினார்.

## 2பட்டசங்க்ரஹப்படலம்

சிவன் முத்திபுரமான மதுரையம்பதிக்கு ஸ்ரீராகவேந்திரர் சென்றார். அப்பொழது மதுரையம்பதியை நாயக்கர்கள் ஆண்டு வந்தார்கள்.

அப்பையதீட்சதர் நீலகண்ட தீட்சதர் பேன்றோர் ஆஸ்தான கவிஞராக விளங்கியவர்கள் அத்தகைய மதுரையம்பதிக்கு ஸ்ரீராக வேந்திரர் சென்றார். அரசன் ஸ்ரீராகவேந்திரரை அரண்மனைகண் வரவேற்றான், ஸ்ரீராகவேந்திரர் அரண்மனைக்குச் சென்றதும் ஸ்ரீராதேரரை அரசமரியாதையடன் வரவேற்றான். அரசவைக்கவிஞரான நீலகண்ட தீட்சதரைக்கண்டு வாதம் செய்தார்வாதத்தன்மையை அரசனே கண்டு வியந்தான் மன்னனே நூலைமதித்து பட்டத்து யானை மீதேற்றி எட்டு திக்கினு முள்ளவர்கள் போற்றும் வண்ணம் பெருமைபடுத்தினான். அச்சமயத்தில் ஆலயதரிசனத்தின் போது உயர்குருவான ஸ்ரீராகவேந்திரருடன் அரசனும் இருந்து வழிபாடு செய்தான் ஸ்ரீராகவேநதிரரும் மனமுருக இறைவனை வழிப்பட்டார்.

## 3சா துர் மாத விரதப்படலம்

ஸ்ரீராகவேந்திரர் பாரத கண்டத்தின் பண்பின் வந்த மாமுனிவராவார் சதுர் யுகமும் பூவுலகில் தோன்றியவர் சதுர் மாத விரதத்தை கொண்டு பெருமை பெற்ற மகானாவார் சனகாதி முனிவர்போன்றே விரதங்கொண்ட ஸ்ரீ ராகவேந்திரரை

நஞ்சன்கூடென்னும் நகரில் தொட்ட தேவர் வணங்கி ஆசி பெற்றார். அவருக்கு உலகம் வியக்கும்படி வரவேற்பு அளித்தான்.கன்னட நாட்டையாண்ட தொட்டத் தேவரே ஸ்ரீராகவேந்திரர் தம் நாட்டில் தங்கி சாதுர் மாத விரதத்தை மேற்கொள்ள வேண்மென்றே விண்ணப்பித்தான். அப்பொழுது மைசூர் நாட்டிலுள்ள ஸ்ரீரங்கப்பட்டணம் தலைநகரமாக இருந்தது. அந்நகரில் தங்கி பகற்பொழுது நடுவானின் கண் பகலவன் இருக்கும் பொழுது உள்ளத்தில் திருமாலை எண்ணி பூஜையைத் தொடங்கினார்.

சதுர்மாதத்தில் ஒருநாளாவது நடுவானில் பகலவன் இருக்கும் போது அரியை நினைந்து விரத மிருக்கின் அதன் பயன் அவன் அந்தணன் ஆவான். மேலும் வேதங்களைக் கற்ற வித்தரர்தவார் கீதையின் பொருளணர்ந்த கீர்த்தியாளராவார் போதனை புகலும் அறிவைப் பெற்றவராவர் துன்பம் இல்லாமல் உலகில் வாழ்வோராவர். அத்தனை நலம்பயக்கும் விரதத்தை ஸ்ரீராகவேந்திரர் அரசரது அரண்மனை மண்டபத்தில் நடத்தினார். இறைவணாகிய முலராமருக்குத் தொட்டத்தேவர்,ஸ்ரீராகவேந்திரர் தேவராவார் என்று உலகம் அறியும் வண்ணம் தேவராஜபுரம் என் ஊரைத் தானமாக் கொடுத்தார். மற்றும் இறைவர்க்கு அலங்காரம் செய்யும் பலவகைப்பெருளும் ஈந்தார்.

## 4முடவனுக்குமுத்தியளித்த படலம்.

ஸ்ரீராகவேந்திரர் தலயாத்திரையின்கண் சித்தல் துர்க்கத்திலே தங்கினார். அப்பொழுது சீடர்களில் ஒருவர் தாம் முக்தியடைய வேண்டுமென்று விருப்பங் கூறினான். அவன் முடவனாக யிருந்தான் எந்றும் முத்தியைக் கேட்டான் என்றும் மற்றைய சீடர்கள் அவனைக் பரிகாசம் செய்தனர். ஸ்ரீராகவேந்திரர் இதனை அறிந்தார். மேலும் ஸ்ரீராகவேந்திரர் பக்குவப்பட்ட மனிதனுக்கு முக்தியளிக்கும் தகுதியடைத்தவர் என்பதை அந்த சீடர் நன்கு உணர்ந்திருந்தார். அவனுடைய பக்குவதத்தைக் கண்ட ஸ்ரீராகவேந்திரர் சொற்படி நடப்பதாகவும் உறுதி தந்தான். எனவே மறுநாட்காலையில் விடியுமுன்னமே அனுட்டானம் முடித்து மடியுடனே வரச்சொன்னார். அதற்குள் பெரியயாககுண்டத்தை ஏற்படித்தினார் கொழுந்து விட்டெவியும் யாக குண்டத்தின் அருகிற் சென்று மூலமந்திரத்தை உபதேசம் செய்தார். பிறகு சீடர் அக்குண்டத்தை மூன்றுமுறை வலம் வந்தான் என்ன ஆச்சர்யம் அந்த அக்கினி கொழுந்தானகு சீடரின் காலில் வந்து வணங்கியது. அப்பொழுது சீடர் எவ்வித வருத்தமும் அடையவில்லை அக்கினியின் குளிர்ந்ததன்மையைக் கண்ட அவன் பொய்கையில் இறங்குவதைப் போன்று எந்த துன்பமும் இல்லாமல் அக்கினி குண்டத்தில் இறங்கி மறைந்தான். ஆனால் அருகிலே இருந்தவர்கள் முடவன் அநியாயமாக இறந்துவிட்டான் என்று கூறினார்கள். அப்பொழுது ஸ்ரீராகவேந்திரர் அமைதியாக இருக்கச் சொன்னார் சற்று நேரத்திற்கெல்லாம் விமானத்தில் ஏறிச்செல்லும் மணியோசையை அனைவரும் கேட்டார்கள். அறியாமைக்கு மன்னிப்புக் கேட்டு வணங்கினார்கள.

## 5வாதுவெல் படலம்

ஸ்ரீராகவேந்திரர் மதுரை மாநகரில் மக்களுக்கு ஆசிவழங்கிய பின் பு அரசனிடத்து விடை பெற்று ஸ்ரீரங்கம் வந்தார். பிறகு நாமக்கல் சென்றார். ஆங்கே நரசிம்மரையும் அமிர்த வல்லியையும் வணங்கிய பின் வேலூர் சென்றார். அங்கே வெங்கடபதிராயர் ராமதேவராயர் நாட்டை ஆண்டார்கள். ஸ்ரீராகவேந்திரர் அரசவைக்கண் சென்றபொழுது வீரபட்டர் பைரவபட்டர் இருவரும்

ஸ்ரீராகநேந்திரருடன் வாதம் செய்ய வந்தனர். அரசரின் வேண்டுகோளால் ஸ்ரீராகவெந்திரர் வாதம் செய்ய சம்மதித்தார். ஆண்டவனும் ஆன்மாவும் இரண்டல்ல ஒன்று என்றே வாதித்தார்ள். அதற்கு ஸ்ரீராகவேந்திரர் தெய்வச் சிலையைச் செம்பினால் செய்தே வணங்குகிறோம் நம்மிடம் இறைவனிருந்தாலும் நாம் தெய்வமாவதில்லை.

முன்னோர்கள் சிலையிலே தெய்வத் தத்துவத்தை அமைத்தார்கள். உண்மையில் உலகமெல்லாம் இறைவன் வடிவேயகும் நானே நீயாக இருக்கின்றேன் என்பது சற்றும் பொருந்தாது உலகிலுள்ள பெரியோர்கள் தெய்வமகத்தவங் கண்டு தெளிவதற்காக சிலையை வடித்தார்கள். அறிவு பெற்ற நாம் அதனை மறக்கக்கூடாது கூட்டைக்கட்டிய குளவி புழுவினை கூட்டில் வைத்து குளவியாவது போன்று குருவின்வார்த்தையால் மனிதன் தெய்வ மந்திரத்தால் தெய்வத்தன்மை பெறுகிறான் அவ்வளவேயல்லாது தெய்வமாகவேயாவதில்லை தத்துவமசியென்பதை ஆதிசங்கர் கூறிய வாக்காகும். அவர் சிவத்தன்மையை அடைந்ததாலே உலகிலுள்ள மக்களெல்லாம் சிவன் என்று கூறுவது பொருந்தாது மேலும் புழு என்றும் குளவியென்றும் வேறு பொருள் இருப்பது போன்று சிவனும் சீவனும் வெவ்வாறாகும் மேலும் நான் நீ என்பதாலே இரண்டாகும் அதனை ஒன்று என்று கூறுவது தருக்கத்திற்கே பொருந்தாது என்றார். அப்பொழுது அரசன் முதலிய அனைவரும் ஸ்ரீராவேந்திரரை வணங்கினார்.

# *ஸ்ரீராகவேந்திர விசயபடலம்*

ஸ்ரீராகவேந்திரரின் தமக்கையின் புதல்வராகிய கவிஞர் ஸ்ரீநாராயணாச்சாரியார் வடமொழியில் ஸ்ரீராகவேந்திரர் சரித்திரத்தை ஸ்ரீராகவேந்திர விஜயமென்ற பெயரில் நூால் ஒன்றினைச் செய்துள்ளார்.

அதில் முதல் சுருக்கத்தில் கடவுள் வணக்கமும், இரண்டாம் சருக்கத்தில் மத்துவர் வாழ்க்கை வரலாறும், மூன்றாம் சறுக்கத்தில் கௌதம கோத்திரத்தில் ராவேந்திரர் தோற்றமும், சருக்கம் நான்கினாலே பலருடைய திருமணங்களையும், ஐந்தாம் சருக்கத்தினாலே ஸ்ரீராகவேந்திரரது திருமணமும், ஆறாவது சருக்கத்தாலே ராகவேந்திரரது துறவரமும், ஏழு எட்டு சருக்கங்களாலே தலயாத்திரையும், ஒன்பதாம் சருக்கத்தாலே கடமையும், பத்தாம் சருக்கத்தாலே ஞானமும், பிருந்தாவனமும் உரைத்தார்.

# 7. மாணவர் மயக்கறு படலம்

கும்பகோணத்தில் திருமடத்தில் மாணவர்களது சந்தேகத்தை ஸ்ரீராகவேந்திரர் போக்கி வந்தார் ஒருநாள் மடத்தில் மாணவர்கள் வேத பாடத்தைக் கேட்பதற்கு கூடியிருந்தார்கள் ஸ்ரீராகவேந்திரர் மடத்திற்கு வந்ததும் மாணவத்களைப் பார்த்து இன்றைய வகுப்பு மடத்தின் எதிரில் உள்ள மரத்தின் கிழே நடக்கும் என்று கூறினார். அவர்களும் அவ்வாறே மடத்தின் எதிரில் சென்றமர்ந்தனர். கேரள சோதிடத்தாரின் கூடத்தினை ஆராய்ந்து கெண்டிருக்கும் பொழுது சுவாமிகள் எழுந்து நின்றார். மாணவர்களும் எழுந்து நின்றாகள். அப்பொழுது துளவ மாலை ஒன்று சுவாமிகளின் கழுத்தில் விழுந்தது. அனைவரும் ஆகாயத்தைப் பார்த்தார்கள். ஆங்கே இருவர் இரண்டு விரலை காட்டி மூன்று முறை அசைத்து விட்டு இராகவேந்திரரைப் பார்த்த வண்ணம் சென்றார்கள். அனைவரும் ஆச்சரியத்துடன் நோக்கினர். பிறகு சுவாமிகளை மாணவர்கள் அவர்களைப் பற்றிக் கேட்கலானார்கள். மேலே சென்றவர்கள் கிருட்டின துவைபாதர் அவர்கள் எனக்குத் தங்கள் கைகளால் செய்தியை உணர்த்திச் சென்றார்கள் என்று கூறினார். இரண்டு விரலைக் காட்டி மூன்று முறை அசைத்ததனால் இன்னும் இரண்டு வருடம் இரண்டு மாதம் இரண்டு நாளில் வைகுந்தத்திற்கு வரவேண்டும் என்பதை உணர்த்தினார்கள் என்றார். மேலும் உலக மக்கள் படுந்துன்பத்திற்குக் காரணமும் அவர்கள் பிறவிப்பயனை அடைவதற்காகும் வழியையும் பற்றி வினவினார்கள். அவர்கள் சந்தேகத்தை நீக்கி அருளினார்



# 5.அற்புதகாண்டம்

## 1. பட்டமரம் துளிர்த்த படலம்.

சீரஸங்கி என்ற ஊரில் வைதீக நம்பிக்கையில்லாத ஒரு பாளையக்காரன் அந்தணர்களின் நிலபுலன்களை அநியாயமாக அபகரித்து அனுபவித்து வந்தான். இதனால் அந்தணர்களின் நித்யகர்மங்கள் தடைப்பட்டன. ஸ்ரீராகவேந்திரர் புனித யாத்திரையாக சீரஸங்கிக்கு விஜயம் செய்தபோது அந்தணர்கள், ஸ்ரீசுவாமிகளிடம் தங்களது அல்லல்களை முறையிட்டனர். மறுதினம், சீரஸங்கியிலே ஒரு யாகம் வளர்க்க ஏற்ப்பாடு செய்தார் ஸ்ரீராகவேந்திரர். இது அந்த கோபக்கார பாளையக்காரனுக்கு தெரிந்துவிட்டது. உடனே அவன் புறப்பட்டு, திடு திடென ஸ்ரீராகவேந்திரர் எதிரில் சீறி ஞாளிபோல் வீழ்ந்தான். அந்தணர்களையும், வேதம், யாகம் முதலியவைகளையும் வைதான். வேதங்களுக்கு ஆற்றல் இருக்கிறது என உங்களால் நிரூபணம் செய்ய முடியுமா? என்று எதிர்த்து கேட்டான். ஸ்ரீராகவேந்திரரும் அவனது சவாலை ஏற்றுக்கொண்டார். காய்ந்த உலக்கை போல இருக்கும் பட்டுப் போன மரம் ஒன்றை ஸ்ரீராகவேந்திரரிடம் தந்து, இதை துளிர்விட செய்தால் வேதங்களுக்கு ஆற்றல் உள்ளது என ஒப்புக்கொள்கிறேன் என்றான் அந்த முரட்டு பாளையக்காரன். ஸ்ரீராகவேந்திரர் அந்த பட்டுப் போன மரக்கட்டையை பூமியில் நட்டுவைத்து வேத மந்திரஞ்செபித்து, கமண்டல நீரை பாய்ச்சினார். தினந்தோறும் ஸ்ரீமூலராமர் அபிஷேக தீர்த்தத்தையும் அந்த மரக்கட்டைக்கு ஊற்றினார். கொஞ்சம் நாட்கள் ஆனவுடன் அந்த பட்டுப்போன மரத்தில் பசுமை தோன்றி, துளிர்விட்டு செழிப்பாக வளரத்தொடங்கியது.

இதைக்கண்ட பாளையக்காரன் மிகவும் நாணினான். தான் அநியாயமாக அபகரித்த நிலபுலன்களை உரியவர்களுக்கு திரும்ப அளித்து, ஸ்ரீராகவேந்திரரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான்.

## 2. பாலைவனக் கேணி படலம்

ஸ்ரீராகவேந்திரர், பாண்டுரங்கவிட்டலின் பண்டரிபுரம் என்ற திவ்யஸ்தலத்தை நோக்கிப் பயணம் செய்துகொண்டிருந்தார். வழியில் ஒரு பாலைவனப் பிரதேசம். அதனால் நடந்துகொண்டிருந்த ஸ்வாமிகள், பல்லக்கில் அமர வைத்துக்கொண்டு சென்றனர் அவர்தம் சீடர்கள். அப்போது சீடர் ஒருவரின் மனைவி கர்ப்பிணியாக பல்லக்கின் பின் வெகுதூரம் நடந்து வந்து கொண்டிருந்தார். அவருக்கு பிரசவ நேரம் நெருங்கவே, மிகவும் அவதிப்பட்டார். பிரசவ வலி, பாலைவனத்தில் வெப்பம், தாகவிடாய், ஆகியவை ஒருசேர அவரைத்தாக்கின. இதை ஸ்ரீ ராகவேந்திரர் தனது ஞான நோக்கினால் அறிந்து கொண்டார். உடனே தன் மேனி மீதிருந்த காஷாய ஆடை ஒன்றை எடுத்துக்காற்றிலே வீசி பறக்கவிட்டார். அந்த ஆடை அவ்வமையாரின் மேலே கூடாரம் போல் அமைந்து நிழல் தந்தது. பின்பு தனது பிரம்ம தண்டத்தால் பாலைவனத்தில் கேணி செய்தார்.கேணியின் அருகே உள்ள அம்மையாரை சுற்றி கோடு வரைந்து மந்த்ர ஜபம் செய்தார் அதனால் அந்த பரப்பு முழுவதும் ஒரு சோலையாக மாறி, ஒரு தடாகம் ஏற்பட்டது அம்மையாரின் துயரங்கள் எல்லாம் பறந்தோடின. சுகப்பிரசவம் ஆனது தாயும் சேயும் நலமாக புனித யாத்திரையைத் தொடர்ந்தனர். ஸ்ரீராகவேந்திரர் உருவாக்கிய கேணி இன்றும் தண்ட

தீர்த்தம்' என்ற பெயருடன் பாலைவனத்தின் நடுவே திகழ்ந்து வருகிறது.

## 3. சுடுமணலின் மீட்ட படலம்

ஸ்ரீ ராகவேந்திரர், பாலைவனக்கேணி செய்த பின்பு 'நாசிக்' நகரத்திற்கு விஜயம் செய்தார். அங்கே கோதாவரி நதியின் புனித நீரில் தீர்த்தமாடினார். பின்பு பீஜப்பூருக்கு செல்லும்போது, பெருமணற்பரப்பு ஒன்றை வழியில் கண்டார். அதில் ஒரு அடியவரின் ஓலமிட்டு அரற்றுவதைக்கேட்டு அதிர்ந்தார். சூரியனின் கடும்வெப்பத்தை தாங்கமுடியாமல் கதறும் அந்த அன்பனைக் காப்பாற்றுவதற்கு, வருணமந்திரத்தை முறைப்படி செபித்தார். வெப்பத்தால் உடல் தீய்ந்து கருகும் நிலையில் மரணவேதனை அனுபவிக்கம் தருவாயில் வருண மந்திர மகிமையால் குளிர்மேகங்கள் வானத்தில் ஒன்று சேர்ந்து, அடியவர்க்கு குளிர்நிழல் தந்தன. பிறகு அந்த அடியவன் ஸ்ரீராகவேந்திரரை நோக்கி வர, அந்த மேகங்களும், கூடவே வந்தன. ஸ்ரீராக வேந்திரரின் திருவடிகளில் அடியற்ற மரம்போல் வீழ்ந்து நமஸ்கரித்தான். சுடுமணலில் சிக்கி உயிர் விடுந்தருவாயில் கருகிவந்து என்னைக் காத்த தெய்வமே என்று போற்றி செய்தான். தாகம் தீர்க்க நீரும், பசியடங்க உணவும் தந்து பக்தனின் துயர்முழுதும் சொல்லிக்கொள்ளாமல், ஸ்ரீராகவேந்திரரிடம் விடைபெற்றக்கொண்டு புதுத்தெம்புடன், பீஜப்பூரை நோக்கி விரைந்து சென்றுவிட்டான். சுவாமிகள் பீஜப்பூரை அடைந்தபோது அந்த தேசத்து மன்னனான அடில்ஷா பெரும் வரவேற்பு அளித்து எதிர் கொண்டான். இப்படி முன்னேற்பாடாக வரவேற்பு விழாவைச் செய்யும்படி சொல்லியது சுடுமணலில் சிக்கின அந்த பக்தரே ஆவார். அப்போது ஸ்ரீராகவேந்திரருக்கு "ஜகத்குரு" என்று பட்டம் அளித்து சான்றோர்கள் போற்றிசெய்தனர்.

## 4. மந்த்ராட்சதை நிறம் மாறிய படலம்

'பிதருஹள்ளி' என்ற ஊரில் சீனிவாசாச்சாரியர் மூலராமரின் மந்த்ரத்தை ஜெபித்து ஆசாரசீலராக வாழ்ந்து வந்தார். ஒரு முறை ஸ்ரீராகவேந்திரர் பிதருஹள்ளுக்கு விஜயம் செய்தபோது, ஸ்ரீராவாசாச்சாரியர் தரிசனம் பெறவந்தார். ஆஷாடமாதத்தில் கடுகு சேர்ந்த உணவு உண்ணக்கூடாது என்பது விதி. ஆனால் மடத்தில் அந்த விதி கடைப்பிடிக்கவில்லையே என்று வருந்தினார். சீனிவாசாச்சாரியர், அதை வெளியில் சொல்வதற்கும் அச்சப்பட்டார். மனதில் பெருஞ்சுமையோடு, அதிகம் சாப்பிடாமல் விடைபெற்று, வெளியேற எண்ணினார். அதற்கு முன் ஸ்ரீராகவேந்திரரிடம் மந்த்ராட்சதை பெற்று தனது மேலாடையில் ஒரு மூலையில் முடிந்து கொண்டார்.

பிதருஹள்ளுக்குச் சென்று தன்னுடைய அண்ணனைக்கண்டு தன் மனக்கருத்தைக் கூறினார். அவருடைய அண்ணன் ஸ்ரீராகவேந்திரர் அளித்த மந்த்ராட்சதையைக் கேட்டார். அதனால் அவர் முடிந்து வைத்திருந்த மந்த்ராட்சதையை பிரித்துப் பார்க்கும் போது மிகவும் அதிர்ச்சி அடைந்தார். ஏனெனில் அது கருப்பாக மாறியிருந்தது. இதைக் கண்ணுற்ற அவரது அண்ணன், கருப்பாக மாறியிருப்பதற்கு, முழு பொறுப்பும் நீ தான் ஏற்க வேண்டுமென்று சீனுவாசாச்சாரியரிடம் திட்ட வட்டமாகச் சொல்லிவிட்டார். திரும்பவும் ஸ்ரீராகவேந்திரரிடம் சென்று மன்னிப்புக் கேட்டுவா என்று கட்டளையிட்டார். மூலராமரின் அனுமதியோடு விதிக்கு விலக்காக கடுகு சேர்த்திருப்பதை

ஸ்ரீராகவேந்திரர் விளக்கம் கூறி, ப்ரசாதம் அளித்தார். இப்போது கடுகு சேர்ந்த ப்ரசாதத்தை வாங்கிக்கொண்டு, விடைபெற்றார். முன்பு வாங்கிய மந்த்ராட்சதை கருநிறத்திலிருந்து செந்நிறத்திற்கு மாறியிருப்பதைக்கண்டு மெய் சிலிர்த்தார்.

## 5.ஸ்ரீராகவேந்திரர் நாமமகிமைப்படலம்

ஆதோனி சமஸ்தானத்தில் வெங்கண்ணா என்ற பெயருடன் ஒரு அந்தணச் சிறுவன், மாடு மேய்க்கும் வேலையில் ஈடுபட்டிருந்தான். கள்ளங்கபடம் இல்லாத அவன் ஏழையாய் வாழ்ந்து வந்தான். சிறு வயதிலேயே அவன் தந்தை இறைவனடி சேர்ந்துவிட்டான். ஆதலால் அவன் தன்னுடைய மாமன் வீட்டில் வளர்ந்தான். கல்வி கற்றால், சொத்துக் கணக்கு கேட்டு பங்குக்கு வருவான் என்ற பயத்தால் வெங்கண்ணானை அவன் மாமன் படிக்கவைக்கவில்லை. ஆனால் வெங்கண்ணன் கல்வியில் மிகுந்த ஆர்வங்கொண்டு, கற்றாரை வழிபட்டு வந்தான். கல்வி கற்காவிட்டாலும் கற்றுள்ள பெரியோரை அடுத்து நல்ல விஷயங்களைக் காது கொடுத்து கேட்டான்.

ஒரு நாள் வெங்கண்ணன் ஒரு மரத்தடியில் படுத்துறங்கம்போது ஒரு கருநாகம் அவன் உடம்பின்மேல் ஊர்ந்து வந்து படமெடுத்து ஆடியது. இதை அவனுடைய நண்பர்கள் பார்த்து அவன் இறந்து விட்டான் என்று அவன் மாமனிடம் சொல்லிவிட்டனர். தூங்கிக்கொண்டிருந்த வெங்கண்ணனை இறந்துவிட்டான் என்று எண்ணி அவனைத் தூக்கிக்கொண்டு சுடுகாட்டுக்குச் செல்ல அவன் மாமன் அங்கு வந்தான். அவன் திடீரென்று விழித்துக்கொண்டான். ஆச்சரியப்பட்டான் வெங்கண்ணன். ஆனால் அவன் மாமன், மிகுந்த கோபம் கொண்டு மாடுமேய்ப்பதை விட்டுவிட்டு வீணாகத்தூங்கி காலம் கழிப்பதாய் சீறினான். அன்று முதல் பகலில் தூங்காமல் விழித்துக்கொண்டு மாடு மேய்த்தான்.

இப்படி இருக்கும் ஓர்நாள் ஸ்ரீராகவேந்திரர் யாத்திரையின்போது வெங்கண்ணன் ஸ்ரீராகவேந்திரரை சந்தித்தான். வெங்கண்ணன் தான் அடைந்த துயரங்களை எல்லாம் ஸ்ரீராகவேந்திரரிடம் கூறியழுதான். வெங்கண்ணா பயப்படாதே; கருநாகம் உன்மேல் படமெடுத்து ஆடியதால் உனக்கு பெரும் ராஜயோகம் இருக்கிறது. உனக்கு துயரம் வரும்போது என், பெயரை மனதில் ஜெபம்செய்வாய் என்று ஸ்ரீராகவேந்திரர் ஆறுதல் கூறினார். பிறகு அட்சதையளித்து ஆசிவழங்கினார். அன்றுமுதல் ஸ்ரீராகவேந்திரரின் திருநாமத்தை வெங்கண்ணன் செபித்து வந்தான்

சில நாட்களுக்கு பிறகு மாமனும் காலமாகி அவர் பொருள் எல்லாம் வெங்கண்ணனிடம் வந்து சேர்ந்தது. பீஜப்பூரை தலைநகராகக்கொண்டு ஆட்சிசெய்த சுல்தான் பாதுஷாவின் கீழ் சித்தி மசூத்கான் அதோனி சமஸ்தான சிற்றரசனாக இருந்தான். வெங்கண்ணனின் கிராமத்து வழியாக ஒருநாள் சித்தி மசூத்கான் தனது பரிவாரங்கள் புடைசூழ நகர்வலம் வரும்போது, பாதுஷாவிடமிருந்து வந்த ஒரு தூதன், ஒரு கடிதத்தை சமர்ப்பித்தான். அதில் இருப்பதைப் படிக்கும்படி வெங்கண்ணனுக்கு சித்தி மசூத்கான் கட்டளையிட்டார். எழுத்தறிவில்லாத, மாடு மேய்க்கும் ஏழை நான் என்று வெங்கணன் எடுத்துக்கூறியும் அதைப் பொருட்படுத்தாமல் மிரட்டினான் சித்தி மசூத்கான். இதனால் பெருங்கவலை அடைந்த வெங்கண்ணனுக்கு ஸ்ரீராகவேந்திரரின் ஞாபகம் வந்தது. ஆகவே ஸ்ரீராகவேந்திரா, குரு ராகவேந்திரா என்று மனதில் அதி தீவிரமாக ஜெபிக்கலானான்.

அதன் பலனாக கடிதத்தில் இருந்தசேதி இவன் காதில் அசரீரியாக ஒலித்தது. அதை அப்படியே சித்தி மசூத்கானுக்கு கேட்கும்படி திரும்பக்கூறினான். அதைக்கேட்ட சித்தி மசூத்கான் மகிழ்ச்சி யடைந்தான். ஆதோனி சமஸ்தானத்துடன் மாஞ்சாலம் உட்பட சில கிராமங்கள் சேர்ந்திருப்பதால், தக்க ஒருவரை திவானாக, நவாபே நியமிக்கலாம் என்று கடிதத்தில் எழுதப்பட்டுள்ளது. இந்த இனிய செய்தியைப் படித்துக்காண்பித்த வெங்கண்ணனையே திவானக்கினான் சித்தி மசூத்கான்.

## 6. சித்தி மசூத்கானுக்கு அருள் செய்படலம்

வெங்கண்ணர் வாழ்வில் நிகழ்ந்த அற்புதத்தை எண்ணி நெக்குநெக்குருகினார். மாடு மேய்த்துக்கொண்டு ஏழ்மை நிலையில் வாடிய எனக்கு, மக்கள் எல்லாரும் போற்றும் திவான் பதவியைப் பெறும்படி ஸ்ரீராகவேந்திரர் செய்தார். ஏடு எடுத்து எழுதாக எனக்கு எழுத்தறிவு அளித்தார். அவருடைய அற்புத மகிமையை அவனி இன்னும் உணரவில்லையே; எப்படி அவர் புகழை இந்நாட்டில் பரப்புவது? என்று சிந்தனையில் மூழ்கியிருந்த வெங்கண்ணர், ஸ்ரீராகவேந்திரர் ஆதோனிக்கு விஜயம் செய்கிறார் என்ற செய்தியைக்கேட்டார். தாயைப் பிரிந்த கன்று போல, வெங்கண்ணர் மனம் உருகினார். ஸ்ரீராகவேந்திரரை வரவேற்கும்படி சித்தி மசூத்கானிடம் கூறினார். அதற்கு சித்தி மசூத்கானும் சம்மதித்து பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்தான். பல்லக்கில் சுவாமிகளை வீற்றிருக்கச் செய்து வீதி வலம் வரச் செய்தான். ஸ்ரீராகவேந்திரர் அமர்ந்த பல்லக்க வெங்கண்ணரும் தனது தோலில் உரசிட சுமந்து வந்தார். அவருடைய குரு பக்தியின் மேன்மையை கண்டு அருளாசி வழங்கினார் ஸ்ரீராகவேந்திரர். சித்தி மசூத்கானின் அரண்மனையிலேயே ஸ்ரீராகவேந்திரர் தங்கி மூலராமர் பூசையை செய்தார். அப்போது தமது முஸ்லீம் மத மரபை மதித்து ஒரு தட்டில் இறைச்சியை வைத்து துணியால் மூடி கொடுத்தான்.ஸ்ரீராகவேந்திரர் கமண்டல நீரை தெளித்து சித்தி மசூத்கானின் காணிக்கையை மூலராமர் ஏற்றுக்கொண்டார் என்று கூறினார். ஸ்ரீராகவேநதிரரின் சீடர் ஒருவர் பட்டாடையை விலக்க தங்க தட்டில் பழவகைகளும், நறுமண மலர்களும் இருப்பதைகண்டு பேராச்சரியத்தில் மூழ்கினான்.

ஸ்ரீராகவேந்திரை மானுட தெய்வம் என்று ஏற்றுக்கொண்டு ஸ்ரீராகவேந்திரரின் பக்தன் ஆனான்.

## 7. ஸ்ரீராகவேந்திரர் தீர்த்த மகிமை படலம்

சித்தல் துர்க்கத்திலிருந்து கடாக் நகரம் வந்து சேர்ந்தார் ஸ்ரீராகவேந்திரர். கடாக் நகரின் பக்கம் கிரீடகிரி என்ற சிற்றூரில் ஸ்ரீராகவேந்திரரின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த ஸ்ரீவேங்கட தேசாய் என்ற பக்தர், அவர் வந்ததும் திருவடியில் வணங்கி தனது இல்லத்தில் மூலராமர் பூசையை இயற்றவேண்டும் என்று விண்ணப்பித்தார். சுவாமிகளும் அதற்கிசைந்தார். மூலராமர் பூசையைக் காண ஊரே திரண்டு வந்து விட்டது. பெற்ற செல்வத்தின் பயனை அன்று அடைந்து விட்டதாக வேங்கட தேசாய் உள்ளம் பூரித்தார். மங்கள வாத்தியங்கள் முழங்க, வாழை மரங்கள் தோரணங்கள் விளங்க, திருமண விழாக்கோலம் பூண்டதைப் போல் கோலாகலமாக பூசை நடந்து கொண்டிருந்தது. ஒருமைப்பட்ட சித்தத்துடன் ஸ்ரீராகவேந்திரர், மூலராமரைப் பூசிக்கும் போது,குழுமியிருந்த பக்தர்கள் அனைவரும் பூசையிலேயே கவனம் செலுத்தினார்கள்

சமையற்காரர்கள் முதலானோர் கூட பக்தி சிரத்தையுடன் பூசையில் மனம் ஒன்றி விட்டனர். அப்போது தேசாயின் குழந்தை ஒன்று சமையல் கட்டிற்குச் சென்று ரசம் வைத்திருந்த பாத்திரத்தி ல் விழுந்துவிட்டது.நேரில் கண்டவர்கள் ஒருவருமில்லை. வெங்கட தேசாயின் துணைவியார், குழந்தையைக் காணாது தேடிய போது ரச அண்டாவுக்குள் இருப்பதைக் கண்டு பேரதிர்ச்சியடைந்தார். ஆனால் பூசை நேரத்தில் இதை வெளிப்படுத்த வேண்டாம் என்று எண்ணி குழந்தையைப் பாயில் சுற்றி மறைத்து வைத்தார். ஆனால் உடலெல்லாம் வியர்த்து விறு விறுத்து நின்றாள். அதைக் கவனித்த வெங்கட தேசாய் என்னவென்று விசாரித்தார். அவரிடம் நடந்த சங்கதி அனைத்தும்,

வேறு வழியில்லாமல் சொல்லிவிட்டாள். இதையறிந்த வெங்கட தே சாய் பெரிதும் மனம் வருந்தினார். மூலராமர் பூசை நடக்கும் நேரத்தில் இந்த அசம்பாவிதம் நடந்தது ஸ்ரீராயரின் புகழுக்கு ஊறு விளந்ததை எண்ணி எண்ணி நொந்தார்.

மூலர்ாமர் பூசையை, ஸ்ரீராகவேந்திரர் செய்த பின்பு சாலகிரா மத்திற்கு ஆரத்தி செய்து முடித்து தீர்த்த பிரகாதத்தை பக்தர்க ளுக்கு வழங்கும் போது குழந்தை இல்லாமல், வெங்கட தேசாயின் துணைவியார் இருப்பதைக் கண்டு விட்டார். குழந்தைக்குத் தீர்த்தப்பிரசாதம் அளிக்க வேண்டும், அதனால் குழந்தையைக் கொண்டு வாருங்கள் என்று ஸ்ரீராகவேந்திரர் கூறினார். அதன்படி இறந்த குழந்தையை ஸ்ரீராகவேந்திரர் திருமுன்பு சமர்ப்பித்தனர்.

வான்வழியே செல்லும் குழந்தையின் ஆவியை நிறுத்தி, தன்வந்த்ரி மந்தரம் செபித்து தீர்த்ததை குழந்தையின் முகத்தின் மேல் தெளித்தார். உடனே உறங்கி எழுந்தது போல் குழந்தையின் உடம்பில் உயிர்ப்பும் அசைவும் தோன்றியது. இதைக் கண்ணுற்ற பக்தர்கள் ஆச்சரியத்தால் மெய்சிலிர்த்தனர்.

# 6.பிருந்தாவனகாண்டம்

## 1பிருந்தாவன தானப்படலம்

ஆதோணி சமஸ்தானத்தில் சித்தி மசூத்கான், ஸ்ரீராகவேந்திரரின் அற்புதச் செயல்களை எண்ணி எண்ணி ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தான். ஸ்ரீராயரை மறுபடியும் காண ஆவலாய் இருந்தான். ஆகவே தனத திவானான வெங்கண்ணரை ஸ்ரீராயரிடம் அனுப்பினான். வெங்கண்ணரும் மகிழ்வுடன் ஸ்ரீராகவேந்திரரை நாடி அவரது பாதார விந்தங்களில் அடிபணிந்தார் ஏதாவது விசேடம் உண்டோ என்று ஸ்ரீராகவேந்திரர் வினவினார். திவான் பதவி பெற்றதோடு தேவரது திருவடிகளைப் போற்றும் உயர்ந்த பதவியை அருள வேண்டும் என்றான். தான் செய்த பிழையை பொறுத்து மீண்டும் ஒருமுறை தனக்கு அருள் தரிசனம் தரவேண்டும் என்ற சித்தி மசூதகானின் வேண்டுகோளை தெரிவித்தார். "மன்னர் பிழை செய்தார் என்று நான் கருதவில்லை. அவர் குலத்துக்கு தகுந்த செய்கையை செய்தார். அதை மூலமாமர் சரிசெய்து ஏற்றுக் கொண்டார். ஆகவே அது மன்னர் செய்த பிழை அல்ல," என்று ஸ்ரீராயர் விளக்கினார். வளம்கொழிக்கும் கிராமம் ஒன்றை ஸ்ரீராகவேந்திரருக்கு தானமாக வழங்க நவாப் முன்வந்திருக்கும் செய்தியை வெங்கண்ணர் தெரிவித்தார். இதைக் கேட்டதும், ஸ்ரீராயர், மூலராமரின் அருள் வல்லமையை எண்ணி வியந்தார். துங்கபத்திரைக்கரையில் இருக்கு ்ாஞ்சாலத்தை தானமாகத் தரும் பட

ஸ்ரீராகவேந்திரர் கேட்டார். உள்ளன்போடு சுல்தான் தானம் தரும் போது, பல தலை முறைகளுக்கு அந்த தானம் பயன்படவேண்டும் ஆனால் மாஞ்காலமோ வளம் இல்லாதபிரதேசமாகும் எதற்காக இந்தப்பகுதியை தானமாகக் கேட்டீர்கள் என்று வெங்கணான் வினவினான். பொருள் எல்லாவற்றையும் முற்றத்துறந்த தறவியான எனக்கு எதற்கு? வளம் இல்லாத மாஞ்சாலமே எனக்கு போதும் என்று ஸ்ரீராகவேந்திரர் விளக்கினார். பள்ளி வாசர் தலைவர் ஒருவருக்குஇ மாஞ்சாலத் தன் உரிமையை நவாப் அளித்து விட்டதால் அதைத்திரும்பிப் பெறுவது அரிது என்று பெங்கண்ணார் கூறினார்.

இருப்பினும் மாஞ்சாலத்தை மீட்டு தருவதற்கு முயற்சி செய்வதாகக்கூறி வெங்கண்ணர் நவாபிடம் சென்று ஸ்ரீராகவேந்திரருக்கு மாஞ்சலத்தை திரும்ப் பெறுவதற்காக முயற்சிகள் செய்தார். மாஞ்சாலம் வளமில்லாத வன்னிலமாக இருப்பதால் காஜியும் அதை திருப்பியளித்து விட்டார். அதற்கு பதிலாக வளமிக்க வேறொரு ஊர் ஒன்றை பெற்றுக்கொண்டார் காஜி பின்பு மாஞ்சாலத்தைத் திரும்பப் பெறுவதற்காக முயற்சி செய்வதாகக்கூறி வெங்கண்ணர் நவாபிடம் சென்று ஸ்ரீராகவேந்திரருக்கு மாஞ்சாலம் தேவைப்படிகிறது என்ற செய்தியை அறிவதிதார் நவாபும் காஜியிடம் சென்று மாஞ்சாலத்தைத்திரும்பப் கெறுவதற்காக மயற்சிகள் செய்தார். மாஞ்சாலம் வளமில்லாத வன்னிலமாக இருப்பதால் காஜியும் அதை திருப்பியளித்து விட்டார்.அதற்கு பதிலாக வளமிக்க வேறொரு ஊர்

ஒன்றை பெற்று கொண்டார் காஜி. பின்பு மாஞ்சாலத்தை, ஸ்ரீராகவேந்திரருக்கு அளிக்கும் சாசனத்தை நவாபு எழுதினார். அப்போது வெங்கண்ணார் பெற்ற இன்பம் அளவிடற்கரியதாகும். அந்த சாசனத்தை ஸ்ரீராகவேந்திரருக்கு உவப்புடன் அளித்து. அவரது அருளாசியையும், மந்த்ராட்சதையையும் பெற்றுக்கொண்டார் நவாபு.

## 2. மாஞ்சால மகிமைப்படலம்

ஸ்ரீமந்நாராயணனின் திருவடிகளை அடைவதற்கு ஆகுங்காலம் நெருங்குவதை மனத்துட்கொண்டார் ஸ்ரீராகவேந்திரர். அதன்படி, மாஞ்சாலத்தில் நிலைபெற்று இருப்பதற்காக தனது திருப்பாதத்தை பதித்தார். இந்த நானிலம் நலம் பெறுவதற்காக கோவிந்தன் கோயில் ஒன்றை உருவாக்கினார் ஸ்ரீராகவேந்திரர் செழிப்பில்லாத மாஞ்சாலம் எந்த வகையில் சிறப்புடையது என்ற ஐயம் வெங்கண்ணருக்கு எழுந்தது. இந்த ஐயத்தை தீர்த்து வைப்தற்காக, மாஞ்சாலத்தில் துங்கபத்திரை ஆற்றோரமாக ஓரிடத்தில் அகழச் சொன்னார் ஸ்ரீராகவேந்திரர். அப்போது பூமிக்கடியில் ஒரு பீடம் இருப்பதைக் கண்டார். உடனே மேலும் அகழ்வதை நிறுத்திவிட்டு, அது என்ன பீடம் என்று ஸ்ரீராகவேந்திரரை வினவினார் வெங்கண்ணார்.

முற்காலத்தில், மன ஒருப்பாட்டினால் தனது முற்பிறவியை அறிந்த பிதாகரஸ் என்ற கணிதமேதையைப் போல், ஸ்ரீராகவேந்திரரும் முற்பிறவிகளைஅறிந்து வெங்கண்ணாருக்கு கூறலுற்றார். திரேதாயுதத்தில் இரணியனின் மகனாகத் பிரகலாதன் என்ற பெயரில் தோன்றி, யாகம் செய்த இடம் தான் அந்த பீடம் இருக்கும் இடம் ஆகம் என்று கூறினார் ஸ்ரீராகவேந்திரர். பின்பு துலாபரயுதத்தில் பாண்டவர் அசுவமேதயாகம் செய்தபோது, சால்வனை எதிர்த்து அர்ச்சுனன் போர் செய்து வென்றதும் இந்த பீடத்தின்மேலேதான் ஆகும்.

இத்தகு பெருமை வாய்ந்து பீடத்தின் மீது தான் மந்த்ராலய பிருந்தாவனம்

விளங்குகிறது.

## 3.மாஞ்சாலியம்மன் தரிசனப்படலம்

துங்கபத்திரை நதிக்கரையில் மாஞ்சாலியம்மனை ஸ்ரீராகவேந்திரர் வணங்கி வாழ்த்தி அன்னையின் பேரருளைப்பெற்றார். சென்ற யுகங்களிலும், அன்னையை போற்றி செய்த வரலாற்றை மாஞ்சாலியம்மனே ஸ்ரீராகவேந்திரருக்கு நினைவூட்டினாள். பிரகலாதனாக அவதரித்தபோது வானுலகு செல்லவும், துயர்கெடவும், அன்னையிடம் வரமாகப்பெற்றார்.

ஆட்டின் தலையானது ரட்சைஆக விளங்குவதால் அதன் பிம்பத்தை மதிற்சுவரின் மீது வைக்கும்படி மாஞ்சாலியம்மன் ஸ்ரீராகவேந்திரருக்கு அருளினாள். "எனது கோயில் அருகில் நீ என்றும் இருந்திட, உனது புகழ் உலகெங்கும் பரவி, உலக நலம் பெறும்" என்று மாஞ்சாலியம்மன் கூறி மறைந்தாள். பின்பு மாங்சாலியம்மனைப் பலகாலும் துதி செய்து வணங்கினார் ஸ்ரீராகவேந்திரா.

## 4.பிருந்தாவன எழுச்சிப்படலம்

மாஞ்சாலியம்மனின் ஒப்புதலைப்பெற்ற பின்பு, மாதாவரம் என்ற ஊரிலிருந்து உயர்ந்த கற்களைகொண்டு வரும்படி வெங்கண்ணருக்கு கட்டளையிட்டார். ஸ்ரீராகவேந்திரர், வெங்கண்ணார் வடதிசையிலுள்ள மாதவரத்திற்கு ஆட்களைய-னுப்பி, பிருந்தாவனம், கட்டுவதற்காக, கற்களைக்கொண்டுவரச்சொன்னார். அந்தக்கற்களின் மேன்மையை விளக்குமாறு வெங்கண்ணார், ஸ்ரீராகவேந்திரரிடம் விண்ணப்பித்தார். "மாதாவரத்தில் மலைபோல பாறை ஒன்று இருக்கும். அதன் அருகே உள்ள குளத்தின் கரையில் உள்ள ஒரு கல்தான், ஸ்ரீராமபிரான் உட்கார்ந்த இருக்கையாகும். காட்டு வழிச்சென்ற ஸ்ரீராமர் களைப்பின் மிகுதியால், அமர்ந்த கல்தான் நான் விரும்பும்கல், என்று ஸ்ரீராகவேந்திரர் கூறினார். மேலும், பிருந்தாவனம், அமைக்கப்படவேண்டிய இடமும், அதில் பொறிக்கப்படவேண்டிய உருவங்களும் கூறினார். அதன்படியே, எவ்வித வருத்தமும் உறாமல், சிற்பிகள், பிருந்தாவனத்தை வடித்துத்தந்தனர். பிறகு மாதாவரத்தில் கண்டெடுக்கப்பட்ட தனிப்பெரும் கல்லையும் பிருந்தாவனத்தில் பொருத்தினர். பிருந்தாவனப்பிரவேசத்திற்கும் பின்பு தம்மை காப்பவர் லட்சுமி நாராயணனே என்று அறிந்து சாலக்கிராமங்கள் பலவற்றை சேர்த்தார். ஸ்ரீராகவேந்திரர். மாஞ்சாலியம்மன் சொன்ன யோசனைப்படியே, மதிற்சுவர் மேல் ஆட்டின் தலையை அமைத்தார்.

## 5.பஞ்சமுக ஆஞ்சநேயர் தரிசனப்படலம்

கனதாளம் என்ற தலத்தில் உள்ள ஒரு மலைமேல் காட்சிதரும் பஞ்சமுக ஆஞ்சநேயரை தரிசித்தார் ஸ்ரீராகவேந்திரர். பிருந்தாவனத்தில் பிரவேசம் செய்து யோகம் புரிவதற்கு ஒத்திகை பார்ப்பது போல், அனுமன் முன்பு அமர்ந்து தியானம் செய்தார் ஸ்ரீராகவேந்திரர். மூலராமரின் மந்திரமே தனது மூச்சாகக்கொண்டு, ராமபக்த அனுமானை தனது கருத்தினில் இருத்தினார்பிறகு பஞ்சமுக ஆஞ்ச நேயரைத் தரிசித்தார்.

## 6.பிருந்தாவனப்பிரவேசப்படலம்

சாலிவாகனச் சகம் 1593ஆம் ஆண்டு ஆவணிமாதம், தேய்பிறை மூ ன்றாம் நாளான குருவாரத்தில், ஸ்ரீராகவேந்திரர் பிருந்தாவனப் பிரவேசம்செய்தார். துங்கபத்திரை நதியோரத்தில் மகான் ஸ்ரீராகவேந்திரர், பிருந்தாவனத்தில், பிரவேசம் செய்வதைக்கான, கடல்போல் பக்தர் குழாம் திரண்டது. முன்னதாக விடியற்காலையில் எழுந்து புனித நீராடி, மேனியில் கோபிசந்தனம் அணிந்து, மனத்தில் மூலராம மந்திரம் செபித்து பிருந்தாவனத்தில் அமர்ந்தார் ஸ்ரீராகவேந்திரர். அந்த வேளையில் ஸ்ரீயோகீந்திரர் மூலராமர் பூசையை ஆற்றினார். குழுமிஇருந்த மக்கள் கூட்டம் கண்கள் நீர்சொரிய காத்திருந்தனர். உடனே ஸ்ரீராகவேந்திரர் தனது அருட்கண்ணால் நோக்கி, பக்தர்கள் துயர்தீர, தனது கரத்தினை உயர்த்தி ஆசியளித்தார். இந்த நன்னாளில் நான் பிருந்தாவனப் பிரவேசம் செய்கிறேன். துன்பமுற்றவர்கள் போன்று இருக்கும் பக்தர்களாக நீங்கள், மகிழ்வுடன் இருக்கவேண்டும். நான் இந்த பூதவுடலுடன் சமாதியில் புகுகின்றேன் என்பதற்காக நீங்கள் வருத்தப்படவேண்டாம். உலக மக்களின் நன்மைக்காக நான் சமாதியில் நிலைபெற்று வாழ்வேன். இவ்வுலகை, இக்கலியுகத்தில் நடத்திச்செல்ல, எத்தனை ஆண்டானாலும் இவ்வுடலினுள்ளே இருப்பேன். இன்றைய நாள் முதல் 700 ஆண்டுகள் இருப்பேன். இவ்வுலகில் ஆங்காங்கே 700 பிருந்தாவனங்கள் தோன்றும். என்று பக்தர்களை நோக்கி உரையாற்றினார். சாலக்கிராம பூசையின்போது, ஸ்ரீராகவேந்திரர் வீணையை மீட்டி, இசையோடு, பாடல்கள் பாடினார். அவர்க பாடலுக்கு ஏற்றாற்போல் கோபாலனே நர்த்தனம் ஆடினார். அந்தகாட்சியைக்கண்டு பரவசமடைந்தனர். பக்தர்கள். கடைசியில் பக்தர்கள் அனைவருக்கும், தீர்த்தப் பிரசாதமளித்து, மந்த்ராட்சதை வழங்கி ஆசி பகர்ந்தார். பத்மாசனமிட்டு வலக்கரத்தில் துளசி மாலை ஏந்தி, பிரம்மதண்டம், கமண்டலம் சகிதமாக, அமர்ந்து யோகத்தில் மூழ்கினார் ஸ்ரீராகவேந்திரர்.

## 7. அப்பண்ணர்க்கு அருள்செய்படலம்

ஸ்ரீராகவேந்திரரின் அத்யந்த சீடரான அப்பண்ணச்சாரியர் மடத்து பணிகளைச் செய்வதற்காக, துங்கபத்திரைதாண்டி, பிச்சாலே என்ற கிராமத்திற்கு சென்றிருந்தார். ஆகவே ஸ்ரீராகவேந்திரர் பிருந்தாவனப்பிரவேசம் செய்த அந்நாளில் அப்பண்ணர் அதைக்காணஇயலவில்லை. தனது பணிகளை முடித்துவிட்டு விருந்தாவனத்திற்குத் திரும்பும்போது திடுக்கிட்டார் அப்பண்ணர். பின்பு மனத்தை திடப்படுத்திக் துதி செய்து ஆற்றைக் கடந்துவிட்டார். ஆனால் பிருந்தாவனம் சென்ற பின்பு, ஸ்ரீராகவேந்திரர் சமாதியில் காலமாக ஸ்ரீராகவேந்திரரரின் சீடராக மடத்தினில் இருந்தும், பிருந்தாவனப் பிரவேசம் செய்யும்போது காணும் பாக்கியம் இல்லையே என்று வருந்தினார். பின் ஸ்ரீராகவேந்திரரை பலவாறு துதி செய்தார். ஸ்ரீராகவேந்திரரின் துதியாக முப்பது பாடல்கள் பாடும்போது, கடைசிபாடலில் மூன்றாவது அடியோடு நிறுத்திவிட்டு, இனி இப்புவியில் வாழாமல் இறப்பதுதான் நன்றென சித்தமானார். அப்போது. 'அயக்கிரீவர் அவரே சாட்சி' என்று பிருந்தாவனத்திலிருந்து ஒரு வாசகம் வந்தது. அப்பண்ணரது முப்பதாவது பாடல் ஸ்ரீராகவேந்திரரது வாசகத்தோடு முடிவுற்றது.

# 7. நிலை பேறுகாண்டம்

## 1. மந்த்ராலய மகிமைப்படலம்

ஸ்ரீராகவேந்திரரின் பிருந்தாவனப்பிரவேசத்திற்குப்பின் ஸ்ரீயோகீந்திரதீர்த்தர் முதற்கொண்டு நால்வர் மடத்தை பரிபாலித்தனர். அதன்பின், ஸ்ரீ வாதீந்த்ரதீர்த்தர் ஆசார்ய பொறுப்பை ஏற்று முப்பத்தாறு செய்யுள்கள் கொண்ட "குரு குண தவனம்" என்ற நூலை இயற்றினார். அந்நூலை பிருந்தாவனத்தில், ஸ்ரீராகவேந்திரர் முன்பு அரங்கேற்றம் செய்யும்போது அந்தத் தலமே அசைந்தாடி யது. அதனால் மேலிருந்து பூக்கள் எல்லாம் ஓலைச்சுவடியின் மீது விழுந்து அந்நூலை அங்கீகரித்தன இவ்வளவு சிறப்புடைய ஸ்ரீவாதீந் த்ர தீர்த்தர் சமாதியடைந்த அவரை பிருந்தாவனத்திற்குப் பக்க த்திலுள்ள வேறோரு பிருந்தாவனத்தில் நிலை பெறுமாறு செய்தா ர். ஸ்ரீராகவேந்திரர்.

ஸ்ரீவியாஸ தத்வக்ஞதீர்த்தர் என்ற சிறந்த ஆசார்யர் தனது சீடர் களுக்கு நியாயசுதா என்னும் கடினமாக நூலை பாடம் சொல்லிக் கொண்டு வந்தார். நியாயசுதாவிற்கு ஸ்ரீராகவேந்திரர் அருளிய சுதா பரிமாளத்தை குறைகூறி வந்தார். ஒரு முறை சீடர்கள் வினவிய சந்தேகங்களுக்கு விடை பகர முடியாமல் திணறிய அவருக்கு, ஸ்ரீராகவேந்திரர் கனவில் தோன்றி சுதாபரிமளத்தில் விளக்கங்கள் செம்மையாய் அமைந்துள்ளதை சுட்டிக்காட்டினார்.

ஸ்ரீஜகன்னாத தாசர் என்ற தத்துவஞானி, இசை ஞானத்தால் பல கீர்த்தனை- களை ஸ்ரீராகவேந்திரர் பேரில் பாடி அவரது பிரத்தி யட்ச தரிசனமும் பெற்றார். அது முதல் அல்லும் பகலும் குருநாத ரின் நினைவாகவே காலத்தைக் கழித்தார். இந்த பக்தி சிறிது க ாலத்தில் தன்முனைப்பாக உருவெடுத்து தனது பாடல்களுக்கு ஸ்ரீராகவேந்திரர் அடிமை என்றும், தான் நினைத்த மாத்திரத்தில் அவர் ஓடிவந்து தரிசனம் திருவார் என்றும் எல்லோரிடமும் கூறி வந்தா ர். உடனே தாசருக்கு காட்சி தருவதை விட்டுவிட்டார். ஸ்ரீராக வேந்திரர். இதனால் மனம் வருந்திய தாசர் உள்ளம் உருகி துதி செய்து பாடியபின் ஸ்ரீராகவேந்திரர் அவரது கனவில் தோன்றி ஆட் கொண்டார்.

## 2. தாமஸ் மன்றோவிற்கு அருளிய படலம்

கிபி. 19 ஆம் நூர்ற்றாண்டில் ஆங்கிலேயோர் ஆட்சிபுரிந்து கொண்டிருந்த நேரம் மானிய நிலங்களையெல்லாம் மீண்டும் அரசுடைம ஆக்கிக்கொள்ளும் பொருட்டு தனி சட்டங்களை பிறப்பித்தது. அச்சமயம் மாஞ்சாலம் எனப்படும் மந்திராலய கிராமத்தை அரசுடைமை ஆக்குவதற்கான உத்திரவையும் ஆங்கிலேயே அரசு பிறப் பித்தது. ஆனால் இந்த உத்திரவிற்கு அக்கிராம மக்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தார்கள் மந்திராலயம் கிராமத்தை அரசுடைமை ஆக்கக்கூடாது என்னும் இது மந்திரால மகான் ஸ்ரீ ராக வேந்திரர் சுவாமிக்குச் சொந்தம் என்று முடிவாக சொல்லிவிட்டார்கள்.ஆனால் மந்திராலய கிராமமே ஸ்ரீராக வேந்திரர் பிருந்தாவனத்திற்குச் சொந்தமாக இருப்பது சரியல்ல இதனை அரசுடைமை ஆக்கவதே சரியானது என்று ஆங்கிலேய அரசு முடிவெடுத்தது. அதன்படி அச்சமயம் கவர்னரிடம் செட்டில் மெண்ட் ஆபிசராக இருந்த தாமஸ் மன்றோவை இந்த விவகாரத்திற்கு நியமித்திருந்ததால் அவர் ஒரு ஆங்கிலேயனாக இருந்தாலும் மந்த்ராலய மகானின் அற்புத வரலாற்றினை தனது துணை யாளாளின் முலம்

விரிவாக கேட்டறிந்து ஒரு நம்பிக்கையான முடிவொடு மந்திராலயம் வந்து சேர்ந்தார். அங்கும் பல விவரங்களை அறிந்த பினனர் பிருந்தாவனத்துள் இருக்கும் ஜீவித சமாதியில் ஸ்ரீ சுவாமகள் இருக்கும் ஜீவ சமாதியில் ஸ்ரீசுவாமிகள் வாழ்ந்துகொண்டிருக்கும் உண்மையை அறிய, பிருந்தாவனப்பிரவேசம் செய்யுமுன் வெகு அடக்கத்துடன், தன் காலணிகளையும், தலையில் அணிந்திருந்த தொப்பியையும் களைந்துவிட்டு, ஜீவ சாமாதியின் முன் போய்நின்றார்.

அவருடன் வந்து சூழ்ந்து நிற்பவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. நின்றவர் ஸ்ரீசுவாமிகளுடன் பேச ஆரம்பித்தார். சிலமணிநேரம், பேசிமுடித்ததும், பிருந்தாவனத்தை வலம்வந்து, ஜீவித சமாதிமுன், சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார். அர்ச்சகர்களுக்கு வெகு ஆச்சரியமாகயிருந்தது. முறைப்படி அங்குள்ள அர்ச்சகர்கள், மந்திராக்ஷதையை மவுறோக்குன் கொடுக்கசென்றபோது, அதற்குள் அவரே தன் கையில் ஏற்கனவே உள்ள புதிய மந்திராதைஷயை காண்பித்ததும், அர்ச்சகர்கள் ஸ்தம்பித்தார்கள். என்னே பாக்கியம், ஒரு ஆங்கிலேயருடன் பேசி அவரின் சந்தேகங்களுக்கு பல விளக்கங்களைக் கொடுத்து முடிவில் மந்திராக்ஷதையையும் கொடுத்து ஆசீர்வதித்தது மன்றோசெய்த பெரும் பாக்கியம் என்றே சொல்லவேண்டும்.

அடுத்த கணம், தனது தங்குமிடம் வந்துசேர்ந்த மன்றோ முதல் வேலையாக, மந்திராலய கிராமத்தை அரசுடைமையாக ஆக்கக் கூடாது என்றும், அதற்கான உத்திரவுக்கு கவர்னரின் கையொப்பத்திற்காக சென்னைக்கு அந்த கோப்புகளை அனுப்பி வைக்கவும் செய்தார்.

மேற்படி விஷயங்கள் யாவும், உண்மையாக நடைபெற்றமைக்கு, சாட்சியம், மதராஸ் அரசாங்க கெஜட்டில் பக்கம் 23ல் ஆதோணி தாலுக்கா என்ற தலைப்பின் கீழ் உள்ளது ஸ்ரீ ராகவேந்திரரின் தரிசினம் கிடைக்கப்பெற்ற மன்றோ, சென்னைக்கு திரும்பியதும், கவர்னர் பதவியும் கிடைக்கப்பெற்றது. சர் தாமஸ் மன்றோ கவர்னர் பதவி ஏற்ற முதல் நாளே, மந்திராலய மகானின் பேரருளால் என்பதை நாடு அறிந்து அதிசயித்தது. சர் தாமஸ் மன்றோ கவர்னர் பதவி ஏற்ற முதல் நாளே

## *3.துங்கபத்திரை மகிமைப்படலம்*

ஸிர்பூர் என்னும் ஊரில் வாழ்ந்த ஆனந்ததாஸ் என்ற பக்தர் மந்திராலயத்துக்கு வந்து தரிசனம் செய்தார். பிறகு துங்கபத்திரை நதியைக்கடந்து பஞ்சமுக ஆஞ்சநேயரை தரிசிக்கச்சென்றார். அருள்தரிசனம் முடிந்தவுடன் நதியைக்கடந்து மந்திராலயம் செல்லும்போது, நதியின் வெள்ளம் அதிகரித்ததால், படகு கவிழ்ந்தது. ஆனந்ததாஸினால் நீந்த முடியவில்லை. மரணத்தின்பிடியில் அகப்பட்டுக் கொண்டபோது, அப்பண்ணருக்கு ஸ்ரீராகவேந்திரர் ஆற்றைக்கடக்க அருள்புரிந்தக ருணையை நினைவுகூர்ந்தார். குருநாதரிடம் மனமுருகி பிரார்த்தனை செய்தார். அப்போது காவியணிந்த துறவி ஒருவர், ஆனந்ததாசரின் தலைமுடியைப் பிடித்து இழுத்து தான் செல்லும் படகினுக்குள் போட்டு, கரை சேர்த்தார். தான் ராகப்பா என்றும், தன்னுடன் வந்து படகு ஓட்டிய துறவி வாதப்பா என்றும் கூறிமறைந்தார். இவர்கள் ஸ்ரீராகவேந்திரரும், ஸ்ரீவாதீந்திரரும் ஆவார்கள் என்பதை பிறகு ஆனந்ததாஸ் புரிந்துகொண்டார்.

ஒரு முறை துங்கபத்திரை நதியில் புனித நீராடிக்கொண்டிருந்து ஒரு பக்தர், பாறையின் மேல் இருந்த பாசியினால் வழுக்கி வெள்ளத்தில் சிக்கிக் கொண்டார். சுற்றியிருந்தவர்கள் அனைவரும் பெருங்கூச்சல் போட்டு அலறினார். பக்தர்கள்.

ஸ்ரீராகவேந்திரரின் திருநாமத்தைக் கூறி ஓலமிட்டனர். ஆனால் யாரும் வெள்ளத்தில் குதித்து பக்தரைக்காப்பாற்ற சித்தமாகவல்லை. ஸ்ரீமடத்தின் யானை குளிப்பதற்காக நதியை நோக்கி வரும்போது அங்கு நடந்த ஆபத்தை உணர்ந்துகொண்டது. கரடு முரடான பாதையில் படுவேகமாக ஓடி ஆற்றில் இறங்கி அந்த பக்தரைக் காப்பாற்றி கரை சேர்த்தது. ஸ்ரீராகவேந்திரரே யானை உருவில் வந்து தனது பக்தரைக் காப்பாற்றி கரை சேர்த்தார் என அங்கிருந்த அனைவரும் திடமாக நம்பினர்.

## 4.ஸ்ரீ ராகவேந்திரர் வெள்ளிரதப்படலம்

இராமநாதன் என்ற வணிககுல செல்வந்தர் ஒருவர் பெரும்பொருள் ஈட்டி வாழ்ந்து வந்தார். அவருக்கு வெகுநாளாக வயிற்றுவலி யிருந்தது. வயித்தியர் பலரும் வந்து மருந்து கொடுத்தனர். இருப்பினும் அவரது பல வயித்தியாகளின் திறமையும், இவரது நோயைத் தீர்க்க முடியவில்லை. இதனால் பெரும்பொருள் வயித்திய செலவிற்காக செலவானது. இருப்பினம் நோய் குணமடையவில்லை. வயித்தியர் வயிற்றை அறுத்து சிகிச்சை செய்தால் குணமாகும் என்றனர். ஆனால் ராமநாதன், சிகிச்சை குணப்படும் என்று நம்பவில்லை. ஸ்ரீராகவேந்திரரை துதித்து, சங்கல்பசேவை செய்தால், கனவில் வந்து குருநாதர் அருள் புரிவார் என்று ஒரு நண்பர் கூறியதைக்கேட்டு அதன்படியே நடந்தார். ஸ்ரீராகவேந்திரர் ராமநாதனின் கனவில் தோன்றி, அறுவை சிகிச்சை செய்தால் பூரண குணமாகும் என்றார். அதன்படியே வயித்தியர்கள் அறுவை சிக்சை செய்தனர். ராமநாதன் உயிர்பிழைத்தாரே தவிர நோய்குணமாகவில்லை. அசனால் பதின்மூன்று முறை ஒன்றன்பின் ஒன்றாக அறுவை சிகிச்சை செய்து நோயை குணப்படுதினர். இந்த அற்புதம் ஸ்ரீராகவேந்திரரின் கருணையால்தான் நிகழ்ந்தது என்று திடமாக நம்பிய ராமநாதன் ஸ்ரீமடத்திற்குச் சென்று சுயமீந்திர தீர்த்தரிடம், வெள்ளிரதம் ஒன்றை செய்து காணிக்கை தருவதாக உறுதிஅளித்தார். பிறகு வாணிகத்தில் ஈடுபட்டாரே தவிர, ரதம் செய்யும் பணியை தாமதித்துக்கொண்டே போனார். அவரது மனைவி, இப்பணியை விரைவில் தொடங்க வேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டே இருந்தார். ஆனால் அவர், மனைவியின் பேச்சைக் கேட்கவில்லை. திடீரென்று ஒரு நாள், பல லட்ச ரூபாய் மதிப்புள்ள பொருள்களைக் கொண்ட அவரது கப்பல் காணாமல் போய்விட்டதாக சிம்லாவிலிருந்து செய்திவந்தது. இதைக்கேட்டதும் மனமுடைந்தார் ராமநாதன். இது தெய்வக் குற்றத்தினால் வந்தது என்றுணர்ந்து வெள்ளிரதப் பணியை செய்யத் தொடங்கின ரார். பிறகு ஸ்ரீராகவேந்திரர் கனவில் தோன்றி,கணாமல் போன பொருட்கள் திரும்பக் கிடைக்கும்;' என்று கூறினார். அதன்படியே நடந்தது. ராமநாதன், ஸ்ரீராகவேந்திரரின் கருணையை எண்ணிஎண்ணி வியந்தார்.

## 5.தாசிக்கு அருள் பாலித்தபடலம்

சூரபுரத்தில் வாழ்ந்து வந்து ஒரு தாசி, குட்ட நோய் பிடித்து பெரும் அவதியுற்றாள். இதனால் ஊர்மக்களின் கடும் ஏச்சினுக்கு ஆளானாள். பிறருக்கு இடைஞ்சலாக இருக்கக் கூடாது என்று எண்ணி, உடலை ஒரு போர்வையால் போர்த்திக்கொண்டு மந்திராலயத்திற்கு வந்து சேவை செய்தாள். ஸ்ரீராகவேந்திரர் அவளுடைய கனவில் வந்து, சில மருந்துகளை சொல்லி, அவற்றை சாப்பிடும்படி கூறினார். அதன்படியே சிறிது நாட்களில் அவளது நோய் நீங்கி திடமான உடல் பெற்றாள். உடனேதான் முன்பு போர்த்தியிருந்த போர்வையை மறுநாள்

மண்தோண்டிப்புதைக்க எண்ணிவிட்டு படுத்துறங்கினாள். கனவில், ஸ்ரீராகவேந்திரர் அந்தப் போர்வையை தனக்கு சாத்தும்படி கட்டளையிட்டார். அதை நிறை வேற்றச்சென்றால் அர்ச்சகர்கள் அவள் சொன்ன கதையை நம்பாமல், அவளைதிட்டு அனுப்பிவிட்டனர். அவள் மனம் வெதும்பி வெளியேறினாள். மறுநாள் ஸ்ரீராகவேந்திர தரிசனம் செய்ய பிருந்தாவனத்திற்கு சென்றபோது அர்ச்சகர்கள் அவளை வரவேற்று மன்னிப்பு கேட்டனர். ஸ்ரீராகவேந்திரர் அர்ச்சர்களின் கனவில் தோன்றி அவளது போர்வையை தனக்கு சாத்தும்படி கட்டளையிட்டிருந்தார். அதன்படியே அந்தப்போர்வையை துங்கபத்திரையில் துவைத்து புனிதமாக்கப்பட்டு ஸ்ரீராக வேந்திரருக்கு சாத்தப்பட்து.

## 6. மேலைநாடு புக்கப்படலம்

முன்னாள் எம்.பியான அன்வாரி மாதவராவ் தனது அலுவல் வேலையாக அமெரிக்கா சென்றபோது, திடீரென பெரும் நெஞ்சுவலியால் அவதிப்பட்டார். அவரது நண்பர்கள் அவரை உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றனர். அவரை பரிசோரித்த மருத்துவர்களுக்கும், அவர்பிழைப்பார் என்ற நம்பிக்கை வரவில்லை. அதனால் நினைவிழந்த நிலையில் உள்ள அவரை பிணத்தோடு பிணமாக போட்டு விட்டனர். அன்றைக்கு நள்ளிரவில் மாதவராவிற்கு நினைவு திரும்பி எழுந்து உட்கார்ந்தார். தான் சவக்கிடங்கில் இருப்பதை உணர்ந்து திடுக்கிட்டார். ஸ்ரீராகவேந்திரரைப் பற்றி நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தபோதுதான் வலி ஆரம்பமானது . அவரால்தான் இவ்வாறு உயிருடன் பிழைத்துள்ளோம் என்றுணர்ந்தார். அடுத்தநாள் மருத்துவர்கள் வந்துபார்த்தபோத பேரதிசயம் உற்றனர். இந்த அற்புதத்தை மருத்துவமனைக்குறிப்பு நோட்டில் எழுதினர்.

## 7. தங்கக் கவசப்படலம்

ஸ்ரீராகவேந்திரரின் 300வது ஆண்டு ஆராதனை திருவிழாவின்போது பிருந்தாவனத்திற்கு தங்கக்கவசம் அணிவிக்க ஸ்ரீசுஜயீந்திர தீர்த்தர் முடிவு செய்தார். அதை செய்வதற்காக பக்தர்களிடம் திரட்டிய நன்கொடைடி மூலம் 800 தோலாத் தங்கம் உருவானது. மேலும் 30 தோலா தங்கம் தேவைப்பட்டது. விழாநாள் நெருங்குதற்குமுன் இந்த திருப்பணி முற்றுப்பெறவேண்டும். இந்த நெருக்டியை எப்படி சமாளிப்பது என்று தீர்த்தர் தீவிர யோசனையில் ஆழ்ந்து, ஸ்ரீராகவேந்திரரின் அருளை நாடினார் . அப்போது அரிகிருஷ்ணன் என்ற பூனாவைச்சேர்ந்த பக்தர் ஓடோடிவந்து தன்கனவில், ஸ்ரீராகவேந்திரர் கட்டளையிட்டபடியே 30 தோலா தங்கம் அளிப்பதாக கூறி அதை காணிக்கையாக செலுத்தினார். தீர்த்தரும் அதை மகிழ்வுடன் ஏற்று 300வது ஆண்டு விழாவினை தங்கக்கவசம் செய்து சிறப்புடன் நடத்தினார்.

# SRI RAMANASkAMAM

*T. N. VENKATARAMAN*
**President,**
**Board of Trustees**



*SRI RAMANASRAMAM P. O.*
**Tiruvannamalai-606 603.**
**South India.**

**PHONE : 2491**
**(STD Code No. 04175)**

25.10.91.

ॐ

**। नमो भगवते श्री रमणाय ।**

*Om, Obeisance to Bhagavan Sri Ramana.*

I had the privilege of going through the lucid and yet rich poetry of "Pukkulam Sri Ragavendhra Pulavar" Sri M.Raman, M.A., M.Ed., from his magnum opus: "Sri Ragavendra Mahakaviyam". I am also happy that it is being printed as a book, thereby making it available for the Tamil World. I congratulate Pulavar Raman's tireless efforts in making this lofty ideal into a tangible reality.

May Bhagavan Sri Ramana Maharshi shower His Blessings in abundance on Pulavar Raman is my prayer.

With all my good wishes,

Ever yours in Sri Bhagavan,

T.N.Venkataraman
President

முருகன் துணை

**காஞ்சி ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான்,**
**பேராசிரியர் மயிலம் வே. சிவசுப்பிரமணியன்** அவர்கள்
நான்காம் முதன்மைச்சாலை, கஸ்தூரிபாய் நகர்,
அடையாறு, சென்னை - 20.

ஸ்ரீ ராகவேந்திர மாகாகாவ்ய நூலாசிரியர்
புக் குளம் ம. இராமன்அவர்களுக்கு அளித்த
(வாழ்த்துமடல்) **சிறப்புப் பாயிரம்**

புவனகிரி தந்த புனிதர் என்றும்
நவயுகம் காண நானிலம் வந்தவர்
ஞான வழிக்கொரு நல்லகை காட்டி
வான வழிக்கு வையகம் திறந்தவர்
சொல்லச் சொல்லச் சுவைமிகு பேருரை
நல்லுப தேச நாயகர் அல்லல்
தீர்க்க வந்த தீர்த்தர் மற்றவர்
ஆர்த்தி எல்லாம் அடைய உதித்தவர்
துன்பக் கடலில் தோணி ஆயவர்
இன்பத் தேற்ற ஏணி ஆனவர்
தம்மை இந்தத் தரைதனக் களித்தே
நம்மை ஆக்கிய ஞானச் செல்வர்
வேங்கட மலையுறை விமலன் தாளில்
ஓங்கிய உளத்தர் உத்தம ராமன்
தன்திருச் சரிதையைத் தமதாய் ஆக்கி
இன்புவி பரவ எழிற்குரு வானவர்
கல்விக் கடலின் கரையென விளங்கிய
வல்லவித் தகனாம் மாருதி எனவே
சொல்வித் தவர்நிறை சோதி வடிவினர்
அற்புதம் பற்பல பொற்புற நிகழ்த்திச்
சொற்பதம் கடந்த நற்குணச் செல்வர்
துவைத நெறிக்கொரு மெய்வழிக் காட்டி

எவ்வகை யோர்க்கும் இசைவு செய்தவர்
இராகவேந்திர மகான் எனப் பெயரிய
ஏக ஞான இறைவர்தம் சரிதையை
மக்கள் உளத்தில் மதித்திடு மாறு
சொல்லும் பொருளும் சுவைபெறச் சேர
கல்விவல் லமைகள் கற்பனை அளிக்க
நல்லிசைக் கவிகள் நயத்தொடு மிளிர
பாக மாகப் பலவித அழகுற
ராக வேந்தி மகாகா வியமாய்
ஆதரித் தளித்தே அதனினும் மேற்பட
மாத இதழ்எனக் காதலின் தமிழால்
ஆக்கி அளித்தே அற்புதா அருள்பெறு
மேக்குயர் புலவன் மேனாள் என்பால்
தண்டமிழ் கற்றுத் தகைசால் புலமை
கொண்டவன் கொள்கைக் குறிவழி நிற்பவன்
சமய வாழ்வின் சால்பினை உணர்ந்தவன்
அமைவுறும் அந்நெறி அகலாச் சிந்தையன்
நல்லோர் உளத்தில் நயமார் பண்பினன்
அல்லோர் தமையும் அன்பில் திருத்துவன்
சிறியன நினையாச் சிந்தை யாளன்
பெரியன என்றும் பேசிடும் பெரியோன்
புக்குளம் தந்த புலவர் சிகாமணி
தக்கவர் போற்றும் தனிப்பெரு மாமணி
கல்விக் கடற்கொரு கரையைக் கண்டவன்
சொல்விற் பனத்திலும் சுவைகாண் கலைஞன்
ஆசிரியப் பணி அன்புறச் செய்தவன்
காசினி விளங்கக் கவிஞன் ஆனவன்
வித்தகர் போற்றி விளங்கும் இராமன்
இத்தரை அதனில் இதுபோற் பன்னூல்
மெத்துற ஆற்றி மேலும் மேலும்
அன்பு சிறக்க அருளறம் சிறக்க
நன்பொருள் மனைவி மக்கள் சிறக்க
ஊழி ஊழி வாழிய பலவே.

அருள்விளக்கம் அண்ணாமலை அடிகள்
வழங்கும்
## சாற்றுக் கவி

அருள்மிகு இராகவேந்திரராம் நம்
அருளாசான் அருட்கா வியமதைத்
தருமவர் அருளாலே தாம் படைத் துத்
தந்திட்டார் இத்தரணி யோர்க்கே.
அருட்கவி அரனிடத்தே அதிபத்தர்
அருந்தமிழ் நாட்டினர் போற்றும்
பெரும்புலவர் புக்குளமாம் பேரூரில்
பிறந்துவாழ் இராமனெனும் பெயரினரே.

S. தனபால் M.A., M.Ed., WPA சவுந்தர பாண்டி நாடார்
மேனிலைப் பள்ளி உதவி தலைமையாசிரியர் அவர்கள்
புக்குளம் புலவர் ஸ்ரீ ராகவேந்திர புலவர் திரு. ம. இராமன் அவர்களின்
ராகவேந்திரக் காவியத்தைப் பாராட்டி அளித்த சாற்றுக் கவி :

மாகாவி யங்கண்ட கம்பனது வரிசையில்
வைக்கத் தகுந்த வன்காண்
மலர்மேலி ருக்கின்ற வாணியருள் பெற்றவன்
வண்டமிழ் வளர்க்க வருவோன்
ஆகாய முட்டிடும் அளவுபுகழ் கொண்டவாத்
மீகமிகு ஞான வள்ளல்
அண்ணலாம் ராகவேந்திரர்மீது காவியம்
அதிசயிக்கச் செய்தனன்
பாகோ வெனப்பாடும் புக்குளப் புலவராம்
பண்புள்ள கவிஞர் ராமன்
பாரே புகழ்ந்திடப் பட்டிமன்றப் படலம்
பலவாது வெல்படலமும்
ஓகோ வெனக் கூற துவைதஅத் வைதமும்
உயர்வாய் விளக்குகின்றான்
உத்தமன் ராமன்புகழ் உலகுள்ள வரையிலும்
உயரிமய மெனவாழ்கவே

# ஸ்ரீ இராகவேந்திர மகா காவியம்

## விநாயகர் காப்பு

செந்தமிழின் பாவாலே சீலராக வேந்திரர் தம்
சொந்த சரிதம் தனைப் பாட - எந்தையருள்
தந்தி முகத்தோன் அருள்வேண்டி என்றென்றும்
புந்திக்குள் போற்றுமென் நெஞ்சு. 1

மக்களில் ஒருவராகப் பிறந்துநல் மனிதவாழ்வில்
தக்கவர் போற்றத் தக்கத் தனிப்பெரு மகானாய் வாழ்ந்தார்
இக்கணத் தென்னுள் வந்தார் இராகவேந் திரரே யென்றன்
பக்கலில் இருத்த லால்இப் பனுவலைப் பாடு கின்றேன். 2

## அருள்மிகு மாஞ்சாலி யம்மன் துதி

மாஞ்சாலி யம்மன் மகத்துவத்தை யானறிந்தேன்
மாஞ்சாலி யம்மன் மகத்துவத்தின் - - - வாஞ்சையினை
எண்ணி வணங்குகின்றேன் என்னுளத்தே வாழ்த்துகின்றேன்
எண்ணுவர்க்கே ன்னருள்செய் தாய். 3

மாஞ்சாலி யம்மன் மகத்துவம் யாரறிவார்
மாஞ்சாலி வந்தே மனிதற்குத் - - - தாஞ்சலியா (து)
இன்னருள் செய்யும் இறைவியின் இன்னருள்தான்
இன்னதென்றே யாரறிவார் இங்கு. 4

யான்செய் பிழையை எனக்கெடுத்துச் சொல்லுதற்கே
தான்வந்தாள் தட்டச்சர் மூலமதாய் - - - யானவரை
என்செய்தீர் நீர்பிழைத்தீர் என்றுரையேன் என்னுளத்தே
நின்றுன்னைப் பாடவைத்தாய் நீ. 5

எனக்கருள் செய்தே எனைவழிக் காட்டி
மனக்கவலை போக்கியமாஞ் சாலி - - - இனிக்கவலை
யற்றதால் உன்றன் அடியிணையைச் சாருதற்கே
பற்றறுப்பாய் பாரிலெனைப் பார்த்து. 6

## அவையடக்கம்

முற்றுணர்ந்த முதல்வர்தம் மாக்கதை
சற்று ஞானச் சார்பில் சழக்கனால்
உற்றுரைக்க ஒருப்படல் ஒல்லுமோ?
பற்றும் பாச வினையுடைப் பாவியேன். 7

சுற்றி யுள்ள சூழ்கடல் தன்னையே
கற்ற றிந்த தன்கண் அனைத்தையும்
உற்ற றிந்து ரைக்குமவ் வூக்கமே
சிற்ற றிவினன் செகத்திலென் செய்கையே. 8

மூல ராமர் மந்திர வுண்மையை
சீல ராகவர் செப்புமிக் காதையில்
ஞாலம் இந்த நற்பொருள் தேர்ந்திட
ஏலுமே யென்றன் இச்சையின் ஏன்றதே. 9

வாரி தன்னிடை வன் கலம் செல்லல்போல்
மாரிக் காலத்து மழலையர் செய்கையே
தாரிப் பின்றித் தமியனேன் செய்கையும்
நேரி தாமோ நினைவனின் நூ லதை. 10

முற்று ஞான முறைமையி னின்றிடாச்
சிற்ற றிவினின் செப்பிய காவியக்
குற்றம் நீக்கிக் குணங்களைப் போற்றுதல்
கற்ற நூலினர் கடமைய தாகுமே. 11

முன்சொல் ராகவர் முன்னூறு ஆண்டினில்
நன்சொற் காவியம் நலம்பெறத் தோன்றுமே
பொன்சொல் என்றே போற்றிப் புகழ்ந்தேன்
என்சொல் ஈஃதோ யானறியேனே. 12

பூவின் புறவிதழ் பொருந்தினும் பூவெனல்
நாவின் உரைத்தனன் நற்றமிழ் காவியம்
தேவின் நூலெனத் தெரிந்திடில் தேர்ந்தநூற்
பாவின் தன்மையைப் பார்த்திடல் வேண்டுவன். 13

ஆடல் கொண்ட அம்பல வாணனின்
பாடல் கண்டும் பழித்துரை பாவலர்
கூடல் நகர்வாழ் கொற்றத் தமிழினைத்
தேடல் கொண் டனன் தேற்றுவிர் நீரே. 14

### காலம் காரணம்

தூய ராகவர் காவிய மாக்கதை
மேய வாண்டு பிரபவ தாகுமே
ஆய தாகும் அம்மதி ஆடியே
நேய மாம்புனர்ப் பூச நன்னாளிலே 1

ஆடி மாதம் ஒன்பதாம் நாளதில்
நாடிச் சென்ற னன் ரஜினி காந்தரை
பாடி வந்தனன் காவியம் என்றதும்
கோடி என் று கொடுத்துவந் தேற்றனர். 2

ஆண்டு சுக்கில வாகுநன் மாதமே
ஈண்டு கார்த்திகை யிருபத் திரண்டிலே
வேண்டி என்னுளம் விரும்பி உறைந்துமே
ஈண் டிக் காவியம் எழுதி முடித்தனர். 3

### வேறு

குருவின் நாளிலே
திருவி ராகவர்
குருவின் காவியம்
உருவு கண்டதே. 4

ஆக பாடல் தொகை – 18

ஸ்ரீராகவேந்திரர் துணை

## ஸ்ரீராகவேந்திரர் போற்றிப் பதிகம்

திருவருட் பெருமையைத் தேடித் திசையெலாம்
பெருகிட உரைக்கப் பேணியே நின்றனன்
நிறைவுற வென்மனம் நிமலனை யெண்ண
விறைவனென் றெனக்கே ராகவேந்திரரே

திரையினில் தோன்றும் பிம்பமாய் ரஜினி
இறைபொழு தென்முன் காட்சியே யளித்தீர்
ஒருதவ முடைய உயர்புகழ் ஞானியுன்
பெருமையை யுலகில் பேசிட வைத்தாய்

அருமையாய்க் காவியம் அதனின் தத்துவம்
அறைகுவன் ஈங்கே யகிலத் தோர்க்கே
நிறைகுணச் செம்மலாம் நிமலனின் தாளைச்
சிறைசெய மனத்தில் சிறந்திடத் தோன்றுவன்

துங்க பத்திரைத் தூய நதியின்
அங்குள மந்த்ரா லயத்திடை யமர்ந்தே
எங்கணு முள்ளோர் இன்பம் அடைந்திட
தங்கணற் குருவாய்த் தாரணி போற்றிய

தத்துவ ஞானியின் துவைதக் கருத்தை
மத்துவர் வழிமுறை வழாஅது போற்றிச்
சித்தங் களிக்கச் செய்திடும் பூசையில்
திருமிகு மூல ராமரைத் தினமும்

ஒருபெரும் பேறாய் உவப்புடன் வழிபட
பாரத நாட்டின் பெருமையும் பண்பும்
தாரணி வாழ்வின் தனிப்பெரு நகராய்க்
கூறும் படியே கும்ப கோணமென்

றாரும் அதனின் அதிசயம் விளங்க
சீருறுஞ் சங்கு கர்ணரே போற்றி
ஓரவ தாரம் உவ ந்தாய் போற்றி
ராகவேந்திரராய் நலம்பெறத் தோன்றிட

பேர்பெறும் புவன கிரியே யுலகில்
சீர்பெறு ஞானியுன் சிறப்பினைப் பெற்றதே !
பால குமரனாய்ப் பாரினில் கலையைச்
சீலம் மிகவே கற்றாய் போற்றி

குலமது தழைக்கக் குவலயம் வாழ்ந்தே
அலகி லாக்கலை மாதெனப் புணர்ந்தே
நிலவுல கின்பம் பெற்றாய் போற்றி
பரிமளர் ஆன பரனே போற்றி

ஒருபெரு மகவை உகந்தாய் போற்றி
மந்த்ர மகிமையை யுலகோர்க் குணர்த்தியே
துறவு பூண்ட தூயோய் போற்றி
பற்றறுத் துலகில் பண்பின் வாழ்ந்தே

முற்றத் துறந்த முனிவ போற்றி
நாமகள் காட்சியைக் கண்டாய் போற்றி
பட்டிமண் டபத்துப் பாங்குடன் அமைந்தே
ஒட்டியும் வெட்டியும் உரைத்திடும் உரையின்

எட்டோடிரண்டின் இயல்பினை யுணர்ந்து
வெட்டெனப் பேசா விறலோய் போற்றி
பட்டா பிடேகம் பெற்றாய் போற்றி
கட்டம் பெற்றோர்க் கருள்வாய் போற்றி

இட்ட சித்தியை யளிப்போய் போற்றி
அன்னை சரஸ்வதிக் கருளியோய் போற்றி
தன்னையுணர்ந்த தலைவ போற்றி
தன்கடன் ஆற்றிய தயாபர போற்றி

முன்னை வினையொழி மூவா போற்றி
எண்ணுந் தரிசனம் ஈவோய் போற்றி
சோதிடக் கலையைச் சோதித் தறிய
வாதித் தவர்கள் வாக்கினைக் கொண்டே

சேதியை யுரைத்த செம்மலே போற்றி
யாத்திரை கொண்டே இத்தரை மாந்தரின்
சாத்துயர் போக்கிய சதுர போற்றி
அட்ட திக்குளோர்க் கருள்வோய் போற்றி

பட்ட சங்க்ர கம் பெற்றாய் போற்றி
சாதுர் மாத விரத போற்றி
வேத விளக்கம் ஆனாய் போற்றி
முடவனை முத்திக் களித்தாய் போற்றி

வாதுசெய் புலவரை வென்றாய் போற்றி
ராகவ விசயம் கொண்டாய் போற்றி
ஆகமப் பொருளை யறிந்தாய் போற்றி
மாணவர் மயக்கம் அறுத்தாய் போற்றி

புகழ்நிலை யுற்ற புண்ணிய போற்றி
இகபர நிலையை யீவோய் போற்றி
சகந்தனில் மக்கள் சமுசயம் நீங்க
பட்ட மரந்தளிர்த் தருள்வோய் போற்றி

பாலையின் கேணிப் பண்ப போற்றி
சுடுமணலின் துயர்ப் போக்கியோய் போற்றி
மந்த்ராட் சதையை மாற்றியோய் போற்றி
நாம மகிமையை நாட்டியோய் போற்றி

சித்திக் கருள்செய் சித்தரே போற்றி
தீர்த்தத் தின்னுயிர் காத்தாய் போற்றி
நாத்திகர் பலரும் நல்லற் புதமென
ஆத்திகந் தழைக்க வருள்வோய் போற்றி

இருந்திவ் வுலகின் இன்னலைப் போக்கப்
பிருந்தா வனத்தின் பெருமையோய் போற்றி
மாஞ்சா லத்தின் மகிமையோய் போற்றி
மாஞ்சா லம்மனின் தரிசனங் கண்டு

வாஞ்சையால் உலகிடை வாழ்வாய் போற்றி
தாஞ்செல் பிருந்தா வனத்தினை வகுத்தோய்
பஞ்ச முகமொடு பாரினில் தோன்ற
அஞ்சல் எனவருள் ஆஞ்ச நேயரை

நெஞ்சினில் நிறுத்தியே கண்டாய் போற்றி
மஞ்சம் எனப்பிருந் தாவனஞ் சென்றாய்
தஞ்சம் என்றுன் தாளிணை பூண்டோர்க்(கு)
அஞ்சல் எனவருள் செய்வோய் போற்றி

ஒப்பிலா ராக வேந்திர போற்றி
அப்பணர்க் கருளே யளித்தாய் போற்றி
மந்த்ரா லயத்தின் மகிமையை யுணர்ந்தார்
மன்ரோ தாமஸ் மகத்துவங் கண்டார்

நின்றே வணங்கினர் நின்பெருந் தாளிணை
அன்றே துங்க பத்திரை நதியிடம்
நன்றே விளங்கின ! நலம்பல தோன்றின
வெள்ளி ரதமும் பெற்ருய் போற்றி

எள்ளுஞ் செய்கையள் எனினுந் தாசி
உள்ளம் உருக உனையவள் துதிக்க
வள்ளல் எனவாழ் வளித்தாய் போற்றி
மேலை நாடு புக்கோய் போற்றி

புக்குளம் புலவர் ராமனாம் என்னால்
தக்கநின் காவியம் சாற்றியோய் போற்றி
எங்கணு முள்ளோர் இனிதே வணங்கத்
தங்கக் கவசஞ் சார்த்தியோய் போற்றி
மங்கல மகான் திரு ராகவேந்திர நின்
தங்க த்தாளிணை சரணம் சரணம்.

ஆக பாடல் தொகை - 19

# மத்வர் வழிமுறை மகாத்மியம்

உலகிலே வாயு தேவர் உயரனு மானாய்த் தோன்றி
அலகிலாப் புகழ்கொள் ராமர் அவரினற் சேவை செய்தார்
நலமிகு பீம னாக நல்லவை தாரம் செய்தே
தலமதிற் கிருட்டி னற்கே தனிப்பெருஞ்சேவை செய்தார் 1

மத்துவர் ஆஞ்ச னேயர் அம்சமாய் அவதரித்தார்
தத்துவம் உரைத்த வேத வியாசரைப் போற்றி வாழ்ந்தார்
உத்தம ரானார் பிரம்ம சூத்திரந் தனையு ணர்ந்தார்
இத்தரை மக்கள் போற்ற யினியநல் லுரைப கர்ந்தார். 2

வேதத்தை வகுத்து வேத வியாசராய் உரைப கர்ந்தார்
வேதத்தின் விளக்க மான வியத்தகு ப்ரம்ம சூத்ரம்
போதத்தின் சாரம் ஆகப் போற்றிட பூர்ண ரஜ்னர்
வாதித்தே உரையை கண்டு வகுத்தவர் பத்ம நாபர் 3

ஆதலின் நீங்கள் எல்லாம் அவனியில் நமது கொள்கை
காதலின் எடுத்து ரைப்பீர் காசினி மக்கள் கேட்க
ஓதுவீர் உலகம் உய்ய உத்தர விட்டார் நன்றே
சீதரன் அருளால் மத்வர் ஆனந்த தீர்த்த ரானார். 4

சூத்திர பாடி யத்தின் சூக்கும உரையின் அன்னாள்
சாத்திர உண்மை யெல்லாம் தரணிக்கே யளித்து வாழ்ந்தார்
நேத்திர தத்து வத்தால் லக்குமி நேரில் நன்றே
பார்த்திட வந்தாள் அன்றே பக்குவ மடைந்தே வாழ்ந்தார் 5

ஞானமாங் கடலே சூத்ரம் நல்லுரை பாடி யத்தால்
மோனமா நிலையி ருந்தே முழுதருள் அமுதந் தந்தார்
வானநல் நியாய மார்க்கம் வகுத்துரை விளக்க மென்னும்
தானமாங் கற்ப கத்தைத் தரணிக்கே யளித்து வாழ்ந்தார். 6

பாடியம் பலப கர்ந்தார் பகரனு கீதா ரிக்கே
பாடிபத் திரிகாச் ரமத்தில் பகர்வேத வியாசர் தன்னை
நாடியே சென்றார் காண நன்மையே விளைய வேண்டி
சூடினார் முடியில் தாளே சூட்டினார் புனிதம் என்றே 7

தீர்த்தரில் பத்ம நாபர் திருமிகு ஞானி யாவுார்
பார்த்திப னாக வாழ்ந்தார் பகர்குரு மத்து வர்தாம்
நாத்திகக் கொள்கை வீய நலம்பெற வைண வத்தால்
ஆத்திகந் தழைக்க வாழ்ந்தார் அவருரை நாட்டி னாரே. 8

சத்தர்கா வளியுந் தீபா சன்யாய வளியே ரத்னா
உத்தம மனுவே சொன்ன விளக்கத்தால் பத்ம நாபர்
இத்துரை விளக்கச் சொல்லின் இயல்கர்த்த ராக வாழ்ந்தார்
மத்துவர் வழியில் வந்தார் மதித்தன மகித லந்தான். 9

பதஞ்சலி முனிவ ராகப் பகர்ந்தனர் ஆதி சேடன்
சதம்பத்து நாவி னாலே சகத்தினிற் பாணி னீதன்
இதந்தரு ப்ரம்ம சூத்ரத் தின்னுரை பகர்வ தற்கு
நிதந்திரை பின்னால் நின்றே நிகழ்த்திய செய்தி போன்றே. 10

ஆயிர நாவால் பத்ம நாபராந் தீர்த்த ராவார்
மாயிரு வையம் வாழ மாண்புடன் உரைப கர்ந்தார்
தூயதாம் பிரம்ம சூத்ரத் துட்பொருள் தனைய றிந்தே
தேயத்தோர் தெளிந்தார் தெய்வ வழியினைத் தேர்ந்தார் நன்றே. 11

# திருமிகு மூலராமர் வரலாறு

உளமதிற் கருணை யாலே கஜபதி உயர்வோ னாவான்
நலமிகு பக்த ராய் நரஹரி தீர்த்த ருக்கே
நிலமுறும் எவ்வம் நீங்க நினைத்தரசு அளித்தான் அத்தால்
தலமதில் நிலைத்து வாழ்வான் தாரணி புகழப் பெற்றான். 1

அரண்மனைப் பொருளில் ஒன்றுய் அயோத்தியின் ராமன் நின்றான்
சரணமாய் ம்த்து வர்தாம் சார்ந்தவர் பற்றிக் கொண்டார்
திறமிகு நிலையாம் ராமர் சிறந்திடுந் தேயம் என்றே
உரமதில் நரக ரீதான் உறுதியாய் எண்ணி னாரே 2

அத்தகு பத்தி மானாம் ஆனந்த தீர்த்தர் சீடர்
மத்துவ மரபில் வந்தார் மாதவ தீர்த்த ராவார்
மெத்தகு உலகு போற்ற மேன்மையாம் மூல ராமர்
சித்தம துறையப் போற்றுஞ் சிறந்திடுந் தீர்த்த ரானார் 3

மாதவ தீர்த்தர் பெற்ற மகத்துவ முடைய ராமர்
நாதன் அட்சோப்ய தீர்த்தர் நலம்பெறப் பெற்றுயர்ந்தே
சாதனை செய்தார் துவைத தத்துவம் நாட்டி வாழ்ந்தார்
வாதமே செய்தார் தத்வ மசியெனும் வாக்கைக் கொண்டே 4

நானேநீ யாக வேதான் இருக்கின்றேன் நானி லத்தில்
வானுளா யாக நீதான் வந்துநீ வாழ லாமோ
நானே நீயாக வாழ்ந்தேன் நானேநீ யாத லாமோ
மானுடர் மயக்கந் தீர்த்தே மதியினால் வென்றா ரம்மா! 5

நீயென்று சொன்ன தாலே நீவேறாய், ஆகி விட்டாய்
ஈயென்றே யிரந்து நாளும் இல்லற வாழ்க்கை செய்வேன்
ஈதோவென் றெனக்குத் தந்தாய் என்னாலிங் காவதுண்டோ?
தீதான உரையைப் போக்கித் திருவருள் விளக்கந் தந்தார். 6

தத்துவ விளக்கத்தாலே தரணியில் எதிர்ப்போர் தம்மை
சத்துவ குணமே மிக்குச் சார்ந்தவட் சோப்ய தீர்த்தர்
மத்துவ வழியில் வந்தார் மதியினால் எதிர்த்து வென்றார்
இத்தரைப் புகழை நாட்டும் இயல்பினால் பெருமை பெற்றார். 7

அத்தகு தீர்த்தர் சீடர் அவர்ஜெய தீர்த்த ராவார்
மத்துவர் கொள்கை கொண்டே மகிதலம் போற்ற வாழ்ந்தார்
எத்தராய் வந்தே தம்மை எதிர்ப்போரை முறிய டித்தே
சித்தராய் வாழ்வார் இந்தச் சகமதில் சிறக்க வாழ்ந்தார். 8

பூரண ரஜ்னர் ஆவார் புத்தகம் அத்த னைக்கும்
காரண உரையே கண்டார் காசினி மக்கள் போற்றத்
தாரணி தனில்மே லானக் காகினி நதியின் பாலே
வாரணி குதிரை மீதே வந்தனர் கரையின் பக்கம். 9

கைகளால் அருந்த நீரே காகினி நதியில் தாமே
உய்வகை யறிந்து நீரை உறிஞ்சியே குடிக்கலுற்றார்
மெய்வகை யறிந்தே த்யானம் மேன்மை யட்சோப தீர்த்தர்
செய்வகை யறிந்தார் பக்கஞ்சென் றுமே வணங்கி நின்றார் 10

கோளெனும் எருது நீரைக் குடித்தவத் தன்மை போன்றே
ஆளெனக் கூறுஞ் சீடர் அருந்திய தன்மை கண்டார்
நாளெலாம் மக்கள் போற்ற மத்துவர் நூல் தமக்கே
ஏலுநல் லுரையே சொல்லற் கேற்றவர் எனவே கண்டார். 11

அக்கரை தனில்வாழ் கின்ற அட்சோப்ய தீர்த்த ராவார்
மிக்குள அன்பினாலே மேன்மையாங் கடவுள் தன்னை
திக்கெலாம் போற்றும் வண்ணம் த்யானமே செய்கின்றாரை
அக்கணத் தேவ ணங்க அவரு மாங் கதையறிந்தார். 12

சீடனாய் ஏற்றுக் கொள்ள ஜெயதீர்த்தர் விண்ணப்பித்தார்
சீடனின் தன்மை கண்ட சிறந்தவட் சோப்ய தீர்த்தர்
சீடனாய் இன்றே நின்னைச் செகமதில் ஏற்றுக் கொண்டேன்
சீடனாய் வந்தாய் என்றன் சீலமே சிறக்க வாழ்வாய் 13

அகத்தினில் அவரைத் தீர்த்தர் சீடனாய் ஏற்றுக் கொண்டார்
உகப்பிலாச் சீற்றங் கொண்டார் உறவின ரதனால் என்னே
தகவிலாச் செயலால் பற்றித் தமதூரே யழைத்துச் சென்றார்
அகமதில் அச்சங் கொண்டார் அரவுரு எடுத்தற் கண்டே 14

அச்சமே யடைந்தார் பெற்றோர் மகிமையட் சோப்ய தீர்த்தர்
நிச்சயம் மகானே யாவார் நிமலனே என் றுணர்ந்தார்
அச்சத்தைப் போக்க வேண்டி யவரிடம் மீண்டுஞ் சேர்ந்தார்
நச்சினோர்க் குதவும் ஞானி நம்பினார்க் கருளும் வள்ளல் 15

பெருமையாம் இறையே ராமர் பெற்றவர் செயதீர்த்தர்தாம்
அருமையாய் பூசை செய்தே யானவித் யாதி ராஜர்
உரிமையாய் பெற் றார் பின்பு உயர்கவீ ந் திரரும் பெற் றார்
திருமிகு வாகீசர் பின் திருராமச் சந்திரர் பெற் றார் 16

தலமதில் ராமச் சந்திரர் தனிப் பெருஞ் சீடராவார்
நலமிகு விபுதேந் த்ரரும் நரசிம்ம சாமி தன்னால்
அலகிலாப் புகழ்பெற் றுள்ளார் அகோபில நரசிம்மர்தம்
உளமது மகிழ்ச்சி கொள்ள உடனிருந் துதவி பெற் றார் 17

உடனிருந் தவரும் மேலாம் உறுதவ மதனைச் செய்தே
இடனறிந் துரைக்கும் ஆற் றால் எதிரியை வாதில் வென் றார்
கடனறிந் ததனால் பெற் றார் கனகமாம் பொருளையெல்லாம்
நடைமுறை தனைய றிந்தே நரசிம்ம சாமிக்கீந்தார். 18

சிறந்திடு விபு தேந்த்ரரே ஜிதா மித்ரர் தமக்கேயீய
உரமிகு ஜிதாமித் ரர்தாம் உயர்ரகு நந்தர்க் கீய
அறவிய நெஞ்சங் கொண்ட சுரேந்திரர்க்களித்து வாழ்ந்தார்
சிறந்தவச் சுரேந்திரர் தம்மால் செகமது செழித்த தம்மா! 19

அதன்பினே விஜயேந் த்ரரும் அறுபான்நால் நூல்கள் கற்றார்
இதங்கொடு கலைகளெல்லாம் ஈடிணை யற்ற தாமரல்
மதனென ராம ராஜன் மன்னனால் ரத்ன மாரி
அதனுடன் அக்ர காரம் அவன்பல வடைந்தான் நன்றே. 20

மாமுனி சைமி னீதன் மீமாம்சம் வியாகர் ணந்தான்
ஆமவர் அட்ச பாதர் ஆக்கிய தருக்க நூலும்
சேமமாம் வியாசர் ப்ரம்ம சூத்திரத் துரையுங் கண்டார்
நாமதன் பெயரைச் சொல்லின் நற் கல்வி யுடையோ ரென்பர். 21

மூலனுய் விளங்கு ராமர் திருவுரு முறையினாலே
சீலமே கொண்டு யர்ந்த சுதிந்த்ர தீர்த்தராவார்
ஏலவே விஜயேந் திரர்தாம் இசைவுடன் பூசை செய்தார்
ஞாலமெங் கனுமுள் ளோரால் நலம்பெற வணங்கப் பெற்றார் 22

அம்புவி போற்றும் வண்ணம் அட்டதிக்கிலுமே சென்று
தம்புகழ் நாட்டி யேதான் தரணியில் வாகை சூடி
வம்பு செய் வாதி தம்மை வாதத்தில் வெற்றி கொண்டார்
நம்பினான் வெங்கடேசன் நற்பரிசளித்தான் நன்றே. 23

அற்றமில் அரசனாவான் அவனியில் வெங்கடேசன்
பெற்றனன் வெற்றிச் சங்கு பெருமையாம் பரிசு யாவும்
முற்றவே யளித்த ன்னாரை முடியினிற் போற்றி செய்தான்
குற்றமில் கும்ப கோணம் குறைவறச் சென்றடைந்தார். 24

# 1. சம்பவ காண்டம்

என் னுளே புக்காய் தூய ! ராகவேந்திரராம் நாமம்
தன் னேயே நினேந்தே யுன் றன் தாளினேப் போற் று வேனென்
பொன் னேயே பறித்தாய் உன் றன் புகழினேப் பாடி வந்தே
பொன் னடி போற் று கின் றேன் புரிந் தெனக் கருள் செய் வாயே 1

## நாட்டுப் படலம்

பாரத நாடு மிக்க பழம்பெரு நாடே யாகும்
சாரதி கண்ணன் வாழ்ந்த சரித்திரம் படைத்த நாடே
யாரிதன் பெருமை யோர்வார் இத்தரை மக்கட் கெல்லாம்
ஆரணம் ஓதும் மேலாம் அற்புதம் படைத்த நாடே. 2

கூர்த்தநல் மதியுங் கொண்டே குவலயம் போற் றும் வண்ணம்
நேர்த்தியாய் மனமும் பெற்றே நிலத்திடை விரிவ டைந்தால்
பார்த் துமே யிறைவன் தாளே பதமெனப் போற்றி செய்வர்
சேர்த் துமே பிரமன் வைத் துச் செய்ததே பார தந்தான். 3

மலேயிலே சிறந்த மேரு மலேயதும் பார தத்தே.
கலேயிலே சிறந்த தெல்லாம் பாரதக் கலேய தன் றோ
மலேவிலா ஞான மார்க்கம் மதித்தனர் பார தத்தார்
நிலேபெறக் கோயில் செய்தே நிமலனே வழிபட் டார்கள். 4

நால் வேதம் அங்கம் ஆறும் புராணமும் தோன் றி நல்ல
நூ லென் றே யோதற் கேற்ற நூ லறி புலவர் கற் றோர்
மாலற வுணர்த்தி னேர்கள் மண்ணினில் மாந்த ரெல்லாம்
வாலறி வினன் தாள் வாழ்த்தி வானெறி செல்லலானர். 5

சிவன் வாழும் மலையே கைலை சிறப்பிடம் பெற்ற தாகும்
தவம்செய்தற் கென்றே சித்தர் தங்குவர் அதனிடத்தே
சிவன் ஆய்ந்தான் தமிழை சங்கத் தோருமே யாய்ந்ததாலே
சிவன் வாழ்வும் ஆய்வும் எல்லாம் சேர்ந்தது பார தத்தே. 6

தனிப்பெருந் துணைக்கண் டந்தான் தாரணி தனிலே தேவர்
இனிதாக விறங்கு தற்கே யிமயத்தைக் கொண்ட நாடே
மனிதர்கள் பலகண் டத்தோர் மாபெரு மலையி னாலே
நனிநாளும் உயர்வோ மென்ற நாடுநம் திருநா டாமே. 7

தேவர்கள் ஆண்டு தோறும் திருமிகு மிந்த நாட்டில்
ஓவிலா துறைகின் றாரால் உத்தம நாட்டில் மேலாந்
தேவுவாழ் கைலையோடு திருவை குண்ட மெல்லாம்
மேவிடு நாடென் றாலிம் மேன்மையை விளக்கல் ஆமோ? 8

என்னேயிப் பார தத்தில் என்றைக்கும் பெருமை யுண்டு
முன்னேயே நடந்த வீசன் திருமண முதலாத் தேவர்
உன்னிடும் அவதா ரந்தான் உற்றதிப் பார தத்தே
அன்னவர் வாழ்வ தற்கே யரும்பெருஞ் சிறப்பைப் பெற்ற. 9

திருமாலின் அவதா ரந்தான் எடுத்ததித் திருநா டன்றோ
ஒருமாலின் அம்ச மாணார் உதித்ததும் இந்நா டன்றோ
பெருமையால் தேவ ரெல்லாம் பிழையேதுஞ் செய்வா ராகில்
அருமையாந் தோற்ற மெல்லாம் அமைந்ததிப் பார தத்தே 10

சங்கரன் உதித்தான் ஆதி சங்கரன் எனவே வந்தான்
அங்கவன் குமரன் போற்றுங் குருபர னாக வந்தான்
பொங்குநல் லன்பின் ஞான சம்பந்தன் பிறந்த தெல்லாந்
துங்கமாம் பார தத்தின் துணைக்கண்டந் தனிலே யன்றோ? 11

கிருட்டினன் மதுரை வந்தான் கீர்த்தியால் ராமன் தானும்
அருட்டிரு உள்ளங் கொண் டே அயோத்திமாநகர் உதித்தான்
மருட்டிடா துலகில் ராம கிருட்டின மகான்கள்யோகந்
தெருட்டிடு ஞான மார்க்கம் செய்ததித் திருநாடன்றோ? 12

ஈசனின் ஆடல் எல்லாம் இயற்றிய திருநாடாகும்
கேசவன் உரைத்த கீதை வசனமித் திருநா டன்றோ
பாசமே பிரமன் கொண்டே படைத்திட்டான் பார தத்தை
நேச மாய்த் தேவ ரெல்லாம் நினைப்பதித் திருநா டன்றோ? 13

சிவனவன் பிறவான் என்னே திருப்பாதந் தோய வந்தே
அவன் திரு விளையாட் டைத்தான் அவனியில் நடத்த நாளுந்
தவமிகப் பெறவே வேண்டி தன்னுடைப் பாதந்தோய
பவனியே வந்த நாடு பாரத நாடே யாகும். 14

பன்னிரண் டாழ்வார் தோன்றி பரமனைப் பாடி நித்தம்
தன்னுடை கடமை செய்த தனிப்பெரு நாட தாகும்
முன்னுள நாயன் மாரும் முறைமையிற் றோன்றி யன்னோர்
பன்னரும் ஈசன் தாளைப் பரவிய திந்நா டன்றோ. 15

சித்தர்கள் உலகில் தோன்றிச் சிறப்பினைத் தந்த தெல்லாம்
இத்தரை பாரதத்தே யென்பதும் அறியார் யாரே
மத்தரைப் போன்ற வாழ்வால் மண்ணினில் நன்மை யுண்டோ
சித்தத்தே தெளிவு பெற்றோர் சிறந்தநல் ஞானி யன்றோ? 16

சங்கரர் மத்வர் ராமா னுசரென்றே சகத்து ளோரே
அங்கவர் பெருமை யெல்லாம் அறிந்துமே போற்ற லானர்
தங்களின் மார்க்கந் தன்னல் தயாபரன் அடியை நாடி
பொங்குபே ரின்பம் உற்றுப் புகழ்ந்தனர் புவியு ளோரே 17

நால்வர்கள் பிறந்தார் வேதம் நான்கென உலகிற் கோத
மால்வகை யுலகோர் அற்றல் மண்ணினில் வாழ லாகும்
நூல்வகை யுரைத்தார் என்னே நுண்நுழை மாண்பு லத்தால்
ஏலுமக் கருத்தே யென்றும் உலகுக்கே ஏற்ற தொன்றே. 18

மகவாஞ்சற் புத்ர ஞான சம்பந்தன் மார்க்க மாகும்
இகபர சகமார்க் கந்தான் சுந்தரர் இயம்பினரே
தகவுடைத் தாச மார்க்கம் அப்பரைச் சார்ந்ததாகும்
சகந்தனில் சன்மார்க் கம்மே வாசகர் சாற்றி னரே. 19

அத்தகு நன்மார்க் கங்கள் அவனியில் தோற்றங் கொள்ள
இத்தகு பார தத்தின் ஏற்றமே யுரைப்பர் பாரோர்
மெத்தகு ஞானி யெல்லாம் மேன்மையாய்த் தோன்றலாலே
உத்தம பார தத்தின் உறுதியே யுயர்ந்த தம்மா! 20

அறுபான்நால் கலைகள் தோன்ற அகிலத்தே சிறப்புப்பெற்றுர்
இருபாலோர் இறைவன் தாளை எய்திநல் லருளைப்பெற்றுர்
ஒருபாலும் பாரதம்போல் உயர்ந்ததோர் நாடேயில்லை
பெரும்பாலும் மகான்கள் எல்லாம் பிறந்திட்டார் பாரதத்தே 21

ஞானமே யுலகுக் கீந்த நற்பெரும் பார தந்தான்
மோனமா நிலையி ருந்தே முத்தியை யளிக்க வல்லார்
தானமாய்ப் பொருளைத் தந்தே தன்னைத்தான் அறிய லானார்
வானவ ராகும் மார்க்கம் வையத் தோர்க் கீந்தார் ஞானி. 22

வான்மீகி வகுத்து ரைத்த வல்லமை யெல்லாங் கற்றுத்
தான் வாழ்ந்தான் தரணி மீதே தன்னிகரிலாத கம்பன்
வாணியின் அருளினாலே வந்தவன் காளி தாசன்
ஞானமே பெற்ற கல்வி நலமெலாம் பார தத்தே! 23

சங்கத்துப் புலவர் தோற்றஞ் சகந்தனில் பார தத்தே
இங்கிதன் பெருமை யெல்லாம் எடுத்துமே யுரைக்க வேண்டித்
தங்களின் கடமை யென்றே சங்கத்தே தமிழ்மன் னர்கள்
பொங்குநற் றமிழை யன்பின் போற்றினர் பாரதத்தே 24

அழியாத புகழ்பெற் றுள்ளார் ஆங்கிலப் புலவர் பல்லோர்
செழுமையாக் கவியி யற்றும் ஷெல்லியும் மில்டன் கீட்சு
வழியெலாங் கம்பன் காளி தாசனில் வந்த டங்கும்
விழுப்புகழ் பெற்ற தாகும் வீறுகொள் பார தந்தான் 25

என்றென்றும் ஞானி யாவார் இச்சகம் போற்றும் வண்ணம்
கன்றிய மனம கன்றே கருதிட்டார் பார தத்தே
நன்றென விவேகா னந்தர் நாடினார் தெற்கின் கண்ணே
குன்றுள குமரன் போற்றுங் குருபரன் வாழ்வே காசி 26

ஸ்ரீவைகுண் டத்தின் வந்த குருபரர் வாழ்ந்தார் காசி
மேவு நல் விவேகா னந்தர் மேவினர் தெற்கின் கண்ணே
தேவியல் ஞானம் பெற்றோர் தேயத்தால் மாறு கொள்ளார்
பாவியாய் வாழாய் என்றே பகருநல் ஞானி யாவார். 27

அமரர்போல் தோற்றங் கொண்டார் அவனியில் பார தத்தே
நமனையே யாடல் கொண்டார் நல்லபி ராமி பட்டர்
நமர் தாமும் உரைத்தல் நன்றோ நானிலம் போற்றிற் றன்றே
எமதன்பி ன் தாகூர் கீதாஞ் சலியுமிந் நாட்டதாமே 28

என்றைக்கும் பார தந்தான் ஏற்றமே யுடையதாகும்
இன்றைக்கும் ராம லிங்கர் ஏற்றமே யுலகில் வாழக்
குன்றெனப் பொருள் கொண்டார்க்குக் குவலயப் புகழுண்டாமோ
நன்றெனப் பார தந்தான் நலம் பெறும் புகழொன்றாலே. 29

சாத்திரக் கலைப யின்றோர் சகத்துளோர் அறியா முன்னே
காத்திரத் துள்ளே மேலாங் கடவுளே யிருக்குந் தன்மை
நேர்த்தியாய் அறிந்தார் ஞானி நிட்டையி லிருந்தார் யோகி
பார்த்திட்ட பெருமை யெல்லாம் பாரத நாட்டி லன்றோ? 30

எந்நாட்டின் இறைவ னெல்லாந் தென்னாட்டில் வாழ்கின் றனே
பன்னாட்டார் அறிவர் இந்தப் பாரதப் பெருமை யெல்லாம்
தொன்னாட்டுப் பெருமை யெல்லாந் தொகவாழும் பார தத்தே
இந்நாட்டார் எந்நாட்டார்க்கும் ஏற்றமே யுரைப்பர் என்றும் 31

வாழ்வியல் நூல்வ குத்தார் வையத்து மாலகன்றூர்
பாழாகும் ஞானங் கல்லார் பண்பிலே சிறந்து நின்றூர்
ஊழியல் அறிந்தார் சீவன் உற்றிடுந் தன்மை யோர்ந்தே
தாழ்விலா ஞானம் பெற்றே தன்னைத்தான் அறிந்தார் நன்றே 32

வேதாந்த சித்தாந் தத்தின் விளக்கமே பார தந்தான்
கீதாந்த கீர்த்தி யெல்லாங் கிளைக்குமே பார தத்தில்
போதாந்த மேலோன் என்றே புகலுவர் பார தத்தோர்
நாதாந்தன் அடியைப் போற்றும் நலமெல்லாம் பார தத்தே 33

பாரதப் பெருமை யெல்லாம் பாரோர்க்கே யுரைக்க வேண்டின்
பாரதம் போன்ற தோர் நூல் பாரிலே பகர வேண்டும்
சாரதி கண்ணன் கீதைச் சரித்திரம் படைத்த நாடே
பாரதப் பெருமை நன்றே பகருதல் சாலும் ஒன்றே. 34

## ஆற்றுப்படலம்

திருமிகு ராக வேந்திரர் த்யானமே செய்த தாகும்
ஒருபெரும் ஆருந் துங்க பத்திரை நதிதான் இன்றும்
வருகின்ற பக்தர்க் கெல்லாம் வள்ளலாய் வரமளித்தே
தருகின்ற தீர்த்தம் துங்க பத்திரைத் தீர்த்த மாமே. 1

சென்ற யுகத்திலுஞ் சிறப்பினைப் பெற்றது
மன்ற வுலகினில் மாபெரு மிந்நதி
அன்று பிரகலா தாழ்வார் அறிந்துமே
நன்று மாமகம் செய்ததிந் நல்லிடம் 2

கலியு கத்தின் தன்மையைக் கண்டுமே
வலிவு டையநற் சங்கு கர்ணரே
பொலிவ டையவே பூதல மென்றெணி
கலிம கிழ்கொளக் காணம கிழ்ந்தனர். 3

வடதிசைச் செலார் தென்திசை தான் செலார்
மடமையாகவே மக்களும் எண்ணுவர்
இடம தால் நற் சிறப்பும் உள்ளதோ
கடமை யாற்றுவர் கருணையின் பாலதே 4

அன்றியும் ஒரு காரணம் உண்டது
நன்றி யில்கலி யுகமுமே நண்ணிலை
கொன்று மாள்வர் கொள்கையில் மக்களே
பொன்றி டாதவர்க் கறிவு புகட்டவே. 5

உயர்வும் தாழ்வும் உலகவர்க் காகுமோ
மயர்வ டைபவர் மண்ணினில் மாந்தரே
அயர்வி லாதவர் அருள்பெற வேண்டிநற்
றயவி லைவண் தங்கினர் ராகவர். 6

வடக்கின் கண்ணதாம் வாழுங்கயி லையின்
இடத்தில் நடந்தது ஈசன் திருமணம்
நடத்தல் காணவே நண்ணிய துலகெலாம்
தடத்தின் பிற்செல உலகமுந் தாழ்ந்ததே. 7

தாழும் உலகைத் தன்னிகர் தானென
வாழும் ஈசன், வளம்பெறு நற்றமிழ்
சூழும் அகத்தியற் சொல்லிப் பொதியினில்
வாழும் வகையை வகுத்தரைத் தானே. 8

உயர்க யிலையே ஈசன் உறைவிடம்
மயர்வ கற்றியே மண்ணினில் மாந்தரே
உயர்வி டத்தெவர் அடைபவர் உறுதியைச்
செயிரற நன்கு தேர்ந்திட வேண் டினர். 9

ஆழ்ந்திடுங் கடலதே அரியி னமை விடம்
தாழ் ந்திடாரெவரவர் தண்ணளி மாந்தரே
வாழ்ந்திட வேண்டியே வையத் தார்க்கெனச்
சூழ்ந்திருந் தாரவர் சூழ்கட லலையிலே. 10

அலைக டல்சூழ் உலகவர் ஆயினும்
அலைவு றுமனம் பெற்றவ ராவரே
நிலைபெற்றிடுவரென் னெஞ்சினில் வாழ்பவர்
தலைவ ராவர் தண்ணளி மாந்தரே. 11

உயர்வும் தாழ்வும் உடையவர் இருவரும்
உயர்வும் தாழ்வும் உடையவர் மக்களே
உயர்வும் தாழ்வும் அகற்றிட வேண்டியே
உயர்வும் தாழ்விலா துறைவிடந் தேர்ந்தனர். 12

சமரச மில்லா மக்கள் சமரினில் அழிந்து போகாச்
சமரச மாக வாழ வமைந்த விந்நதியைத் தேர்ந்தே
சமரசக் கருத்தே யன்னுர் சந்ததம் உணர்த்த வேண்டி
சமரச ஞானி ராக வேந்திரர் வாழ்கின்ருரே. 13

இத்தகு ராகவேந்திரர் இசைபெறு ஞானி என்றும்
வித்தக தத்துவத்தை விளக்கிடத் தவஞ்செய் சித்த
சுத்தசத் துவனுய் இந்த துங்கபத்திரையின் கண்ணே
நித்தமும் உறைவான் என்ருல் நீள்புகழ் இயம்பற் பாற்ருே? 14

## நகரப்படலம்

கும்பகோணத்தின் சீரைக் கூறுதற் கெளிய தாமோ
அம்மவிந் நகர்தான் என்னே அமரர் வாழ் நகரை வெல்லும்
எம்மனோர்க் காகுங் கொல்லோ இயல்சாகிய மலையில் தோன்றி
தம்முடை மகளே யென்னுங் காவிரி தன்னுற் சூழ்ந்தே. 1

அழகுடை நகரா யிந்த அவனியில் சிறப்புற் ருேங்கி
கழனிகள் சூழப் பெற்ற காட்சியுங் கற்ப கங்கள்
பழவினை யாலே யிந்த பதியினில் வந்த தாமால்
உழவர்கள் வருந்தார் செல்வம் உற்றிட உயர்ந்த தம்மா! 2

அரியி னம்சமே யாகு மிந்நகர்
அரியின் தாளென வாகும் பாதளம்
தெரியின் நன்முடி பிரம்ம லோகமே
பரிவின் வாழ்பவள் பங்கயச் செல்வியே 3

அண்மை நாரணன் அவனின் நற்றுயில்
வெண்மை தீபமே விளங்க லக்குமி
உண்மை கட்டிடம் உறைவ தாயின
தன்மை போல்வன தயங்கு மிந்நகர் 4

பிரமன் அண்டத்தைப் படைக்கு முன்னமே
சிரமம் இன்றியே சிருட்டித் தானவன்
தருமம் வாழுமே தரணி தன்னிலே
கரும யோகமே காணு மிந்நகர். 5

இந்த நன்னர் இனிதி யற்றிட
அந்த பிரமனே அடைந்த தானமாய்
வந்த சொர்க்கமும் வரம்பி லண்டமும்
புந்தி யாலது புகல லாகுமோ. 6

குறளின் உருவினைக் கொண்ட நாரணன்
தரணி யளந்துமே தகர்க்க அண்டமும்
பிரம ளையினுர் பேசும் ஐயமே
தரணி யிந்நகர் தகர்க்கத் தீர்ந்தனன். 7

இந்த மாநகர் அரிவை மங்கையும்
சிந்து சுண்ணமுஞ் சிறந்த தூரியும்
வந்த சூரியன் வழுக்கி வீழ்ந்திட
மந்த மாகமேல் மதிலைக் கடந்தனன். 8

வேக மாகவே விளங்குங் காவிரி
மாக மென்னவே மண்ணில் பரவிட
ஏக கடலிடை இரண் டும் ஒன்றென
ஆகுங் கர்வமே அகத்தில் எண்ணியே. 9

பரந்த காவிரி பான்மை கண்டுமே
சிறந்த கடலிடைச் செல்ல கடலுமே
மறந்த செயலினை மனதில் எண்ணியே
அருந்தி ரைதை யடக்க அகத்தியன். 10

மலரின் செல்வியும் மற்றும் பிரமனும்
உலகைக் காக்கவே உறைய விந்நகர்
அலகில் செல்வமும் அந்தண் மாக்களும்
பலவளங்களும் பல்க வாழுமே. 11

இந்திரனவன் எய்த விந்நகர்
வந்த யானையின் வர்க்கங் கண்டுமே
நந்தம் இனமென நண்ண மேகமும்
அந்தத் தோகைகள் ஆட லாயின 12

பரமன் பாற்கடல் போன்ற நதியுமே
தரத்தின் மந்தர மலையுங் கோட்டையும்
உரத்தின் நாரணன் உறையும் லக்குமி
வரத்தை யளித்திடும் வளத்தை யுடையதே. 13

அணிகொள் இந்நகர் அருண னவன்
வனிதை உண்டிட வந்து புகுந்தனன்
துணிந்து புகுந்ததால் தூய காவலன்
துணிந்து நின்றவர் தொடையைத் துணித்தனன். 14

காலும் இன்றியே கதிரின் சாரதி
மேலுஞ் சிவப்புடன் மேவி னவன்
நாளுங் காப்பவர் நன்மை வேண்டிடும்
ஓலம் இன்னும் ஒழிய வில்லையே. 15

முக்கு, ணங்கொளு முத்து மாணிக்க
தக்க மரகதந் தகவின் வீடுகள்
சொர்க்கலோகஞ்சேர் தூய பாதமே
மிக்க செல்வமும் மேன்மை யோருக்கே. 16

மக்க ளில்சிலர் மமதை கொண்டிடின்
தக்க வரிலர் தாமும் அழிவரே
ஒக்குங் கருத்தையே யுணர்த்த வேண்டியே
முக்குணக் கற்கள் முறைய மைத்தனர். 17

அந்த நகரத்தின் மாட மாளிகை
வந்து பார்த்தனர் வையத் தோரெல்லாம்
அந்தண் ஆடியில் அரியின் தோற்றமே
முந்தி யளித்தன முறையின் பிம்பமே. 18

நாலு வேதமே நகர வாயில்கள்
ஆலு நாற்புறம் அகழி மதில்களும்
ஏலு சக்கரம்இனித மர்ந்திட
போலும் உள்ளது புரிய நன்மையே. 19

அரணம் போல்வதாய் அமைந்த விந்நகர்
கரணம் ஆதியாய் கடந்த ஞானிபோல்
மரணம் போக்குமிம் மண்ணில் மாநகர்
சரணம் அடைபவர்ச் சார்ந்து காக்குமே 20

நகரின் மத்தியில் கூடும் வீதிகள்
சகரம் என்னவே சார்ந்த மைந்தன
சிகர மாமலை சேர்ந்த யானைகள்
பகரும் அலையெனப் பாயுங் குதிரையே. 21

நந்தும் லோகத்தை நாளுஞ் சமைத்திட
புந்தி தன்னிலே புகழை யெண்ணியே
இந்த மாநகர் இயற்றும் பிரமனே
அந்த கலைகளையவன் மறந்தனன். 22

ஓத நீர்தனில் ஒளிக்கு மலைகளே
மாதர் அவயவம் மதிப்ப தாயின
ஏதங் கொண்டுமே யிருந்த மாந்தரே
காதல் காட்சியுங் காண வமைந்தன. 23

பறக்கும் பர்வதம் பாரை யழிக்கவே
உரத்தின் வச்சிரங் கொண்டு விந்திரன்
பறக்கும் சிறகினைப் பாரில் அழித்திட
கரத்தல் எண்ணியே கடலுள் ஒளித்தன. 24

வாடுந் தாமரை வனிதை முகமெனல்
கூடு மோவது குறையு முள்ளதே
ஆடும் அழகுதான் அதனின் உள்ளதோ
நாடி ஒப்பிடல் நவைய தாகுமே. 25

நந்தம் புலவர்கள் நாடி மலையினை
அந்த நகரில்வாழ் அரிவை யழகெனல்
எந்த வகையினில் ஏற்றுக் கூறினர்
நந்த லேயது நன்மை யில்லையே! 26

ஒன்றின் அழகினை யோர்ந்த புலவர்கள்
குன்றின் ஒப்பன கூறல் ஒல்லுமோ
அன்றி யழகெலாம் அமைவதாகுமோ
நன்று நன்றெனு நாண முடையவோ. 27

கெண்டை மீன்கணே கேழென் புலவர்கள்
கொண்ட வுவமையில் குறையும் உள்ளதே
அண்டை மனிதரை யழகாய்ப் பார்த்திடல்
கெண்டை மீனுக்குக் கிளத்த லாகுமோ? 28

அல்லி மலர்களே யாகுங் கண்களே
புல்லென் அறிவினல் புலவர் கூறினர்
சில்லென் மகிழ்ச்சியால் சிரித்த பார்வையும்
அல்லி மலருக்கே யாகு மோசொலீர். 29

தாம ரையெனுந் தடமென் கண்களே
நாம வர்க்குமே நவில்வ தாயினும்
காம வுணர்வொடு காணும் பார்வையும்
ஆம தற்குந்தான் ஆகு மோசொலீர்? 30

அம்பு போல்வன வாகுங் கண்களே
எம்ம னோர்களும் இயம்பிச் சென்றனர்
அம்பு பாய்ந்திடின் ஆகு ரத்தமே!
அம்ம வவள்கணால் ஆகுஞ் சித்தமே! 31

மாக மேல் மழை முகிலும் வந்திட
வாகு வாய்மயில் வனப்பின் ஆடுமே
தோகை மயிலெனச் சொல்லின் வனிதையர்
ஆகம் எண்ணினால் அதனின் உள்ளதோ. 32

இருளை யொத்தது இவர்கள் கூந்தலே
மருளி னாலவர் மதிக்க லாயினர்
பெருமை சந்திர பிம்ப மேமுக
வருகை யாலிருள் வாழு மோசொலீர். 33

சந்தி ரன்தனைச் சாரு முகமென
அந்த நன்னகர்க் கரிவை கூறிடின்
நந்தம் வனிதையர் நயன மொழியெல்லாம்
சந்தி ரன்தனைச் சாரு மோசொலீர். 34

உவமை யற்றநல் லுருவ மாதர்கள்
தவங்கி டந்துமே தோன்ற நகரிடை
நவமணி யின்நற் சத்தி தோற்றமும்
புவியின் மாந்தர்க்குப் புதுமை யில்லையே. 35

ஆக பாடல் தொகை – 137

# 2. இல்லற காண்டம்

## குலமுறை கிளத்துப் படலம்

### ஸ்ரீஇராகவேந்திரர் துதி

உகமெலாந் தோன்றி உவந்தருள் செய்யும் உத்தம ராகவேந்திரரே
சகமெலாந் தழைக்க சமரசம் ஓங்க சந்ததம் வாழ்கின்ற நல்லோர்
அகமெலாம் தோன்றி அருள்மழை பொழியும் அற்புதந் தனைய றிந்தே
இகமெலாம் மக்கள் இனிதருள் பெறவுன் இணையடி யேத்துகின்றேனே
1

அன்னையும் பிதாவே என்ன அவர்க்கு நற் குருராசர்தாம்
நன்னய மாக வேதான் நற்கல்வி கொடுத்த பின்றை
தன்னுடை தந்தை வார்த்தை தலைமேற் கொள் தன்மையாலே
பின்வந்த வேங்கடற்குப் பிதாவின் சொல் நினைவிற் கொண்டார் 2

திம்மண்ண பட்டர் சொன்னார் திருமிகு வேங்கடற்கு
இம்மண்ணில் தந்தை யாக இருந்துநீ உதவ வேண்டும்
அம்மவவ் வாச கந்தான் அவர் காதில் ஒலித்த தன்னார்
செம்மையாய் திருமணத்தைச் செய்திடச் சித்தங் கொண்டார் 3

உற்றாரும் உறவின் மாரும் ஒருங்குடன் அழைத்தே யன்னார்
கற்றாரும் வியக்கும் வண்ணம் கற்றான் நற் கலைகளெல்லாம்
பெற்றேன் யான் பேறு என்னே பிதாவின் சொற் கடமை யாலே
அற்றார்க்கு உதவச் செல்வப் பேரின்பம் யானே பெற்றேன் 4

நாலு யுகத்திலும் நாரண னேயவன்
கால மறிந்துமே காக்குமக் காவலன்
ஏலு மிந்த வியல்பினை எண்ணியே
வால றிவினன் வந்துமே தோன்றினன். 5

வேறு

தாமரைக் கண்ணனின் தனியுல கும்மதில்
நாமகள் கணவனின் நல்வழி பாட்டினில்
தாமத மானதே சங்கு கர்ணனால்
நாமதன் பெருமையை நவிலவும் ஆவதோ? 6

திருமாலின் பூசனையைத் திறமுடனே நடத்தியென்றும்
பெருமானின் பேரருளைப் பெறுதற்கே வணங்குகின்றோம்
மருவாரும் மலர்கொணரத் தாழ்த்தியது மதியாமோ
பெருமானின் பூசனைக்கே பேரிடர் நீ விளைத்தாயே 7

வேறு

என்று பிரமனே இன்னல் கொண்டுமே
நன்று நன்றல நாம் செய் பூசையே
என்று கருதியே சங்கு கர்ணனை
ஒன்று கூறவே உறுதி கொண்டனன். 8

துன்று பாவமே தொடரும் உண்மையே
சென்று கழித்திடின் செகத்தின் நன்றதாம்
என்று கூறியே அரக்கர் கூட்டத்தில்
சென்று பிறந்திடச் சேறி யென்றனன் 9

ஆற்றல் பிரமனே அளித்த சாபத்தால்
மாற்றம் மொழியலன் மனத்தில் எண்ணியே
காற்றின் கடவுளைக் கருதி வணங்கினன்
மாற்றங் கொள்ளவே மனதில் எண்ணினான் 10

காற்றின் கடவுளே கடுகி வந்தவன்
சீற்றங் கொண்டது சிறந்த தேயென
மாற்றம் மொழிந்தனன் மறுக ணத்திலே
ஆற்றல் நாரணன் ஆற்றல் கூறினான். 11

மூலகாரணன் முழுது ணர்ந்தவன்
காலங் கண்டுமே கருத்தில் கொண்டனன்
சீல மேகெடச் செய்த தேயவன்
கோலு மிச்செயல் கொள்கைத் தேயெனா 12

புவியின் துன்பமே போக்கும் வானவன்
அவியுணவினின் ஆக்க மேமிகத்
தவசி தோன்றவும் தருமம் காக்கவும்
அவனி காவலன் அரிநி னைந்தனன் 13

சதுர்மு கன்தனை யீன்ற வானவன்
பதும நாபனாம் பாற்க டலுளோன்
இதுத ருணமென் றெண்ணி தன்னுளே
எது நினையினு மின்னல் தீருமே. 14

தொண்டு செய்யுமுன் தூய்மை எண்ணியே
கண்டு வந்தனன் கருத்தில் கொண்டனன்
பண்டு நின்றுமே பரம னேயவன்
விண்டு வெண்ணினான் விளைந்த நன்மையே. 15

வாயு வானவன் வந்து கூறலும்
ஆயு மவ்வுரைப் பொருளும் எண்ணியே
தேயு மனமுடைச் சங்கு கர்ணனே
ஏயு மே நமக் கென்று சிந்தியா 16

வேறு

பிரமனவன் சாபத்தைக் கேட்ட போதே
பிரமித்து நின்றெதுவும் பேசா னாகி
சிரந்தாழ்த்திச் சினங்கொண்ட பிரமன் முன்னே
சிந்தித்த சங்குகர்ணன் நிலையைக் கண்டே 17
உரம் சார்ந்த நெஞ்சத்தில் உறுதி கொள்வாய்
உற்றவிந்த சாபத்தால் சங்கு கர்ணா
திறம்சார்ந்த நன்மை பல நினக்கே சாரும்
தேயம் எலாம் நின்பெயரால் திருந்தி வாழும்

ஏலவே யெம்ம னோர்க்கொரு நாள்வரை
ஞால மீதினில் நன்மையைச் செய்யவே
சாபமே நாலுமா முகன் நாடிய
சாலவே சங்கு கர்ணற்குச் சாற்றினான். 18

சங்கு சக்கரம் கொண்டவவ் வண்ணலின்
சங்கு போன்றிரு கர்ணங்கள் பெற்றவன்
சங்கு கர்ணனாம் நாமமும் பெற்றுளான்
சங்கு கர்ணனவ் வண்ணலின் அம்சமே. 19

சதுர்மு கன்றனால் சாரும் சாபமே
சதுர்யு கம்மது சார்ந்த நாள்வரை
சதுர் யுகத்திலும் சங்கு கர்ணனே
சதுர் விளங்கவே சனிக்க லாயினான் 20

## வேறு

நலம்ப யக்கினுங் கிருதய நல்லுகம்
இலந்தொ றும்மவ் விரணிய மன்பெயர்
கலம் வி ளைத்த கடவுட் பெயரொடு
நலம் வி ளைந்திட நாரதர் தோன்றியே 21

பொலன்நி றங்கொளும் பொன்னவ னேயவன்
இலந்தி ருந்த இல்லவள் லீலையின்
நலம்வி ளைந்திட நாரதர் வந்தனர்
பலம்வி ளைந்திட பரமனைப் பாடினர். 22

என்னே சங்கு கர்ணர் கருவிலே
அன்னை லீலா வதியே யழைக்க
நன்னய மான நல்லவ தாரம்
பின்னை யாழ்வார் பிரக லாதரே 23

### வேறு

திரேதாயுகத்திலும் தேர்ந்தெடுத்தனர்
திறலி ராவணன் தம்பி யாகவே
விரதம் பூண்ட வீடண னாய்நல்
சரதம் கொண்டனர் சங்கு கர்ணரே 24

### வேறு

தொடர்ந்திடும் அவதா ரந்தான் துவாபர யுகத்த தாகும்
நடந்தவவ் வவதா ரந்தான் நானிலஞ் சிறப்ப தற்கே
படர் கெடப் பாக லீக வரசனாய்ப் பாரில் தோன்றி
இடர்களைந் தென்றும் மக்கள் இன்பொடு வாழ்ந்த தற்பின் 25

### வேறு

அறந்தி றம்புமிக் கலியுக மதனில்
சிறந்த வவரின் சீர்த்தி விளங்கப்
பிறந்தார் வியாச ராசரின் பெயராய்ச்
சிறந்த வரசர் சீர்த்தி செப்புவாம். 26

ஆக பாடல் தொகை - 163

# ஸ்ரீவியாச ராசர் திருவவதாரம்

கருநாடக மென்றே பெயர் தந்தார் புகழ் கொண்டார்
ஒரு நாடது போலேயுல குண்டோநலம் கொண்டே
திருநாடென மேலோரதைச் செப்பும் திறத்தாலே
பெருநாடெனப் பேசும் புகழ் தருநாடது தாமே. 1

வேறு

மன்னும் மைசூர் மாநில மதுவே மகிழ் கொள்ளும்
பொன்னி யாறு புதுப்புனல் மிகவே புகழு டைத்தாம்
பன்னூர் என்றே பழம் பெரு நல்ல பதி தன்னை
என்நா பாடும் இயல்புடைத் தோவதன் எழில் கண்டே 2

வேறு

அத்திருப் பதியில் வாழும் அந்தணர் குலத்தின் மேலோர்
உத்தமக் குடியில் தோன்றி உயர் குணம் அமையப் பெற்ற
பத்தரை மாற்றுத் தங்கம் பார் புகழ் ராமா சாரி
இத்தரை போற்றுஞ் சீலர் எழில் தனைப் போற்றும் நாடே 3

மெத்தகு சீர்மை யுள்ள மேன்மையாம் குலத்தில் வந்த
சித்தமும் அழகி தான சீதையாம் பேரும் பெற்ற
உத்தம குணத்தளாய ஒருத்தியை மணந்தே யன்னார்
இத்தரை புகழு கின்ற இல்லற வாழ்வைக் கொண்டார் 4

இல்லறந் தனையே இனிது நடாத்திச்
சொல்லற மனைத் துஞ் சோர்வில தாகப்
பல்லற வாழ்வால் பாரோர் மகிழ
நல்லற வாழ்வை நலமுடன் செய்தார் 5

வேறு

இப்படி வாழு நாளில் இராம சாரியரும் ஓர்நாள் 6
இப்புவி வாழ்வை நீத்தே இறைவன தடியைச்சார்ந்தார்
அப்படியான தாலே அயலவர் கூட லுற்றார்
ஒப்புடன் உடன் கட் டைக்கே ஒருப்பட்டாள் சீதை தானும்

பெரியவர் ஆசிக்காகப் பிரமண்ய தீர்த்தரைக்கண்டே
உரியவக் காலங் கண்ணிக் காவிரிக் கரையில் செய்தி
தெரிவியா திருந்தே யன்னார் திருவடி வீழ்ந்த போழ்தே
பரிவினால் கணவரோடு பல்லாண்டு வாழ்க வென்றார் 7

கணவர்தான் இறந்த செய்தி கதறியே கூற லுற்றாள்
கணந்துணை பிரம தீர்த்தர் கண்மூடி யிருந்த பின்றை
உணர்ந்துமே சொல்லு கின்றார் உயர்கலை மாதின் வாக்கே
பிணந்தனைக் காணுதற்கே பிரமதீர்த் தருமே வந்தார். 8

பிரம தீர்த்தரையே கண்ட பிறரெலாந் தடுக்க லுற்றார்
பிரமர்க்குச் சமமாம் நீங்கள் பிணந்தனைக் காண லாகா
உரைத்தவவ் வாக்கைக் கேட்டே உயர்குணம் மனத்திற் கொண்டு
தரத்தினில் தன்னை யெண்ணி தன் வந்திரி மந்த்ரம் தன்னை 9

தானதை உள்ளத் தெண்ணி தகுமுறை உச்ச ரித்தே
வானவர் போற்றும் வண்ணம் வான்நதி நீரே யென்ன
கானகத் திருந்து வந்த கமண்டல நீரைத் தானே
நானவார் குழலி சொல்லே நலமுறத் தெளித்தார் நன்றே 10

பிணத்தின் மேற் பட்ட போதே பேர் பெறும் ராமா சாரி
கணத்தினின் கண் திறந்தே கண்டனன் காட்சி யெல்லாம்
உணர்ந்தனன் உறக்கம் நீங்கி யுறும் பிரம்ம தீர்த்தர் முன்னே
கணவனும் தானும் அன்னார் காலினில் வணங்கி வீழ்ந்தார். 11

நீங்கிடும் குறைகள் உம்மை நீரிரு மகவைப் பெற்றே
ஓங்குவீர் புதல்வ ராலே உயர்ந்தவம் மூத்தோன் தன்னை
ஈங்கெமக் காக நீவிர் ஈந்திட வேண்டு மென்னப்
பாங்குடன் அவர்கள் தானும் பதிலொன் றும் பேசா ராகி 12

நன்றென ஏற்றார் ஆனால் நாங்களோ வயதில் மூத்தோம்
என்றவர் கூறினார்கள் இறந்த நீர் எழுந்த பின்றை
நன்றென நடக்கு மெல்லாம் நடவாத தொன்றும் இல்லை
அன்றவர் சொன்ன தேபோல் அனைத்துமே நடந்த தம்மா! 13

ஆங்கவன் பிறக்கு முன்னே அருகிலே இருந்த பேர்கள
தீங்கற உலக மெல்லாந் திகழ்ந்திட வேண்டுமென்றே
தாங்கியே தங்கத் தட்டில் தனையனை ஏந்தி வந்தார்
ஓங்குமப் புதல்வன் அன்றோ உயர் சங்குகர்ன ராவார் 14

அப்பூரென் றழைக்கும் அந்த அழகிய ஊரின் பக்கம்
செப்பரும் முனிவர் வாழும் சிறந்த நற் குகைதான் ஒன்றே
ஒப்பரும் புருடோத் தும்ம உயர்தனிக் குகை யிடத்தே
செப்பிய படியே சென்று சேர்த்தனர் குழந்தை தன்னை 15

## வேறு

மைந்த னின்புகழ் மனதில் கொண்டுமே
வந்த குழந்தைபேர் வியாச தீர்த்தராய்
பந்த மேமிகப் பார்த்து வைத்தனர்
அந்த நாளின் கோள் ஆட்சி பார்த்துமே 16

## வேறு

அல்லவை கடிய வந்தார்க் ககவையும் ஐந்தே யாக
நல்லதாம் ஓரை கண்டு நானிலம் போற்றும் வண்ணம்
சொல்லுப நயனம் செய்தார் சுகம் பல வெய்தும் என்றே
பல்லுயிர் காக்க வந்த பரமனின் பக்குவத்தால் 17

ஐந்துட னிரண்டு மாகும் அகவைதான் ஆன தாலே
மைந்தனின் பக்குவத்தை மனத்தினால் ஊன்றிப் பார்த்தே
சிந்தனை செய்யும் போது சிறப்புறு சந்யா சத்தில்
பந்தனை வைத்த வந்த பரிவினைப் பார்த்தார் நன்றே. 18

தோன்றிய தவர்க்கு நன்றாந் துறவற வாழ்க்கை தானும்
ஊன்றிய உள்ளத் தன்றே உயர்குறிக் கோளினாலே
ஏன்றிடும் என்றே எண்ணி யாவர்க்கு மேல தாய
சான்றவர் அவரே யாக சந்யாசம் தனைக் கொடுத்தார் 19

துறவறந் தனையே கொண்டு தூய நல் முனிவ ராகி
திறமுடன் வாழு நாளில் திருமுகு பாக லின் கண்
உ ரமுடன் கலைகள் கற்றால் உயர்ந்தவ ராவ ரென்றே
அறமுடை பாத ராயர் அவரிடம் அனுப்பி வைத்தார் 20

பன்னிரண்டாண்டு காலம் பகருமக் குருகு லத்தில்
பன்னரு வேத பாடம் பகர்ந்தனர் பாத ராயர்
முன்னுறு கல்வி எல்லாம் முளைத்தன முயற்சி யாலே
கண்ணிரு மணியே யென்ன கலைகளைக் காத்து வந்தார் 21

ஆண்டுகள் பன்னிர ண்டில் அருமையாய் வியாச தீர்த்தர்
வேண்டுநற் கலைகளெல்லாம் விருப்புடன் கற்ற பின்றை
காண்டகு பிரம்ம தீர்த்தர் கருணையை நாடி யேதான்
மீண்டுமப் புருடோத் தும்ம மேன்மையாம் குகைக்கே வந்தார் 22

பெருந்தவ சிரேட்ட ரான பிரம்மண்ய தீர்த்த ராலே
உறுந்தவ வாழ்க்கை கொண்டார் உயர்வியாச தீர்த்த ராகி
இருந்தவ மெல்லாம் என்னே தவம் செய்த(து) இவரைச் சார்ந்தே
அருந்தவ சங்கு கர்ணர் அரியினல் அம்சம் ஆமே 23

தவமுடை யார்க்கே நல்ல தவமதாந் தத்து வத்தின்
தவச்சிறு வயதில் ஞானந் தலைப்பட்ட தன்மை யாலே
பவமறுத் துலகம் நல்ல பாங்குடன் திகழ வேண்டி
அவமறுத்தவர்தான் நல்ல அருள் ஞானம் பெற்று யர்ந்தார் 24

பேசுதற் கரிய ரான பிரம்மண்ய தீர்த்த ராவார்
பாசமாம் உலகின் உள்ள பந்தத்தை யறுத்த தாலே
வாசுதே வன்றன் மேலாம் வைகுந்த வாழ்வை யெண்ணி
தூசறுத் துலகில் நல்ல தூயவன் அடியைச் சார்ந்தார். 25

பன்னரு வியாச தீர்த்தர் பரஞானம் பெற்ற தாலே
அன்னவர் காத்து வந்த அருமையாம் வித்யா பீடம்
நன்னய மாக வந்த நற்பீடத் தலைமை யேற்றூர்
சொன்னயங் கொண்டே நல்ல சுருதிகள் இயற்ற லானார் 26

## வேறு

கற்றாரிவர் கல்வியது கரையற்றது கண்டே
உற்றார் பெருங்கல்வியது உடையார் பலர் நாடி
பெற்றேம்பல நூலேயதைப் பெறுவீரெனப் பேச
லுற்றார்பல ஊரும் பல நாடுந்தம தென்றே 27

எற்றேயிவர் என்னேகலை என்றே சிலர் ஏசி
சற்றே எதிர் நில்லும் எனச் சாற்றியழை வாதில்
உற்றே சில உரைத்தாரிவர் உரையின் எதிர் ஆற்றா
தற்றேபலர் அகன்றாரெனின் ஆற்றல் அழ(கு) என்னே 28

## வேறு

பன்னிரண்டாண்டுகல்வி பயின்றவப் பயிற்சி யாலும்
தொன்மையாம் பிறவி தொட்டே தொடர்தவத் தொடர்ச்சி யாலும்
புன்மையாங் கல்வி கொண்ட புறமதத் தவரை யெல்லாம்
வன்மையாய் வாதம் செய்து வழக்கினில் வெற்றி பெற்றார். 29

இன்னவாறொழுகும் காலை இவர் புகழ் ஓங்கிற்றம்மா
நன்னய மில்லா தோரும் நாட்டத்திற் கொள்ளும் வண்ணம்
தன்னுடைத்தவத்தினாலே தவநெறி யொழுக்க மாகும்
அன்னதன் மையதே யாக அற்புதம் பலசெய்தாரே 30

திருப்பதி களிலே யொன்று சிவகாஞ்சி யாகு மங்கே
இருப்பதற் கிசைந்த வியாச தீர்த்தரைத் தீர்க்க வேண்டின்
தருக்கம தாலே யாகா வெனத்தகு காலம் பார்த்தே
ஒருத்தனின் உள்ளந் தன்னில் உற்றிடும் சதியீ தென்னே ! 31

அஞ்சன நிறத்தார்க் கென்றே வமைத்தவப் படையல் தன்னில்
நஞ்சினைச் சேர்த்தே யன்னான் நல்குவ திவர்க்கென் றெண்ணி
வஞ்சனை யாலே வேறி யாவரும் அறியா வண் ணம்
ீல நிறுத்தியன்று நிவேதன மமைத்தான் இப்பால் 32

தன்னெஞ்சை என்றும் பொய்யாய் பொய்த்தலே செய்யின் பாரில்
தன்னெஞ்சே சுடுமென்றெண்ணி சமயற் காரனும் தான் வந்தே
வன்னெஞ்சராலே வந்த படையலை உண்ண வேண்டா
என்னெஞ்சு பொறுக்குதில்லை எனவெடுத் துரைத்த பின்னும் 33

எந்தையாம் இறைவர்க் கென்றே இயைந்தவிப் படையல் தன்னை
சிந்தனை செய்ய வேண்டா சிறந்ததே யானே உண்பேன்
முந்தையே யிருந்து நட்டோர் முழுமனத் துடனே தந்தால்
நைந்திடார் நஞ்சும் உண்பர் நனி நாகரீகர் என்றார் 34

அஞ்சன நிறத்தான் உந்தன் அகத்திலே யிருப்பானாகில்
வஞ்சனை யாலே வந்த செயலெல்லாம் வன்மை குன்றும்
நஞ்சுதான் பெயக்கண் டன்னார் நலமுடன் உண்டமைந்தார்
தஞ்சமே அவன்தாள் அல்லால் தரணியில் வேறுண்டாமோ? 35

வேறு

கீதையில் கிருட்டினன் கிளந்த வாசகம்
போதனை செய்தனர் புரிந்து போற்றினர்
வாதனை போக்குவன் வாசு தேவனே
சாதனை செய்தனர் சங்கு கர்ணரே 36

வேறு

இன்னவா றெழுகு நாளில் இறையரு ளாலே யன்னார்
நன்னய மாக வேதான் நாட்பல சென்ற பின்னே
தன்னுடை யாசா னாகி தருமறை பாத ராயர்
அன்னவர் அருளை வேண்டி அவருடன் உறையு நாளில் 37

வித்தியா பீடத் துற்ற வியாச தீர்த்தரையே பார்த்து
நித்திய பூசை தானும் நீர்செயல் வேண்டும் என்றார்
இத்தகு பணிக்கு நீவிர் அன்றிவே றொருவரில்லை
அத்தகு பணியை யேற்றே அவர் வியாச ராயர் ஆனார் 38

தன்னுடை யாசான் செய்த தனிப் பெரும் பூசையைத்தான்
என்னிடமுள்ள அன்பால் எனக்கீந்த தாகு மென்றே
தன்னிடந்தகுதி யுண்டோ தகுமுறை பூச னைக்கே
என்றவர் உள்ளத் தெண்ணி இறைவனை வணங்க லுற்றார் 39

முன்னொரு காலந் தன்னில் முயற்சியால் பெற்ற செல்வம்
பின்னொரு நாளைக் கென்றே பேழையில் வைத்து விட்டார்
தன்னதாம் பொருள்ம றந்தோர் தானுணர்ந் தெடுத்த தேபோல்
முன்னுறு பேழை யெல்லாம் முறைமையாற் பார்த்து வந்தார் 40

அன்னதன் மையதே யாக ஆங்கொரு பேழை தானும்
தொன்மையாந் தோற்றங் கொண்ட தூய்மையாம் பேழை கண்டு
தன்னிரு கையினாலே தான் தொட்ட போதே யம்மா!
முன்பெறு தவத்தா லஃதேமுட் டின்றித் திறந்த தென்னே! 41

குழலூதுங் கண்ண னான கோலங்கொள் படிவந் தன்னை
அழலுறு மெழுகே யென்ன அன்பொடும் எடுத்த பின்றை
மழலையர் மனமே யென்ன மறுவிலா மனத்த ராகி
பழவினை யாலே வியாச ராயரே பாடுகின்றார். 42

அங்குள சால கிராமம் அனைத்தையும் எடுத்துத் தானே
இங்கித மாகத் தாள இசையுடன் இசையும் அன்பால்
பொங்குபே ருவகை யோடும் புங்கவன் திருவடிக்கே
தங்கு நன் மனத்த ராகித் தனைமறந் திசைக்க லுற்றார் 43

வேறு

உள்ளமும் சிலிர்த்தனர் உடலும் பூரித்தார்
விள்ளினர் விதிர்த்தனர்விண்டு நாமமே
கள்ளமில் உளத்தினில் கண்ணனே வந்தனர்
தள்ளரு நிலையில் தானிடங் கொண்டார் 44

பானுவின் கதிர்பாய்ந் தாற்போல் பரமனின் படிவ மீதே
தானுறு பார்வை தானும் தவத்தொடர் பாலே பார்த்தார்
வேணுகோ பாலர் வியாச ராயரே விரும்பி நேரே
காணுறு வண்ணம் அங்கே களிநடம் புரிய லுற்றார். 45

வேறு

என்னேயிவர் இசையோவல எழில் கண்ணனின் இசையே!
முன்னேயெவர் நடனமிவண் முகுந்தன் வரவின்றால்
பின்னேயிவர் பாடல்எனின் ஆடல்களும் யாரோ?
என்னேரிரு கண்ணாலிதைப் காண்பேனென வெண்ணி 46

வேறு

இன்பமாய்க் கண்ணன் ஆட்டம் இசைவுற ஆடும் போது
என்னிது முன்பு காணா முறையிதாம் என்றே யன்னார்
தன்னிரு கண்ணால் காணத் தலைப்பட்டார் பாத ராயர்
அன்னவர் பார்க்கும் போதே யவராடும் படிவமானார் 47

வேறு

பன்னு நல் கலையைக் கற்றூர் பரதத்தில் பாத ராயர்
தொன்மை நூல் முறைமை மாறி தோற்றம தளிப்ப தென்னே !
சின்மயமான மேலோர் சிறப்பினைத் தெரிக்க வேண்டி
பன்னரு படிமக் காட்சி பரமனின் செயலே யென்றார் 48

வேறு

நாளுக் குநாளிவர் நற்புக ழோங்கிட
சாளுக் கியரசன் தான் புகழுற்றே
வாளுக் கேயெதிர் வல்லமை யானிவர்
தாளுக் கே தலை தாழ்ந்து வைத்தானே 49

சாளுக் கியரசனின் சந்ததி விளங்கவும்
சாளுக்கியரசனி னாட்சிய தோங்கவும்
சாளுக்கியரசனின் சந்திர கிரியைச்
சாளுக்கியரசனால் சார்ந்தடைந் தாரே 50

விசய நகர சமஸ் தானத்தில்
விசய நகர சந்திர கிரியே
விசய நகரம் வெற்றி நகராய்
விசயம் விளங்க விசயம் செய் தாரே 51

பூபால னுடைய பூமி நல் பூமியே
பூபால னற்ற பூமியும் பூமியோ
பூபால நரசிம்ம பூபால னாதலால்
பூபால னாகிப் புகழ்வளர்த் தானே 52

ஆரணம் சொல்லும் அரியின் அம்சமே
மாரணம் போக்குவர் மாபெரும் யோகியே
காரண மூலனாம் சங்கு கர்ணனே
பூரண மாகப் புரிந்துகொண் டானே 53

நாரணன் துணையை வேண்டி நரசிம்ம பூபா லன்தான்
காரண மூலன்சங்கு கர்ணர்தான் இவரே யென்று
தோரண முதலா நாற்றித் தூய்மையாய் நகருண் டாக்கி
வாரண மேற்றி வியாச ராயரை வேண்டு கின்றார். 54

ஐயனே நாங்களெல்லாம் அரிநாமம் போற்று கின்றோம்
பொய்யனேன் செய்யும் பூசை போற்றுதற் குரிய தாமோ
கையனேன் பூசை யெல்லாம் கடைத் தேற வேண்டு மென்றே
உய்யவே நாங்க ளெல்லாம் உவந்தருள் செய்யும் என்றான் 55

நன்றநேம் குலம் விளங்க நற்குரு வாக வந்தீர்
இன்றெம தின்னல் போக்கி இனிதருள் செய்தீர் எங்கள்
துன்றிய வினைகள் யெல்லாம் துகளுற வேயொழிந்த
தென்றுரை செய்தே யன்னார் இன்னடி போற்றி செய்தான் 56

புரந்தர தாசர் வந்தார் புகழ்ந்திடு கனக தாசர்
நிரந்தர தாசர் நீவிர் நின்மல தாசர் ஆவிர்
சுரந்தநல் லமுதந் தானுந் தொல்லுல களிக்க வந்த
வரந்தரு தாசர் என்று வணங்கியே ஆசி பெற்றார் 57

## வேறு

வேங்கட நாதனை வேண்டிடின் வேங்கடம்
தீங்கட நாதன் திருப்பதி நாதனே
நாங்கட மற்றவன் நற்பூசை செய்திட
போங்கட பூபாலன் புலம்புகின் றானே 58

பூபாலன் நரசிம்மன் புலம்பலைக் கேட்டார்
பூபாலன் அன்னான் புகழ்தனைப் போற்றி
பூபாலன் திருப்பதி பூபாலன் கோயில்
பூபாலன் பூசைக்கே புறப்பட்டு போனார் 59

திருப்பதி செல்ல வேண்டின் தீவினை தீர வேண்டின்
ஒருப்பட்ட மனத்த ராகி உயர்ந்தவ ராக வேண்டின்
நெருப்பினில் பஞ்சு போலே நின்பவந் தொலைய வேண்டின்
பொருப்பினில் உள்ளான் பாதம் போற்றுதல் செய்வாய் நெஞ்சே 60

இகபர இன்பம் நல்கும் இறைவனைப் போற்றி செய்தே
பகவன்தன் நாமந் தன்னைப் பன்னிரண் டாண்டின் பின்னும்
உகப்புடன் உடையான் பாதம் உள்ளன்பால் போற்றி செய்ய
தகவுடை ஒருவ னுக்கே தகுமுறை உரைத்தார் இப்பால் 61

கோவிந்தன் நாமந் தன்னைக் குவலயம் போற்றிச் செய்ய
கோவிந்தன் திருவ டிக்கே குவிந்தநல் மனத்த ராகி
கோவிந்தன் அடியா ரோடும் கூடியே குலாவி நித்தம்
கோவிந்தன் புகழைப் பாடும் குறிப்பொடு சென்றார் பின்னும் 62

பாண்டுரங் கனின்பா தந்தான் பலப்பல பாடி யன்பால்
ஆண்டுகள் பலவே சென்ற அன்பரின் மரீஇய பின்னும்
காண்டகு விருப்பி னோடும் கண்ணனின் கருணை யோடும்
மீண்டவர் விசய நகர மேன்மையாம் நாடே வந்தார் 63

சகலமா கலைகள் போற்றும் சாளுக்கிய மன்ன னாவான்
சகலமா கலைகள் கற்ற சான்றவர் தனக்கு மேலாய்
சகலமா கலைகள் கற்ற சான்றவர் சார்வி னாலே
சகலமா கலை கற்றோர்க் கே சன்மானம் வழங்கி னானே 64

பூபால நரசிம்மன் பூமியை நன்கே
பூபால நரசிம்மன் புகழெய்த ஆண்டான்
பூபால நரசிம்மன் பூமி விடுத்தே
பூபால நரசிம்மன் புகழெய்தி னானே 65

வேறு

அன்னவர் சென்ற பின்னே அவனியை யாண்டோ ரெல்லாம்
என்னிவர் அருளை வேண்ட இவர்குல குருவாய்ச் சார்ந்தார்
முன்னவர் போன்றே யெல்லா முறைமையு நடந்த திப்பால்
கின் னர இசையே போன்ற கிருட்டின ராயர் வந்தார் 66

கிருட்டின தேவ ராயர் கீர்த்தியாய் நாட்டை யாண்டார்
கிருட்டின தேவ ராயர் கீர்த்தியைப் போற்றும் நாடே
கிருட்டின தேவ ராயர் கீர்த்தியை மிகவே செய்ய
கிருட்டின தேவ ராயர் கீர்த்தியில் திருட்டி வந்தே 67

திருட்டியால் மிகுமே பீடை கிருட்டின தேவ ராயர்
தெருட்டினர் சிறந்தோர் அஃது தீக்குக யோக மென்றே
வெருட்டவே உன்னை வந்து சேருமிக் காலந் தன்னில்
மருட்டிட வேண்டா நல்ல மதியினால் வெல்வோ மென்றார் 68

குகயோக பீடை யென்றே குலைந்தானே மன்னனாவான்
நகலாகும் பயப்ப டாதே நாமதை வெல்வோ மென்றே
இகலெலாம் வெல்லும் மேலாம் வியாசதீர்த் தரையே நாடி
நகரமும் நாடும் நல்க நல்வியாச ராய ரானார் 69

அரசராய் பொறுப்பை யேற்றல் அமாவாசை யாகுங் காலம்
அரசருக் கென்றே யந்த பீடையும் ஆவ தாலும்
அரசருக் கேயப் பீடை அப்போது வருவ தாலும்
முரசறைந் தன்றே நாட்டுப் பொறுப்பையும் ஏற்றார் நன்றே 70

வடவையாக் கினியே யென்ன வருங்குக யோக பீடை
படபடத் தருகே ராயர் பயந்துமே யிருக்கும் காலை
குடமதாய்த் திரண்ட தப்போ குகயோகப் பிழம்பு மன்னன்
இடமதாய் நோக்கி வந்த தியாவரும் பயந்தே நின்றார் 71

தடைசெய்வ தெங்கன் என்றே தவித்தன ரப்போ தேதன்
இடமதா யுள்ள காவி ஆடையை அதன்மே லிட்டார்
சடசட வென்றே யந்தப் பீடையும் வலியி ழந்தே
இடமது தெரியா தன்றே ஏகியே யழிந்த தம்மா! 72

அழிந்ததே குகயோ கந்தான் அப்பீடை தொலைந்த தாலே
இழிந்த யிப் பீடை போன்ற விளிவுனக் கெதுவு மில்லை
இழந்தயிவ் வரசின் ஆட்சி யேற்றுநீ நடத்தல் வேண்டும்
கழிந்ததை எண்ண வேண்டா கடவுளின் அருளுண் டாமே 73

என்றவற் கெடுத்தே கூறி யிதயத்தில் ஊக்கம் சேர்த்தே
நன்றென வாழ்த்துக் கூறி நலமுடன் அரசை நல்கி
சென்றனர் வியாச ராயர் சிறந்திடத் தேய மெல்லாம்
பொன்றிடாப் புகழ்மிக் கோங்கும் புண்ணிய நூல்கள் யாத்தார் 74

தருக்க தாண்டவமும் தன்னால் தரப்பட்ட நூலொன் றாகும்
பெருக்கவே மக்கள் பேசப் பெறுநியா யாம்ருதம் தந்தார்
அருக்கனின் ஒளியே யாகும் அதுவே சந்திரிகா யென்றன்
ஒருத்தனி நாவால் அந்நூல் ஒண் புகழ் செப்பற் பாற்றோ? 75

ஒன்பதின் பதிற்றி ரண்டில் ஒளிமய மாக வேண்டி
நன்பதி தேர்ந்தார் அந்த நதிதுங்க பத்திரா மத்தி
வன்திடல் ஒன்றில் பிருந்தா வனத்தராய் வாழு தற்கே
தன்முடி வதனைத் தானே தேர்ந்தவர் தலைவர் தாமே 76

உறம்பிக்கு அருகே யுள்ள அத்திருப் பதியிற் சென்றே
நம்பிக்கை யோடே யன்னார் நல்லடி போற்றி செய்யின்
கும்பிக்குக் குறைவு வாரா குவலயம் போற்ற வாழ்வார்
நம்பிக்கை யற்றால் இந்த நாட்டினில் நலமுண்டாமோ 77

வஞ்சனை யற்றோர் வாழ வன்னெஞ்சர் வலியி ழக்க
அஞ்சனை பெற்ற செல்வன் அவனையே துதித்து வாழ்ந்தார்
அஞ்சொடு இரண்டு நூறும் ஆறுப்பா லிரண்டு மாக
தஞ்சமே யவன்தாள் என்றே தரணியில் தாபித் தாரே 78

**ஆக பாடல் தொகை - 241**

ஸ்ரீ இராகவேந் திரர் திருவடிகளே சரணம்

## ஸ்ரீ இராகவேந்திரர் திரு அவதாரம்

கற்பகத் தருவே யென்ன காம தேனுவே யென்ன
சிற்பர மெனவே மேலாந் திருப்பதி தனிலே யுள்ளாய்
முற்பெறு புண்ணி யத்தால் மும்மையா முலகு போற் றும்
அற்புத விளையாட் டாக அவதரித் தாயே போற்றி 1

உத்தம ராக வேந்திரா உன் திருப்பாதம் போற்றி
மெத்தவுன் அவதா ரத்தின் மேன்மையைப் பாட வந்தேன்
சித்தமும் அழகி தாகச் சீரருள் பெற்றே யுய்ய
மெய்த்தலம் நாடி வந்தேன் மேன்மையாம் அருள்செய் வாயே 2

நானவார் குழலி யுந்தான் நான்முகன் தன்னோ டிந்த
வானவாறியங்கும் போதிவ் வையகந் தனையே கண்டு
போனமூன் றுகத்தின் ஆகும் பொருள்களும் கூறி நான்காம்
ஆனவி க் கலியுகத்தின் ஆம்பொருள் அறைவீர் என் றாள் 3

மும்மையா முகத்தின் அந்த முடிபொருள் கூறி யின் று
நம்மையே யுலகந் தானும் நலமுடன் போற் றா தான
செம்மையில் காரண ந்தான் தெரித்திட வேண்டும் பின்னுஞ்
செம்மையாங் காலந் தானும் செப்பிட வேண்டு மென் றாள் 4

உலகெலாம் படைத் துக் காத்தே உயர்ந்திடும் பெரியீர் உங்கள்
அலகிலாப் புகழை யெல்லாம் அகிலமே யறிய வில்லை
சிலரதிற் பிறந்தே தீய வாழ்க்கையும் கொண்டா ராகி
நிலவிய வுலகந் தன்னில் நிறுவிய கொள்கை யென்னே! 5

நீதியை யுரைப்ப தெங்கன் நின்மலன் அருளை நாடி
பேதமும் நீங்கி யேதான் பிதற்றலும் அற்றோ ராகி
வேதனை யற்றே யன்னார் வீட்டினைப் பெறுவ தெங்கன்?
காதலினாலே யாங்கே கலைமகள் கேட்க லுற் றாள் 6

சிறந்திடும் கிருத யுகத்தின் சீர்த்தியைக் கேட்பாய் பெண் ணே!
பிறந்திறந் துழல மாட்டார் பேரருள் துணையை நாடி
சிறந்திடும் வீடு பேற்றின் சீர்த்தியை அறிந்தோ ராகி
மறந்திடார் தெய்வந்தன்னை மதித் துமே போற்ற லானார் 7

குறைத்திட வேண்டும் இந்தக் குவலயப் பிறவி தானும்
நிறைத்திட வேண்டும் நெஞ்சில் நின்மலன் தாளே யென் றும்
உரத்தினில் ஊக்கம் சேர்த்தார் உயர்தவ வாழ்க்கை கொண்டார்
தரத்தினில் மேலாய்த் தம்மைத் தானறிந் துய்ந்தார் நன்றே. 8

அறந்திறம் பாத நல்ல அரசர்கள் ஆண்ட தாலே
திறமிகு த்ரேதாயுகத்தில் தீவினை யற்றோ ராகி
சிறந்த நல் யாகந் தன்னைச் செகந்தனில் போற்றச் செய்தார்
பிறந்த நற் பயனை யேதான் பெற்றனர் மக்களெல்லாம் 9

தொடர்ந்திடுந் துவா பரத்தில் தூய்மையாந் தானஞ் செய்தே
இடர்களைந் தென் றும் மக்கள் இன்பமாம் வாழ்க்கை கொண்டார்
அடைந்தனர் தவமும் தானம் ஆதலின் அவர்களு ந்தான்
தடையிலா தருள்பெற் றுய்ந்தார் தயாபரன் அடியை நாடி 10

முன்னதாய்ச் சென்ற மூன்று யுகத்தின் கண் மக்களெல்லாம்
தன்னையே யுணர்ந்த தாலே தலைவனைத் தானுணர்ந்தார்
நன்னய மில்லா திந்த நானிலம் கலியுகத்தில்
தன்னையே யுணரார் என்னே தலைவனை யுணர வில்லை 11

மக்களின் தீர்ப்பே யாங்கு மகேஸ்வரன் தீர்ப்ப தாகும்
தக்கவர் சொல்லே யென்றித் தரணியும் மதித்த தாலே
மிக்கவர் இல்லை மண்ணில் மாந்தரே மேன்மை பெற்றார்
அக்கருத் துடையோரெல்லாம் ஆண்டவன் இல்லை யென்றார் 12

ஒன்றுநான் கூறு கின்றேன் உரையை நீ ஊன்றிக் கேட்பாய்
இன்றுள்ளோர் நாளை யில்லை யென்றிடுங் கலியுகத்தில்
பொன்றிடும் பாவ மெல்லாம் புனிதனின் அடியைப் போற்றின்
குன்றென நிற்பர் ஆங்கே குவலயம் போற்ற வாழ்வார் 13

கடுந்தவம் வேண்டாம் அன்னார் கானகம் செல்ல வேண்டாம்
இடுந்தானம் தருமத் தோடு யாகங்கள் செய்ய வேண்டாம்
முடுகி பல்லூர்கள் சென்றே மூழ்குநல் தீர்த்தம் வேண்டாம்
கொடுமனம் அடங்கி னாலே கூடுநல் வீடு பேறே 14

காதலி னாலே நல்ல கலைகளை வளர்க்கும் மாதே
சாதனை பலவியற்றி சரித்திரம் படைக்க வேண்டி
போதனாய் உலகில் வந்தே பொய்யில் முப் பால் மொழிந்தேன்
ஆதலால் அவ்வை யாகி அறந்தனை யுரைத்தாய் என்னே 15

வேதனை மிக்க மாந்தர் வேடிக்கை கேட்பாய் பெண்ணே
போதனை யென்ப தெல்லாம்'பொருளின்றிப் போயொழிந்த
சாதனை யெல்லாம் அவர்க்குச் சகத்தொடு வாழ்வ தாமே
ஆதலால் அவர்க்கு வந்த அஞ்ஞானம் அகற்று வாயே 16

மனமெனும் கருவி ஒன்றை மாந்தர்கட் களித்து விட்டேன்
மனமற்ற உயிர்களைத்தான் மனிதனே அடிமை கொண்டான்
தனைப் பெற்ற தந்தை தாயர் தயவின்றேல் வாழோம் என்ற
நினைவின்றி வாழு கின்ற நிலைமைதான் கலியுகத்தே 17

விலங்குபோல் மனிதன் தானும் வீறுகொண் டெழுவராகில்
கலங்குமிவ் வுலக மெல்லாம் கடவுளின் நிலையு மஃதே
புலங்களும் பொறிகள் வேறு புதுக்குவர் புறமும் சென்றத்
தலங்களில் தங்கி வாழ்வர் தயாபரன் அருளை நாடார் 18

அன்னையும் பிதாவும் போன்றே அவ்வவக் காலந் தன்னில்
தன்னையே காக்க வல்லோன் தரணியில் ஒருவன் உண்டாம்
தன்னையே யுணரா ராகித் தருக்குறு வாரேல் அன்னார்
பின்னையே யழிவார் இந்த பிறப்பினில் இறப்பே துன்பம் 19

பன்னினான் பகவன் தானே பாரதி யதனைக் கேட்டு
இன்னதன் மையதா யுள்ள இக்கலியுகத்தை யானே
நன்னய மாக்கு வேனென் றெண்ணினாள் உலகில் வந்தே
என்னுடை யாற்ற லாலே இயற்றுவன் நீதி யென்றாள் 20

கம்பன்நற் காளி தாசன் கவிஒட்டக் கூத்தன் என்று
இம்பர்வான் புகழ்பெற் றுள்ள இன்கவி வாண ராக
அம்புவி மக்கள் போற்றப் பாரதி அவளே வந்தாள்
நம்பிக்கை பிறக்க வில்லை நானிலத் தன்மை யென்னே 21

பாரதிதானும் அந்தப் பகவனும் புரிந்த செய்கை
சாரதி கண்ணன் தானே கண்டனன் காட்சி யெல்லாம்
நாரணன் கேட்க வேதான் நாமிதைக் கூறுவோமே
பாரிடம் நடந்த செய்தி பகர்ந்தனர் பரமனுக்கே 22

நன்று நன்றுங்கள் செய்கை நானிலம் சிறக்க வேண்டி
துன்றிடும் வினைகள் தீரத் துரிசறுத் துலகம் உய்ய
மன்றினில் ஆடும் கூத்தன் மதலையாய் உலகில் உள்ள
குன்றினில் உள்ள வேற்கைக் குமரன் தன்செயலைக் கேட்பாய் 23

அன்றியே ஆதி சக்தி ஆமிவர் மூவராலே
துன்றிடும் பாவந் தீரத் தொன்மையாம் உலகம் உய்ய
நன்றென அவர்கள் செய்த நலந்தனைக் கேட்பீராகில்
பொன்றிடும் பாவமெல்லாம் பூமியில் புகழுண்டாமே 24

சங்கரன் அவனே யாதி சங்கரன் ஆக வந்தான்
சங்கையேன் தமிழாம் ஞான சம்பந் தன் முருக னாவான்
அங்கவன் தானே கீரற் கருள்செய வந்தான் என்று
பொங்குபே ரன்பினோடு புயல்வணன் புகல லுற்றான் 25

பதுமத்தில் தோன்றி யென்றன் பாங்கமை பிள்ளாய் கேளாய்
இது நல்ல தருணம் உன்றன் இச்சையின் உலகம் சென்று
புதுயுகம் அமைய வேண்டிப் பொய்யில் முப்பால் மொழிந்தாய்
அதுசரி யென்றார் ஆனால் அதன்படி நடந்தார் யாரே? 26

விரிசடைக் கடவுள் அன்னோன் வியப்புறு விளையாட்டைக் கேள்
பரிந்துமே பக்தர்க் காகப் பலப்பல வேடங் கொண்டான்
திருந்துவர் மக்கள் என்றே சிறுதொழில் கொண்டு மேலாந்
தரமதை கருத்தில் கொள்ளாத் தண்ணளி தனையே கேட்பாய் 27

பிட்டுக்கு மண்சுமந்தான் பிரம்படி யேற்றான் மேன்மை
விட்டுநல் விறகை விற்றான் விளையாட்டை விரும்பி யுள்ளம்
பட்டதோ தொழில் மேம் பாடு பாரினில் மக்க ளுக்கே
சட்டத்தினாலோ அன்னார் சமரச வாழ்வைக் கொள்வார் 28

கடமைதான் கருத்தில் கொண்டால் கட்டுடன் நடப்பர் அன்னார்
உடமையை உள்ளத் தெண்ணி உகப்பிலாச் செயல்செய்வாரே
மடமையை மாற்ற வல்ல மன்னனும் மதியிழந்தே
திடமுடைக் கொள்கை யின்றித் திரட்டுவன் பொருளை நாடி 29

மக்களின் ஆட்சி யென்றே மாநிலம் பரவி யெல்லா
மக்களும் மதியிழந்தே மதித்தனர் பொருள் தன்னையே
தக்கநல் தேர்தல் என்றே தரணியில் நடக்கும் அஃது
தக்கதோ மக்க ளெல்லாம் தவித்தனர் தரணி யெங்கும் 30

அழுக்காறு மிஞ்சி விட்ட அவனியின் அவலங் கேட்பாய்
ஒழுக்காறு என்ப தெல்லாம் ஒன்றுக்கும் உதவாப் பேச்சு
வழுக்காற்றில் வீழ்ந்த அன்னோன் வலிமையைப் போற்று வார்கள்
இழுக்காற்றும் செயல்களுக்கே ஏற்றமே அடைவர் அன்னார். 31

என்றுநான் முகன்தான் கேட்க இகபர வாழ்க்கை தானும்
நன்றெனக் கூறும் மார்க்கம் நலமிலை நாமே செல்வோம்
அன்றவர்க் கெடுத்துக் கூறி யாகுநற் காலம் பார்த்தான்
பொன்றலில் உள்ளத் தன்னான் பொன்னடி போற்றி செய்தான் 32

நான்முகன் வணங்குங் காலை நாரதர் ஆங்கே வந்தார்
ஏன்முக வாட்டம் என்றார் இயன்றதைக் கூறும் என்ன
பான் முக மாறாப் பிள்ளை பாரதி யவர்கள் சொல்லை
தான் மிக கேட்கவில்லை தாரணி யென்றே சொன்னார் 33

வேறு

ஒன்றுநான் கூறுகின்றேன் உயர்சங்கு கர்ணரின்று
வென்றிகொள் வியாசராசர் விண்ணகம் வந்துவிட்டார்
அன்றுநான் முகன்தன்சாபம் அதுவின்னும் முடியவில்லை
என்றனன் நாரதன்தான் இடனறிந் திசைக்கலுற்றான் 34

நன்றுநும் வார்த்தை யாலே நானிலம் சிறக்கும் முன்பு
சென்றவர் சங்கு கர்ணர் செகமது போற்ற வாழ்ந்தார்
என்றுநாம் செல்வோம் என்றே எண்ணினேன் இதற்குள் நீரே
நன்றென வந்தீ ரெல்லாம் நலமதாய் முற்றுவிப்போம் 35

இன்னவா றுரைத்த போதே எழில்சங்கு கர்ணர் வந்தார்
நன்னய மாக வாரீர் நார்தன் வருகை யேற்க
பின்னுமப் போதே யங்கு பரமன்தாள் போற்றிசெய்ய
அன்னவன் சங்கு கர்ணன் அரியின்பால் அணையும் போது 36

செகத்தினிற் சென்று நீரும் சிறப்புடன் வாழ்வீர் நந்தம்
மகத்துவம் உணரா துள்ள மன்பதை யுணர்ந்தே யன்னார்
இகபர இன்பம் நாடி எழிலுற வாழ்வார் ஆங்கண்
தகவுடை நீரே சங்கு கர்ணரே செல்ல வேண்டும் 37

சீதையே ராவணன்பால் சேர்ந்தனள் என்றே கூறும்
பேதமையுடைய தந்தப் பான்மையாங் கலியுகத்தில்
சாதனை செய்ய வேதான் சாருதல் நலமதாகும்
ஆதலால் சங்கு கர்ணா அங்குநீர் செல்ல வேண்டும் 38

உலகுண்ட பெம்மான் நாடி உயர்சங்கு கர்ணர் வந்தே
அலகிலா விளையாட்டாடும் அரியின்தன் அடியைப் போற்ற
நலமிகு நாரதன் தான் நவின்றிட நீயும் வந்தாய்
உலகினில் உற்ற செய்தி யுரையென்றான் உலகங் காப்போன் 39

அன்னையும் பிதாவும் போன்றே ஆண்டவன் அவ்வப் போதே
தன்னுடைப் பிள்ளை யென்றே தாங்குவன் தவிப்போர்க் கெல்லாம்
முன்னின்றுதவு வோனம் முகுந்தனே யெனமொ ழிந்தேன்
உன்னியுங் களையே நல்லோர் உணர்ந்துநற் கதியடைந்தார் 40

என்றனன் சங்கு கர்ணன் இதைக் கேட்ட நாரதன் தான்
கன்றிடந் தாய்க்கே யுள்ள கனிவில்லை கலியுகத்தில்
குன்றெனப் பொருள் கொண்டார்க்கே குவலய வாழ்க்கையுண்டாம்
நன்றதாம் பொருளிலார்க்கு நரகமே என்பர் அன்னார் 41

பொன்னுமெய்ப் பொருளும் அன்னார் பொருந்திடின் புவியில் இன்பம்
இன்னதன் மையதை யானே இக்கலியுகத்தில் சென்று
நன்னய மாகு மாறு நலம்பல விளையச் செய்வேன்
என்றனன் சங்கு கர்ணன் இனிதென்றான் நாரதன் தான் 42

அரசரின் அரிய வாழ்வை அடைந்துபின் அல்லல் எய்தின்
உரைசெயற் கரிய தாய ஒள்பொருட் சிறப்பை ஓர்வர்
உரைசெய்தான் நார தன்தான் உயர்பொருள் உள்ளத் தெண்ணி
இறைஞ்சியே சங்கு கர்ணன் இசைந்தனன் உலகம் உய்ய 43

வேறு

நல்லோர் செய் புண்ணியத்தின் நற்செயலே ஓங்குதற்கும்
அல்லோர் சொல் லுரையெல்லாம் அகலிடத் தேயடங்குதற்கும்
எல்லா உலகிடத்தும் ஏற்றமிகு பூமியென்றே
சொல்லாமற் சொன்னதெனச் சொல்லேற்றார் சங்கு கர்ணர் 44

வேறு

கன்னடமே கன்னித் தமிழ்நாடே கனன்று மனம் வேறாகா
தென்னிடமும் உன்னிடமும் இறைவ னுளான் என்று ணர்த்தித்
தென்னாடே வடநாடே யென்னா தெந்நாட்டார்க்கு மவன்
பொன்னாட்டான் அனைவர்க்கும் பொதுவென்பார் சங்கு கர்ணர் 45

## வேறு

பாரதத்தின் பெருமைதனைப் பாரோர் அறிதற்கும்
சாரதியாம் கண்ணன்தன் கீதைதனைச் சாற்றுதற்கும்
வாரமிலா நெஞ்சற்கும் வான்நெறி சொல்வேத
சாரமதைச் சாற்றுதற்கும் சம்மதித்தார் சங்கு கர்ணர் 46

## வேறு

அந்தகா ரத்தில் மிக்கே ஆழ்ந்தவிவ் அவனி தன்னில்
வந்தவச் சூழல் தன்னை மாற்றியே யுயிர்கள் வாழ
பந்தங்கள் மிகுந்தே நல்ல பாங்குடன் திகழ வேண்டி
வந்தனன் வை யத் தென்ன வந்தனன் ஆதவன்தான் 47

கலைபயில் மாந்தரெலாம் கலைகளைக் கற்கும் காலம்
கலைமகள் பாதம் போற்றிக் கற்குமக் காலந்தன்னில்
மலைவிலா தறிஞர் நல்ல மதி நுட்பம் பெறுவ ரன்னார்
சிலைமதன் எழிலைப் பெற்றே செகமதில் சிறக்கவாழ்வார். 48

ஆர்த்தெழு குகயோ கந்தான் அழிந்துமே போன தாலே
கீர்த்தியாய் நாட்டை யாண்டான் கிருட்டின தேவ ராயன்
சீர்த்தியால் கலைகளெல்லாம் சிறப்புடன் வளர்ந்த தம்மா
பார்த்திபன் இவன்தான் என்றே பகர்ந்தனர் மக்களெல்லாம் 49

குகயோகம் என்னும் பீடை குலைந்துமே யழிந்த தாலே
மிகயோகம் பெற்றே மன்னன் மேன்மையாய் நாட்டை யாண்டான்
தகவாகத் தரணி யெங்குந் தகுமழை பெய்த தாலே
இகலிலா மக்கள் எல்லாம் இன்பொடு வாழு நாளில் 50

கிருட்டின தேவ ராயன் கலைகளில் ஆர்வங் கொண்டே
கிருட்டின பட்டர் என்னும் கின்னர ஆசா னின்கண்
கிருட்டின தேவன் நன்றே கின்னர விசைப யின்றார்
கிருட்டின தேவ ராயன் கலைகளை வளர்த்தான் நன்கே 51

இன்னவா றொழுகும் காலை இவர்பின்னே ஆண்டோரெல்லாம்
நன்னய மாக வேதான் நாட்டினை ஆண்டா ரானால்
முன்னமே தலைக் கோட்டைக் கண் முகமது வருகையாலே
பன்னுதற் கரிய போர்தான் பாரினில் நடந்த தென்னே 52

கிருட்டின பட்டர் பின்னோர் கின்னர விசையைக் கற்று
கிருட்டின பட்டர் போன்றே கீர்த்தியாய் இசைப யிற்ற
கிருட்டின பட்டர் கீர்த்தி கிளத்து திம்மண்ண பட்டர்
கிருட்டின பட்டர் பேரன் கின்னர விசையைக் கற்றார் 53

மிக்கபோர் நடந்த தாலே மேன்மையாம் கலைகளெல்லாம்
தக்கவர் காக்க வில்லை தவித்தனர் மக்களெல்லாம்
பக்கலில் இருந்தோ ரெல்லாம் பரதேயம் சென்றார் என்னே
தக்கதிம் மண்ணர் தாமும் தெக்கணம் நோக்கி வந்தார். 54

திம்மண்ண பட்டர் தானும் திருவளர் செல்வி யென்னும்
உம்மைநற் பிறவி யாலே உயர்கோ பிகாம்பா ளுந்தான்
அம்புவி சிறக்க வாழ்ந்தார் அரசநல் போகம் பெற்றே
நம்முடை வினையுஞ்சேர நாட்டினைத் துறந்தாரென்னே 55

அரசரின் அரிய வாழ்வை யற்றவர் அல்லல் எய்தி
உரைசெயற் கரிய செல்வ ஒண்புக ழின்றி யாங்கண்
திரைகடலுலகந் தன்னில் திரிதலால் செல்வ மின்றி
மறையவர் பட்ட துன்பம் மதிப்பிடத் தகுவ தொன்றோ 56

விண்ணதில் வேதன் செய்த விரிவுரை விளங்க வேண்டி
மண்ணினில் மற்றோர் செய்யும் மாண்பில மறைய வேண்டி
அண்ணல் நற் சங்கு கர்ணர் அவதாரம் செய்ய வேண்டி
தண்ணளி யாலே யன்னார் தரித்திர வாழ்வைக் கொண்டார் 57

வேறு

நாயக்கர் ஆட்சி நன்மையாம் தஞ்சைதனில்
நாயகமாய் ஆண்டார்கள் நாடு நலம் பெற்றிடவே
நாயக்கர் தன்னுலே நற்கலைகள் நாடிடவே
நாயகனுய் ஆள் தஞ்சை நகருக்கே வந்தார்கள் 58

செவ்வப்ப நாயக்கன் சிறந்தவவ் வாட்சியிலே
நவ்விகோ பிகாம்பாள் நல்பட்டர் திம்மண்ணரும்
செவ்விதனை யறிந்தே திருமடத்தின் சுரேந்திரரின்
திவ்வியமான தீர்த்தர் திறமறிந்து சேர்ந்தனரே 59

மத்துவரின் நல்மகிமை மாநிலத்தோர் அறிதற்கோ
பித்துலகோர் எம்பிரான் பெருமைதனைப் பேசுதற்கோ
புத்தம்புது உலகைப் புவியின் மிசை ஆக்குதற்கோ
மத்துவரின் சீடருமே மனமகிழ்ந்தே ஏற்றனரே 60

வந்தாரிவர் வந்த சில நாளில் விதியென்னே
நந்தாமலர் கொண்டேயிறை நாளுந் துதி செய்ய்
விந்தைமிகு விசயேந்திர தீர்த்தரிடம் விட்டே
சிந்தாகுலம் விடுத்தே அயல் தேயம் செல லானார் 61

வேறு

மத்துவச் சுரேந்திரர் என்னே மதுரையம் பதிக்கே வந்தார்
சத்துவ குணந்தான் ஓங்கி சீதரன் சீர்த்தி பாடி
பித்துல கத்தோர் வாழ்வே பின்னிட நீங்கி யன்னார்
முத்தியாம் உலகை நாடி முகுந்தனின் அடியைச் சார்ந்தார் 62

நல்லபிருந்தா வனத்தில் நானிலம் போற்ற வாழ்ந்தார்
அல்லவக் கருமம் யாவும் அகலிடத் தகன்று மேதான்
பல்லுயிர்த் தொகுதி யாவும் பரமனின் அடியைப் போற்ற
அல்லலின் அகன்று வாழ்ந்தார் அரியினல் அடியைச் சார்ந்தே 63

மதுரையம் பதியில் பிருந்தா வனத்தராய் ஆன பின்பு
முதன்மையாம் பீடந் தானும் முன்புள இடத்தை விட்டு
அதன்வடக் கான கும்ப கோணத்தை அடைந்த தாலே
புதுமையாம் இடத்தை நாடிப் புறப்பட்டார் திம்மண்ணர்தாம் 64

வேறு

நம்பிக்கை வைத்து வந்த நாரணன் அருளி னாலே
திம்மண்ண பட்டர்தாமும் சீர்த்தியாய் பெற்ற செல்வன்
நம்பியும் நங்கையோடு நன்மையாம் பதியேயென்ன
அம்புவி போற்ற வாழ்ந்தா ராம்புவன கிரியின் கண்ணே. 65

வேதமும் கலைகள் கற்ற விற்பன்னர் ஒருவர் நாடி
நாதனே யிவன் தான் என்றே லட்சுமி நரசிம்மர்தான்
வேதவிற் பன்னர் ஆவார் வேங்கடாம் பாளுக் கென்றே
நாதனாய்த் தேர்ந்தே யன்னார் நன்னாளில் மணமுடித்தார் 66

குருகுலம் சென்றே நல்ல குருவிடம் வித்தை கற்க
குருராஜன் மைந்த னைத்தான் குருகுலந் தனிலே சேர்த்தார்
மறுவிலா மணமக்கள் தான் மதுரைக்கே சென்ற பின்பு
திருவிலா வறுமை வாழ்வை திம்மண்ணர் எய்தினாரே 67

திருமகள் உடையான் அந்த திருப்பதி நாத னாவான்
வறுமையைப் போக்க வல்லான் வரமதைப் பெறுவ தற்கே
ஒருமையாம் மனத்தி னாலே ஒருப்பட்டுச் சென்றே யன்னார்
வறுமைதான் போக்க நல்ல வரமதைக் கேட்க லுற்றார் 68

வேங்கட நாத உன்னை வேண்டியாம் பெற்ற பெண்ணே
வேங்கட அம்மாள் ஆவாள் விரும்புநும் வரத்தி னாலே
தீங்கட உலக மெல்லாம் திகழ்தரு வறுமை தானும்
நீங்கிட வேண்டு மென்றே நின்னருள் பெறவே வந்தோம் 69

மக்களின் செல்வம் ஒன்றே மகிழ்வினைத் தருவதாலே
தக்கவச் செல்வம் போன்று தரணியில் எதுவும் இல்லை
அக்கருத் துடைய எங்கள் அகத்தினை அறிந்த நீர்தான்
தக்கதாம் மக்கட் பேற்றைத் தந்திட வேண்டு மென்றார் 70

இக்கலி யுகத்தில் இன்னார் வேண்டுமிவ் வரத்தைப் போன்று
மிக்கதாம் வறுமை மாற்றும் மிகுவரம் கேட்பார் யாரே
தக்கதே யன்னார் கொள்கை எனக் கொண் டே சார்ங்க பாணி
அக்கணத் தென்னே அன்னார் அகத்திடத் தருள்பா லித்தார் 71

நீங்கிட வறுமை வேண்டி நிமலன்தன் அருளை வேண்ட
ஓங்கிட வேண்டும் பூமி உயர்சங்கு கர்ண ராலே
தாங்கிட வேண்டும் அன்னுர் தன்வயின் சங்கு கர்ணர்
பாங்குடன் அன்னவர்க்குப் பரந்தாமன் அருள் பாலித்தான் 72

வேங்கட கிரியின் மேலே வேங்கடன் இருப்ப தேபோல்
போங்கட மென்றே புவன கிரியினில் புனிதர் வாழ
நாங்கட மறவே யிந்த நானிலம் சிறக்கு மென்றே
பாங்குடை அன்னார் அந்த பழம் பெரும் பதிக்கே வந்தார் 73

உவணவா கனன் தன் அம்சம் உயர்சங்கு கர்ண ராவார்
தவனனாய்த் தங்கி யேதான் தகுதவம் செயுமென் றெண் ணி
கவனமாய்க் கருத்திற் கொண்டே கனிந்த திப்பதியே பாரில்
புவனத்தின் கிரியே யென்னப் போற்றுவர் புனிதர் அம்மா! 74

தயையினைப் பெற்றே நாதன் தாழ்விலாச் செல்வராகி
இயையும் இப்பதியிற் சென்றால் ஏறிடும் புகழென் றெண்ணி
அயலொரு பதியிற் றங்கா தாய்புவன கிரியே வந்தார்
உயர்தவ சங்கு கர்ணர் உற்பவ மாவ தற்கே 75

மாதவம் பெற்ற தாலே மாதவன் அருள்பா லித்தான்
மாதங்கள் செல்லச் செல்ல மகிழ்ச்சியில் மிதந்தா ரென்னே
மாதவ முனிவர் போன்றே மனத்தினில் எண்ணி யேதான்
மாதவம் போன்ற நோன்பு மாதவன் மகிழ நோற்றார் 76

கோபிகாம் பாளே எண்ணில் குணவதி குறிப்பின் பத்ம
நாபன்தன் நற்க தைகள் நலம்பெறக் கேட்டு வந்தார்
பாபம்தான் தீர வேண்டி பாரிடம் சிறக்க நல்ல
தீபத்தின் ஒளியே யென்னத் திருவுடை சங்கு கர்ணர் 77

வளர்ந்தனர் ஒளியே போன்று வயிற்றினில் சங்கு கர்ணர்
மலர்ந்தன முகங்கள் பத்து மாதந்தான் அடைந்த தாலே
தளர்ந்திடும் உயிர்கள் என்றும் தாழ்விலா வாழ்வே எய்த
உளந்தனில் மகிழ்ச்சி பொங்க உயர்கரு நிறைவுற்றாரே 78

பால் குண மாகும் அந்த பங்குனி மதியில் என்னே
சூல்கொண்ட கோபி காம்பாள் சுக்கில பக்கந் தன்னில்
வாலறி வினனே வந்தான் என வந்தான் ஏழாம் நாளில்
மாலவன் மாத வத்தால் மண்ணினில் தோன்றி னாரே 79

ஊரவர் கூட லுற்றார் உறவினர் சேர லுற்றார்
சீருடைக் குழந்தை யின்தன் சிறப்புடை அம்சம் நோக்கி
யாரிவன் கண்டோ ரெல்லாம் யாதவக் கண்ணன் போன்றே
பாரிடைத் தோற்றங் கொண்டான் பரந்தாமன் எனமொ ழிந்தார் 80

உருவினில் மாந்த ரானார் உயர்சங்கு கர்ணராவார்
திருமால் நல் அம்சம் யென்றே தெரிந்தனர் தேவ ரெல்லாம்
மிருகசீரிடமாம் நல்ல மேன்மையாம் நாளில் மக்கள்
திருவொடு விளங்க வேண்டித் திருவவதாரம் செய்தார். 81

ஆக பாடல் தொகை – 322

## பாலகுமாரப் படலம்

அன்னை கோபிகாம்பாள் பெற்ற அற்புதக் குழந்தை என்னே
முன்னைய பிறவி தோறும் முகிழ்த்தநற் கல்வி தன்னால்
பன்னுதற் கரிய நல்ல பரிதியின் ஒளியைப் போன்றே
நன்னய நயனம் மேலாம் நல்லொளி பெற்ற தம்மா! 1

அகத்திலே பெற்ற மேலாம் அருளொளி மிக்குயர்ந்து
முகத்திலே வந்த தம்மா முற்பொரு தவத்தினாலே
சகத்திலே தோன்றி நல்ல சாதனை செய்தற் கென்றும்
இகத்திலே மக்களெல்லாம் இன்னருள் பெறவே வேண்டி 2

பொலிவினைப் பெற்று யர்ந்த பொறற்புடைக் குழந்தை தன்னை
கலியுகக் கண்ணன் என்றார் காசினி தனிலுள் ளார்கள்
நலிவினைப் போக்கு தற்கே நாரணன் வந்தான் ஆன்ம
வலிவினைப் பெற்றே வையம் வாழுதற் காக வென்றும் 3

வேங்கட நாதன் தன்னை வேண்டியே பெற்ற பிள்ளை
வேங்கடன் அருளால் வையம் விளங்கிட வேண்டு மென்றே
வேங்கடன் வந்தான் என்றே உலகவர் விளம்ப வேண்டி
வேங்கட நாதன் என்றே விருப்பொடு பெயரிட்டாரே 4

உம்மைநற் பிறவி போன்றே உயர்வினைப் பெற்றே யுய்ய
இம்மையின் மக்கள் எல்லாம் இனிதருள் பெறுதற் கென்றே
அம்மவக் குழந்தை யாறு மாதத்தின் அன்னம் கொள்ள
திம்மண்ணர் செய்த மைத்தார் திருமிகு குழந்தை தன்னை 5

கோலமே கொண்டு ளான் கோபாலனின் உருவம் என்று
ஞாலமே புகழ்ந்த தம்மா நாரணன் பாதம் போற்றும்
சீலமே கொண்டு வாழ்ந்த திம்மண்ணர் சீர்த்தி கொள்ள
பாலனாய்ப் பிறந்தான் பால கிருட்டிணன் எனப்ப கர்ந்தார் 6

அரியின்நல் கீர்த்த னங்கள் அன்னை கோபிகாம்பாள் நாளும்
பரிவினால் பாடும் போது பந்தமே மிகுந்து போற்றும்
பரிவோடு பார்க்கு நல்ல பார்வையைக் கண்ட பேர்கள்
அரியினல் அம்சம் என்றே அனைவரும் அதிசயித்தார் 7

எட்டொடு இரண்டு மான எழில்வடி வான மேலோன்
எட்டொடு இரண்டும் சேர்த்தே எண்ணுநல் உயர்வு தோன்ற
எட்டொடு இரண்டு மான எழில்பதம் இதுவே என்ன
எட்டொடு இரண் டு மான பிரணவ எழுத்தைக் கற்றார் 8

மிக்கவவ் வெழுத்தின் மேலாம் மிகுபொருள் ஒன்றில் லையே
சக்கரம் சங்கு கொண்ட சர்வக்ஞன் தனக்கு மேலாம்
அக்கரம் பயில்வதற்கே ஆமூன்றாம் அகவை யாகும்
தக்கவக் காலம் தன்னில் தகுமுறை பயிற்று வித்தார் 9

திம்மண்ணர் கூறும் மேலாந் திருநாம மகிமை யெல்லாம்
செம்மையாங் குழந்தை தானும் சிறப்புடன் கேட்ட தம்மா
உம்மைநற் பிறவி பெற்ற உயரவ தாரம் போன்றே
நம்மனோர்க் காக வந்த நல்லவ தாரம் ஆமே 10

தொட்டிலில் கிடந்த வந்தத் துயரறு குழந்தை தானும்
மட்டிலா மகிழ்ச்சி யாலே மாதவன் பாட்டைக் கேட்டல்
பட்டறிவுடையோன் பாவம் போன்றதப் பார்வை தானும்
விட்டவத் தொடர்ச்சி யென்றே விருப்புற்று கேட்ப போன்ற 11

காலினில் விரலை அன்னான் கவ்விய காட்சி கண்டோர்
ஆலிலைக் கண்ணன் என்றே அனைவரும் கூறி னார்கள்
மேலிருந் திறங்கி மக்கள் மேன்மையைக் காக்க வந்த
மாலிவன் என்றே மாந்தர் மதித்தனர் மதியினாலே 12

ஆயர்பா டியிலே கண்ணன் ஆர்வமாய் ஆடுவான் போல்
நேயமா நினைவில் தோற்ற நிகர் நந்த வனமே யாக
போயநற் பிறவி வாசம் பொருந்துநல் லுணர்வில் ஆட
மாயவன் இவனே என்று மதித்தனர் மக்க ளெல்லாம் 13

இன்பமும் துன்பந் தானும் இயைந்திடும் மக்கட் கென்றும்
நன்மொழி கற்றா ரிந்த நானில வாழ்க்கை தன்னால்
இன்மொழி மழலை கேட்டார் இனிதெனத் திம்மண்ணர்தாம்
துன்பமும் உற்றார் அன்னார் துயருறு வறுமை கொண்டார் 14

அரசரின் அவையில் அங்கம் அவர் முன்னோர் பெற்ற தாலே
பரசுதற் கரிய நல்ல பான்மையின் வாழ்ந்தார் முன்னாள்
அரசரின் நிலையே மாறி அவனியும் இழந்த தாலே
முரசுடைச் செல்வ வாழ்வை முன்னவர் இழந்தார் அந்தோ! 15

முன்னவர் பொருளைப் பெற்றே முதன்மையாய் வாழ்ந்தார் பின்பு
நன்மையாம் திம்மண்ணர்தாம் நானிலம் சிறப்பின் மையால்
கின்னர இசையில் கீர்த்தி கீழ்நிலை சென்ற தாலே
தன்னருஞ் செல்வ மற்று தரித்திர வாழ்வைக் கொண்டார் 16

வித்துவச் சபையில் நாளும் வேதாந்த விளக்கஞ் செய்யும்
தத்துவ வாழ்க்கை யாலே தனந்தனைத் தேட வில்லை
சத்துவ குணமே மிக்கு சர்வக்ஞன் தனையே பாட
மத்துவ திருமடத்தின் மாணவர் அறிந்தார் நன்கே 17

மத்துவர் திரும டத்தின் மடப்பீடப் பதியே யான
வித்தையில் மிகுந்த நல்ல விசயீந்திர தீர்த்த ராவார்
பித்துல கத்தின் நீங்கிப் பிருந்தாநல் வனத்த ராகி
இத்தரை புகழும் அன்னார் இறைவனின் அடியைச் சார்ந்தார் 18

அரியின் நல் அடியை அன்னார் அடைந்த பின் அம்மடத்தை
உரிமையாய் காக்க வேதான் சுதீந்திர தீர்த்தர் வந்தார்
தெரிந்தநற் சீடர் தாமும் திம்மண்ணர் வறுமை கூற
பரிந்துமே ஓலை போக்கிப் பக்கலில் அழைத்துக் கொண்டார் 19

குடும்பத்தைக் கும்ப கோணம் கொண்டுமே வந்த தாலே
இடும்பையாம் இலத் தியல்பை இசைத்தனர் தீர்த்தர் முன்பு
வடுவின்றி வாழ்க்கை கொள்ள வந்தவர்க் குதவி செய்ய
அடுத்துள்ள சீடர் தம்மை அழைத்துமே கூற லுற்றார் 20

திம்மண்ணர் திருமடத்தில் திறமையாய் வாழ லானார்
அம்மவற் புதமே யாக அவர் கல்வித் திறத்தினாலே
செம்மையாம் விளக்க மெல்லாம் செய்தனர் சீர்த்தி கொள்ள
உம்மையிற் பெற்ற கல்வி உறுதுணை ஆயிற் றன்றே 21

திம்மண்ண ருடனே செல்வன் வேங்கட னாதன் செல்ல
தம்மினும் மிகுந்தே கல்வி தழைத்திட வேண்டு மென்றே
அம்மவச் சுதீந்தரர் பின்னே ஆர்வத்தின் பார்த்தார் என்னே
மும்மையும் உணர்தற் கேற்ற முகத்தினில் பொலிவைக் கண்டார் 22

அறிவுதான் கூர்மை யென்றால் அவன் பெற்ற விழியிரண்டும்
செறிவோடு விளங்கும் கூர்மை சிறப்புறு பார்வை பெற்றால்
பிறிதியாம் மொழியற் பாற்றோ பேசுதற் கரிய நெற்றி
அறிவொடு விளங்கற் கேற்ற அகற்சியைப் பெற்ற தம்மா! 23

பரந்தநல் நெற்றி கண்டு பக்தியின் பால ராகி
உரந்தனில் உற்ற மேலாம் உயர்ந்தநற் கருணையாலே
வரந்தரு தவசி போன்றே வளமிகு வாழ்வைக் கொள்ள
நிரந்தரமாக நீவிர் நீங்கிடாது உறைவீர் என்றார் 24

இவ்வாறு திம்மண் ணர்தம் இல்வாழ்க்கை சென்ற தன்னான்
செவ்வையாம் மூத்த செல்வன் சிறப்புறு குருரா ஜற்கு
செவ்விதின் மணவி னையைச் சிறப்புடன் செய்து வைத்தார்
நவ்வி கோபிகாம்பாள் வாழ்த்த நலமிகு நாத னோடு 25

வெவ்வினை போக்க வல்லான் வேங்கட நாதன் என்றே
செவ்விய உள்ளம் கொண்டு சிறப்போடு வாழு நாளில்
செவ்வையாம் உள்ளம் கொண்ட சிறப்புறு குருரா சற்கு
பவ்விய மாக அன்னார் பக்கலில் அமர்த்திச் சொன்னார் 26

நற்குரு ராச நீதான் நல்குடிப் பொறுப்பை யேற்று
முற்பெறு புண்ணியத்தின் முயற்சியின் முயன்று நித்தம்
அற்புறு பண்பினாலே அகலிடம் சிறக்க வாழ்வாய்
வெற்புடை வேங்கடன் தன் அருள் வந்த நாதனோடு 27

வேங்கட நாத னுக்கு வேண்டுவ யியற்றி நீயும்
வேங்கட நாதன் அண்ணன் தந்தையாய் விளங்க வேண்டும்
நான்கடன் முடித்தே நல்ல நாதனைச் சாரு வேற்கு
ஆங்கடன் முடிப்பாய் என்றே அவன் மடி விழுந்தா ரந்தோ! 28

## சூரியன் மறைவு

சேதனை சேதன மாம் செகத்துயிர்த் தொகுதி யாவும்
வேதனை இன்றி வாழ்வில் விடுதலை பெறவே வேண்டி
சாதனை யியற்றற் கென்றே சகத்தினிற் றோன்று மந்த
ஆதவன் மறைய லுற்றான் அகலிடமிருண்ட தம்மா 29

## நிலவுத் தோற்றம்

நாரணன் அம்சம் சங்கு கர்ணற்குத் தந்தை யாவார்
நாரணன் அடியைச் சார்ந்தார் நற்கலை பயிற்ற சூர்ய
நாரணன் மறைந்தும் அன்னோன் நற்கலை தனையே பெற்று
தாரணி வந்தான் என்னத் தண்ணிலா தோன்றிற் றன்றே. 30

அரியின தம்ச மானார்க் கருங்கலை புகட்ட வேண்டி
அரியவன் மறைந்த போதும் அவனது ஒளியைப் பெற்றே
சிறியவக் குழந்தை நாளும் சீர்கலை பெறவே வேண்டி
உரியவக் குருரா சற்கே உறுதுணையாக வந்தான் 31

கலைபல பெற்றான் உலகின் காரிருள் போக்கு தற்கே
நிலையிலா வாழ்வைக் கொண்ட நிலந்தனில் மனிதர்க் கெல்லாம்
நிலவிய அகத்தி ருள்தான் நிலா நிலா வென்று கூறி
தலமதில் தோன்றி யெங்கும் தண்ணொளி பொழிந்த தம்மா 32

அன்னை கோபிகாம்பாள் தன்னை அணுகியே வேங்கடன் தான்
என்னுடைத் தந்தை எங்கே என வேங்கிக் கேட்கும் காலை
உன்னுடைத் தந்தை மேலே உற்றனன் உறுவியப்பால்
அன்னவன் காணு தற்கே அகநிலா தோன்றிற் றன்றே 33

இளையவன் இன்னல் தீர்க்க இயம்பிய சொற்கள் தன்னால்
விளைவின் கண் நற் பயன்தான் விளைந்திட வேண்டுமென்றே
கலையெலாம் கற்கு நல்ல கள்ளமில் வேங்கடற்கு
நிலையிலா வாழ்வே அன்னான் நெஞ்சிலே நிற்கச் செய்தாள் 34

பாலகன் தனக்கே யாங்கு பகருநற் றாயின் வாக்கு
சாலவும் நன்மை யாகச் சாற்றுதல் வேண்டுமென்றே
ஞாலமே பெறினும் மேலோர் நவின்றிடார் தீமை நாளும்
ஏலவே கோபிகாம்பாள் இசைத்தனள் இளைஞன் கேட்டான் 35

அப்படி யானால் அம்மா அவருடை இடத்தைச் சார்தல்
எப்படி முடியு மென்றான் இளையவன் இன்னல்தீர
ஒப்பிலான் பாதந் தன்னை உள்ளத்தின் ஊன்றி நாளும்
செப்பிட வேண்டும் அன்னான் சீர்த்தியை என்று சொன்னாள் 36

தமையனும் தந்தை தாயும் தாரணி யாள்வோன் தானும்
அமையுநற் குருவுமான ஐவரால் அகில வாழ்வே
சமய நல் லொழுக்கந் தானும் சார்ந்திடும் மக்கட் கென்றே
அமைவுறச் சொற்றார் முன்னோர் ஐம்பெருங்குரவ ரென்றே 37

அகவைதான் ஏழே யாக வேங்கடன் அடைந்த போதே
உகப்புடன் உறவோர் காண உபநயனத்தைச் செய்தார்
அகமது மகிழ்ச்சி கொள்ள அருங்கலை பயிற்று விக்கத்
தகவுடை ஒருவர் நாடி தமக்கைவாழ் மதுரை சென்றார் 38

தமக்கையின் கணவராவார் தகவுடை நரசிம்மர்தான்
உமக்குநற் கலைப யிற்றும் உகந்தவர் அவரே யாவார்
தமக்குடை கல்வி கேள்வி அறிவையும் தானுணர்ந்தே
நமக்கிவர் சாலும் நல்ல கடமையை ஆற்றற் கென்றான் 39

ஆங்கவன் அறிவு நோக்கி ஆசானின் திறமை நோக்கி
யாங்குளார் பாங்கு ளாரே பாரிடம் சிறக்கச் செய்ய
வேங்கட குருவா யேற்று விளங்கிட நரசிம்மர்தன்
பாங்குடன் நடப்பாய் என்று பகர்ந்துமே அனுப்பி வைத்தான் 40

**ஆக பாடல் தொகை – 362**

## கலைபயில் படலம்

அமைவுறக் கல்வி யெல்லாம் அன்பொடு பெறவே வேண்டித்
தமையனால் அனுப்பத் தானே தமக்கையின் இல்லஞ் சார்ந்தான்
தமக்கையின் கணவர் என்றே தானவர் எண்ண வில்லை
தமை நாடி வருமவற்கு தகு கல்வி தனையே தந்தார் 1

மதுரையம் பதிக்கு வந்தான் மகிழ்ச்சியால் வித்தை கற்க
இது நல்ல தருணம் என்றே எண்ணிய வேங்கடன்தான்
பதுமையே என்று கூறும் பான்மையில் மிகவடங்கி
முதுகலை கல்வி யெல்லாம் முட்டின்றி முயன்று கற்றான் 2

முன்னதாய் எழுவன் யார்க்கும் கடனெலாம் முடித்த காலை
தன்னுடை யாசாற் சார்ந்தே தான் கற்ற பாடம் ஓதி
பின்னுமப் பாடந் தன்னில் பிழையேது மின்றி கற்றான்
பன்னுதற் கரிய வேத பாடமும் பயில லானான் 3

ஒருமுறை கற்ற பாடம் உள்ளத்தில் உளவோ என்று
மறுமுறை யாசா னாவார் மடுத்தவர் கேட்கும் போது
பெருவியப் படையும் வண்ணம் பிழையறக் கூறும் ஆற்றல்
அருமையைக் கண்ட வாசான் அதிசயம் மிகவடைந்தார் 4

ஒருதனி விதையே யூன்ற உயர் மர மாகிப் பின்னாள்
பெருமுதல் கிளைகள் ஆதி பெருகியே கவடு விட்டுச்
சிறுவிதை ஒன்று தானே சீர்த்தியைப் பெற்றதே போல்
உறுவியப் படைவோன் அன்னான் ஒடுங்குநல் லொழுக்கத் தானான் 5

சித்திரப் பாவை யென்னத் திகழ்ந்திடும் சிறுவன் பின்னாள்
மெத்தகு கலைஞானந்தான் மேன்மையாய் அடைந்த காலை
உத்தம குருவாய் வந்த உயர் குரு நரசிம்மர்தம்
சித்தமும் களித்தார் என்னே சிறப்புறு கல்வி தந்தார் 6

அடக்கமாம் பண்பு தானே அவனியில் இருந்த வெல்லாம்
அடைக்கல மாக வேதான் அவனிடம் போயடைந்த
நடக்கையைக் கண்டு வந்தார் நரசிம்ம சாரி போற்ற
படைக்க மான பண்பைப் பாரினில் பெற்று யர்ந்தான். 7

கசடறக் கற்றல் என்னும் கருத்துக்குக் காட்டாய் வாழ்ந்தான்
இசையெனும் எச்சம் பெற்றே இளைஞனாம் வேங்கடன் நால்
திசையுளோர் போற்றும் வண்ணம் சிறப்பொடு விளங்கும் போது
அசைவிலா ஊக்கம் என்னே அவனிடம் போயடைந்த 8

நன்னயக் கல்வி கற்று நலம்பெறும் வேங்கடன் தான்
தன்னுடை ஆசானாலே தானுணர்ந்தறிந்த தேபோல்
முன்னைய பிறவிவாசம் முகிழ்த்தநன் முயற்சி யாலே
பன்னுதற் கரிய மேலாம் பல நூல்கள் பயின்றான் நன்றே 9

வல்லவனாக நீந்தும் கலைதனைத் தானே கற்றான்
நல்லதோர் வீணைக் கல்வி நற்குரு ராசன் தந்தான்
நல்லதாம் குடும்பந் தன்னில் நரசிம்ம சாரி வந்தார்
பல்கலைக் கழக மென்றே பாருளோர் போற்ற லானார் 10

நற்கலை வீணை தன்னை நன்குணர்ந் தறிந்த தேபோல்
முற்பெறு பிறவி வாசம் முன்னின்றே உகைத்த லாலே
சற்குரு வெனவ மைந்தார் தமக்கையின் கணவர் தாமும்
அற்புறுதன்மை யாலே அவருடைச் சீடரானார் 11

தமையனாங் குருராசன்தான் தகுவீணை கலையைப் போன்றே
தமையென்றும் நன்கு ணர்ந்த லட்சுமி நரசிம்மர் பால்
அமைவுறு கல்வி யெல்லாம் அடைவுறக் கற்ற மைந்தான்
இமைவிழி காப்ப தேபோல் எழிற்கலை தனையே காத்தான் 12

புலமையை நன்கு ணர்ந்தே பொருள் புரி வேங்கடன்தான்
தலைமையாங் கல்வி கற்கும் தகுதியைப் பெற்ற தாலே
கலையினில் மேல தாகக் கருதுமீ மாம்சம் தர்க்கம்
உலவிலா வியாகர் ணந்தான் உவந்துமே கற்கலானான் 13

ஏதுவும் மேற்கோளுந்தான் எடுத்துடன் காட்டி யாங்கே
வாதினிற் பிறன்கோ ளெல்லாம் மறுக்குநல் வாதி யானான்
போதனே வந்தான் என்றே புவியுளோர் போற்றும் வண்ணம்
சாதனை செய்தார் சங்கு கர்ணர்தம் சதுரி னாலே 14

இன்ன தன்மையினிற் கல்வி கேள்வியின் இயற்கை யாக
பன்னுதற் கரிய பன்னூல் புல்மையும் பெற்றா ணங்கே
முன்னுறு யோகந் தானும் மூழ்கிநீர் தனில்ப யின்றான்
என்னிவன் கற்கும் கல்வி யென மக்கள் அதிசயித்தார் 15

அத்தகு கலைஞா னந்தான் அவன் பெற்றே உயர்ந்த தேபோல்
மத்துவ சீடராவார் மண்ணினில் பெற்றார் யாரே
சித்தத்தே சீர்மை யுள்ளார் சிறப்புறு செல்வம் பெற்றார்
உத்தம வேங்கடன் தான் உயர்சங்கு கர்ண ரன்றோ 16

திம்மண்ணர் மகனாய் வந்த திருமிகு வேங்கடன் தான்
உம்மைநற் பிறவி தன்னில் உயர்வியாச ராச ராவார்
செம்மையாங் கல்வி கற்றார் சிறப்புறு சங்கு கர்ணர்
நம்மனோர்க்காக வந்த நல்லவ தாரமாமே 17

அண்ணனாம் குருராசன் தன் அருங்கலை வீணை தன்னை
பின்னவன் வேங்கடன்தான் பிழையின்றிக் கற்று ணர்ந்தான்
சின்னவக் குழந்தை யாவான் சிறப்பொடு கலைகள் கற்க
அன்னவன் மைத்து னர்தான் அகத்தினில் மகிழ்ச்சி கொண்டார். 18

தன்னுடைக் குலத்தில் வந்த தகுவீணைக் கலையைத் தானும்
முன்னவர் பெற்ற தேபோல் முட்டின்றி முளைத்த தென்னே
உன்னதமாக வந்த உயர்குலக் கல்வி யென்றால்
பன்னுதல் வேண்டா என்றும் பாகமாய் அமையுந்தானே 19

சோதிடக் கலைப யின்றார் சொற்பொருள் உணர்ந்த தாலே
வாதிடத் தக்க மேலாம் வகை நல்கும் தர்க்கத் தோடு
ஓதிடத் தக்க தான உயர்ந்தநல் கலைநூல் - வெள்ளை
மாதிடங் கற்றான் என்றே மதித்திட நிரம்பினானால் 20

மாந்தரில் மிகுந்து தோன்றும் மகத்துவம் நிறையத் தக்க
சாந்தநல் மூர்த்தி என்றே சகலரும் நினைக்கும் வண்ணம்
போந்தநல் யுகத்தில் பெற்ற பொருவறு கலைக்கு மேலாய்
நீந்துமக் கலைப யின்றான் நீரினில் இருக்கை கற்றான் 21

தம்பியின் கலையார் வத்தைக் கண்டனர் குருராசர்தான்
நம்பியென் றுரைக்கத் தக்க நலனெலாம் நிறையப் பெற்றே
அம்புவி சிறக்க வாழும் அவனுடை மகிமை கண்டார்
தம்மினும் மிக்கான் தம்பி தனை நினைந்தின்பம் கொண்டார் 22

ஆக காண்டம்ஒன் றிற்குபாடல் தொகை –**384**

# ஸ்ரீ இராகவேந்திர மகா காவியம்

## நூல்

### பூர்வ அவதாரப் படலம்

உலக மெங்கணும் உள்ளவர் இன்புற
நிலவு லகினில் நீதிநி லைபெற
இலகு சீரருள் ராகவேந் திரர்புகழ்
நிலவு சீரடி நெஞ்சினில் போற்றுவாம். 1

பேதைய ரால்பெரும் பீடையே பூமியில்
மேதையர் வாழ்வு மெலிவுறுங் காலையில்
வாதைதான் தீருமே வையமென் வரவதால்
கீதையில் கிருட்டினன் கிளத்தினரோ. 2

நல்லவர் வாழவும் நானிலம் ஓங்கவும்
அல்லவர் சாயவும் அவதிகள் தீரவும்
பல்லுயிர் காக்கவும் பரமனே யுகந் தொறும்
நல்லவர் உருவமாய் நடையிடுவானே. 3

அறமழிந் துநல் லாக்கமில் காலைநல்
திற மழிந்தவர் தீமைகள் சாய்த்திட
உரங்கொளுந்திரு வுத்தமர் உய்ந்திட
வரமளித்தவர் வாழ்ந்திடத் தோன்றுவன் 4

என்கடன் ஒன் றுன் டென்பேன் இளவலாம் வேங்கடற்கு
முன்கடன் கல்வி யெல்லாம் முறைமையின் முடித்து வைத்தேன்
பின்கடன் ஆகு மிந்தப் பிறப்பினில் பெருமை கொள்ளும்
நன்கடன் ஆகும் மேலாம் நானில வாழக்கை யாமே 5

வானுளோர் போற் றும் வண்ணம் வந்த நல் வேங்கடன் தான்
பானுவின் கதிர்போல் அன்னான் பல்கலை பயின்ற பின்பு
நானில வாழ்க்கை தன்னில் நலம்பெறும் இல்லறத்தை
நானிவற் கியற்றி இந்த நானிலம் சிறக்க வைப்பேன் 6

இவ்வாறு குருராசர் தம் எண்ணத்தை இயம்பும்போது
செவ்வையாம் ஒழுக்கத் தாலே சிறந்தவோர் முதியோர் வந்தே
அவ்விய மற்ற நல்ல அந்தணர் குலத்தில் வந்த
திவ்விய குணமி குந்த திம்மண்ணர் மரபு ரைத்தார் 7

விசயநல் சாம்ராஜ் யந்தான் விளங்கிட உலகமெங்கும்
இசைபெற வாண்டான் கிருட் டின தேவன் நல் செங்கோ லாட்சி
திசையெலாம் போற்றற் கேற்ற திறமையால் மிகவே யோங்கி
வசையிலா வாழ்வு கொண்டு வையத்து வாழு நாளில் 8

கின்னர வீணை கற்ற கிருட் டின பட்ட ராவார்
உன்னத வீணை கற்க உவப்புடன் ஏற்ற காலை
தன்னுடை இசையில் ஆர்வம் தலைப்பட்டு விளங்க நாளும்
நன்னய ஆட்சி யின் கண் நல்லங்கம் பெற் று வாழ்ந்தார் 9

கின்னர விசையில் தேர்ந்த கிருட்டின பட்டராவார்
இன்னிசைக் கவியி யற்றும் இன்கவிவாணராகி
பன்னுதற் கரிய நல்ல பான்மையின் வாழு நாளில்
தன்னுடை யார்வம் தன்னால் தருவேத ந்தனைப் பயின்றார் 10

பட்டறிவுடையார் வீணை பயிற்றுநற் பணியினாலே
மட்டிலாப் புகழ் பெற் றோங்கும் மத்துவ மறையவர் தான்
இட்டமாய் இதயத் துள்ள இறைவனைக் கண்ணி நாளும்
விட்டுணு தனைவ ணங்கும் வேதியர் நெறியின் வாழ்வார் 11

ஒருபெரு நாடா யோங்கும் உயர்கரு நாட தாகும்
பெருமறை யவர்கள் வாழும் பீகமுத் தரரே யென்றும்
திருவளர் சிறப்புற் றோங்கும் சீர்பரம் பரையீ தென்ன
குருவருள் சிறப்புற் றோங்கும் கௌதம கோத்ரம் ஆமே 12

அத்தகு கோத்தி ரத்தில் அழகராங் கிருட்டினர்க்கு
உத்தம கனகசைலர் உயர் தோற்றம் கொண்ட தற்பின்
இத்தரை மக்கள் கற்க எளி வந்த முறைபயிற் றும்
சித்தமும் அழக ரானார் சிறந்தவே தாந்தியாமே 13

வித்தகரென்றே நன்மை விளைவிக்கும் மேலோராவார்
சத்துள காரியத்தைச் சகத்துளோர் அறியும் வண்ணம்
தத்துவக் கருத்தை யன்னாள் தரணிக்கே அளித்து வாழ்ந்தார்
புத்தமு தென்றே நாளும் புவியுளோர் போற்றி னாரே 14

இசைக்கலை வீணை தன்னை இன்பமாய்க் கற்ற மேலோர்
திசைக் கெலாம் எடுத்துக் கூறும் திறமையும் பெற்று யர்ந்தார்
நசையிலா தின்ப வாழ்வில் நாரணன் பாதம் போற்றும்
பசையினால் பக்தி வாழ்வே பகர்மூச்சாய் வாழ்ந்து வந்தார் 15

அரசவை போகம் கொண்டே அருமையாய் இல்லறத்தில்
பரசுதற் கரிய நல்ல பண்பொடு வாழ்ந்த தற்பின்
உரைசெயற் கரிய மேலோன் உயர்பதம் உற்ற பின்பு
மறையவர் பெற்று வந்த மன்னவை பெருநல் வாழ்வை 16

தரணியை யாளும் வேந்தன் தகுமுறை மதித்த தாலே
முரணிய கொள்கை யின்றி முன்னவர் போன்றே வாழ
கரவிலாக் கனக சைலர் கருத்தினில் ஊக்கஞ் சேர்த்தே
உரமுடை யவராய் வாழ்ந்தார் உயர்குறிக் கோளினாலே 17

அறவிய நெஞ்சம் பெற்றே அரியினல் பாதம் போற்றி
பிறவியின் பயனைப் பெற்றே பேறுடன் வாழும் அன்னோன்
சிறந்தநற் குடிவி ளங்கச் சீர்த்தியைப் பெற்றே வாழ
பிறந்ததோர் ஆண்கு ழந்தை பேறினி வேறுண்டாமோ 18

நம்பினோர் வாழ்வார் நல்ல நாரணன் அடியை நாளும்
அம்புவி கற்க வே தான் ஆன நற் குடியீ தென்ன
நம்மனோர்க் கறிவித்தற்கே நான்முகன் செய்த மைத்தான்
திம்மண்ணர் என்றே அன்னார் திருநாமம் சூட்டினாரே 19

திருப்பதி தனிலே யுள்ளான் திருவருளாலே வந்தான்
சிறப்பொடு விளங்கு கின்ற திருமிகு குழந்தை மிக்க
விருப்பொடு வீணை ஏனை வியக்கவே கற்றதென்றால்
திருப்பதி நாதன் சீர்த்தி செப்பருந் திறம தாமே 20

திம்மண்ணர் வளர்ந்தே நல்ல திறன் மிகு குமர னானார்
இம்மண்ணில் மிக்க வன்னார் இயல்குடி மரபு ளோர்தாம்
வம்மினென் றவர்கள் நல்ல வரிசையை யறிந்தே போற்றி
அம்புவி சிறக்கத் தக்க தாம்மண வினையைப் பேசி 21

குணமிகு திம்மண் ணர்தம் குறிப்பறிந் தொழுகற் கேற்ற
குணவதி கோபி காம்பாள் குலக்கொடி யாவாள் என்றே
மணமது கொள்ளு தற்கு மாதவன் அருளை வேண்டி
மணமக்கள் மகிழ்ச்சி கொள்ள மரபினன் முழுத்தந் தன்னில் 22

மாயவன் அருளால் வந்த மணவினை யென்றே கூறும்
தூயவன் மரபுள் ளோரும் தொலைவினல் சுற்றத் தோரும்
ஏயவே இரு வீட்டாரும் இன்பமே கொள்ளும் வண்ணம்
நேயமே மிகவே யன்னார் நிச்சயம் செய்திட்டாரே 23

பெருமணம் பெற்றார் மக்கள் பேசுதற் கரிய அன்னார்
இருமனம் ஒன்றே யாகும் இயல்பினின் அன்பு பொங்க
ஒருமனதாக உற்றார் உறவினர் உவகை கொள்ளத்
திருமணங் கொண்டார் நல்ல திருவருட் டுணையினாலே 24

சில பல ஆண்டு காலம் திருமண மான தற்பின்
நிலவுல கின்பம் துய்த்து நின்மலன் அருளை வேண்டி
பலபல தீர்த்தம் மூழ்கி பரமனின் அடியைப் போற்றக்
குல தெய்வ மாக வந்த கோவிந்தன் பதியைச் சார்ந்தே 25

எங்குறை தீர்ப்பா யென்றே எழுமலை யானை வேண்ட
அங்கவன் அருளினாலே வந்தவள் வேங்க டாம்பாள்
துங்கமாம் கடல் துயின்ற தூயனாம் மாதவன்றன்
பொங்கு நல் அருளி னாலே பிறந்தவன் குருரா சன்தான் 26

இறையருள் மிக்கே வாழ்ந்த இயல்குடி மரபு நோக்கி
மறையவர் சிறந்த நல்ல மத்துவர் மகிமை நோக்கி
நிறைகுணச் செம்ம லானோன் நீள்குடித் தன்மை நோக்கிக்
கறையிலா வாழ்வே யன்னார் கண்டனர் உறவின் மார்கள் 27

அத்தகு குடியில் வந்தார் அழகமர் வேங்கடர் தான்
உத்தம ராவார் மிக்க உயர்குணம் அமையப் பெற்றார்
இத்தரை புகழும் மேலாம் இயல்பமை குணத்தின் மிக்கார்
மத்துவர் புகழைப் போற்றும் மாண்பமை சீட ராவார் 28

என்றந்தப் பெரியோர் தம்மால் இயம்பிய மரபு கேட்டே
ஒன்றிய உள்ளங் கொண்ட உவகையின் ஒருவர் வந்தே
நன்றென உரைத்தீர் இந்த நானிலம் போற்றும் வண்ணம்
மன்றலம் வினைமுடிப்பேன் மகளையுந் தருவே னென்றார். 29

ஆக பாடல் தொகை – 413

## திருமணப் படலம்

கன்னட நாட்டில் வாழ்ந்தோர் கௌதம கோத்தி ரத்தோர்
பின்வரு குலத்து ளோரின் பெருமையைக் கண்டு போற்றி
முன்னுள மரபு நோக்கி முகத்துள தன்மை நோக்கிப்
பன்னுதற் கரிய தாம்நற் பாலனின் பண்பைக் கண்டார் 1

கன்னியாம் சரஸ்வ திபாய் கடிமணம் செய்யுங் காலம்
உன்னினார் உள்ளத் துள்ளே உறவின்மார் இருக்கும் போதே
பன்னினார் பாலற் கேற்ற பாவையைத்தருவனென்றே
தன்னுடை விருப்பத் தன்னூர் சாற்றினர் சபையோர் முன்னே 2

அங்குள பெரியோ ரெல்லாம் அவருடை விருப்பம் கேட்டே
நன்குல மரபுக் கேற்ற நங்கையாம் எனவ றிந்தார்
எங்கணும் உள்ளோர்க் கெல்லாம் எழில்திரு முகம்வ ரைந்தே
பொங்குபே ரன்பி னாலே புகலுவ தெனமொ ழிந்தார் 3

அச்சபை யுள்ளோர் தாமும் அழகமர் வேங்க டற்கு
எச்சமாம் புகழ்பெற் றோங்கும் இல்லற வாழ்வைக் கொள்ள
அச்சுதன் அடியைப் போற்றி ஆங்கவர் பெரியோ ரின்னல்
இச்சையின் மணமே கொள்ள நிச்சயம் செய்திட் டாரே 4

நல்லதாம் ஓரை கண்டார் நானிலம் சிறத்தற் கான
வல்லனாம் வேங்க டர்தான் வளமனை வாழ்க்கை கொண்டே
மல்லல்மா ஞாலந் தன்னில் மணவினை யேற்றற் காகும்
ஒல்லுநல் லோரை கண்டார் உயர்மண நாள்கு றித்தார் 5

மெத்துவை காசி தன்னில் மேன்மைசேர் மகநன் னாளில்
உத்தம குணநல் லாட்கும் உயர்ந்தநல் வேங்க டற்கும்
இத்தரை போற்றும் மேலாம் இல்லற வாழ்வைக் கொள்ள
மத்துவ மரபு நோக்கி மணவினை மடல் வரைந்தார் 6

மங்கையாம் சரஸ் வதிபாய் மணவினை முடித்தற் கென்றே
நங்கையர் பலரும் கூடி நற்குரு ராசன் முன்பு
பொங்குபே ருவகை யோடும் புயல்வணன் பக்தி யோடும்
தங்கள்பே ரன்பி னாலே தாமுவந் துதவ வந்தார் 7

மத்துவர் சீட ராக மாநிலம் அறிந்த தாலும்
உத்தம குணநல் லாட்கு உரியவராவ தாலும்
இத்தரை புகழும் மன்னர் சபைமுன்னோர் வகித்த தேபோல்
அத்தகு தகுதி நோக்கி அவரிடம் பலரும் வந்தார். 8

நங்கையிற் சிறந்த மேலோள் நன்மண விழாவிற் காக
எங்களின் அன்பி னாலே யியல்வன ஏற்றல் வேண்டும்
பங்கய கமல பாதம் பரவுநற் பாவை யன்னாள்
நங்குல மரபில் மேலாம் நங்கைதான் இவளே யென்றும் 9

வேங்கடன் அருளால் வந்த வேங்கடர் மனைவி யாகப்
பாங்குடன் திகழு நல்ல பாவைபால் பரிவி னாலே
ஓங்கிடும் மணவி ழாவை உயர்குறிக் கோளின் அன்பு
நீங்கிடா வகையில் அன்னார் நேர்ந்தனர் செல்வ மெல்லாம் 10

அரசவை போகங் கொண்டே அவர்முன்னோர் இருந்த தேபோல்
பரசுதற் கரிய தாம் நல்ல் பான்மையின் பாவை தன்னை
உரைசெயற் கரிய தாம் நல் உயர்மண மென்றே யோத
திரையுல கதனில் மேலாந் திருமண விழா வெடுத்தார் 11

திம்மண்ண பட்டர் மேலாந் திருமகன் மண விழாவை
நம்மனோர் கூடி யேதான் நலம்பெறச் செய்ய வேண்டும்
வம்மின்கள் என்று வந்தே வளநகர் வாழ்வோ ராங்கண்
நம்பியாம் வேங்க டர்தம் நன்மண விழா வெடுத்தார் 12

கள்ளாரும் மலர்ச்சோலை கரைமருங்கே அணிசெய்ய
வெள்ளாற்றங் கரைவிளங்கு வேதபுரி புவனகிரி
உள்ளார்வம் மிகுதியினால் உவப்பெய்திப் பன்னலமும்
உள்ளார்கள் எனப்பகர்வ போன்றிடுமவ் வெழில்நகரம் 13

ஆரணம் ஓதுவாரும் ஆதியைப் பாடு வாரும்
தோரணம் கட்டுவாரும் தூய்மையாய் நகர் செய்வாரும்
நாரணன் புகழையாங்கண் நலம்பெறப் பேசுவாரும்
சீரணி நகரமென்றே சிறப்புற விளங்கிற்றம்மா! 14

## வேறு

சுண்ணத்தால் இல்லம் எல்லாம் தூய்மையாய்ச்செய்கின்றுரும்
வண்ணத்தால் விளங்கும் பாவை வகைவகை யணிசெய் வாரும்
திண்மையாம் உள்ளம் கொண்ட திருமகன் மணவி ழாவை
எண்ணத்தில் இயன்ற வாறே எழிலுறச் செய்தா ராங்கண் 15

தெங்கிள நீரின் கொத்தும் தேர்க்கமு காயின் கொத்தும்
எங்கணும் மிகுந்த மேலாம் எழில்நகர் இல்லந் தோறும்
பொங்கலோ என்ற யிர்க்கப் புத்துல கென்னத் தங்கள்
நன்குடி மணமென் றெல்லா நகருளார் நாட்டங் கொண்டார் 16

வாழையும் மாவின் கொத்தும் வளமனை யென விளங்க
தாழையின் குலைகள் எல்லா மனைகளில் தனி விளங்க
ஏழையென் றெவரு மில்லை யென நகர் மாந்தர் எல்லாம்
மாழைபொன் னணிவிளங்க மகிழ்ச்சியின் மிக்கு ளாரே 17

காலையும் மாலையும் கதிர் மயங்கிட
ஓலையும் பாளையும் ஒருங்கி ணைந்திட
காளையும் காளையும் களிப்பை யெய்திட
சாலைகள் சோலையாய் சான்று கூறின 18

## வேறு

மிக்கபெரும் கலை பயின்ற மாதிவளாம் சரஸ்வதியே
தக்கபெருங் குரவருரை தலைமேலாய்க் கொண்டதனால்
எக்கருத்தும் இசைக்காத இயல்பண்பின் தலைப்பட்டாள்
தக்கதென வேங்கடவன் தன்னைநினைந் தெண்ணுகிருள் 19

வேங்கடவா வேண்டுகிறேன் வேண்டும்வரம் தந்தருள்வாய்
நான்கடமை ஆற்றுதற்கும் நானிலந்தான் வாழுதற்கும்
தான்கடமை மாறாத தகுவரனைத் தந்தாயோ
வேங்கடனை நினைவேற்கு வேங்கடரே வந்தாரே 20

கலைபலவும் கற்பதற்குக் கருத்தில்கொள் காளையவர்
கலைமாதின் பெயர்கொண்ட கன்னிதனை நினைந்தேதான்
கலையார்வ மிகுதியினால் கலைபலவும் கற்றற்கே
கலைமாதின் பெயர்வந்த கன்னியவள் வாய்த்தனளே 21

மணங்கொளுநல் மணமக்கள் மகிழ்ச்சிகொளும் வகையினிலே
மணங்கொளுநல் மாட்சிமையால் மக்க ளெல்லாம் மகிழ்வெய்த
மணநாளில் மணப்பொருளின் மணமிகுந்த தெனில் நல்ல
மணமுரசால் புவனகிரி மங்கலமே மிகுந்ததுவே 22

இன்னவாறிசையொலியால் இன்புற்றே புவனகிரி
மன்னியநல் திருமணத்தின் மாட்சிமையால் மாந்தர்தாம்
அன்னியரென் றெவருமில்லை யனைவருமேமகிழ்கொண்டார்
பொன்னுலகாய்ப் புவிபரவப் புதுமைபெற ஓங்கியதே 23

அத்தகு நன்னா ளின்கண் அனைவரும் கூடும் போது
சித்தம தழக ராகும் சிறந்திடும் வேங்க டர்க்கும்
உத்தம குணநல்லாளாம் உயர்ந்த பூமகளே யென்னும்
பத்தரை மாற்றுத் தங்கம் சரஸ்வதி பாயென் பாட்கும் 24

மணவினை முடித்தற்கேற்ற மங்கலநாளில் வந்தே
மணவினை முடிவுசெய்ய மகிழ்வுடன் சுற்றம்சூழ
குணமொடு குலமும் நோக்கிக் கோதில்நல் மரபும் நோக்கி
துணைவியாய்த் தருவ தென்றே தூயசான் றோர்க்குமுன்னால் 25

மறுவறு குணத்தின் மிக்க மணமக்கள் இவரே யென்றும்
திருவரு ளாலே கூடும் திருமணம் இதுவே யென்றும்
பெருவியப் படையும் வண்ணம் பேருல கின்பம் பொங்க
உறுதியாம் மொழியே தந்தார் உயர்மண நாள் மொழிந்தார் 26

எங்கணும் உள்ளோர் வந்தே எழில்மிகு வேங்கடர்தம்
பொங்கு நற்சுற்ற மென்றே பூமியில் புகழ்மிக் கோங்க
அங்கவர் கூடும் போது அவர்திரு மணத்தைக் காண
புங்கவன் குற்றந் தீர்ந்தான் புவியுளோர் சுற்ற மானார் 27

புதவாரம் மாலைக் காலம் புண்ணியர் வருகை தந்தார்
நிதந்தரும் நியமம் ஆற்றி நின்மலன் தாளை வாழ்த்திப்
பதநினைந் தருளைப் போற்றி பரமனின் அடியைப் பாடி
சதமவன் நினைவாய் வாழ்வார் சரஸ்வதி தனை நினைந்தார் 28

நினைவோடு வாழ்வார் ஆங்கே நின்மலன் வாழ்வை குந்தம்
தனைநினை சுற்றத்தார்க்கு தரிசனம் தந்தார் இப்பால்
மணவினை யேற்கும் அன்னார் மனத்துயர் போக்கும் மேலோர்
நினைவெல்லாம் பத்ம நாபன் நிகரில் வைகுந்த வாழ்வே 29

குலமொடு கோத்தி ரந்தான் கூறினர் பெண்வீ ட்டார்கள்
சிலதலை முறைகள் அன்னார் சிறப்பெலாங் கூறும் காலை
அலகிலாப் புகழ்பெற் றோங்கும் அந்தணர் குலத்தில் வந்த
பலதலை முறைகள் பற்றிப் பகர்ந்தனர் பிள்ளை வீட்டார் 30

மத்துவர் நெறிக ளெல்லாம் மண்ணில் வாழ வந்தார்
மத்துவர் சீடர் வந்தார் மணவினை கொள்ள வந்தார்
தத்துவ சீலர் வந்தார் தரணியோர் வாழ வந்தார்
இத்தரை போற்ற வந்தார் இல்லறம் ஏற்க வந்தார் 31

மத்தள வோசை யாங்கே மத்துவர் நெறி முழக்க
சத்துவ குணத்தைச் சார்ந்தே சந்ததம் வாழ்த லாலே
தத்துவச் சான்ரோர் என்ரூர் சகத்தவர் குருரா சர்தான்
உத்தம குணத்தா ரென்றே உளமதின் திளைத்தார் நன்றே 32

சித்திரை செல்வை காசி சிறந்திடும் மகநாளின்கண்
இத்தரை போற்று மேலாம் இயல்மணமக்கள் தம்மை
சித்தத்தே தூய்மை யானோர் சிறந்தவோர் இருக்கை தன்னில்
பத்தரை மாற்றுத் தங்கம் சரஸ்வதி பாயென் பாளை 33

இருக்கையில் இருத்திப் பின்னும் இல்லற வாழ்வைக் கொண்ட
மருக்கொளும் மங்கை மார்கள் மருவி மங்கலம் முழங்க
தருக்கெலாம் அற்ற அன்னான் தனையணை மங்கை நல்லாள்
இருக்கவே கண்ட பேர்கள் இலக்குமி யெனமொ ழிந்தார் 34

நாரணன் அம்சம் என்றே நானில மாந்தர் கூறும்
காரண மூலன் சங்கு கர்ணர்தாம் இவரே என்று
பூரணமாக வேதான் புரிவரோ புவியு ளோர்கள்
ஆரணம் கூறும் அன்னோன் அரியினல் அம்சம் என்றே 35

தெருட்டிட வேண்டுமென்றே திருவவதாரம் செய்தோர்
மருட்டிடா துலக மெலாம் மாயையின் நீங்கி என்றும்
அருட்டிரு கொண்டே உலகை யாளவே வந்தவர்க்குத்
திருட்டியே கழித்தார் தீர்க்க சுமங்கலி பலரும்கூடி 36

பூப்புனைந் தொளிரும் நல்ல பூவையர் பலரும் அந்நாள்
மாப்பிள்ளை யாக வந்த மன்னனாம் வேங்க டர்க்கும்
மாப்புரை கண்ணள் என்றே மதிமங்கை நல்லா ளுக்கும்
காப்பிட்டுக் கண்ட காட்சி கண்கொள்ளா காட்சியாமே 37

வேறு

மங்கல மகளிர் நல்ல மங்கல நாளில் வந்தே
மங்கல இசைமு ழங்க மங்கலநீர் கொணர்ந்தே
மங்கலப் பொட்டு வைத்தே மங்கல அணியணிந்து
மங்கல நீராலாட்டி மங்களம் பெறச் செய்தார்கள் 38

வேறு

வாகை சூடு நல் வள்ளலாகுவன்
ஓகைகொண்டநாள் உயர்ந்துமே தலைப்
பாகை கட்டியே பால்வெண் திங்கள்போல்
ஆகமுற்றிலும் அணிந்து கோபியே 39

தெருட்ட வந்தவன் திசையெலாம்மயல்
வெருட்டி ஓட்டுநல் வீர னாகுவன்
தெருட்டு ஞானமே சேரப் பெற்றவர்
திருட்டி போக்குமே திருட்டி பொட்டிட் 40

சுற்றி சுமங்கலி சூழ விருந்துமே
முற்றும் அறிந்தநல் முனிவர் ஆகுவர்
கற்ற றிந்தனல் கணக்கில் ஞானமுன்
நெற்றிப் பட்டமும் நேரக் கட்டியே 41

சீரணிபெற்றே சிறப்புறு நாளில்
ஓரணிசெய்தே உணவுப் பொருளால்
ஊரணி பெற்றே உலகுக் கெல்லாம்
காரணியிவனென காதணி வித்தார் 42

வேறு

மெய்யில் கோபியே மேவும் வித்தகன்
கையில் பூடணம் புராண புத்தகம்
தொய்வில் துணிவினன் தோளில் மூட்டையின்
பையில் பண்டமும் பாத ரட்சையும் 43

பசியின் துன்பிலாப் பரம னேயென
விசிறி கொண்டுமே விசையின் நடந்திட
நிசியெ னினுநல் நீண்ட கைத்தடி
அசதி இல்லதை ஆகும் குடைகொள 44

வேறு

சாத்திரம் கற்ற சன்னியாசி யானேன்
பாத்திரம் நல்ல பதந்தனைப் பெற்றேன்
மாத்திரைப் பொழுதும் மனத்துயர் கொள்ளேன்
சாத்துயர் நீங்க யாத்திரை கொண்டேன் 45

வேறு

சிந்தாகுலம் கொண்டேமுனாள் சென்றார் சிலர் காசி
நந்தாவிளக் காவீர் நல்ல காலம் உமக் கினிமேல்
நுந்தாயுந் தந்தையென வோவல் இனி நானே
கந்தாயுமைக் காப்பேனென கழறிக்கை பிடித்தே 46

என்றன்மகள் உம்தம்மனை யாக உமக் களித்தேன்
இன்றேயுன தில்லில்லவள் ஏற்கமனமி சைந்தாள்
என்றன் மனம் மகிழும்படி என்றனுடன் வந்தே
மன்றல்வினை முடிப்பீர் என மாமன் அவர் அழைத்தார். 47

வேறு

இற்றைநாள் முதற்றே நல்ல இல்லறம் யேற்கின் றீர்கள்
முற்றவும் பேத மின்றி முழுமனத் துடனே நீவிர்
எற்றைக்கும் கருத்து மாறா தில்லறம் நடத்தல் வேண்டும்
கற்றறி வுடையோர் போற்றும் இல்லறக் கடமை கொண்டே 48

என்றவச் சபையோர் கூற யியல்பமை யிருக்கை யின்கண்
மன்றலம் வினையின் காலம் மணமக்கள் தமை யழைத்தே
ஒன்றிய உள்ளம் கொண்டே உவப்புடன் அமர்ந்த பின்றை
மன்றுளோர் மகிழ்ச்சி கொள்ள மங்கல நாணெடுத்தே 49

திங்கள் வைகாசி யாகும் சிறந்தநற் குருவா ரத்தில்
பொங்குபே ரன்பி னாலே பூவையை நோக்கி யன்னான்
திங்களை மகமேதானும் சேருமவ் வோரை தன்னில்
மங்கல நாண் முடித்தான் மங்கள இசை முழங்க 50

ஏழுடைப் பிறவி போக்கும் ஏழ் மலையானே யென்றும்
ஏழுள நரகம் ஆழா தேற்றுதற் குரிய னென்றே
ஏழுடை இருடி மார்கள் ஏழ்திரை யுகன்றே காணும்
ஏழுல கேற்றும் மேலோன் ஏழடி வைத்திட் டானே 51

வேறு

ஆதி மூலரின்
பாதம் போற்றியே
வேத மந்த்ரமே
ஓதி னார்களே 52

வேறு

நறுமண மலரணிந்தே நாட்டவர் போற்றும்வண்ணம்
ஒருமனதாக அன்றே உவப்புறு உள்ளத்தானார்
திருமண மக்களாகித் தீவலம் செய்தக் காலை
இருமன மற்ற தன்மை இருநிலம் போற்றிற் றன்றே 53

உம்மையிற் பிறவி கொண்ட உயர்சங்கு கர்ணராவார்
இம்மையில் வந்தவற்கு இல்லறத் துணைவி யாவாள்
அம்மியும் மிதித்தாள் ஆங்கே அருந்ததி கண்டாள் என்னே
நம்மனோர்க் காக வந்த நாரணன் விளையாட்டாமே 54

வேறு

மூவாண் டுறுநெல் லிலான முளைத்தலில் பொரியி னாலே
தாவாத யாகம் செய்தே தமையனும் தங்கை தன்னைக்
காவாயென் றீந்த போது களிப்பினார் காளை யற்கே
ஓவாத் துணை யாவனென் றுளி பொன் மோதிர மணிந்தான் 55

ஏகனாய் இறையின் பத்தில் இனிதுறை வேங்க டற்குப்
போகமும் திருவும் சேரப் புதுமணம் வாய்க்கப்பெற்ற
பாகென மொழி பயிற்றும் சரஸ்வதி பாயென் பாட்கு
நாகவல் லியேயென்னு நற்கரு மணி புனைந்தார் 56

வேறு

ஒருமணி தாலிச் சரட்டில் உறுமணி
இருமணி அதனில் இருக்குந் திருமணி
பெருமணி பொன்மணி பிறங்கு நன்மணி
கருமணி மறுமணி கழுத்தில் உறுமணி 57

வேறு

அம்மணி பலரும் வந்தே
அம்மணி கழுத்தி லிட்டார்
அம்மணி இட்ட தாலே
அம்மணி யென வழைத்தார் 58

வேறு

அம்மணி சரஸ் வதிபாய் அழகமர் வேங்கடர்க்கே
இம்மண்ணில் துணைவியாகி யேற்றவச் செயலைக்கண்டே
திம்மண்ணர் பட்டருடன் திருமிகு கோபிகாம்பாள்
அம்ம நீடுழிவாழி அந்தரத்தவர் மொழிந்தார் 59

வேறு

செந்தண்மை பூண்டே வாழும் செல்வராம் வேங்கடர்தம்
பந்தமே கொண்டுவாழும் பான்மையைப் பாரில் பார்த்த
அந்தணராகி வாழ்வோர் அரியின் நல்லடிகள் தம்மை
வந்தனை புரிந்தார் வாழ்த்தி வளமிகச் செழிக்கவேண்டி 60

அறம்பொருள் இன்பம்வீடு அவர்மிக அடையவேண்டி
திறமிகு முறையிலன்னார் திருமாலின் பாதம் போற்றி
பரம்நினை பண்பால் வாழ்வை பாரினில் கொள்ளவேண்டி
உரங்கொளும் உறுதிப் பாடே உற்றிட ஓதினார்கள் 61

அந்தணர் ஆசிகூற அயலுளோர் வாழ்த்தும்போது
பந்தமே யறுக்கும் நல்ல பரமனின் பாதம் தன்னை
சிந்தனை செய்யும் நீரான் திருவருள் திறத்தையெண்ணி
புந்திக்குள் வைத்தே போற்றிப் புகலாப்புன் முறுவல் பூத்தான் 62

அகமிக மகிழந்தே நம்மை அவர்கண்டு முறுவல் கொண்டார்
பகவனின் அருளே என்று பதிநினை சரஸ்வதிபாய்
உகப்பினால் ஒசிந்து நோக்கி உலகவர் காணு வண்ணம்
சிகைதனைக் கோலுவாள்போல் சிறியதோர் முறுவல் செய்தாள் 63

இருவரும் மகிழ்ந்தே நல்ல இல்லற வாழ்வைக் கொண்டார்
பொருவறு சிறப்பின் மிக்க புகழ்மண மக்களா வார்
ஒருவரை ஒருவர் தங்கள் உள்ளத்தில் புரிந்துகொண்டார்
பெரியவர் பலரும் அந்நாள் பெருமகிழ் வெய்தினார்கள். 64

ஆக பாடல் தொகை – 477

## பரிமளப்படலம்

பந்தனை யறுக்கும் நல்ல பரமனின் பாதந் தன்னை
சிந்தனை செய்த தாலே சிறந்திடும் இல்வாழ்க் கைக்கண்
நந்துமெய்ஞ் ஞானத் தாலே நாட்டமுஞ் சிறிது மின்றி
உந்துநல் லுணர்வு தோன்றி யுயர்ந்தவே தாந்தங் கற்க. 1

அண்ணனாங் குருரா ஜன்கண் அவருடை எண்ணங்கூறத்
திண்ணமாய் வேங்கடர்தான் சிறந்திடும் விருப்பத் தாலே
பண்ணவன் கமல பாதம் பற்றுநல் பற்று வென்றே
உண்மையாய் ஊக்கங் கொண்டாற் குறுதியே யளித்தா னிப்பால் 2

மத்துவச் சாரி தன்னால் மகிதலம் போற்றும் பாடல்
தத்துவ விளக்கங் கூறித் தரணிக்கே யளித்தார் முன்னோர்
முத்தியே யளிக்க வல்ல முதன்மையாஞ் ஜயதீர்த் தர்தம்
அத்தகு உரையைக் கற்க அவர்நாட்டஞ் சென்ற தின்னும் 3

திருமிகு விசய ராசர் சிறந்த நூற் கருத்தில் என்றும்
பெருமதிப்புடைய அன்னார் பிழையறக் கற்க வேண்டி
ஒருமதிப் புடைய அண்ணன் உறுதியைப் பெறுதற்காக
ஒருசிறு விண்ணப்பத்தை யோதினர் ஒழுக்கங் கொண்டார் 4

வேங்கட நாதன் விண்ட விண்ணப்பந் தன்னைக் கேட்டு
தீங்கட நாதன் தாளைச் சேருநற் றிறமறிந்தே
நீங்கிட வேண்டும் பாபம் நின்மலன் தாளைப் போற்றி
ஆங்கடன் முடிக்க வேண்டி யவர் விருப்பகத்துட் கொண்டார் 5

குருவவர் வாழுகின்ற கும்பகோணத்திற் சென்றால்
நிருவிகற் பில்லா நாதன் நினைவொடு ஞானமார்க்கம்
ஒருப்பட உள்ளந் தன்னில் உயர்ந்தவ ருடனுறைந்தால்
பெருவிகற் பில்லா தென்றும் பிறங்குநல் ஞானியாவார் 6

எனவவர் கருதி யண்ணன் தனையனை வேங்கடர்தாம்
மணவினை முடித்த சின்னாள் மனத்தினின் விருப்பந்தீர
முனைவனின் அருளால் நல்ல முழுத்தத்தின் கும்பகோணந்
தனை யவர் சேரவேண்டித் தன்மனத் தெண்ணி னானே. 7

வேங்கட நாதர் தானும் விருப்பொடு கும்ப கோணம்
ஓங்குநல் சுதீந்தரர் வாழும் உயர்மடம் அதனிற் சென்றே
பாங்குடன் பயிற்சி கொள்ளப் பரிந்துரை செய்த போது
ஆங்கவர் பெற்ற வின்பம் அளவிடற் கரிய தம்மா! 8

நன்றந்த வாசகந்தான் நற்குரு ராஜன் தானும்
ஒன்றிய உள்ளங் கொண்டே உகப்புடன் உரைத்த போது
தென்றல் தேன் சுவையே தேர்ந்து செவி வழி உள்ளம்புக்கு
அன்றலர் மலரைப் போன்றே அகமலர் அலர்ந்ததம்மா! 9

மலர்ந்தன முகமும் கண்ணும் மனமது மகிழ்ச்சி கொண்டே
வளர்ந்தன மார்புந் தோளும் வருபொருள் உள்ளத் துள்ளி
கலந்தன மனமும் கண்ணும் கரையிலா வாழ்வுகொண்டார்
நிலந்தனில் கண்ணீர் சோர நின்மலன் தாளையெண்ணி 10

பாலனாய் இருந்தபோதே பார்த்தேனப்போது நானே
சாலவுஞ் சிறியனாவேன் தரிசித்த போதே நோக்கி
வாலறி வினனாய் எண்ணி வணங்கிய என்றனு க்கே
ஏலவே தந்தை முன்னால் இயல்பின் நல்லாசி சொன்னார் 11

அத்தகு குருவைக் காண அனுமதி கொடுத்ததாலே
மெத்தகு கலை ஞானந்தான் மேன்மையாய் வளர்தற்கேற்ற
சித்தமும் அழகிதாகிச் சீரருள் பெறுதற்குள்ள
உத்தம குருவைக் கண்டே உவந்தருள் பெறுவே மென்றார் 12

இற்றைக்கே ஏழாம் நாளில் இனிதமை குருவாரத்தில்
கற்றவர் போற்றற் கேற்ற கருமுகில் வண்ணன் வாழும்
அற்றவர்க் குதவும் அண்ணல் அரியின் நன் மடத்திற் சென்றே
யுற்றவர் பாதந் தன்னில் உறைந்தென் றும் வாழ்வீர் என்றார் 13

கும்பகோணத்தில் வாழும் குருசுதீந்தரரின் முன்னே
அம்புவி சிறக்கற் கேற்ற அவர்திரு வடிவணங்க
நம்பியாம் வேங்கடர்தம் நன்முக நோக்கி நாளும்
உம்பரின் அருளின் வாழ்வீர் என்றவர் உரைத்திட்டாரே 14

அவ்வியமற்ற நல்ல அந்தணர் குலத்தின் வந்த
நவ்விகோபி காம்பாள் பெற்ற நம்பி வேங்கடவர்தம்மை
திவ்விய குணம்படைத்த திம்மண்ணர் வந்தபோதே
செவ்விய குழந்தை என்னே சிறப்புற்றான் என மொழிந்தார் 15

நாயினும் கடைய னாவேன் நானுங்கள் அடியில் தாழ்ந்தேன்
சேயொன் று அடர்ந்த காட்டில் திசைமாறிச் சென்ற பின்னே
தாயினைக் கண்டதேபோல் தகுமுணர்வுளத்தில் தோன் றும்
ஆய தன்மைய தானேன் ஆதரித்தருள்வீர் என்றார் 16

சிரந் தாழ்த்தி வணங்கி யன்னார் திருவடி சென்னி தாழ்த்தி
உரந் தனில் தோன்று மையம் போக்கிட வேண்டுநாயேன்
பிறந்த நற்பயனை யானே பெற்றிட வேண்டும் பாரில்
சிறந்த இம்மடத்தில் தங்கள் சீடனாம் விருப்பமென்றார் 17

வேங்கடநாத உன்னை விரும்பியே யேற்றுக் கொண்டேன்
பாங்குடன் கல்விகேள்வி பரிவுடன் கற்றுத் தேர்வாய்
தீங்கட வேண்டுந் தேயஞ் சிறந்திட வேண்டுமென்றே
நாங் கடன் கொண்டோ மென்று நாதனை நோக்கிச் சொன்னார் 18

களைப்பொடு வந்தாய் நீயுங் கடும்பகல் துன்பம்மிக்க
இளைப்பினை நீக்கிச் சற்றே இருந்தபின் வருதல் நன்றாம்
திளைத்தநல் லின்பத் தன்னார் திருவருட் டுணையின் பாசத்
தளையினை யறுக்கும் மேலோன் தயையுடன் உரைத்தார் நன்றே 19

உரைத்தவர் வாசகந்தான் உறுமுன்னங் காதிற் சென்றே
உரத்தினில் உவகை கொள்ள உடலது புளகம்பொங்க
கரத்தினைத் தலைமேற்கூப்பிக் கழலின்கண் வீழ்ந்த போதே
பரத்தினை யுணர்த்தும் மேலோர் பரிவினைப் பெற்றுவிட்டார் 20

உலகினிற் பிறந்தோரெல்லாம் உயர்ந்தவர் தாழந்தோர் என்றும்
நிலவிய கொள்கை தன்னால் நிதந்துன்பம் எய்தக் கண்டாய்
பலவிகற்பங் கள் உள்ள பாரினில் மக்கள் நாளும்
அலகிலாத் துன்பம் எய்தல் ஆசையாலாகுமென்றார் 21

யானென் றும் எனதேயென் றும் அகப்புறப் பற் றுக் கொண்டே
கோனென் றுங் குடிகளென் றுங் குவலயம் கூறு பட்டே
தானொன் றில் பரிவு வைத்தே தரணியின் வாழ்க்கை கொண்டார்
வானொன் று நெறி மறந்தார் வழிவகை செய்யு மோதான் 22

பற்றினால் அன்றோ வாழ்வு பற் றுமப் பற்றைவிட் டு
பற்றிலா பரமன் தாளைப் பற் றுமப் பாதை தேறேன்
பற்றினேன் பாதந் தன்னை பரமனின் பாதந் தன்னில்
பற்றிலேன் பற் றும்வண்ணம் பரவிடப் பகர்வீ ரென்றார் 23

சிறுமதி கொண்டோர் மண்ணில் சிற்றறி வுடையோரானார்
உறுமதிப் புடைய மேலோன் உடையவன் பாதம் போற்றார்
பெருமதிப்படையும் பேறே பேருலகு இன்பம் தன்னை
தருமதிப் பெல்லாம் இந்தத் தரணியில் பொருளென்றெண்ணி 24

முடிசார்ந்த மன்னர்தாமோ மற் றுள மக்கள் தானும்
பிடிசாம்ப ராகிப் போனார் பெற்றிடும் பேறோன் றுண்டோ
படிசார்ந்த வாழ்க்கை கொள்வோர் பரமனின் பாதம் போற்றி
அடிசார்ந்தே உய்ய வேண்டும் அறிவுநல் அறிவு என்றார் 25

காட் டிற்குச் செல்வதெங்கன் கடுந்தவம் இயற்றல் எங்கன்
நாட் டிலே இருந் துகொண்டே நாதனின் பாதம்போற்ற
ஏட் டிலே படிக்கவில்லை இறைவனின் அருளும் இல்லை
வீட் டிலே இருந் து கொண்டே வீட் டினைப் பெறுவதெங்கன்? 26

கடமையைக் கருத்தில் கொண்டே கட்டுடன் நடப்பாய் நன்றே
மடமையை மாற்றவல்ல மன்னனும் மறக்கலாமோ
உடமையை உள்ளத் துள்ளி உவப்பி லாச் செயல் செய்யாமல்
திடமுடன் கொள்கை கொண்டால் திண்ணமாம் வீடு பேறே 27

மண்ணினில் மக்களெல்லாம் மயங்கிழுவாசையின்கண்
திண்ணமாய்க் காக்குமென்றே திரிபுடன் போதுபோக்கி
அண்ணலின் பாதம் தன்னை அணுகிட வேண்டுமென்ற
எண் ணமும் இல்லாதாகி இருப்பது எதனா லென்றான்? 28

மண்ணினில் மக்கள் கொண்ட மாயையின் காரணத்தால்
பண்ணுநற் செயலை ஓரார் பாரினில் வாழ்வையெண்ணி
ஒண்ணுதல் அரிவை மீதும் உயர்பொருள் உலகம் மீதும்
எண்ணமே கொண்டு ளார்கள் இறைவனை எண்ணிப்பாரார் 29

நல்லறி வில்லேன் நாளும் நானில மயக்கங் கொண்டேன்
புல்லறி வதனால் பாரில் பொருளிலே ஆசை கொண்டேன்
தொல்லையாம் பிறவித் துன்பம் துடைக்குநல் லுணர்வு மில்லேன்
அல்லலை நீக்க வெண்ணா அறிவிலேற் கருளும் என்றார் 30

என் றுரை வேங்கடர்தன் இன்சொல்லைக் கேட்ட தீர்த்தர்
நன் றுநும் எண்ணம் இந்த நானிலஞ் சிறப்புற்றோங்கி
பொன்றலில் லாது மக்கள் பொலிவுடன் விளங்குங்காலம்
ஒன் றிடும் தன்மை சொன்னால் உறுமையம் நீங்குமென்றார் 31

இனம் மொழி நாடென்று எண்ணும் இக்கருத்துடைய மக்கள்
மனமதில் பற்றுவைத்தே மதமெனும் பேயால் பற்றித்
தினம்பல கொலைகள் செய்தே தீவினை மிகுந்த தாலே
தனையுணும் அறிவில் மாந்தர் தரணியில் துன்பம் கொள்வார் 32

தவமது செய்வா ரன்றோ தமது நற் கருமம் செய்வார்
தவமது செய்வோமென்றே தருவனம் செல்ல வேண்டா
சிவமது நினைவாய் நாளும் சிந்தனைசெய்வா யாகில்
பவமதை அறுப்போன் பத்ம நாபனே எனமொழிந்தார் 33

புயல்மிகத் தாக்குநாளில் புகலின்றி மக்களெல்லாம்
செயல்திறன் அறிந்தே யன்னார் செய்வதும் அறியாதாகி
அயலொரு நாளில் ஆங்கண் அமைதியுற்றிருப்பதே போல்
வியனுல கொருநாள் மக்கள் வேதனை யடைந்தே யோர்வர் 3

பொருளிலே நாட்டங் கொண்ட புவிமிசை மக்களெல்லாம்
சிறுவிலைக் காலம் போன்றே சீரழிந் தழிவர் அன்னார்
மருளுடை மனத்தரானோர் மாண்பொருட் கருத்தையோரார்
திருவருள் திறத்தை யோர்வர் தீவினை யற்றோ ரார்வார். 35

வேதாந்த விளக்கமெல்லாம் விருப்புடன் வேங்கடர்பால்
போதாந்த முனிவர் என்றே புகலுநல் தீர்த்தர் கூற
கீதாந்த விளக்க மென்றே கேட்டனர் கீர்த்தி மிக்க
நாதாந்தன் அடியை நாடல் நற்றவத்தர்லே யென்றார் 36

குருவுடன் வேங்கடன்தான் குறுகியே இருக்கக்கண்ட
சிறுமதி கொண்ட சீடர் சிலருடைத் தீய எண்ணம்
பெருகியே வளர்ந்தபோது பெருமதிப்புடைய ஆசான்
தருமதிப்பெல்லாம் நாதர் தமக்கோ வென்றேசினார்கள் 37

நன்மதிப்பதுதான் தீர நங்குரு தனையே கண்டு
சின்மதி வேங்கடர்மேல் சீற்றமே கொள்ளச் செய்தால்
என்மதி சிறந்ததாகும் இனியநல் திட்டமென்றே
புன்மதிச் சீடர் சில்லோர் புறஞ்சில பேசினார்கள் 38

பேசினார் சீடர் பல்லோர் பேசிடாப் பொய்ச் சொற்கூற
கூசினார் இல்லை யன்னார் கூறினர் வேங்கடர்மேல்
ஏசினார் தீய சொல்லை ஏதமில் வேங்கடர்பால்
ஆசியே யுரைத்த ஆசான் அதிர்ச்சிதான் மிகவே கொண்டார் 39

நன்றுநன் றுங்கள் வார்த்தை நானவன் றனையே காண்பேன்
இன்றுநும் ஐயம் போக்கி யின்னலைப் போக்குவேன் யான்
என்றனர் அவர்களெல்லாம் ஏற்றனர் பாடம் ஓதப்
பொன்றலில் உள்ளத் தன்னார் பொன்னடி வணங்கிநின்றார் 40

கற்றறிவுடையோரெல்லாம் கடவுளின் இருக்கை தேர்ந்தார்
சிற்றறிவுடைய சீவனுடனவன் உறைவதாக
முற்றறிவு டையமூல காரணன் முளரிப் புத்தேள்
உற்றறியாதான் பாதம் உரைப்பதற் கரியதாமே. 41

போற்றி செய் புகழ்கொள் நாத பூமியின் பிறந்தார் சீவன
வீற்றிருந் தருளும் வேத வித்தகன் எனவுரைத்தார்
மாற் றுயர்ந் தோங்கும் தீர்த்தர் மனத்தினின் குறிப்புத் தோன்ற
ஏற்றவா றெடுத்துக் கூறி ஏலவே யுணரவேண்டி. 42

உலகிற்கே யொருவனாகி உற்றிடும் உயிர்கள்கொண்ட
அலகிலா வினைகட்கெல்லாம் ஆற் றுமத் தன்மைக்கேற்ப
பலன்களை அளிக்கும் மூர்த்தி பாதத்தை பற்றியேதான்
சிலர் தொழுதேத்தி இந்தசெகமதில் சிறக்க வாழ்ந்தார் 43

என்றவர்க் கெடுத்துக்கூறி இறைவனின் பாதம் தன்னைப்
பொன்றலின் உள்ளத் தன்னார் பொன்னடி போற்றி செய்தார்
இன் றுநும் பாடம் ஓதல் இத்துடன் முடித்துவிட்டோம்
நன் றுரை விளக்கமெல்லாம் நாளைய பாடம் என்றார் 44

பொன்றிடாப் புகழ்மிக் கோங்கும் புண்ணியன் முதல் பல்லோரை
இன்றிரா முழுவதும் சீடர் இயற்றிடும் வினைகள் தம்மால்
கன்றிடா தவர்கள் கொண்ட கருத்தினை அறியத் தீர்த்தர்
இன்றிரா தனிலே காண்பேன் எனவவர் எண்ணங்கொண்டார் 45

குருகுலந் தனிலே வாழும் குணமுடைச் சீடர் தம்மை
குருவவர் காணவேண்டி குறிப்பொடு நோக்கிச் சென்றார்
திருவருள் நினைவர் யாரோ தீயவர் யாரென்றெண்ணி
ஒருபெருந் தலைவராவர் உயர்குரு நோக்குங்காலை 46

சின்மதி சீடர் சொன்னார் செய்பிழை வேங்கடன்தான்
நன்மதிப்பில்லார் நாளும் நவைபல செய்கின்றாரால்
பொன்மதிப்பதனைப் போன்றே பொருள் புரி வேங்கடர்பால்
துன்மதி தூர்த்தர் சொல்லைத் துலையென நிறுக்கலுற்றார் 47

அவரவர் உண்ட பின்னே அனைவரும் உறங்க நாதர்
பவமறுத் துலகே நல்ல பரிசுடன் விளங்கவேண்டி
தவச்சிறு வயதில் ஞானந் தலைப்பட்ட தன்மையாலே
தவமது பெறுதல் ஞானி தன்குரு வார்த்தையோர்ந்தார் 48

திருவருள் கொண்ட தீர்த்தர் திருவுடை வேங்கடர்பால்
பெருமதிப்புள்ள அன்னார் பிழையேதும் செய்துள்ளாரோ
குருகுலம் தன்னில் சென்றே குருவவர் தேடுங்காலை
ஒருசிறு நாத ரன்றி உள்ளவர் உறங்கக் கண்டார் 49

நாதனைக் குருவும் காணார் நவையேதும் செய்துள்ளாரோ
வேதனை யாலே அன்னார் வேறிடஞ் சென்றுள்ளாரோ
சோதனை செய்வோமென்றே சூழ்ந்துமே பார்க்கும் காலை
சாதனை யியற்றிச் சாரல் பனியினில் உறங்கக் கண்டார் 50

சருகுகள் எரிந்தே யங்கு சாம்பலும் இருக்கக் கண்டார்
அருகிலே இருந்த ஏட்டை எடுத்துத் தன் கையிலேந்த
பெருவியப் படைய முன்னம் பேசிய பொருளுக்கேற்ப
அருமையாம் விளக்கமெல்லாம் அவர் திரு ஏட்டில் கண்டார் 51

ஒருவனே உலகிற்றெய்வம் உயிர்தொறும் ஒளித்து நின்றான்
அருணனாய் உலகில் தோன்று மாதவன் அவனைப் போன்றான்
திருவுடை குளமுங் குட்டை தேங்குநீர் நிலைகள் ஆதி
ஒருசிறு குடமு மென்றே ஓதிடும் அவையனைத்தில் 52

திரையற்றுத் தெளிந்த பின்னே தெரிந்திடும் ஆதவன்போல்
உரைசெயற்கரிய மேலோன் உறுவியப் படையும் தோற்றம்
புரைவதே புங்கவன்தன் புரைவறு மேலோன் பாதம்
உரை செயற் குரிய தன்றாம் உணர்வர்தம் உள்ளத் துள்ளே 53

கடமது குடமதெல்லாம் கருதுநம் உடலதாகும்
இடமதாய் இருக்கும் நீரே இயலுநற் சீவ னாவான்
திடமுடை மனமுங் கொண்டே தெளிவுடன் இருக்கும்போது
சடலமென் றுரைக்கற் பாற்றோ சருவலன் வாழ்வ னாங்கே 54

ஆதவன் இன்றேல் நீரில் அவனுடை உருவந் தோன்றா
மாதவன் உண்மை தேர்வீர் மகத்துவங் கொண்டே மாந்தர்
சீதரன் அருளைப் பெற்றே சீர்த்தியைப் பெற்றுள்ளார்கள்
ஆதலால் அவனின் ஆட்சி அங்கையின் நெல்லியாமே 55

என்றந்த வாசகந்தான் எழுதிய ஏட்டைக் கண்டார்
சென்றந்த நாதர் மண்ணில் சீரழிந்து இருக்கக் கண்டார்
கன்றின் பால் தாய்க்குண்டான கனிவுடன் தீர்த்தர் தாமும்
நன்றென தம்பால் உள்ள நற்கன காம்பரத்தை 56

போர்த்தினார் வேங்கடர்மேல் புகன்றிட்ட சுவடி கொண்டே
வார்த்தையால் அளக்க லாகா வரிசையைக் கண்டு போற்றி
நேர்த்தியாய் நிமலன் பாதம் நினைவுமவ் வேங்கடர் தன்
சீர்த்தியை நினைந்து சென்றார் சீர்த்தியைப் போற்றுநாடே 57

நென்னல் யாம் செய்த நல்ல நேர்த்தியாம் சோதனைக்கண்
இன்னல்தான் ஏதுமின்றி இனிதென உறங்க மற்றோர்
நன்னயங் கொள்ளுநாதன் உரையினால் அறிந்து கொண்டோம்
பன்னுதல் நன்றாம் அன்னோர் பரிமளர் ஆவனென்றே 58

ஞாலமே புகழுநல்ல ஞானியாய் ஆவர் மிக்க
சீலமே மிகுந்த நாதர் சீர்த்தையைப் பார்க்கும்போது
வாலறிவினனை யன்னார் வடித்தநல் வாசகத்தால்
மாலற உணரும் நல்ல மாணவர் என மதித்தார். 59

அங்கவர் சென்ற பின்னே அடுத்தநாட் காலை தன்னில்
துங்கநல் வேங்கடர் தாம் துயிலெழ விழித்துக் கண்டார்
புங்கவர் போற்றும் பொன்னின் புனிதமாம் ஆடையே தன்
அங்கமீ திருக்கக்கண்டார் அவர் உடல் நடுக்கம் கொண்டார் 60

என்னே யான் பாவம் செய்தேன் இத்திரு ஆடைதன்னை
உன்னுநல் உரிமை உண்டோ உற்றிடும் தகுதியுண்டோ
என்மீதே வந்ததெங்கன் யாரிதைச் செய்தாரென்றே
பொன்மீதே பற்றிலாத புங்கவர் புலம்பலுற்றார் 61

சீலமே கொண்ட நாதர் தீர்த்தரில் சென்றே யன்னார்
காலையில் குருவைக் கண்டே கழலினை வணங்குங் காலை
ஏலவே எடுத்துக் கூற வியலாதே ஏக்கங் கொண்டார்
சாலவே யவர் பாற் கொண்ட தயவினால் அவரைப் பார்த்தே 62

புன்னகை கொண்டார் அன்னார் பொருள் புரி வேங்கடர் பால்
பன்னுதல் என்னே வேத பாடமாம் உரையிற் காண்பாய்
இன்னலும் தவிர்ந்தே நீதான் இருப்பிடம் செல்வாய் என்றே
கன்னலின் மொழியே யென்னக் கனிவுடன் கூறிச் சென்றார் 63

குருவவர் கூறுஞ் சொல்லின் குறிப்பினை அறிந்து கொண்டே
அருணனுமுதிக்கு முன்பே அனுட்டானம் முடித்துவந்தார்
பெருவிகற் புற்றே பல்லோர் பேசுமவ் வார்த்தை கேளார்
ஒருமுறை முன்னம் தீர்த்தர் ஓதிய பாடம் ஓர்ந்தார் 64

இருக்கையில் அமர்ந்திருந்தே எழில்குரு வரவைப் பார்த்தான்
தருக்கெலா மற்ற நாதர் தமைபலர் பேச்சும் பேச்சால்
நெருக்குற்றா ரல்லர் உள்ளம் நென்னலின் விளைவுநோக்கி
உருக்கமாய் உள்ளத்துள்ளே ஓர்ந்தனர் ஒருமையுற்றே 65

அரியவன் தோற்றம் கூறி அரிதனை அறியச் செய்தார்
பரிமளமான ஞானம் பாரினில் பெற்றார் நாதர்
திரிபையம் அற்றே யன்னான் திருவருள் பெற்றதாலே
பரிமளாசாரி என்ற பட்டமும் வழங்குகிறேன். 66

மூவகையாக உள்ள மாணவர் தன்மேலே யன்னார்
தாவிலார் புகழ்பெற்றுள்ள தலைமையாம் நிலையடைந்தார்
நாவினால் வழுத்த வொண்ணா நயமெலாம் விளங்கப் பெற்ற
தேவியல் நூல்கள் யாக்கும் திருமிகு நாதராவார் 67

ஆதலால் அவர்க்கு நானே அர்த்தராத்திரியில் சென்றே
காதலால் மிக்குத் தோன்றக் கனகமாம் ஆடை நல்க
சீதரன் அருளைப் பெற்றான் திருமிகு வேங்கடர் தா
மோதரன் அருளினாலே முத்தியை அளிப்போராவார் 68

என்றுமே யாசான் நல்ல எழில்மிகு வேங்கடர்பால்
ஒன்றிய உள்ளம் கொண்டே உரைத்தவவ் வுரையைக் கேட்டே
கன்றிய உள்ளம் கொண்ட கடையராய் உள்ளோர்க் கெல்லாம்
அன்றலர் மலரைப் போன்றே அவர்முகம் மலர்ந்ததம்மா 69

பரிமளர் பட்டம் பெற்றார் பாரினில் வேங்கடர்தாம்
உரியவராவறென்றே உடனுளோர் உரைத்தபோது
பரிவினால் பகவன் நாமம் பகருநல் நாதர் பாரில்
தெரியவே மக்கட்கெல்லாம் திருவருட் செயலே யென்றார் 70

**ஆக பாடல் தொகை – 547**

## மகப் பேறு படலம்

அந்தணர் சுதீந்திர தீர்த்தர் அவரின் ஓராண்டுகாலம்
செந்தண்மை கொண்டே வாழ்ந்தார் சிறப்பவர் பெற்றபின்றை
பந்தமே கொள்ளப் பாரில் பாரதி பெயராம் மங்கை
சிந்தையே மகிழ நாதர் சிந்தனை செய்யலுற்றார் 1

இப்படி வாழ்வில் எண்ணம் இலார் அவர் இறைவன்பாதம்
ஒப்புயர்வற்ற தென்றே உணருநல் வேங்கடர்தாம்
செப்புநல் அறத்தை நாமும் செகமதில் கொண்டுவிட்டோம்
தப்பிலா தவ்வறத்தைத் தரணியில் ஆற்றவேண்டி 2

தாவாத யாகஞ் செய்தே தமையனும் தங்கை தன்னைக்
காவாயென் றீந்த வந்த காளையும் களிக்க யானே
ஓவாத துணையே யாவ னெனவவர்க் குறுதி தந்தே
நாவாலே கூறினானே நங்கையை நாடலுற்றார் 3

அவனியின் இல்ல றத்தை அவர்மிக நடத்த வேண்டி
தவனனாய் வாழும் நாதர் தங்குல மடந்தை நல்லாள்
கவனமாய் மனத்திற் கொண்டே கடமையை யாற்றுதற்கே
புவனமாங் கிரியில் வாழப் பொங்குபே ரன்பிற் போந்தார் 4

சுதிந்தர தீர்த்தர் தம்மால் சுருதியைக் கற்றுத் தேர்ந்த
அதித மான மேலாம் அவனுடை ஆற்றலெல்லாம்
சதிரென சேரும் மேலாஞ் சரஸ்வதி அம்சம் அன்னான்
பதியினைச் சேர்ந்தே பல்லோர் பலகலை பயின்று வந்தார் 5

இருமையாம் உலகந் தன்னின் இயற்கையாம் உரையிற் கேற்ப
அருமையாம் நங்கை நல்லாள அன்பினைப் பெற்றபோதே
திருவறச் சென்று சேரத் திறமுடன் வேங்கடர்தாம்
வறுமையே யுற்று வாழ்ந்தார் வளத்தகும் செல்வமின்றி 6

புறம்பல பேச மாந்தர் புவியினில் பொருளை நாடி
மறம்பல செய்யும் வாழ்க்கை மாண்பில வாதல் கண்டார்
அறம்பொருள் இன்பம் வீடு அவனியில் அடையவேண்டி
திறமிகுந் தருள்கொள் மேலாந் திருவருள் துணையை வேண்ட 7

பழியின்றிப் பொருளைப் பெற்றோர் பாரினில் சிறக்க வாழ்ந்தார்
வழியினை ஓராதோர்கள் வஞ்சனையாலே செல்வக்
கழிபெறும் ஆசைகொண்டே காலத்தைக் கடத்துகின்றார்
அழிவின்றி நிற்பதற்கே அது துணையாகுமோ சொல்? 8

மன்னாயிவ் உலகில் நீயும் மன்னுதல் வேண்டுமென்றால்
பொன்னார்வ மற்று மேலாம் புகழின் மேல் ஆர்வம் கொள்வாய்
என்னா லொன்றாவதில்லை இறையருள் என்றே வாழ்தல்
உன்னார்கள் ஆதலாலே உறுவர்பல் துன்பம் எல்லாம் 9

அறத்தை நன் காற்றுதற்கே அவன் மனம் தூய்மைவேண்டும்
திறத்தை நீ யறியவேண்டின் திருக்குறள் நெறியைத் தேர்வாய்
பரத்தையே நாடுதற்குப் பாரினில் பொருள் வேண் டாத
திறத்தைநீ அறிவாய் ஆகில் திருவருள் துணையுண்டாமே 10

பகுத்துண்டு வாழ்தல் ஒன்றே பாரினில் இன்பமாகும்
வகுத்துத் தன் குறளில் சொன்ன வள்ளுவன் வாழ்க்கையோர்வாய்
செகுத்துயிர் உண்ணும் வாழ்க்கை தீநெறி செலுத்தும் என்றும்
தொகுத்ததை உலகுக் கீயும் தூநெறி போற்றுவாரே 11

அவரவர் கடமையாற்ற அவரவர் எண்ணங் கொண்டால்
தவறிலாத் தரணிவாழ்வில் தண்ணளியுடையோராவார்
அவரவர் கடமை யோராதாசைதான் கொண்டே மக்கள்
தவறிழைத் துள்ளதாலே தரணியே துன்பத் தாழ்ந்த 12

என் றுமே கடமை ஓர்ந்தார் இறையருள் கொள நினைந்தார்
நன்றென ஆகுமின்பம் நானிலத்தவர் தேர்ந்தாரே
என்றென் றும் வரும் சீடர்க்கே இயலுநல் கடமையாற்றி
என் றுமே பொருளின் மீதில் இச்சையே இன்றி வாழ்ந்தார் 13

பொருளிலா இல்வாழ்க்கைக் கண் பொருளறி வேங்கடர்தாம்
மருளறு குணத்தின் அன்னார் மனைபலம் பெற்றதாலே
பொருளற்றார் அற்றாராகார் பூப்பரென்றறிந் தநாதர்
திருவினைப் பெறவே என் றும் சீடர் பாற் சென்றதில்லை 14

பட்டமும் பெற்றார் நல்ல பரிமளர் ஆனநாதர்
கட்டத்தை எண்ணித் தம்பாற் கலை தனைக் கற்பார் கண்ணும்
பட்டிடுந் துன்பம் தன்னைப் பகரவும் மனமும் கொள்ளார்
கட்டத்தால் கலையின் மாதால் காசுதான் கொள்ளலாமோ 15

என்றவர் கொள்கை தம்மால் இனிதென தம்பால் கற்கும்
நன்றென வருஞ் சீடர்தாம் நல்கிடும் பொருளை நாடார்
குன்றெனப் பொருளிலாற்கும் குவலய வாழ்வே உண்டாம்
என்றிடும் கொள்கை கொண்டே இருநில வாழ்க்கை கொண்டார் 16

வறுமையே உற்றார் வாழ்வில் வண்பொருள் இன்றி வாழ்ந்தார்
சிறுமையே உற்றார் கல்விச் சீரெலாஞ் சேரப் பெற்றார்
குறையேதுமின்றி நாதர் குவலயம் சிறக்க வேண்டி
நிறைகுணச் செம்மல் என்னே நிகரிலாத் தந்தையானார் 17

இலக்குமி இல்லம் விட்டே ஏகினாள் என்றதாலோ
இலக்குமி நாதன் தன்னை இறைஞ்சியே இருந்தபோதும்
இலக்குமி அருளும் வேண்டி ஈன்றவக் குழந்தை தன்னை
இலக்குமியோடே நாமம் நாரணன் எனவழைத்தார் 18

தீர்த்தர் தம் மடத்தை விட்டுத் திரும்பியூர் வந்தபோது
தீர்த்தர்தம் அருளால் சேர்ந்த செல்வமும் கொண்டுவந்தார்
தீர்த்தர் தம் அருளே மிக்குச் செல்வமும் தீர்ந்தபோது
தீர்த்தர் பால் வைத்த அன்பு சிறந்ததே குறையவில்லை 19

ஆக பாடல் தொகை – 566

## மந்தர மகிமைப் படலம்

பெருமனை யதனில் வாழும் பெற்றிமை தனையோர்ந்திட்டார்
இருவரின் வாழ்க்கை தன்னில் இல்லறம் சிறக்க வேண்டி
திருவருளாலே வந்த திருமகன் தனையே யெண்ணிப்
பொருள் பெற வேண்டுமென்றே புறப்பட்டார் நாதர் தாமே 1

அதிகாரி ஒருவர் வாழ்வார் அயல தாம் குளக்குடிக்கண்
அதிகாரி மனையில் யாகம் ஆற்றுமச் செயலறிந்தே
இதுநல்ல தருணம் மேலாய் இயன்றிடும் கடமையாற்ற
சதுர்வேதந் தனையே கற்ற சான்றவர் நினைக்கலுற்றார் 2

வேதமே கற்று வாழ்ந்தார் வித்தகர் வேங்கடர்தாம்
மேதகு வேதமெல்லாம் மேதினி விளங்கவேண்டி
வேத மந்திரத்தையோதும் வேள்வியை நாடியேதான்
வேதமே ஓத நாதர் விரும்பினார் கடமையாக 3

கடமையை யாற்ற வந்தார் கடனறி வேங்கடர்தாம்
உடமையை உள்ளத்துள்ளி உணர்விலர் உற்றுநோக்கி
திடமிலார் வேலைசெய்தே தினம்பெறும் கூலிக் காவார்
இடமிதில் சிறப்புண்டோ வென்றெண்ணியே அவர்பாற் சென்றே 4

வேலை நீ செய்த பின்பே விருந்தினை உண்ண வேண்டும்
ஆளையே கண்டான் அல்லால் அவருடைச் சிறப்பை ஓரார்
மூலையே சென்று நீயும் முயன்று சந்தனம் அரைத்துச்
சாலையில் அமரச் சொன்னார் சந்தனம் அரைக்கச் சென்றார் 5

சுதா பரிமளத்தை யன்னார் சொற்பிழை யேதுமின்றி
சதா அவன் நினைவா எண்ணிச் சந்தனம் அறைத்துபின்னும்
இதோஇது போதாதென்ன இன்னமும் அரைக்க வேண்டி
சுதாபரிமளத்தோ(டு) அக்னி சூக்தமும் நினைந்தறைத்தார் 6

அனைவரும் உண்டியுண்ண அமர்ந்திட அவருள் நாதர்
தனைப்பலர் காண அன்னார் தகுதிதான் இல்லையென்றே
பினையமர்ந்து உண்பாய் என்று பேர்ந்தவர் செல்லவேண்டி
அனைவரோடுணவு உண்ணாதே அகற்றினர் அருளிலாதோர் 7

உண்டனர் ஒருங்கமர்ந்தே உயர்ந்தநல் எண்ணம் இன்றி
கண்டனர் கடமையாற்றும் நாதரைக் கருணையின்றி
பண்டுநால் வேதம் தன்னை பாரினில் பயின்றார் தம்மை
தெண்டமாய் உண்ண வந்தார் எனச் சிலர் பேசினார்கள் 8

ஆனந்தமாக உண்டார் அனைவரும் பூசநற்சந்
தானந்தான் கொண்டே வந்தார் தம்முடற் பூசிக் கொண்டே
ஆனந்தமிகவே கொண்டார் அறுசுவை உணவை உண்டே
ஆனந்த மாக வேதான் இருக்குமவ் வேளை தன்னில் 9

பூசினார் சந்தனத்தைப் பொன்போன்ற உடலின்மீது
வீசியதணலே யென்ன வெம்மையால் உடலம்வெம்பி
ஏசினார் யாரோ இந்த சந்தனம் எடுத்து வந்தார்
பேசினார் பல்லோர் பூசும் சந்தனப் பிழைதான் கண்டே 10

அறைத்தவர் யாரோ அவரே ஆற்றினர் பிழையே என்று
முறைத்தனர் கண்பிதுங்க மூச்செறி மிகவே கொண்டு
விரைத்தனர் உடலம் வெம்பி வெம்மையை யாற்றுதற்கே
குரைத்தனர் போல வன்னார் கூவினர் குறையற்றாரை 11

வேங்கடநாதர் தம்மை விருந்தினர் அழைத்து வந்தே
தீங்கு செய்தவரே என்று திருவிலார் கூறினார்கள்
ஈங்கிதன் தன்மையோரேன் எனவவர் கூறப் பந்தி
நீங்கிடச் செய்ததாலே நீயே இப்பிழையைச் செய்தாய் 12

என்றவர் சொன்னார் ஆங்கே எழில்மிகு வேங்கடர்தாம்
ஒன் று நான் கூறுகிறேன் உறுமதன் பிழைதான் என்னால்
அன்றென உணர வேண்டும் அக்கினி சூக்தம் சொல்ல
நன்றென வறைத்தேன் என்ற நாதனின் உரையைக் கேட்டார் 13

எஞ்சிய சந்தனத்தை எடுத்துமே வரச்சொன்னாரே
விஞ்சுநற் புகழ்தான் கொண்ட வேங்கடர் வேதந் தன்னால்
நஞ்செனவாகும் சாந்தம் நவிற்றிடும் வாக்கினாலே
வஞ்சனையற்றான் வருண சூக்தத்தை வடித்துச் சொன்னான் 14

மிஞ்சிய சந்தனத்தை மேனியில் பூசினார்கள்
மஞ்சனமகிழ மேனி மழையெனக் குளிர்ந்ததம்மா!
விஞ்சுநல் வேதம் கற்ற வித்தகர் வேங்க டர்தாம்
அஞ்சன நிறத்தான் அம்சம் அவரென உணர்ந்துகொண்டார் 15

வேங்கடநாதர் தாளில் விருந்தினர் வணங்கலுற்றார்
தீங்கினைப் பொறுக்க வேண்டும் திருவருள் திறத்தையோரோம்
நீங்கிட வேண்டும் குற்றம் நின்மலன் அருள்பா லிக்கத்
தாங்களே உதவ வேண்டித் தாளினைத் தொழுது சென்றார். 16

**ஆக பாடல் தொகை – 582**

## உளத்துறவு படலம்

தாளினை வணங்கக் கண்டான் தண்ணளி யுடையநாதர்
தாளினை வணங்கற் கேற்ற தகுதிதான் இல்லையென்றன்
தாளினை பற்றுவோர்க்கு தயைபுரிந் தருள்வாய் என்றே
தாளினை நினையல் உற்றார் தயாபரன் அருள்பாலித்தான் 1

பற்றினார் நல்லபற்றை பரம்பொருள் பதத்தேயன்றி
மற்றுவே றென்றும் அன்னார் மனத்தினிற் கொள்ளவில்லை
எற்றிற்கிவ் வுலக வாழ்க்கை இன்னலே நிறைந்ததென்றே
கற்றறிவுடைய நாதர் கருத்தினில் நினையலுற்றார் 2

உறுதியாக் கொண்டார் பாரில் உறுபொருள் உயிர்க்கே என்றும்
இறுதியே வந்தாலென்னே இறைவனின் பாதமல்லால்
உறுதிவேறில்லை நாளும், உறுதுணையாகுமென்றே
உறுதியாய் கொண்டார் நன்றே உளத்திடத் துறவு பூண்டார் 3

உறவினா லுணர்வு பெற்றார் உடையவன் பாதந் தன்னை
திறமுடன் பற்றுவோர்க்கே தீவினை அகற்றுமேலோர்
வரமது பெற்றும் என்னே வையத்து வாழ்க்கை கொண்டால்
சிரமமேயல்லால் என்றும் தீவினை அகலுமோதான் 4

நானென்னும் அகந்தை யற்றேன் நாள்தொறும் பொருளை நாடேன்
ஏன் இந்த இல்வாழ்க்கைதான் என்றவர் எண்ணியேதான்
வானின் வைகுந்தன் பாதம் வாழ்விக்கும் வழியே என்றும்
மேனிலை யுடையதாக்கும் மேன்மையில் நாட்டம் கொண்டார் 5

ஆனந்த தீர்த்தர் கூறும் அற்புத உரையறிந்தார்
ஆனந்தமாக வாழ அவனியில் விவேகமிக்கார்
ஏனிந்த இன்னல் வாழ்க்கை என்றவர் எண்ணினாலும்
தேனினும் சுவையைத் தேர்ந்தார் திருமாலின் நாமம் ஓதி 6

சுவைத்திடச் சொன்ன நாமச் சுருதியை ஓர்ந்த நாதர்
நவைத் திறமில்லாதிந்த நானிலத்தோங்க வேண்டி
சிவத்திடத்தன்பு கொண்டார் சிவனருள் பெறுதல் போன்றே
பவமறுத் துலகில்வாழப் பரந்தாமன் தாளைப் பற்றி 7

பற்றுவே றில்லாநாதர் பற்றினார் பரமன் தாளை
மற்றிந்த வுலக வாழ்வில் மனமிலா நாதர் என்றும்
கற்றறிவுடையோனாகில் காசினி போற்றும் மற்றுச்
சிற்றறிவுடையோன் சற்றும் சீர்த்தியைப் பெற்றானல்லை 8

மக்களால் போற்றற்கேற்ற மகத்துவம் உடையனல்லேன்
தக்கவர் தொழுதற்கேற்ற தகுதியும் உடையனல்லேன்
மிக்குள வலிமையாலே மேன்மையைப் பெற்றேனல்லேன்
இக்கலியுகத்தில் என்னால் ஆவதொன்றுண்டோ என்றார் 9

பொருளுடையோரை இந்தப் பூதலம் புகழ்ந்துபோற்றும்
மருளுடை மனத்தாராகும் மதியினை பெற்றேனல்லேன்
அருளுடைப் பெரியராகி ஆன்மநற் பலம் பெற்றோரே
இருளுடைத் தன்மை நீக்கும் எழில்மிகு பெரியராவார் 10

அத்தகு ஞானம் தானும் ஆண்டவன் பாதமல்லால்
இத்தரை புகழ்செல்வத்தால் இயலுமோ என நினைந்தார்
சித்தத்தே தூய்மையுள்ள சிறந்த வேங்கடவர் அன்றே
பத்தியாய் பகரலுற்றார் பரந்தாமன் நாமம் தன்னை 11

நாரதன் தனக்குத் தந்த நல்வாக்கு நினைவில்லாதார்
சாரதி கண்ணன் பாலன் சார்ந்திடும் சாபம் ஓரான்
பாரதந் தனில்வாழ்வோரின் பண்பொடு வாழுமேலோர்
ஆரணங் கற்றுத் தேர்ந்தார் அவனியோர் வாழ்வதற்கே 12

கற்றநல் ஆரணத்தில் கருத்தூன்றி யிருந்ததாலே
பற்றுவேறு ஒன்றுமில்லார் பாரினில் பொருளை ஓரார்
மற்றிந்த வவனி தன்னில் மதிப்பொடு வாழ்வதற்குச்
சற்றுமே எண்ணமில்லான் சருவக்ஞன் நினைவாய் வாழ்வார் 13

ஆக பாடல் தொகை – 595

## பற்றறுத்த படலம்

செம்மையாய் வறுமை வாழ்வால் செகத்தினில் வேங்கடன்தான்
இம்மையில் பொருளை யோரார் இல்லறத் துணைநலத்தால்
மும்மையும் பெறுதற்கேற்ற முழுபலம் பெற்றதாலே
அம்மையின் நினைவில்லாதே அகந்தனில் சிறக்க வாழ்ந்தார் 1

அகமது சிறக்க வாழ்ந்தார் அகத்திடம் பொருளின்றியே
சகமது வாழ்க்கை கொண்டார் தந்திடும் பொருளையோரார்
முகமது வாட்டம் கொள்ளார் முயன்றிட வழியுமில்லார்
மகனது வாட்டம் போக்கல் மந்திரத்தாமோ என்றும் 2

உணவொடு உடையுமில்லை உறுபொருள் எதுவுமில்லை
மணவினை முதல்நாள் கொண்டு மற்றுமோர் தொழிலுமில்லை
பணமுடை நல்லோர் கண்ணும் படுந்துன்பம் பகரவில்லை
குணமுடைத் துணைவி வாழ்வால் குற்றமும் எய்தவில்லை 3

பஞ்சந்தான் மிகவே உண்டு பருகுநீர் துளசியுண்டு
விஞ்சுநல் நாமம் உண்டு விட்டுணு துணையும் உண்டு
மிஞ்சிடப் பேசி யன்னான் மேன்மையை வாழ்த்தலுண்டு
எஞ்சிடா வாழ்க்கை யுண்டு இதயத்தே நலந்தா னுண்டு 4

வேங்கட நாதர் கட்டும் வேட்டியும் ஒன்றே உண்டு
ஏங்கியே இருத்தல் உண்டு இலக்குமி நாரணன் தான்
தூங்கிடும்போதே அன்னார் பேசிடும் பேச்சுமுண்டு
தாங்கொணா வறுமையுண்டு தகுவழி பேசலுண்டு 5

தம்மிடம் பொருள் வந்தக்கால் சமைத்திடப் பாண்டம் உண்டு
உம்மிடம் அதுவும் ஏனோ ஒழித்திட உபாயம் கண்டு
தம்முடை வினையால் ஓர்நாள் தரித்திர நிலைதான் எய்த
செம்மைநல் மனமில்லாத திருடனே திருடிச் சென்றான் 6

வறுமையின் உச்சிக்கேதான் வந்திட்டார் வேங்கடர்தாம்
சிறுமையே யுற்றார் வாழ்வில் சிறப்பிலாச் செகத்தோர்போன்றே
மறுமையும் இம்மை தானும் மற்றிங்கு பொருளால் என்றும்
பெறுவதும் உண்டோ நன்மை பெறும் வழிதனையோர்ந்திட்டார் 7

இத்தகு நிலையை நாமும் எய்திட வாழ்கின்றோமா
சத்துள கருத்தைக் கூறும் சரஸ்வதிபாய் உரைக்க
மத்துவர் வழியில் வந்த மடத்திற்குச் செல்வோம் என்றே
புத்தமு தாகும் வாழ்வு பொங்கிடப் புறப்பட்டார்கள் 8

திருமடந்தனிலே நாளும் திருமிகு சுதீந்திரர் தாமும்
திருவுடைக் கும்பகோணம் சேர்ந்துமே வாழ்வோம் என்றே
திருமிகு வேங்கடர்தாம் திறமிகு துணைவியோடும்
திருவுடை நாரணன் தன் செல்வனைக் கொண்டு சென்றார் 9

**திருமடத் தவரால் பாரில் சிறப்புறு வாழ்க்கை நாளும்**
திருமிகு கணவர்தாமும் திருமடப் பணியைச் செய்ய
திருவுடை யவராய் வாழத் திருவருள் புரியும் என்றே
திருவுடைச் சரஸ்வதி பாய் திடமுடன் நம்பி வந்தார் 10

வந்தவர் தம்மையேற்றார் வள்ளலாஞ் சுதீந்திரர் தாமும்
செந்தண்மை பூண்டே வாழும் சிறப்பினால் உலகம் உய்ய
அந்தண னாக வந்தார் அருள்மிகு வேங்க டர்தாம்
முந்தியே கண்ட அந்த முகத்தினில் பொலிவைக் கண்டார். 11

பொலிவாகும் என்றே அன்னார் புறப்பட்டார் கும்பகோணம்
நலிவெலாம் தீரும் நல்ல காலந்தான் வாய்த்ததென்று
மலிமனை வாழ்க்கை என்னும் மாதினின் கருத்தயேற்றார்
ஒலிகடல் வையம் வாழும் உயர்ந்த வேதாந்தம் கற்க 12

என்றவர் உள்ளத்துள்ளி இசைந்தவர் கருத்தை யோராள்
நன்றென வந்தார் என்னே நாம் பெறும் இல்லறம்தான்
குன்றென உயரும் நல்ல குவலயம் சிறக்க வாழ்வோம்
என்றெண்ணிச் சரஸ்வதிபாய் இனிதென வந்தாள் இப்பால் 13

அன்பினால் ஏற்றார் தீர்த்தர் அவரின் நல் ஆர்வம் கண்டே
முன்புயாம் செய்தவம்தான் முட்டின்றி முடிந்ததென்றே
இன்பொடு விருந்தாள் நாதன் தீர்த்தரின் முகத்தைக் கண்டே
நன்பொடும் ஏற்றார் என்னே நாம் செய்நல் தவமேயென்றார் 14

தவ வாழ்க்கை கொண்டார் தீர்த்தர் தாங்கரும் தவத்தினாலே
அவமது நீங்கி அன்னார் அவனியில் சிறப்பே யெய்த
பவமது நீங்க நல்ல பான்மையே விளங்கவேண்டி
இவரிடம் ஐயம் போக்கி இவ்வுலகுய்ய வாழ்வேன் 15

எண்ணினார் வேங்கடர்தாம் இலக்கிய இலக்கணங்கள்
எண்ணறு நூல்கள் கற்றார் இதிகாச புராணந்தானும்
கண்ணிருமணியே என்ன கற்றனர் கருத்துக் கொண்டே
பண்ணவன் நூல்களெல்லாம் பயின்றனர் பக்குவத்தால் 16

அத்தகு கலை ஞானம்தான் அவர் பெற்றதாலோ என்னோ
வித்தையில் தேர்ச்சியானோர் வேங்கடர் போலும் உண்டோ
உத்தம குணசீலர்தாம் உயர்கலை கற்றுத்த தேர்ந்தார்
அத்தகு தன்மையாலே ஆதீனக் கவிஞரானார். 17

ஆதினக் கவிஞராக அறிவித்தார் சுதீந்தரர் தாமே
தீதுரை சொல்லாநாதர் திருவடி தனையே ஓர்வார்
போதுறை மாதினாலே புவியின்மேல் ஓங்கி வாழ்வான்
ஏதுவால் சிறப்புப் பெற்றார் என்றனர் தீர்த்தர் இப்பால்

புண்ணியத் துறைகள் மூழ்கி புத்தொளி பெறுதற்கென்றே
நண்ணினால் நாதன் பாலே நவையெலாம் கெடவே வேண்டி
எண்ணினார் இதயத் துள்ளே எண்ணிய விருப்பத்தின் நல்
ஒண்ணுதல் அரிவையின்றி உடனவர் அழைத் துச் சென்றார் 19

உடனுறை வாழ்வினாலே உயர்சுதீந்தர தீர்த்தர்தாம்
கடனறி வேங்கடர்தம் கடமையைக் கருத்தில் எண்ணி
திடமுடை கொள்கைக் கொண்டோர் திருவருள் பெறுவரன்றே
நடைமுறையாலே நாதர் நானிலம் ஓங்கும் உண்மை 20

திருவருள் துணையே வேண்டி தீர்த்தரும் சென்றார் அப்போ
ஒருபெரும் ராஜமன்னார் உயர்ராஜ கோபாலன்தன்
பெருமையாம் தரிசனத்தைப் பெறவவர் விருப்பங் கொண்டே
திருவருளாலே மேல் தென் துவாரகை பெயர் பெற்றோங்கும் 21

அத்தகு பதியில் சென்றார் அவருடன் நாதர் சென்றார்
மத்துவ சீடர் வந்தார் மதித்தில மாயாவாதி
தத்துவ விளக்கம் கொண்டே தருக்கமே நடத்த வேண்டி
சித்தத்தே தூய்மை யில்லார் செருக்கினால் அழைக்கலுற்றார் 22

செகத்தினில் சீவனுக்கும் சிறந்திடும் பிரம்மத்திற்கும்
மகத்துவம் உரைப்பீர் என்றார் மாண்பிலர் அதனை எண்ணூர்
செகமதே மாயை என்றார் சிறந்த வேங்கடவர் கேட்டு
உகப்பில சொன்னீர் மேலாம் உறுபொருள் ஒன்றே என்றார் 23

நாம்சா தித்தோம் என்றீர் நம் திறம் நாட்டிலுண்டோ
ஆம் சாதனையெல்லாம் ஆண்டவன் ஒருவன் தன்னால்
கீம்சாத் என்றே வேதம் கிளத்துமவ் விளக்கம் கேட்க
தாம் சாதித்தார் அச்சொல்தரணியில் இல்லையென்றே 24

வாதித்தார் மாயாவாதி வாதத்தைக் கேட்டநாதன்
ஓதியதில்லைபோலும் உயர்மகா பாடியத்தைச்
சேதியை கேட்ட அன்னார் செய்வதும் அறியாராகி
மேதினி மக்கள் கூற்றும் மிகுதியும் வேறுபாடாம் 25

என்றனர் மாயாவாதி இதன்பொருள் அறியாதாகி
நன்றுரை வேங்கடர்முன் நவின்றிடார் அழுக்காறுற்றே
அன்றவன் அகங்காரத்தின் அறைந்தனன் என உரைக்க
கன்றியவுள்ளத் தொருவன் கடுங்கோபம் கொண்டு சொன்னான் 26

பகருமபசா என்னும் பதத்தில்லே முடியும் வார்த்தை
பகருவீர் எனவே நாதர் பதம் தனை கேட்கவன்னார்
பகன்றனன் பாப்சாத் மற்றும் பாப்சாதி பதத்தையோத
பகருவதறியாதாகி பரிதவித்தொடுங்கினார்கள் 27

அகங்கார மடங்கவேண்டி அவர் மாயாவாதி தன்னை
அகண்டத்தை கேட்க வப்சா அதைகேட்டே அறியா தன்னார்
அகங்கார அடங்குமப்போ அவருடைக் குருவுமாங்கே
தகுமுறை சிந்தித்தன்னார் தாம் ஒரு யாமம் ஆழ்ந்தார் 28

மகாபாடியத்தை அந்த வேங்கட நாதர் கற்றார்
மகாபாடியத்தில் கொண்ட மகத்துவம் அறிந்தார் தீர்த்தர்
மகாபாடியத்தைக் கற்ற நாதரை அறியவேண்டி
மகாபாஷ்ய பட்டநாதர் பெற்றிட மனமுவந்தார் 29

நவநவ அறிஞர் எல்லாம் நாடிட வெற்றி பெற்றார்
தவசிரேட்டர் ஆன தஞ்சை ஆதினக் கவிஞராரும்
அவர்யக்ஞ நாரணர்க்கே ஆபஸ்தப்ப தாதியான
நவகவிக் குரையே சொன்னார் நன்மதிப்புயர்ந்ததம்மா 30

உயர்ந்த பட்டாச்சார்யார் உயர்பட்டம் பெற்றவர்க்கே
உயர்மூலராமர் தன்னை உவப்புடன் பூசை செய்ய
உயர் எண்ணம்மனத்தில் கொண்டே உற்றிடும் காலம் பார்த்தார்
உயர்ந்தவர் தீர்த்தர் தம்மை உற்றிடும் முதுமை என்றே 31

மடத்தில் நன் பொறுப்பு தன்னை மற்றுயார் பார்க்கவல்லார்
திடத்தன்மை கொண்ட நாதர் திருவருள் பெற்றுயர்ந்தார்
இடத்தினில் அன்றி மற்றோர் இடத்தினில் உண்டோ நன்மை
நடத்தையால் கண்டு தேர்ந்தார் நாதரை நல்லர் என்றே 32

துறவறங் கொண்டா ரன்றோ தூயராம் மூலராமர்
திறமுடன் பூசை தன்னைச் சிறப்புடன் ஆற்ற வேண்டி
மறதியில் லாதே நாளும் மண்ணினில் மக்கள் வாழ
அறவிய நெஞ்சங் கொண்டார் அவனியே சிறப்புற் றோங்க 33

எண்ணினார் எனினும் நாதர் இல்லறங் கொண்டுள்ளாரே
தண்ணளி யுடையோர் தாமே தாரமுந் தனயன் தன்னை
எண்ணுநல் இல்ல றத்தின் இயல்பினைக் கண்ட றிந்தார்
பண்ணவன் அருள்பெற்றாரிப் பாரினில் அவரே யென்றும் 34

திண்ணமாய் எண்ணி விட்டார் திருமடப் பூசை யாற்றக்
கண்ணனின் அருளைப் பெற்றே கருத்தினைச் சொல்ல வேண்டி
உண்மையாய் உறுதி கொண்டார் உண்டோ விவ்வுலகில் என்றே
எண்ணத்தைக் கூறு தற்கே யேற்ற நற் காலம் பார்த்தார் 35

மடத்தினில் மூல ராமர் மகிதலம் போற்றும் பூசை
நடத்தினார் தீர்த்தர் ஓர்நாள் நாதரை யழைக்க லுற்றார்
திடத்தன்மை கொண்ட நாதர் தீர்த்தரின் அழைப்பால் அன்னார்
இடத்தினில் அமர்ந்தார் தீர்த்தர் இயம்புவர் சேதி யென்றே. 36

நினைக்கின்றார் எதையோ சொல்ல நினைத்ததைக் கூறத் தானே
கனைக்கின்றார் என்னே நாதர் கருத்தினை யறிய வேண்டி
தனைப் பார்த்த போது வென்னே தாளினை வணங்கியன்னார்
நினைத்ததைக் கூற வேண்டி நிலமிசை வீழ்ந்து கேட்டார் 37

குறிப்பினால் அறிந்தார் நாதர் குறிப்பறிந் துரைக்கத் தீர்த்தர்
குறிக்கோளைக் கூற லுற்றார் குவலயம் விளங்க வேண்டி
குறிக்கொளும் விருப்பி லார்க்குக் கூடாதிப் பூசை யென்றே
குறிப்பினால் மூலராமர் பூசையைக் குறிப்பிட்டாரே. 38

காலனை வெல்ல வேண்டின் கனைகடல் கடந்து வென்ற
மூலராமரையே போற்றின் மூவுல கோங்கும் கீர்த்தி
சீலமே கொண்ட நாதன் சீர்த்தியைக் கண்டு போற்றி
ஏலவே அருக ழைத்தே யேற்பாயிப் பூசை யென்றார் 39

மூப்பெனை வந்த டைந்தே முதியவனாகி விட்டேன்
தாப்பிசை போன்றே யென்றன் உளந்தடு மாறுகின்ற
காப்பதே விரதங் காண்பாய் கருதுமிப்பூசை யேற்றுக்
காப்பவன் நீயே யென்று கருதினேன் கழறுகின்றேன். 40

கழறிய வார்த்தை கேட்டார் கடனறி வேங்க டர்தாம்
குழறினார் நாவே வேறுங் கூறுவ தறியா ராகி
பழவினை யாலே யாதும் பதிலொன்றும் பேசா ரென்னே
அழலுறு மெழுகே யாகி யவர் மனம் உருகிற் றம்மா! 41

அறிவிலே கடல்போன்றாய் நீ யானந்தக் கடலில் செல்வாய்
விரிகடல் போன்ற மேலாம் வேதாந்தக் கடலைக் கண்டாய்
பெரியதோர் சம்சாரத்தின் பேர்ந்துவக் கடல்க டக்கும்
உரியநற் காலம் உன்னை யுற்றதே யுணர்வா யென்றார் 42

உணர்விலா துழல்வன் யானே யுணர்ந்திட வுரைத்தீர் நன்றே
உணர்வுடை யுங்கள் போன்றே வுறுவனோ வுணர்ந்து பார்த்தால்
கணந்துணை மனத்தை மேலாய்க் கட்டிட வறிகில் லேன்யான்
பணிந்தன்னார் பாதந் தன்னைப் பற்றியே பகரலுற்றார் 43

வேதவித் தகன்ற னக்கே விண்ணப்பந் தனைவிடுத்தார்
சோதனைக் காலம் என்னைச் சூழ்ந்ததாய் உணரு கின்றேன்
சாதனை செய்தீர் உங்கள் சதுரினால் சகத்து ளோர்க்கே
போதனை புரிந்தீர் போன்றே போதிக்கும் வன்மையில்லேன் 44

ஞானமாங் கடலின் மூழ்கி நன்முத்தை யெடுத்த ளித்தீர்
மோனமா நிலையிருந்தே முத்தியாம் பதத்தைச் சொன்னீர்
ஆனவவ் வழியில் நாயேன் ஆற்றுவல் என நினைந்தால்
ஈனமே யாகும் என்னே யிதனையா னியற்ற லாமோ? 45

குடும்பநற் பாரந் தன்னைக் கொண்டுளேன் தலையின் மேலாம்
இடும்பையாங் கடல்க டத்தல் இயலுமோ யியம்ப வேண்டும்
அடும்புலி யதைய டக்கல் அந்தணர்க் காகு மோதான்
விடுமுங்கள் விருப்பம் என்றே வேண்டினார் வேங்கடர்தாம் 46

மறதியே யற்று ளாய்நீ மறவனே யாவாய் என்றே
திறமெலாஞ் சரண மென்றே சேர்ந்ததால் சீர்த்தி பெற்றாய்
துறவறங் கொள்வோரென் றுந் தூய்மைய ராவா ருள்ளம்
அறத்திலே யெண்ணங் கொண்டார்க் கவர்குரு வறைய லுற்றார் 47

தவமுடையார்க்கே ஆகுந்தவமது வுணர்ந்தாய் நீயுந்
தவச்சிறு வயதில் ஞானந் தகுமுறை பெற்று யர்ந்தாய்
அவமது வறுத்தே யிந்த வவனியில் சிறக்க வேண்டித்
தவத்தைநீ கொள்ளு தற்கே தகுகாலம் வாய்த்த தென்றார். 48

அடக்கினார் கடலை யன்றேயங்கையின் அகத்தியர்தாம்
அடக்கினார் புலனை என்னே அடக்கியது அறிவாய் நீயும்
அடக்கத்தால் புலனை வென்றாய் ஐம்பொறி யடங்க வாழ்வாய்
அடக்கமாம் வேங்க டர்க்கே யவர் வழி வகுத்துச் சொன்னார் 49

அந்தணர் அறவோர் அன்றே அறைந்தவள் ளுவரானீயும்
அந்தண னாகு மந்த யிலக்கண மமையப் பெற்றாய்
செந்தண்மை பூண்டே வாழுஞ் சிறந்திடுந் துறவறத்தில்
சிந்தையே கொள்வாய் உன்னால் செகமதே சிறக்கும் உண்மை. 50

வீரமும் உடையாய் ஆன்ம பலமுனை யடைந்த தாலே
ஈரமு முடையாய் மாந்தர் இன்னலைப் போக்க வேண்டுந்
தீரமும் பெற்றாய் நாளுந் திருவருள் நினைவ தாலே
தாரமுந் தனயன் தானும் தடையெனக் கருதலாமோ? 51

அருட்கொடி கொண்டாய் என்றன் ஆசியும் பெற்ற நீயும்
தருக்கமே செய்து நல்ல தருணத்தைத் தவிர்க்க லாமோ
மருக்கொளும் வாழ்வினாலே மணமதைக் கொண்டு நீயும்
உருக்கொடு வந்தாய் என்றே உலகவர் போற்றுவாரே 52

இல்லறம் பெருமையே யான் யியம்பிடக் கேட்க வேண்டும்
இல்லற வாழ்வே யிந்த வுலகுக்கே யேற்ற தாகும்
சொல்லறம் அனைத்தும் வாழச் சுகம்பெற மக்களெல்லாம்
நல்லற வாழ்க்கை தன்னால் நண்ணிடும் நானிலத்தில் 53

அத்தகை இல்லறத்தை யடியனேன் ஆற்றிப் பின்னை
சித்தம துறையும் மேலோன் சீர்பாதம் போற்றல் நன்றாம்
மத்துவ மரபின் வந்தீர் மாண்பிலேன் உரைத்தல் நன்றோ
இத்தரை வாழ்க்கை தன்னை யியற்றுதல் நலம தாமே. 54

அறம்பொருள் இன்பம் எல்லாம் ஆற்றினாம் ஆற்றிப் பின்னே
திறமிகு துறவறத்தைத் திண்ணமாய்க் கொள்ளல் வேண்டும்
மறதியுங் கொள்ள லாமோ மனைவியும் மக்கள் யாரும்
அறவழி நடத்திப் பின்னே அடைவனே துறவறத்தை. 55

அஞ்சொலாந் துணைவி தானும் அரிவையே யாக வில்லை
பிஞ்சு நற் பாலன் தானும் பிரம்மத்தைக் காணுதற்கு
விஞ்சிடு முபதே சத்தை விருப்புடனளிக்க வில்லை
எஞ்சிடு மில்வாழ் வென்னே வியலுமோ துறவறந்தான் 56

நளன் துறந்தேகி னானே நற்றுற வாகுமோ சொல்
களத்திர மன்றி யென்றன் காதலன் ஒரு வனுள்ளான்
உளந்துறந் திலாதே யேகின் உண்மைநற் றுறவாகும்மோ
இளந்தலை முறையினாவேன் எங்ஙனந் துறப்பே னென்றார் 57

ஆதலினாலே யுங்கள் அருளினை நினைந்து சொல்வேன்
காதலினாலே யன்றிக் காரிகை கடமை யாற்றி
மாதவன் அருளைப் போற்றின் மானிலஞ் சிறக்கும் ஞான
போதனின் அடியைப் போற்றிப் புகன்றனர் புனித ரேதாம் 58

புகன்றிட்ட வார்த்தை கேட்டார் புங்கவர் சுதீந்திரர் தாமுன்
அகன்றிடச் சொல்லி யென்னே யவன்வாதத் தன்மை தேரின்
சகத்திடத் துளரோ மாந்தர் சருவலன் அருளைப் பெற்றான்
யிகபர யின்பம் எய்த எண்ணத்தில் உறுதி பூண்டார் 59

பற்றற்றான் பற்றினைநீ பற்றுதல் வேண்டுமென்றால்
பற்றற்ற துறவியாகப் பாரினில் விளங்க வேண்டும்
பற்றற்ற ஞானி யர்க்குப் பாரியும் பாலன் என்னும்
மற்றுவித் தொடக்கு முண்டோ மாநிலத் துயர்வர் அன்றோ? 60

எத்துணைக் காலம் நீயும் இல்லற வாழ்வை யேற்பாய்
இத்தரைப் பற்றுத் தானே யியல்பினால் வளர்ந்தே தோன்றும்
சத்துவக் குணமிக் கோரே சகத்திடத் துறவி யாவார்
அத்தகு குணமுள்ளாய் நீ யாதலால் புகலுகின்றேன் 61

அறம்பொருள் இன்பமென்னும் அதனைநீ மறந்தா யாகில்
திறமுடன் வீடுபேறு திண்ணமாய்ச் சேரும் உண்மை
உறவுடன் மனைவி மக்கள் உறுதிதான் உடையதோசொல்
திறமிலா மக்கள் போன்றே தீநெறி செல்ல லாமோ? 62

உலகுடைப் பொருளை யெண்ணி உயர்பொருள் மறந்த பேர்கள்
அலகிலா வினைகள் தம்மால் அலக்கணுற் றழிந்தே போனார்
சிலர் பல காரணத்தால் சீரிழந்தவர்கள் செய்த
சிலபல செப்பு கின்றேன் செய்தியைக் கேட்பாய் என்றார் 63

கண்ணிலான் தனையே கண்டு நேர்த்தியாய் கண்பெற்றாயே
எண்ணிடின் தருமந் தன்னை தருமனின் பிறவியென்பர்
மண்ணில் நல் ஒழுக்கத் தாலே மாலையுங் காலை தன்னில்
பண்ணிடான் பூசை என்னே பண்ணுவன் யாகம் என்பர் 64

ஓங்காரத் துட்பொருள் தான் உணர்ந்துமே யறியான் தன்னைத்
தீங்கற வேதங் கற்றத் தெளிந்தநல் ஞானி யென்பர்
நீங்கிடாக் கொடுமை யோனை நேரிலே கண்டபோதே
தாங்களே தருமஞ் செய்யுந் தயாபரன் எனவு ரைப்பார் 65

அழகிலா அரிவை தன்னை அணங்கென வுரைப்பர் யின்னும்
கிழத்தன்மை யுற்றோர் பார்த்தே கீர்த்தியால் மிக்க நல்ல
அழகின் நல் வடிவம் பெற்ற வாடவர் எனவுரைப்பர்
பழவினை யிலாதான் பாபி யெனினுமே பணிவர் என்னே! 66

பொய்யினில் உருவ மாகிப் பொருளினைத் தேடிச் செல்லும்
வையத்தின் வாழ்வும் வாழ்வோ வானெறி செல்லும் நல்ல
உய்வழி யுணர்ந்தே யோங்கும் உறுதியும் உடையதோசொல்
தையலைத் தனயன் தன்னைத் துறப்பதே தருமம் என்றார் 67

ஏதுவும் மேற்கோளுந்தான் எடுத்துடன் காட்டி யாங்கே
வாதிட்ட வேங்கடர்தம் வாழ்வழி யுரைத்த தீர்த்தர்
காதலன் றனக்கே யாற்றுங் கடமையைச் செய்வாய் என்று
போதித்த போதே என்னே புங்கவர் புவியைப் பார்த்தார் 68

புங்கவர் புவியைப் பார்த்தார் புனிதராந் தீர்த்தர் தாமும்
அங்கவர் உணர்வை யெல்லாம் அவர்மனத் திரையி லோட்டச்
சங்கடம் மிகவே கொண்டார் சம்மதப் படவே யில்லை
நங்கடன் செய்வோ மென்றே நாதரை நோக்கிச் சொன்னார் 69

இன் றுநீ சென் று நல்ல யில்லின்கண் ணிருந்து பின்றை
நன்றென வாழும் மக்கள் மனையொடு மகிழந்த தற்பின்
துன்றிய துன்பம் நீங்கித் துயரெலாந் துடைப்பா யென் று
அன்றவர் உரைத்த போதே யவர் மனம் நெகிழ்ந்த தம்மா! 70

மனமது நெகிழ்ந்த தன்மை மதிப்புடை குருவுங் கண்டார்
வினையினாம் வலிமை கண்டார் வென்றிட வழியுங் கண்டார்
நனைமலர் தூவி நாளும் வழிபடல் நாவின் செல்வி
தனைத்துதிப் பதுவே நல்லதாம் வழி யெனவே கொண்டார் 71

துதிப்பதே கருமம் என்றே துயரினைப் போக்கத் தீர்த்தர்
மதியினால் எண்ணிப் பார்த்தே மற்றுமோர் சீடர் தம்மை
அதிவிரைவுடனே தேர்ந்தார் அவருடல் சோர்ந்த தாலே 72
கதியினை யெண்ணிப் பார்த்தார் கடமையைக் கருத்துட் கொண்டார்

திருமடப் புனிதத் தன்மைய தெரிந்தவக் குருவுந் தன்பால்
பெருமதிப்புடைய சீடர் பெருமையை யுணர்ந்த தீர்த்தர்
அருமையாங் காலந் தன்னில் அவருக்கே யம்ம டத்தின்
பெருமையாம் பொறுப்பை நல்கி பிழையறக் கடமையாற்ற 73

மடத்தினில் வாழுஞ்சீடர் மதிப்பினை யறிந்த தீர்த்தர்
நடத்தையைப் போற்றி யன்னார் நானிலம் போற்றற் கேற்ற
திடத் தன்மை பெறுதற் காகுந் திருநாமஞ் சூட்ட வேண்டி
மடத்தினின் காரியத்தை மாண்புறச் செய்த மைத்தார் 74

அழிவிலாப் புகழ்பெற் றோங்கி யாதவன் போன்றே வாழ
எழில்திரு நாமங் கண்டார் யாதவேந்திரராய் விண்டார்
பழிதமை நாடா வண்ணம் பரமனின் பாதம் போற்றும்
வழியையே கண்டு ரைத்தார் வரிசையைப் போற்றும் நாடே. 75

எண்ணமுங் கொண்டார் என்னே எழில்மிகு யாத வேந்த்ரர்
திண்ணமாய் மடத்தின் மூல ராமரின் பூசை செய்யக்
கண்ணிரு மணியே யென்னக் கடமையை யாற்று தற்கே
தண்ணளி யாலே யன்னார் சந்யாசந்தனைக் கொடுத்தார் 76

வேறு

கீத நாயகன் கீர்த்தி பாடியே
வேத மோதினார் யாத வேந்திரர்
மாத ரெண்டிலே மாண்பின் தீர்த்தரும்
நாத னருளினால் நலம்பெற் றோங்கினார் 77

வேறு

திடத்தன்மை யற்ற தீர்த்தர் திடமுடைத் தேகம் பெற்றார்
நடத்தினார் மூல ராமர் நலமுடைப் பூசை தன்னால்
மடத்தினின் பொறுப்பை யேற்ற மற்றவவ் யாத வேந்தரர்
தடத்தினில் மூழ்கிச் செய்யும் யாத்திரை தனையே கொண்டார். 78

இன்பமுந் துன்பந் தானும் இயைந்ததித் தரையின் வாழ்க்கை
நன்மொழி கற்றற் கென்றே நானிலங் காணச் சென்றார்
பொன்மொழி போற்ற வேண்டிப் போந்தனர் யாத வேந்திரர்
தன்மதியதனால் தீர்த்த யாத்திரை தனையே கொண்டார் 79

யாத்திரை கொள்ள வேண்டி யெண்ணத்தை யுரைத்த போது
காத்திரம் நலம்பெற் றுள்ள கருணையால் தீர்த்தர் தாமும்
சாத்துயர் அகன்ற தாலே தண்ணளி யுடையராகி
நேர்த்தியாய் யாத்திரைக்கு நேர்ந்தனர் நிதியுந் தந்தார். 80

நியமமு மியற்றிப் பூசை நித்தலும் நிகழ்த்த வேண்டி
அயலதாம் யாத்தி ரைக்கே ஆசியும் அளித்தார் இப்பால்
முயற்சியின் பூசை செய்ய முனைவனின் படிமந் தன்னைப்
பயன்பெறக் கொடுத்தத் தூய பக்தியைப் போற் றும் நாடே. 81

வேறு

என்னேயவர் சென்ற சில நாளில் விதியென்னே
முன்னேசரி யானவுடல் முழுதுந் நலங்குன்றி
தன்னேரிலான் தாளைத்தினந் தானுந் துதிசெய்ய
கொன்னேயிடை யுறோவெனக் கண்டார் பயங்கொண்டார் 82

வேறு

நடமாடக் கூடாத நலமில்லா உடல் பெற்றோம் நாமென்ன செய்வோ மென்றே
திடமாக நிதம்பூசைச் செய்யவோர் திறமில்லை திருவருள் துணையு முண்டோ?
இடமாற்ப் போனாரே யினி பூசைக் குதவாரே யாதவேந்திரர் தாமும்மே
உடன்நாமும் நலம்பெற்றே உயர்வான பூசைக்கே உதவவும் உறுதி யுண்டோ?
83

ஒருமுறை வேங்கடன்நன் யுத்தியின் வாதத் தாலே
பெறுமுறை யிழந்த பின்னும் பிழையேதும் நடக்க வில்லை
தருமுறை யாத வேந்திரர் தலங்கட்குச் சென்றதாலே
மறுமுறை யவன்பாற் செல்ல மனத்தினில் எண்ணங் கொண்டார் 84

மறுத்திட்டான் வேங்க டன்றான் மதிப்புடை குருவின் வார்த்தை
வெறுத்திட்டான் அல்லன் மூல ராமரின் பூசை செய்யுந்
திறத்தினைப் பெற்ற பின்னே திறம்படச் செய்வதற்கே
திறத்தினை யோர்ந்தான் இல்லந் தீர்ந்தவர் திறமும் ஓர்ந்தான் 85

வேறு

என்று எண்ணியே யாத வேந்திரர்
துன்று துன்பமே துடைக்க வேண்டியே
நன்று நன்றென நலங்கொள் பூசைக்கு
அன்று ஏற்றனர் அவருஞ் சென்றனர் 86

இன்று நான்படும் இன்ன லுக்கெலாம்
ஒன்று உண்டென உணர்வன் நன்றென
துன்று துன்பமே துடைப்பன் ராமனே
என்று எண்ணியே யிறைஞ்சி நின்றனர் 87

வேறு

இப்புவி தனிலே யென்றன் யினியதாம் பூசை தானுந்
தப்பிடு மென்றே நீயுந் தாளாத துன்பங் கொண்டாய்
ஒப்பிலா வேங்க டன்தான் உயர்மடத் துரிமை யேற்பான்
செப்பிடு வாயே வித்யா பீடமுஞ் சிறக்க யேற்பான் 88

துறவறம் பூண்பான் உன்றன் துயரெலாந் தொலையும் உண்மைத்
திறமெலாம் பெற்றான் பூமி தீநெறி செலாது காக்கும்
அறவழி யறிந்தே யிந்த அவனிதண்ணளியினாலே
சிறந்தவ னாவான் உண்மைச் செப்பினேன் சிறக்க வாழ்வான் 89

நாளையே வேங்கடன்றன் நலமெலாஞ் சிறக்க வுன்றன்
தாளையே வணங்கும் போது தண்ணளி யுடனே யன்னான்
வேளையே யறிவாய் வீணை மாதினால் விரும்பி யேற்பான்
காளையின் பருவத் தன்னான் கருதிடு ஞானி யாவான் 90

தேகமே நலங்கெட் டாலுந் திருவருட் டுணையே பெற்றாய்
சோகமே தவிர்வாய் நீயுஞ் சூக்குமம் அறிவாய் மேலாம்
யோகமே வேங்கட ற்கே உறுதியாய் உவந்த ளிப்பாய்
ராகவேந்திரராய் நாமம் நானிலத் தோங்கும் என்றார் 91

என்றவர் கனவில் தோன்றி யியம்பினார் மூல ராமர்
ஒன்றிய வுள்ளங் கொண்டே வுறங்கிடும் போதே தீர்த்தர்
நன்றென விழித்தா ரப்போ நாலாவ தாகுஞ் சாமம்
தென்றலும் வீசு கின்ற திருவருள் திறத்தை யோர்ந்தார் 92

அடுத்த நாட் காலை பூசை யாரம்ப மாகும் வேளை
தொடுத்தனன் மலர் மாலைதான் தூயவன் தொடர்பினாலே
மடுத்துரை பேசான் என்றே மனத்தினில் குறிப்புத் தோன்ற
அடுத்தவர் பூசை யெல்லாம் அமைதியின் முடித்தார் இப்பால் 93

அழைத்தனர் வேங்க டன்தான் அன்பொடே அவர்பால் சென்றான்
இழைத்திடும் பூசை யெல்லாம் இனிதென முடிக்க வென்றே
பிழைத்திறம் வாரா தென்றும் பெருமதிப் படையும் வண்ணம்
உழைத்தவன் நீயே யென்று உழையிருந் துரைக்க லுற்றார் 94

தவிக்கின்றேன் மூலராமர் பூசைதான் தவறு மென்றே
குவிக்கின்றேன் இருகை யன்னான் குறித்திடும் பாதந் தன்னை
புவிக் கெலாம் அருளும் மேலோன் புண்ணியன் தனையே யோர்ந்து
அவிக்கலாம் அவத்தையெல்லாம் அதனால் நல் வாழ்வுண்டாமே!
95

என்னிலை கண்டாய் என்னே இனியுநாள் செல்வ துண்டோ
முன்னிலை யெல்லாம் உன்றன் முயற்சியின் முடிந்த தென்றால்
பின்னிலை யதனை யோர்ந்தே பிதற்றுதல் புரிய லுற்றேன்
உன்னிலை யுரைப்பாய் என்றே உணர்வினின் உருகிக் கேட்டார். 96

குருவொடு குறுகித் தர்க்கம் கொண்டதால் குறைசெய் தோமோ
அருகிருந்தவர்க்கு மாறா வறைதலும் அடுக்கு மோதான்
திருவருள் திறத்தை யோரேன் தீநெறி செலாது காக்கப்
பெருமதிப் புடைய தீர்த்தர் பிழைதனைப் பொறுக்கத் தாழ்ந்தார் 97

அன்றிரா முழுதுந் தூக்கம் அவர்பெறா தயற்சி கொண்டார்
நன்றியான் மறக்க லாமோ நன்மையை வெறுக்கலாமோ
பொன்றிடாப் புகழ்மிக் கோங்கும் புண்ணியன் அடியைப் போற்றித்
துன்றிருள் தனிலே யன்னார் துயின்றனர் துன்பங் கொண்டே. 98

ஆக காண்டம் இரண்டினுக்கு பாடல் தொகை – 693

ஸ்ரீராகவேந்திரர் துணை

## துறவற காண்டம் நாமகள் காட்சிப் படலம்

### ஸ்ரீராகவேந்திரர் துதி

பொன்னையே பொருளே வேண்டாய் பூவுல கதனை வேண்டாய்
தன்னையே யுலகுக் கீந்த தனிப்பெரு ராக வேந்த்ரா
என்னையே யிடமாக் கொண்டே யின் கவியியற்றுவித்தாய்
உன்னையே பாடுகின்றேன் உவந்தெனக் கருள்செய்வாயே 1

நானவார் குழலி தன்னை நறுமலர் சூட்டி நித்தம்
கானமா மழையின்ாட்டிக் கண்கள் நீர் பொழிய யேட்டின்
ஞானமாம் அமுதை யூட்டி நன்மனத் துறுதி நாட்டி
மோனமா முத்தி வீட்டின் முயன்றிட்டார் தீர்த்தர் முன்னாள் 2

முற்பெறு தவத்தால் மோன நிலையினை முயன்ற தாலே
தற்புகழிலாத நாதன் தண்ணளி தனையே யோர்ந்து
கற்பக மெனவே ஞானங் கனிந்தருட் கனியை நல்கும்
பொற்புடைப் பூவின் செல்வி புண்ணியன் கனவிற் ஞேன்ற 3

வேங்கட நாதர் கண்டார் வீணையின் கிழத்தி தன்னை
தீங்கட வேண்டுந் தாயே திருவருட் டிறத்தை யோரேன்
நீங்கிட வேண்டுந் துன்பம் நின தருளாலே வாழ்வேன்
ஓங்கிட வேண்டு மென்றே ஒருமையின் வணங்கி நின்றார் 4

தாமரை மலரில் வாழ்வாள் தன்னிரு கண்ணாற் காண
தாமரைக் கண்கள் பெற்றே தாமரை முகத்தளாகி
தாமரைக் கிழவன் செல்வி தயையினை விரும்பி நாதர்
தாமரைப் பாதந் தன்னைத் தலையினிற் சூட்டி நின்றார் 5

நன்னய முடைய நாத நான்முகன் பெற்ற செல்வி
கன்னியாய் வாழ்வேன் வேத வியாசரின் கருணையாலே
என்னை நீ அறிவாய் யிந்த யிருநிலத் தின்பமெல்லாம்
உன்னிடுங் கற்றோர்க் கேயான் உவந்துமே யளிப்பன் என்றாள் 6

அமுதமாம் பாடி யத்தை யளித்தவர் மத்வர் ஆவார்
அமுதமே யுண்ட தாலே யவரினால் வளர்ந்து வந்தேன்
உமதுமுற் பிறவி வியாச ராசரின் உரிய வன்பின்
நமது நற் கலைகள் போற்றும் நல்லவர் கிருஷ்ண தேவர் 7

உலக நல் லாட்சி பெற்றே உயர்ந்தது தேவராலே
அலகிலாக் கலைகள் எல்லாம் அக்காலம் வளர்ந்த தம்மா!
இலகுசீர் வேத வியாசர் எழுதிய பிரம்ம சூத்ரம்
அலகில் நற்புகழ்பால் ஊட்ட அதனால் நான் மிக வளர்ந்தேன் 8

வேறு

சாகா வரம் பெற்றேன் சந்ததமும் முப்பாலால்
தேகாதி பெற்றேன் நான் தீஞ்சுவை தேர் கம்பனால்
வாகாருஞ் சங்கத்தார் வாக்கினால் வாழ்கின்றேன்
ஏகா தெனைக் காப்பாய் யின் றுனையே நாடி வந்தேன் 9

யாழின் நரம்பெனலாம் இனிதாந் தமிழ் நூல்கள்
பாழ்பட்டுப் போனால் பாரில் நலமுண்டோ
சூழ்வினையால் உன்னைத் துறவறமே சூழ்ந்ததென்றால்
வாழ்ந்திடுவேன் நானே நீ வையத் தெனைக் காப்பாய் 10

தாரணியில் தமிழ் நூல்கள் தந்தும் பயனென்ன
ஆரணிவார் வையத்தே யதன் பயனைத் துய்ப்பார் யார்?
காரணியாய் வந்த காரணனே காசினியோர்
ஓரணியாய் நின்றே யுழைக்க நீ யோதுவிப்பாய் 11

## வேறு

சீலங் கொண்டு பூசை செய் சிறந்த சந்நி யாசியே
மூலராமர் பூசையை முயன் று செய்வ ராவரே
ஞால மீதில் ஞானியாய் நவின்றார் வேதவியாசரே
ஏல வேயவரிடத்தில் யானிருப்பேன் உண்மையே. 12

## வேறு

ஆதலினிற் சந்யாசம் அதனைநீ மேற்கொள்வாய்
காதலினாற் சொல்கின்றேன் காலமெலாம் வாழ்கின்ற
வேதசாம் ராச்சியத்தின் வேந்தனாய் நீ வீற்றிருப்பாய்
வாதங் கொடு மறுத்தால் வைணவந்தான் வழக் கொழியும் 13

## வேறு

நீதி யொழிந்திடும் நியாயம் அற்றிடும்
ஆதி புத்தகம் அதுவும் ஒழிந்திடுஞ்
சேதி கேட்பைநீ செல்லின் உணவதாய்
வாதி மாயரே வந்து தோன் றுவர் 14

முத்தியென்பது முயலுஞ் செய்கையால்
நத்தி ஜைமினி நாடுங் கர்மமோ
யுத்தி ஞானத்தால் உறுமத் தன்மையால்
சித்தி பெறுவது செகத்தி லுண்மையே 15

அத்தகுநல் சந்யாசந் தனைம றந்தால்
மெத்தகுநல் ஞானந்தான் மேன்மை யாமோ
இத் தரையில் ஜைமினியின் கொள்கை மட்டும்
உத்தமமாய் உணர்ந்திடுவர் உலகர் தாமே 16

வேறு

நம்பியாம் வேங்க டன்நீ நற்றுற வேலா யாயின்
சம்புவித் தீவ தாகச் சகந்தனிற் பெருமை பெற்றும்
நம்புமம் மடத்தில் வேத வித்தகர் நன்கு வோதார்
சம்புவின்ஊளை யேதான் சந்ததம் ஒலிக்குங் காண்பாய் 17

உள்ளுநற் சந்யா சந்தான் உவந்து நீ யேலா யாயின்
கள்ளவிழ் மலர் க்கா புள்ளே கரைந்திடுங் கால மெல்லாம்
நள்ளிருள் ஆந்தை யன்றோ நாளெலாம் ஒலிக்குங் காண்பாய்
கொள்கையைப் பரப்பு ஞானி குடிகொளார் மடத்தில் என்றும் 18

ஒப்பிலா வேங்க டன்நீ உயர்ந்திடுந் துறவு தன்னை
இப்புவி மக்கள் வாழ யேலாது ஒழிவை யாயின்
இப்போது மடத்தில் சோதி இனியநன் மணத்தைக்கொண்ட
தப்போது கொள்ளி வாய்ப்பேய் அக்கினி மட்டு மாமே 19

இருக்கைதான் ஞானி யர்க்கு இம்மடத் தெந்நா ளுந்தான்
மருக்கொளும் மலர்க ளாலே மாண்புடன்விளங்கக் கண்டாய்
தருக்கமே கொண்டு தூயசந்யாசந் தனைம றந்தால்
தெருக்களில் ஆகும் பூழி திருமடத் தென்றுஞ் சூழும் 20

சத்துவ குணத்தி னாரைச் சரஸ்வதி நோக்கிச் சொல்வாள்
உத்தம குணமிக்கோங்கி யுயர்புகழ் பெற்றே வாழ
மத்துவ மரபின்வந்தாய்மாண்புறு சந்யா சத்தை
இத்தரை கொள்ள வேண்டும் என்னுடை விருப்பம் என்றாள் 21

உன்னால் நான்மகிழ்ச்சி கொள்வேன் உன்னிடம் வாழு கின்றேன்
உன்னை நான் விட்டு மேதான் ஒருகணம் பிரியமாட்டேன்
பொன்னார்வ மில்லாய் தூய புகழினில் ஆர்வங் கொண்டாய்
உன்னார்கள் உன்போல் தெய்வம் உண்மையாய் உளத்திற் கொண்டே 22

இப்புவி தனில்சந் யாசம் ஏற்பதும் இறைவ னாலே
ஒப்புதல் வேண்டு மென்றே உனக்குநான் கூறு கின்றேன்
தப்புதல் முடியா தென்றுந் தனிப்பெரும் புகழ்தான் உன்னை
எப்பொழு தடைவோ மென்றே யேக்கமுங் கொண்ட தென்றாள் 23

பாமகள் மந்திரத்தைப்பரிவுடன் பாங்க மர்ந்தே
கோமக னாக நாதர்குவலயம் விளங்க வேண்டி
நாமகள் ஓதி விட்டாள் நலமுற வேங்கடர்பால்
சர்மமு நான்கே யாகச் சரஸ்வதி தான்ம றைந்தாள் 24

வேறு

நாதர் காதிலே
ஓதினாள் கலை
மாதின் அருள்பெற
சோதி பெற்றனர் 25

முன்னை வினையினால்
அன்னை அருள்பெற
பின்னை நலமுறத்
தன்னை யுணர்ந்தனர் 26

தனைத்து திக்கவே
நினைத்த மாத்திரை
மனத்தின் மாசுமே
கணத்தின் நீங்கின 27

நள்ளென் யாமத்து
கொள்ளுங் காட்சியால்
மல்லல் ஞாலத்து
வள்ளல் ஆயினார் 28

தெள்ளு ஞானத்தால்
உள்ள முவப்புற
கொள்ளுந் துறவறம்
வள்ளல் எண்ணினார் 29

நித்திரை நீங்கி
யித்தரை மீது
புத்தொளி பெற்றே
யுத்தம ரானார். 30

பக்குவ மில்லாத் தாரம் பரிவினால் சரஸ்வதி தன்
பக்கலில் அமர்ந்தே யன்னான் பலப்பல யேது காட்டி
தக்கவா றுரைக்கத் தக்க சமயமும் வாய்க்க வில்லை
பொக்கென யில்லம் விட்டே போவதாய் முடிவெ டுத்தார். 31

சித்தமுந் தெளிவேயாகிச் சிறந்திடும் வேங்க டர்தாம்
உத்தம குணத்தாள் தன்னை உள்ளத்தால் நினைக்க வில்லை
நித்தியக் கடமை செய்தே நியமமும் ஆற்றிப் பின்பு
உத் தரி யந்த ரித்தே ஒருப்பட்டார் மடத்திற்செல்ல 32

ஆங்கவர்செல் லுங் காலை யருகினில் நாரணன் தான்
நீங்கிடா வகையில் அப்போ நின்மலன் தனையே பற்றி
ஓங்கிடுந் தந்தை தாளை உவப்புடன் தளைக்கும் போது
பாங்குடன் பாலன் றன்னைப் பரிவிலா தகற்றிச் சென்றார் 33

மாட்சிமை யுடைய மேலாம் மடத்திற்கேசெல்லு கின்ற
கா ட்சியைக் கண்டு விட்டாள் கனிவுடன் சரஸ் வதிபாய்
தாட்சிதான்வுறுமோ என்னுந் தையலைத் திரும்பிப் பாராக்
காட்சியால் உள்ளம் பொங்கக் கண்கள் நீர் பொழிய நின்றார் 34

நொந்துமே வந்தார் நேற்று நோய்மிகக் கொண்டார் போன்றார்
சிந்தையில் தெளிவில்லாதே செய்வது அறியா தானார்
பந்தமே யற்றார் போன்றேபராமுக மாகச் செல்லும்
விந்தையைக் கண்டாள் என்னே விம்மியேயழுதாள் பெண்ணே 35

தெளிவிலார் நேற்று யின்றோ தெளிந்தவர் போலே யானார்
அளியிலார் போன்றே செல்லும் அவர்குறிப் பறித லென்றல்
எளியனேற் காகு மோதான் எவரெனக் கெடுத்து ரைப்பார்
வளிமிக வீசும் போது விளக்கென வாட லானாள். 36

விரைவினிற் சென்றார் நாதர் விருப்பொடு காணு தற்கே
உரைசெயற் கரியோன் தன்னை யுணர்ச்சிமீ தூரப் பெற்றே
தரையினில் விழுந்தே தீர்த்தர் தாளினைப் பற்றி னானைக்
கரத்தினில் எடுத்த போது கண்கள்நீர் பொழிய நின்றார் 37

பெரியவர் தாங்கள் நன்றாய்ப் பேசிய வார்த்தை கேளேன்
சிறியவன் அறியா நாயேன் செய்பிழை பொறுக்க வேண்டும்
உரியநற் காலத் தெற்கே உறுதியை வுண்மை தன்னை
அறிவிக்க வேண்டு மென்றேயலர்மகள் கனவில் வந்தாள் 38

கனவில்நான் கண்ட போதே கடையனேன் ஞானம் பெற்றேன்
மனமது செம்மை யானேன் மறுத்துரை பேச கில்லேன்
நனைமலர் தூவி நாயேன் நாவினால் வழுத்த வேண்டி
நினைவெனை யுற்ற போதே நில்லாது மறைந்து விட்டாள். 39

உறுதியைச் சொன்னாள் என்னால் உற்றிடும் பிழையைச் சொன்னாள்
இறுதியாய்க் கூறும் போதும் இமைப்பிலேன் இயம்பா நின்றேன்
சிறுமையேன் நாயேன்அப்போ செய்பிழை நினைத்த தாலே
வறுமையே யுற்றார் போன்றேன் வாடினேன் வந்து விட்டேன் 40

என்றவர் உரைத்த போது யிருமலர்க் கரங்கள்பற்றி
நின்றவர் தம்மை நோக்கி நெகிழ்ந்தனர் மனத்தில் எண்ணி
ஒன்றன்பின் ஒன்றாய் உள்ளம் உணர்ச்சிமீ தூரப் பெற்றே
அன்றவர் அடைந்த வின்பம் அளவிடற் கரியதம்மா! 41

வேங்கட நாத உன்னை வேண்டி னேன்விரும்பி வந்தாய்
நீங்கிடுங் குறைகள் எல்லாம் நின்மலன் அருள்பா லித்தான்
ஓங்கிடும் மூல ராமர் உயர்பூசை செய்வ தாலே
தீங்கற உலக மெல்லாந் திகழ்ந்திட வேண்டு மென்றார். 42

ஒருங்கினி திருந்தார் என்னே ஒருவரின் ஒருவர் முன்னம்
பெருங்குறை யென்றே பேசும் பெற்றிமை யறிந்தும் நாதன்
மருங்கவர் இருந்த காட்சி மாண்பினை யுணர்ந்த தீர்த்தர்
இரும்பினை யடைந்த காந்தத் தியல்பினைக் கண்டு தேர்ந்தார் 43

குருவினின் வார்த்தை தன்னைக் குறுகியே கேட்ட நாதன்
பெருவியப் படைய முன்னம் பேசிய வார்த்தை யோரார்
இருநிலம் வாழ வேண்டி யிருந்திடுந் தீர்த்த ரின்நல்
அருங்குணம் அதனைக் கண்டே யவரடி போற்றி செய்தான் 44

செப்பரு மலரின் வாழ்வாள் செப்பிய வார்த்தை யாலே
ஒப்பருஞ் சந்யா சத்தை யுவப்புடன் ஏற்று வந்தாய்
இப்புவி தனிலே லக்மி நாரணன் தனக்கு நீயும்
செப்புப நயனந் தன்னைச் செய்திட வேண்டு மென்றார் 45

அன்னவர் உரைத்த தேபோல் ஆஞ்சில நாளிலேயே
நன்னயத் துணைய தாகு நயனந்தான் அளிக்க வேண்டி
சொன்னய மிக்க தீர்த்தர் தொன்மையாம் மரபு ளோர்க்கும்
பன்னரு வேதியர்க்கும் பகர்ந்தனன் பண்பின் மிக்கான் 46

மரபுளோர் வந்தார் தூய மாண்பினால் மத்வச் சீடன்
தரமதை யறிந்து வந்தார் தரணியோர் கடவுள் மேலாங்
கரமதில் அளித்த லானக் கடமையை யாற்றி யன்றே
பிரம்மோப தேசந் தன்னைப் பிழையறச் செய்து வைத்தார் 47

நனைமலர் தூவி வாழ்த்தி நல்லுப தேசஞ் செய்தார்
இனியவன் இறைவன் தன்னால் இயங்கிட வேண்டு மென்றே
நினைவொடு கூறு நாதன் நினைவினை யறிந்த மேலோர்
தனயனை யெண்ணி கண்ணீர் தரையினில் சோர நின்றார் 48

இத்தகு வுபதே சந்தான் இன்று நாங் கண்ட தேபோல்
உத்தம குணத்த ராகி யுலகினில் செய்வர் யாரே
சித்தம தழகர் தீர்த்தர் திறமெலாம் எண்ணிப் பார்த்தே
மெத்தகு உலகு போற்றும் மேன்மையை யுரைத்தார் சில்லோர் 49

வந்தவர் பலருஞ் சொன்னார் வாய்த்தவிவ் வாய்ப்பைப் பெற்றோம்
நந்தம துலகிற் பல்லோர் நலந்தனைப் பெறவே யில்லை
இந்தவிச் செய்தி மீண்டும் இரண்டொரு நாளில் மற்றோர்
சிந்தைதான் குளிர நாமுஞ் செய்யவே வேண்டு மென்றார் 50

ஆக பாடல் தொகை – 743

## பட்டி மன்றப் படலம்

முன்னிலை வகித்தார் தீர்த்தர் முற்பெறு தவத்தினாலே
அந்நிலை மரபின் நாதர் அவரையே தலைவ ராக்கித்
தன்னிலை தானே யோதித் தருக்கமே நடத்த வேண்டி
எண்ணியே வைத்தார் பட்டி மன்றமே எழுச்சி கொள்ள 1

இல்லறந் துறவ றந்தான் ஏற்றது எவ்வறந்தான்
நல்லறத் தன்மை யெல்லாம் நாட்டிற்கே யெடுத்துரைத்தே
உள்ளவா றுணர வேண்டி ஒருபெரு விழா வெடுத்தார்
மல்லல்மா ஞாலத் துள்ளோர் மன்றமே சிறக்க வந்தார் 2

ஞானியர் வந்தார் மேலாம் நங்கையர் வந்தார் என்னே
கூனுடைக் குருடும் உள்ளக் குறைபல வுற்றோர் வந்தார்
தேனினு மினிய தாமத் திருவிழாச் சிறப்பைக் காண
வானுளோர் கூடி னார்கள் வார்த்தையால் வழுத்தற் காமோ? 3

வேங்கடர் மனைவி யென்னே விரும்பியே வந்தார் நன்மை
ஓங்கிட வேண்டு மென்றே உயர்மடத் துள்ளோர் கூடி
பாங்குடன் பட்டி மன்றம் பயன்பெற வேண்டுமென்றே
தாங்கடன் ஆற்ற லுற்றார் தகுகல்வி யுடையோர் தாமே 4

மத்துவ மரபின் வந்த மாதவச் சிரேட்டர் தீர்த்தர்
தத்துவ ஞானி யாவார் தாளினை வணங்குகின்றேன்
சத்துவ குணமே மிக்குச் சபைதனில் கூடியுள்ள
உத்தம குணத்தோர்க் கென்றன் உரியநல் வாழ்த்தே யென்றார் 5

இல்லறத் துறவ றத்தில் ஏற்றதெவ்வறமே யென்று
சொல்லற முறையிற் சொல்லச் சூழ்ந்துளார் கவிவாணர் தாம்
இல்லறந் தனையே கொண்டீர் இயல்பினை யறிந்து கொள்ள
நல்லறப் பட்டி மன்றம் நன்மையே விளைக்கும் என்றார் 6

## இல்லறஞ் சிறந்த தென்பார் தொடக்கவுரை

நல்லறங் கொண்டே வாழும் நாதரின் தலைமை தன்னில்
இல்லறந் துறவ றத்தில் ஏற்றதெவ் வறமென் றெண்ணிப்
பல்லறங் கொண்டு யர்ந்தப் பண்புள தீர்த்தர் தாளை
யில்லறம் பேசு கின்ற வெளியனேன் ஏத்து கின்றேன். 7

உலகுக்கே யில்ல றந்தான் உயர்ந்ததாம் எனவு ரைத்தார்
அலகிலா வுயிர்கட்கெல்லாம் அவ்வறஞ் சிறந்த தென்றார்
பலப்பல யேது காட்டிப் பகர்வது மேனோ மக்கள்
அலக்கண்தா னுற்றால் என்றால் காப்பதும் அவ்வறந்தான் 8

மக்களைப் பெற்றார் தன்னை மகராசி யென்று ரைத்தார்
தக்கவா றுலகில் மக்கள் தன்மையை யுணர்ந்த தாலே
ஒக்கலுந் தானு மென்றே யோதுமவ் வுயர்ந்த தன்மை
இக் கலியுகத்தில் மேலாம் இல்லறத் தாலே யென்றார் 9

விருந்தினைப் போற்று கின்ற வேள்வியைச் செய்ய வென்றால்
பெருந் துன்பங் கொண்டோர்க் கென்றும் பிச்சையே யிடுத லென்றால்
அருந்து நல் லுணவு தானும் அதிதியோ டுண்ண வென்றால்
சிறந்திடும் இல்ல றத்தின் சிறப்பினா லாகும் என்றார் 10

அறனெனப் பட்டதெல்லாம் அவ்வறத் தாலே யென்றார்
திற மெலாங் கண்டு ரைத்தார் திறமுடன் வள்ளுவர் தான்
உரமுடை மாந்தர் எல்லாம் உணர்ந்தனர் உறுதி தன்னை
பிறந்தநற் பயனை யெல்லாம் பெற்றனர் அவ்வறத்தால் 11

துறவறஞ் சிறந்த தென்பார் தொடக்க வுரை

அறந்தனை யறிந்த நாதர் அவருரை கேட்க வந்தீர்
துறவறந் தனையே கொண்ட தூயராந் தீர்த்தர் தாளைத்
திறமுடன் வணங்கி யன்னார் திருமுன்பு திறமிலேன் யான்
துறவறம் பேசு கின்றேன் தூயநற் சபையோர் கேளீர் 12

துறவறத்தின் பெருமைதனைச் சொல்லக் கேட்பீர்
தூயதிரு வள்ளுவரே சூழ்ந்து ரைத்தார்
அறமுறைத்த வள்ளுவரே யுரைத்த தென்றால்
அதன்பயனைச் சற்றே நீர் ஆய்ந்து பார்ப்பீர்
நிறஞ்சாதி மதமென்றே நினைந்தி டாமல்
நிதந் தூய மனத்தினால் நிமலன் தாளைக்
கரங்கூப்பி வணங்கி நித்தங் கடமை செய்வார்
கடவுளுக்கும் அடுத்தவரே கருணை மிக்கார். 13

நீத்தாரே யிவ்வுலகை நிலையாய்க் காத்தார்
நின்மலனின் திருவடியை நிதமும் போற்றிக்
காத்தாரே அவரன்றோ கருணை மிக்கார்
கடவுளுக்கே அடுத்தவரைக் கண்டுகொள்வாய்
சாத்துயரைப் போக்குபவர் சந்யா சத்தால்
சரித்திரத்தை மாற்றுகின்ற சமர்த்தர் ஆவார்
நாத்திகத்தின் வேரறுக்கும் நல்லோராவார்
நலமெல்லாம் அவராலே நாடுங் கண்டாய். 14

## துறவறத்தை மறுத்து இல்லறத்தான் கூறும் எதிர்ப்புரை

கூடாத ஒழுக்கத்தைக் கொள்வதாலே
குறைவுதான் துறவறத்தாற் குணமே யில்லை
பாடாகப் பேசுமப் பான்மை யெல்லாம்
பாரினிலே செல்லாதே பாசம் மிக்க
நாடாக வேண்டு மென்றால் நானி லந்தான்
நலம்பெறுமிவ் வில்லறத்தை நாடுங் கண்டாய்
தேடாதே தீவினையைத் திறமாய்ச் செய்தே
திருவருளின் பேராலே தினமுந்தானே! 15

சாத்திரங் கற்று யர்ந்த சந்யாசி யாரோ நாட்டில்
ஆத்திரங் கொண்டே துணையை யதானாலே துறவு பூண்டார்
காத்திரம் நிரப்பு தற்கே கடவுளைத் தொழுத லென்றால்
சாத்துயர் நீங்கு மோவிச் சந்யாசந் தன்னாலென் றும் 16

துப்புர வில்லை யென்றே துறவறங் கொண்டோர் பல்லோர்
இப்புவி தனிலே தெய்வ இன்பத்தில் திளைப்பர் யாரோ
தப்புதாம் செய்தற் கென்றே சந்யாசங் கொள்வர் என்றால்
ஒப்புதற் றகுமோ நீரே யுணர்ந்துமே யுரைப்பீர் என்றார் 17

## இல்லறத்தான் எதிர்ப்புரையை மறுத்துத் துறவறத்தான் கூறுந் தொகுப்புரை

களத்திரம் அன்பு கொண்டால் கனிந்திடும் இல்லறந்தான்
திளைத்தவவ் வின்பத் தாலே திருவருள் தனை மறந்தே
இளைத்துமே போறீர் என்றே எண்ணினர் மேலோர் என் றுந்
தளைத்திடும் இல்லறத்தைத் தகர்த்தனர் துறவி யன்றோ? 18

இன்பத்தில் இன்பம் என்றே இறைவனை வணங்குகின்ற
இன்பத்தில் இன்பங் காண்போன் என்றுமே துறவியாவான்
இன்பத்தில் இன்பம் என்றே யென்றென்றுந் துன்பங் கொண்டார்
இன்பத்தில் இன்பம் என்றால் இல்லறத் தாமோ சொல்வீர் 19

அறம்பொருள் இன்பந்தான் அடைந்த பின்பு
அவன் வீடு அடையவே யாகு மார்க்கம்
உரமுடைய பெரியோர்கள் ஓதி வைத்த
ஒழுக்கத்தின் நெறியிதனை யுணர்ந்து பார்ப்பாய்
தரமில்லா மக்களுமே துறவு பூண்டால்
தகைமை சால் துறவோர்க்கே யிழுக்கொன்றில்லை
அறமெல்லாம் செய்தவனும் வீடு பேற்றை
யடைய அவா வறுத்தலது வேண்டுமன்றோ. 20

வேங்கட நாதரின் தலைமை யுரை

ஒருவரை யொருவர் நீங்கள் உணரவே சொன்னீர் நன்றாய்
இருவரும் பேசி னீர்கள் இருந்தமிழ்ப் புலமை கொண்டே
பெரியவர் சுதீந்த்ர தீர்த்தர் பேரருள் பெற்ற தாலே
சிறியவன் அடியேன் கூறுந் தீர்ப்பினைக் கேட்க வேண்டும் 21

கண்கள் போல் இருவர் ஒன்றிக் கடவுளின் கருணையாலே
பெண்களோ டாண்கள் கூடிப் பேசுமிவ் வில்லறந் தான்
பெண்களும் ஆண்கள் தாமும் பேதமே கொள்வ ராகில்
ஆண்களே கொள்ளும் மார்க்கம் அது துறவறமே யாகும் 22

பிறநலங் கொண்டு வாழும் பெற்றிமை பெண்களுக்கே
துறவுதான் பூணல் இல்லைத் தொன்மையாம் முறையு மஃதே
பிறர்தமை யிழித்துப் பேசாப் பேதமை யற்று வாழத்
துறவுதான் பூண்டார் ஆண்கள் தூய்மைதான் கெடுமே யென்று 23

துறவினைக் கொண்ட பேர்கள் தொடர்பொருள் ஆய்ந்ததாலே
அறவினை யற்று வாழ்வார் அறத்தொடு வாழ்வார் என்ற
திறமதை யுணர வேண்டுந் தீநெறி யகற்ற வேண்டும்
புறமதிற் பேசு கின்ற புன்மைதான் ஒழிய வேண்டும் 24

தன்னலத் துறவு பூண்டோர் தரணியில் பொது நலத்தை
உன்னியே துறவு கொண்டோர் உயர்ந்தவ ராவா பாரில்
நன்னய மில்லாதேதன் னலமதே கொண்டு வாழும்
அன்னதாந் துறவறத்தை யகற்றிட வேண்டும் நீவிர். 25

இல்லற வாழ்க்கைக் கண்ணும் இவ்விரு தன்மை யுண்டு
நல்லறச் செய்கை யின்றேல் நாட்டிற்குப் பயன்தான் என்னே
சொல்லற முறையிலெல்லாம் சுருங்கிய முறையிற் சொன்னார்
வல்லவா றுரைத்து வைத்தார் வள்ளுவர் வாக்கை யோர்வாய். 26

இல்லவள் மாண்பு தன்னை யெடுத்துமே யுரைக்க லானார்
நல்லவள் ஆகிவிட்டால் நானிலஞ் சிறந்தே யோங்கும்
சொல்லற வாழ்க்கை யெல்லாம் சுயநலம் அற்ற தாலே
இல்லறந் துறவறந்தான் இரண்டுமே ஒன்று தானே 27

வாழ்வியல் அறிந்து ரைத்தார் வள்ளுவர் காப்பியர்தான்
தாழ்விலா துலகே வாழுந் தருமறங் கண்டு ரைத்தார்
சூழ்வினை யாலே துன்பத் தொடர்பினை யறுத்தற் கான
ஊழ்வினை தனையே வெல்ல உற்றது துறவறந்தான் 28

சற்றுமே துறந்து வின்பஞ் சகத்தினைக் காத்தற் கென்றே
உற்றிடும் வாழ்க்கை யெல்லாம் உயர்ந்திடும் இல்லறத்தால்
நற்றவங் கொண்டே யிந்த நானிலங் காத்தற் கென்றே
முற்றவே துறப்பர் தூய முனிவராய் ஆவார் தாமே 29

வயங்கு நற்கண்ணி ரண்டில் வலமிடஞ் சிறப்பு முண்டோ
தயக்கிலாச் செல்லும் வண்டி தனில்பூட் டுங் காளைதம்முள்
மயக்கொடு பெரிய ரெல்லாம் மதித்தில ரிரண்டில் ஒன்றை
செயக்கொடித் தேரின் அச்சுள் சிறந்தது எந்த வச்சு 3(

அறவழி யின்பங் கண்டார் அதனைத் தங்குறளில் விண்டார்
நிறம்மொழி யினமென் றெண்ணான் நினைவெலாம் அறத்தின் பாற்றே
உறவினால் உற்றோர் பெற்றோர் ஓம்புவான் யில்லறத் தான்
பிறருக்கே வாழ்வ னென்றே பிறந்திட்டான் பெருமையுற் றான் 3·

அன்புற யில்ல றத்தான் அகமிக வளர்ந்தே நாளும்
நன்மைகள் செய்வ தாலே நானிலத் தோங்குஞ் சுற்றம்
நன்றென வளர்ந்த தென்னே நல்லருள் உளத்தைப் பெற்றே
என்றவன் துறவி யானான் யில்லறந் தீர்ந்த தம்மா ! 3‹

வாழ்வெனக் கூறுந் தூய வையத்து மக்கட் கெல்லாந்
தாழ்விலா தறங்கள் முன்னோர் தகுமுறை யோதி வைத்தார்
சூழ்நிலை யறிந்தே நாளுஞ் சுற்றத்தைக் காத்தல் ஒன்று
ஊழ்வினை வென்றே யுலகை யுய்விக்க வாழ்த லொன்று 33

என்றவர் உரைத்த போதச் சபைதனி லிருந்த பேர்கள்
நன்றெனக் கரங்கள் கொட்டி நாதரை வாழ்த்தி னார்கள்
ஒன்றிய உள்ளங் கொண்டே உயர் தீர்த்தர் உவப்பினாலே
மன்றுளோர் தமையே பார்த்து மகிழ்ச்சியால் புகழ லுற்றார் 34

## சுதீர்ந்த தீர்த்தரின் புகழுரை

நாதரைச் சீடராக நான் பெற்றேன் நற்றவத்தால்
வாதனை தீர்ப்பார் இந்த வையத்து மக்கட்கெல்லாம்
போதனை புகல்வர் என்றும் புகழெலாம் அவரைச் சாரும்
சாதனை செய்து மேலாஞ் சரித்திரம் படைப்போராவார் 35

பட்டமும் பெற்றார் மேலாம் பட்டத்துக் குரிய நாதர்
அட்டதிக் கயங்கள் போன்றே அறிவிலே வலிமை பெற்றார்
இட்டசித் திகளை யீயும் மியல்பினில் சித்தர் போன்றார்
பட்டமுந் தந்தேன் பட்டாச் சாரியர் பட்டந் தன்னை. 36

ஆக பாடல் தொகை -- 779

## பட்டாபிடேகப் படலம்

துறவுதான் கும்பகோணத் தளித்திடில் துயருழந்தே
துறந்திடும் உயிரே தூய மனைவியின் தொடர்பால் நாதர்
துறவுதான் சுதீந்த்ர தீர்த்தர் தூயதம் மடத்தில் தாரார்
துறவுதான் அளிப்ப தற்கே தொன்மையாந் தஞ்சை சென்றார் 1

துக்கமும் மகிழ்ச்சி மிக்கின் துயர்நிலை யெய்தும் மக்கள்
தக்கவக் காலந் தன்னில் தகுமுறை யறிய மாட்டார்
எக்கதி யடைவோ மென்றே யெழுச்சியால் உளமியங்கார்
அக்கதி அடைதலாலே அல்லலே யடைவரன்றோ? 2

எஞ்சலில் யாகம் செய்தே ரகு நாத பூபாலன் தான்
தஞ்சமாய்த் தீர்த்தர் தாளைத் தன்முடி தனிலே சேர்த்தார்
தஞ்சையில் ஆண்டு வந்தார் தீர்த்தர்தம் வரவு கேட்டே
மஞ்செனு மழைமே கம்போல் மனமது குளிர்ச்சி கொண்டார் 3

வேங்கட நாதருக்கே விருப்புடன் சந்யா சத்தை
ஓங்குமித் தஞ்சை தன்னில் உயரரண் மனையின் கண்ணே
பாங்குடன் அளிக்கத் தீர்த்தர் பகர்ந்திட ரகுநாதர்தாம்
நாங்கடன் முடித்தோம் என்றே நவின்று நல்லடி பணிந்தார் 4

அரசரின் ஆணை தன்னை யறிந்த வந் நகராம் தஞ்சை
முரசொலி ஒலிக்கத் தீர்த்தர் முழுதருள் பெற்றே னென்றே
பரசுதல் செய்தார் மன்னர் பரிவொடு மக்களெல்லாம்
அரசரின் வருகை போன்றே யணிசெயத் தொடங்கினார்கள் 5

திருவிழாக் கோலங்கொண்டே திகழ்ந்தத் தஞ்சை மண்ணில்
திருவிழாக் காணுந் தீர்த்தர் திருமுன்பு ரகு நாதர் தாம்
பெருவிழா வெடுத்து அன்னார் பேரருள் பெற் நினைந்தே
ஒருவிழா வெடுத்தார் மக்கள் உவப்பினால் உள்ளம் பூத்தார் 6

மாவிலைத் தோர ணந்தான் மகிழ்வொடு கட்டினார்கள்
ஓவிலாத் தஞ்சை மக்கள் ஒருவருக்கொருவர் உள்ளம்
தாவிலாக் கடமையாற்றல் தஞ்சையின் மன்னர் காண
பூவிலை கொள்வார் எங்கும் புகழ்விலை கொள்வா ருண்டோ 7

ஒருமண விழாவே யெண்ணி உவந்தனர் மக்கள் நாதர்
பெருமண விழாவை முன்னாள் காணுமப் பேரிழந்தோர்
திருமண விழாவைப் போன்றே திகழ்ந்தன வீதி யெங்கும்
மருமண மென்னத் தஞ்சை மலர் மணம் மிகுந்த தம்மா! 8

வேறு

ஞால மீதினில் ஞானி யாகவே
வால யோகியாய் வருகை தந்தனர்
சீலங் கொண்டுமே கீர்த்தி பெற்றிட
கோலங் கொண்டதக் கோலத் தஞ்சையே 9

அரம்பை யைக்கொடு அணிசெய் மாநகர்
அரம்பை வாழுல கென்ன வயிர்த்திட
அரண்மனை யெலா மழகு மிஞ்சிட
அரண்மனைதனில் அலர் மலர்ந்ததே 10

புனுகு சந்தனம் பூசும் வனிதையர்
நணுக வார்குழல் நானம் மான்மதம்
அணிசெய் அன்னவர் அழகி னால் மனம்
துணிந்தி லேமது துறக்கம் என்னவே 11

இசையில் மங்களம் இனிதி சைத்திட
திசையில் எங்கணும் சென்ற செய்தியில்
இசையைக் கேட்கவே ஈண்டு வந்தனர்
வசையி லாநல் வாழ்வி தென்னவே ! 12

வேறு

மத்துவர் தத்துவத்தை மகிதலம் போற்றச் செய்த
மத்துவச் சீடர் பல்லோர் மதித்துமே வந்தே அன்னார்
மத்துவர் துதித்துப் போற்று மரபினை வழாது காக்க
மத்துவ மடத்தைப் போற்றி மாந்தர்பல் லோர் மகிழ்ந்தார் 13

பக்தியின் பால ராகிப் பலப்பல கீர்த்தனங்கள்
பக்தர்கள் பாட லுற்றார் பரிவுடன் மக்கள் கேட்டார்
பக்கவாத் தியங்கள் கொண்டே பண்ணொடு மிசைத்த போது
பக்தர்கள் கூட்டங் கண்டார் பரவசங் கொண்டார் தீர்த்தர் 14

நலமிகு மாதர் பல்லோர் நல்லிசைப் பாடல் பாட
குலமொடு குணமு மிக்குக் குவலயம் விளங்கு மென்றே
உளமது மகிழ்ச்சி கொண்டார் உயர்குரு தீர்த்தர் தாளை
நலமிக வணங்கி னார்கள் நாரியர் பலரும் போற்றி 15

வேதகோஷங்கள் ஓர்பால் விற்பன்னர் விளம்பா நிற்ப
கீதங்கள் இசைத்தார் கீர்த்திக் கீர்த்தனங் களிலே பல்லோர்
சாதனை யியற்றி மேலாஞ் சரித்திரம் படைக்க வந்த
போதனே யென்றார் நாதர் புகழினைப் புகழ லுற்றார் 16

பாமரர் பக்தர் என்னே பகரரண் மனையின் கண்ணே
தாமத மின்றித் தங்கள் கடமையை யாற்ற லுற்றார்
நாமகள் கணவன் என்றே நாதரைப் புகழ்ந்தார் மேலோர்
கோமகன் ஆனார் என்றே கூறினர் குறையற் றாரை 17

நாரணன் அம்சமான நாதரை நானிலத் தோர்
ஆரணங்கூறும் மேலாம் அவ்வுரை தேர்ந்தி லாதோர்
காரண மூலன் சங்கு கர்ணர்தான் இவரே யென்று
பூரணமாகப் போற்றிப் புகழ்ந்தனர் புகழ்மிக் காரை 18

பங்குனி மாதந் தன்னில் பகர்ருத்ரோத் காரி யாண்டில்
நங்குல மரபின் வந்த நாதனன் முகூர்த்தத் தப்போ
எங்கனு முள்ளோர் எய்த எழில் தீர்த்தர் முன்னதாக
அங்கவர் வந்த போதே அவனியோர் மகிழ்ந்தாரம்மா! 19

வளர்பிறை மூன்றாம் நாளில் வயங்கிடு ஞானம் என்றே
தளர்விலாத் தீர்த்தர் தாமுந் தகுமுறை மூல ராமர்
உளமது மகிழ்ச்சி கொண்டே யுயர் பூசை செய்தார் நன்றாம்
வளமிகு தஞ்சை தன்னில் வையகம் போற்றிற் றம்மா! 20

பகலவன் உதித்த போதே பால்குண மாதத் தன்று
பகவனின் நாமந் தன்னைப் பகர்ந்திட வேதந்தன்னைத்
தகவொடு தீர்த்தர் தாமுந் தகுமுறை யோத நாதர்
மிகு ஞானம் பெறவே சங்க நாதமே மிகுந்த தம்மா! 21

பந்தமே யகற்றித் தீர்த்தர் பகருமவ் விராஜ யோகச்
செந்தண்மை யாலே நாதர் சிறப்பொடு விளங்கி நின்றார்
அந்தணன் ஆக வேண்டி யவரு நன் நீரே யாடி
நந்தமர் வணங்கு நாதர் நலம் பெறுங் காவி கொள்ள 22

துவராடை யுடைய தீர்த்தர் தொன்மையாம் மரபின் நாதர்
துவராடை யணியத் தந்தார் தூயநன் முனிவ ராகித்
துவராடை தனிலே யப்போ துலங்கிட மக்கள் கண்டேத்
துவரானார் என்னே யன்னார் தூய நன் முனிவ ரானார் 23

அணிந்தனன் காவி அப்போ தருகிலே யிருந்த பேர்கள்
பணிந்தனர் மனத்தின் பாதம் பனிமலர் என்ன பாவம்
துணிந்துமே போக்க வல்ல தூயவரானார் நாளும்
கனிந்தருட் கடலின் செய்ய கதிரவன் என்ன கண்டார் 24

பால்குண மாதத் தன்று படிவரின் உருவந் தாங்கி
நால்வகைப் படியைத் தாண்டி நலம்பெற நானிலத்தில்
மேல்படி யடைந்தான் நாதர் மேதினிமக்கள் கண்டார்
வால்வளை ஒலித்த தெங்கும் வளம்பெற வையகத்தே! 25

எல்லையற்ற மகிழ்ச்சிய டைந்தனர்
எல்லை யற்ற புகழுடைத் தீர்த்தரே
ஒல்லை ப்ரம்மோ பதேச மளித்திட
நல்ல நேரத்தில் நாதரும் வேண்டினார் 26

மூல ராமர் பூசையை யேற்கவே
மூல மந்திரந் தன்னைய ளித்திட்டார்
மூல காரணன் முழுதுணர் ஞானியாம்
மூல னாம் சங்கு கர்ணரிவரென்றே 27

ஏன்ற தீர்த்தர் ராகவேந்திர ரென
தோன்றி நாமங் கலைமாது கனவிலே
சான்றி தென்னவர் சாற்றுந் தருணத்தில்
ஆன்றவர் பலர் ஆனந்தங் கொண்டனர் 28

அளகா புரிசெல்வம் அடைந்த சுதீந்தரர்
உலகம் போற்றும் உத்தமன் ராமனாய்
இலகு சீரருள் ராகவேந் திரரென
உலக றியவு ரைத்தன ருண்மையே 29

முனிவ ருள்முடி யரசராம் ராகவர்
நனித வத்தினால் நண்ண சுரேந்திரர்
இனிபு கழ்விஜ யேந்திர ராயினார்
நனிசெய் வாதஞ் சுதீந்திர ராவரே 30

வேத மந்திர வேதியர் சூழ்தர
கீத மின்னிசைக் கிளர்ச்சியின் மக்களே
சீதரன் சுதீந்த்ர தீர்த்தராம் வேங்கட
நாதரே நலம் பெற்றிட நல்கினார் 31

சங்கு புட்பங்கள் தீர்த்தம் அளித்தவர்
அங்கு ஒன்பான் ஆபர ணங்களும்
எங்கு மேபுகழ் என்னுநன் முத்துக்கள்
பொங்கு மண்டனிற் போற்ற வழங்கினார் 32

மூலராமர் முதல்வேத வியாசரை
சால கிராமம் சாத்திர புத்தகம்
ஏல சாமரம் எழில் வெண் குடையொடு
கோலத் தங்கப் பல்லக்கு தந்தனர். 33

பரசு வின்னிசைப் பற்பல கருவியும்
அரசு டைச் செல்வ ஆபர ணங்களும்
விரசு கோலங்கள் விஞ்சிட ராகவர்
சரஸ்வ தியவர் சார்ந்தனள் உண்மையே 34

நன்றெனத் தீர்த்தரின் தீர்ந்தனள் நாமகள்
இன்று முவந்தாள் ராகவேந்திரரிடம்
தோன்று தொட்டவர் துங்கபத் திரைக்கணே
ஒன்றியவரில் உறைகின்றா ளுண்மையே 35

ஒன்றும் அறியா அடியேற் ககத்திருந்
தின்றுங் கவியே யேழை யியற்றிட
நன்று நன்றவர் நாமம் நவின்றனன்
துன்று பாவந் தொலைத்தருள் செய்கின்றாள் 36

வேறு

மத்துவ மடத்தரின் தீர்த்தர் மரபினில் ஒருவரானார்
உத்தம குணத்தால் ஞானம் ஓங்கிட உயர்ந்தோர்க் கெல்லாம்
தத்துவ சிரேட்டர் என்றே தஞ்சையின் மன்னன் கண்டான்
பத்தியின் பால ராகிப் பாதத்தைப் பணிந்து நின்றான் 37

வானுறு தெய்வம் நம்பால் வந்ததே யெனவுணர்ந்து
காணுறு தெய்வம் என்றே கருதினான் தஞ்சைமன்னன்
காணிக்கைத் தந்தே யன்னார் கழலினை வணங்குங் காலை
வாணியின் அருளினால்நல் வாழ்த்துக்கள் வழங்கினாரே 38

ஆக பாடல் தொகை – 817

அன்னை சரஸ்வதி பாய்க்கு அருள் செய் படலம்

அன்னை சரஸ்வதி பாய்தான் அன்பிலாத்
தன்னை யேவெறுப் பாளெனத் தஞ்சையில்
முன்னை வினையினால் முழுதருள் தீர்த்தரின்
என்னை சந்யாசம் ஏன்று கொண்டாரே. 1

தாரம் ஆனவள் தாயவள் ஆயினாள்
வார மிகுந்திட வான்பத மேபெற
தீர னாயினன் திசையெலாஞ் சென்றிட
வீர மிகுத்தனன் வேங்கட நாதனே. 2

ஊருஞ்சதமல வென்றீர் ஒண்பொரு ளாகும் பிள்ளைப்
பேறுஞ் சதமல வென்றே பேசினீர் பிள்ளைமுதற் பாரில்
ஆருஞ் சதமல வென்றே யறைந்தீர் யறியாதேற்கின்று
தேருஞ்சொலென்றே தேரேன் தெளியாதென் சகத்தில் யானே. 3

அருந்திலேன் உணவு தாங்கள் அருந்திடு முன்பு யானே
பொருந்திலேன் துயிலே என்றும் பிழைத்திலேன் பெருமைமிக்கீர்
வருந்தினேன் அல்லேன் யானும் வான்பொருள் இல்லை யென்றே
யிருந்துளேன் உயிரோ டின்னும் எனைவிட்டுப் பிரிந்த பின்னும். 4

சீராகுங் குடும்பங் கும்ப கோணமே சென்றா லென்றே
வாராய்நீ யென்றே யென்னை யழைத்துமே வந்தாய் என்னே
பேராகக் கொண்டே யேற்றார் பெருமையாய் தீர்த்தர் நானே
ஓராதே னாகி விட்டேன் உய்வகை யறிவிப் பாயோ. 5

ஐயராந் தீர்த்த ராவார் அவருரை யேற்று வந்தீர்
தையலாம் எனையே யின்று தரணியில் தவிக்க விட்டீர்
உய்யவே வகையே யில்லை ஊர் விட்டுச் சென்று விட்டீர்.
பையனாம் நாரணன் தான் பரிவின்றிதவிக்க விட்டீர். 6

காவாய்நீ யென்றே யண்ணன் களிப்பினால் கரம்பிடித்தே
தாவாத யாகம் செய்தே தந்தானே தரணி தன்னில்
ஓவாத துணையா வேனென் றொளிபொன்மோ திரம ளித்தே
நாவாலே யுரைத்த தெல்லாம் நானிலத்தறியா ரந்தோ 7

சாத்திரங் கற்ற நல்ல சந்யாசி யானீர் உண்மைப்
பாத்திரம் மிக்க தூய பதந்தனைப் பெற்றுவிட்டீர்
மாத்திரைப் பொழுதுந் தாங்கள் மனத் துயரகற்ற நாங்கள்
சாத் துயர் கொள்ளல் நன்றோ சந்யாசங் கொள்ளற்கென்றே 8

மத்துவச் சீடனாக மண்ணினில் மகிமை பெற்றீர்
மத்துவ நெறிகளைத்தான் மண்ணினில் வாழவைத்தீர்
தத்துவச் சீலனாகத் தரணியோர் போற்று கின்றார்
சத்துவ குணமோ தாங்கள் சம்சாரம் விடுத்த தெல்லாம் 9

வேறு

வேங்கடனை வேண்டி நித்தம் விரும்பியே யான் பெற்றேன்
நாங்கடமை யாற்றி நித்தம் நலமுடனே வாழவந்தோம்
தாங்கடமை மாறாதீர் தவிக்க நீர் விட்டு விட்டீர்
தீங்கெனையே நாடியதேன் திருவருளே யென் செய்வேன் 10

வேறு

நித்தியமான சீவன் நீங்கிடின் துன்பம் இல்லை
இத்தரை வாழ்வெனக்கே என்றென்றுந் துன்பம் ஆகும்
முத்தரைப் போன்று வாழ்வீர் முனிவராய் ஆகி விட்டீர்
சித்தத்தே யெனைநினையா சிறப்பினைத் தருவன் யானே 11

உயிருடன் வாழ்ந்தா லென்ன உள்ளத்தில் நினைப்பீர் நன்றே
செயிருறு மனத்தராவீர் சேர்ந்திடும் பழிதா னும்மை
அயிர்ப்பிலா ஞானந் தாங்கள் அடைந்துளீர் அதனால் என்றன்
உயிரினைக் கொடுத்துங் காப்பேன் உறுதியை யடைவீர் நீரே 12

நங்கையின் துன்பம் வேறோர் நங்கையே யறிவாள் உண்மை
சங்கையே யின்றி மாற்றாள் தயையினால் ஏற்றுக் கொள்வாள்
மங்கையாஞ் சரஸ்வதி பாய் மனத்துயர் கூறுதற்கே
கங்கையைச் சேர வேண்டிக் கருத்தினில் ஊக்கஞ்சேர்த்தாள் 13

குளத்திலும் உள்ளாள் நன்றாங் குடத்திலும் உள்ளாள் உற்று
அளத்தற்கே யரிய தாகும் அலைகடல் தனிலும் உள்ளாள்
வளத்தொடு விளங்கி வாணி யமுனையாய் வழங்குகின்றாள்
நலத்தினை யற்ற கேணி தனையவள் நாடிச் சென்றாள் 14

இங்கென தாவி தன்னை எடுத்திட வேண்டும் பின்பு
தங்கட னாற்ற நாதன் தானவன் வந்த காலை
அங்கவன் தாளில் நீயும் அளித்திட வேண்டுமென்றே
நங்கையாஞ் சரஸ்வதி பாய் நவின்றவள் அடியிற் சார்ந்தாள் 15

தன்னுடை யடியைச் சார்ந்தாள் தண்ணளி யுடைய நங்கை
முன்னுறு வினையின் நாதன் முனிவராய் ஆகிவிட்டார்
அன்னவர் மனைவி யென்றே யகத்திடை நினைதற் குற்றம்
உன்னியே யடியைச் சார்ந்தாட் குறுதியே யளிப்பன் யானே 16

அன்றிரா முழுதும் ஆவி யலகையாய் அலைய நங்கை
பொன்றிடா துயிரே போன பூதமாம் உடலைவிட்டே
யின்றியாங் கடன் முடிப்பேன் எண்ணியே ராக வேந்திரர்
துன்றிருட் காலை தன்னில் துயிலெழக் கடமை யாற்ற 17

அன்னவர் கங்கை யாற்றின் கரைசெல அலகையாவாள்
தன்னெதிர் வந்து நின்றாள் தாளினை வணங்கி வீழ்ந்தாள்
முன்னெழும் உருவந் தன்னை முனிவரே யுணர்ந்து விட்டார்
அன்னவள் உற்ற துன்பம் அகத்திடை நினையும் போதே 18

முடியின்மேல் வைத்தான் யீசன் முழுதருள் உள்ளங்கொண்டே
கடிகமழ் கமலக் கண் ணன் கருதிதன் மார்பில் வைத்தான்
வடிவுடை வாணி வாழ்வாள் வாக்கினால் பிரமன் நாவில்
அடியேன் நின் அடியில் வீழ்ந்தேன் ஆதரித் தருள் செய்வீரே 19

சமமென்றே உருவில் பாதி சங்கரன் கொடுத்துயர்ந்தான்
அமைவுற விதயந் தன்னை அரியவன் அளித்து வாழ்ந்தான்
நமக்கவள் நவின்றவேதம் நான்முகன் நாவை நல்க
உமதிரு வடிகள் தந்தே உய்விக்க வேண்டுமென்றாள் 20

இன்னறுங் கங்கைக் கண்ணே ராகவேந்திரரி ருந்தே
தன்னருங் கடமை யெல்லாந் தகுமுறை யாற்றிப் பின்பு
பன்னரும் பிசாசே யாகிப் பாதத்தைப் பணிந்த ரற்றும்
முன்னொரு தாரமானாள் முத்திதான் பெறவே யெண்ணி 21

கமண்டல நீரை யேந்திக் கரமதில் வைத்துப் பின்பு
தமதடி சரணங் கொண்ட தாரத்தின் தன்மையெண்ணி
அமைவிலா தல்லல் எய்தி யலகையா யரற்றுவாள்மேல்
அமைதியை யடைக வென்றே அருளொடு தெளித்துச் சொன்னார் 22

உம்மைசெய் புண்ணியத்தால் உயர்ந்தவர் குடியிற்றோன்றி
நம்மைநீ யடைந்த தாலே நற்கதி பெற்று விட்டாய்
தம்மைத் தாம் உணரும் நல்ல தகுதியும் பெற்று யர்ந்தாய்
இம்மையே துறக்கம் எய்தியினிதருள் பெறுவாய் என்றார். 23

ஆக பாடல் தொகை – 840

## ஸ்ரீ ராக வேந்திரர் கடனறி படலம்

தலத்தினிற் றோன்று மேலாஞ் தவசியர்தமிற்சி றந்தோய்
உளத்தினில் உற்றாய் என்றன் உயர்குரு ராக வேந்திரா
அளந்திடற் கரிய தாநற் கலைகளை யளிப்பாய் ஞான
வளத்தினை யளிப்பாய் நன்றே வழுத்தினற் கருள்பாலிப்பாய் 1

### ஸ்ரீ ராகவேந்திரர் திருவவதாரச் சிறப்பு

பொருளிலார்க் குலகம் இல்லை புவியுளோர் உணர்ந்துவிட்டார்
அருளுளம் அற்றே யன்னார் அவனியில் அவதியுற்றார்
பொருளொடு அருளும் உற்றால் பொருந்திடும் புவியின்யின்பம்
தெருளவே ராக வேந்திரர் திருவவதாரம் அன்றோ! 2

### சூரியோதய வருணனை

நாரண னருண னாவான் நானிலங் காப்போ னாவான்
காரண னவனே மூலன் சங்கு கர்ணர் தாம் ராக வேந்திரர்
தாரணி செல்வம் எல்லாந் தடையின்றி யடைதற் கென்றே
பூரண அருளி னாலே புவியிடைத் தோற்றங் கொண்டான் 3

நிமலன்தன் கரங்கள் நீட்டி நிலத்திடை நீரில் உள்ள
கமலமாம் ஆல யத்தின் கதவினைத் திறந்தாற் செல்வி
அமலனாம் ராக வேந்திரர் அவருழைச் செல்வாள் என்றே
விமலனே திறத்தற்கென்றே வியனிலம் விளங்க வந்தான் 4

அந்தணர் களிலே ராக வேந்திரர் அரச ராவார்
சந்திரன் இரவில் என்னே சரிநிகர் சமான மாகப்
புந்தியில் மமதை கொண்டே புவிமிசை யுலவு கின்றான்
சிந்தித்தே யெழுந்தார் என்னே சென்றனன் செருக்க ழிந்தே 5

அம்புவி தனிலே போற்று பவருக்கே யருளைச் செய்வார்
நம்புவார்க் கென்றும் ராக வேந்திரர் துணையே யாவார்
தம்புழை தனிலிருந்தே புறப்பட்ட புலிதா னென்றே
யம்புலி யச்சங் கொண்டே யகன்றது போன்ற தம்மா! 6

போற்றியென் னாவியிற் கலந்த நற் பொருளே
புலர்ந்தது பொற்கழற் கிணை துணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
இயல்பினைக் கண்டுநின் திருவடி தொழுவோம்
மாற்றுயர்ந் தோங்கும் மகிமையே சூழ்ந்த
மத்துவர் தத்துவம் மகிதலம் வாழ
ஏற்றுதற் கரிய நின் திருவடி தொழுவோம்
ராகவேந்திரா பள்ளி எழுந்தரு ளாயே 7

காலனை வென்றாய் கருணைசெய் வள்ளால்
கதிரவன் உதித்தனன் குணதிசைக் கடலில்
ஞாலமெங் கணுமுளோர் நன்குனை யுணர்ந்தே
நலமுடன் போற்றி நன்மையே பெற்றார்
மூலனே யான முகுந்தனின் நாமம்
மூவுல குந்தொழும், முறைமையிற் பாடி
ஏலவே யுன்றன் யியன்மொழி யேற்ற
ராகவேந்திரா பள்ளி எழுந்தருளாயே ! 8

நாடெலாங் கடந்தென் நாட்டிலு முள்ளோர்
நலமெலாங் காத்திட நாட்டத்திற் கொண்டே
பாடெலாம் உணர்த்தப் பரிதியே தோன்ற
பாரினில் உனைப்போல் பார்த்தனர் மக்கள்
காடெலாம் கழனியின் கதிரொளி பரப்பிக்
கஞ்சமும் அன்றியே கண்களும் மலரின்
ஏடெலாம் அவிழ்ந்தே யினிதென மலரும்
ராகவேந்திரா பள்ளி எழுந்தருளாயே! 9

மொழியெலாங் கடந்தே மூவுல குள்ளோர்
மொழியு நன்மந்திர முதல்வனே போற்றி
எழுபரி யுடையோன் எங்கணும் உலகின்
இயலொளி பெறவே யியங்குகின் றனனே
அழுதழு துன்றன் அருள்பெற வேண்டி
அடைந்தனர் அன்பரின் ஈட்டமே யெங்கும்
இழுமென உன்றன் இணையடி தொழுகோம்
ராகவேந்திரா பள்ளி எழுந்தரு ளாயே! 10

மதமெலாங் கடந் தெம் மதத்திலு முள்ளோர்
மதித் துனை என்னே போற்றுகின் றனரால்
உதயமே யானான் ஒளியுடைக் கதிரோன்
உவப்புடன் உளந்தனில் உறுவியப் பெய்தி
பதம்பெற மக்கள் பாரினில் உன்றன்
பதந்தனை நாளும் பாடியே வந்தார்
இதங்கொடு யென்றும் எழில்முகம் விளங்க
ராகவேந்திரா பள்ளி எழுந்தருளாயே! 11

இனமெனுந் தீய இருள்கெட வெழுந்த
இளங்கதிர் ஞாயிறென் றேற்றினார் உம்மை
தினந்தினம் புகழந்தே திருவடி தொழுநல்
திறத்தினில் விளங்கவெண் திசையிலுமுள்ளோர்
நனவெனும் மலரால் நாள்தொறும் போற்றி
நன்மையே யடைந்தனர் நானில மக்கள்
தனையுணர்ந் தவர்கள் தகுமுறை வாழத்
தண்ணளியே பள்ளி எழுந்தருளாயே. 12

மூலமே யுணர்ந்த மூலனாய் மந்திர
மூலனை போற்றிசெய் மூலனே யுன்னை
ஞாலமே யின்னாள் நன்குணர்ந்தனரே
நாள்தொறும் என்னே! போற்றுநற் பண்பால்
காலையே நல்ல கதிரொளி பரப்பி
கதிரவன் வருகின்ற காலையில் லுலகில்
ஏலவே யாங்கள் இன்னருள் பெறவே
ராகவேந்திரா பள்ளி எழுந்தரு ளாயே 13

ஆதியே யாவாய் ஆதவன் வந்தான்
அவனியோர் ஆக்கமே யடையவே வேண்டி
நீதியே நிலைக்க நின்னருள் பெறவே
நித்தலும் ஏத்தி நின்புகழ் வாழ்த்தி
பேதியா உலகோர் பேரருள் வேண்டிப்
பேரொளி பெற்றுன் பெருமையைப் புகழ்ந்தார்
ஆதியே யும்மை யறிந்தவர் உய்ந்தார்
ஆரமுதே பள்ளி எழுந்தருளாயே. 14

ஒருதனி யாழியன் உதித்தனன் கிழக்கில்
உயர்பெருங் கருணையாய் உலகினில் தோன்றி
பெருமணி யாழியின் பேர்ந்தெழில் பரப்பிப்
பிறங்கிட வந்தனன் எனவிவண் வந்த
அருமையை யறிந்தே யகிலமே வணங்கும்
அதிசயப் படவுல கனைவரும் போற்ற
இருளெலாம் நீங்கி யின்பொடு விளங்க
ராகவேந்திரா பள்ளி எழுந்தருளாயே 15

சகமெலாந் தழைக்கத் தயங்கொளி பரப்பிச்
சார்ந்தனன் தமனன் தண்ணொளி யெனவே
நிகரிலா துன்றன் நீள்புகழ் விளங்க
வந்தனன் எனவவன் நினையவே வந்தாய்
யுகமெலாந் தழைக்க வுவந்தருள் செய்யும்
உத்தம ராக வேந்திர நீர் தாம்
பகையெலாம் ஒழியப் பாருளோர் சிறக்கப்
பாரமுதே பள்ளி எழுந்தருளாயே. 16

மத்துவ மடத்தில் உள்ள மதிநிறை சீடர் தாமுந்
தத்துவக் கொள்கை கொண்ட திருப்பள்ளி எழுச்சி தன்னால்
சத்துவ குணத்தி னான்செய் கடமையைச் சாற்றி னார்கள்
நித்திய கடன்தான் ஆற்ற நித்திரை விட்டெழுந்தார் 17

மனமெனும் விழிப்பைத் தந்தார் மதியினால் விசுவ மூர்த்தி
தனதிரு கண்ணில் தங்கி வலப்புறம் இராக வேந்திரர்
தனையுனும் அறிவை நல்க தன்குரு மத்துவர்நல்
லுணர்வினால் தோத்தி ரங்கள் உணர்ந்துமே ஓதி னாரே. 18

பத்தொடு ஒன்பான் முகமும் பரிவொடு யீந்துப் பின்பு
பத்தொடு இரண்டு மாறும் பகருமப் புராணங் கேட்க
உத்தம ஞானி தம்மில் உயர்ந்தவர் ராக வேந்திரர்
இத்தரை நன்மை யெல்லாம் எய்திட அருள் பாலித்தார் 19

பரந்தாமன் அவனின் தாளைப் பரவினார் பரிவின் மிக்கத்
தரந்தனில் உயர்ந்த ஞானி தலையவர் வணங்கி நன்மை
பெறவவர் ஆசி தன்னால் பெருமைசேர் ராக வேந்திரர்
முறையொடு வணங்கக் காலை போழ்தத்துத் துளவக் காட்டில் 20

சம்சார சாக ரத்தைத் தாண்டிய ராக வேந்த்ரர்
தம்சார்பி ருந்த மேலாம் பல்லக்கு தனிலே சென்று
நம்சார் பிருந்தான் லக்மி நாரணன் அவனை யெண்ணி
தென்சார்ந்த கங்கை யாகுங் காவிரி குளிக்கச் சென்றார் 21

சென்றுமே ராக வேந்த்ரர் செய்யவள் பாதம் போற்றி
நன்றென வணங்கிப் பின்பு லக்குமி நாரணன் தாள்
ஒன்றியே யுறையும் வாயு மைந்தனை மனத்தில் எண்ணி
அன்றல்ல அனைத்து நாளும் அனுமனை வணங்கு நீரார். 22

பொன்னே மணியே தனைப்பாராய்
மின்னேர் வாழ்வே எனக்கொள்வாய்
கொன்னே காலந் தனைப்போக்காய்
சொன்னேன் சொல்லை ஓர்வாய்நீ. 23

முன்னாள் முதலை யானையை
பன்னாள் துன்பம் படுத்திட்ட
சொன்னார் தூய கதையென்றே
உன்னாய் அதனின் தத்துவமே 24

ஒன்றே யானை ஓர்மடுவில்
சென்றே பூவைப் பறித்திடவே
அன்றே முதலை யதைப்பற்ற
நின்றே பல்கால் துன்பத்தால் 25

யாதே செய்வ தெனவறியா
போதே போக்கிக் கழித்தனவால்
தூதே யறியாச் சொல்வதுபார்
மீதே தெய்வத் திருநாமம் 26

ஆதி மூலனை அழைத்த தானையே
ஆதி மூலனே யதனைக் கேட்டுமே
ஆதி மூலன்தான் அருகில் வந்துமே
ஆதி மூலனும் அருள யானையை 27

உரத்தின் எண்ணின உயர்ந்த யானையே
பரத்தை நினைந்தவப் பரிவின் பரமனே
கரத்தின் உள்ளசக் கரத்தின் முதலையின்
சிரத்தை யறுத்துமே செல லகற்றினன் 28

ஆதி மூலனின் அருளை யெண்ணியே
ஆதி நாள்தொட் டன்பின் ராகவர்
ஆதி மூலனின் ஆகு மந்திரம்
ஆதி யாயவர் அனைத்தும் ஓதினார் 29

தோன்றினாள் காவிரிப் பெண் தொன்மையாம் மலையில்சாக்ய
ஆன்றவர் நட்புப் போன்றே யகலிடத் தகன் றுநாளும்
கான்றியே வீசுங்காற்று யெனிலுமே கவலை யின்றித்
தோன்றிடு வெள்ளந் தன்னால் துயரிலா தொழுக்கங் கொண்டாள் 30

தாமரை மலரின் தேனைத் தனதுமென் கரத்தில் ஏந்திப்
பூமகள் கணவற் கென்றே பூமியிற் கொணர்வ போன்ற
ஆமவன் அரியாய் பூவின் அணைதலால் அரியென் றுலகில்
நாமவற் கூற நற்றேன் நாவினாற் பருகினானே. 31

காவிரிக் கரையிலுள்ள கவினுறு மரங்களெல்லாம்
பூவிரி சோலை யென்றே புத்தொளி பெற்றப் பூக்கள்
காவிரி நதியில் வீழ்ந்த கடவுளின் தன்மை பெற்றுத்
தாவிய யிடமே புனிதத் தன்மையே யடைந்த தம்மா! 32

தாவிலா ஒழுக்கங் கொண்ட தையலாய்த் தரணி போற்றக்
காவிரி நங்கை யென்னே கவினுறு கரங்கள் நீட்டி
ஓவிலான் உறக்கமில்லான் உயர்கட லரசன் தன்னைத்
தாவியே மாலை சூட்டி யணிந்தவத் தன்மை போன்ற 33

காவிரிப் பெண்ணாள் காதல் மனத்தினால் கடலாம் மன்னன்
ஓவிலான் உறக்கமில்லான் உள்ளத்தின் மகிழ்ச்சி கொள்ள
தாவிலா மனத்தி னாலே தண்ணொளி சண்பகந்தான்,
பூவெலாம் விளக்காய் வாழ்த்தப் புணர்ந்தது போன்றதம்மா! 34

தண்ணளி ராகவேந்திரர் தண்ணொளி சந்திரன் போல்
விண்ணினில் விமான மென்ன வியத்தகு பல்லக் கின்கண்
அண்மையில் வந்தபோது அவனியின் கடமை யாற்ற
எண்ணியே யிறங்கி வந்தார் எண்ணிய யியற்று நீரார். 35

தரமுயர் தாள்கள் என்றே தனித்தனி தூய்மை செய்தார்
கரங்களும் அஃதே போன்று கருத்தொடு கழுவிப் பின்பு
மரமுயர் மாம ரத்தின் மதித்திடுங் குச்சி கொண்டே
உரமிகப் பற்க ளைத்தான் ஒளிமிகத் துளக்கினாரே 36

அருவிபாய்ந் தொழுகும் போது அவ்வவர் உள்ளத் தெண்ணம்
மருவியே யொலிக்கு மாபோல் மதித்திடும் ஓசை போன்று
நிருவி கர்ப்பங் கொண்டான் நிமலன் தன் நெஞ்சிற் குள்ளே
இருக்கின்றான் என்றே எண்ணி யியம்புவர் மந்த்ரந் தன்னை. 37

மந்திரம் ஓதி தன்னை மதித்திட உடலந் தன்னை
மந்திர உடல மாக மனத்தினில் எண்ணி ! என்னே !
வந்தவர்க் கெல்லாம் நாளும் வரத்தையே வழங்கலாலே
மந்த்ரா லயமாய் என்றும் மண்ணினில் மகிமை கொண்டார் 38

கான்முளை யாகத் தோன்றி கடனறி ராக வேந்த்ரர்
வான் நெறி மறாதே பாரின் வாழ்நெறி யறிந்தே வாழ்வார்
நூன் முறை நீர ருந்தி நூலுரை மந்திரத்தைத்
தான் நெறி மாறா தென் றுந் தகுமுறை யோதினாரே. 39

எட்டொடும் ஆறும் ஆறு யிரட்டித்த மந்திரங்கள்
கட்டொடு கூறும் அக்ரக் கடனறி ராக வேந்த்ரர்
முட்டிலா மந்த்ர மூலம் முதலாக ஓதி நாளும்
பட்டறிவுடைய ரானார் பரந்தாமன் அருள் பாலித்தான். 40

அம்முறை மூச்ச டக்கி அகமுணர் மந்திரத்தை
மும்முறை யோதி மந்த்ரம் முறையொடு நீரில் மூழ்கி
அம்மொடு வும்மைச் சேர்த்தே யாகுமம் மந்திரத்தைச்
செம்மையாய் ஓதி நீரில் தினமுமே மூழ்குநீரார். 41

ஓங்கார மந்திரத்தை உருக்கொள ஓதி யேதன்
ஆங்கார மெல்லாம் வீய அவர்மனஞ் செம்மையாக
தீங்கிலாப் புருட சூக்தம் செப்பியே நீர்தெளிக்க
ஓங்குநற் கடவு ளுக்கே உயரபி டேகம் போன்ற 42

தருக்கெலாம் அற்றராக வேந்திரர் புனிதத் தீர்த்தம்
இருக்கு நல் சால கிராமத் திடத்தை யெடுத்துத் தானே
அருத்தியபோது மந்த்ரம் அதை நன்கு உச்ச ரித்தார்
உருக்கொளுங் கடவுளுக்கே உயரபி டேகம் போன்ற 43

காவிரி நதியில் நன்னீர் ஆடிய ராக வேந்த்ரர்
காவியாம் ஆடை தன்னை கட்டிப்பின் உடையைக் கீழாய்த்
தாவியே யணிந்திருந்தார் தரிசனம் செய்த பேர்கள்
பாவியே யெனிலும் என்னே பரிசுத்தம் அடைவ ரன்றோ? 44

ஐவகைக் குறியைச் சாந்தம் அதனாலே யணிந்து கொண்டார்
செய்வகை யறிவார் நெற்றிக் குறியையும் அணிந்து கோபி
உய்வகை யறிந்தார் நன்றே உயர்ந்திடும் உலகம் என்றே
மெய்வகை யறிந்தார் ராகவேந்திரர் மேன்மை பெற்றார். 45

காவிரி தனில்நீ ராடி காயத்ரி மந்த்ரந் தன்னை
பாவித்தார் மனத்தில் தூய பக்தியால் பணிந்தெழுந்தார்
சாதித்தார் மீண்டும் மீண்டும் ஜபம் செய்தார், துதியுஞ் செய்தார்
ஆதித்தன் உதிக்குங் காலை அமைதியாய் வணங்கி னாரே 46

மத்துவர் வணங்கும் வேத வியாசரை வணங்கி யன்னார்
சத்துவ குணத்தின் மிக்குச் சன்னதி தனிலிருந்தே
உத்தம புராணம் ஓதும் ஒழுக்கத்தால் பகவன் நாமம்
சித்தத்தே தூய்மை யானார் தெரிசனம் செய்வர் நாளும் 47

பாலபிடேகம் செய்வார் பசுநெய்யில் பக்குவத்தால்
மாலவன் றனக்குப் பச்சைப் பயறொடு அரிசி கொண்டு
சாலவே வெல்லஞ் சேர்த்துச் சர்க்கரைப் பொங்கலிட்டு
வாலறி வினனுக் கென்றே வழங்குவர் படையல்தாமே. 48

வந்தனை செய்தார் பருந்தா வனத்தினில் விசயேந்த்ரரை
அந்தணர் புடை சூழந் தார்கள் அருந்தவ முனிவர் போன்றார்
சந்தனம் பளபளக்கத் தனதுடல் பூசி யன்னார்
வந்தனர் மடத்துக் கேதன் வருகையாற் பொலிவே பெற்ற 49

பேரருள் ஞானி செல்லப் பெருமையாம் மடத்திலுள்ளார்
சீர்மிகு செல்வர் போன்றே சென்றனர் காவற் காரர்
பேர் பெரும் முரசம் ஊது காளமும் பிறங்க மத்தும்
ஆர்த்தெழு காக ளத்தோடதிர் சக்ர சர்சராவும் 50

மிருதங்க முதலா நன்கு முழங்கிட வந்த போது
ஒரு சங்க நாதம் அப்போ ஓங்கியே ஒலித்த தென்னே
சதுரங்க மெனவே நாளுஞ் சார்ந்திடத் திண்டி மந்தான்
அதிரும்பே ரொலியால் என்னே அரசரின் வருகை கோன்ற 51

தனதுநல் வருகை யாலித் தரணியே புனிதமான
மனத்தினால் கும்ப மூர்த்தி தனையவர் வணங்கத் தேவர்
தனது கற்பகமே மீண்டு காலினால் நடந்த தென்றே
அமைதியாய் அருள்செய் ராக வேந்திரர் மடத்துட்சென்றார். 52

கற்றறிவுடையர் ஞானங் கைவந்த கல்வியாளர்
முற்றறி வுடையான் தன்னை முறையொடு மத்துவர்தாம்
உற்றுரை பாடி யத்தை உணர்த்திய விளக்கங்கூறி
மற்றவர் பொருந்தாக் கூற்றை மறுத்துத் தன் விளக்கஞ் சொன்னார் 53

எல்லையில் பரமாத் மாவே எழிற்குணத் தன்மை கொண்டால்
சொல்லுதற் கரியான் எனினும் சூக்கும நிலையா னெனினும்
ஒல்லுநம் ஊனக் கண்ணால் உற்றுநாம் அறியலாகும்
சொல்லுவர் ஜிக்ஞா சாத்தின் சிறந்திடுஞ் சூத்தி ரத்தால் 54

சித்தராய் உரைசிக் னாசா சூத்திரத் துட்பொருள் தன்
தத்துவ விளக்கந் தன்னால் தயாபரன் அருளை நாளும்
இத்தரை மக்களுந்தான் எளிதிலே அடைய லாகும்.
மத்துவர் சூத்திரத்தின் மாண் பொருள் தனையுரைத்தார் 55

மத்துவர் விளக்கந் தன்னை மதித்தில மாயா வாதி
தத்துவ விளக்கம் என்றார் தம்முடை விளக்கந் தன்னை
முத்தரைப் போன்றே வாழும் முனிவர் முன் கூற லுற்றார்
சித்தத்தே தூய்மை யில்லார் சிந்தனை யின்றிச் சொன்னார் 56

### மாயா வாதியின் வாதம்

விட்டுணு வான ப்ரம்மம் வேதமே விளக்கல் ஒண்ணு
முட்டுப் பாடுடைய தான மொழிகளால் விளக்கல் ஆகா
எட்டாத மொழியா லன்றி வேறெந்த மொழியாலாகும்
பட்டறிவுடையான் போலப் பேசுவன் மாயா வாதி 57

கூறுநம் வார்த்தை யெல்லாங் கொண்டிடும் புருடத் தோற்றம்
வேறுள பொருள்கள் எல்லாம் விளங்கிடும் மாயையாக
பாரினில் பிரம்ம சூத்ரம் பகர்ந்திடும் வேதமெல்லாம்
நேரிதாய் விளக்கல் ஆகா நிர்க்குணப் பிரம்மந் தன்னை 58

சீவான்மா பரமான் மாவாம் சிறத்திடும் பொருள்கள் தம்மை
தாவாயெம் மொழிகளாலும் தரணியிற் கூறவில்லை
சீவான்மா உள்ள வெல்லாம் செய்கையாலறியலாகும்
ஆவானோ பரமாத் மாவே அவன்நம்மின் வேற தாக. 59

நானென்ற உணர்வே தெய்வம் நல்லுணர்வதனாலாமே
தான் சொலும் தத்வ மாத தன்பொருள் தனையே யோர்வாய்
வான்நெறி யெல்லாம் ஜோதிஸ்த் தோமத்தின் வந்து சேரும்
வீண் செயல் பிரம்மம் தேடல் வேறெவர் அடைந்தார் ஈண்டு? 60

தடுத்திரை மாயா வாதி தகாதவவ் வுரையைக் கேட்டே
அடுத்தொரு சீடன் ஆவான் ஆட்சேபங் கூற லுற்றான்
எடுத்தவிப் பிறவி நோக்கம் பிரம்மத்தைக் காண லன்றோ
தொடுத்துரை ஞான மாவான் தொறந்தந்தான் தீர்ப்போ னென்றே. 61

என்றந்த சீடன் தானும் எதிர்த்துமே கூற லுற்றான்
நன்றென்றே நூல்கள் எல்லாம் நவின்றன பிரம்மந் தன்னை
அன்றென வுரைத்தான் வேறாய் அவன் கூற்றை மறுத்துரைத்தே
கன்றிய வுள்ளங் கொண்டே கனன்றொரு சீடன் சொன்னான். 62

உன்னுடை வாதந் தன்னில் உண்மையே யில்லை யென்றான்
மன்னுநல் சீவனுக்கும் மனத்துக்கும் எட்டா தாகும்
உன்னுநற் பிர்மத் திற்கும் உயர்வு தாழ் வொன்று மில்லை
பன்னுநல் லின்ப துன்பம் பகருமச் செயலுமில்லை. 63

நிர்க்குணப் பிரம்மம் ஆகும் நிமலனே முதல்வன் ஆவான்
நற்குண முடையவன் தான் நானிலத் திரண்டாயில்லை
நிர்க்குணப் பிரம்மம் போன்று நித்திய சீவன் இல்லை
தர்க்கித்தான் இரண்டு தோற்றத் தன்மையும் இல்லையென்றே 64

அறிவினால் அறிந்து கொள்ளும் ஆற்றலுந் தெரியவில்லை
அறிவிக்கு எட்டியன்னான் அவனியிற் காணவில்லை
தெரிய [illegible] ப்ரம்மம் தெரிசனப் படவும் இல்லை
புரிந்திடுஞ் செய்கை யுண்டோ புவிமிசை மனிதருக்கே 65

புன்னகை கொண்டார் கேட்டு பொருள்புரி ராகவேந்த்ரர்
அன்னவன் சந்தே கத்தை அன்புடன் தீர்த்து வைத்தார்
நன்னய விளக்கஞ் சொன்னார் நானென்ற உணர்வின் ஜீவன்
உன்னிடும் பொருளே யுண்டு உணர்வினில் வேறுபட்டான். 66

அதிசயப் பொருளே யன்னான் அவனியில் என்றும் உண்டு
மதியினால் அறிய லாகும் மகத்துவம் உடையனாவான்
விதியெனும் ஒருவன் தன்னால் வேறுபாடறிந்து கொள்வாய்
பதியெனும் பரமாத் மாவை பக்குவ மடைந்தால் பார்ப்பாய் 67

பிரம்மத்தின் உணர்வு பெற்றால் பெற்றிடுவாய் நீ மோட்சம்
பிரம்மத்தை யறிய லாகும் பெரியநன் முயற்சி கொண்டால்
பிரம்மமே சீவ னுக்கும் பேசுமப் பரம்பொ ருட்கும்
பிரம்மத்தால் வேறு பாட்டை பெற்றிடுவாயே வுண்மை 68

செய்வகை யறியாய் நூல்கள் செப்பிடும் வகையை யோராய்
தெய்வநூல் தனையே யோர்வாய் தெரிந்திடும் உண்மை தானும்
உய்வகை நோக்கத் தோடே உள்ளவத் தொடர்பை யோர்ந்தே
மெய்வகை யறிய ஜீவன் மேன்மையாம் விளக்கங்காண்பாய் 69

உணர்த்தினார் பரமாத் மாவை உளமது மகிழ்ச்சி கொண்டார்
உணர்த்தின உண்மை காண சூரியன் உச்சி வந்தான்
உணர்வினால் ராக வேந்த்ரர் உரிய தன் கடமையாற்ற
உணர்த்தினர் பஞ்சாங் கத்தார் உரியவக் காலங் கண்டே 70

ஆதித்தன் கிரணந் தன்னால் அகிலத்தின் இருளைப் போக்கிச்
சாதித்தும் என்னே நாமோ சகத்தவர் அகத்திருள் தான்
வாதித்தே போக்கும் ராக வேந்திரர் போன்றோம் அல்லேம்
ஆதித்தன் மக்கள் மீதே அனலென யெரிக்கலுற்றான் 71

முற்பகல் நெடிது நேரம் முறையொரு சீடர் தம்முள்
தர்க்கமே நடத்தி யின்பந் தரும் வேதக் கருத்தைச் சொன்னார்
சொற்பொருள் அறிந்தராக வேந்திரர் கடமை யாற்றி
அற்புறு பூஜை செய்ய அவர்மனம் விழைந்த தம்மா! 72

சூரென அச்சங் கொண்டோம் சூரியன் முன்பு நாங்கள்
நீர் உறை மீன்கள் ஆனோம் நிலத்துறை மக்கள் மீதும்
ஊர் எரி தெய்வம் போன்றீர் உகப்பில கோபங் கொள்ளல்
ஆர் உரை யாற்று வாரே அம்புயத் திடத்தே கூறி 73

ஆதித்தன் அன்பின் மிக்காள் அம்புயத் தவளே யென்று
ஆதித்தன் கோபம் நீக்கி யாண்டுமே யருள வேண்டி
வாதித்தே மீன்கள் எல்லாம் வந்தவள் அடியில் நின்றே
மோதித்தன் குறைகள் கூற முட்டுவ போன்ற தம்மா! 74

தண்டந்தன் கையிலேந்துந் தனிப் பெரு சந்நியாசி
அண்டத்து ஞானி யெல்லாம் அவரடி வணங்கு மேலோன்
எண்டிசை புகழே யோங்கி யினிதமர் ராக வேந்த்ரர்
அண்டியே குளிப்ப தற்கு வம்புயத் தடாகஞ் சென்றார் 75

மாதவமுடைய ஞானி மனமது தூய்மை யானோன்
ஆதவன் உச்சிப் போழ்தில் அம்புயத் தடாகம் மூழ்கி
சீதரன் ஆனான் என்னே சீராமன் வடிவில் உள்ள
மாதவன் பூஜைக் கோயில் மனமது மகிழச் சென்றான். 76

தாமரை போன்ற மேலாந் தன்னிரு கரங்கள் கொண்டு
தாமரை முதலா வுள்ள தனிப்பெரு மலர்களாலே
ஆமவர் கும்பத் தின் கண் அணிசெயத் தத்து வத்தாற்
தாமவண் உறையும் மேலாந் தேவதை தனையே போற்றி 77

போற்றிசெய் ராக வேந்த்ரர் புனிதமாம் பூஜை யின்கண்
ஆற்றுமவ் ஆற்றல் கண்டே யவனுறை தெய்வந்தம்மை
போற்றினார் முதலில் பூஜை பக்தியால் புரிகின்றாரால்
வீற்றிருந் தருளுந் தெய்வ வழிபாட்டை விரும்பினாரே 78

பக்தியால் சாலக் ராமம் பரிவினன் நீரால் ஆட்டி
சக்தியால் ராமர் ஆதி சகலமும் சிலைகள் ஆங்கண்
பக்கலில் அமர்த்தி மந்த்ரம் பலபடக் கூறி யன்னார்
ஒக்கவே யனைத்தினுக்கும் ஒருங்கபிடேகம் செய்தார். 79

புதிய நன் மலர்கள் கொண்டும் புத்தொளி பெறுதற் கேற்ற
அதிசய முடைய ஆசான் ஆறெடு நகையே மூன்றாம்
பதினாறு வகைய தாகிப் பாங்குடன் அபிடேகத்தை
அதி விமரிசையாய்ப் போற்றி அன்பொடு பூஜை செய்தார் 80

பரிமேத யாகம் மேலாம் பயனுறு சிறந்த தீர்த்தம்
அரியவன் பாதந் தன்னில் அடைந்தவர் தீர்த்தந் தன்னை
பருகினார் ராக வேந்த்ரர் பகர்ராச சூயம் மிக்குத்
தரும் பயனெல்லாம் தீர்த்தத் தகுதியால் சிறந்த தாமால் 81

ஆரணங் கூறும் மேலான் அரியினல் அம்ச மானான்
காரண மூலன் சங்கு கர்ணர்தாம் ராகவேந்த்ரர்
நாரணன் அடியில் வீழ்ந்தே நண்பகல் வேளை தன்னில்
பூரண மாயு ணர்ந்தே புரிந் துண்டார் பிச்சை யேற்றே. 82

அருக்கன்தான் மறையும் போழ்தும் அரியின்நன் நினைவினாலே
தருக்கமுங் கலைகள் கற்றுத் தனை நாடும் பண்டிதர் கொள்
செருக் கெலாம் அழிய வன்னார் செப்புநல் லுரையைக் கேட்டே
இருக்கவே விருப்பங் கொண்டார் இன்பத்தின் எல்லை கண்டார். 83

ஓதியே யுணர்ந்தார் மேலோர் உறுபொருள் தன்னைக் காண
சாதித்தார் ராகவேந்த்ரர் சாத்திர உண்மை தேர்ந்தார்
வாதித்தே யறிந்தார் கல்வி வல்லமை யுடைய ரானார்
ஆதிசேடன் வந் தானே ஆர்வத்தால் கடலைவிட்டு 84

அந்திப் போழ் தான தாலே ஆவலாய் ஆதி சேடன்
வந்துமே ராக வேந்த்ரர் வழங்குநல் லுரையைக் கேட்கச்
சந்திரன் தனிலிருந்தே சாத்திர உண்மை தேர
முந்தியே வந்தா னென்றே முழுநிலா தோன்றிற் றன்றே. 85

ஒளியினில் மூழ்கிப் பாரோர் உவப்புட னிருந்த காலை
அளியினால் ராக வேந்த்ரா அவர்தரு தரிசனத்தை
நளியிருள் முடித்து மக்கள் நலமுடி னிருக்க பூஜை
குளித்துமே செய்ய வேண்டுங் குறிப்பொடு எழுந்து சென்றார் 86

நீராடி வந்தார் காவி நின்மலன் உடுத்தி நாளும்
நாராயணனை வேண்டி நனியன்பின் உள்ளத் துள்ளே
பாராயணஞ்செய் காயத் திரிகொடும் அன்பினாலே
சீராக பூஜை தன்னை சிறந்திடச் செய்துப் பின்பு 87

ஆரா தனைகற் பூர ஆரத்தி தங்கத் தட்டில்
சீரா மணக்கு மாலை சேர்த்துபால் பழமு மற்றும்
நேராக வைத்துப் பின்பு நிட்டையிலிருந்து த்யானம்
மாறாதே தினமுஞ் செய்வார் மகிமையைப் போற்றும் நாடே 88

சிரத்தினி லருச்ச னைப்பூ சிறந்திடச் சூடிப் பின்பு
கரத்தினை யுயர்த்தி மேலே கண்கள் நீர் பொழிய நின்றார்
உரத்தினில் நிறைந்த அன்பின் உயர்மகா ஞானி யாவார்
பரத்தினை வணங்கும் மேலோன் பக்தியைப் போற்றும் நாடே. 89

**ஆக பாடல் தொகை – 929**

## ஸ்ரீஇராக வேந்த்ரர் தரிசனப் படலம்

தக்கவக் காலந்தன்னில் தகுதியை யறிந்தார் சீடர்
ஒக்கவே யிருக்கக் கண்டார் உணர்ச்சி மீதுறப் பெற்றே
மிக்கதாந் தரிசனத்தின் மேன்மையால் உலகம் உய்ய
பக்தர்கள் வேண்டு கோளைப் பரிவுடன் ஏற்று வந்தார் 1

அல்லல்தான் நிறைந்த தேயார் ஆகுமத் துன்பம் போக்க
மல்லல்மா ஞாலத் தின்கண் மதியென ராக வேந்த்ரர்
அல்லியே மலரும் வேளை அவனின்நற் றலைவனென்ன
தொல்லையாம் இருள் துடைக்கத் தோன்றினன் என்ன வந்தான் 2

ஞானியர் முதல்வ ரானார் நலம்பெறு ராகவேந்த்ரர்
வானிருந் திறங்கி வந்தே வலிவிலா அன்னப் பட்சி
கோனவன் கொள்கு டைக்கும் கொற்றவெண் சாமரத்தும்
நானதற் கீடோயென்று நாணத்தா லகன்ற தம்மா! 3

மாயத்தை யொழிப்பர் மாயா வாதியே மருட்சிகொள்ள
காயத்தைக் கடக்க லாகா கவினுறு மீன்களெல்லாம்
தேயத்தே ராக வேந்த்ரர் தேசு சிம்மாசனத்தில்
போயமர்ந்திருளைப் போக்கப் பொலிவினைப் பெற்ற தம்மா! 4

அண்டினார் அல்லல் தீர்க்கும் அருளுளம் கொண்ட வண்ணல்
எண்டிசை புகழே யோங்க எதிர்ப்படுந் துன்ப மெல்லாங்
கண்டதும் ஓடுகின்ற காட்சியால் ராகவேந்த்ரர்
மண்டபந் தனில்வந் தாரே! மண்டபஞ் சிறந்த தம்மா! 5

தனியொரு சித்த னாவான் தவளநன் மண்டபத்து
அணிதாகும் பளிங்கு கற்கள் அதன்மேலமர்ந்து நின்றான்
இனிதாக நகைத்தான் என்னே இன்னொரு சித்தனாவான்
கனியெனும் பளிங்குக் காட்சி கற்களா லான தம்மா! 6

வால கில்லியப் புள்ளே வந்துமே யொலிக்கு மானால்
சாலவே சந்த்ரன் தோன்றுந் தரணியோர் அறிவர் நன்கே
கோலமாய் கூவுகின்ற குறிப்பினால் மக்களெல்லாம்
மாலறா மனத்த ராக மகானையே மதித்து நின்றார் 7

ஆதிசேடன் மேல் மாயோன் அமர்ந்த பாற் கடலில் நல்ல
சாதி முத்துக்கள் தம்மால் சரி செய் சிம்மாசனத்தில்
மாதின்றி யமர்ந்தார் ராகவேந்திரர் மண்டபத்தில்
வாதியே யெனினும் பாரோர் வழுத்துவர் வள்ளல் தன்னை 8

தக்கநல் லுணவாயென்றும் தரணியிற் சகோரப் புட்கள்
அக்கினி தனையே யுண்ண அரியின்பின் தொடர்ந்து செல்லும்
தக்கசூரியன் போற் சந்த்ரன் தண்ணொளி தரும்ப கற்போல்
மக்களைப் பாரா தென்ன மதிமருண் டொலித்த தாமால் 9

சித்தர்கள் உலவி னார்கள் சிறந்த மேகத்தி னுள்ளே
இத்தரை மயில்கள் கல்வியெடுத்த நாகங்கள் அப்போ
சுத்தமாய் உண்ட தாலே சுவறின மேக மெல்லாம்
சித்தர்கள் விழுந்தார் விண்ணின் வியந்தனர் மண்டபத்தை 10

வீடிலேன் காணி யில்லேன் வியத்தகு பொருளு மில்லேன்
நாடிலேன் பலரை என்னே நனிபொருள் வேண்டுமென்றே
வாடினேன் வாட்டற் தீர்ப்பாய் வள்ளல் ராகவரே உன்னைப்
பாடினேன் பாடல் ஓர்ந்தே பரிந்தெனக்கருள் செய்வாயே 11

அரியின் நல் அம்சம் ஆகும் அவனியில் அவதாரங்கள்
துரிய ன்போல் உள்ளார் எல்லாம் தொலைந்துநல் தெய்வமானார்
பெரிய நின்மடத்தில் அன்றி பெருமையாம் மனத்தில் உள்ள
அரியராம் ராமர் ஆவார் அவரெமைக் காப்போராவார் 12

தேடியேராக வேந்த்ரர் தெரிசனம் செய்வாராகில்
நாடிய செல்வம் கல்வி நானிலத் தடைந்தே வாழ்வார்
பாடிய பொருளு ணர்ந்தே பக்தர்க்கு அருளு மேலோன்
வாடினோர் வருத்தம் போக்கும் வள்ளலாய் வாழ்வார் என்றும். 13

காரண மூலன் சங்கு கர்ணர்தாம் ராகவேந்த்ரர்
பூரண நிலவு போன்றார் பொய்ம்மையாம் மாயாவாதி
தாரணியிருளை யெல்லாந் தவிர்த்திடச் செய்ய வேண்டுங்
காரணமாக வந்த கற்பகத் தருவே யாவார் 14

மேகம் போல் அருளும் வள்ளல் மேதினி மக்கட் கெல்லாம்
ஏகனா யிருந்தே யென்றும் இனிதருள் செய்யும் ஞானி
ஆகமப் பொருளை யெல்லாம் அவ்வவர் நிலைகட்கேற்ப
வாகென வழங்கும் மேலோன் வணங்குவோர்க்கருளுந் தெய்வம் 15

ஆக பாடல் தொகை – 944

## சோதிடப் படலம்

முக்காலம் உணர்ந்த ஞானி முழுதருள் பெற்ற யோகி
இக்காலம் வாழுகின்ற இறையருள் பெற்ற மேலோன்
அக்காலம் சோதிடத்தில் அவன்றன்னை யுணர்ந்த தாலே
எக்காலும் வாழப் பெற்றான் இணையடி போற்றுவோமே 1

சேரநன் நாட்டில் உள்ள சிறந்த சோதிடர்கள் மூவர்
தேரினர் சோதிடத்தின் சிறந்த நற் கலையை நன்கே
மாறிலாப் புலமை பெற்றார் மத்துவச் சீடர் தாளைப்
பேறென வணங்கி யன்னார் பேரருள் பெறவே வந்தார் 2

கூறுவீர் சாத கத்தில் குறித்திடும் ஆயுட் காலம்
தேறுமிச் சாதகத்தால் தேர்ந்த நற் கலையை நீங்கள்
யாரிதைச் செய்வீர் நன்றே யவர்களே சிறந்தோ ரென்று
கூறினார் ராக வேந்த்ரர் கூற்றினைக் கேட்டார் மூவர் 3

உங்களில் சிறந்தோர் யாரே உயர்ந்தவர் யாரென் றெண்ண
உங்களின் கலையைத் தேற உவந்துமே செய்ய வேண்டும்
துங்கவன் சாதகத்தை துல்லியமாகப் பார்த்தே
அங்கவன் ஆயுட் காலம் அறிவிப்பீர் என்றே யீந்தார் 4

ஊர்பெயர் கூறார் என்னே உயர்ந்தவிச் சாத கத்தார்
சீர்பெற இச்ச கத்தின் சிறப்பினை கூறுவர் நன்றே
கார்உள நாளும் மேலாங் கடலுள நாளும் வாழ்வர்
ஆர் அவர் என்றே அன்னார் அதிசயம் அடையலானார் 5

தீர்க்கமாய் நூறாண் டென்றார் சிறப்புடைச் சாதகர்க்கே
பார்க்கவே முப்பான் பத்தே பகர்ந்திடும் ஆயுள் என்றார்
ஏற்கவே எழுபான் பத்தே ஏய்ந்திடும் ஆயுள் என்றார்
யார்க்கவர் ஆயுட் காலம் இயம்பிட முடியும் அம்மா ! 6

மூவரும் சாத கத்தால் முணுமுணுத் தார்கள் ஆனால்
நீவிர் செய் மூன் றும் பாரில் நிச்சயம் நடக்கும் என்றார்
ஆவது எங்ஙன் என் று அவர்களே கேட்கயோகி
தாவிலா வகையில் சொன்னார் சமுசயம் நீங்கினார்கள் 7

உடலோடு சேர்ந்த வாயுள் ஒருநூறு ஆண்ட தாகும்
மடமையைப் போக்கு நூலால் மதிக்குமுந் நூறு வாகும்
கடமையேழ் நூறு ஆண்டின் காலத்தைக் குறிக்க வேண்டும்
திடமுடை ராக வேந்த்ரர் திருவருட் செயலே யென்றார் 8

தன்னுடைச் சாத கத்தின் தருக்கமே நடத்தி யன்னார்
தன்னுடைச் சாத கத்தால் தனனையே யுணர்ந்த மேலோர்
மன்னுமிவ் வுயிர்தாம் பெற்ற மகத்துவ முணர்ந்ததாலே
நன்னய மாகவேதான் நல்லருள் பாலிக்கின்றார். 9

ஆக காண்டம் மூன்றனுக்கு பாடல் தொகை – 953

## 4. புகழ்நிலைக் காண்டம்

### ஸ்ரீராக வேந்திரர் துதி

உகந் தொறும் அவதரித்தே உலகைக் காத்தருளுந் தேவே
சகந் தனில் மக்க ளெல்லாஞ் சமரச முற்றே வாழ
இகம்பர யின்பம் உற்றேயிக்கலி யுகத்தில் வாழ்வோய்
புகழ்நிலை யுற்றாய் உன்றன் பொன்னடி போற்றுகின்றேன் 1

### தலயாத்திரைப் படலம்

கடுந்தவங் கொண்டார் ராக வேந்திரர் கருணை யுற்றே
முடுகிப் பல் லூர்கள் சென்றூர் முற்பெறு நற்ற வத்தால்
படுவினை மக்கள் கொண்ட பாவமே தீர வேண்டி
குடிகொளுந் தெய்வக் கோயில் தரிசனம் செய்தார் இப்பால் 2

திருமால் வாழ் கோயில் உள்ள திருப்பதி களிலே சென்று
பெருநாமங் கூறி யன்னார் பேரருள் பெறவே வேண்டி
ஒரு நாமம் உலகோர் கூறா துழல்கின்றார் அனைவருக்கும்
திருமாலின் நாமங் கூறித் திருவருள் பெற நினைந்தார் 3

இந்திரன் திசையிற் சென்றே இன்திவ்ய புரியில் சேர்ந்து
நந்தமர்க் காக நாடி நாரணன் கோயில் புக்கு
புந்தியில் தூய்மை யில்லார் புரிகின்ற பாவந் தன்னை
நந்திடச் செய்ய வேண்டி நல்லடி சூட்டினாரே 4

திக்கெலாஞ் சென்ருர் மக்கள் தீவினை யகல வேண்டி
மிக்கிடுங் கருணை யாலே மேதினி மக்கள் எல்லாம்
தக்கநல் வாழ்வு கொண்டால் தழைத்திடும் உலகம் என்றே
நெக்கு நெக் குருக நெஞ்சம் நின்மலன் தனைத்து தித்தார் 5

இலக்குமி அருளைப் பெற்றார் ராக வேந்திரரே மக்கள்
அலக்கணே தீர்க்க வேண்டி அவர் திரு வாரூர் தன்னில்
இலக்கண மாய மர்ந்த வியல் கம லால யத்தில்
கலக்கிலா மக்கள் வாழ் முக் கண்ணனை வணங்கினாரே 6

இடப்பாகங் கொடுத்தான் தானே இமையவள் இனிது வாழ்ந்தாள்
மடங்கொண்ட மக்கள் துன்பம் மன்றுளான் அறிந்துவிட்டால்
கடனெலாம் முடிப்போம் மக்கள் கலியெலாந் தீருமென்றே
திடமுடை ராக வேந்த்ரர் திருவடி தொழுது நின்றார் 7

அன்புடை பக்தர்க் காக அழித்தனர் காலன் தன்னை
நண்பனாய் இருப்பன் நம்பும் அடியார்க்கு நடராஜன் தான்
துன்மனத் தீயோருக்குத் துயர்கடல் ஆல மாவான்
முன்னத்தின் எண்ணித் தூயோன் முழுதருள் வேண்டினாரே 8

அவத்தினை அறுக்க வந்தார் ஆம்சுர குருவே போற்ற
சிவனவன் தாள்ப ணிந்தார் சிறந்திட ராக வேந்த்ரர்
தவமது கொண்டார் வீணை சகலவாத் தியமும் கொண்டே
புவியுளோர் போற் றும் வண்ணம் புகார் நகர் பொலியச் சென்றார் 9

குருக்களில் சிறந்தார் ராக வேந்திரர் குவலயத்தின்
இருக்கின்ற நதியில் கன்னி காவிரி புவியிடத்தில்
இருக்கின்ற செல்வ மெல்லாம் எடுத்துமே தருதற் கென்றே
பொருக் கெனக் கடலுட் பாய்ந்து புகுந்தது போன்ற தம்மா! 10

கடலினைக் கண்டார் ராக வேந்திரர் களிப்புக் கொண்டார்
உடலினைத் தூய்மை செய்தார் உள்ளமுந் தூய்மை யாவார்
கடனெலாம் முடித்தார் ராக வேந்திரர் கடலின் மாயன்
உடலினைப் பெற்றே நல்ல உருவினை எடுக்க லானார் 11

முராவெனும் அரக்கன் தன்னை முராரியே யழித்தா னென்றே
பராவினார் ராக வேந்த்ரர் பரமனின் பாதந் தன்னை
தராதலம் புகழ நெஞ்சின் தனியிடத் திருத்தி யன்பின்
மறாதவற் றொழுது மக்கள் பாவமே மடியச் செய்தார் 12

தூய நெஞ்சந் தனைக் கொண்ட ராகவர்
தீய வெண்ணஞ் சிறிது மில்லாதவர்
மேய சித்தி மிகுதலுற் றாரவர்
தேயஞ் சென்றதும் தீர்ந்தது தீமையே 13

### சங்க நாதம்

காலங் கனிந்த தென்றே ஊதூது சங்கே!
கடமை முடிந்த தென்றே ஊதூது சங்கே!
ஞாலம் விடிந்த தென்றே ஊதூது சங்கே!
நாடு விழித்த தென்றே ஊதூது சங்கே! 14

கம்பன் கண்ட நாடென்றே ஊதூது சங்கே !
காணவே மகிழ்ச்சி கொண்டோம் ஊதூது சங்கே !
அம்புவியில் மக்கள் எல்லாம் ஊதூது சங்கே !
அனைவருமே ஒன்றே யானார் ஊதூது சங்கே ! 15

நம்புவர்க்குத் துணையாவான் ஊதூது சங்கே
நடராஜன் ஒருவன் என்றே ஊதூது சங்கே
உம்பர்களும் வந்தா ரென்றே ஊதூது சங்கே
உலகஞ் செழிப்ப தற்கே ஊதூது சங்கே 16

மக்கள் விழித்தா ரென்றே ஊதூது சங்கே
மதியினைப் பெற்றா ரென்றே ஊதூது சங்கே
தக்கவ ரானாரென்றே ஊதூது சங்கே
தரணி செழித்த தென்றே ஊதூது சங்கே 17

கலியுக முடிந்த தென்றே ஊதூது சங்கே
காலன் அழிந்தா னென்றே ஊதூது சங்கே
நலிவெலாந் தீர்ந்த தென்றே ஊதூது சங்கே
நாடு செழித்த தென்றே ஊதூது சங்கே 18

புதுயுகம் தோன்றிற் றென்றே ஊதூது சங்கே
புன்மை யொழிந்த தென்றே ஊதூது சங்கே
இதுநல்ல காலம் என்றே ஊதூது சங்கே
ஏற்றம் அடைந்த தென்றே ஊதூது சங்கே 19

ராகவர் வந்தா ரென்றே ஊதூது சங்கே
நாடு செழித்த தென்றே ஊதூது சங்கே
சோகந் தவிர்ந்த தென்றே ஊதூது சங்கே
சோம்பல் ஒழிந்த தென்றே ஊதூது சங்கே 20

மோகந் தவிர்ந்த தென்றே ஊதூது சங்கே
முத்தி யடைந் தோமென்றே ஊதூது சங்கே
போகம் அனைத்தும் பெற்றோம் ஊதூது சங்கே
பொய்ம்மை தவிர்ந் தோமென்றே ஊதூது சங்கே 21

பாரதி வாழ்ந்தா னென்றே ஊதூது சங்கே
பாரெலாஞ் சிறந்த தென்றே ஊதூது சங்கே
சாரதி கண்ணன் வந்தான் ஊதூது சங்கே
சரித்திரம் படைத்தா னென்றே ஊதூது சங்கே 22

சாத்திரங் கற்றோ மென்றே ஊதூது சங்கே
சமரசம் ஆனோ மென்றே ஊதூது சங்கே
நேத்திரம் பெற்றோமென்றே ஊதூது சங்கே
நேர்மை தெரிந்தோ மென்றே ஊதூது சங்கே 23

வித்தகம் பேச வேண்டாம் ஊதூது சங்கே
வினையாற்ற வாரீ ரென்றே ஊதூது சங்கே
புத்தகப் புரட்டர் போனார் ஊதூது சங்கே
பொல்லாங்கு தீர்ந்த தென்றே ஊதூது சங்கே 24

இத்தரை மக்கள் வாழ்ந்தார் ஊதூது சங்கே
எத்தர் அழிந்தா ரென்றே ஊதூது சங்கே
சத்தியம் வாழ்ந்த தென்றே ஊதூது சங்கே
தரணி செழித்த தென்றே ஊதூது சங்கே 25

ஒற்றுமை யாஞே மென்றே ஊதூது சங்கே
ஊக்கம் பிறந்த தென்றே ஊதூது சங்கே
நற்றவம் பலித்த தென்றே ஊதூது சங்கே
நாடுசெழித்த தென்றே ஊதூது சங்கே 26

நானிலந்தனில் ராஜமன் னார் குடி
வானின் தேவர் வருஞ்சிறப் பானது
காண ராஜகோபாலன் தரிசனம்
ஞான மேவுரு ராகவர் சென்றனர் 27

நலமில் நாத்திகர் தன்னை மறுப்பவர்
நலங்கொள் நாரணன் தன்னை மறப்பிலர்
மலங்கள் மூன்றும் மாய்த்தநல் மாண்பினர்
தலங்கள் தங்கியே தரிசனம் செய்தனர் 28

வேறு

மாயக் கண்ண னவனை யவரும் மனதி லெண்ணி த்யானம் செய்தார்
தூய நெஞ்சங் கொண்ட போதே தூர நின்ற வினைக ளெல்லாம்
வாயில் வெண்ணை உண்ட கண்ணன் வடிவினையே நினைந்த தாலே
தீய செய்கை யற்ற யிடமாய்த் திருமா லன்பின் கோயி லானார். 29

நெடுநேரம் தியானம் செய்தார் நின்மலன் தாளை எண்ணி
கடுமையாய் நிறுத்தி விட்டார் காட்சியைக் காண வேண்டும்
அடியாரின் பக்தி கண்டார் அவருளம் மகிழ்ச்சி கொண்டார்
துடியாகத் துடித்துப் பாடுந் தூய்மையைப் போற்றும் நாடே 30

வேறு

உம்முடைப் பாதம் அன்றோ உயர்வீட்டின் வழியைக் காட்டும்
அம்புயம் உள்ள நீரின் அதுமணம் ஆதல் போன்றே
எம்போன் றார்க்கிதயந் தன்னில் இருந்து முத் திக்குச் செல்லும்
தெம்பினை யளிப்போய் உன்னைத் தெளிந்தனன் தெண்டனிட்டேன் 31

நாதத்தின் உலகம் ஆதல் நல்லவர் அறிவர் நாளும்
போதத்தின் முதலும் ஈறும் வேறுள நூல்கள் எல்லாம்
ஓதத்தன் னடியே யுய்க்கும் ஓங்கார மொழிதன் னையே
வாதித்தார்க்கறிய வொண்ணான் வணங்குவோர்க் கருளும் வள்ளல் 32

ஆமும தடியின் கண்ணே ஆர்ப்பொலி சலங்கை நாதம்
ஓமென்ற ஒலியைப் போன்றே யொலிக்கின்ற ஒலியைக் கேட்டே
யாமொன்றின் பற்று மில்லேன் இறைவனின் பாதம் போற்ற
நாமும தடியின் வீழ்ந்தோம் நற்கதி யளிப்பா யென்றார் 33

காரிருள் போன்ற யானை கடும்பகல் வெப்பம் நீங்க
ஆரிடம் செல்லும் ஆற்றின் மடுவினில் ஆடல் போன்றே
பாரினில் பந்தம் என்னும் பகர்வெம்மை நீங்க வேண்டி
சேரிடம் அறிந்தே நின்றாள் சேர்ந்தனன் அருள்பாலிப்பாய் 34

உலகினில் இருள கற்றும் உயர்நிலா வதனைப் போன்றே
அலகிலா உயிர்கள் பெற்ற அறியாமை யிருள கற்ற
நிலவுநின் முகநிலாவென் நெஞ்சினின் இருள கற்றும்
உலகவர் உள்ளத் துள்ளே உண்மகிழ் வளிக்கும் அன்றோ 35

கருங்குழல் சூழ்ந்த நெற்றிக் கண்ணிடைத் திகழும் பொட்டு
ஒருங்குள வழகை யெல்லாம் ஓர்ந்தவர் உலகில் யாரே
அருந்துதி செய்யும் நூல்கள் ஆற்றலால் ஆகுமோதான்
ஒருங்கெலா நூலும் ஓதின் உன்புகழ் உரைக்க ஒண்ணா. 36

உன்முக வழகே பற்ற உள்ளத்தின் உணருகின்றேன்
நன்நெற்றி முடியு நாசி நாளுமே நினைத்தலாலே
என்பற்று நீங்கி விட்டேன் இறைவனின் பற்றுக் கொண்டேன்
நன்பற்று பற்ற நீயும் பற்றிட வேண்டு மென்றார் 37

தொன்மர பதனில் வந்தார் தூநெறி வழாது வாழ்வார்
அன்பினால் ராக வேந்த்ரர் ராஜமன் னார்குடிக்கண்
என்பு நெக் குருகப் பாடி, எழில் ராமேஸ் வரத்திற் செல்லத்
தன்பயணத்தைக் கொண்டார் தயாபரன் அருளை வேண்டி 38

அளவிலா உயிர்கள் தம்முள் அடக்கியே சாக ரந்தான்
களவிலா உள்ளத் தானைக் கண்டதுங் கரங்கள் கூப்பி
உளத்தினில் உள்ள துன்பம் உரைத்தவர் அடியில் வீழ்ந்தே
நலத்தினைப் பெறவே வேண்டி நண்ணின அலைகள் எல்லாம் 39

ஆதரவுடைய ராக வேந்திரர் ஆதவன்போல்
சீதரன் அருளைப் பெற்றே செகத்தினில் தோன்றியுள்ளார்
பூதலத் திருள்ப யந்தே போயின கடலில் புக்கு
மேதினி மக்கள் காண மீள்தரும் தோற்றம் போன்ற 40

காரண மூலன் சங்கு கர்ணர்தாம் ராக வேந்த்ரர்
நாரணன் அருளைப் பெற்றே நானிலத் தோற்றங் கொண்டார்
பூரண அருளைக் கொண்டே போயவர் அடியிற் றாழ்ந்து
மாரணம் போக்கிக் கொள்ள மதியினால் வீழ்வ போன்ற 41

கிழக்கொடு மேற்குஞ் சேர்ந்தே கிடக்கின்ற பாலத் தின்கண்
உழக்குநால் மறைகள் ஓதி உயர்தவக் கடல் நீராடி
வழக்கமாய் ராக வேந்த்ரர் வந்தனம் செய்து பின்பு
கிழக்கெழு சூரியன் போல் கிளரொளி படவெ ழுந்தார் 42

யோகசா தனத்த மர்ந்தே உயர்குரு ராகவேந்த்ரர்
போகமும் பொருளும் மக்கள் பொருந்திட வேண்டுமென்றே
ஆகமம் போற் றும் ராமன் அவனைத் தன் மனத்திலெண்ணி
ஏகனாய் இருந்தே த்யானம் இயல்பினில் செய்தா ரிப்பால் 43

ஆரணங் கூறும் ஆதி சேடன்போல் ஆதி நாளில்
நாரணன் பள்ளி கொண்டான் நன்மலை யதோத்தி [illegible]க்கண்
பூரண கலைகள் பெற்றே பொலிந்தனன் இந்துவானான்
தாரணி விளங்க வந்தான் தரிசனம் செய்யலானார் 44

சுந்தர வரனிப் பாரில் தொன்மையாங் காலந் தொட்டே
அந்தநல் மலையில் வாழும் அரியினல் வடியைப் போற்றி
அந்தணர் ராக வேந்த்ரர் அனந்த நற்சயனம் நாடி
வந்தனர் முறையின் பத்ம நாபரை வணங்கி னாரே. 45

அந்தணர் பாபந்தீர்த்தது

நிலவுல கதனில் தானும் நிமலன தன் பூசை யாறறத
தலமதே செல்ல லானார் தண்ணளி ராக வேந்த்ரர்
உளமது மகிழ்ச்சி கொண்டார் ஊர்தொறும் மூல ராமர்
பலப்பல அற்பு தத்தைப் பாருளோர் காண லானார் 46

கல்லிடைக் குறிச்சியில்தான் கருத் துடன் இருக்கும் போது
நல்லவன் இல்லை யென்றே நலங்கெட்டான் இவனுமென்றே
சொல்லியே ஒருவர் தம்மைச் சுகதுக்கக் காரியத்தில்
தள்ளியே வைத்தார் பார்ப்பார் தனித் துமே வாழலானான் 47

அந்தண ராவா ரில்லை யவரிடம் ஒழுக்க மில்லை
நந்தம ரிடத்தில் அன்னார் நண்ணவே கூடாதென் று
பந்தமே யறுத்தார் பாரில் பரிவிலா தகற்றி விட்டார்
செந்தண்மை யற்றா ரானார் செய்வது மறியா தானார் 48

திருவுடை ராக வேந்த்ரர் திருத்தலங் காண வந்தார்
குருவெனு ராக வேந்த்ரர் குறையெலா மகற் று மேலோர்
ஒருமதி தோன் றி யேதான் உயர்மகான் இவரேயென் று
பெருமதிப்புடைய ராகிப் பெருமானின் அடியைப் போற்ற 49

சங்கடம் உற்ற தாலே சாஷ்டாங்க மாய் விழுந்தான்
இங்கென தின்னல் தன்னை யியம்புவன் ஏழை யேன்நான்
பங்கமே கொண்டு பாரில் பலப்பல துன்பங் கொண்டேன்
தங்களின் அடியைச் சார்ந்தேன் தயை புரிந்தருள்வீர் என்றான் 50

அந்தண்மை கொண்ட ராக வேந்திரர் அருளே கொண்டார்
நந்தமர் மூல ராமர் நலமுடை பூசை யின்கண்
செந்தண்மை யுடைய ராவீர் சேர்ந்திட வேண்டுமென்ன
அந்தணன் மகிழ்ச்சி கொண்டே அடுத்தநாள் வந்து சேர்ந்தான் 51

கண்டதும் பார்ப்பா ரெல்லாம் கடுகடுத் திட்டா ரென்னே
சண்டையே போட வென்றால் சமயமும் வாய்க்கவில்லை
சண்டாளன் ஆனா னென்றே சாதியில் விலக்கிவிட்டோம்
தொண்டரைப் போன்றே மூல ராமரைத் தொழுகின்றானே 52

தீர்த்தமுங் கொடுத்தார் ராக வேந்திரர் அருள் பாலித்தார்
வார்த்தையால் அவனைப் பார்த்தே வள்ளலாய் வழங்குகின்றார்
நேர்த்தியாய் ஆனான் போன்றே நிமலனின் பூசையின் கண்
பார்த்திட வந்தான் பாவி பார்த்தனர் பார்ப்பா ரெல்லாம் 53

பந்தியில் அவன மர்ந்தே பரிவுடன் உண்ணச் சொன்னார்
செந்தண்மை யுடைய ராக வேந்திரர் செய்தி தன்னை
புந்தியில் தெரிந்து போற்றிப் புகழுக்கே செய்கின்றாரே
வந்தவ ரெல்லாம் அப்போ வன்மையாய்ப் பேச லானார் 54

நாங்களே யொதுக்கி விட்டோம் நல்ல வரில்லையென்றே
தாங்களே சேர்த்துவிட்டீர் தயையினால் அருள் பாலித்தீர்
தீங்குடை யிவனை நீங்கள் திருத்தவே முடியா தென்னே
யாங்கனம் ஆகுங் காக்கை யிறகெலாம் வெண்மையாக 55

வாழ்விலே களங்கங் கொண்டான் வன்மையாய்க் கண்டித்தோமே
தாழ்வெமை யுறுதலாலே தள்ளியே வைத்து விட்டோம்
சூழ்வினை என்றே யன்னான் சொல்லியே வந்துவிட்டான்
ஊழ்வினை யென்றால் என்னே ஒருவரால் விலக்கப் போமோ. 56

என்றதும் ராக வேந்த்ரர் இன்னகை புரிந்து சொன்னார்
நன்றிலாக் கடுக்காய் மையில் நனைத்திட்ட நல்ல வாடை
ஒன்றினைக் கொணரச் சொன்னார் ஊர்மக்கள் பலருங் கண்டார்
கன்றிய பார்ப்பார் காணக் கருத்திலே பதியச் செய்தார் 57

தன்னிடங் கமண்ட லத்தின் தனிப்பெரு சங்கு தீர்த்தந்
தன்னையே யெடுத்துக் கையில் ஏந்தியே தெளித்தார் என்னே
முன்னையின் துணியே வெள்ளை முழுதுமே யாகப் பார்த்தார்
சொன்னது பிழையே யென்று தூயோரைத் தொழுது நின்றார் 58

பாபந்தான் செய்தான் பார்ப்பான் பரிவினால் மூலராமர்
பாபந்தான் தீர்த்தார் என்று பார்த்துமே தெளிய வேண்டும்
சாபந்தான் கொடுத்தா ருக்கே சாபந்தான் தீரா தென்றால்
சாபத்தால் பாபந் தானும் சந்ததம் ஆகுங் கண்டீர் 59

## அரிஜனனுக்கு அருள்செய்தது

பீஜப்பூர் நகரி ருந்தே புறப்பட்டார் ராக வேந்தர்
நேசித்தார் கிருஷ்ணா ஆற்றின் கரையோரம் ஆளுரின் கண்
வாசித்தே கவிக ளெல்லாம் வளமுடன் எழுதுதற்கே
யோசித்தே தங்கி விட்டார் உணர்வுமே கொண்டமேலோர் 60

தத்வமஞ்சரியே யென்று தன்னாலே பாவ தீபம்
இத்தரை மக்கள் வாழ யினிதென ராக வேந்தர்
சித்தத்தே தூய்மை யானார் சிறந்த நன் நூலே தந்தார்
புத்தமு தென்றே யந்நாள் போற்றினர் மக்களெல்லாம் 61

அதன்பின்னர் ரெய்ச்சூர் வட்டம் சென்றவக் காலந் தன்னில்
சதுர் மாத விரதங் கொள்ளச் சார்ந்ததால் சார்ந்தே யன்னம்
நிதமுந் தான் மூலராமர் நியமமாய் பூஜையாற்றும்
இதமுடை யிடமே தேர்ந்தார் இருந்திடவெண்ணங் கொண்டார். 62

மாணவி என்னும் ஊரே மனத்திற்கு ரம்யமாகத்
தானது யிருக்கக் கண்டார் தம்முடை மூலராமர்
வானவரென்ன மக்கள் வளமுடன் பூசை செய்யத்
தானமாய்ப் பொருள்கள் தந்தே தங்கிடச் செய்துவிட்டார் 63

தன்னுடை மூல ராமர் பூஜையைத் தான் முடித்தே
முன்னுள ஆஞ்ச நேயர் கோயிலின் முன்னதாக
நன்னயமாக நூலை நாளுமே யியற்ற லானார்
அன்னதன் மையதாய் வாழும் நாளிலே ஒருவர் வந்தார் 64

கொடிக்கம்பத் தருகே நின்ற பக்தரைக் கண்டு விட்டார்
இடிகளுக் கிடையே தோன் றும் மின்னலாய்த் தோன் றும் பக்தர்
வடிவொடு வந்தார் முன்பு வான்நெறி வழுத்து நீரார்
அடியவர் என்றே கண்டார் அன்புமீ தூறப் பெற்றார் 65

நா முன்பு வியாச ராசர் நல்லவ தாரத் தப்போ
தாம் கொண்ட சீடர் தம்முள் தனிப்பெருகனக தாசர்
நாமுமே ஆக்கு நூலை நலமுடன் எழுத வேண்டும்
ஆமப்பா வருள்வாய் உள்ளே அவரையே யழைக்கலானார் 66

நானுள்ளே வருதற் கேற்ற நிலையிலே யில்லை யையா
ஏனிந்த பிறவி தானும் எடுத்துளேன் கூற வேண்டும்
போனமுன் பிறவி போன்றே புலையனாய்ப் பிறந்து விட்டேன்
தேனெனு ராக வேந்த்ர தெரிசனங் காண வந்தேன் 67

சென்றநற் பிறவி போன்றே சேர்ந்துளாய் என்னிடத்தில்
கன்றென நாடி வந்தாய் கடைத்தேற உன்னை வைத்தல்
என்றனின் கடமை யென்றே எண்ணினேன் கனக தாச
நன்றிந்தப் பிறவி தன்னில் நற்கதி யடைவாய் என்றார். 68

பாக்கியம் பெற்றேன் என்றான் பரவசம் கொண்டே கண்ணீர்
தேக்கியே வடித்தான் என்னே திருவருள் கிடைக்கு மோதான்
ஏக்கமே கொண்டே அன்னான் யியம்பினான் ராக வேந்த்ரர்
வாக்கினால் அருள் பாலித்தார் வரவேண்டும் பூஜைக் கென்றார் 69

எனக்கு நீர் ஏற்ற வாறு உரைத்துளீர் எனினும் என்றன்
மனக்குளாம் ஐயம் எல்லாம் மாற்றிட வேண்டும் என்னத்
தனக்குத்தான் மூல ராமர் தரிசனங் கிடைக்கு மோதான்
எனச் சொன்னார் கைங்கர்யந்தான் ஏதேனுஞ் செய்யென் றாரே 70

ஆண்டவன் முன்பு யாருஞ் சரியாதல் அறிகி லாயோ
வேண்டிய வேண்டி யாங்கு வல்லவன் தானே யீவான்
பூண்டவிப் பிறவி யாலே புலம்புதல் செய்ய வேண்டா
காண்டிட வருவாய் மூல ராமரின் பூசனைக் க... 71

ஒப்பிலா ராகவேந்த்ரர் உயர்மூல ராமர் பூஜை
தப்பேது மில்லா தென்னே தடையிலா தாற்றும் வேளை
அப்போது அரிஜனன் தான் அவ்விடம் வந்தே நின்று
செப்பிட்டான் பொருளை யீந்து செலுத்திட வேண்டுமென்றான் 72

கொடுத்திட்ட பொருளைப் பார்த்தார் குருவெனும் ராகவேந்த்ரர்
மடுத்தொரு வார்த்தை கூறார் மகிழ்ச்சியாய் மூலராமர்
தடுத்திடா தவரே யேற்ற பொருள் மீது தனது கையால்
எடுத்திட்ட கமண்டலத்தின் நீரையே தெளித்துச் சொன்னார் 73

கனிவுடன் கொண்டு வந்தான் கடுகினைப் பக்தன் தானே
பணிவுடன் ஈந்தான் என்னே பார்த்தனர் மூலராமர்
இனிமையா யேற்று விட்டார் இதனையே சமையலின்கண்
நனிபொருள் என்றே சேர்ப்பீர் நலம் பெறும் பூசையென்றார் 74

ஆஷாட மாத மாக வானவிச் சதுர்மா தத்தில்
காஷாய மணியா தோர்க்கும் கடுகுடைச் சமையலாகா
பேஷாகச் சேரு மென்றீர் பேசவே முடியவில்லை
தோஷமே யாகு மென்றே துணையடி போற்றிச் செய்தார் 75

ஆகுமிச் சம்ப்ர தாயம் அரிஜனன் அறித லாமோ
ஏகினான் மூல ராமர்க் கேதேனுந் தருவோ மென்று
வாகெனக் கொண்டு வந்தான் வந்ததிற் குறையொன்றாமோ
ஆகவே யவன் வீட்டுள்ள தப்பொருள் கடுகதொன்றே 76

ஆதலால் சேர்ப்பீர் என்றார் அன்றைய சமையலின்கண்
வேதனை பட்டார் பக்தர் விளக்கத்தால் ராக வேந்த்தரர்
சாதனை செய்வர் என்றார் சமுசயப் படவே வேண்டாம்
போதனை யென்றே மூல ராமரைப் போற்றி செய்தார் 77

புன்னகை புரிந்து சொன்னார் புலையனென்றெண்ணு கின்றீர்
இன்னதன் மையதே யாக இறைவனே எண்ணி விட்டால்
பன்னிநாம் பயனே யென்ன பக்தருக்காக ராமர்
உன்னினார் கடுகைச் சேர்க்க உவந்துமே உண்பீர் என்றார் 78

ஆமிவன் அரிஜனன்தான் ஆனாலுங் குற்றமில்லை
நாமிவன் பிறவி தன்னை நன்குமே யுணர வேண்டும்
தோமிலா ராகவேந்த்ரர் தொடர்ந்திடும் பிறவியைத் தான்
சேமமாய் உணர்வர் அன்றோ செப்பினார் பக்தரெல்லாம் 79

மோட்சமே வேண்டுமென்றான் முந்தைய பிறவி வாசம்
ஆட்சியாய் அவனிடத்தில் ஆழமாய்ப் பதிந்ததாலே
காட்சியின் மூல ராமர் கண்டதும் பக்தி தன்னால்
மாட்சியாய் மோட்சங் கேட்டான் மகத்துவம் அறிய வேண்டும் 80

பொன்னொடு பொருளும் வேண்டான் பூமியின் சுகமும் வேண்டான்
மண்ணினில் வாழும் ஆசை மற்றவன் கொள்ளவில்லை
எண்ணினான் பிறவி தோறும் எய்திடும் முத்தி ஒன்றே
பன்னினான் அவன்றனக்கே பரிந்தனர் மூலராமர் 81

நியமித்த விதியை யானும் நித்தலும் மறக்கவில்லை
நயமொடு மூல ராமர் நவில்வதை யறிய வேண்டும்
பயனை நாம் மனத்தில் எண்ணிப் பண்ணிடுஞ் செயல்கட்கெல்லாம்
வியனுல கதனில் விண்டு விருப்பமே கொள்ள மாட்டான் 82

கண்ணனின் தரிசனம் நான் கண்டது அவனா லன்றோ
மண்ணில் நல் மகத்து வத்தை மானிடன் பெற்று விட்டான்
உன்னினான் மூலராமர் உயர் பூசை காணுதற்கே
நண்ணினான் நம்மை யென்றால் நலமதே செய்ய வேண்டும் 83

வேறு

எத்திக்கும் புகழ் ஏற்ற முடையவர்
சித்தி பெற்றநல் ஸ்ரீராக வேந்திரர்
பக்தி மிகுத்தவர் பாதத்தே வந்தனன்
முத்தி கொடுத்தனர் மூல ராம் ராமரே 84

சகந்த னில்மிகு சமரசங் கொண்டவர்
அகந்தனில் எழும் அகந்தையைப் போக்கினார்
இகந்தனில் சுகம் என்றுமே பெற
சுகந்தன் நாமமே சொல்லிப் பாடினார் 85

பாடி னானவன் பகவந் நாமமே
ஆடி னானவன் ஆனந்தக் கூத்துமே
வாடினானிலை வான்பத மேபெற
கோடி கோடியா மின்ப மடைந்தனன் 86

தன்னை யுணர்ந்த அரிஜனன் தன்னையே
அன்னை யருளென ஆதரித் தாரவன்
முன்னை வினையினால் மோட்ச மேபெற
என்னை மானிடன் ஏற்றங் கொண்டானே 87

வாஞ்சை யாலவன் வான்பதம் பெற்றபின்
ஆஞ்ச நேயர் சந்நதி முன்பவர்க்
காஞ்சி லைகள் கொண்டுமே கல்லறைக்
காஞ்சிலர்கொடு தாபிக்கச் சொல்லினார் 88

## சோழ மண்டலத்தின் பஞ்சந் தீர்ந்தது

நேயமாய் நியமங் கொண்டே நித்தலும் மூலராயா
தூயசிந் தனைதன் னாலே தொழுபவர் ராகவேந்த்ரர்
தேயமே செல்லக் கும்ப கோணத்தின் நகரிருந்தே
ஆயத்த மான போது அவரிடம் சீடர் வந்தார் 89

முந்திநாள் மடத்திலுள்ள முதன்மையாஞ் சீடராவார்
அந்தணர் அவர்க்கே யாசி யளித்திடத் திருமணந்தான்
நந்தலில் முறையின் நன்கே நடைபெற விருந்ததாங்கே
அந்தண்மை பூண்ட சீடர் அவரடி வணங்கலானார். 90

காண்டகு மூலராமர் காட்சியைக் கண்ட தாலே
நீண்டவாயுள் நீ பெற்றே நிறைபுக முடனே வாழ்வாய்
வேண்டிய வேண்டி யாங்கு விருப்பொடேயீயும் மேலோன்
ஆண்டகையென்ன அன்னார் ஆஞ்சில பொருளைத் தந்தார். 91

சீடரின் திருமணந்தான் சிறப்பொடு நடந்த தென்னே
கூடிய பெண்தான் நல்ல குணமெல்லாம் வாய்க்கப் பெற்றுள்
தேடிய செல்வந் தன்னைத் திருவினுக் களிக்கும் நீராள்
நீடிய புகழைப் பெற்றாள் நிமலனைப் போற்றிச் செய்தாள். 92

மகிழ்ச்சி மீதூறப் பெற்ற மாண்புடைச் சீடராவார்
இகழ்ச்சியே கொள்ள லாகா தென் றுமே யுளத்தி லெண்ணி
உகப்பினால் வந்தார் தம்மை ஒவ்வொரு வரையுங்கண்டார்
அகமிக மகிழுமாறு அனைவருஞ் செல்ல லானார். 93

இன்னவா றனைவ ருந்தான் ஏகிட ஒருவ ருந்தான்
நன்னய மான மேலாந் நண்பரே யான தாலே
பன்னய முடையதொன்றைப் பரிவினின் நல்க வேண்டி
அன்னவர் அவசரத்தில் அறையினிற் புகுதலானார் 94

அறையினில் புகுந்த போது அவர்சிரம் அடியேபட்டு
தரையினில் வீழ்ந்தார் சீடர் தன்னுடைய நினைவிழந்தார்
உரைசெயற் கரிய யின்ப முற்றவர் துன்ப முற்றார்
இறை செயல் யாதோ தேறோம் எண்ணினர் மக்க ளெல்லாம் 95

நீண்டவா யுள்நீ பெற்று நிலத்தினில் வாழ்வாய் என்றே
ஆண்டவரென்ன ராக வேந்திரர் அருளிச் செய்தார்
ஈண்டுநீ மூர்ச்சை யாகி யிருந்திடல் நியாயமாமோ
மாண்டிட வருளான் மாயன் மாழ்கினாள் மணம கள்தான் 96

மணவணி யணிந்த பெண்ணே மணவறை யிருந்த போது
பிணவறை யாகிப் பின்னே பேசருந் துன்பம் எய்த
கணந்துணைப் போதுங் கொண்ட கணவனை கூடாதானாள்
பணமணி யற்று மூன்ற அரவெனப் பதைக்க லானாள் 97

சீடரின் துன்பந் தன்னைச் சிந்தித்த ராகவேந்த்ரர்
நாடினார் மூலராமர் நாட்டந்தான் யாதோ வென்று
பாடினார் மனத்திற் குள்ளே பலமுறை துதிக்கலானார்
வாடினா ரில்லை யன்னார் சீடரை வரச் சொன்னாரே. 98

சீடர்தான் இறந்தா ரென்றே சீடர்கள் பலருங் கொண்டே
வாடிய முகத்தின் ராக வேந்திர ரிடத்திற் சென்றார்
கோடிபல் கோடி யான குவலயத் துயிர்கட் கெல்லாம்
பாடிய பகவந் நாமம் பண்பாளர் பாட லுற்றார் 99

கிடத்தினார் உடலந் தன்னைக் கிருபையால் ராகவேந்த்ரர்
இடந்தனில் கொண்டு வந்தார்க்கு இதயமே துடிக்க வில்லை
கிடத்திய சடலம் நோக்கி கீர்த்திசேர் மூலராமர்
நடக்கையென் றறிந்தாரன்னார் நல்லடி போற்றி செய்தார். 100

தன்னுடைக் கமண் டலத்தின் தனித்தநன் நீரைத் தானே
முன்னுள சடல மீதில் முறையின்தன் வந்த்ரி மந்த்ரம்
பன்முறை யோதி யன்னார் பரிவுடன் தெளிக்கலானார்
என்னவென் றுரைப்பன் சீடர் எழுந்தனர் உறங்கி னார்போல் 101

நல்லதுந் தீயதுந்தான் நாட்டிலே நடக்கும் என்றும்
வல்லவன் ஒருவன் றன்னை வழுத்திடின் மக்களெல்லாம்
அல்லவை நீங்கி யன்னார் அகமிக மகிழ்வர் என்றுச்
சொல்லிட ராக வேந்த்ரர் துணையடி போற்றிச் செய்தார் 102

வெகு புகழ் சுதீந்த்ர தீர்த்தர் விருப்பினைக் கொண்டே நாளும்
ரகுநாத பூபா லன்றான் நலம்பெற நாட்டை யாண்டான்
தகுகல்வி யுடைய தஞ்சா வூரின்கண் தானே செல்ல
மிகுதியும் விருப்பங் கொண்டார் மேன்மையாம் ராக வேந்த்ரர் 103

மம்மருற் றுழந்த மேலாம் மண மக்கள் மகிழ்ச்சி கொள்ள
கும்பகோ ணத்தில் ராக வேந்திரர் குறைமுடித்துத்
தம்முடைப் பயணத் திற்கே தலைப்பட்டார் தஞ்சாவூரின்
அம்மவென் அதற்குள்ளாக அரசரே வந்துவிட்டார் 104

மதுரையும் வேலூர் மற்றும் மைசூரும் பீஜப்பூரும்
சதி செய்தார் அரசரெல்லாம் சண்டையே செய்ததாலே
பதி நலங் கெட்டு மேலும் பஞ்சமும் பசியு மாகிக்
கதியிலார் மக்க ளெல்லாங் கண்ணீரே வடிக்க லானார். 105

நல்லவர் வரவால் இந்த நாடெலாம் நலம தாகும்
அல்லவை தேயும் அன்னார் அருளுமே மிகவுண்டாகும்
செல்லலும் நீங்குந்தஞ்சை செழிப்புடன் விளங்கு மென்றே
மல்லன்மா ஞாலம் ஓங்க மன்னனே நினைக்க லுற்றான். 106

ஆதலால் அரசனாவான் அல்லலே தீர்க்க வேண்டி
காதலால் ராக வேந்த்ரர் கருணையை நாடிச் சென்றான்
சாதலின் துன்பம் நீங்கச் சந்ததம் மக்கள் வாழப்
போதனை செய்வர் என்றே பொன்னடி போற்றி செய்தான் 107

திறமெலாம் வாய்க்கப் பெற்ற திருவுடைராக வேந்த்ரர்
அரண்மனை அழைத்துச் சென்றே அவரடி வணங்கிச் சொன்னான்:
தரமெலாங் கெட்டதாலித் தஞ்சையின் மக்க ளெல்லாம்
உரமெலாம் மிழந்தார் சோழ மண்டலந் துயரே யுற்ற 108

முப்போது முணர்ந்த ராக வேந்திரர் முடிவணங்கி
அப்போது விஜய ராகவ் நாயகர் அருகில் சென்று
தப்பேது மில்லேன் யானே தஞ்சையை ஆண்டு வந்தேன்
இப்போது இன்னலுற்ற தென்செய்வதென்றே சொன்னான் 109

தன்னையே வணங்கி வந்து தவிக்கின்ற மக்கட் கெல்லாம்
பொன்னொடு பொருளை வாரி வழங்கினர் புகழ்மிக்குள்ள
தொன்மையாம் மடத்தில் செல்வந் தொலையினுந் தொலையாத்துன்பம்
வன்மையா யிருந்துமிக்க வறுமையே தீரவில்லை. 110

வழுவிலா வரசன் ஆண்டும் வறுமைதான் உற்றுழந்தான்
அழுதிடும் மக்கள் கொண்ட வல்லலைப் போக்க வெண்ணி
எழுதினார் பிரண வத்தை யினிதாகும் களஞ்சியத்தில்
பழுதிலா வளமை யோங்கிப் பஞ்சமே நீங்கு மென்றே 111

வருவோர்க்கும் மடத்தில் வந்து போவோர்க்கும் பொருளை வாரி
தருவோராய் இருந்தார் நாளும் தானியக் களஞ்சியந்தான்
குறையவே யில்லை என்னே கூடுதலாகக் கண்டார்
பிரமித்து நின்று மக்கள் பிரணவப் பொருளுணர்ந்தார். 112

மக்களும் மன்னர் தாமும் மனமது மகிழ்ச்சி கொண்டார்
தக்கவக் காலத் தின்கண் வந்துமே தாக வேந்தர்
மிக்கதாம் பஞ்சம் போக்கி மேன்மையே யடைந்த தாலே
அக்காலத் தரசர் மற்றோர் அவரடி போற்றி செய்தார் 113

சோழமண் டலத்தின் பஞ்சந் தொலைந்ததே மக்களெல்லாம்
வாழுநல் வழியே காண வளமது கொழிக்க வேண்டி
ஆழ்ந்துமே சிந்தித் தேநல் ஆயத்தம் செய்யலானார்
சூழவே மடத்தில் மக்கள் தொடங்கினர் பூஜை யாகம் 114

யாகமே செய்தார் மேலாம் யக்யங்கள் வளர்ந்த தாலே
மாகமேற் புகையே செல்ல மாநில மக்கள் காண
மேக மேற்றோன்றி யெங்கும் மேதினி மழையுண் டாகி
ஆகமுங் குளிர்ந்த தென்னே அவனியுஞ் செழித்ததாமால் 115

தக்கவக் காலத்தின்கண் தண்ணளி ராக வேந்த்ரர்
மிக்கதாம் பஞ்சம் போக்கி மிகுவளம் செய்து விட்டார்
தக்கவப் பெரியோர்க் கென்னால் தகுபொருள்ஒன் றைத்தந்தால்
எக்காலும் மறவார் யானே நன்றியைச் செய்வேன் என்று 116

எண்ணினான் மன்னன் என்னே எண்ணத்தின் அலைகள் பாய
கண்ணெனப் போற்றிக் காத்த கனகமாம் பொருளென் றொன்றை
அண்ணலார் ராக வேந்த்ரர் அவரடி போற்றி செய்தே
நண்ணிதான் நல்கவேண்டி நாட்டத்திற் கொள்ள லானான் 117

தன்னிட முள்ள தாமத் தரமுடை வைர மாலை
பொன்னினாற் செய்த தாகும் அப்பொருள் மேலொன் றில்லை
உன்னினார் ராக வேந்த்ரர்க் குறுபொருள் ஆகுமென்று
மன்னனே மதித்தா னென்றால் மதிப்பிடற் கரியதாமே. 118

அப்பொருள் வைர மாலை அவரடி போற்றி செய்து
இப்பொருள் இதனின் மேலும் இல்லையென் றுளத்தில் எண்ணி
செப்பியே கொடுத்தான் என்னே செய் நன்றிக் கடனே யென்று
முப்போதும் உணர்ந்தராக வேந்திரர் முறுவல் கொண்டார் 119

தனக் கெனக் கொடுத்த வைர மாலையை ராக வேந்த்ரர்
மனக்குநல் மகிழ்ச்சி யாலே மன்னனே மக்கள் காண
கணத்திலே ஓம குண்டத் தழலிலே போட்டு விட்டார்
துணுக்குற்றான் அரசன் என்னே துயருற்றான் மனத்தினுள்ளே 120

என்னவென் றீந்தோம் என்னே எளிதென எண்ணி விட்டார்
தன்னுடைப் பொருளே யானால் தரமது அறிந்து கொள்வார்
பொன்னிலே பொருளின் மீதே புகழ்ச்சியே கொள்ளார் தானும்
உன்னியே பார்க்கவில்லை உறுபொருள் நிலைதான் யாதோ? 121

மன்னவன் மதியிழந்தே மனந்தனிற் கலக்கமுற்றான்
அன்னவன் யாக குண்டத் தற்புதம் அறிதற் காமோ
உன்னினார் ராக வேந்த்ரர் உயர்ந்த வராத லாலே
பன்னுதல் செய்யார் தக்க சமயத்தைப் பார்த்திருந்தார் 122

யாகத்தி னின்று மாங்கோர் அக்கினிப் பிழம்பதொன்று
வேகத்தி னெழுந்து மேலே விண்ணெழுமின்ன லென்ன
வாகுவாய் ஒளியே வீச வைரத்தின் மாலை தானும்
ஏகமா யழலி னூடே யிருந்திட மன்னன் கண்டான் 123

பொலிவுடன் விளங்கிற் றந்த புதுமையாம் வைர மாலை
நலிவுடை மனத்த னாவான் நலம் பெறப் பார்த்து விட்டான்
வலிவுடை ஞானி ராக வேந்திரர் எடுத்துத் தாமே
கலிமகிழ் சிறக்க மன்னன் கரத்தினில் கொடுத்துச் சொன்னார் 124

உங்களின் வைர மாலை உயர்ந்ததே யாகும் என்னே
உங்களின் பரம்ப ரைக்குத் தகுந்ததே யாகும் மேலும்
எங்களுக் கிதனை யீந்தே யிழந்திடா திருக்கத் தந்தேன்
அங்கவர் கூறும்போது அரசனே கலக்க முற்றான் 125

மன்னித்தே யருள வேண்டும் மனமிக நொந்து விட்டேன்
மன்னனாய் இருந்தும் என்னே மனமது செம்மை யற்றேன்
என்றவர் அடியிற் றாழ்ந்தேயிரு கரங் கூப்பி நின்றான்
நன்றென வாசி கூறி நலமதே விளைக வென்றார் 126

தானமாய்க் கொடுத்த பின்னுந் தங்களின் செய்கை கண்டே
ஏனோ நான் துன்பப் பட்டேன் எங்கணாற் காணச் செய்தீர்
போனதே யென்றென் றெண்ணிப் புலம்பினேன் மனத்தி னுள்ளே
ஞானமா யிதனைத் தாங்கள் அறிந்தெனக் காக்கந் தந்தீர் 127

என்றதும் ராக வேந்த்ரர் இருந்திடச் சொன்னார் பின்னும்
நன்றென வைர மாலை நலம்பெறப் பெற்றும் மக்கள்
சென்றிடு துன்ப மோதான் செகமதில் வாழ்வுண்டாமோ
பொன்றிடா துயிரைக் காத்தல் பூதலத் தாகுமோ சொல் 128

பூண்டபே ரன்பின் நீயும் பொன்மணி வைரம் மற்றும்
ஈண்டுள பொருள்கள் எல்லாம் எமதென எண்ணாய் என்றும்
ஆண்டவன் படைத்த தென்றே யவனுக்கு அர்ப்ப ணித்தால்
மாண்டிட வருளான் மாயன் மண்ணினில் நிலைத்து வாழ்வாய் 129

புவியுண வெல்லாம் இந்த பூதலத் துள்ளோ ருண்பர்
அவியுண வொன்றே நாமும் ஆண்டவற்களிக்க மேலாங்
கவியென வுலகில் வாழ்வோங் கண்ணனின் அருளைப் பெற்றால்
தவித்திடா தருள்வான் இந்தத் தரணியில் துன்பம் அற்றே. 130

என்றவர் விளக்கங் கேட்டே யிணையடி போற்றி செய்ய
நன்றென வறியேன் யானும் நலம்பெறும் யாகந் தன்னால்
பொன்றிடும் பொருள்கள் என்றே பூதலத் துள்ளோர் போன்றே
கன்றிய மனத்தி னானேன் கருணைசெய் தருள்வீ ரென்றான் 131

அர்ச்சனை செய்து நீயும் அவனடி போற்றிச் செய்யும்
நற்செயற் சிந்தையாலே நானில மழையே பெய்யுந்
தற்செய லாலே யென்றுத் தர்க்கமே பண்ண வேண்டாம்
சொற்பொருள் உணர்ந்தே யன்னார் துணையடி போற்றி செய்தான் 132

வேறு

மூல ராமர் முழுதருள் பெற்றவர்
ஞால மீதினில் ராக வேந் திரரென
கோல வைர மாலையைக் கொடுத்தவர்
தாளில் வீழ்ந்தனன் தாரணி வேந்தனே. 133

மன்னுமூல ராமர் மகிழ்ந்திட
மன்ன னீந்தனன் வைர மாலையை
தன்னல மற்ற ஞானியு மங்கனே
புன்னகை கொண்டார் பூதல மோங்கவே 134

வரண்டு போன சோழமண் டலமெலாம்
திரண்டு வெள்ள மிகுத்திடச் செந்நெறி
மருண்ட மன்னனே ராகவேந் திரரவர்
தெருண்ட பார்வையின் சீர்த்திபெற் றானே. 135

**அந்தணர்களின் ஐயம்தீர்த்தது**

**வேறு**

மஞ்செனு மழைமே கத்தால் மாரியே பொழிய வெங்கும்
அஞ்சன நிறத்தான் தன்னை யனுதினம் வணங்கு நீரார்
விஞ்சிடும் புகழ்பெற் றோங்க வீறுகொள் ராக வேந்த்ரர்
தஞ்சையி னின் றுங் கும்ப கோணத்தே வரவைக் கொண்டார் 136

மாகமேல் மழையைப் போன்று மனிதருக் கருளும் வள்ளல்
ராகவர் புகழை நாளும் நாட்டவர் அறியலானார்
தாகமே மிகுத்துப் பக்தித் தண்ணி ராக வேந்த்ரர்
வாகென அருள் மெய்ஞ் ஞான வள்ளலை நாடி வந்தார் 137

உண்மையும் இன்மை யெல்லாம் உலகத்தே யென்றும் உண்டு
நன்மையுந் தீமை தானும் நாடெங்கும் இருத்தல் கண்டு
வண்மையே யல்ல வென்றே வாதிட்டார் மூவர் ஆங்கே
திண்மையாய் ராக வேந்த்ரர் திருவருள் பேறுண்டாமோ 138

ஏகனாய் இருந்தே பாரில் ஏய்ப்பவர் அவரே யாவார்
சாகசம் பலசெய் தாலுஞ் சந்தேகஞ் சந்தேகந்தான்
யோகநற் சக்தி யாலே யுணர்ந்ததே உண்மை யாகில்
ராகவேந் திரரும் நாம்சொல் வார்த்தையை யறிய வேண்டும் 139

அந்தணர் மூவர் நாமும் அவருழைச் செல்ல வேண்டும்
நந்தம துள்ளத் துள்ளும் நாட்டத்தை நாமே கேட்க
செந்தண்மை யுடைய ராகில் செப்புவர் மனத்தின் செய்தி
புந்திக்குள் போற்றி வைத்தே போயினர் மூன்று பேரும் 140

இனிப்புப் பண்டங்க ளாக யேதேனும் நினைத்துக் கொள்வோம்
கணித்திடார் ராக வேந்த்ரர் காஷாய வேடதாரி
இனித்திடும் பட்ச ணத்தை யார்க்கவர் எடுத்து ரைப்பார்
தனித்தனி நினைத்தே யன்னார் தரமதை யறியச் சென்றார் 141

இன்னமுங் கும்ப கோணத் தெல்லைக்கண் இருக்கின்றோம் நாம்
சொன்னவிச் சூக்கு மத்தைச் சொல்பவர் யாரோ பாரில்
பன்னிய பட்சணத்தைப் பாருளோர் அறியவில்லை
என்னதான் சொல்வர் நாமும் இதனை நன்கறிய வேண்டும் 142

உண்மையில் ராக வேந்த்ரர் உயர் ஞானி யாவராகில்
திண்மையாய் மனத்தில் எண்ணுந் தித்திப்புத் தின் பண்டந்தான்
நண்பகற் படைய லின்கண் நாமுண்ண அளிக்க வேண்டும்
எண்ணினார் மூவர் தாமும் முணுமுணுத்திருக்கும் வேளை 143

சீடர்தாம் ஒருவர் வந்தார் சீக்கிரம் குளியும் என்றார்
ஆடைதான் காவிதாங்கி ஆற்றினில் துவைக்க லானார்
சாடையாய்ச் சொன்னார் போன்றார் சடுதியில் வாரும் என்றார்
வாடையே வீசுதென்றார் வந்திட்டால் உண்பீர் என்றார் 144

நினைத்தநல் இனிப்புப் பண்டம் நீருமே உண்ண வாரீர்
தினைத்துணை யையம் வேண்டாம் சீக்கிரம் வந்தா லுண்பீர்
நனைத்தனர் காஷா யத்தை நலம்பெறத் துவைத்த பின்பு
அனைத்துநீர் அறிந்த தெங்கன் அவரையே கேட்கலுற்றார் 145

திருமடக் காவி யாடை துவைக்கின்ற சீடனாவேன்
பெருமட வார்த்தை நீங்கள் பேசாதீர் என்றனுடே
அருமட வேலை யெல்லாம் அனைத்துமே செய்ய வேண்டும்
தருமடக் காவி தன்னை தான் துவைத் தேகினானே 146

இன்னுநீர் இருக்கின் றீர்கள் இனிப்புள பண்டமெல்லாம்
நன்னய மாக வுண்பீர் நண் பகற்படையலின்கண்
சொன்னாரே சீடர் தாமும் சூக்குமம் அறிந்த தெங்கன்
பன்னினார் மூவர் தம்முள் பவித்திரக் காவியென்றே. 147

காவியே கொண்டு சீடர் கையினிலிருக்கும் போது
பாவியேம் நினைத்த வெல்லாம் பதிலாக வுரைக்க லானார்
தாவிலா காவி யாடை தரையினில் வைத்த போது
மேவிடும் வார்த்தை தம்முள் மேன்மையே யில்லை யென்னே 148

குறைவிலா தருள்பெற் றுள்ளார் குணமுடை ராகவேந்த்ரர்
நிறை புகழ் பெற்றார் பாரில் நிமலனே யாவர் என்னே
இறைபோது காவி யாடையிருந்திடச் சீடர் சொன்னார்
மறைவினில் உரைத்த வெல்லாம் மகானவர் மறுத்தற் காமோ! 149

விரைவினில் மூவர் தாமும் வியர்த்திட மடத்தை நண்ண
முறையினில் மூல ராமர் பூசையை முடித்தா ரப்போ
விருந்தயர் சமயந் தன்னில் விருப்பொடு ராக வேந்த்ரர்
அருந்துவீர் உணவை என்றே அருட் கணால் பார்வை யிட்டார் 150

முப்போதும் அறிந்த ஞானி முறையொடு முபசரித்தார்
இப்போது திருப்தி தானே என்றதும் ராகவேந்த்ரர்
தப்பே தாம் செய்து விட்டோம் தயையொடு பொறுக்க வேண்டி
அப்போதே அந்த ணர்தாம் அவரிடங் குறையி ரந்தார் 151

### மண்ணைக் கொடுத்து மணவினை முடித்தது

தண்டம் ஏந்திய தண்ணளி ராகவர்
அண்டம் அனைத்தும் அறிந்தவ ராயினும்
கொண்டல் கோலிக் குவித்திடு வெள்ளத்தின்
வண்டல் பூசும் வழக்க முடையரே 152

கருத்தின் மண்ணைப் பூசிடின் காத்திரம்
திருத்த மேயுறத் திண்மைய தாகிடும்
வருத்த மற்றுடல் மண்ணினில் வாழ்ந்திட
மிருத்தி கையது மேன்மைய தாகுமே 153

ராக வேந்திரர் சீடர் ஒருவரே
வாகு வாயவர் வண்டல் கொணர்பவர்
ஆகுந் திருமண மாகுமென் றெண்ணியே
ஏக ஏக வருடங்கள் ஏகின 154

பொன்னொடு பொருளு மற்றார் பூமியில் சுகமுமற்றார்
எண்ணிலா பக்தர் வந்தே ராகவர் அருளைப் பெற்றார்
அண்ணலாம் ராக வேந்த்ரர் அவரையே வணங்குநீரார்
நண்ணுவோம் என்றே நாளும் நன்மையாங் காலம் பார்த்தார் 155

தாவிலா ராக வேந்த்ரர் தண்ணீரும் மிருத்திகைதான்
காவிரிக் கரையி னின்றே கடமையென் றளிக்குஞ் சீடர்
பூவிலோர் போற்றத் தக்கப் புதுமணங் கொள்ள வேண்டி
மேவிடுங் காலம் பார்த்தே மிருத்திகைக் கொடுத்து நின்றார் 156

நிற்கின்ற நிலையைக் கண்டால் நிலவுமுள் கருத்து ஒன்றின்
நற்காலம் பார்த்தற் கேற்ற நயமொடு விளங்குகின்றாய்
சொற்றிட வேண்டு நீதான் சொல்லவுந் தடையு முண்டோ
பற்பல சொல்லான் பக்தன் பண்பொடும் ஆமாம் என்றான் 157

அப்படி யானால் நீயும் அதனையென் னிடமே சொல்வாய்
எப்படி யானு னக்கே யியல்வனச் செய்வன் யானும்
தப்பிடா துலகில் மேலாந் தரமொடு விளங்கச் செய்வேன்
அப்போதே ராக வேந்த்ரர் அவருரைக் கனும தித்தார் 158

திருமணம் செய்து கொள்ளத் தீர்மானம் செய்து விட்டேன்
திருமணஞ் செய்தற் கான திரவியம் சிறிது மில்லை
ஒருமன தாகப் பீஜப்பூரே நான் செல்ல வேண்டும்
பெருமணப் பெண்தான் அந்தப் பேரூரில் இருக்கின்றாளே 159

பக்தனிவ் வாறு சொன்னான் பார்த்திட்டார் ராக வேந்த்ரர்
பக்தனே கொண்டு வந்த பவித்திர மண்ணெடுத்தே
சத்தியாம் இதனைத் தந்தேன் சகலமும் முடியு மென்றார்
பக்தியாய்ப் பெற்றே பக்தன் பாதுகாப்புடனே வைத்தான் 160

மறுவார்த்தை பேசான் பக்தன் மதிப்பொடும் அதனைப் பெற்றே
ஒருசிறு பேழை யின்கண் ஒண்பொரு ளெனவே வைத்தான்
அருமையாம் ராக வேந்த்ரர் அற்புதங் கண்ட சீடர்
பெருமையாய் மகிழ்ச்சி பொங்கப் பீஜப்பூர் புறப்பட்டானே 161

தக்கவப் பெரியர் ராகவேந்திரர் பக்த னல்லேன்
மிக்கதாங் காவி யத்தை மேன்மையா யியற்ற வேண்டப்
பக்தனாம் ரஜ்னி பண்பின் விளங்கிய தன்மை போல்வான்
தக்கவக் காலந் தன்னில் தடையிலான் செல்ல லுற்றான் 162

தலமதில் திரும ணந்தான் தான்கொள்ள வேண்டு மென்றால்
பலமாதம் செல்லுமென்று பக்தனே நடக்க லுற்றான்
சில நாட்கள் சென்ற பின்னே சேர்ந்தானோர் சிற்றூரின் கண்
நிலவிட்ட திருளே யென்று நிமலனை மனத்தில் எண்ணி 163

தெருவின்பாங் கமைந்திருந்த திண்ணைசேர்ந் தில்லத் தார்க்கேத்
தெரிவியா திருளின் கண்ணே சென் றுமே யுறங்க லானான்
அருமையாய்க் குழந்தை யாங்கே யழுகின்ற ஒலியைக் கேட்டுத்
தெருவிலே யிருந்த தென்னே திருவிலாப் பூதம் ஒன் று 164

அப்பூதம் வந்தும் என்னே யவனையே யெழுப்ப லுற்ற
திப்போதி யாரோ நம்மை யெழுப்புவ தென் று பார்க்கக்
கப்பிருள் தனிலே யாங்குக் கண்டிட்டான் பூதந் தன்னைச்
செப்பிய தென்னே நீயுஞ் சென்றிட வேண்டுமென்றே 165

நடுக்கமே கொண்டான் பக்தன் நவில்வது அறியா தானான்
இடுக்கணே யுற்ற ராக வேந்திரா என்ன செய்வேன்
படுக்கவும் வழியி லாதிப் பாதிராத் தனிலே பூதம்
விடுக்கவோர் வழியே சொல்வாய் விமலனே வேண்டு கின்றேன் 166

ராகவர் பேரைச் சொல்ல நலமுடை மனத்த னாகி
ஏகுவாய் யிங்கி ருந்தே என்றதும் அடியிற் றாழ்ந்தே
வேகமாய்ச் சொல்லி யென்னை விரட்டாதீர் விளம்புகின்றேன்
சோகமே கொண்டுள் ளேன்யான் சொல்வதைக் கேளும் என்றே 167

பிரம்மத்தைக் கண்டு ணர்ந்த பெரியவர் நீரே யாவீர்
பிரம்ம ராட்சதனே யானும் பெற்ற வென் துக்கங் கேட்பீர்
பிறந்தவிக் குழந்தை தந்தை பெரும்பாவி யான தாலே
இறந்திட வேண்டு மென்றே யிங்கு நான் வந்தே னென்னே 168

முன்சென்ற பிறவி தன்னில் மூர்க்கனாம் இந்தப்பாவி
என்னுடை குழந்தை தன்னை யிரக்கமே யின்றிக் கொன்றான்
வன்னெஞ்சு கொண்டு விட்டேன் வர்க்கத்தைத் தீர்க்க வேண்டி
பன்னியே பக்தன் தாளில் பரிவுடன் கூற லுற்ற 169

இதற்குமுன் குழந்தை யேழின் உயிரைப்போல் எடுக்க வந்தேன்
அதற்குள் நீர் வந்து விட்டீர் அருகிலே உள்ள பேழை
எதற்கு நீர் கொண்டு வந்தீர் என்னையே யெரிக்க லுற்ற
அதற்கு நான் என்ன செய்வேன் அரும் பொருள் தருவன் இன்னும் 170

பொன்னொடு பொருளும் ஈவேன் புகழ்ந் திடுமணியும் யீவேன்
இன்னலாய் என்னை யீண்டு மிரட்டிடும் பேழை தன்னை
நன்னய மாக நீவிர் நகர்த்திட வேண்டு மென்று
பன்னியே பக்தன் தாளில் பணிந்துமே தாழ்ந்த தம்மா! 171

இன்னுநீர் தயங்க வேண்டா மென்னாலே முடிந்த மட்டும்
பொன்னொடு மணியும் யீதோ புதுப்புதுப் பணியும் யீதோ
பன்னியப் பூதம் சென்றே பதுக்கிய தானே கொண்டு
முன்ன மோர் குடத்தை வைத்துக் குழந்தையை முடிக்க வேண்ட 172

செல்வத்தைக் கண்டான் பக்தன் செய்வது சரியோ வென்றான்
பல்வித பாவம் செய்த பிரம்ம ராட்சதனே யின்று
வல்வினை செயலே நாமும் வழிவிடல் முறையோ வென்று
நல்லதே செய்ய வேண்டி நாடினான் பக்தன் அன்றோ 173

பேழையை யெடுத்தான் பக்தன் பெரிதுமே மகிழ்ந்தான் பேயும்
வாழவே யெண்ணி அன்னான் வள்ளலாம் ராக வேந்த்ரர்
ஏழையாய் வருந்து வோர்க்கு யென்றுமே யுதவு வாரே
மாழை பொன் மணியைக் கண்டான் மனத்தினில் நன்றி கொண்டான் 174

ஆதலால் பேழை தன்னை அவனுமே திறக்க லானான்
காதலால் ஆங்கே நின்றக் கருநிறப் பேயின் மேலே
சாதலின் துன்பம் நீங்கச் சந்ததம் குழந்தை வாழ
ஈதுநாம் செய்தல் நன்று எண்ணியே யதன் மேற்போட்டான் 175

பட்டதும் பிரம்ம ராக்கன் பகரொணா ஒளியே தோன்றிச்
சுட்டது அவன்செய் பாவம் சொல்லொணாத் துன்பம் நீங்க
விட்டது வினையே யென்று விடுதலை பெற்றுச் சென்றான்
எட்டியே பார்த்தார் வீட்டோர் என்னதான் வெளியே யென்று 176

யார்நீ தான் என்று கேட்டார் இங்கேயேன் வந்தாய் என்றார்
ஊர் பேர்தான் என்ன வென்றார் உண்மையைச் சொல்லு மென்றார்
பார் மீதில் ராக வேந்த்ரர் பக்தனாய் வாழ்வன் யானே
ஊர் செல்வேன் பீஜப்பூரே உம்வீட்டில் தங்கலானேன் 177

அந்தண னாவன் என்முன் அலகைதான் வந்த திங்கே
உந்தம தில்லில் உள்ள குழந்தையைக் கொல்லுதற்கே
முந்திய குழந்தை கொன்று முடித்தது முதலாச் சொல்லி
எந்தனற் குருவினாலே யின்றோடே அழிந்த தென்றான் 178

எனக்குநீர் நன்மை செய்தீர் இதற்கென்றன் நன்றியாக
மனக்குளாம் எண்ணஞ் சொல்வேன் மணமகனாக வேண்டும்
நினைக் குயென் மகளை யீவேன் நின்கருத் தியாதோ வென்ன
வணக்கமே செய்தாள் என்னே வடிவழகுடைய பெண்ணே! 179

முறையொடு தமுதூர் சென்றான் முழுமனங் கொண்ட பெண்ணும்
இறையருளாலே யெய்த யியல்பினின் மண முடித்தே
மறையவன் திரும்பி வந்தான் மகிழ்ச்சியால் பக்த னாவான்
உரைத்திடக் கேட்டார் ராக வேந்திரர் உளம கிழ்ந்தார் 180

### பக்தியின் பெருமை உணர்த்தியது

நினைப்பவர் மனதில் நிற்பர் நிமலனக் கருத்தின் என்றும்
தனைத் துதிப் பவர்க்கே யன்னார் தலத்தின் அற்புதமே செய்வார்
எனைத்தானும் துன்பம் இல்லை இத்தரை ராக வேந்த்ரா!
தினைத் துணை யளவு பக்தி செய்திடின் உலகத்தோரே 181

கொல்லாப்பூர் தனிலிருந்தே கொண்டிட்ட பயணந் தன்னில்
செல்லுங்கால் வடதி சைக்கண் சிறந்தவத் தேயந் தன்னில்
நல்லசந் யாசி யாங்கே நற்காவி யணிந்தி ருந்தும்
பொல்லாத செய்வ ரென்றே புகன்றிட்டான் அரசன் தாமே. 182

அரசியோ அதற்கு மாறாய் இருந்திட்டாள் ராகவேந்த்ரர்
அரசராய் ஞானி தம்முள் அரசரின் விளங்கு மேலோர்
உரைசெயீர் அவரைப்பற்றி உத்தமனாவார் மேலும்
தரையினாம் பேசும் வார்த்தை தனையுணர் மகானே யாவார் 183

தெய்வத்தின் அம்சம் ஆவார் சிறந்துள மக்கட் கெல்லாம்
உய்வகை யுணர்த்து மேலோர் ஒண்பொருட் பற்றே யில்லார்
மெய்வகை கண்ட மேலோர் மேன்மையால் உலக மெல்லாம்
செய்வகை யறிந்தே யன்னார் சேவடி துதித்தற் காண்பீர் 184

என்னதான் அரசிதானும் ராகவேந் திரரைப் பற்றி
பன்னினும் அரசன் பாரான் பரதேசி யெனவே யேசிச்
சொன்னதுந் தாம தந்தான் சுகமிலான் மகனும் ஆங்கே
தன்னிரு கைகால் எல்லாந் தளர்வுறத் துடிக்க லானான் 185

நன்றாக விருந்தான் பையன் நல்லதும் அரண்ம னைக்கண்
சென்றிட்டார் மருத்து வர்கள் சிறந்திட்ட மருத்து வத்தின்
ஒன்றாலும் நிற்க வில்லை உயர்ந்ததுவலியே யென்றான்
இன்றுநாம் மகானைப் பற்றி யேசினோம் அரசி சொன்னாள் 186

பார்த்திட்டீர் என்றன் வார்த்தை பரிந்துமே கேட்கவில்லை
சார்த்திட்டீர் பழியே நீரும் சந்நியாசி வேடம் என்றே
வேர்த்திட்டான் பையனிப்போ விளைந்தது வினையே யென்று
கூர்த்தநல் மதியினாலே கூறினாள் அரசி தானும் 187

அப்போதே அரசன் சொன்னான் அப்படி யானால் நாமும்
ஒப்பிலா ராக வேந்த்ரர் ஒண்மலர்ப் பாதந் தன்னைச்
செப்பியே வணங்கு வோமே சிறந்ததம் மகானைக் கண்டு
தப்பெலாங் கூறி யன்னார் தயவினை வேண்டிச் செல்வோம் 188

என்றதும் தாம தந்தான் இருக்கையிலிருந்து பையன்
நன்றென ஓடி வந்தான் நலமதைக் கண்டு மன்னன்
சென்றிட்டான் ராகவர் முன் திருவடி சென்னி சேர்த்து
ஒன்றியே நின்றான் மன்னன் உயர்ந்தவர் மகானே யென்று 189

நடந்ததை யறிவித்தற் போல் நல்லதோர் முறுவல் செய்தார்
இடந்தனில் வந்தே தம்மின் இணையடி வணங்கும் போது
மடந்தனை யுணர்ந்தான் மன்னன் மதியுடை யரசி தன்னால்
நடந்ததைக் கூற ராக வேந்திரர் நனிம கிழ்ந்தார் 190

## வினையால் விளைந்த விபரீதம் உணர்த்தியது

அல்லலுற் றுழந்த மக்கள் அல்லலைப் போக்கும் ஞானி
அல்லவே ராக வேந்த்ரர் அவருமே போலி யென்று
சொல்லிய மக்கள் சில்லோர் சொல்வதும் அறியா தாகிப்
பல்வினை செய்து தாமே பாவத்தைத் தேடலானார் 191

தலயாத்ரை கொண்ட தூய தண்ணளி ராக வேந்த்ரர்
செலவைத்தாம் மேற்கொண் டும்மே சீருடைப் பயணங் கொண்டார்
பலமரம் உள்ள பாதை பகல்வழிப் போகும் போது
சிலபேர்கள் வந்தார் என்னே சிறுபாதை வழியிருந்தார் 192

ஐயோயான் என்ன செய்வேன் அருகிலே கிடக்கும் இன்னான்
மெய்யேதான் இறந்து போனான் மேன்மையாய் விளங்குந் தாங்கள்
உய்யவே வழியே செய்வீர் ஊர்வழிச் செல்வோம் என்னே
குய்யோவோ முறையோ யென்றே கூவினர் குறையற்றார் கண் 193

பையலே யிறந்து போனான் பாவம் நானென்ன செய்வேன்
உய்யவே வழியே யில்லை ஊர்வழிச் செல்வேன் நானும்
மெய்யேதான் சொல்லு கின்றேன் மேன்மையாய் விளங்கு மின்னான்
செய்வினை யதனை யாருந் தடுக்கவே முடியா தென்றார் 194

என்றதும் ராக வேந்த்ரர் இனி நாமும் செய்த திட்டம்
நன்றாக முடியும் என்றே நயமுடை வஞ்ச கர்தாம்
பொன்றிட்டான் என்றே சொன்னீர் போலியே யாகும் என்னே
வென்றிட்டோம் நாமெயென்று விலாவிறச் சிரிக்க லுற்றார் 195

உண்மையில் இறந்தார் தம்மை உறுதியாய்ப் பிழைக்க வைத்தார்
நன்மையில் காரியத்தை நானிலம் அறிதற் கென்றே
இன்னதாம் நாடகத்தை நாங்களே செய்தோம் கேளீர்
வன்மையில் ராக வேந்த்ரர் வழிச் செல்கை விடுங்கள் என்றார் 196

போலியைக் கண்டுநீவிர் போகாதீர் மோசம் என்றே
கேலியாய்ச் சொல்ல வேதாம் கேட்டுமே ராகவேந்த்ரர்
மாலிலா ஞானம் பெற்றார் மருட்சியே பெற்றார்க் கென்றே
வாலறி வினனை யப்போ வழுத்தியே நின்றிருந்தார் 197

சக்திதா னில்லை ராக வேந்திரர் சகத்து ளோரைப்
பக்தியால் பக்தர் தம்மைப் பதரென ஆக்கி விட்டார்
உக்தியால் உலகந் தன்னில் உயர்ந்தவர் போலே வாழ்வார்
சக்தியென் றவரே செய்வர் சகத்திலே பிழைப்ப தற்கே 198

என்றவர் கூறி யாங்கே யிறந்தவன் போன்றான் தன்னை
நன்றென வெழுப்ப லானார் நனி தூக்கம் பெற்றான் போல
ஒன்றுமே பேசான் என்னே உறங்கினான் என்றே காதில்
நன்றாகக் கூச்சல் போட்டு நலம்பெற எழுப்ப லுற்றார் 199

என்னடா யினியுந் தூக்கம் எழுந்திரு யிப்போ நாங்கள்
பன்னிட்ட நாடகத்தைப் படுத்துமே கேட்டாய் நீயும்
நண்ணிடா ராக வேந்த்ரர் நலம்பெறு நாடகந் தான்
பண்ணிடார் பாரில் பையா பார்த்திட எழுவாய் என்றார் 200

இறந்தவன் போலே வீழ்ந்தான் இறந்துமே விட்டதாலே
சிறந்தவந் நாடகத்தோர் செல்லலே யுற்றார் என்றே
மறந்துமே பெரியார் கண்டால் மனதிலுந் தீயவெண்ணம்
கரந்துமே செய்தல் நன்றோ கனவிலுங் கூடா தென்றே 201

அரியினின் பாதம் போற்றும் அடியவர் ராக வேந்தர்
அரியின்நல் அம்சம் என்றே அறிந்திடார் அவர்கள் என்னே
எரியினால் சுடப்பட்டாலும் உய்வுண்டாம் உய்வில்லையே
பெரியாரைப் பிழைப்பார் என்றும் பிழைப்பாரோ பாரில் தாமே. 202

அப்போதில் அவர்கள் எல்லாம் ஆண்டவன் நீரே ஆவீர்
தப்பேதாம் செய்து விட்டோம் தவறினைப் பொறுக்க வேண்டும்
இப்போதிந் நாடகம் போல் இனி நாங்கள் செய்ய மாட்டோம்
செப்பியே அன்னார் பாதம் சென்னியில் சூட்டினார்கள் 203

இறந்தவர் உலகில் எல்லாம் எழுப்புதல் முடியு மோதான்
இறத்தலும் பிறத்தல் தானும் என்றுமே உலகநீதி
சிறந்தவர் யாரோ ஓர்கால் செல்லலே அடைவரென்றால்
அறந்தனைச் செய்ய அன்னார் அல்லலை நீக்க லாகும் 204

அத்துணை யளவே யன்றி யகிலத்தில் உயிர்கள் எல்லாம்
செத்துமே போகா திந்தச் செகந்தனில் பிழைக்க வைத்தல்
மத்தர்தம் செயலே யல்லால் மண்ணினல்லறம றந்தே
உத்தமர் செய்யார் என்றே உரைத்தனர் ராக வேந்தர் 205

அன்றியும் சொன்னார் மக்கள் அல்லலை நீக்க வேண்டி
என்றுமே அவர்க ளுக்கே இன்னுரை பகர்வ தல்லால்
நன்றென வதிசயத்தை நாட்டிலே செய்து காட்டிக்
குன்றெனப் பொருளைத் தேடல் கூடாதென் கொள்கை என்றார் 206

ஆண்டவன் மேலே நல்ல எண்ணமே வேண்டும் யார்க்கும்
காண்டகு வேத மார்க்கம் காட்டுநன் னூலைக் கற்றே
யீண்டுயிவ் வுலகில் தர்மம் இயற்றுநல் ஒழுக்கங் கொண்டால்
மீண்டுமிவ் வுலகில் வாரா மேன்மையை யடைவ ரன்றோ 207

கறறதுங கணட துநதான கருததின்ல உளள உணமை
மற்றவர் அறிய விந்த மண்ணினிற் சொல்ல வேண்டும்
அற்றவர்க் குதவும் செல்வம் அதனைத்தம் மிடத்தில் வைத்தால்
பெற்றவர் பயனை யெய்தார் பிழையினைச் செய்தோ ராவார் 208

என்றே யான் கருத்திற் கொண்டே யினிதா நற் பயணங் கொண்டேன்
நன்றே நான் மனத்திற் கொண்டேன் நவையிலேன் நாரணன் தாள்
ஒன்றே யிவ்வுலகைக் காக்கும் உற்றவர்க் குதவும் செல்வம்
என்றே யென் கருத்தைச் சொன்னேன் இயற்றிடேன் மாயம் என்றார் 209

ஆக பாடல் தொகை – 1162

## பட்ட சங்க்ரகப் படலம்

ஆலவாய்ப் பதியில் முன்னே ஆடினான் அறுபான் நான்கு
கோலமாய் சிவன்கொள் ஆடல் கொண்டவந் நகரென் றெண்ணி
ஏலவே யுலகின் நன்கே நாயக்கர் ஆண்டு வந்தார்
சீலங்கொள் ராக வேந்த்ரர் சிவன் முத்தி புரமே சென்றார் 1

பிட்டுக்கு மண்சு மந்தான் பிரம்படி பட்டான் மேன்மை
விட்டுநல் விறகை விற்றான் விளையாட்டை விரும்பியேதான்
கட்டுடன் நடக்க வேயிக் காசினி மக்கள் போற்ற
நட்டமே யாடு மேலோன் நண்ணினான் மதுரை என்னே 2

அத்தகு பெருமை வாய்ந்த தவனியில் மதுரை யாகும்
மெய்த்தகு வேத நூலோர் மேன்மையாங் கல்வியாளர்
உத்தம சங்கந் தன்னால் ஒண்டமிழ் வளர்த்த மூதூர்
இத்தரை போற்ற ராக வேந்திரர் இனிதின் வந்தார். 3

திருமிகு நூல்கள் போற்றும் சீலமே கொண்டன் னானில்
திருமலை நாயக்கர்தாம் சிறப்புடன் ஆண்டு வந்தார்
பெருமையாய் உடைய நூலின் பெற்றிமை தனைய றிந்தே
அருமையாய் உடைய சான்றோர் அவர்களை மதித்து வாழ்ந்தான் 4

அப்பைய தீட்சர் வாழ்ந்தார் அவருடைப் பேர னான
ஒப்பிலா தீட்ச ராக உயர்நீல கண்ட தீட்சர்
இப்புவி சிறக்க வாழ்ந்தார் இயற்றிய நூல்கள் போற்ற
அப்பொழு தாண்ட அரசின் ஆத்தான கவிஞ ரானார். 5

இப்புவி மக்கள் போற்றும் எழில்மிகு ராக வேந்த்ரர்
ஒப்பிலா குருவாம் என்னே உயர்த்தியிம் மதுரை வந்தார்
செப்பிடுஞ் சங்கு மேலாம் திண்டிதுந் துபிமுழங்க
அப்பொழு தவர்க்கு மன்னன் மரியாதை யளித்தே ஏற்றான் 6

அரசவைக் கவிஞர் நீல கண்டரைக் கண்டு வாதம்
பரசுதற் கரிய பாங்கின் பகருமீ மாம்சம் எல்லாம்
உரைசெய்தார் ராக வேந்த்ரர் உரையினைக் கேட்ட தீட்சர்
திறமதைக் குறித்துப் போற்றத் திருவுடை யரசன் கேட்டான் 7

அட்டதிக் கயங்கள் போன்றே யறிவினில் வலிமை மிக்கார்
இட்டசித் திகளை யீயும் இயல்பினின் முனிவ ராவார்
பட்ட சங்கரக மென் று பகர்நூலை ராக வேந்த்ரர்
எட்டுதிக் குள்ளோர் போற் று மியல்பினில் இயற்றித் தந்தார் 8

அரசவைக் கவிஞர் மற் றும் அறிவுடைச் சான்றோ ரெல்லாம்
உரைசெய்தார் அந்த நூலின் உரையினைக் கண்டு தேறார்
பரசுதற் கரிய நூலே பட்டசங் கரக மென்றே
அரசனே வியந்தான் என்னே ஆத்தான கவிஞர் முன்னே 9

மட்டிலா மகிழ்ச்சி கொண்டே மன்னனும் மதித்து நூலை
நட்டமே யாடு நாதன் நன்னகர் மதுரைக் கண்ணே
பட்டத்து யானை மீது பட்டசங் கரகம் ஏற்றி
எட்டுதிக் குள்ளோர் போற்ற எழில்மிகு விழாவெடுத்தான் 10

பக்தியால் மதுரை மக்கள் பரவச மடைந்தார் மன்னன்
சக்தியே பெற்றார் ராக வேந்திரர் சகத்தில் மேலோர்
பக்தியா லொப்பற்ற ஒண்ணா உயர்ந்திடு நூலைப் போற்றித்
தக்கதாம் பெருமை செய்தான் தரணியே போற்றிற் றம்மா ! 11

அக்கணம் மதுரையின் கண் ஆலயத் தரிசனத்தில்
ஒக்கவே யிருந்தான் மன்னன் உயர்திரு ராக வேந்த்ரர்
மிக்கதாந் தெய்வந் தன்னை மேன்மையாம் வழிபாட்டின் கண்
நெக்குநெக் குருக நெஞ்சம் நிமலனை வணங்கி னாரே 12

ஆக பாடல் தொகை – 1174

## சாதுர் மாத விரதப் படலம்

சதுர்முகன் படைத்த தூய சகமது பெருமை பெற்றே
சதுர் யுகங் கொண்டே வாழுந் தன்மைய துடைய தாகிச்
சதுர் வேதந் தோன்ற மேலோர் சந்ததம் வாழ வேண்டி
சதுர் மாத விரதங் கண்டார் சகந்தனில் பெருமை கொண்டார் 1

பரத கண்டத்தில் வாழும் பண்புடை முனிவ ராவார்
சரதமே கொண்டு வாழ்ந்தார் சனகாதி முனிவர் போன்றே
விரதமே கொண்டு வாழும் விமலனாம் ராக வேந்த்ரர்
தரமது கண்டார் தொட்டத் தேவரே பணிந்தார் தாளை 2

அஞ்சன நிறத்தான் தன்னை யனுதினம் ராக வேந்த்ரர்
நெஞ்சிலே நிறுத்தி யன்னார் நியமமு மியற்ற லானார்
நஞ்சன்கூ டென்னும் ஊரில் நலமுடன் உலக மெல்லாம்
விஞ்சிடும் வகையில் மன்னன் வரவேற்பு வழங்கினானே 3

கன்னட நாட்ட தாகும் கனதன மைசூ ரைத்தான்
நன்னய முடைய தொட்ட தேவரே நாட்டை யாண்டார்
அன்னதாங் காலந் தன்னில் அரசரே ஞானியர் பால்
நன்மையாய் நாடு வாழ நல்லடி பணிந்து நிற்பார் 4

தன்னுடை நாடே வந்தார் தனிப்பெரு ராக வேந்த்ரர்
உன்னத மான மேலோர் உயர்குரு வான தாலே
பன்னலம் பெற்றே யிந்த பாரதம் சிறக்க வேண்டி
அன்னவர் தாள் பணிந்தார் அரசராம் தொட்ட தேவர் 5

முன்னதாம் விபுதேந் த்ரரும் முழுதருள் விஜயீந்த்ரரும்
கன்னட நாடாம் மைசூர் கருணையால் தங்கிச் சென்றார்
நன்னய முடைய தங்கள் நல்லடி பட்ட தாலே
என்னுடை ராச்சி யந்தான் ஏற்றமே பெற்ற தம்மா ! 6

ஆதலின் தங்கள் அன்பின் அடையாள மாக நாங்கள்
காதலின் ஏற்கின் றோமால் கருணையே கொண்டு மக்கள்
சாதலின் துன்பம் நீங்க சதுர்மாத விரதங் கொண்டே
போதர வேண்டு மென் று பொன்னடி யிரண்டும் பூண்டான் 7

சிறந்த மை சூரில் உள்ள சீரங்க பட்டணந்தான்
சிறந்திடு நகராய் அப்போ திகழ்ந்தவந் நகரின் கண்ணே
சிறந்திட சாதுர் மாத விரதமே செய்ய வேண்டி
சிறந்தநல் ராக வேந்த்ரர் திருவடி வணங்கினாரே 8

புகழ்பெற்ற ராக வேந்த்ரர் புரிந்திடும் விரதந்தன்னை
இகபர சுகமே மக்கள் எய்திபூ ரணை நாளின்கண்
பகலிலே நடுவா னின்கண் பகலவன் இருக்கும் போது
அகத்திடத் தரியை எண்ணி யவர்பூசை தொடங்கினாரே 9

சதுர்மாத விரதங் கொண்டார் சதுரராம் ராக வேந்த்ரர்
அதுபோது ஒருநா ளானும் அகத்திடத் தரியை யெண்ணி
இது நல்ல தருணம் என்றே வணங்கிநல் விரதங் கொண்டால்
அதன்பய னவனே யந்தண் தன்மையை யடைவ னாவான் 10

வேதமுங் கற்றோன் கல்வி விற்பன னாவான் தேர்ந்த
கீதையின் பொருளு ணர்ந்த கீர்த்தியை யுடையோ னாவான்
போதனை சாற்றற் கேற்ற போதமே பெற்று பற்றின்
வாதனை யற்றோ னாகி வையத்தின் வாழ்வன் நன்கே 11

உரை செயற் கரிய மேலோன் உளமது மகிழ்ச்சி கொள்ள
அரசனின் விருப்பங் கேட்டார் அன்புடன் ராக வேந்த்ரர்
அரண்மனை மண்ட பத்தில் அவரின்நன் பூசை செய்து
விரதமே முடித்தார் சாதுர் மாதத்தை விருப்பினோடு 12

தேவரே ராக வேந்த்ரர் செகமது தெரிய வேண்டி
தேவராஜ் புரமே ஆன சிறப்பமை கிராமந் தன்னை
தேவராம் ராக வேந்த்ரர் திருவுளம் மகிழத் தந்தார்
தேவென விளங்கும் மூல ராமர்க்குத் தொட்ட தேவர் 13

அலங்காரப் பொருள்கள் ஈந்தார் அருமையா பரண மெல்லாம்
துலங்கிட ஈந்தார் ராக வேந்திரர் தூய்மை கண்டே
நலங்கொளு நகரே யென்று நானிலம் வியந்து போற்றுந்
தலமதை நாடி சித்தல் துர்க்கத்தின் செலவைக் கொண்டார். 14

ஆக பாடல் தொகை – 1188

## முடவனுக்கு முத்தியளித்த படலம்

சித்தல் துர்க்கத்தின் கண்ணே சிறந்திட ராக வேந்த்ரர்
உத்தம சீடர் தம்முள் உடலூனம் கொண்டே வாழ்வான்
இத்தரை மக்கள் போற்றும் இயல்பினன் உள்ளங் கொண்டோன்
பத்திமை கொண்ட அன்னான் பத்திமை போற்றும் நாடே 1

சீடரே யநேகர் வந்தார் சிறந்திடும் சித்தல் துர்க்கம்
வாடலி லாதஉள்ள வளமைதா னுடைய னாகி
ஈடிணையில்லா ஞானி என்றுமே ராக வேந்த்ரர்
நாடியே ஓர்நாள் அன்னான் நல்வினை யுரைக்க லுற்றான் 2

மடத்தினில் நீர்சு மந்தேன் மதியிலேன் வாழுகின்றேன்
திடமுடை யுடல்பெற் றேனா தீயனேன் வினையினாலே
முடவனாய் பிறந்து விட்டேன் முயற்சியே சிறிது மில்லேன்
படவேண்டாம் பிறவித் துன்பம் பகர்ந்தனன் பரிவினோடு 3

முத்தியை யளிக்க வல்ல முனிவராய் உணருகின்றேன்
இத்தரை வாழ்வெ னக்கு இன்னலே யான தாலே
சித்தத்தே பற்று யில்லேன் சிறந்தவர் நீங்கள் தானே
முத்தியை யளித்தே யென்றன் முன்வினை தீர்ப்பீர் என்றான் 4

உடனுறை சீடரெல்லாம் உரைத்தவா சகங்கள் கேட்டே
நடவாது கேட்டான் என்றே நக்கலே செய்யக் கண்டார்
திடமுடை ராக வேந்த்ரர் திருவருள் காட்ட வேண்டின்
நடந்திட வேண்டும் என்றன் நடைமுறைப் படியே யென்றார் 5

அப்படி யானால் சாமி அதுயென்னால் முடியும் என்றே
ஒப்புதல் தந்தான் அன்னான் உறுதியை யடைய வேண்டி
இப்பொரு சித்தல் துர்க்கத் தியல்பமை யக்னி குண்டம்
செப்பிய படியே சீடர் சிறப்புடன் அமைத்துச் செய்தார் 6

படியினில் மிக்க தாகும் பதந்தனை யடைய வேண்டின்
விடியுமுன் சந்த்யா வந்தனந்தனைச் செய்து நீதான்
மடியுடன் வரவே வேண்டும் மாண்பமை முனிவர் சொன்னார்
அடியவன் வந்தே யன்னார் அடியினில் வணங்கி வீழ்ந்தான் 7

தஞ்சமாய் அன்னார் காலில் தண்டமே செய்த காலை
பஞ்சகவ் வியமே தந்தார் பரிவினின் சீடர் தானும்
எஞ்சிடா வகையி லேந்தி யினிதுடன் அருந்த நெஞ்சம்
மஞ்செனக் குளிர்ந்த தென்னே மழைமுகில் வண்ணன் வந்தான் 8

வேதியர் கூடி யக்னி குண்டத்தை வளர்த்து விட்டார்
சேதியைக் கேட்ட மக்கள் சேர்ந்தனர் உடனிருந்தார்
ஓதினார் மூல மந்த்ரம் உயர்ந்தோனா யாக அன்னான்
காதினில் உரைத்தார் ராக வேந்திரர் கடமை யாற்ற 9

மும்முறை வலம் வந்தானம் முடவனும் அக்னி குண்டம்
தம்மையே வணங்க வந்தான் தாளினை வணங்கு மக்னி
வெம்மையே காணான் என்னே வியப்பினைக் கண்டே யன்னான்
செம்மையாம் அக்னி குண்டம் சேர்ந்தனன் செம்மை யானான் 10

ஆனாலும் அருகி ருந்தோர் அநியாயம் என்றே சொன்னார்
காணாத உலகிற் போதல் கண்டது எவரோ சொல்வீர்
வீணான செயலால் அன்னான் வெந்துமே சாம்ப லானான்
போனானே முடவன் என்றே புலம்புதல் செய்ய லானார் 11

ஒக்கவே மக்களெல்லாம் உள்ளத்தின் ஐயம் உற்றார்
இக்கணத் தெரிந்தே போனான் என்றனர் ராக வேந்த்ரர்
பக்தனே கேட்டான் முக்தி பரிவினால் அளித்து விட்டேன்
தக்கவ னானான் உள்ளத் தகுதியும் அறிந்த ளித்தேன் 12

உய்வகை யறிந்தே யன்னான் உறுதியைக் கண்டு தேர்ந்தேன்
செய்வகை யறிந்த ளித்தேன் சேர்கதி யடைவதற்குப்
பொய்வகை கூறேன் பக்தன் போகின்றான் தெய்வ லோகம்
மெய்வகை விமான மேறும் மேன்மையைக் கேட்பீர் என்றார் 13

என்றதும் ராக வேந்த்ரர் இருந்தவம் மக்க ளெல்லாம்
அன்றவன் சேர்க திக்கே அமைதியா யிருந்த போது
சென்றது விமானம் மேலே சிறந்திடு மணியி னோசை
நன்றென ஒலித்த தம்மா ! நானிலத் துள்ளோர் கேட்டார். 14

எங்களின் அறியா மையால் ஏதேதோ பேசி விட்டோம்
தங்களின் சக்தி யைத்தான் தரணியே யறிய வில்லை
உங்களின் ஆசி தன்னால் உய்விக்க வேண்டு மென்றே
அங்கவர் தாள்ப ணிந்தே ஆசியைப் பெற்றார் மக்கள். 15

ஆக பாடல் தொகை – 1203

## வாதுவெல் படலம்

மதுரைமா நகரி ருந்தே மக்களுக் காசி கூறி
இது நல்ல தருணம் மன்னன் இடத்தினில் விடையைப் பெற்றே
சதுர்வேதங் கற்ற ராக வேந்திரர் சீடர் தம்மால்
நதிசூழ் சீரங்கம் சென்றார் நலம்பெறும் நகரம் என்றே 1

ஒரு நாம மில்லா தோர்க்கே யாயிரமாக வேதான்
திருநாம மென்றே கூறி திருவடி போற்றி செய்தே
பெருநாமக் கல்லே சென்றார் பெருமையாம் ராகவேந்த்ரர்
அருநாம நரசிம்மர்தம் அமிர்தவல் லியைநி னைந்தே 2

மணங்கொளு மலரே கொண்டு மனத்தினி லன்பு பொங்க
வணங்கினார் ராக வேந்த்ரர் வருஞ்சீடர் தாமுஞ்சென்றே
வணங்கினார் பக்தி கண்டு வழங்கினார் ஆசி தன்னை
இணங்கினார் வேலூர்செல்ல வியல்பினின் சீடர் தாமும் 3

வெங்கட பதிராயர்தாம் வேலூரில் விசய மென்னும்
அங்ஙனே ராம தேவ ராயரும் நகரை யாண்டார்
பொங்குபேரன் பினோடும் புகழவே புலவர் தாமும்
பங்கேற்றார் வீர பட்டர் பைரவர் சபையின் கண்ணே 4

எங்களின் நாடே வந்தீர் என்மனம் மகிழ்ச்சி கொள்ளத்
தங்களுஞ் சிலருஞ் சேர்ந்தே தருக்கமே நடத்த வேண்டித்
தங்களின் விருப்பங் கேட்கத் தாழ்கின்றேன் அருள்வீர் என்ன
அங்கவன் அரசன் என்றே ராகவர் அனுமதித்தார் 5

காண்டகு விருப்பி னோடு கல்வியில் ராக வேந்த்ரர்
ஆண்டகை யென்ன வாழ்ந்தார் அவருடன் வாதம் செய்ய
தூண்டினார் அரசர் என்னே தூயோரைத் தொழுது சொன்னார்
ஆண்டவன் சேர்ந்தும் ஆன்மா விரண்டல்ல ஒன்றே என்றார் 6

செம்பினால் சிலையைச் செய்தே தெய்வமாய் வணங்குகின்றோம்
செம்பே யத்தெய்வம் என்றே தெரிந்திலர் செகத்தில் உள்ளோர்
நம்மிடம் இறைவ னுள்ளான் நாமதை யுணரு கின்றோம்
அம்மவத் தன்மை யாலே யவன் தெய்வ மாவனோ சொல் 7

சிலையினில் தெய்வத் தன்மை செதுக்கினான் சிற்பி யாவான்
அலைவுறா மக்களெல்லாம் அதனிடந் தத்துவத்தை
நிலைபெறச் செய்தார் மேலோர் நிமலனின் வடிவு கண்டால்
அலைகட லுலகஞ் சூழின் அனைத்துமே யாகு மன்றோ 8

நானேநீ யாக வுள்ளேன் நலமுடை வார்த்தை தன்னால்
நானேதான் செய்வ மென்றல் நல்லறி வதனா லாமோ?
மானேநற் றேனே என்று மங்கையைச் சொல்வ தேபோல்
தானேதன் அறிவு கெட்டுத் தான் தரும் விளக்கம் என்றார் 9

செம்பினும் உள்ளான் என்றே செம்பெலாந் தெய்வ மாமோ
நம்முயிர் தனில வன்றான் நனிமறைந் திருக்கின் றானால்
அம்புவி யுள்ளோ ரெல்லாம் அதனை நன் குணர வில்லை
நம்புவ தெங்ஙன் சொல்வீர் நான் பிரம்மம் என்பதெல்லாம் 10

சிலையினில் தெய்வம் ஏற்றிச் சிறந்திடும் கோயில் வைத்தார்
மலைவிலா துலகோர் அந்த மகத்துவங் கண்டு தேர்ந்தார்
சிலையினில் இருப்பா னென்றே சிலையெலாம் வணங்கவில்லை
கலையெலாங் கற்றுத் தேர்ந்துங் கண்மூடி வழக்கம் ஏனோ? 11

கூட்டினைக் கட்டி யேயோர் குளவியும் புழுவெடுத்தே
கூட்டினில் இருந்தே பல்கால் கொட்டிடுந் தன்மை யாலே
கூட்டினுள் புழுவொன் றேதான் குளவியாய் மாறுமல்லால்
கூட்டினுள் துன்பம் எய்தாப் புழுவெங்ஙன் குளவி யாகும் 12

தாரக மந்தி ரத்தைத் தனித்த நற் குருவே யோத
நீரதன் பெருமை யோர்ந்தால் நீணிலத் துயர்வீர் மேலாம்
பாரதந் தனில்பல் லோர்தாம் பரமனே யானா ரென்ற
காரணத் துயிர்தாம் மேலாங் கடவுளென் றுரைக் கலாமோ 13

தத்துவ மசியின் ஆகுந தத்துவம் உணர வேண்டும்
இத்தரை நானீ யாக விருப்பனென் றுரைத்தார் யாரே
சித்தத்தே தெளிவு பெற்றார் சிவனவன் ஆனான் என்றே
இத்தரை மக்கள் சீவன் எல்லாமே சிவம தாமோ? 14

புழுவொன்றே குளவி யானப் புதுமையைக் கண்டதாலே
புழு வெல்லாங் குளவி யென்றே புகலுதல் பொருந்து மோதான்
புழுவென் றுங் குளவி யென் றும் பொருள் வேறு காணுமா போல்
புழுப் போன்ற சீவன் வேறே புரிந்திடின் சிவனும் வேறே 15

நானீயே யென்ற தாலே நானுநீ யென்ப தல்லால்
தானென்றே யென்று கூறல் தருக்கத் திற்கேலா தென்றார்
ஞானவா னென்றே பூமி ராகவேந்திரரைப் போற்றத்
தானவர் தாள்பணிந்தே தயையினைப் பெற்றான் மன்னன் 16

அரசவைக் கவிஞர் மன்னர் அவையுளோர் கூடி யனனார்
உரைசெயற் கரிய ராக வேந்திரர் ஒண்மலர்த்தாள்
பரசுதல் செய்த வண்ணம் பணிந்தனர் பரம யோகி
அரசனின் அரசா யாங்கே யளித்தனர் ஆசி தன்னை. 17

**ஆக பாடல் தொகை – 1220**

## ஸ்ரீஇராக வேந்த்ரர் விசயப் படலம்

சத் துவ குணமே மிக்குத் தரணியே வாழ்வ தற்கு
மத் துவச் சீடனாக மகிதலம் போற்ற வந்தத்
தத் துவச் சீலன் ராக வேந்திரர் போற்ற வேண்டி
உத்தமக் கவியாய்ப் பாரில் நாரணச் சாரி வந்தார் 1

தமக்கென வாழா மேலோர் தண்ணளி ராக வேந்த்ரர்
தமக்கையின் மைந்த ராவார் தம்காலம் வாழ்ந்தோ ராவார்
நமக் கெலாம் அறிவித்தற்கே நாரணச் சார்யர் என்றே
சமஃகிருத மொழியின் மூலம் சாற் றுவர் சரி தம் தன்னை 2

மத் துவர் தோன் ற மேலாம் மத் துவ விசயம் வந்தே
தத் துவ விளக்கந் தந் து தரணியே சிறந்த தம்மா!
சத் துவ குணத்த னாகத்தரணியே வாழ வந்தார்
உத்தம ராக வேந்த்ரர் உயர்கவி தோற்றஞ் செய்தார் 3

மாகமேல் மழையே போன் று மகிதலம் சிறக்க வேண்டி
ராகவர் தோற்றஞ் செய்தார் நானிலஞ் சிறந்த தென்னே
ஆகமப் பொருளை யெல்லாம் அவனிக்கே யளித் து வாழ்ந்தார்
ராகவேந்திரரின் நல்ல விசயமே செய்ய லானார் 4

சருக்கமே பத் துச் செய்தார் சரித்திரம் படைத்த மேலோன்
சுருக்கமாக் கூறும் தூய சூக்குமம் அறிந்தே ஞானி
இருக்கின் ற காலத் தன்னான் உடன் வாழ்ந்த புலவர் ஆவார்
உருக்கொள உளத்தில் தோன்றும் உயர்ந்த நூல் செய்தார் நன்றே 5

கடவுளின் வணக்கம் ஒன்றில் கனித்திட்டார் இரண்டினாலே
நடைமுறை மத்வர் வாழ்க்கை நகர்வரலாறு ரைத்தார்
உடன் மூன்றாஞ் சருக்காத் தாலே உயர்முனி கௌத மர்தம்
இடமதாய் ராக வேந்த்ரர் இயல்தோற்றம் எழுதினாரே. 6

அத்யாயம் நான்கி னாலே ஆம்பல மணமு ரைத்தார்
இத்தரை ராக வேந்த்ரர் இயல்மணம் ஐந்தின் கண்ணே
புத்தமு தென்ன வாறில் புகன்றனர் துறவறத்தை
தத்துவன் தலயாத் ரைதான் தந்தனன் எழில் நன்கே 7

ஏழொடே எட்டுந் தந்தார் எழில்தல யாத்திரை தான்
வாழு நற்கடமை யெல்லாம் வகுத்தனர் ஒன்ப தின்கண்
தாழ் விலா துலகே நல்ல தன்மையை யடைய வேண்டி
ஆழ்ந்த நல்ஞானம் ப்ருந்தா வனமது பத்த தாமே 8

நூலறி புலவன் வாழ்வான் நூலகம் வாழும் என்றும்
வாலறி வினனாய் வாழ்வான் வையத்து மக்கள் போற்ற
தாலறி விக்கும் மேலாந் தனிப் பெரு நூலின் மூலம்
மாலறி வுடையோர் தாமும் மதிநுட்பம் அடைவர் நன்கே. 9

## மாணவர் மயக்கறு படலம்

மாணவர் வழக்கம் போன்றே மடத்தினில் பாடங் கேட்டார்
ஞானவா னென்னே ராக வேந்திரர் அருளு கின்றார்
மோனமா நிலையி ருந்தே முத்தியையளிக்க வல்லார்
போனமுன் ஜன் மன் தன்னைப் புரிந்திட்டார் புவியின் மீதே 10

அன்றாடம் தமது சீடர் ஐயத்தைப் போக்கி வந்தார்
இன்றுநம் பாடம் எல்லாம் எதிரினில் மரத்தின் கண்ணே
சென்றுமே மரத்தின் கீழே சிறந்திட உரைப்போம் என்ன
நன்றென அவர்கள் எல்லாம் நனியமர்ந்திருக்க லானார். 11

கேரள சோதிடத்தார் கிளர்த்திட்ட கணக்குக் கொண்டே
ஓரள வறிமோ மென்றே உயர்ந்தவச் சீடரெல்லாம்
பேரள வாக என்னே பிழையற நாமும் அன்னார்
சீருள சாத கத்தின் சிறப்பினை யறிவோ மென்றார் 12

சோதிடங் கற்றச் சீடர் சுவாமியின் ஆயுட் காலம்
சோதித்துப் பார்ப்போம் என்றே சோதிக்கச் சுவாமி யாங்கே
ஆதித்தன் போலே வந்தார் அவர்களைக் கண்டார் நீங்கள்
வாதித்தே யறிந்த வுங்கள் விடைதானும் யாதோ வென்றார் 13

இப்படிக் கேட்டுக் கொண்டே சுவாமியும் எழுந்து நின்றார்
ஒப்பிலா ராகவேந்த்ரர் உயர்ந்தவச் சீடர் தாமும்
அப்படி யவர்க ளெல்லாம் அங்கனே எழுந்து நின்றார்
அப்போது ராக வேந்த்ரர் அவர் மார்பில் துளவ மாலை 14

விளங்கிட விழுந்த தென்னே விண்ணினின் றந்த மாலை
துளங்கிட கழுத்தில் தூய துளசியின் மாலை தானும்
அலங்கலாய் விழுந்த தென்னே யனைவரும் அதிசயித்தார்
நலங்கொளப் பார்த்தா ராங்கே நடந்ததோர் அதிச யந்தான். 15

ஆங்கொரு மகானே நின்றார் அனைவரும் அவரைக் கண்டார்
ஓங்கிய கரமு யர்த்தி உயரிரு விரலை நீட்டித்
தாங்குறிப் புணர்த்த வேண்டித் தகுமூன் றுமுறைய சைத்தே
பாங்குடன் ராக வேந்த்ரர் தன்னையே பார்த்துச் சென்றார் 16

ஆங்கவர் யாரோ வென்ன வனைவரும் அயர்க்க வப்போ
நீங்களும் நிமலன் கண்டீர் கிருட்டின த்வைபாய்னர் தாம்
தீங்கிலாத் தேவர் தாமே சிறந்திட விமானம் மூலம்
ஆங்கவர் அழைத்துச் சென்றார் அவரெம்மை யுணரச் சென்றார் 17

## வேறு

இன்னம் இரண்டான் டுடனிரு மாத நாள்
உன்னும் படியவர் உணர்த்திச் சென்றனர்
பன்னும் பிருந்தா வனமிப் பாரினில்
எண்ணும் படியே எனக்குரைத் தாரவர் 18

## வேறு

ஆசைதான் துன்பம் எல்லாம் அளிக்கின்ற வென்றே சொன்னீர்
ஆசைதான் இல்லை யென்றால் அகிலமும் நடக்கு மோதான்
ஆசைதான் விடுதல் எங்ஙன்? அவனியும் நடத்தல் எங்ஙன்?
ஆசையாய் கேட்க லுற்றான் ஆசானே யறைய லுற்றார் 19

யானென் றும் எனதே யென் றும் அகப்புறப் பற் றுக் கொண்டே
வானென் றும் நெறி மறந்தார் வையத்துத் துன்பம் உற்றார்
கோ னென் றுங் குடிக ளென் றுங் கொண்டிட்ட உலகந் தன்னில்
தானென்ற தன்மையாலே தன்னலத் தாலே துன்பம் 20

ஆகவே யறிவொன் றேதான் அல்லலைத் தீர்க்கு நன்றே
சோகமே யதனா லாமோ சுகமுமே அடைவாய் நாளும்
சாகாமல் வரமும் பெற்றால் சந்ததம் வாழ லாகுந்
தேகமுஞ் சுகமும் பாரின் திறமெல்லாம் அறிவொன் றாலே 21

அறிவொன்றே, இன்பங்காண ஆதர மாகும் உண்மை
தெரிந்திட வேண்டுநீயுந் தீநெறி செல்லல் ஆகா
பரிவினால் கூறுகின்றேன் பாரினில் மனிதர் கொண்ட
உரிமைதான் கொண்டே மக்கள் உற்றனர் துன்பம் எல்லாம் 22

செல்வமும் நிலையா யாக்கை சகத்தினில் நிலையா யென்றும்
நல்லெழில் தானும் இங்கே நலம்பெறா கழியுங் கண்டீர்
மல்லல்மா ஞாலத் துன்றன் மாபெரும் வாழ்வும் உண்டோ
அல்லலே யுறுவாய் என்னே ஆகுந்தன் னலமொன் றாலே 23

தன்னலம் ஓங்க ஆங்கே தமையனும் வேறே யாவான்
உன்னிடின் தாரம் வேறே உணர்ந்திடின் தமையன் வேறே
பன்னிடில் பெற்றோர் வேறே பண்பிலா மக்களாவார்
அன்னதன் மையதைக் கொண்டால் அவனியே யல்லல் அம்மா 24

பொதுநலம் என்றே கூறின் குடும்பமும் பொதுவே யாகும்
மதிகெடார் மக்கள் எல்லாம் மனிதரை மதிப்பார் யாரும்
விதியினை மாற்ற வேண்டும் வேற்றுமை ஒழிய வேண்டும்
சதிசெயுந் துன்பங் கொண்ட தன்னலம் ஒழிய வேண்டும் 25

பொதுநலம் என்றால் ஓரூர் எல்லாமே பொதுவதாகும்
அதனாலே நன்மை யுண்டாம் அல்லலில் வாழ்வு முண்டாம்
இதுநாள் நாம் முன்னோர் சொன்ன ஏற்றத்தை யுணரவில்லை
விதி செய்வோம் நாமே வாழும் வகையினை வகுத்துக் கொள்வோம். 26

மனங்கொண்ட மக்கள் வாழ்வு மகத்துவம் கொண்ட வாழ்வு
தனையெண்ணா விலங்கின் வாழ்வு தரங்கெட்ட வாழ்வே யாகும்
உனை நீயும் உணர வேண்டும் உலகுய்ய வாழ வேண்டும்
பினைநாமுஞ் சென்ற பின்னே பெருமையே சேர வேண்டும் 27

அப்பத்தைக் குரங்கு பங்கு போடலை நன்கு கண்டாய்
ஒப்பமே செய்ய வேண்டி ஒவ்வொரு நாளுந் தூண்டி
கப்பமே கட்டு கின்றார் காவலர்க் கென்றே நாளும்
தப்பென்றே தெரியவில்லை தன்னலம் மிகுந்த தாலே 28

உடன்பிறந் தவருள் சண்டை உற்றாரோ டவருள் சண்டை
மடமையால் இனத்த ரோடும் மற்றுவென் ஊராரோடும்
நடத்தையால் நாட்டா ரோடும் நாளுமே சண்டை செய்வார்
கடமையை யோரார் என்னே காசினி தனில் வாழ் வாரோ 29

பொருளினைத் தேடி யுன்றன் பிள்ளைக்கே வைக்கின்றாய் நீ
பொருளினைத் தேட வேண்டி புதுப்புது வழியைக் கண்டாய்
பொருளினைப் பெற்றும் உன்னைப் பொருட்டாக மதிக்கவில்லை
பொறுப்பினை யிழந்தே உன்றன் பொருளாலே புகழ்தான் இல்லை 30

தானொரு தொழிலைக் கல்லான் தனை நாடி வருவோர்க் கண்டால்
தா னென்ற கர்வங் கொண்டே தகுதியை யறிய மாட்டான்
வானொன் றும் மார்க்கங் கல்லான் வையத் துப் பொருளை யெண்ணி
யானென்ற மமதை யாலே யிரக்கமே யின்றி வாழ்வான் 31

உலகியல் கற்க வேண்டும் உண்மையை யுணர வேண்டும்
அலகிலா யுயிர்கள் வாழ்வும் அகிலத் து மனிதன் வாழ்வும்
பலமுறை யெண்ணிப் பார்த்தால் பயன்பெறு வாழ்வைக் கொள்வாய்
சிலபேர்கள் சிந்தித் தார்கள் சீரிய வாழ்வைக் கொண்டார் 32

விலங்குகள் பறவை மற் றும் வேறுள உயிர்களெல்லாம்
நலம்பெற வாழ்வ தற்கே யாரையும் நாட வேண்டா
தலமதில் மனிதர் தாமுந் தனியாக வாழ லாமோ
நிலைமையை நீயும் நேர்ந்தால் நிச்சயம் வழி பிறக்கும் 33

வாழ்வதற் காக வந்தோம் வையத்தில் உயிர்க ளெல்லாம்
வாழ்வதே நோக்கங் கொண்டவ் வையத் து வினையுமுண்டோ
வாழ்வதே நோக்க மென்றே வல்வினை செய்தல் நன்றோ
ஊழ்வினை யுன்னை வந்தே யுறுத்திடின் யாது செய்வாய் 34

மக்களே வாழ வேண்டி மனதினில் எண்ணங் கொண்டங்
கக்கணம் மனந்தான் என்னே யகலமா யாகுங் கண்டாய்
சிக்கனம் என்றே சொல்லிச் சீரிலாப் பொருளைத் தேடி
தக்கநல் லறிவு கெட் டுத் தரணியில் அழிய லாமோ? 35

நீயென்றும் வாழ வேண்டும் நின்பினே தோன்றுமந்த
சேயென்றும் வாழ வேண்டும் செகத்துளோர் இன்பங் கொண்டே
தாயென உலகைத் தாங்குந் தண்ணருள் உடைய ராகின்
தீ யன செய்யாய் பாரே தேவு வாழ் நாடதாகும் 36

வாழுநன் முறையை யோர்ந்தார் வள்ளுவர் வகுத்து ரைத்தார்
தாழ்வினி நீங்கி நாளுந் தரணியே வாழுதற்கே
ஊழியில் முறையை யோர்ந்தே வுண்மையை யெடுத்து ரைத்தார்
பாழியில் கற்றார் பாரோர் படித்ததன் பயனுண்டாமோ? 37

உழைத்துத்தான் வாழ வேண்டும் உறுதியை நாடவேண்டும்
இழைத்திடுந் தீமை தன்னால் எய்திடும்பொருளும் ஆகா
தழைத்திடும் உயிர்கட் கெல்லாந் தண்ணளி சுரக்க வேண்டும்
பிழைத்திடும் வழியை ஓர்வாய் பிழை செய்யும் மனமுமேனோ? 38

பணமென்ற வொன்றினாலே பாரினில் மக்களெல்லாம்
வினைசெய்வ ராகி விட்டார் வினையினால் பணத்தைத் தேடி
தனையுண்ணும் வழியை யோரார் தரித்திர நிலையை நாடார்
எனைத்தானும் உழைக்க மாட்டார் எத்தராய் வாழ்வர் பாரில் 39

திருடுபொய் சூது வஞ்சம் தினமுமே மனத்திற் கொண்டு
பெருகிடும் பணமே பெற்றுப் பெருமையாய் உலகில் வாழ
அருகிடும் மனமேயானால் அதனால் நல் வாழ்வுண்டாமோ
தெரிந்திட வேண்டும் யானுந் தீவினை யகற்றல் எங்ஙன்? 40

உழைக்காமல் உலகில் வாழும் உறுதியை நாடிவிட்டார்
பிழைக்கவே வழியைக் கண்டார் பெருமையாய் மக்கள் போற்ற
வழக்குகள் செய்ய லானார் வான்பொருள் தேடி விட்டால்
இழுக்குண்டோ பொருளைச் சேர்த்தே என்றென்றும் வாழ்வோ மென்பர் 41

ஆசைக்கோர் அளவே யில்லை அதனாலே அகலி டத்தே
காசையே தேடு தற்கே காலங்கள் போதா தெய்வ
பூசையே செய்யார் பொன்னின் பொருளிலே விருப்பங் கொண்டு
நேசமாய் உழைக்கின்றாரே நிச்சயம் உறுதியுண்டோ? 42

பொருளிலார்க் குலகே யில்லை புவியுளோர் புரிந்து விட்டார்
பொருள் பெற்றார்க் கனைத்தும் இந்த பூதல நன்மையேதான்
அருள்ஞானம் பெறுத லாலே அகிலத்து நன்மை யுண்டோ
மருளுமென் னெஞ்சே தாங்கள் மயக்கத்தைப் போக்குவீரே 43

திருடுபொய் வஞ்சம் சூது செய்யாமல் பொருளைத் தேடிப்
பெறும் வழி ஒன்றுண்டானால் பிழைசெயேன் பாரில் என்றும்
மருளுடை மனத்த னானேன் மார்க்கமே யில்லை நல்ல
அருளுளங் கொண்டார்க் கென்றும் ஆகுமோ பொருளே பாரில் 44

புண்ணிய வசத்தினாலே பொருளுமே வந்து சேரும்
அன்னியர் பொருளுக் கென்றும் ஆசையே படலே வேண்டார்
எண்ணிடுங் கடமை யொன்றால் ஏற்றமே பெறுவாய் பாரில்
பண்ணிடுந் தொழிலைத் தேர்ந்தால் பண்பொடு சிறப்பின் வாழ்வாய் 45

உழைக்காமற் பொருளுங் கொண்டால் உயர்வுக்கே வழியும் இல்லை
பிழைக்கவே வழியைக் காணப் பீடில வெண்ண வேண்டா
தழைக்கின்ற மனமுங் கொண்டு தண்ணளி யுடையராகில்
வழக்கில்லையென் றும் பாரில் வான்பொருள் வந்தே சேரும் 46

உழவொடு தொழிலும் அல்லால் உலகினில் பணியைச் செய்வோர்
பழவினை கொண்டே பாரில் பாவமே செய்வராவார்
அழுதிடும் நிலையை யன்னார் அடைவது உறுதியாகும்
பழுதிலா நிலையைப் பார்த்தே பாரினில் வாழ லாகும் 47

உணவுடன் உடையும் உண்டேல் உறங்கவோர் இடமு நன்றாம்
உணவுடன் உடையும் இல்லா உழைக்கின்ற மனிதர் காண்பாய்
பணமெனும் ஒன்றினாலே பாரினில் மாந்தர் செய்யும்
கணக்கிலா வநீதியற்ற காலத்தைக் காண வேண்டும் 48

எப்படி முடியும் என்றே என்றனைக் கேட்க லுற்றாய்
தப்பிலா யெண்ணங் கொண்டால் தர்க்கமே யில்லை வாழ்வில்
ஒப்புயர் வில்லா வாழ்வு உண்டாகும் உறுதியாக
இப்புவி தனிலே வாழ்வாய் ஏற்றமே என்றும் உண்டு 49

கடமையைச் செய்யும் மக்கள் கருத்தினில் வஞ்சம் ஆகா
உடமையை யெண்ணி யன்னார் உழைப்பினை யறிஞ்சல் ஆகா
திடமுடை மனமுங் கொண்டே தீநெறி செலாது வாழ்ந்தால்
இடமுடன் எல்லோருக்கும் வாழ்விலே ஏற்றமுண்டு 50

கூடியே வாழ்ந்தால் கோடி நன்மையே பாரில் உண்டு
நாடியே சொன்னார் முன்னோர் நாமதை நாடினோமா?
தேடிடும் பொருளுக் கென்ற தீவினை மிகவே செய்து
வாடியே யிருக்கின்றீரே வான்வழிச் செல்ல லாமோ? 51

பொன்னுமெய்ப் பொருளுஞ் சேர்ந்தால் புவியினில் இன்ப மாகும்
நன்னய மாக முன்னோர் நலம்பெறச் சொல்லி வைத்தார்
பொன்னையே தேடலுற்றார் புகழாம்மெய்ப் பொருளை நாடார்
என்னே நல் வினையுண்டாமோ ஏற்றமே யடைவரோ சொல் 52

மண்ணினில் வாழ்வு நல்ல மாதரைக் கொண்டதாகும்
அண்ணலின் கருத்தை நாமும் ஆய்ந்திட வேண்டும் பாரில்
எண்ணிடுந் தீமை யில்லாத் தொழிலது தேர்ந்தால் என்றும்
நண்ணிடாப் பாவ மேதான் நானிலத் துன்பம் இல்லை 53

நாடெங்கும் வாழ்வ தாலே கேடொன்றும் இல்லை நாளும்
பாடெனப் பேசும் பாரின் பெருமையைக் கொண்டு வாழ்வாய்
கேடெனும் ஒன்றை நீயுங் கனவிலுங் கருத லாமோ
வீடெனும் முத்தி யுன்றன் வீட்டினை வந்து சேரும். 54

நான்மட்டும் வாழ்வேன் என்ற நச்செண்ணங் கொண்டு விட்டால்
வானொட்டும் வரைக்குந் தீமை காற்றுடன் கலந்தே தோன்றும்
தேன்சொட்டும் வாழ்வு வெல்லாந் தீமையால் அழிந்தே போகும்
யான்மட்டுஞ் சொல்லி யென்னே யினிநீயுஞ் சொல்லவேண்டும் 55

முன்னோர்கள் வாழ்ந்த நல்ல முறைமையைக் கண்டு தேர்வாய்
பின்னோர்கள் என்னே தீய பேராசைக் கொண்டு விட்டார்
உன்னார்கள் என்னே யிந்த வுலகுடை வாழ்வை நன்கு
தன்னார்வந் தன்னால் என்னே தரணியில் பொருளே கொண்டார் 56

அருளிலார் பொருளைக் கொண்டால் அதனாலே பயன் தா னில்லை
அருளையே கொண்டு வாழ்ந்தார் அடைந்தனர் முத்தி வீட்டை
அருளொடு பொருளும் பெற்றார் அவனியில் இன்பம் உற்றார்
அருளிலார் பொருளே பெற்றார் அவனியில் துன்பம் உற்றார். 57

பொருள் கொண்டு வாழ வேண்டும் பூமியை யாள வேண்டும்
மருளுளம் அற்று வாழ்ந்தால் மண்ணினில் நிலைக்க வாழ்வாய்
தெருளுளம் இல்லாய் நீயும் தீநெறி சென்றுவிட்டாய்
குருவருள் துணையை நாடின் குவலயம் சிறக்க வாழ்வாய் 58

நல்லதோர் குருவை மக்கள் நாட்டினில் தேட வேண்டும்
அல்லதாங் குருவால் இந்த அவனியே அழிதல் திண்ணம்
வல்லமை யென்றே மக்கள் வல்வினை செய்வாராகில்
செல்லலே யுறுவர் அன்னார் தீமையால் புகழுங் குன்றும் 59

மாநில வாழ்வில் உள்ள மகத்துவங் கூறக் கேட்பாய்
நானிலந் தனில்நம் வாழ்வு நலம்பெறும் பெற்றோராலே
தீநெ றி செல்லா தென்றுந் திருவருட் டுணையை நாடின்
வானெறி மார்க்கந் தானும் வந்திடுங் குருவினாலே 60

குருவெனு நிலையை யோரார் குவலயத் துன்பந்தீரார்
மருளெனு மார்க்கத் தாலே மண்ணினில் அழிவைக் கொள்வர்
தெருளுறும் ஞானம் உற்றார் திரையுலகு இன்பம் பெற்றார்
அருளுறும் வகையை ஓரார் அல்லலே யாகு நீரார் 61

தன்னைத்தான் அறிந்து விட்டால் தரணியில் என்றும் இன்பம்
தன்னைத்தான் அறியா தோர்க்குத் தரணியே துன்பமாகும்
முன்னைநல் வினையினாலே முன்னோர்கள் ஏற்றங் கொண்டார்
பின்னையோர் பிழையே செய்தார் பிழையினைக் கண்டு தேர்வாய் 62

ஆக காண்டம் நான்கனுக்கு பாடல் தொகை – 1282

## ஸ்ரீஇராகவேந்திர துதி,

வேத நெறி தழைத்தோங்க மிகுதுவைதத் துறைவிளங்க
சீதநெறி நீதமுற கிளர்மத்வ நெறிதுலங்க
மாதவச் சிரேட்டராம் மந்த்ராலய முனிவர்அருள்
பாதமலர் தலைக்கொண்டே அற்புதத்தைப் பாடுவோம் 1

## பட்டமரம் துளிர்த்த படலம்

### வேறு

யாத்திரை கொண்டார் சீர சங்கியில் ராக வேந்த்ரர்
காத்திருந் தேற்றார் மேலாங் கருணையை வேண்டி நாளும்
பார்த்திடு பிராம்ணர் சொன்ன பெருந் துன்பந் தன்னைக் கேட்டே
நேர்த்தியாய்த் தீர்வு காண நின்மலன் மனத்துட் கொண்டார் 2

பாளையக் காரர் தம்மால் படுந்துன்பம் சொல்லொணாதே
வேளைக்கு வேளை யன்னான் வேறுவே றின்னல் செய்தான்
நாளைக்காம் என்று சேர்த்த நற்பொரு ளனைத்துங் கொண்டே
ஆளைக்கண் டதட்டி யன்னான் அநியாயம் செய்யலானான் 3

அந்தணர் நிலம னைத்தும் அவன்தானே யுழுது வந்தான்
மந்திர வேத மெல்லாம் மயக்கென மனத்திற் கொண்டான்
சந்தியா வந்தனம் செய் சம்பிர தாயம் கண்டால்
புந்தியில் கொள்ளான் நாளும் பொய்யெனப் பேசி வந்தான் 4

ஆகமப் பொருள்கள் எல்லாம் அவனுக்குப் புரியவில்லை
ஏகமாய் பொருளை எல்லாம் ஏய்த்துமே வாழலானான்
சோகமே உருவாய் அன்னான் பிழையெலாம் சொல்லலுற்றார்
தேகமே யிளைத்தார் மேலாந் தெய்வத்தை வணங்கும் மேலோர் 5

உங்களின் சோக மெல்லாம் உணர்ந்துதான் நானே வந்தேன்
அங்கவன் துன்பமெல்லாம் அடிபட்டே ஒழிந்து போக
நங்கடன் முடிப்போம் நாடு நனிசிறந் தோங்குமென்றார்
துங்கவன் தாள் பணிந்தே துயரற்றே யிருந்தா ரிப்பால் 6

அடுத்த நாட் காலை தன்னில் அறிவித்தார் ராக வேந்த்ரர்
தொடுத்துளார் யாகந் தன்னைத் தொடங்குவ தென்றே யார்க்கும்
விடுத்துளச் செய்தி கேட்டே வீறுகொள் பாளையத்தான்
கடுத்துமே பேச லானான் கண்டிப்ப தெனவே வந்தான் 7

யாகமே செய்வதாக எனக்குமே சிலருஞ் சொன்னார்
வேகமாய் வந்தேன் உங்கள் வீணான செயலே வேண்டாம்
ஏகமாய் என்சொல் லேதான் ஏற்பவர் இந்த ஊரார்
ஆகவே யாகம் வேண்டாம் அடம்பிடித்தவனே சொன்னான் 8

மந்திரத்தாலே யுலகில் மனிதனும் வாழ்வ துண்டோ
மந்திர வேத மெல்லாம் மதியிலார் செய்வதாகும்
மந்திர த்தாலே பட்டமரமது முளைக்குமோ நும்
மந்திர தந்திரந்தான் மனிதனின் மயக்கம் என்றான் 9

உங்களை மகானே யென்றும் உரைக்கின்றார் ஊரில் உள்ளார்
உங்களின் மந்திர த்தால் ஒருபயன் நாட்டிற் குண்டோ
உங்களின் பிழைப்புக் காக ஊரூராய்ச் சுற்று கின்றீர்
உங்களை மகானே என்று ஒருக்காலும் ஒப்புக் கொள்ளேன் 10

மந்திரந் தன்னால் பாரில் மகத்துவம் உண்டோ கூறீர்
மந்திரம் என்றே சொல்லி மற்றவர் பொருளை யேய்க்கத்
தந்திர மல்லாதென்னே தனியே யோர் சக்தியுண்டோ
சிந்தனை செய்வீர் வேத சிறப்புண்டோ சொல்வீர் என்றான் 11

என்றதும் ராக வேந்த்ரர் ஏறெடுத் தவனைப் பார்த்து
ஒன்றுமே கூறா தானார் ஒருகணம் அமைதி யுற்றார்
நன்றுநான் கேட்டதற்கு நல்லதோர் பதிலே யில்லை
என்றதால் வேதம் பொய்யே என்று நீர் ஒப்புக் கொண்டீர் 12

சொன்னதும் ராக வேந்த்ரர் சொல்கின்றார் வேதம் பற்றி
அன்னவன் அதனைக் கேட்டு அலுத்துப்போம் விளக்கந் தன்னால்
நன்னயம் உண்டோ நாட்டில் நனிமரம் நான்வைத் துள்ளேன்
உன்னுடை வேதந் தன்னால் உயிர்தரக் கூட்டுவாயோ 13

பட்டுப்போம் மரந்தான் பாரில் துளிர்த்ததைப் பார்த்ததில்லை
பட்டுப் போயுள்ள விந்தப் பாழ்மரந் துளிர்க்கு மானால்
கட்டாயம் மந்திரத்தால் கருதிய எண்ணங் கூடும்
இட்டத்தை முடிப்பீரானால் எண்ணத்தை மாற்றிக் கொள்வேன் 14

தவமுடை ராகவேந்த்ரர் தண்ணருள் தனையே யோரான்
அவமதே பேசு கின்ற அவன்முன்னே கட்டை தன்னைப்
பவமது நீங்க பாரில் பரமயோ கியுமே தோண்டி
தவமது சிறக்க வேண்டி தலத்திடத் திருத்தினாரே 15

ஒவ்வொரு நாளும் மூல ராமரைப் பூஜை செய்த
திவ்விய அபிடே கந்நீர் தெளித்துமே வந்தார் சின்னாள்
அவ்வியம் நீங்க மந்த்ரம் அவனியில் ஜபிக்க லானார்
செவ்விய மாகக் கட்டை சிறிததில் துளிர்க்கக் கண்டார் 16

அன்னதன் மையதைக் கண்டார் அதன்பினும் சின்னாள் ஊற்ற
முன்னய துளிரின் இரண்டு மூன்றிடந் துளிர்க்கக் கண்டார்
சொன்னது செய்தீர் யானே சொற்பிழை செய்து விட்டேன்
அன்னவர் தாள் பணிந்தே அவன் மனம் வெதும்பி நின்றான் 17

அனைவர் தம் இடத்தில் நீயும் அன்புடன் நடக்க வேண்டும்
தினையள வேனும் என்றுஞ் சீற்றமே கொள்ள லாகா
பனையள வாகச் செல்வம் படைத்திடின் பெருமையுண்டோ
வினையுனை விட்டு நீங்க வேதமே வழிய தாகும் 18

பாளையக் காரன் தன்பால் பணிந்ததைக் கண்ட ஞானி
காலையே வணங்கி னானைக் கருணையால் கனிந்து நோக்கி
நாளையே பொருள்கள் எல்லாம் நலம்பெறச் சேர்ப்பீர் என்று
தாளையே வணங்கி னாற்குத் தயையொடு நோக்கிச் சொன்னார் 19

ஆக பாடல் தொகை – 1301

## பாலைவனக் கேணி படலம்

மாதவச் சிரேட்டர் சின்னாள் மதித்திட யாகம் செய்தார்
வாதமே யற்றுப் பல்லோர் வணங்கினர் வேதந் தன்னை
சாதனை செய்து ராக வேந்திரர் பயண மானார்
பாதயாத் திரையா கத்தான் பண்டரி புரமே போனார் 1

பல்லக்கே யிருந்தாலும் என்?பக்தரே யிருந்தாலும் என்?
நல்லதாம் பயணந் தன்னில் நடந்துமே செல்ல லானார்
தொல்லையே யறிவர் மேலாய் உறைவரே தொண்டர் உள்ளத்(து)
இல்லையே துன்பம் பாரில் இறைவனை எண்ணுவோர்க்கே 2

அன்பர்தம் கட்ட ளைக்கே யவரென்றும் மதிப்புத் தந்தார்
அன்பரின் வேண்டுகோளால் அவர்பல்லக் கமர்வர் சின்னாள்
துன்பமே எய்தார் தொண்டர் தொடர்ந்திடும் யாத்திரைக்கண்
இன்பமே யெய்த வேதான் இனிதெனப் பயணங் கொள்வர் 3

வெகுபாலை வனத்தின் கண்ணே வியர்க்கவே நடந்து வந்தார்
மிகுதியாய் அன்பு கொண்ட மெய்யன்பர் வேண்டுகோளால்
தகவுடை பல்லக் கின்கண் தானமர்ந் தேகும் போது
மகவினைப் பெறுந்துன் பத்தை மற்றவர் காண லுற்றார் 4

சீடரின் மனைவி கர்ப்ப முடையவள் செல்லுங் காலை
வாடவே வயிறே யன்னாள் வலியினால் அவதிப் பட்டாள்
கூடவே பயணம் செய்தாள் கூடாது பயணம் என்றே
நாடியே யோரி டத்தில் நண்பகல் படுத்து விட்டார் 5

கண்டாரே ராக வேந்த்ரர் கருணையால் காஷாயத்தை
அண்டத்து மேலே தூக்கி யதனைத்தன் கையால் வீச
கொண்டிடுங் கூடாரம்போல் குறித்துமே நிழலைச் செய்தார்
தண்டத்தால் மணலின் கண்ணே தானொரு தீர்த்தம் செய்தார் 6

பிரம்ம தண்டத்தால் செய்தார் பெருமணற் பரப்பில் தீர்த்தம்
நிரம்பியே யிருந்த நீரால் நெடுவழி களைப்பு நீங்க
அருந்தவே கனிகள் சின்னாள் அவருக்கே அளித்து விட்டுப்
பெருந் துன்பம் நீங்க வன்னார் புறப்பட்டார் பயணங் கொண்டார் 7

சீடரின் மனைவி தானும் சிறந்ததோர் குழந்தை பெற்றார்
வாடலில் லாமல் ஆங்கே வதிந்தனள் சின்னாள் பின்னும்
கூடலின் விருப்பத்தாலே குருவினைத் தொடர்ந்து போனார்
தேடியே சென்று செய்தி தெரிவித்தே தெண்டனிட்டார் 8

அன்றவர் பாலையின்கண் அகழ்ந்திட்ட கிணறு கண்டே
இன்றுமே மக்களெல்லாம் இயம்புவர் தண்டத் தீர்த்தம்
என்றுமே பெயர் பெற்றோங்கி யினிதுறை ராகவேந்த்ரர்
நன்றெனுந் தொண்டெல்லாமே நாட்டிலே விளங்குங் காண்பாய் 9

**ஆக பாடல் தொகை – 1310**

## சுடுமணலின் மீட்ட படலம்

புனிதமாம் யாத்திரைக்கண் புண்ணியர் ராக வேந்த்ரர்
இனிதென நாசிக் சென்றே யின்பமா யிருக்கும் காலை
வனிதையென் றோடுங் கோதா வரியினின் வளமை கண்டே
தனியிடத் திருந்தே தண்ணென் நதியினீ ராடி னாரே 1

அங்கிருந் தேசென் றாரே யருகினில் பீஜப்பூரே
எங்கணும் மணற்ப ரப்பே யிருந்திடக் கண்டா ரப்போ
அங்கொரு அடியார் சப்தம் ஒலித்திட அவருங் கேட்டார்
எங்கவர் இருப்பி டந்தான் எனவவர் தேடுங் காலை 2

குரல் வந்த திக்கை நோக்கிக் குறுகினார் ராக வேந்த்ரர்
பரவிய மணற் பரப்பில் பகலவன் துன்பந் தாளான்
மரமிலா திருக்கும் அந்த மணலிலே சிக்கி மீளான்
ஒருவனே யிருந்தான் ஆங்கே யுய்வழி ஒன் றுந் தேரான் 3

எரிமணற் துன்பந் தாளான் எப்படி யுய்வோ மென்றே
தரியானாய் வெம்மை யின்கண் தணலினால் தீய்ந்தே போகத்
தெரியாமல் வந்து விட்டோம் சென்றது உயிரேயென் று
புரியாமல் ஏதே தோதான் புலம்புதல் செய்யக் கண்டார் 4

பெருமணற் பரப்பின் கண்ணே பெருந்துன்பம் படவே கண்டார்
அருமையாம் மந்திரத்தின் அதன்பயன் தனையே தேர்ந்தார்
உரிமையா யவர்க்கே யுற்ற துன்பத்தை யுள்ளத் துள்ளி
வருணனின் மந்தி ரத்தை வடித்தவர் சொல்ல லானார் 5

நிருவி கர்ப்பத்திலானார் நிமலனின் மந்திரத்தை
ஒருமுறை யுள்ளத் துள்ளி ஒருமையா யிருந்தா ரிப்பால்
பெருவியப் படைய மேலே பெருமழை முகிலே தோன்றி
அருமையாம் நிழலைச் செய்த தச்சுடும் இடத்தே யம்மா ! 6

அவனுடன் எழுந்து வந்தான் அம்மேக வரவுங் கண்டான்
தவமுடைப் பெரியோ ரென்றே தாளினை தண்டனிட்டான்
அவமேயான் அழிந்து போகும் அன்னதாந் தருணந் தன்னில்
பவமறுத் தென்னை யிந்தப் பாரினில் பிழைக்க வைத்தீர் 7

ஆண்டகை யாக ராக வேந்திரர் அவனி தன்னில்
வேண்டிய வேண்டியாங்கு விளைத்திடச் செய்யும் மேலோர்
ஈண்டுசெய் தவத்தினாலே எண்ணிய முடிக்குந் தீரர்
காண்டகு மற்பு தத்தைக் கண்களால் நேரிற் கண்டான் 8

உணவொடு நீரும் உண்ண உதவினார் சீடர் தாமும்
கணப் பொழு தன்னான் வாழக் காத்தவர் ராக வேந்த்ரர்
தண லெனு மணலைத் தானே தண்ணென வாக்குந் தன்மை
பண மொன்றா லாகுமோநற் பண்பினா லாகு மன்றோ? 9

அப்போது பீஜப்பூரை அடில்ஷாவே ஆண்டு வந்தான்
தப்பேதும் நடவா வண்ணம் தன்னுயிர் பிழைத்த தாலே
ஒப்பிலா ராக வேந்த்ரர் உயரிய பயணந் தன்னைச்
செப்பவே யனைவருக்குஞ் செப்பாது அவன் சென் றானே 10

அருமையாம் பீஜப்பூரில் அருகிலே செல்லுங் காலை
பெருமையாம் ராக வேந்த்ரர் பெருவர வேற்பிற் காக
ஒரு பெருங் கூட்டங் கண்டார் உடன் சீடர் உவப்பக் கண்டார்
அருமையாங் கடன்மு டிப்போர் அதன்பயன் கருத்திற் கொள்ளார் 11

கடமையைக் கருத்தில் கொள்வார் கட்டுடன் நடப்பார் என்றும்
உடமையை உள்ளத் தெண்ணார் உய்வழி யதனைத் தேர்வார்
நடப்பவை எல்லாம் என்னே நாரணன் செயலே யென்பார்
திடமுடை ராக வேந்த்ரர் திருவருள் தனையே யோர்வார் 12

இப்ராகிம் அடில்ஷா என்பான் இனியநல் லரசாட்சிக்கண்
ஒப்பிலா ராக வேந்த்ரர் உயர்மதிப் புடையரென்றே
அப்போது யரச வைக்கண் அந்தண ரிருக்கும் போதே
செப்பினான் ராக வேந்த்ரர் ஜெகத்குரு என்றன்னானே 13

தப்பேது மில்லான் அன்னான் தகுதியைக் கண்டு போற்ற
இப்பொழு தியானே யீயும் இப்பரி சேற்பீர் என்றான்
ஒப்பிலா வெண்கொற்றத் துக் குடையையும் உவந்த ளித்தான்
எப்போதும் பீஜப்பூரின் எழிலர சென்ன வாழ்வார் 14

அண்டினார் அல்லல் தீர்க்கும் அருள்கொடுராக வேந்த்ரர்
தொண்டர்தம் உள்ளத் துள்ளே தொடர்வறா துறைகின்றாரால்
கண்டிட வந்தாரென்முன் கருத்தினில் அமைந் துரைத்தார்
எண்டிசை புகழும் ரஜ்னி இதயத்தில் உறைவர் அன்றே. 15

ஆக பாடல் தொகை –1325

## மந்த்ராட்சதை நிறம்மாறிய படலம்

பக்தியால் பயமுங் கொண்டார் பரமனின் அருளுங் கண்டார்
பக்தியாய் இருக்கும் மாதம் பக்குவம் அடைய வேண்டி
பக்தியாம் பத்தி யத்தால் பரமனின் படையல் தன்னில்
பக்தியாய்ப் பகவன் அன்பைப் பாரினில் படைப்பர் கண்டாய் 1

அத்தகு பக்தியான ஆஷாட மாதந் தன்னில்
இத்தரை சம்ப்ர தாயத் திருக்கின்ற நீதி கேட்டால்
உத்தம னாக வாக்கும் உளமது செம்மை யாக்கும்
முத்தரைப் போன்றே யன்னான் முனிவரே யாவ ரன்றோ 2

மூல ராமரையே மூச்சாய்க் கொண்டவர் ராகவேந்த்ரர்
மூல மந்திரமே வாழ்நாள் முழுதுமே யோதி வாழுஞ்
சீலமே யுடைய ராக வேந்திரர் அவரைப் போன்றே
சீலமே யுடையசீனு வாசரும் ஒருவராவார் 3

ஆசார சீலர் என்றால் அவரைப் போலிருக்க வேண்டும்
பேசாரே யாரிடத் தும் பிழையுடை யொழுக்கங் கண்டால்
கூசாரே கொண்ட கொள்கை கூறவே பலரிடத் தும்
ஆசாரங் கண்டால் அன்னார் அவரிட மதிப்பு ளாரே 4

சீலங் கொள் சீனி வாசாச் சாரியார் பிதரு ஹள்ளில்
ஏலவே வாழ்ந்து வந்தார் யியற்கவிக் கடலே யென்ன
ஞாலமே புகழு ஞானி நலம்பெறும் வருகை கேட்டார்
சாலவே ராக வேந்த்ரர் சார்ந்தருள் பெறநி னைந்தார் 5

ஆஷாட மாதந் தன்னில் ஆகின்ற சமைய லின்கண்
காஷாய மணியா தோர்க்குங் கடுகுடைச் சமைய லாகா
வேஷமாம் பலருங் கூடி வேடிக்கைப் பேசி யென்னே
ஆஷாட மாதந் தன்னில் அனுட்டிக்கும் முறைய தன்றோ? 6

ஆனாலும் ராக வேந்த்ரர் அவருடை யுள்ளங் கண்டார்
தானாகச் சொல்ல வில்லைத் தகுதியாங் காலம் பார்த்தார்
ஞானவா னாவார் அன்னார் அட்சதை வழங்கத் தானே
மோனமா நிலையி ருந்து முழுதருள் பெறவ ளித்தார் 7

ஏதேனும் சேதி யுண்டோ யிருந்திடின் சொல்வீ ரென்னப்
பேதமே யற்ற மேலாம் பெரியவர் பேசுகின்றார்
வாதமே யாகுஞ் சொன்னால் வாயெழா திருந்தார் ஆங்கே
ஆதலின் போய்வா வென்றே அன்பொடு வழியனுப்ப 8

போலியாய்ச் சொல்லி யுண்மை புரியாமற் போகின்றோம் நாம்
வாலறி வினனுக் கென்றே வழங்குமிப் படையல் தன்னில்
சாலவே கடுகைச் சேர்த்துச் சமையலே செய்துள்ளார்கள்
ஏலவே யெடுத்துக் கூறார் எழுந்தவர் புறப்பட்டாரே 9

ஆனாலும் சீனிவாசாச் சாரியார் செல்லும் போதே
காணாத மனச்சுமையைக் கண்டாரே கடுகித் தாமே
போனாரே பிதரு ஊறள்ளில் பெருமையாந் தமையனாரைத்
தானாகப் பார்த்தப் போதே தன் மனக் கருத்தைக் கூற 10

தொடுத்திட்டார் சேதி சொல்லச் சொல்லுமுன் தரிசனத்தில்
கொடுத்திட்ட மந்திரத்தாம் அட்சதை தமையன் கேட்டார்
முடித்திட்ட முந்தானையின் அட்சதை யவிழ்த்துப் பார்த்தார்
மடுத்துவர் பேச வில்லை மாறிய தன்மை கண்டார் 11

கருப்புடன் இருக்கக் கண்டார் காணாத தோற்றங்கண்டார்
விருப்பொடு ராக வேந்த்ரர் வேண்டியே யளித்த தாகும்
வெறுப்பிலான் தந்த தாகும் நிறம் வேறு பட்டதற்குப்
பொறுப் பவரில்லை நீரே புகன்றிட்டார் தமையனாரே 12

திருவுடை சீனுவாசர் தீர்த்தரே யென் று ரைத்தார்
பெருமையாம் நூலே யன்னார் பெயர்பெறச் செய்தமைத்தார்
அருமையாம் நூலைக் கண்டு அகிலமே வியக்கு மென்றன்
பெருமை நான் முன்பு செய்த புண்ணியத் தாலே யென்றார் 13

உள்ளமு நிறைந்தார் உண்ண உணவிலே விருப்பமில்லார்
கள்ளமே யற்ற அன்னார் கண்கள் நீர் பொழிய நின்றார்
உள்ள நம் மடத்தில் நீரும் உணவுண்டுச் செல்வீர் என்றே
தள்ளரு மன்பி னால் சீராகவர் தாமே சொன்னார் 14

இறைவனின் பேரைச் சொல்லி இலையையே பார்க்கும் போது
இறை போதும் எண்ணேன் என்னே இத்திரு மதியின் கண்ணே
நிறையவே கடுகி ருந்த நிலைமையைக் கண்டுவிட்டார்
குறையென் று சொல்ல நாவும் கூறவு மனமுமில்லை 15

பெருமையாம் ஆஷா டத்தின் பெற்றிமை யுணர்ந்த சீடர்
ஒருமையாம் அமர்ந்தே யன்னார் உணவினை யுண்கின்றார்கள்
அருமையாம் இந்த நேரம் அதனைநாம் கேட்போ மானால்
பெருமதிப் பிலாது போகும் பிழைவந்தால் யாது செய்வோம் 16

அனைத்துமே ராக வேந்த்ரர் அறிந்தவர் அவரின் சீடர்
தினைத்துணை யளவும் ஐயம் அடைந்ததாய்த் தெரியவில்லை
கனைத்துமே பார்த்தார் என்னே கடுகிலாக் கறியையுண்டார்
எனைத்தானும் உள்ள யெண்ணம் எடுத்தவர் சொல்லவில்லை 17

பின்னரே ராகவேந்த்ரர் பேரருள் விடையிற்காக
நன்னய மாக வந்தார் நலமுடன் உண்டீ ரோதான்
என்றிட்ட ராக வேந்த்ரர்க் கினிதாக விருந்தென்றார்
ஒன்றுமே கூற வில்லை உற்சாகந் தானு மில்லை 18

ஆனாலும் மூல ராமர் அவருடை யன்பிற் காக
மேனாளே பக்தன் கொண்ட மேன்மையை யுணர்த்த வேண்டி
போனமுன் ஜென்மந் தன்னில் புவியினில் கனக தாசன்
காணவே கடுகைச் சேர்த்தார் கனிவுடன் அவரே யென்று 19

கடுகினைச் சேர்த்தார் மூல ராமரே கனிவு கொண்டார்
கடுகள வேனும் உள்ளங் கடமே யற்றா னென்றே
கடுகடுத் திடாமல் நீங்கள் கண்டுமே யன்புகொள்ள
கடுகினைச் சேர்த்தார் என்றார் கடுதினின் விளக்க மாமே. 20

தேவியல் நூல்கள் யாக்குந் திறனுடைப் புலவராவார்
தேவியல் தன்மை கொண்ட திருவுடை ராகவேந்த்ரர்
காவியங் காட்டி யன்னார் கண்களால் படித்துப் போற்றின்
பாவியேன் உய்ந்தேன் என்றே பதமலர் வணங்க வந்தார் 21

கல்வியில் தேர்ந்தோ மென்ற கர்வமுஞ் சிறிது மில்லார்
நல்லறி வினிலே என்றும் நாட்டமே கொள்ளு நீரார்
உள்ளநல் லாசாரத்தை ஒழுங்காகக் கற்ற சீலர்
தள்ளரும் பண்பினால்தன் னடக்கமே கொண்டு நின்றார் 22

எழுதிய நூலைத் தானே எடுத்தவர் இடத்திற் சென்றே
தொழுதவர் கரத்திற் சேர்க்கத் தூயவர் கண்டார் முற்றும்
பழுதறு நூலே யென்று பரவினார் ராக வேந்த்ரர்
செழுந்திருவடிகள் சென்னி சேர்த்தியே யாசி பெற்றார் 23

அன்புடன் ராக வேந்த்ரர் அவரையே யுற்று நோக்கி
பண்புடை யிந்த நூலால் பயன் மிக வதிக மாகும்
முன்புநான் கண்டதில்லை முயலுறும் புலமை யென்றார்
என்புநெக் குருக அன்னார் இணையடி சென்னி சேர்த்தார் 24

வாங்கினார் அட்ச தைத் தான் வருத்தமே கொண்டார் மிக்க
பாங்கொடு நம்மை யேதான் பாராட்டிக் கொடுத்த தாகும்
ஆங்குநான் பந்தி யின்கண் ஆஞ்செயல் மறைத்தேன் என்னே
தீங்கவர் செய்ய வில்லை திருவருள் திறத்தை யோரேன் 25

யாதவச் சாரியர் சொன்னார் யிப்புவி ராகவேந்திரர்
மாதவச் சிரேட்ட ராவார் மதித்திடும் அட்சதைத்தான்
பேதமே யான தாலே பெருமையாம் ஞானிமுன்னர்
போதர வேண்டும் என்னப் பொருக்கென வெழுந்து போனார் 26

எண்ணினார் சீனிவாசர் இவைகருப் பானதற்குத்
துண்ணென வச்சங் கொண்டார் துயர் நமையுறுமோயென் று
அண்ணனின் வார்த்தை கேட்டே யட்சதையெடுத் துக் கொண்டார்
நண்ணினார் ராகவேந்த்ரர் நல்லடி வணங்கினாரே 27

விளக்கமே கேட்கவில்லை வெறுப்பினைக் கொண்டு விட்டீர்
கலக்கமே யுற்ற நீவிர் கடுகுடைச் சமையல் தன்னை
விலக்கியே யுண்ட தாலே விளைந்தது வினையே யென் று
அலக்கண் தான் போக்குதற்காம் அதனுடை விளக்கஞ் சொன்னார் 28

சாத்திரப் படிநீர் தானும் செய்தது சரியென்றாலும்
காத்திருந் தவரே மூல ராமரே கடுகை யேற்றார்
பார்த்திருந் ததனின் பண்பைப் பரிந்திட வருந்த வேண்டும்
சேர்த் துனைத் திருத்த வேதான் செய் துளார் மூல ராமர் 29

என்றதும் ராக வேந்த்ரர் என் மீது தவறு என்றே
ஒன்றிய உள்ளங் கொண்ட உயர்சீனி வாசர் சொன்னார்
பொன்றலில் உள்ளத் தன்னான் பொன்னடி போற்றி செய்தார்
அன்றவர் பெற்ற வின்பம் அளவிடற் கரிய தம்மா! 30

ஞானமாய் நீரும் வாழ நல்லதாம் அருள் பாலித்தார்
மோனமா நிலையிருந்தே முத்தியைப் பெறவே வேண்டி
ஆனது படையல் நீரும் அதனைப் பின் உண்பீர் என்றார்
ஞானிநல் லடியில் வீழ்ந்தே நலமுற வாசி பெற்றார் 31

முன்புதாம் கொண்டு வந்த முடிப்பினை யவிழ்க்கும்போது
அன்பினல் லடையா ளந்தான் அதுசிவப் பாகக் கண்டார்
தன்மனத் தெண்ணும் போதத் தன்மையை ராகவேந்த்ரர்
ஒன்று நீ யுரைக்க வேண்டா துணர்த்தவே யுவகை பூர்த்தார் 32

நடையினைப் பெறுவ தெல்லாம் நாமுமே யுலகில் நன்கு
தடையறா ஞானம் பெற்றே சருவலன் அடியைச் சேர்தற்
குடையதே யாகுமென்னே யுற்றிடும் ஒழுக்கமெல்லாம்
இடையினின் ஆன தென்றே யெண்ணுதல் ஞானமாமே. 33

ஆக பாடல் தொகை – 1358

## ஸ்ரீராகவேந்திரர் நாம மகிமைப் படலம்

ஆதோனி சமஸ்தா னத்தின் ஆங்கண்ட னதியே யென்றும்
சாதரூ பப்பொன் போன்றே சார்ந்தவவ் வூரின் கண்ணே
ஆதியில் வெங்கண் ணாவென் றந்தணச் சிறுவன் வாழ்ந்தான்
மேதியே மேய்த்தான் பெற்ற மேன்மையைப் புகலு வோமே 1

களவிய லற்றான் உள்ளங் கபடம தறியான் அன்னான்
வளமுடைத் தந்தை யப்போ வயதாகிப் போன தாலே
தலமுடை வாழ்வை நீத்துத் தயாபரன் அடியைச் சார்ந்தார்
இளமையில் வெங்கண் ணாதான் ஏழையாய் வாழ்ந்து வந்தான் 2

பெற்றோரை யற்றோ மென்றே பெருமையாய் மாமன்வீட்டில்
உற்றாரே யென்றே வாழ்ந்தான் ஒழுக்கத்தான் உயர்ந்த கல்வி
கற்றாலே கணக்குக் கேட்பான் காணியை யடைய வேண்டி
சற்றேனும் இரக்க மில்லாத் தாய்மாமன் கருதினானே. 3

மூடனாய் அவனை யாக்கின் முழுமையாய்க் காணி செல்வம்
நாடவே யெண்ணங் கொண்டான் நனிகல்வி நாட்டங் கொள்ளான்
மாடுமேய்த் திடவே சொன்னான் மாமன்றன் வார்த்தை மீறான்
காடெலாந் திரிந்தா னென்னே கல்வியில் கருத்துளானே 4

பக்தியே கொண்டு வாழ்ந்தான் படித்தவர் தம்மைக் கண்டால்
பக்தியால் பண்பும் நட்பும் பாரினில் பாசங் கொண்டான்
மிக்குள நண்பர் மாடு மேய்த்திடுஞ் சிறுவ ரோடுந்
தக்கநற் குணத்தால் அன்னான் தயையொடு வாழ்ந்து வந்தான் 5

பெரியவர் தம்மைக் கண்டால் பேரருள் உள்ளத் தன்னார்
உரியவர் சிறந்த கல்வி உற்றவ ரவரென் றெண்ணி
மரியாதை யாகச் சென்றே மாண்பொடுமவரின் மேலாம்
அரியநற் கருத்தைக் கேட்க அவரடி தாழ்வன் என்றும் 6

கல்லாது போயி னென்னே கற்றவர் சொல்லைக் கேட்டால்
நில்லாது மடமை யென்றே நினைந்தவன் நினைவிற் கொள்ளான்
பொல்லாத வினைக ளெல்லாம் பொடிப்பொடி யாகுமென்று
கல்லானே யெனினும் முன்னே கற்றது வுற்ற தாமால் 7

ஒரு நாளில் மரத்தின் கண்ணே ஒய்வொடு வெங்கணானும்
சிறுவர்கள் பலருஞ்சேர்ந்தே நண்பக லுறங்கும் போது
கருநாகம் ஆடி யேவெங் கண்ணனின் மேல் வந்தேதான்
யிருந்திடக் கண்டார் என்னே இறந்தானே பலருஞ் சென்றார் 8

மாமனும் சிறுவ ரோடு மரத்தடி நோக்கிக் காட்டில்
தாமத மின்றிச் சென்றார் தலையிலான் செல்லு முன்னே
ஏமமாய் அவனிருக்க வெழில் நாகம் வெங்கணானே
சேமமாய் உறங்கக் கண்டே சேர்ந்தது தன்னிடத்தே 9

உறக்கத்திலிருந்தான் தன்னை உண்மையா யிறந்தா னென்று
இரக்கமே யில்லா மாமன் எடுத்தானே சிறுவரோடு
தூரத்தினில் உயர்ந்தா னென்னே தான்மிக உறங்கி விட்டான்
சிரத்தினை யசைத்தெ ழுந்தான் சீறினான் மாமன் றானே. 10

மரத்தடி படுத்தே நீயும் மாட்டினை மேய விட்டாய்
இறத்தியே யென்று யானே யிப்பெருங் காட்டில் வந்தேன்
சிரத்தையே யில்லாய் நீயுஞ் செய்தவிக் காரியத்தால்
மறக்கவே முடியவில்லை மாண்பில செய்தாய் என்றான் 11

நயமுடன் திருத்தி மாமன் நல்லுரை வழங்கா தென்னே
பயமுறுத் திடவே யன்னான் பகற்பொழு துறங்கான் நாளும்
அயலதாய்ச் சிறுவர் தூங்க அவன் காட்டில் விழித்திருக்க
பயணத்தைக் கொண்டார் ஓர்நாள் பக்தரின் ராகவேந்த்ரர் 12

பெரியவர் ராகவேந்த்ரர் பேரருள் மகானே யென்று
சிறியவன் வெங்கணானே சிறந்துளம் ஓடியன்னார்
அரியதாம் அடியிற் றாழ்ந்தே அவன் துயர்க் கடல் கடக்க
உரியதாம் காலம் வந்த துரைத்தனன் துயரை யெல்லாம் 13

வெங்கணா பயப்ப டாதே விருப்பொடு கருநாகந்தான்
உங்கணே வந்த தாலே உயர்ந்தவ னாவாய் நீயும்
தங்கடன் மறவா தென்றுஞ் சார்ந்திடுங் கடமையாற்றச்
சங்கடம் வந்த போதே சார்ந்தெனை நினைவாய் என்றார் 14

சோகமே உருவாய் நின்றான் சொல்கின்ற துயரைக் கேட்டார்
ஏகனாய் வெங்கணன்தான் இயம்பிய துயரம் போக்க
ராகவேந்திரர் தாம் ஆசி யுரைத்தனர் அட்சதையாற்
போகமே விளைக்க வேண்டிப் புரிந்தவர் அருள் பாலித்தார் 15

முடிந்தனன் அட்சதைத்தான் முழுதருள் பெற்றோ மென்றே
நடந்தனன் வந்தான் நண்பர் தனக்கவன் நல்கும் போது
கடந்தனன் உறக்கத்தென்னே கிளர்ந்திடல் கனவேயன்னான்
மடந்தனைப் போக்க வேண்டி மாமன்றன் இடத்துச் சொன்னார் 16

செப்பிய வார்த்தை மீறான் சிறுவனாம் வெங்கணானும்
ஒப்பிலான் உரைத்த சொல்லே உறுதியாய் வாழ்ந்து வந்தான்
செப்பிடு வாலி பத்தைச் சிறுவனே யடையமாமன்
இப்புவி வாழ்வை நீத்து இறைவனின் அடியைச் சார்ந்தார் 17

இறுதியே யடைந்தான் மாமன் பொருளுமே யிவனைச் சார்ந்த
தருநீதி தனையு ணர்ந்தே யவன் பிறர் பொருளைத் தானும்
கருதினா னில்லையென் றும் கணக்கின் றிப் பொருளே சேரும்
ஒருநீதி யுலகத் தோர்க்கு உணர்த்தவே போன்ற தம்மா! 18

தலைமையாம் பீஜப்பூ ரில் தன்னிக ரிலாத சுல்தான்
உலைவுறாப் பாது ஷாவே ஒருவனாய் ஆண்டு வந்தான்
கலையெலாங் கற்ற சுல்தான் கடமையை யாற்ற வேண்டு
நிலைமையில் அரசர் சில்லோர் நிர்வாகம் நடத்தி வந்தான் 19

சிற்றர சவரில் சித்தி மதூத்கான் ஒருவ ராவார்
உற்றவனவற்கு ஆனான் உரிய வா தோணியாகும்
மற்றவர் குறைக ளைத்தான் மக்களின் கேட்பதற்கு
உற்றதோர் குதிரை மீதே ஊர்பல செல்லலானார் 20

வெங்கணான் கிராமத் திற்குள் வருகின்ற சேதி யேதான்
எங்கணும் பரவச் சாலை யிருமருங் கிலுமே மக்கள்
பொங்குபே ரன்பினோடு போதர நின்றா ராங்கண்
வெங்கணான் றானும் நின்றான் விருப்பொடு காணு தற்கே 21

அப்போது பாது ஷாவின் அரண்மனைச் சேவகன் தான்
ஒப்பிலாச் சுல்தான் தந்தார் ஒருதனிக் கடிதம் என்றே
செப்பினான் அரசர் முன்னே சித்தி மதூத்கான் பார்த்தார்
தப்பிலா ததனின் செய்தி தானுமே உணர வேண்டி 22

குதிரைமே லிருந்த சித்தி மசூத்கான் குறிப்பாய்ப் பார்த்தார்
மதிநிறைந் தவனேயென் று மாண்பொடு வெங்கணானே
பதிந்தனன் அவனே கண்ணில் பரியின்பால் அழைத் துச் சொன்னார்
இதனினுட் கருத்தை யெல்லாம் எனக்குரை என் று தந்தார் 23

தன் னையே படிக்கச் சொன் னார் தவிக்கின் றான் வெங்கணானும்
நன் னய மிலாதே மாடு மேய்ப்பவன் நானே யென் றான்
அன் னதன் மையதைக் கேட்டும் அந்தண னாவாய் என் னே
என் னையே மறுத்தாய் என் ற சொற்களே எஃகு போன் ற 24

இத்தகு கடிதம் பார்த்தே எந்தனுக் குரைப்பாய் என் ன
பித் துமே பிடித்த வன்போற் பேசாது நின் றா னிப்பால்
மத்தரைப் போன் றான் மன் னன் வார்த்தையை மறுக்க வொண்ணான்
உத்தம வெங்க ணானும் ஒருகணம் மனத்திற் றோன் ற 25

சங்கடம் வந்த போது சார்ந்தெனை நினைவாய் என் றார்
அங்கனே ராக வேந்த்ரர் ஆபத்தைக் காப்பாய் என் ன
தங்காதில் ஒலிக்கக் கேட்ட செய்தியைப் படித்த போதவ்
வெங்கணான் சொன்னான் செய்தி விருப்பொடு மன்னன் கேட்டான் 26

சித்தி மசூத்கா னுக்குச் சிறப்புடை பாது ஷாவே
முத்திரை யிட்டுச் சொல்லும் முடங் கலைக் காண வேண்டும்
உத்தம னாவாய் உன் றன் பொ றுப்பினில் மாஞ்சாலந்தான்
வைத் துளேன் அடுத்தே யுள்ள ஆதோணி சமஸ் தா னத்தை 27

சேர்ந்த வா தோணி நீயும் சிறப்புடன் ஆட்சி செய்ய
தேர்ந் துநும் பொறுப்பில் நல்ல திவானையே நியமிப்பாயே
ஓர்ந்தவ னுடனே பார்த்தான் வெங்கணான் ஊரைவிட்டு
சேர்ந்திடச் சொன்னான் மன்னன் சீக்கிரம் அரண்மனைக்கே 28

படித்ததில் பிழையுண்டாமோ பாதுஷா குறையென் றாமோ
அடுத்தவர் ஒன் றும் பேசா தரண்மனை வரச் சொன்னாரே
கெடுத்திட்டோம் காரி யத்தைக் கதிவேறு யில்லை யென்றே
தடுத்திட முடியு மோதான் விதியினால் ஏக லுற்றான் 29

ஊராரும் பாவம் என்றார் உன்னிலை யிதுவோ யென்றார்
தீரா வினையா லென்னே தீர்ந்தானே யவனே யென்றார்
வாராத துன்பம் வந்து வெங்கணான் போனான் என்றார்
சாராத துன்பம் என்றே சாற்றினார் மக்கள் தாமே! 30

மிக்கதாங் கலக்கத் தாலே மேன்மையாம் வெங்கணானும்
அக்கணம் அரண்ம னைக்கே அரசரின் ஆணை மீறான்
தக்கவக் காலந் தன்னில் தளர்வுடன் நின்றபோது
மிக்கதாம் ஆசனத்தின் மேலிடத் தமரச் சொன்னார் 31

நக்கலே செய்கின் றானோ நவாபு என்றே யெண்ணி
பக்கலே யடக்கத் தாலேயந் துமே நின்ற போது
வெக்கமே படவே வேண்டா வெங்கணா நீயும் இப்போ
தக்கதாந் திவானாம் மேன்மை பதவியைத் தந்தேன் ஏற்பாய் 32

பாப்பராய் சிவாஜி ராவே பட்டினி கிடந்தானுக்கே
சூப்பர் ஸ்டார் ரஜினி என்றே சொல்லிட வைத்தார் போன்றே
காப்பதற் கியாரு மில்லாக் கலக்கமே யுற்றானுக்கே
நாப்புகழ் நாமந் தன்னால் நலம் பெறும் பதவி தந்தார் 33

போனமுன் ஜென்மந் தன்னில் புகன்றிட்ட கல்வி கற்றான்
ஞானமா நிலையினாற்ற நலமுறப் பதவி தன்னை
மோனமாய் ராகவேந்த்ரர் முழுதருள் பெறவ ளித்தார்
மானமே மிகுந்த சித்தி மசூத்கான் மதிக்க வாழ்ந்தார் 34

ஆக பாடல் தொகை – 1392

## சித்தி மசூத் கானுக்கு அருள் செய் படலம்

நெக்குநெக் குருக நின்றேன் நீள்புகழ் ராக வேந்த்ரர்
தக்கவக் கணத்தில் வந்த தன்மையால் திவானாய் வாழ்ந்தோம்
மக்களில் ஒருவ ராக வாழ்ந்திடும் மகானே யாவார்
தக்கதாம் நன்றிக்கி யானேயே தேனுந் தருவோம் என்ன 1

மாடுமேய்த் தெனக்கே யன்னார் மதித்திடும் பதவி தந்தார்
ஏடெடுத் தெழுதா னுக்கேயெழுத்தறி வதனைத் தந்தார்
பாடெலாம் உலகத் தோரே பாங்குடன் அறியவில்லை
தேடி நான் அவரைச் சென்றே திருவடி வணங்குவேனே 2

என்றுமே யேக்கத்தோடு வெங்கணா னிருக்கத் தம்மின்
நன்றென ராக வேந்த்ரர் நாட்டிற்கே வருகின்றாரே
என்றனர் சில்லோர் கேட்ட வெழுச்சியால் வெங்கணர் தாம்
ஒன்றுமே யறியா தானார் உண்மனம் நெகிழ்வுற் றாரே 3

கன்றினைப் பிரிந்த தேதாய்ப் பசுவெனு ராக வேந்த்ரர்
இன்றவர் வருகின் றாரால் இதனின் மேற் பேறுண்டாமோ
ஒன்றிய வுள்ளங் கொண்ட வுணர்வினால் வெங்கண்ணர்தாம்
நன்றதால் திவானாய் உள்ளார் நவாபிடம் சொல்கின்றாரே 4

எம்முடைத் தெய்வம் இன்று வருகின்ற செய்தி கேட்டேன்
நம்முடைப் பயனால் நன்மை நாட்டிற்கே விளையுமென்றால்
செம்மையா மவர்க்கு நாமே சிறப்பினை யளிக்க வேண்டும்
அம்மநீர் அவ்வரைப் பார்த்தால் அதிசயம் உறுவீர் என்றான் 5

நாட்டிற்கே திவானாய் ஏற்றோம் நவில்கின்ற செய்தி தன்னை
மாட்டோ நாம் என்றே கூறல் மதியுடைத் தன்றே சுல்தான்
நாட்டாரே விரும்பும் போது நலமாம்நல் வரவு நல்க
நாட்டமுங் கூறி மன்னன் நாட்டத்தைக் கூறான் என்னே 6

ஈதோ தான் வந்து விட்டார் என்றதும் வெங்கணானே
ஆதோனி சமஸ்தானத்தை அழகிதா யாக்கி விட்டான்
போதாதே யென்று சொன்னான் புகழுக்கோர் எல்லை யுண்டோ
ஓதாதே யுணர்ந்தா னென்னே யுவந்தனன் வருகையேற்க. 7

காரண மூலர் சங்கு கர்ணர்தான் ராகவேந்த்ரர்
ஆரணங் கற்றார் என்றே அரசனே காத்திருந்தான்
வாரண மாலை யிட்டே வயங்குபல் லக்கி னேற்றித்
தேரணி வீதி தன்னில் திருவலம் வரச் செய்தானே 8

அரசன்றன் அரண்மனைக்கே யடைந்ததும் ராக வேந்த்ரர்
பரசுசெய் வெங்கண் ணர்தான் பல்லக்கின் பக்க லின்கண்
உரசிடத் தோளில் ஏற்றே உய்த்தனன் கண்டார் ஞானி
அரசராய் அமர்ந்தே யாசி பகர்ந்தனர் அருளின் மிக்கார் 9

வந்தனர் அரண் மனைக்கே வந்ததும் ராக வேந்த்ரர்
பந்தமே யறுக்கும் மேலோன் பாதமே பட்ட தாலே
அந்தநன் நகரே என்னே யமரரின் நகரமான
செந்தண்மை யுடையன் உள்ளஞ் சிறந்திடச் சிறந்த தாமால் 10

வெங்கணர் விருப்பை யேற்று விரும்பினார் சுல்தான் தானும்
இங்ஙனே மூல ராமர் பூசையை யியற்ற வேண்டி
தங்கையால் வெங்க ணாருந் தாளினைப் பூசை செய்ய
பொங்கு பேரன்பின் பூசை தொடங்கினார் புனித ரம்மா! 11

தருணந்தான் இதுதா னென்றே யெண்ணினான் சுல்தான் தானும்
ஒருமுறை ராக வேந்த்ரர் உண்மையை யறிய வேண்டும்
பெருமையாம் மகானே யென்று பேசுவர் மக்க ளெல்லாம்
அருமையாங் காலத் திப்போ ததனையே யறிய வேண்டும் 12

எண்ணினான் மனத் துக்குள்ளே இதற்குநாம் செய்வ தென்னே
புண்ணிய முடையார் அன்னார் புலாலையே தொடவே மாட்டார்
கண்ணிய மானார் அன்னார் காணுதற் குற்ற மாகும்
நண்ணுநம் மரபை யிப்போ நாமுமே கொள்ள வேண்டும் 13

ஒருவருக் கொருவர் நாமும் உகப்பினால் செய்வ தெல்லாம்
இருநிலத் திறைச்சி யைத்தான் யீதலே யாகு மன்றோ
அருந்துநல் லுணவில் லையே யதனை நாம் மறைத்துச் சென்றான்
வருந்திடார் யாரும் இப்பால் யிதனையா ரறிவிப் பாரே. 14

என்றுமே யெண்ணி மன்னன் இலங்குபொன் தட்டில்தானே
அன்றவன் கையினாலே ஆட்டின திறைச்சி தன்னைத்
குன்றெனக் குவித்துத் தட்டின் கொள்ள ளவதனுக் கேற்ப
நன்றதாம் பட்டி னாலே நலமுறப் போர்த்தி னானே 15

இன்னதன் மையதாய்ச் சுல்தான் எண்ணியே படியறைக்கண்
மன்னவ னவனை யன்றி மற்றவ ரறியா வண்ணம்
அன்னவன் மூல ராமர் பூசைக்கே யர்ப்பணிக்க
உன்னினான் சுல்தான் உள்ளத் துற்றவர் ராமர் அன்றோ 16

அருமையாம் பூசனைக்கே யளித்திடுங் காணிக்கைதான்
வர நனித் தாகச் சில்லோர் வயங்குபொற் றட்டை யேந்தி
பெருமையாய் நவாபாஞ் சித்தி மசூத்தான் முன்னே வந்தான்
ஒருதனி மூலராமர் ஒப்பற்ற பூசையின் கண். 17

மூலனாம் ராமர் பூசை முனிவராம் ராகவேந்த்ரர்
ஏலவே செய்கின் றாரால் என்னுமச் செய்தி கேட்டு
ஞாலத்தோர் சூழ்ந்துள்ளார்கள் நலம் பெறும் அரண்மனைக் கண்
சாலவே சித்தி தானும் சலாம் வைத்தே யமர்ந்தான் பின்னே 18

எங்களின் நவாபு சித்தி இத்திரு காணிக் கைதான்
தங்களின் பூசைக் காகத் தயையொடு தந்த தாகும்
துங்கமாம் பரிசே யென்று சேவகர் சொல்லும்போதே
புங்கவர் அதனைக் கண்டே புன்னகை புரிந்தார் நன்றே 19

புனிதராம் ராக வேந்த்ரர் புரிந்திடும் பூசை தானும்
நனிசிறந் திடத்தி வானே நாட்டமுங் கொண்டார் சுல்தான்
தனியொரு ஆசனத்தே தயையொடு ராக வேந்த்ரர்
இனியதாம் பூசை காண இன்பொடு இருந்தா ரிப்பால் 20

பூசையைத் தொடங்கு முன்னே புனிதராம் ராக வேந்த்ரர்
மாசிலா சித்தி யன்னான் மனத்தினை யறிந்தார் நன்றே
ஆசையே கொண்டார் என்னே அன்பினைக் கண்டு போற்றிப்
பேசிட நினைந்த ழைத்தே பெருமையைப் பேச லுற்றார் 21

தங்களின் அரண்ம னைக்கண் தனிப்பெரு நவாபே நீர்தான்
எங்களின் மூல ராமர் பூசையை நடத்தச் சொன்னீர்
உங்களின் மதமிலாதே போனாலும் உயர்ந்தோ ராக
எங்களை மதித்தீர் என்னே யாங்களே வியந்து போனோம் 22

ஆதியில் மனிதர் தம்மை ஆண்டவன் படைக்கும் போது
சாதியும் மதமென் றெண்ணிச் சகத்தினி லாக்கவில்லை
வாதித்தே மக்கள் தம்முள் வகுத்ததே யாகுமென்று
சாதியும் மதமும் பாரேன் சகத்துளோர் நன்மைக்காக 23

ஆதலால் எனக்குத் தந்த அற்புத வரவேற் பிற்கே
காதலாய்க் கசிந்தேன் என்றார் கண்களில் அருள்பாலிக்கப்
பாதகம் செய்தோ மேநாம் பரிசென்றே யவர்க்கு நல்கும்
சேதியைத் தெரிந்தால் நன்றோ தான் செய்த பிழைநினைந்தான் 24

நீங்களும் உங்கள் மதத்தின் நியதியின் மனத்தில் எண்ணப்
பாங்குடன் கூறும் போது பரிந்துகண் ணீரே மல்கத்
தாங்களும் என்னைப் போன்றே தயையுடன் இருக்கின்றீர்கள்
நாங்கள்செய் பூசை தன்னால் நலம்பெறும் நாடென்றாரே 25

உண்மையை யறிய வேண்டும் ஒரு பெருங் குறிக்கோள் கொண்டார்
திண்மையே யற்றான் சித்தி மதூத்கான் தன் செய்கையோர்ந்தால்
புன்மையே யவற்குவாகும் புகழினைச் சேர்க்க வேண்டி
நன்மையே யோர்ந்தார் ராக வேந்திரர் நாட்டங் கொண்டார் 26

கமண்டல நீரைச் சீடர் கரத்தினில் ஏந்தி வந்து
தமதண்டை நின்றே தாழ்ந்து தரையினில் வைத்துச் சென்றார்
அமைவுறத் தீர்த்தந் தன்னை யதனைத் தங் கையிலேந்தி
விமலனே பொருள்கள் மீதே விருப்பொடு தெளித்தார் நன்றே 27

உங்களின் காணிக் கைதான் உவந்திடும் பொருளேயென்று
எங்களின் மூல ராமர் இன்பமாய் ஏற்றுக் கொண்டார்
தங்களின் மனத்தின் மேலாந் தயையினால் மகிழ்ந்தா ரென்று
புங்கவன் சொல்லத் தீயின் புழுப்போன்று துடித்தான் மன்னன் 28

பற்பல பொருள்கள் எல்லாம் பரவியே யிருக்கும் போது
அற்பொடு கொண்டு வந்தான் அரசனே யென்று மக்கள்
பற்பலர் பார்க்கும் போது பட்டினைச் சீடர் நீக்க
அற்புதம் என்றான் மன்னன் அவனேதன் கண்ணாற் கண்டான் 29

கன்றிடாப் பழங்கள் தம்மைக் கண்களால் தெரியக் கண்டான்
பொன்றிடாப் புகழ்பெற் றோங்கும் புண்ணியர் இவரே யென்றான்
அன்றலர் மலருங் கண்டான் அவனுளம் துளும்ப நின்றான்
மன்றவிப் பெரியர் என்னே மானுடத் தெய்வம் என்றான். 30

ஆக பாடல் தொகை – 1422

## ஸ்ரீராகவேந்த்ரர் தீர்த்த மகிமைப் படலம்

உத்தம ராக வேந்த்ரர் ஒண்மலர்ப் பாத யாத்ரை
சித்தல் துர்கத்தினி ன் றுஞ் சீர்கரு நாடகத்தை
மெத்தவும் விரும்பியேதான் மேன்மையாங் கடாக்கே சென் று
வித்தகன் அடைந்தான் மக்கள் விருப்பொடு வரவேற்றார்கள் 1

ஆரணங் கற்றா ரென்றே யவனியோர் போற்றி செய்யும்
பூரண நிலவு போன்றே பொலிவினைப் பெற் று யர்ந்த
காரண மூலர் சங்கு கர்ணர்தாம் ராக வேந்த்ரர்
நாரண னாவான் வீர நாரணர் போற்றினாரே 2

அருகிலே உள்ள வூராம் ஆகுமே கடாக்கின் பக்கம்
ஒருசிறி தான வூரும் உயர்கிரீட கிரியதாகும்
பெருமையாயப் பேசும் ஊரில் பேரருள் ராக வேந்த்ரர்
வருகின்றார் என்ற சேதி வேங்கட தேசாய் கேட்டார் 3

அந்தவூர் தன்னில் வாழும் அளவில்செல் வந்த ராவார்
அந்தண்மை பூண்ட செல்வர்க் கவ்வூரே சொந்தமாகும்
சிந்தையில் ராக வர்க்குச் சிறப்பிடந்தந்த செல்வர்
பந்தமே ராக வேந்த்ரர் பாதமே யென் று வாழ்வார் 4

சென் றுமே ராக வேந்த்ரர் திருவடி தனில் வணங்கி
ஒன்றிய உள்ளத் தன்னார் உவப்பொடு கூறுகின்றார்
நன்றென மூலராமர் பூசையை நனிமகிழ்ந்தே
இன்றென தில்லில் தாங்கள் இயற்றிட வேண்டு மென்றார் 5

மன்றவப் பூசை தன்னை மகிழ்வுடன் செய்வ தற்கு
நன்றதாம் நாள்கு றித்தே நல்கினார் தேசாய் சென்றார்
கன்றினைப் பிரிந்த தேதாய்ப் பசுவெனு ராக வேந்த்ரர்
ஒன்றிய வுள்ளங் கொண்டே வுவந்திட்டார் உட்கசிந்தே 6

மூலனாம் ராமர் பூசை மூச்செனக் கொண்டு வாழ்வார்
சீலமே யுடைய ராக வேந்திரர் சீர்த்தி மிக்கார்
ஏலவே யென்றன் வீட்டில் இயற்றுமச் செயல றிந்தே
ஞாலமே கூடிற் றென்றால் நான் பெற்ற பேறேயென்பார் 7

தாழ்விலாச் செல்வர் தேசாய் தன்னல மற்றோ ராவார்
ஊழ்வினை யாலே நாமும் உயர்ந்திடுஞ் செல்வ ரானோம்
பாழ்படா துலகோர் நல்ல பண்புடன் விளங்க வேண்டி
ஆழ்ந்தருள் சிந்தையாலே யனைவர்க்கும் உதவும் மேலோர் 8

பேரறி வாளன் திருவின் பெருமையைப் பேசுவார்கள்
ஊரறி மக்கள் தம்முள் உயர்ந்தவர் இவரே யென்று
சீரறி வில்லா தோர்க்கும் சிறப்பிலாப் புன்மைபோக்கும்
ஊரறி தெய்வம் என்றே உதவு வார் பொருளை யெல்லாம் 9

எம்முடை வீட்டிற் கேதான் வருகின்றார் ராக வேந்த்ரர்
நம்முடை ஊரார் தாமும் நலம்பெறுங் காலமாகும்
எம்முடைச் செல்வந் தன்னுள் இன்றுநான் பயனைப் பெற்றேன்
தம்முடை உள்ளத் துள்ளே தனிப்பெரு மகிழ்ச்சி கொண்டார் 10

சேட்சென்ற ஊரா ரெல்லாம் சேதியைக் கேட்டு வந்தார்
ஆட் கொண்டு வரவழைத்தார் அந்தணர் அவர்களைத் தான்
நாட் காலை தனில் நடக்கும் நலம்பெறும் பூசையின் கண்
காட்சியை ராக வேந்த்ரர் கருணையைப் பெறவே வேண்டி 11

கரவிலா மூல ராமர் பூசையைக் காண வேண்டி
இரவெலாங் கிரீட க்ரிதான் இயங்கின சுறுசுறுப்பாய்
இரவினை யொழித்த தேசாயில்லின் கண் பூசனைக்காம்
உறவினால் ஊராரெல்லாம் உழைத்தனர் ஓய்வில்லாதே 12

மங்கல விசைமு ழங்க மலர் வாழை மரங்கள் தம்மால்
வெங்கட தேசாய் வீடும் மணவிழாப் போன்றவூரின்
எங்கணும் மணவிழாவாய் விளங்கிட வெழுச்சி கொண்டே
பொங்குபே ரன்பின் மக்கள் புண்ணியன் வருகை கண்டார் 13

தேசாயின் மனைவி யென்னே தேசுடைக் குழவி தன்னை
காசார்மணி பூண்ட தாலே கையினில் வைத்திருந்தார்
பேசார் ஊர் மக்கள் பார்த்தார் பெருமானின் பூசையொன்றே
தூசார் நற்காவி கொண்டே தோன்றினர் ராக வேந்த்ரர் 14

உயர்வினால் மூல ராமர் உணர்ச்சியில் ராக வேந்த்ரர்
மயர் விலா துலகோர் மேலாம் மாட்சிமையுணர வேண்டி
உயர்விடத் தமர்ந்தே பூசை உருக்கமாய் செய்தக் காலை
அயர்விலார் மக்கள் எல்லாம் அவரையே பார்த்திருந்தார் 15

பண்ணையில் வேலை செய்த பணியாளர் முதலா மக்கள்
எண்ணில ரிருந்தார் பூசை யினிதுறக் காண வேண்டி
பண்ணிய சமையற் காரர் சமையலை முடித்துத் தாமும்
எண்ணியே யிருந்தார் ராகவேந்திரர் பூசையின் கண் 16

வெங்கட தேசா யில்லாள் வியன்மனைப் பூசையின் கண்
சங்கட மனத்தி லின்றிச் சாந்தியே நிலவ வேண்டி
தங்கடன் முடித்துத் தானும் தனிப்பெரு பூசை காணத்
தங்கிட குழந்தை யாங்கே தனிப்பெரும் அறைக்குச் சென்றே 17

அங்குள பொருள்கள் எல்லாம் அவ்வவர்க் குதவும் வண்ணம்
வங்கத்துப் பொருள்கள் என்ன வளமனை தனிலடைத்துப்
பொங்குபேர ன்பின் பூசை தனைக் காணச் சென்றா ரப்போ
அங்கவர் குழந்தை தானும் அன்னையை நாடிச் சென்ற 18

சென்றவக் குழந்தை செய்வ தறியாது சமையற் சாலை
சென்றதே தாயைக் காணச் சிறுபிள்ளை செல்லப் பிள்ளை
நின்றதே மேடை மீது நிமிர்ந்து தாம் பார்க்கும் போது
அன்றது ரசத்தில் அண்டா அலறிட விழுந்த தையோ 19

ஆரிதைக் கண்டார் மூல ராமரே யறிவார் பாரில்
நேரிலே கண்டாரில்லை நெடிதுள சமையற்சாலை
ஓரிடத் ததனில் உள்ள செய்தியை யுரைப்பார் யாரே
தேரிட ராக வேந்த்ரர் தெரிந்திட்டார் தியானத்தின்கண் 20

அவ்வப்போ மூலராமர் பூசையின் ஆரத்திக்குச்
செவ்வனே சால கிராமம் சிறப்பொலி செய்த தாலும்
திவ்விய தரிசனத்தில் சிறந்துளஞ் சென்ற தாலும்
நவ்வி போற் கண்ணாற் கண்ணின் நாட்டமே பூசை யன்றே 21

தன்னையே மறந்தார் யாருந் தனிப் பெரும் பூசனைக்கண்
பொன்னையே நினையார் உள்ள பொருளின் மேல் நினையார் பாரோர்
முன்னையே தோன்றி மூல ராமரின் பூசை செய்வார்
தன்னையே நினைந்தார் மக்கள் ஈான் என்ற நினைவகன்றார் 22

ஒன்றிய உள்ளங் கொண்டார் உயர்பூசை யெனவே கண்டார்
கன்றிய மணம கன்றார் கருணையே துளும்ப நின்றார்
அன்றவர் ராக வேந்த்ரர் ஆரத்திச் செய்யும் போது
சென்றது குழந்தை தானே செய்வினை யறிவர் யாரே. 23

பூசையே முடியு நேரம் புகழ்த் தேசாய் மனைவி யாங்கே
பாசமாய் வந்தோர்க் கெல்லாம் பரிந்துதான் விருந்து நல்க
நேசமாம் உள்ளத்தாலே நிகழ்த்திட பந்திக் கென்றே
ஆசையாய்ச் சமையற் சாலை அதனையே நாடிச் சென்றார் 24

அடுப்பின்பாங் கமைந்த அண்டா ரசத்தினில் சிதறல் கண்டார்
இடுப்பள விருக்கும் அண்டா யிடத்தினில் மாற்றங்கண்டார்
துடுப்பிலா ரசந்தான் ஆங்கே துளிர்த்திட்ட நிலைமை கண்டார்
பிடிப்புள அண்டா வின்கண் பிள்ளையே மிதங்கக் கண்டார் 25

கண்டாரே பிள்ளை யைத்தன் கண்ணெதிர் மூல ராமர்
கண்டிட நின்றார் அப்போ கணைந்துணைக் கண்ணீர் மாற்றி
உண்டிட வேண்டு மிப்போ உயர்பூசை நிகழ்த்த வேண்டும்
மண்டுநந் துயரை யிப்போ மனத்திலே யடக்க வேண்டும் 26

என்றுமே தேசாயில்லாள் எண்ணினார் மூல ராமர்
நன்றாகும் பூசை தன்னை நலமுடன் ராக வேந்த்ரர்
இன்று நம் வீட்டில் செய்யும் இப்பூசைக் கிடர்வாராமல்
சென்றுநாம் முடித்த பின்னே செய்தியைத் தெரிக்க வேண்டி 27

கதவினைச் சார்த்தியாங்கே கடுத்திடும் உள்ளம் மாற்றி
மிதந்திட்ட ரசத்தின் பிள்ளை மென்மையாந் துணியாற் சுற்றி
பதமுடன் யாரும் பாரா வண்ணமாய்ப் படுத்திவிட்டு
இதமுடன் வந்திருந்தார் இனியநற் பூசை காண 28

தங்கட னாற்றப் பிள்ளை தன்கதி நினைந்த தாலே
வெங்கட தேசாய் பாரி வியர்த்திட்டு நின்றாள் மாறி
சங்கட முற்றாய் போன்றே சரீரமே யசையா நின்றாய்
சங்கடம் யாதோ வென்றான் சங்கதி யனைத்துஞ் சொன்னாள் 29

அங்கவன் கேட்டபோதே அருகினில் மூல ராமர்
துங்கவன் துயரைப் போக்கத் தோன்றினர் ஓர்கணத்தே
இங்கிவன் இறப்பினாலே இனியராம் ராக வேந்திரர்
புங்கமாம் பூசனைக்கே புகழில தாமேவென்று 30

எண்ணினார் ராக வேந்த்ரர் இனிய தாம் பூசனைக்கண்
துண்ணெனுந் துணுக்க மாற்றி துயரினைப் போக்கி யாற்
மண்ணினில் மக்கள் பெற்ற துயரினை மனத்தில் தேற்றி
எண்ணியே மூல ராமர்க் கிடரையே சாற்றி நின்றார் 31

முடிந்தது மூல ராமர் பூசையும் மக்கள் ஆங்கே
நடந்தவப் பூசையின்கண் நனிசிறந் திடவி ருந்தார்
கடந்தது பிள்ளை ஆவி கதறியே யழுதற் கொண்ணா
யிடந்தனை யறிந்தே தேசாய் மனைவியே யிடிந்து நின்றாள் 32

வேறு

மூலராமர் பூசையை முடித்து ராகவேந்திரர்
சாலகிராம ஆரத்தி தன்னைச் செய்து தீர்த்தமும்
ஏலவேய னைவருக்கும் ஈந்துவரும் போதிலே
பாலனன்றி வேங்கடரின் பாரிதன்னை பார்த்திட்டார் 33

வேறு

சோகமே யுருவாய் நின்றூர் சொல்வது அறியாதானார்
யாகமாம் மூல ராமர் இனிதுறும் பூசனைக்கண்
சாகவே பாலன் எண்ணார் சார்ந்ததே குற்றம் என்று
மாகமேல் மழைகண் ணீரை மாற்றியே தேசாய் நின்றார் 34

தேசாயின் மனைவி யப்போ தேறுதற் காற்ற ஒண்ணார்
பேசாரே மூலராமர் பூசையே பிழைபா டாகும்
தூசாலே கண்ணீ ரெல்லாம் துடைத்துமே நிற்கும் போது
கூசாதே சொன்னார் ராகவேந்திரர் குழந்தை பற்றி. 35

ஆசையாம் பாலன் தானும் அவனெங்கே யெடுத்துவாரீர்
பாசமாம் பால னுக்கும் பவித்திர மாகுந் தீர்த்தம்
தேசாய் நாம் கொடுக்க வேண்டிச் செப்பிட ராகவேந்திரர்
மாசாகும் என்றே தாரம் மறைத்ததை நினைவிற் கொண்டார் 36

எடுத்துமே வாரீர் என்றார் இதன்பொருள் அறியா தானார்
மடுத்துமே கூறு கின்றார் மகன்றனைத் தூக்கி வந்தே
கொடுத்திடச் சொன்னார் என்னே குற்றநம் பால தாமே
படுத்திடக் கிடத்தி ராக வேந்திரர் தாள் பணிந்தார் 37

ஞானமா யறிந்தார் மூல ராமரின் பூசனைக்கண்
வானவா ரியங்கா தாக உயிரையே நிறுத்தத் தீர்த்தம்
தானதை யெடுத்தா ரப்போ தன்வந்த்ரி மந்த்ரந் தன்னை
மோனமா நிலையி னோதி முகத்தினில் தெளித்தார் நன்றே 38

இறந்தவக் குழந்தை யென்னே எழுந்தது உறங்கினாற் போல்
பிறந்தது குழந்தை யென்றே பெருமையாய்த் தேசாய்தானும்
அறந்தனைச் செய்ய வேண்டி அவர்கிரீட கிரியைத் தந்தே
சிறந்திடு ஞானியின்நற் சீர் பாதம் போற்றி நின்றார் 39

ஆக காண்டம் ஐந்தனுக்கு பாடல் தொகை – 1461

## 6. பிருந்தாவன காண்டம்

### ஸ்ரீராகவேந்திரர் துதி

சித்தரில் உயர்ந்தோ ராகச் சிறந்திடும் ராக வேந்த்ரா
இத்தரை மக்கள் ஞானம் எய்திட வந்தாய் பாரில்
உத்தம னாக வாழ்ந்தாய் உயர்ந்தநின் னருளால் நாங்கள்
மெத்தநும் பாதம் போற்ற மேன்மையை யளிப்பாய் நன்றே 1

### பிருந்தாவன தானப் படலம்

மன்னனுஞ் சென்றான் அன்னான் மனத்தினில் அமைதியில்லை
மன்னநீர் பிழையைச் செய்தீர் மாற்றமே யுரைக்கவில்லை
அன்னவற் புதமே செய்தே யடியேனை மதிக்கச் செய்தார்
என்னயிவ் விராக வேந்த்ரர் இறைவனே என்று சொன்னான் 2

வெங்கணான் சொல்வ தேபோல் தெய்வாம்சம் உடைய ராவார்
எங்கணால் அவரைக் கண்டேன் இனியநல் தெய்வமாவார்
புங்கவர் புகழ்ச்சி கொள்ளப் புலையனேன் செய்பிழைக்கே
அங்கவர் அடியிற் றாழ்ந்தே அமைதியை யடைவேனென்றான் 3

ஒன்றிய வுள்ளங் கொண்டே வுயர்சித்தி மசூத்கான் சொன்னார்
நன்றென ராக வேந்த்ரர் நலம்பெறக் காண வேண்டும்
ஒன்றிட திவானைப் பார்த்து உரைத்து நாம் இன்றே யவர்பால்
சென்றிட வேண்டு மென்னச் சென்றிட்டார் வெங்கண்ணர்தாம் 4

அருகிருந் தோர்நாள் கண்ட அற்புத மறிந்த தாலே
மறுகிடுஞ் சிந்தை கொண்ட மசூத்கான் மனந்தெளிந்தான்
திரிபுடைச் சிந்தை யார்க்கும் தெய்வத்தைக் காணல்நன்றே
உருகிடுஞ் சிந்தை யாவன் உணர்ந்தனன் உண்மைதன்னை 5

மாகமேல் மழையைப் போன்றார் மறுப்பரோ வெங்கணானும்
சோகமுஞ் சுகமுங் கொண்டான் சொற்பிழை வாரா மற்றான்
வேகமாய்ச் சென்றே ராக வேந்திரர் திருவடிக் கீழ்
ஏகனாய் வீழ்ந்தே யன்னார் இனிதருள் பெறவே நின்றான் 6

வெங்கணா விசேடமுண்டோ வினவினார் ராகவேந்த்ரர்
இங்கணே வந்ததென்னை யேதேனும் பதவி யுண்டோ
உங்களோ டுரையையாற்றும் உயர்ந்ததாம் பதவிபெற்றேன்
இங்கிதன் தன்மையின்றி யான்பெறும் பேறொன் றுண்டோ 7

அடியனேன் பெற்றபேறும் அளவிடற் கரியதாமே
படியினில் ராகவேந்த்ரர் பதமலர் போற்றுகின்ற
படியெனக் கருள்வீர் இந்த பதவிமேல் பதவியுண்டோ
அடியனேற் கருள்வீர் என்றே அவரடி போற்றி செய்தான் 8

புங்கவ பிழையை நீரே பொறுத்திட வேண்டிச் சுல்தான்
உங்களைக் கேட்டுக் கொண்டார் ஒருமுறை பார்க்கவேண்டி
அங்கவர் விருப்பினாலே அவர் மனங் களிக்க வந்தார்
துங்கவ சுல்தான் உள்ளத் துயரினைப் போக்குவீரே 9

மன்னரே பிழைசெய்தாரோ மனத்தில்நான் எண்ணவில்லை
அன்னவர் மதத்திற்கேற்ற செய்கையே செய்தாரன்றோ
நன்னய மாக மூல ராமரே மாற்றிவிட்டார்
அன்னவத் தன்மையாலே யவர் பிழை யென்றே யாமோ 10

சொல்லவே சொன்னார் சுல்தான் செய்பிழை யென்றே சொன்னார்
நல்லதோர் விண்ணப்பத்தை நவாப் பென்னிடமே சொன்னார்
உள்ளவிவ் விராச்சியத்தை யுங்களுக் களிக்கச் சொன்னார்
இல்லையேல் கிராமந்தன்னை யேற்கவே கண்ணீர்விட்டார் 11

அருந்தாதே யுணவு நானும் அவனடிசேர்தற் கென்றே
பிருந்தா வனஞ் செல்காலம் பின்னரே யிருக்கும்போது
வருந்தாம லோரிடத்தை வகுத்துமே தந்துவிட்டாய்
இருந்தாலும் மூலராமா யிதுவுன்றன் ஆடலன்றோ? 12

என்றுமே நினைத்தார் நெஞ்சத்திருந்தாலும் உங்கள் சுல்தான்
நன்றென விரும்பும் ஊரைநல்கிடுவாரோ யென்றார்
கன்றெனக் கரைந்து நிற்கும் வெங்கணான் கண்ணீர்விட்டே
இன்றைக்கே யேற்பீர் என்றேயிணையடி போற்றி செய்தான் 13

வளம்பல கொழிக்கும் ஊரை வழங்கிட அவரே சொன்னார்
நிலந்தனைப் பார்த்தே நேரில் நிச்சயம் சொல்லிவிட்டார்
தலமனைத் திலுமே நாடின்தகுதியில் உயர்ந்ததாகும்
உளமது மகிழ்ச்சி கொண்டே உவப்பொடு சொன்னார் என்றான் 14

இப்படி மீதில் உள்ளஊர்களை யெண்ணிப் பார்த்தேன்
ஒப்புயர் வில்லா துங்கபத்திரைக் கரையின்மேலாய்
செப்பிடு மாஞ்சா லந்தான் செகத்தினிற் சிறந்ததாகும்
அப்படிப் பட்டவூரை அடையநான் விருப்பங்கொண்டேன் 15

உளநிறை யன்பின் சுல்தான் உவப்பொடு தருதல் என்றால்
பலதலை முறைகள் நன்குபயன்பட வேண்டுமன்றோ
வளமிலா வூரைக் கேட்டீர்வழங்கிடின் நன்மையுண்டோ
உளத்தினில் உள்ளச் செய்தி உரைத்திட வேண்டுமென்றான் 16

கரவிலா வெங்கண் ணாவென் கருத்தினைக் கூறுகின்றேன்
துறவியே யாவன் நானேதுயர்தரும் பொருளை நாடேன்
தரமுடை பூமி யேனோ தந்திட வேண்டும் நானோ
அறம்பல வாற்ற மாஞ்சாலம் மது அதுவேபோதும் 17

மாஞ்சாலம் வேண்டாமென்றேன் மதித்ததைக் கேட்கலுற்றீர்
வாஞ்சையில் நவாபே பள்ளிவாசலின் தலைவருக்கே
ஆஞ்சில காலம் முன்பே அதனையே யளித்துவிட்டார்
தாஞ்செய்தி யறிந்த தாலே யதனை நான் வேண்டாமென்றேன் 18

இப்பொழு தென்ன செய்வாய் வெங்கணா வென்ற போது
ஒப்பிலா நவாபு தானும் உரிமையை யளித்துவிட்டார்
செப்பிட வேண்டுஞ் செய்தி சென்றுமே பள்ளிவாசல்
தப்பாமற் றலைவருக்காந் தகும்வழி தனையோர்ந்திட்டார் 19

தங்களின் தயவால் நானுந் தனித்திவானாய் நிற்கின்றேன்
எங்களின் குறைக ளெல்லாம் இச்சகத் தினியு முண்டோ
உங்களின் அருளால் நாங்கள் உவப்பொடு வாழுகின்றேன்
அங்கவர் தாள் பணிந்தே ஆசியைப் பெற்றுச் சென்றார் 20

செய்தியைக் கேட்டுச் சுல்தான் செய்வகை அறிந்துகொண்டான்
உய்வகை நாடி நானே வுயர்வுடைப் பள்ளி வாசல்
எய்தினான் சேவகன்தான் எழுதிய முடங்கல் கண்ட
செய்தியால் வந்தே காஜி சேர்ந்தனர் நவாபைக் கண்டார் 21

முன்னதாய் வந்தே காஜி முடிதாழ்த்தி யவனும் நின்றார்
மன்னவன் ஆனதாலே மாற்றமே மொழியவில்லை
முன்னே நான் ஈந்த வூரே மாஞ்சால மாகும் என்னே
நன்மையே தேனும் உண்டோ நவின்றிட வேண்டுமென்றார் 22

சொன்னதும் காஜி சொல்வார் சுல்தானும் வார்த்தை மீறேன்
நன்னய நிலங்கள் தம்மால் நன்மையே யுண்டு ஆனால்
வன்னில மாஞ்சா லந்தான் வளமிலை என்ற சேதி
உன்னினேன் சொல்வதற்கே வுற்ற திச் சமயம் என்றார் 23

அன்னதன் மையதைக் கேட்டார் அருகிலே வெங்கண்ணர் தாம்
பன்னலச் சிறப்பு வாய்ந்த பலவளங் கொழிக்கத் தக்க
நன்னய மான வூரை நல்கினேன் என்னக் காஜி
தன்னுடை விருப்பங்கூறி தான் விடை பெற்றுச் சென்றான் 24

சென்றபின் நவாபு சொல்வார் திவானிடம் வெங்கண்ணர் நீர்!
நன்றென மாஞ்சா லத்தை நாம்சாமிக் களிக்க வேண்டும்
என்றதும் சாச னத்தை யெழுதினார் வெங்கண்ணர் தாம்
அன்றவர் பெற்ற வின்பம் அளவிடற் கரிய தம்மா! 25

பெருமையாம் மாஞ்சா லத்தைப் பேரருள் ராகவேந்த்ரர்க்
குரிமையா யாக்கி யன்னார் உவந்திடக் கொடுக்கச் சென்றார்
பரிவொடு நவாபு பக்கல் வெங்கணான் வருகை கண்டார்
பெரியவர் ராக வேந்த்ரர் பேரருள் பெறப் பணிந்தான் 26

மகானின் முன்பாகச் சென்றான் முழங்காலால் மண்டியிட்டான்
தகாததன் செயலுக் காகத் தாழ்ந்தனன் தலையால் என்றான்
சிகாமுடி மேலேயே தன் கீர்த்தியாங் கரமு யர்த்தி
யுகா யுகங் காலமாக வும் புகழ் நிலைக்கு மென்றார் 27

வேறு

மூல ராமர் ஆசியை முழுதும் நீவிர் பெற்றுளீர்
ஏலுமிந்த நாள் முதல் இப்பாரும் உள்ள நாள் வரை
காலங் காலமாக நீவிர் காசினியில் வாழுவீர்
ஞாலமீதில் ஞானியாய் நவின்றார் ராக வேந்திரர் 28

வேறு

ஆசியே கூற சுல்தான் அட்சதை பெற்றுக் கொண்டான்
காசினி தனில்ந வாபே கருணையைக் கண்டு தாழ்ந்தார்
மாசிலா மனத்தினால் வெங் கண்ணரே கண்ணீர் வார்ந்தார்
தூசெலா நினைந்தார் தூய ராகவர்ப் போற்றி செய்தார் 29

ஆக பாடல் தொகை – 1490

மாஞ்சால மகிமைப் படலம்

நினைவினைக் கொண்டார் ராக வேந்திரர் நின்மலன் தாள்
அணைவதற் காகுங் காலம் அதனைத் தன் மனத்துட் கொண்டார்
தனையவர் பருவத் தேவத் திவானுமே காத்திருந்து
இணையடி போற்றி செய்தே எப்போதும் ஏவல் செய்தார் 1

அரசுடைத் திவானே எண்ணாய் அன்புடன் வெங்கண்ணார் நீர்
அரசரின் அரசாம் ராக வேந்திரர்க் காம்ப ணிக்காய்
உரைசெய்யும் போதே யன்னார்க் குதவ நீர் இருக்க வேண்டும்
உரைசெய்தான் சுல்தான் என்னே உண்ணாமற் றொண்டர் ஆனார் 2

நல்லதோர் நாளில் ராக வேந்திரர் மாஞ்சாலத்தில்
வல்லவா றிருக்க வென் றும் வயங்குமோர் நன்னாளின் கண்
அல்லலே தீர்க்கத் தாமே அவனியோர் வாழுதற்கே
நல்லதாந் திருப்பா தத்தை நலம் பெறப் பதித்தார் நன்றே 3

நலம்பெற வேண்டி யிந்த நானிலம் ராக வேந்த்ரர்
குலதெய்வ மாகக் கொண்ட கோவிந்தன் கோயில் செய்தார்
மலைவிலா துலகோர் மேலாந் தெய்வத்தைப் போற்றிச் செய்து
வலம் வரு தற்கென் றாங்கே வகுத்தனர் கோயில் ஒன்றை. 4

செழிப்பிலை மாஞ்சா லந்தான் சிறப்பிலை யென்றே சொன்னேன்
பழிப்பிலா ததனைத் தாங்கள் பார்த்துமே யேற்றுக் கொண்டீர்
இழுக்கெனக் குண்டோ யென்றே ஏங்கினேன் இதன் சிறப்பின்
வழிக் கொண்ட முறையெனக்கே வகுத்துரை வள்ளால் என்றான் 5

இன் று நாம் செல்வதெங்கே யினியமாஞ் சாலத்திற்கே
என் றுமே மாஞ்சாலந்தான் ஏற்றமே யுடைய தாகும்
ஒன் று நான் கூறுகின்றேன் உயர்துங்க பத்திரைக்கண்
நன்றென ஓரிடத்தை நலம்பெற வகழ்வாயென் றார் 6

அகழ்ந்திடச் சொன்னார் ராக வேந்திரர் அவ்விடத்தில்
புகழ்ந்திடும் வண்ணம் பூமிக் கடியிலே பீடம் ஒன்று
அகழ்ந்தவர் கண்டார் அப்போ அருகிலே வெங்கணானும்
அகழ்வதை நிறுத்தித் தானே அதன்திறம் கேட்கலானான் 7

பிதாகரஸ் என்ற மேதை பிரியமாய் கணிதம் கற்றார்
சதாவதன் நினைவால் ஒன்றிச் சாதித்தே ஜென்மங்கண்டார்
உதாரணம் போன்றே தன்முன் ஜன்மத்தை ராக வேந்த்ரர்
சதாவவர் நிட்டையாலே சர்வமும் அறியலானார் 8

பலிபீடம் ஒன்றை யாங்கே பார்த்திட்டார் ராக வேந்த்ரர்
வலியுடை யிந்த பீட யுகங் திரேதா யான தாமே
நலி செய்த வரக்க னின்நல் மகனாகத் தோன்றியங்கே
பொலி வெய்த யாகம் செய்தே புகழுடன் வாழ்ந்த தென்றும் 9

பாண்டவர் துவாபரத்தில் பரிமேத யாகம் செய்தே
ஆண்டவக் காலை திக்கு விசயமே செய்த போது
மாண்டிடான் அனுசால் வன்தான் மாற்றானாய் விசயனோடு
காண்டகு வீரனென்றே கனன்று போர் செய்யலுற்றான் 10

இத்தகு பீடத் தின்கண் எதிரியோ டுத்தம் செய்தான்
மெத்தகு வீர னென்றே மேன்மையாய்ப் போற்றப் பட்டான்
யுத்தியாற் கண்ண னாலே ஒதுங்கிடச் செய்த பின்னே
யுத்தத்தில் மாண்டான் சால்வன் யுதிட்டிரன் ஆண்டான் நாட்டை 11

ஆதலின் மாஞ்சா லத்தை அமைவிடம் என்றே தேர்ந்தேன்
காதலி னாலே யானுங் கருதியே பெற்ற தாகும்
சாதலில் லாதே நாளுஞ் சகத்தினைக் காத்தற்கான
ஏதமில் லிடமே சர்வ மங்களம் எங்குமாமே 12

உரைத்தனர் ராக வேந்த்ரர் உணர்ச்சியால் வெங்கணானே
சிரத்தினை யசையான் என்னே சிலையென நின்றான் ஆங்கே
பரத்தினை நினைத்ததாலே பாரினில் துன்பம் நீங்க
உரைத்தநல் லுரையைக் கேட்டே உணர்வினைப் பெற்றே ஓங்கி 13

உத்தம ராக வேந்திரர் ஒண்மலர்ப் பாதம் போற்றி
இத்தரைக் கடமை யெல்லாம் இயற்றினன் வெங்க ணான் தான்
சித்தத்தே தூய்மையானான் சீர்பிருந் தாவனத்தை
மெத்தவும் ராக வேந்த்ரர் மனம் போன் று செய்யலானான் 14

**ஆக பாடல் தொகை – 1504**

## மாஞ்சாலி யம்மன் தரிசனப் படலம்

துங்க பத்திரை தொன்னதிக் கரையிலே
அங்க மர்ந்த தருகின் மாஞ் சாலமே
சங்கு கர்ணராம் ராகவேந் திரரவர்
துங்க மாம்பிருந் தாவனத் தோற்றமே 1

### வேறு

மாஞ்சாலி யம்மன் தன்னை மனமார ராக வேந்த்ரர்
வாஞ்சையால் வணங்கி யம்மன் வரிசையைப் புகல லுற்றார்
வாஞ்சையைக் கண்டு போற்றி வடிவினை எடுத்து நின்றாட்
காஞ்சிறு பிள்ளை யென்றே யருளினைத் தந்தாள் நன்றே 2

### வேறு

என்றுமே இளையாய் போற்றி எனக்கருள் தேவே போற்றி
மன்றினில் ஆடுங் கூத்தன் மனமகிழ் தாயே போற்றி
அன்றுனை எதிர்த்து வந்த அரக்கனை யடல்வி னைக்கண்
துன்றிருள் போன்றே நின்ற துர்க்கனை அழித்தாய் போற்றி 3

கல்வியை யெனக்கே யீந்த கருணையின் தாயே போற்றி
பல்வளம் பெறவே வந்த பராசக்தி நீயே போற்றி
நல்லமுக் காலும் ஆன நாரணி போற்றி போற்றி
அல்லலை நீக்கி என்னை ஆண் டருள் அன்னை போற்றி 4

மாஞ்சாலி யம்மனாக மண்ணினில் வந்தாய் போற்றி
வாஞ்சையால் உன்னை நாளும் வழுத்தினேன் போற்றி போற்றி
தாஞ்சலி யாதே யிந்தத் தாரணி காப்பாய் போற்றி
மாஞ்சாலந் தனிலே வந்த மகேஸ்வரி தாயே போற்றி 5

## மாஞ்சாலியம்மன் தரிசனப்படலம்

சங்கு கர்ணரே
அங்கு போற்றவே
சங்கு சக்கர
மங்கை தோன்றினாள் 6

மண்டு காதலின்
பண்டு நின்றுமே
தொண்டு செய்திடக்
கண்டு போற்றினாள் 7

அன்னை யென்னவே
தன்னை உன்னினார்
பின்னை ராகவர்
தன்னை பார்த்தனள் 8

முன்னை யுகத்திலும்
என்னை உன்னினை
பின்னை நலம்உற
உன்னை யருளினன் 9

### வேறு

அரக்க னின்மகன் ஆன காலையும்
இரக்க மேமிக, என்னை வேண்டினை
துறக்க மேசெலத் துயரு மேகெட
சிறக்கும் வரத்தினின் சிறப்பை பெற்றனை 10

இந்த பிறவியில்
உந்தன் செயலினால்
சிந்தை மகிழ்ந்தனன்
தந்தென் அருளினை 11

வேறு

ஆகுன் செயலது ஆட்டின் தலையினை
ஆகுமே ரட்சை ஆன தாலதை
வாகு வாகவே வடித்துச் செய்துமே
மாக மதிற்சுவர் மதிக்க வைப்பையே 12

வேறு

உலகம் நலமுறும்
இலகுன் செயலினால்
அலகில் புகழுமே
நிலவும் எங்குமே 13

வேறு

என்றன் அருகிலே என்றும் இருந்திட
உன்றன் செயலுமே ஓங்கும் பாரிலே
அன்னை காட்சியை அருளி மறைந்தனள்
பின்னை ராகவர் போற்றி வணங்கினார் 14

வேறு

அகமிக வேமகிழ்ந்தார் அம்மன் அருள்பெற்றார்
இகபர யின்பமேயிப் பாரோர்க் களித்திடவே
தகுமுறை யெண்ணினார் தன்பிருந்தாவனத்தே
யுகயுக மாகநல் லுறுதிதா னளிப்பதற்கே. 15

அன்னை அருள்செய்வாய் தாயேயுன் ஆணையினால்
பின்னை யுலகமுமே பேருளே பெறநன்றே
என்னை யருளினைநீ யெனக்குமுன் தோன்றினையே
உன்னை மறவேன் நான் உனதருளால் வாழ்வேனே. 16

ஆக பாடல் தொகை – 1520

## பிருந்தாவன எழுச்சிப் படலம்

மறவாதே ராகவேந்த்ரர் மாஞ்சாலி யம்மனையே
உறவாக வேது தித்தார் ஒப்புதலைப் பெற்ற பின்னே
தரமான கற்க ளைத்தான் குறிப்பிடுமா தாவரத்தின்
வரவேண்டு விளக்க மெல்லாம் வெங்கணா னுக் கேயுரைத்தார் 1

முக்காலந் தனையுணர்ந்தார் முழுதுணர் ராகவேந்த்ரர்
அக்காலந் திவானே யாவார் ஆட்களையே யழைப்பித்தேதான்
தக்கார்சொல் வடதிசைக்கே சென்றம்மா தாவரத்தில்
எக்காலும் நிலைப்ப தற்காம் எழிற் கல்லைத் தேர்ந்தெடுத்தார் 2

என்றாலும் ராகவர்தம் எழில் நோக்கங் கண்டுணர்ந்தார்
நன்றாகுங் கற்க ளுந்தான் நல்லூர் தனிலிருக்கும்
பொன்றா வழகு டைய பொலிவுடைய கற்களென்றார்
நின்றுருகி வெங்க ணர்தாம் நின்மலனின் தாள் பணிந்தார் 3

### வேறு

தங்களின் திருப்ப ணிக்குத் தடையாக யானி ருந்தேன்
இங்கிதன் கற்க ளின்நல் லியல்பினை யறிந்தி லேன்யான்
பொங்குபே ரன்பி னின்நல் புனிதனின் தாள் பணிந்தே
அங்கவரும் ஏவவேதான் அதன்றன்மை தானறிந்தார் 4

நன் றுரைத்தார் ராகவர்தாம் நலமார் மாதா வரத்தில்
குன் றுபோல் பாறையொன் று குவிந்திருக்கக் குளக்கரையில்
சென் றுமே பார்த்தி டினநல் சிறப்பினை நீ தெரிந்து கொள்வாய்
அன் றுரா மரவரின் நல்லிருக்கை யாகுமன்றோ 5

வேறு

கான்வழிச் சென்றார் களைப்பால் ராமபிரான்
மேன்மையே பெற்றதன்றோ மேலோன் அமர்ந்தகல்லே
நான்விரும்பும் கல்லால் நலம்பெறச் செய்வீரேல்
வான்வழிச் செல்லுநல் வகைசெய்யும் என்றனுக்கே 6

வேறு

நல்லுரை தனையே கேட்டு நலமார் பிருந்தாவனத்தை
ஒல்லும் படியே சுல்தான் ஒழிவிலார் வெங்கணர்க்கே
சொல்லும் பொருளில் நல்ல சூக்கு மத்தைத் தானுணர்ந்தே
அல்லும் பகலு மென்னார் அமரா துழைத்திருந்தார் 7

வேறு

தானமர் கல்லின் தத்துவத்தைத் தானுணர்ந்து
கானமர் ராமரின் கருணையாங் கல்லென் று
ஞானமாய் தேர்ந்தாரே நனிபுகழ் நாடுதற்கு
மோனமா நிலையினில் முன்கூட்டிச் செய்கின்றார் 8

வேறு

பொறித்திடும் உருவஞ் சொன்னார் பொருத்திடும் இடமுஞ்சொன்னார்
மறுத்தொரு வார்த்தை பேசான் மகா னவர் சொல்லும் போது
வருத்தமே யடையார் யாரும் வடித்திடுஞ் சிற்பியாவான்
சிரித்திடு நிலையில் செய்தார் சிறப்பினைப் பெற்றதம்மா! 9

பொன்னின் ஆசையோ பூவைமேல் ஆசையோ
மண்ணில் ஆசையோ மக்களின் ஆசையோ
கன்னற் சுவையெனக் கல்லின்மே லாசையால்
தன்னை யுணர்ந்தார் தனிப்பெரு ஞானியே 10

முன்னை வினையினை முழுதுணர் ஞானியே!
தன்னை யிருத்திடத் தானமர்ந் தங்ஙனே
பின்னை மாந்தர் பேரருள் பெற்றிட
என்னே! உணர்ந்தார் இவர்மகா ஞானியே !! 11

வேறு

மஞ்செனக் குளிர்ந்த மேக மழையென ராக வேந்த்ரர்
தஞ்சமாய் வந்தோர்க் கெல்லாந் தண்ணளி சுரக்க வேண்டி
செஞ்சமர் பிருந்தாவனத்தைச் சிறப்புடன் செய்த பின்னே
எஞ்சிய கல்லும் ஆங்கே யிருந்திடக் கண்டு சொன்னார் 12

மிஞ்சியே யிருக்கு மிந்த மேன்மையாங் கல்லைக் கொண்டு
அஞ்சனை பெற்ற செல்வன் அவனையே வடிக்கச் சொன்னார்
அஞ்சிலே ஒன்று பெற்றான் அல்லலைத் தீர்ப்பா னன்றோ?
தஞ்சமே யவன்றாளல்லால் தரணியில் வேறுண்டாமோ? 13

வேறு

சால யான்பிருந் தாவனம் சார்ந்தபின்
நாளுங் காப்பவன் லட்சுமி நாரணன்
ஏலு மிந்த வியல்பினை எண்ணியே
சால கிராமந் தன்னைநீ சேர்ப்பையே 14

பொங்கு மன்பின் புண்ணியன் வெங்கணான்
தங்கு ராகவர் தானமர் அவ்விடம்
எங்கும் சாலக் ராமமே நூறொடு
அங்கண் நூறு ஆயிர மேலிட 15

ஆங்கண் சேர்ந்தனர் அந்தணர் வாழ்விடம்
பாங்கண் அமைத்தனர் பரிவின் முடித்தனர்
ஈங்கண் முடித்தார் எழின்மதின் மேலுறத்
தாங்கும் ஆட்டின் தலையை யமைத்தே 16

அல்லல் தீர்க்கும் அருளுளங் கொண்டவர்
மல்லல் ஞாலத்து ராகவேந் திரரவர்
எல்லை யில்லருள் பெற்றவர் வெங்கணார்
சொல்ல நினையசுல் தானிடம் செல்லவே 17

உன்றன் விருப்பினை யுணர்கிறேன் வெங்கணா
நன்றாய் ராச்சியம் நாளுஞ் சிறந்திட
என்றுஞ் சுல்தான் இனிதே யிருந்திட
நன்றென் அட்சதை நல்கிடு வாயே 18

வேறு

வெங்கணான் அவரும் சென்றே விருப்பொடு நவாபைக் கண்டார்
பொங்குபே ரன்பின் மந்த்ர அட்சதை பொலியத் தந்தார்
அங்கவன் பெற்ற பின்னே அவனுளம் மகிழ்ச்சி கொண்டான்
எங்கணும் செழித்த நாடே எழில் பெறும் மகானால் என்றான் 19

ஒருபெரு மகானென் றெண்ணி உண்மையாம் சுல்தான் தானும்
மறுமுறை யவரைக் காண மாஞ்சாலம் பயண மானான்
அருகிலே செல்லும் போதே யவருளம் மகிழ்ச்சி கொள்ள
இறங்கினான் வண்டி யின்று யிருநிலம் படிய வந்தான் 20

திருவருள் ராக வேந்த்ரர் திருமுன்பு சென்றக் காலை
பெருவியப் படைந்தான் மன்னன் பேரருள் ஞானி முன்பு
மரபினை வழாமற்றானே மண்டியே யிட்டபோது
தருமுறை ராச்சி யத்தார் தாரணி சுகமோ வென்றார் 21

நலமுடன் வாழ்கின்றோமே நலம்பெற்றோந் தங்க ளாலே
நிலமுடன் நீருஞ் சேர்ந்தே நீள்குடி வளமும் பெற்றோர்
உளநலம் எல்லாம் நல்ல உங்களின் ஆசியாலே
பலவளம் பெற்றே மக்கள் பாரினில் சிறந்து ளாரே 22

காலத்தில் மழையே பெய்த கழனிகள் சிறப்பா யுள்ள
ஞாலத்தில் மக்க ளெல்லாம் தங்களின் வருகை தன்னால்
சீலத்தால் சிறப்புப் பெற்றார் சிறந்த தென் ராச்சியந்தான்
தாளத்திற் கேற்ற பாடல் போன் று யாம் சிறந்தோ மென்றார் 23

வேறு

சால வேயவண் சாற்றிட ராகவர்
மூல ராமர் ! முழுதருள் பெற்றிட
ஞால மெங்கணு நலமுடன் வாழுமே
சீலந் தன்னால் சிறந்திடு ஞாலமே 24

அல்லல் தீர்க்கும் அருளுளங் கொண்டுளீர்
மல்லல் ஞாலத்து மக்க ளனைவரும்
வல்லவா றுங்கள் வான்னெறி எண்ணியே
அல்ல லுற்றார்க் காம்நெறி யாதென 25

செல்ல லுற்றேன் செயவ தறிகிலேன்
சொல்ல நாவெழச் சோர்வு மடைகிறேன்
உள்ளவா றுங்கள் உயர்நிலை கண்டபின்
வள்ளா லெங்களை வாழ்த்த வகையதோ! 26

அன்றி யும்மனத் தொன்றை யறைகிறேன்
நன்றாய் முடிந்தது நற்பிருந் தாவனம்
சென்று பார்த்தேன் செய்ம்மதில் நற்பணி
என்று காண்பமோ எம்மனோர் உங்களை 27

கன்று பிரிந்த தாயென ராகவர்
சென்ற டைந்த சிறப்பினைப் பெற்றுமே
நன்று நன்று நலம்பெறு நாட்டமே
என்று முங்கள் இதயத் திருப்பனே 28

அன்றியு முங்கள் அல்லலைத் தீர்ப்பனே
குன்று போலுயர் கோபுரத் துச்சியில்
என்று மிருப்பன் இதயத் தெண்ணினால்
நன்றே பெறுவீர் நலம்பெறுங் காட்சியே 29

மாஞ்சாலியம்மன் தரிசனப் படலம்

முன்னை வினையினால் முற்பெறு நற்றவம்
என்னை யுற்றன யினிபிருந் தாவனம்
தன்னை யுணர்ந்தே சார்கின்ற தன்மையால்
அன்னை யருளாய் அனைவர்க்கு மாமே! 30

பேத மேயிலாப் பேரருள் ஞானிசொல்
ஆதி யாயவர் மாற்ற மறைந்தபின்
சேதி யேசொன்னார் செகத்குரு பட்டமே
ஈதலே செய்தார் யிந்துக்கள் ஆவரோ? 31

அப்பெரும் பட்ட மீந்தவன் பாரினில்
ஒப்புயர் வற்ற உயர்குடி தன்னிலே
இப்ராஹிம் அடில் ஷாவெனும் மன்னனே
செப்ப ரும்புகழ் பெற்றனன் செம்மலே 32

சாதி சமயச் சார்பில்சன் மார்க்கமே
ஆதி நாள் தொட் டருள்கின்ற தன்மையால்
ஓது கின்ற உயர்புவி யோர்க்கருள்
ஈத லேகோள் என்றனர் ராகவர் 33

ஒன்றி யுள்ளம் உவப்புற மன்னவன்
நின்று கண் ணீர் நிலத்திடை சோர்தர
என்று முங்கள் இனிதருள் பெற்றிட
நன்றி என்றவர் நல்லடி தாழ்ந்தனன். 34

ஆக பாடல் தொகை – 1554

## பஞ்சமுக ஆஞ்சநேயர் தரிசனப் படலம்

மல்லல்மாஞ் சால வடக்கினில் ராகவர்
வல்லவா றாம்வழி கண்டு வந்துளார்
கல்லுங் குன் றுங் கணதா ளத்திடை
அல்லல் தீர்த்தார் ராகவர் அங்கணே 1

வேறு

சென் று கணதாளச் சிறப்பினைக் கண்டதால்
ஒன் றி கணதாளத் தோங்கிட ராகவர்
அன் று கணதாளத் ததிசயங் கண்டுளார்
என் றுங் கணதாளம் ஏற்றமும் பெற்றதே 2

குன் றின் மேலொரு குன் றெனப் பாறையே
நன் றே யிருந்தன நாற்புறஞ் சூழ் ந்துமே
ஒன் றி யுள் ளம் ஒருமையின் தியானமும்
நன் றே செய்தார் நற்கண தாளத்தே ! 3

சித்தரின் சித்தராய் திகழ் ந்திட ராகவர்
முத்தரின் முத்தராய் முழுதருள் ஞானியாய்
இத்தரை நீங்கியே யினிதருள் பெற் றிட
ஒத்திகை பார்ப்பதற் கொத்தது போன் றதே 4

மூல ராமரின் மந்திரம் மூச்சதாய்
சீல ராகவர் வாழ்வு சிறந்திட
ஞால மீதினில் ராமரின் பக்தனைக்
கால முன் றிலு கருத்தி லிருத்தினார் 5

அஞ்சு முகத்துடன் அஞ்சனை புத்திரன்
தஞ்ச மென்ன மனத்திடை ராகவர்
எஞ்சி டாதிருந் தார்பல காலமாய்
பஞ்ச முகத்தொடு பார்த்திடத் தோன்றினார் 6

## வேறு

நன்று நன்று நலம்பெற ராகவர்
அன்று நின்றவர் ஆனந்தங் கொண்டனர்
ஒன்றியுள்ளம் உறுதியைப் பெற்றபின்
குன்றினின் றும் குறுகினார் ஊரிடை 7

தவமுடிந்தது தண்ணருள் ராகவர்
பவங்கடந்த நற் பான்மையி னாயினர்
அவமறந்திவ் வல்லல் அகன்றிட
தவமளித்திடு தகுதியை யெண்ணினார் 8

## வேறு

துறவற மேற்றற் கேற்ற தூயநற் பெரியோர் தம்மை
திறமதைக் கண்டு வந்தார் திருமடப் பொறுப்பை யேற்கும்
அறவிய நெஞ்சங் கொண்ட அந்தணர் யாரென் றெண்ணி
தரமுடை சாத்தி ரத்தில் தகுந்தவர் ஒருவர் தேர்ந்தார் 9

முற்பெறு மில்ல றத்தின் மூத்தவர் குருரா ஜன்தன்
அற்புறு தன்மை மிக்கார் அவருடைப் பேர ரானார்
கற்றவ ரானா ரேவெங் கண்ணனாம் நாமம் பெற்றார்
நற்பெறுத் தவத்த ரென்றே நல்கிட முடிவெடுத்தார் 10

தக்கதாம் நல்ல நாளில் தண்ணளி ராகவேந்த்ரர்
மிக்கதாந் துறவ றத்தை மேன்மையாம் வெங்கணர்க்கு
ஒக்கலே யென் றுமெண்ணார் யோகீந்த்ர தீர்த்தராக
அக்கணத் தளித்த மேலாம் அறந்தனைப் போற்று நாடே 11

ஆக பாடல் தொகை – 1565

## ஸ்ரீ ராகவேந்த்ரர் பிருந்தாவனப் பிரவேசப் படலம்

சாலி வாகனச் சகத்தினைம் மூன்றதாம்
ஏலு நூற்றின் எழுபதோ டிருபதும்
சாலு மூன்றினில் சார்ந்தவவ் வாண்டினில்
ஞாலங் காண்பிருந் தாவனம் நண்ணினார் 1

மாதம் ஆவணி மதியுந் தேய்பிறை
ஏதம் இல்லான் எய்தநாள் மூன்றதாம்
சீத ரன்சீர் அருள்குரு வாரமே
வேதங் கற்ற வேதியன் என்னவே 2

சற் று யேறக் குறையமுன் னூறிலே
பெற் று மேபிருந் தாவன நண்ணியே
பற் று மேயறுத் தாரிந்த பாரிலே
முற்ற வேதுறந் தார்முழு ஞானியே 3

### வேறு

துங்கபத் திரையின் கண்ணே தூயவர் இருக்கை தேர்ந்தார்
சங்கமாய் மக்கள் அன் று சார்ந்தனர் மகானைப் பார்க்க
கங்குல்சூழ்ந் திருந்த காலை கருத்துடன் பக்தர் கூட்டம்
பொங்குமாக் கடல்யீ தென்ன புவியிடைப் பொலிந்த தம்மா 4

முன்ன தாய் எழுந்தார் ராக வேந்திரர் நீரில் மூழ்கி
நன்னய மானமெய்யில் நலமிகு கோபி தன்னை
மன்னிட வணிந்தார் மந்த்ரம் மனதினில் ஜபித்தவண்ணம்
தன்பிருந் தாவ னத்தின் தானமர்ந் திருந்தார் நன்றே 5

## வேறு

ஐயன் மூல ராமரின் பூசையை
தொய்வில் நன்கு தொடர்ந்தவர் ஆற்றினார்
கையின் ஆற்றக் கருத்தின் யோகீந்திரர்
செய்வ தற்கே சேர்ந்திருந் தார்களே 6

மன்னவன் திவானும் மற்றோ ரிடத்திலே
என்ன செய்வ தென்றறி யாமலே
உள்ளி யிருந்தார் உயர்ராக வேந்திரர்
பன்னும் வார்த்தைக்கே பரிந்திருந் தார்களே 7

விடியும் முன்னே வேதமே யோதுவார்
மடியு டுத்தியே மந்திரம் ஓதினார்
படியின் பக்தர்கள் பண்பின் மிகுத்தனர்
அடியிற் றாழ்ந்தே அமர்ந்திருந் தார்களே 8

மலையம் மாருதம் வீசுமக் காலையில்
[illegible] னக்குவி மலர்களும் ராமரை
அணைவு றாமனம் அவரிடத் தாகவே
நினைவெ றச்செய்யும் பூஜைக்கு நேர்ந்தனர் 9

ஆயிர மாயிரம் பக்தர்கள் கூடினார்
தாயினு ராகவர் தண்ணருள் சுரந்திட
சேயின் மக்கள் சேர்ந்தனர் ராகவர்
வாயின் வார்த்தைக்கே வந்திருந் தார்களே 10

மானும் பூஜை மனத்தினி லாயினும்
வானும் மண்ணும் வணங்கிடு ராகவர்
கானும் மலையுங் கடந்தவர் யாவர்க்குந்
தோனும் படியே தோன்றிருந் தாரவர் 11

சிறிது சிறிதாஞ் சீற்றமே யற்றவர்
பெரிது பெரிதவர் பேரருள் ஞானமே
அரிது அரிதவர் அருகிருந் தருளலே
உரிது உரிதிவ் வுலகோர்க்(கு) என்றுமே 12

மூல ராமரின் முழுதருள் மந்திரம்
சீல ராகவர் சிறந்திடுந் த்யானத்தில்
சால வேயிருந் தார்சற்று நேரமே
ஞால மெங்கணும் நன்மைவி ளையவே 13

வேறு

மக்களும் மன்னன் எல்லாம் மனத்தினில் உணர்ச்சி பொங்க
அக்கணத் திருந்த போதே யருகினில் இருந்த சீடர்
நெக்குநெக் குருக ராக வேந்திரர் சிறிது நேரம்
தக்கதாந் தியானத் தின்கண் தனைமறந் திருக்க லுற்றார் 14

அளிமிகு ராக வேந்த்ரர் தியானத்தின் அமர்ந்த போது
களிமிகு மக்கள் கூட்டம் கண்கள் நீர் பொழிந்ததென்னே
வெளியினில் மேள தாளம் விண்ணவர் கேட்க லானார்
ஒளிமிகு நயனங் கொண்டார் உயரருட் பார்வை பெற்றார். 15

வேறு

அளிசி றந்தவ ராயினர் ராகவர்
தளியின் முன்னே தானமர் தியானத்தின்
வெளியின் மேள தாளம் ஒலித்திடக்
களிசி றந்திடக் கண்கள் திறந்தனர் 16

வேறு

ஆங்கவர் பக்தர் தம்மை யருட்கணால் பார்வை யிட்டார்
தாங்கருந் துயரோ டாங்கே தனைப்பார்க்க வந்தோர் வாழ்வு
ஓங்கிடக் கையு யர்த்தி உரைத்தனர் ஆசி தன்னை
பாங்குடன் அவர்களெல்லாம் பக்தியின் பணிந்து நின்றார் 17

நலக்குரியராம் மூல ராமரின் பூசைக் கண்ணே
வலக்கரம் உயர்த்தி ராக வேந்திரர் வந்தோர்க் கெல்லாம்
அலக்கணே யழிய அன்னார் அவனியில் சிறந்தே ஓங்க
கலக்கமே யற்று வாழ்வில் கடைத்தேறவருளி னாரே 18

வேறு

மல்லல் ஞாலத்து மாபெரும் அன்பர்காள்
அல்லல் அற்று ஆனந்தங் கொண்டிட
வல்லவா றுங்கள் வரவினைக் கண்டுமே
உள்ள மகிழ உரைக்கின்றே னுண்மையே 19

நல்லதோர் இந்த நாளில் நான்வனம் செல்லு கின்றேன்
மல்லல் மா ஞாலத் துள்ளீர் மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும்
அல்ல லே யுற்றார் போன்றே அனைவரும் இருக்கின் றீர்கள்
நல்லுரை தனையே கேட்பீர் நானிலத் தென் றும் வாழ்வீர் 20

பூதமாம் உடலோ டின் று புகுந்தனன் ப்ருந்தாவ னத்தில்
ஆதலின் நீங்க ளெல்லாம் அல்லலே யடைந் துள் ளீர்கள்
காதலின் செல்கின்றேன்யான் கருத் துடன் இருக்க வேண்டி
சாதலில் வாழ்வன் யானே சகத் துளோர் நன்மைக்காக 21

எத் துணை யாண்டா னாலும் இருப்பனிவ் வுடலிலேடே
இத்தரைக் கலியுகத்தை யேற் றுநான் நடத்தவேண்டும்
தத்தம தொழுக்கந் தன்னைத் தரணியோர் ஆற்றவேண்டி
சித்தத்தேமுடிவு கொண்டே செல்கின்றேன் உண்மையாமே 22

நானிந்த தர்மம் மாறி நலங்கெட மீற லாமோ?
வான்வழிச் செல்லும் மார்க்கம் வகுத்ததைத் தவிர்க்கலாமோ?
கான்வழிச் செலவொ ழித்தே கலியுகத் தர்மந் தன்னை
நான்வழிக் கொண்டேன் நீங்கள் நலமுடன் வாழ வேண்டும் 23

இற்றைநாள் தொட்டு யானும் எழுநூறு ஆண்டி ருப்பேன்
சற் றுமே ஐயம் வேண்டாஞ் சரீரத்தில் வாழ்ந்து கொண்டே
பற்றற் று வாழ்வேன் ப்ருந்தா வனமதே பரவித் தோன் றும்
நற்றவத்தாலே யெங்கும் நலம்பெறத் தோன் றும் உண்மை. 24

வழுவிலா துலகோர் என்றும் வாழ்வியல் அறிந்து போற்ற
பழுதிலா தென்றன் வார்த்தை பாரினில் நடக்குங் காண்பீர்
எழுநூறு ஆண்டு காலம் இருப்பன்யான் என்ற வுண்மை
எழுநூறு வனமே எங்கும் எழுந்திடும் பாரில் காண்பீர் 25

தூயநற் பத்தியோடு தொடர்ந்தெனை நாடி வந்தால்
சேயென அருள்வன் யானும் செய்பிழை மறப்பன் என்றுந்
தாயெனத்தாங்கு வேனைத் தன்மனத் திருத்தி விட்டால்
நீயென்றும் வாழ்வாய் யிந்த நீணிலத் துன்பம் அற்றே. 26

தெரிந்திட வேண்டுந் தெய்வ பக்தியால் வாழ்வீர் என்றும்
பெரியவர் தம்மை நீங்கள் பேணிட வேண்டும் நாளும்
மரியாதை யாக யிந்த மண்ணினில் வாழ்வைக் கொண்டே
அரிநாமங் கூறிவாழ்ந்தால் அருளுவன் நாரணன்றான் 27

வேறு

இன்னுஞ் சற்று நேரத்தில் நீங்களே
மன்னும் மூல ராமரின் பூஜையைக்
கண்ணின் காணப் போகின்றீர் ஆதலால்
எண்ணி யுங்கள் இதயத்தே யேத்துவீர் 28

ஏலும் படிக்குங்க ளிதயத்தி னிட்டமாய்
காலம் படிக்குநற் பூசையைச் செய்விரேல்
கோளு நாளு கொள்கையி னின்றிடு
மேலு மேலு மேன்மை யடைவிரே 29

உண்மையே கொண்டு நீவிர் உறுதியாய் வாழ்வீரானால்
இன்மையே யில்லா தாகும் ஏற்றமே யடைவீர் பாரில்
புன்மையே யற்று வாழ்வீர் பூமியில் புகழ் பெற்றோங்க
நன்மையே விளையு மென்றும் நாரணன் துணையுண்டாமே. 30

அருந்துவீர் உணவு நன்றாய் அனைவரும் நீங்கள் இன்று
இருந்திட வேண்டு மிங்கே யின்பமே விளையு மென்றும்
வருந்தவே கூடாதி யானே வான்நெறி செல்லு கின்றேன்
பிருந்தா வனமே யாகும் பெருமையாம் இந்த நாளில் 31

வேறு

சீலங்கொண்டு நீவிருஞ் சிறந்தவிந்த நாள்முதல்
மூல ராமர் பூசையை மனத்தினி லிருத்தியே
காலங்கால மாகநீவிர் காத்திடுவீர் என்றென்றும்
ஞாலமீதில் ஞானியாய் நவின்றார் ராகவேந்திரர் 32

வேறு

உத்தம னாக வாழ்வீர் உள்ளத்தில் தூய்மை கொண்டே
நித்தலும் பூசை செய்தால் நினைத்தது நடக்குங் காண்பீர்
முத்தரைப் போன்றே சொன்னார் முனிவராம் ராக வேந்த்ரர்
இத்தரை மக்கள் வாழ்வில் ஏற்றமே யடையவேண்டி 33

வாட்டமே யற்று மண்ணில் வாழுநல் நெறியைத் தேர்வீர்
நாட்டமே மனத்திற் கொண்டு நலம்பெறும் பூசை செய்தால்
கேட்டது கிடைக்கும் பாரில் கீர்த்தியைப் பெறுவீர் என்றார்
நாட்டிலே மக்கள் வாழ நாடினார் ராகவேந்த்ரர் 34

அந்தண்மை மிக்க தூய அந்தணர் வேத மந்த்ரம்
சிந்தையே யுருவா யுள்ள சீடர்கள் ஓதும் போது
வந்தனை செய்தார் மக்கள் வாழ்பிருந்தாவ னத்தை
மந்திரா லயமாய் எண்ண மனத்திடத் திராக வேந்த்ரர். 35

தக்கவக் கணத்தே நன்மை மிகுந்திட பூசை செய்தார்
திக்குசெல் விசய ராமர் செயராமர் சேர்ந்தி ருக்க
மிக்கதாம் மூல ராமர் மேன்மையை யறிந்து போற்றி
ஒக்கவே வைத்தார் சேர்த்தே யுயர் மனத்துணர்ச்சி மிக்கார். 36

வேறு

சாலக்ரா மம்வைத் தாரவர்
மூல ராம ரின்முதல் ராமரின்
பாலபி டேகமா ராதனை
ஏலவே செய் தின்னிசை பாடவே 37

வேறு

உருகுகின்ற உணர்ச்சியைக் கண்டுமே
அருகிருந்த சீடர் அழைத்தவர்
பெருமை சேர்தரு வீணையைப் பெற்றுமே
சுருதி கூட்டினார் சொற்றவ மிக்கதே 38

எந்தனைக் காப்பாய் முகுந்தா - வாழ்வில்
பந்தமே கொண்டுன்றன் பாதமே போற்றினேன் - எந்தனை
மந்தரமலை தூக்கு நந்தகோபன் மைந்த
சந்ததம் தொழுதுனைச் சார்ந்துமே பற்றினேன் - எந்தனை 39

எந்தன் மனம் நொந்துன் திருவடி வந்தேனே
பந்தம் அறுத்துன்றன் பதமலர் பற்றிட
சிந்தை யறிந்திலேன் சீர்த்தி யடைந்திட
உந்தன் குழந்தையான் உற்ற துயர் தீர்ப்பாய் - எந்தனை 40

தீரமிலேன் நானுன் திருவடி மறந்தேனே
வீர மிலா நானே வீணனைப் போலானேன்
ஈர நெஞ்சை யெனக்கு ஈந்தருள்வாய் கண்ணா
வீரந் தனைப் பெறவே வேண்டினேன் நானுன்னை - எந்தனை 41

பார்த்தனின் சாரதியாய்ப் பாரில் விளங்கும் கண்ணா
வார்த்தையே கேட்டென்றன் வாழ் வளிப்பாய் இந்நாள்
நேர்த்தியிலா யானும் நேர்மையிலா திருந்தேன்
பார்த்திபனே யுலகின் பாரம தானேனே - எந்தனை 42

உன்னை விட்டா லெனக்கு உய்வழி ஒன்றுண்டோ
என்னை காப்பாய் முகுந்தா ஈடேற அருள்செய்வாய்
பொன்னை விரும்பினேன் பூதல வாழ்க்கையேன்
உன்னை யறிந்திட உயர்வளிப்பாய் கண்ணா - என்தனை 43

நர்த்தனம் ஆடக் கண்டார் கோபாலனே
நர்த்தனம் ஆடக் கண்டார் - ராகவேந்த்ரர் - நர்த்தனம்
நின்ற கோபாலனே நேர்த்தியாய் ஆடினார்
என்றன் குறை தீர்ப்பாய் இன்னருள் தந்திடாய் - நர்த்தனம் 44

பக்தர்கள் குறை தீர்க்கப் பரந்தாமனே யன்று
பக்தர்கள் பாடவே பரிந்துமே யாடினார்
பக்கலே யிருந்தவர் பார்க்கமெய் சிலிர்த்தனர்
தக்கதாங் காலத்தே தான்மகிழ்ந் தேயன்று - நர்த்தனம் ஆடக் 45

கனவோ யிது நனவோ யென மக்கள் மதி மருண்டார்
நனவே யென எண்ணார் நலங் கொள்ளுமிந்த காட்சி
கனவே யென எண்ணத்தங் கண்கள் நீர் பொழியும்
யெனவே யிது நனவேயென யெண்ணியிடர் அற்றார் 46

வேறு

பேத மற்றிப் பேருல கந்தனில்
வேத கீதங்கள் வேதியர் ஓதினார்
சீதரன் மத்வ சாரியர் நூல்தனை
ஓது பண்டித ருள்ள நெகிழ்ந்தனர் 47

முன்னை வினையினால் முழுதருள் பெற்றனர்
தன்னை யுணர்ந்தனர் தண்ணருள் சுரந்திட
அன்னை தானென அனைத்துல கந்தனை
எண்ணி எழுந்தா ரிருக்கையின் ராகவர் 48

பேரி படகம் பிறங்கிட நாயனம்
நேரி தாக நீணிலத் தோர்க்கெலாம்
வாரி வழங்கும் வள்ளலாய் ராகவர்
மாறி லாப்புகழ் மன்னிட வந்தனர் 49

அருகில் வந்தனர் அருந்தவ மாமுனி
உருகு கின்ற உள்ளத்தின் பக்தர்கள்
பெருக கண்ணீர் பேரருள் ராகவர்
பெருமை சேர்பிருந் தாவனம் நோக்கியே 50

ஆடல் கொண்டார் அவனியில் ராகவர்
பாடல் பெற்றுமேற் பதவியைப் பெற்றுளார்
சூடம் ஆரத்தி யின்பிருந் தாவனம்
சீடர் செய்தார் சிறப்பொடு பூசனை 51

தீர்த்தம் வழங்கினார் திருமிகு ராகவர்
வார்த்தை யால்நல் லாசி வழங்கினார்
காத்தி ருந்த பக்தர்கள் கண்களில்
நீர்த்து ளிகள்நி ரம்பி வழிந்தன. 52

வாசி நடத்தும் வல்லமை பெற்றவர்
ஆசி கூறி அட்சதை வழங்கினார்
பேசிடார் மக்கள் பேரருள் எண்ணியே
நேசித் தாரவர் நின்மலன் தாளினை 53

அளவிலாப் புகழ் பெற்றுள்ளார் ராகவர்
துளவ மாலையுந் தண்டமுங் கொண்டுதன்
வலது கையினில் வாங்கிக்க மண்டலம்
இலகு சீரிடக் கையினி லேந்தினார் 54

வேறு

காரண மூலன் சங்கு கர்ணர்தாம் ராக வேந்த்ரர்
நாரணன் புகழே நாளும் நவின்றிட நன்மை மிக்க
தாரணி தனிலே ஓங்கி நிலைத்திடு தன்மை கண்டு
நாரணன் நாமந் தன்னை நாவினால் நவில லுற்றார் 55

நாமுமோம் நாரண னென்றே
தோமிலா நாமம் ஒன்றே
நாமோத வேண்டு மென்றே
தாமோதிச் சென்றா ரன்றே 56

வேறு

அன்புறத் தம்பக்தர்கள் காணவே
நன்புறத்து நற்காவியைப் போர்த்தினார்
பண்புறப் பிருந்தாவனஞ் சுற்றியே
தென்புறத்து வாயிலின் ஏகினார் 57

வேறு

மெய்வகை கண்டு மேலாம் பதவியை யடைந்துவிட்டார்
உய்வகை யோர்ந்தே ராக வேந்திரர் உணர்ச்சி மிக்கார்
செய்வகை யறிந்தா ரிந்த செகமது வாழ வேண்டி
தெய்வீக ஒளியைப் பெற்றே சேர்ந்தனர் செம்மையானார் 58

நிறைத்த நற் பத்தி யோடு நின்றிட்டார் பக்தர் எல்லாம்
சிரத்தினைத் தாழ்த்தி யன்னார் செய்வகை கண்டு போற்றி
கரத்தினை யுயர்த்தி மேலே கண்கள் நீர் பொழியும் போது
சிரித்தநன் முகத்தின் ப்ருந்தா வனமதைச் சேர்ந்தார் நன்றே 59

எங்கணும் பக்தர் கூட்டம் எழுப்பிடும் ஒலியேவிஞ்ச
மங்கள வாத்தி யங்கள் மறுபுறம் ஒலிக்க மேலாந்
தங்களின் கண்ணால் ராக வேந்திரர் தரிசனந்தான்
பொங்கிடும் உள்ளங் கொண்டே புவியுளோர் தரிசித்தாரே! 60

யோக முத்திரையின் பத்மா சனத்தினின் ராக வேந்த்ரர்
ஏகனாய் இருந்தார் என்னே யியல்பிருந் தாவனத்தே
சோகமே உருவாய் மக்கள் சொல்லெழா துணர்ச்சி மிக்கார்
ஆகமே நனையக்கண்ணீர் ஆறென வழிந்த தம்மா ! 61

வேறு

அளவிலாப்புகழ் கொண்டவர் ராகவர்
துளவ மாலை வலக்கரத் தேந்தினார்க்
களவில் பக்தர் தங்கண்ணும் கருத்துமே
துளவ மாலையைச் சூழவே நோக்கின. 62

வேறு

தரத்தினில் உயர்ந்த ஞானி தண்ணளி ராக வேந்த்ரர்
வரத்தினை வழங்குந் தெய்வ வடிவுடன் வையந் தன்னில்
கரத்தினில் உள்ள ப்ரம்ம தண்டமுங் கமண்டலத்தைப்
பரத்தினை நினைத்தே வைத்துப் பிடித்திட்டார் துளவ மாலை 63

விழுந்தது துளவமாலை வீடெனப் பிருந் தாவனத்தே
எழுந்தது ராக வேந்த்ரா என்றிடு முழக்கம் மேலே
வழிந்தது கண்கள் நீரே வானிடைத் தேவர் கூட்டத்
திழிந்தது மலர்கள் என்னே யியம்பின வாத்தியங்கள். 64

ஆக பாடல் தொகை –1629

## அப்பண்ணர்க்கு அருள் செய் படலம்

ஒப்பிலா ராக வேந்த்ரர் உயர்ந்த நற் சீடர் தம்முள்
அப்பண்ணச் சார்யர் என்னே அத்யந்த சீட ராவார்
முப்போதும் ராக வேந்த்ரர் முழுதருள் பெற்று வாழ்ந்தார்
ஒப்பருந் சீடர் தம்முள் உயர்ந்தவந் நாளில் இல்லை. 1

திருமிகு ராக வேந்த்ரர் சேர்ந்துடன் இருக்குஞ் சீடர்
ஒருசில நாட்கள் முன்னே உயர்மடப் பணியை யாற்ற
அருமையாய்க் கடந்தே வாற்றை அருகிலே வுள்ள வூராம்
பெருமைசேர் ஆற்றின் பக்கம் பிச்சாலே கிராமம் சென்றார் 2

சென்றவக் காரியந்தான் சிறப்புடன் முடிவதற்கே
இன்றிலை நாளை யாகும் என்றவர் தங்கலானார்
நன்றதாங் காரியத்தை நலமுடன் முடித்துப் பின்பே
ஒன்றிடும் உள்ளத்தாலே உயர்மடத் ததனை நாட 3

நெடிதிலை கரைதான் ஆற்றை நிச்சயம் கடந்துவிட்டால்
விடியுமுன் சென்றே பார்க்க முடியுமே யென்ன வெண்ணி
அடியவர் அப்பண்ணர்தாம் அருள்பிருந் தாவனத்தை
அடியனேற்கு அருள்வாய் ராக வேந்திரா என்றே வந்தார் 4

### வேறு

அங்கு வந்த அப்பண்ணச் சாரியார்
துங்க பத்திரை நதியினைக் கண்டனர்
வங்கக் கடலாய் வருநதி வெள்ளமே
எங்ஙன் கடப்ப தெனவவர் எண்ணினார் 5

உரைசெ யாதவ ருள்ளெழு மூச்சினால்
கரைபு ரண்டிடு வெள்ளத்தைக் கண்டிட
இறைசெ யலிது வோவென எண்ணினார்
குறைப டுத்திக் கொண்ட கொள்கையே 6

மேகம் போலருள் மேன்மை யுடையவர்
ராக வேந்திரர் நலம்பெறு நாமமே
தாகந் தணிக்குந் தன்மை வழுத்தினால்
சோகந் தீர்க்குஞ் சூக்கும மாமே 7

எண்ணி யிறங்கினார் எண்ணமீ டேறவே
திண்ண மாய்த் திகழ் திருமிகு ராகவர்
அண்ண லாய்த் திகழ் அவர்திரு நாமத்தை
எண்ணி யிறங்கினார் எண்ணமீ டேறுமே 8

காற்றைப் பிடித்துக் கடத்துள் அடைத்துமே
கூற்றைத் துரத்துங் கொள்கை யுடையவர்
மாற்றிப் பிறக்கும் மகத்துவங் கொண்டவர்
ஆற்றைக் கடக்க அரிதவர்க் காகுமோ? 9

சாத்திரங் கற்றிச் சகத்தி லென்பயன்
காத்திர நிரப்பவே காசினி யலைகிறீர்
பாத்திர நல்ல பதந்தனைப் பெற்றிட
தோத்திரஞ் சொல்லிநுந் துயரினைப் போக்குவீர் 10

குருராக வேந்த்ரா
குருராக வேந்த்ரா
குருராக வேந்த்ரா
குருராக வேந்த்ரா 11

சாற்றினார் ராகவேந்த்ரர் சற்குரு தனை நினைந்தே
ஆற்றிடை நாமம் ஓத அகத்திலே யப்பண்ணார்தாம்
நாத் துதி செய்த வண்ணந் தனிமையில் துங்க **பத்ரை**
ஆற்றதி னிடையிறங்கி யதனைத்தாங் கடக்க லுற்றார் 12

தாந் துதி செய்தா ரென்றே தண்ணளி ராக வேந்த்ரர்
ஏந்தினார் அப்பண் ணார்க்கே எளியராய் இறங்கிவந்தே
நீந்தியே செல்லு தற்காம் நிலையிலா நீரில் செல்வோர்
சாந்தியே யடைவரன்றோ சற்குரு நாமம் ஓதின் 13

கடந்துதான் வந்தே கண்டார் கணக்கிலாப் பக்தர்கூட்டம்
நடந்தது ராகவேந்த்ரர் நற்பிருந்தாவ னந்தான்
இடந்தனில் இருந்து வாழ்ந்தேன் இத்துணைக் காலமாக
மடந்தனில் வாழ்ந்தும் முன்னே மாபாபி யானேன் என்னே! 14

அப்பண்ணச் சாரியர் தான் அடைந்தவக் கலக்கத்தையே
இப்புவி மக்கள் கண்டே இயம்பு வ தறியா தானார்
ஒப்பிலா ராக வேந்த்ரர் உயர் பிருந் தாவனத்தை
எப்போது காண்பேன் என்றே ஏக்கத்தால் இடிந்தே போனார் 15

சாத்திரங் கற்ற மேலாஞ் சன்மார்க்கி யான சீடர்
நேத்திரத் தாலே பிருந்தா வனத்தையே காணவில்லை
மாத்திரைப் பொழுதும் அன்னார் மனத்துயர் நீங்கவில்லை
தோத்திரம் பாடி வந்தார் சொல்வதும் அறியா தானார் 16

இப்புவி வாழும் ராக வேந்திரர் அருளை வேண்டி
அப்பண்ணச் சாரியர்தாம் அவருடைத் தோத்திரத்தை
முப்பது பாடல் மேலே முடிவிலாது அடியாம் மூன்றில்
அப்பாடல் முடியாதாக அதனெடே நிறுத்திவிட்டார் 17

இப்புவி வாழ்க்கை யேனோ இறப்பதே நன்றென்றெண்ணி
ஒப்பில்லா பிருந்தாவ னத்தின் உள்ளிருந் தெழுந்த தோர்சொல்
அப்பண்ண சாரியர்க்கு அயக்கிரீவர் அவரே சாட்சி
அப்பெரும் வாசகத்தால் அவர் பாடல் முடித்தாரம்மா! 18

இட்டமாய் ராக வேந்த்ரர் இணையடி போற்றிசெய்தால்
கட்டமே யில்லை மேலுங் காசினி புகழுண்டாகும்
மட்டிலா மகிழ்ச்சி யாலே மன்னனாய் வாழ்வர் மண்ணில்
அட்டலட்சுமியும் வாழ்வாள் அயக்கிரீவர் அவரே சாட்சி. 19

**ஆக காண்டம் ஆறனுக்கு பாடல் தொகை – 164ப்**

ஸ்ரீராக வேந்திரர் துணை

# 7. நிலைபேறு காண்டம்

## ஸ்ரீராகவேந்திரர் துதி

எண்ணினார் எண்ண மெல்லாம் ஈடேற வைக்கும் வள்ளால்
மண்ணினில் ராகவேந்த்ரா மகத்துவம் நிகழ்த்து கின்றாய்
எண்ணிய எண்ண மெல்லாம் ஈடேற வைக்க வேண்டிப்
பண்ணிலும் பாடல் வைத்தே பாடினேற் கருளு வாயே 1

## மந்த்ராலய மகிமைப் படலம்

வள்ளல்ம் ராக வேந்த்ரர் வயங்குப்ருந் தாவனத்தால்
தள்ளரும் மடத்தை யென்னே யோகீந்த்ரர் தானே யேற்றார்
உள்ளவா றொழுக்கங் கொண்டார் உடன் நால்வர் வந்து சென்றார்
எள்ளலில் அம்ம டத்தை யேற்றார் வாதீந்த்ர தீர்த்தர் 2

முந்திய ஆச்ரமத்தில் முதன்மையாய் விளங்கும் பேரர்
ஐந்தாவ தாக வந்தார் ஆசார்ய பொறுப்பை யேற்றார்
நந்தலில் நூலியற்றும் ஞானமும் வாய்க்கப் பெற்றார்
புந்தியில் வைத்துப் போற்றுங் குருகுணத் தவனம் ஒன்றே 3

முப்பதோ டாறு செய்யுள் முடிந் திட்ட நூலதாகும்
இப்புவி ராக வேந்த்ரர் இயற்றிய மகிமையெல்லாம்
தப்பாதே யுலகத் தோர்க்குத் தந்திடு நூல்தான் என்னே
அப்பெரு நூலை யன்னார் அரங்கேற்றஞ் செய்யலானார் 4

மூல காரணன் முழுதருள் ராகவர்
மூல மாம் பிருந்தாவனத் தின்கணே
சீலங் கொண்ட சிறந்தவா தீந்திரர்
ஏல வேயரங் கேற்றஞ்செய் தாரவர் 5

சீடர்கள் பக்தர்கள் சிறந்திடு நிகழ்ச்சியில்
கூட விருந்தார் குருகுணத் தவனமே
ஏடெ டுத்தே யியல்பினிற் பாடினார்
ஆடி யசைந்ததே யப்பிருந் தாவனம் 6

## வேறு

அற்புதம் அற்புதமே - அசைந்தாடிய தற்புதமே
முற்பெறு புண்ணியமே - நம் முன்னோர் சொல் தத்துவமே
நலமுடன் பாடுகின்றார் - நல் பிருந்தாவனத்தால்
தலங்களில் உள்ளோர்க்கும் - தண்ணளி செய்கின்றார் (அற்புதம்) 7

இக்கலி யுகத்திலே - நம் இன்னலைத் தீர்க்கின்றார்
தக்க சமயத்திலே - அவர் தண்ணளி செய்கின்றார்
ஒக்கலைப் போலவே - நம் உடனிருந்தே நமக்குச்
சிக்கலைத் தீர்த்துமே - பல சிறப்பினை யளிக்கின்றார் (அற்புதம்) 8

கூடியிருப்பாரே - அவர் குறைகளை தீர்ப்பாரே
நாடி நினைந்தார்க்கு - என்றும் நலமது செய்வாரே
பாடியவர் நாமம் - நாம் பலபடப் போற்றிடினே
தேடியே வந்தே தான் - நம் தீவினை தீர்ப்பாரே (அற்புதம்) 9

சால நீங்கள் சாற்றிய பாடலென்
றேலவேயசைந் தாடிய செய்கையால்
மேலிருந்த பூக்கள் சிதறியே
ஓலைச் சுவடியின் மேலே விழுந்தன. 10

ஏற்றுக் கொண்டார் யான் தந்த நூலினை
ஆற்றும் உரையால் அண்ணல் மகிழ்ந்துமே
போற்றிப் புகழ்ந்தனர் புவியோர் பக்தர்கள்
சாற்றிச் சென்றனர் சற்குரு நாமத்தை 11

காலம் மூன்றும் அறிந்தவர் ராகவர்
சீலங் கொண்ட சிறந்திட்ட சீடரின்
காலங் கடந்தவர் கனவிலே தோன்றியே
ஏலுமென்றார் இனிபிருந் தாவனம் 12

## வேறு

முன்னதாம் யுகத்தில் மூல ராமரே முடுகி வந்து
நன்னய மாகத் தங்கி நலம் பெற்ற விடமேயென்று
மன்னிய விடமே மாதா வரத்தினில் கொணர்ந்தகல்லால்
தன்பிருந்தா வனத்தைத் தலைமையால்திவானே செய்தார் 13

முற்படி திவானே மாதா வரத்தினிற் கொண்டு வந்த
கற்களால் செய்த தாகும் காலியாய் வனமே யுள்ள
தற்செய லாக யிங்கே தனித்துமே யிருக்கக் கண்டார்
நற்செயல்வா தீந்த்ரர்க் கென்றே நலம்பெற வமைத்த தாமால் 14

காலம் மூன்றின் கணக்கை யறிந்தவர்
ஞால மீதில் நலம் பெற ராகவர்
சீலங் கொண்டு சிறப்புடன் வாழவே
வால றிவின்வா தீந்தர்க்கு ஈந்தனர் 15

வாலறிவினன் வார்த்தையில் வையத்தில்
சீலங் கொண்ட சிறந்தவா தீந்தரே
ஞால மீதில் நற்பிருந் தாவனம்
ஏல வெய்திட வின்பங்கொண் டாரவர் 16

வேறு

தீர்த்தர்கள் பலருந் தோன்றி திருமிகு மடத்தைக் காத்தார்
வார்த்தையில் வயங்க லானார் வியாச தத்வக்ஞ தீர்த்தர்
பார்த்திப னென்ன வாழ்ந்தார் பாரினில் சிறப்புற் றோங்கு
நேர்த்தியாய் வாழு நாளில் நேர்ந்ததோர் அற்பு தந்தான் 17

அனுதினம் ராக வேந்த்ரர் அவருடை நூலைப் பற்றி
தனதிடம் பாடங்கேட்குந் தகுதியால் சீடர் தாமும்
மனதிடம் புரியும் வண்ணம் மாண்பொடு நடத்தி வந்தார்
இனி நீங்கள் உரைக்க வேண்டும் என நியாய சுதாவைக் கேட்டார் 18

சுதாபரி மளந்தான் தன்னால் சொல்லிய வுரைநூ லாகும்
சதாவவர் நூலைப் பேசி சலிப்புமே யடைந்த தாலே
சுதாபரி மளத்தி லுள்ள சொற்பொரு ளறியா ரில்லை
சுதாபரி மளமே யார்க்குஞ் சுலபமாய் புரியுமென்றார் 19

தீர்த்தரும் சுதாவை ஓர்நாள் திறமுடன் நடத்தும் போது
நேர்த்தியா யுள்ள சீடர் நினைந்து மோர் கேள்வி கேட்டார்
பார்த்திப னாகுந் தீர்த்தர் பதிலேதுஞ் சொல்லா ராகி
வார்த்தையே யுரைத்தார் என்னே வழிநாளில் சொல்வேம் என்று 20

ஆண்டவன் ஒருவன் உண்டு அனைவர்க்கும் பொதுவாயுள்ளான்
மாண்டிடவைப்ப தேனோ மண்ணினில் மக்களெல்லாம்
ஆண்டுகள் வேற தாக அவனியில் வாழ்வளித்தால்
ஆண்டவன் பொதுவே யென்றல் அவனியிற் பொருந்து மோதான் 21

இன்பமுந் துன்ப மெல்லாம் எய்திட வைப்ப தேனோ
நன்மையுந் தின்மையெல்லாம் நல்கிடல் நலம தாமோ
புன்மைதான் சிலரே கொள்வர் புகழ் தனைச் சிலர்என் றாலே
நன்மையே யாகு மோதான் நலமுடைக் கடவுளுக்கே 22

வினையினால் ஆகும் என்றால் வினையேதான் செய்யும் அந்த
மனதையேன் அளிக்க வேண்டும் மண்ணினில் மாந்தருக்கே
எனவவன் கேட்க லுற்றான் இதற்கியான் என்ன செய்வேன்
நினைவெலாம் ராக வேந்த்ரர் நேர்த்தியாய் சுதாவை எண்ணி 23

நன்றெந்தன் பதிலே வேண்டின் நாளைநான் சொல்வேன் நன்றாய்
என்றந்த சீடனுக்கே இன்னுரை பகர்ந்து பின்னர்
ஒன்றுமே புரியவில்லை உரைப்ப தெவ்வாறாம் என்றே
அன்றவர் அசதியாலே அயர்ந்துமே படுத்துவிட்டார் 24

உறக்கமே கொண்ட தீர்த்தர்க் குற்றதோர் கனவு தோன்ற
இரக்கமே கொண்டராக வேந்திரர் முன்னே தோன்றிச்
மறக்கவே முடியா வண்ணம் மனதிலே பதியு மாறு
சிறக்கவே சொன்னார் தீர்த்தர் செப்பிட வேண்டு மென்றே 25

தான்பெறுந் தேகந் தன்னால் தரணியில் உயிர்கள் யாவும்
மேன்மையே யடைதல் காண்பாய் மிருகங்கள் ஆன போதும்
வான்வழிச் செல்லும் மார்க்கம் வந்தீண்டு அடைதல் என்றால்
வீண்பழிச் சுமத்தல் நன்றோ? வினைகெடல் வேண்டு மன்றோ? 26

பக்குவ மடையா மக்கள் பன்னூறு ஆண்டு காலம்
இக்கலி யுகத்தில் வாழ்ந்தும் ஏற்றமே யடைவ துண்டோ
மக்களில் ஒருவராகப் பிறந்துநல் மனித வாழ்வில்
தக்கவா றுலகில் வாழ்ந்தால் தடையுண்டோநற்க திக்கே 27

ஆண்டுகள் பலவாய் வாழ்ந்தும் அவனியின் சிறத்தலாமோ
காண்டகு ஞான மார்க்கம் கடைப்பிடித் தொழுகா தோர்க்கே
ஈண்டுநம் உலக வாழ்வில் இன்பமே யென்று மாகும்
மாண்டிடா துலகில் வாழும் மகத்துவம் அறிவாய் நன்றே 28

கற்றலின் நன்று நாமும் கற்றாரைப் போற்ற லென்ற
நற்றவக் கருத்தை நானும் நனிமறந் தொழுகினேனே
*இற்றைக்கு வந்தார் ராக வேந்திரர் அருள் பாலித்தார்*
*நற்றவம் செய்தோம் என்றே நல்லடி போற்றி செய்தார்* *29*

சகந் நாத தாசர் என்பார் தத்துவ ஞானி யாவார்
அகந்தையே யற்று வாழ்ந்தார் அவர்பாடல் புனையுஞ்சீலர்
இகந்தனில் ராக வேந்த்ரர் இன்னருள் பெறவே வேண்டி
மகத்துவ முடைய மந்த்ரா லயமதில் மகிழ்ந்து வாழ்ந்தார் ? 30

என்றென்றும் ராகவேந்த்ரர் ஏற்றமே பாடி வாழ்ந்தார்
நன்றென்று ராகவேந்த்ரர் நலமுடன் கனவிற் தோன்ற
மன்றினில் ஓர்நாள் மக்கள் இடந்தனில் மமதை கொண்டார்
அன்றைக்கே ராகவேந்த்ரர் அவர் காட்சி நிறுத்திவிட்டார் 31

தாசர்தாம் கனவிற் காணார் தன்மனம் பேதலித்தார்
ஆசையால் கண்டேன் நானே யதனாலே யகந்தை கொண்டேன்
மாசுமே யடைந்த வென்றன் மனத்திடம் ராகவேந்த்ரர்
கூசிட்டார் வருவதற்கே குறையினைப் பொறுக்கத் தாழ்ந்தார் 32

ஆதலால் தாசர் பின்பே அவர் மனம் உருகப்பாடி
காதலால் கசிந்து நின்றார் கருணையால் ராகவேந்த்ரர்
சோதனை மாற்றித் தோன்றித் துயர்தனைக் களைந்ததாலே
சாதனை செய்வ ரென்றே சகந்தனில் புகழலுற்றார் 33

**ஆக பாடல் தொகை – 1650**

## தாமஸ் மன்றோவிற்கு அருளிய படலம்

ஆண்டுகள் பலவே சென்ற அமரராய் ஆன பின்பு
ஈண்டுயிம் மான்யம் எல்லாம் இத்துணை வேண்டுமோதான்
யாண்டுளார் ராகவேந்த்ரர் மந்திராலயமே யன்று
காண்டகு விருப்பின் செல்லக் கருதினார் ஆட்சியாளர் 1

ஆங்கில அரசின் கண்ணே ஆந்திர மாநிலத்தில்
நீங்கிடச் சொல்ல மான்யம் நீதியோ மாஞ்சாலத்தார்
தாங்கருந் துன்பம் எய்தி தானமாய் நவாபின் பாலே
ஓங்கிய ராக வேந்த்ரர் உயர்புகழ் பெற்ற தென்றார் 2

மாஞ்சால மென்னும் ஊரின் மானியம் மெல்லாம் மன்னன்
தாஞ் செய லாலே யன்று தகுமர சுடமை யாக்க
மாஞ்சால மக்க ளெல்லாம் மறுத்தனர் ராக வேந்த்ரர்
வாஞ்சையின் நவாபின் கண்ணே வாங்கிய வூரேயென்றார் 3

உத்தம ராக வேந்த்ரர் உயர்ந்த நல்லருளினாலே
சித்தி மசூத்கான் தானே சிறப்பொடும் அளித்த தாகும்
இத்தரை மக்கள் யாரும் இதனைநன் கறிவரன்றோ
சத்தியம் என்றே சொன்னார் தானமாய்ப் பெற்ற தென்றார் 4

இயக்குவர் ஒருவ ரன்றி யியங்குமோ யுலகம் என்றும்
நயப்பொடு ராக வேந்த்ரர் நல்லருள் பெற்ற மக்கள்
மயக்கறு நிலையில் அன்றே மனுவினைச் செய்ததாலே
தயக்கமே யடைய லானார் தடுத்திடும் ஆணை நல்க 5

மன்னர்கள் பலருங் கோயில் மானியம் வழங்கி வந்தார்
பன்னவே பக்தர் தாமும் பகர்ந்தனர் மான்யம் எல்லாம்
நன்னய மாகவேதான் நடப்பதற்கேற்ற தொன்றோ
என்பனவெல்லாம் ஆங்கே இனிதினின் ஆய்ந்துபார்த்தார் 6

ஆமிதை யெல்லாம் நன்கே ஆய்ந்துமே வரவே வேண்டி
தாமஸ்மன் றோவே யென்று சாற்றிடு நாமத் தோரே
சேம மாங் கவர்ன ராகச் சென்றனர் நாடு போற்றத்
தாமவண் அனுப்பலானார் தகுதிதான் உடையரென்றே 7

சென்றனர் தாமஸ் மன்றோ செய்தியை யறிந்து கொண்டார்
நன்றெனும் ராகவேந்த்ரர் நலம் பெறும் வரலாற்றுண்மை
ஒன்றிய வுள்ளங் கொண்டே உயர்மந்த்ரா லயத்தின் முன்னே
நின்றனர் அடக்க மாக நிமலனே தோன்றிச் சொன்னார் 8

கிருதய யுகத்தில் யானே கேசவன், அருளால் வந்தேன்
பெருமையாம் அவதா ரந்தான் ப்ரகலா தாழ்வா ரென்றே
இருதய பூர்வ மாக யிம்மந் த்ரா லயத்தை யென்னைக்
கருதியே யெனக்கே யீந்தான் கண்யமாய் நவாபு தானே 9

அத்தகு மேன்மை கொண்ட தாகவே நீவிர் யின்று
மெத்தகு மகிமை யெல்லா மிகுமந்த் ராலயத்தின் கண்ணே
பத்தர்கள் வருவ ரென்றும் பார்த்திட்டீர் உண்மை நீரும்
சத்தியந் தவறா தென்றுந் தருமமே நிலைக்கச் செய்வாய் 10

காட்சியே கொடுத்தார் ராக வேந்திரர் அட்ச தைத்தான்
சாட்சியாய் கொடுத்துச் சென்றார் சகலரும் அறியா வண்ணம்
ஆட்சியார்க் கர்ச்ச கர்தான் அட்சதை வழங்கும் போது
மாட்சிமை கொள்ள தாமஸ் மன்றோவே ! காட்டினாரே ! 11

அற்புதச் சக்தி யைத்தான் அவர் நன்றாய் உணர்ந்துவிட்டார்
தற்புகழ் கொள்ளார் ராக வேந்திரர் தாமஸ் மன்றோ
பொற்புடை யன்னார் பாதம் பூமியில் வணங்கி வீழ்ந்தே
அற்புடன் அவரும் சென்றார் அவருக்கே பதவி தந்தார் 12

சென்னையின் கவர்ன ராவார் சென்றிட்டார் இங்கிலாந்தே
பின்னையார் இருப்ப தென்றே பெருமையாம் பதவி தன்னை
முன்னைநல் வினையி னாலே முழுதருள் ராக வேந்த்ரர்
அன்னையாய் வணங்க மேலார் அவரையே நியமித்தாரே 13

தன்னுடைப் பதவி யேற்றுத் தான்கவர்ன ரான பின்பு
முன்னுள தஸ்தா வேஜை முதன்மையாயெடுத்துப் பார்த்து
மன்றோவே மனதின் மந்த்ரா லயத்தையே மான்யம் என்று
நன்னயமாக வாக்கி நற்புகழ் கொண்டா ரம்மா ! 14

ஆக பாடல் தொகை – 1695

## துங்க பத்திரை மகிமைப் படலம்

சிர்பூ ரானந்த தாசர் சிறப்புடன் வாழ்ந்து வந்தார்
தற்புக ழில்லா தோரே தண்ணளி ராக வேந்த்ரர்
அற்புத சக்தி யைத்தான் அறிந்தவ ரான தாலே
பொற்புட லன்னார் பாதம் போற்றியே புகழ்ந்து வந்தார் 1

பத்தியா லானந்த தாசர் பகர் மந்திரா லயத்தே வாழும்
உத்தம ராக வேந்த்ரர் உயரருள் தனையே நாட
சித்தத்தே யெண்ணங் கொண்டார் சென்றுமே புகழ்ந்து பாடி
பத்தியின் வணங்க பஞ்சமுகத்துடை ஆஞ்சநேயர் 2

துங்கபத் திரையைத் தாண்டி தொலைவிலே ஆஞ்சநேயர்
அங்கவர் நடந்து சென்றால் அவரையே தரிசித்தற்காம்
பங்கமில் படகு சேர்ந்து பக்தரே பயணமானார்
வங்கமாய் ஆற்றின் நன்றாம் வடகரை யடைந்துவிட்டார் 3

நரசிம்ம கபில வாகிக் கருடனு மனும னோடும்
அரியெனப் போற்றுமேலாம் அயக்கிரீவரான மூர்த்தம்
தரிசித்தார் தாசர் நன்கே தபசுடை ராகவேந்த்ரர்
அருமையாய்த் தியானம் செய்தார் அவ்விடத் தாஞ்சநேயர் 4

கானகம் போன்றேயுள்ள கல்லிடைக் குகையின் ஒன்றில்
மோனமா நிலையில் ராக வேந்திரர் அருள் பெற்றார் போல்
ஞானமா நிலையில் தாசர் நல்லருள் பெறவே வேண்டிப்
போனவர் மகிழ்ச்சி யாகப் பொற்பாதம் வணங்கி வந்தார் 5

பரத்தினை யெண்ணி நாளும் பதமலர் வணங்கும் பக்தர்
சிரத்தையே கொண்டு சென்றார் சிறப்புடன் வணங்கி மீண்டு
வரப்பினில் நடந்தே வந்தார் வடகரை துங்கபத்ரை
பரப்பினில் வாழ்ந்து வந்த படகோட்டி தனையே கண்டார் 6

அக்கரை தனிலே வாழும் படகோட்டி யருகில் சென்றே
அக்கரை சேர்ப்பாயோவென் றவனிடம் கேட்டபோது
தக்கதாய் இல்லை யையா தகுதியாய்க் கரையைச் சேர்க்க
மிக்கதாய்த் தண்ணீருந்தான் மேன்மேலும் வருகு தென்றான் 7

என்றாலும் ராக வேந்த்ரர் இணையடி தொழவே வேண்டும்
சென்றாலும் நீர்தான் என்னே செலுத்தவே வேண்டும் ஓடம்
ஒன்றாலும் என்றன் உள்ளம் ஒருப்படா தலைவதாலே
மன்றாடிக் கேட்டார் தாசர்மதிக்கச் சம்மதித்து வந்தான் 8

ஆனந்த தாசர் ஏற அவன்பட கோட்டிச் சென்றான்
வானவா றெழுகுங் கங்கை யாறென வெள்ளம் போக
தாளொரு சுழலிற் பட்டே தவித்திட்டான் படகுமூழ்கிப்
போனதே யென்செய்வேன்யான் பொருக்கென நீந்திப் போனான் 9

ஆனந்த தாசர் தானே ஆற்றினில் சிக்கிவிட்டார்
நானென்ன செய்வேன் ராக வேந்திரா நட்டாற்றில்தான்
வானவா றென்னும் வெள்ள வழியினில் படகு வந்து
போனேனே என்றார் அப்போ புதியவர் இருவர் தோன்றி 10

தலைமுடி தனைப்பி டித்தே தாசரைப் படகில் போட்டார்
அலைவுற ஆற்றில் அன்னார் அல்லலை நீக்கிக் காத்தார்
உலைவுறா துள்ளம் என்றும் ஓர்ந்திடின் ராகவேந்த்ரர்
மலைவுறா மக்கள் தம்மை மதித்திடக் காப்பரன்றோ? 11

நீங்கள் யார் என்றே கேட்டார் நின்றிட்ட தாசர் முன்னே
நாங்கள் ராகப்பா வென்றும் நலம் பெறுவாதப் பாவே
தாங்களே துன்பப் பட்டீர் தவித்திட்டீர் வந்தோம் என்றார்
யாங்குநும் இருக்கை யென்ன யாதொன்றுங் கூறவில்லை 12

இருக்கையே கேட்டீர் நீரென் இருக்கையே யறியவில்லை
பொருக்கென மறைந்து போனார் புகலுவதறியா தானார்
மருக்கொளும் மலரின் வாசம் மருவிடுந் தன்மை போல்வார்
இருக்கின்றார் நம்மில் என்றே யிணையடி போற்றி செய்தார் 13

பதியினில் தூய தாகும் பகர்மந்திராலயமே யென்றும்
நதியினில் துங்க பத்ரா நலம் பெறுந் தீர்த்த மாகும்
விதியினால் தீரா தாய வியாதியும் வினைகளெல்லாங்
கதியென்றே வருவோர்க் கென்றுங் காப்பவர் ராகவேந்த்ரர் 14

பக்தராய் வந்தோர் துங்க பத்திரை மூழ்கி வந்தால்
சக்தியே பெறுவர் நாளும் சௌபாக்யம் உடையராகி
தக்கதாந் தரணி தன்னில் தன்னிக ரிலராய் வாழ்வார்
முக்தியே யடைவர் ராக வேந்திரர் அருளைப் பெற்றே 15

படித்துறை யிறங்கி யோர்நாள் பக்தரே குளிக்கும் போது
தடுத்திட முடியாத் தண்ணீர் தான் மேலும் வருதலாலே
படித்துறைப் பாறை ஒன்றில் பக்தரே வழுக்கி வீழ்ந்தார்
அடித்தது வெள்ளம் அன்னார் ஆற்றினில் மிதக்க லானார் 16

கொடுத்திட்டார் குரலேராக வேந்திரா காப்பாய் என்றே
அடுத்தவர் யாரும் ஆற்றில் இறங்கவும் முடியவில்லை
தொடுத்திட்டார் ராக வேந்த்ரா துயரினைக் காப்பாய் என்றே
மடத்தினின் யானை ஒன்று மனிதனைக் கண்டதென்னே 17

பாகனே யில்லாயானை பரிந்திட மனித னைத்தான்
ஆகமே மிதந்து செல்ல அவனுயிர் காக்க வேண்டி
வேகமாய் யாற்றில் சென்றே வியந்திடப் பக்தர் தம்மை
சோகமே தீர வேதான் துதிக்கையால் சுழற்றித் தூக்கி 18

காத்தது உயிரை பக்தன் கடவுளின் அருளே என்றான்
பார்த்தவர் எல்லாம் அப்போ பரமனின் செயலே என்றார்
வார்த்தையால் வந்தார் யானை வடிவனில் ராக வேந்த்ரர்
ஏத்துவோர் என்றும் வாழ்வார் இதனின் வேறுறுதியுண்டோ 19

**ஆக பாடல் தொகை –1714**

**ஸ்ரீராகவேந்திரர் வெள்ளிரதப் படலம்**

தனவந்தர் என்றே வாழ்ந்தார் தன்னிக ரிலாத செல்வர்
இனந்தனில் ராம நாதன் செட்டியார் போன்றோரில்லை
கனதன வானாய் லட்சக் கணக்கினில் பொருளையேற்றி
பணந்தனைத் தேடி வாழ்ந்தார் பாருளோர் போற்றும் வண்ணம் 1

செல்வந்தான் அளவி லாமல் செட்டியார் பெற்றிருந்தும்
வல்வினை யென்றே கூற வயிறுமே வலிக்கக் கண்டார்
பல்வித வயித்தி யந்தான் பாரினில் பார்த்த போதும்
ஒல்வது அறியா தானார் உயரிந்தது வலியே மேலும் 2

நிம்மதி யென்ப தெல்லாம் நிழல் போன்ற செட்டியார்க்கு
தம்மதி மிக்க தாலே தான் பெற்ற தனத்தையெண்ணார்
நிம்மதி யடைய வேண்டி நேயர்கள் கூறு கின்ற
அம்மதி தனையே கேட்டார் ஆயினுந் தீரவில்லை 3

வயித்தியர் பலரும் வந்தே வயிற்றினைச் சோதித்தார்கள்
பயிற்றிய டாக்டர் என்னே பரிவுடன் அவர்க்குச் சொன்னார்
வயிற்றினை யறுத்தால் உன்றன் வலியது தீரும் நன்றாய்
வயிற்றினை யறுத்த பின்னும் வாழுமோ வுயிரே யென்றார் 4

வயித்திய ராலும் அன்னார் வலியென்றும் நீங்கவில்லை
வயிற்றனை யறுக்க வேண்டாம் வதையினைச் செய்ய வேண்டாம்
பயிற்றிய டாக்டர் பார்த்தார் பலருமே பண்பினாலே
இயற்றுவ தறியா தானோம் என் செய்வோம் என்றே சொன்னார் 5

செலவுதான் ராம நாதன் செட்டியார் செய்ய லானார்
நிலவுல கத்தில் தானும் நிம்மதி யுடனே வாழப்
பலப்பல எண்ணங்கொண்டார் பண்புடை நண்பர் வந்தே
கலக்கமே கொள்ளாய் ராக வேந்திரர் காப்பார் என்றார்

திருமிகு ராக வேந்த்ரர் திருவருள் தனையே வேண்டின்
வருகின்ற துன்பம் யாவும் வந்ததே யறியா தேகும்
பெருமையாஞ் சேவை யொன்று பிரியத்தின் செய்வே னென்று
அருமையாம் படத்தின் முன்னே அவரையே வணங்க வேண்டும் 7

நண்பர்தாம் கூறக் கேட்டார் நம்பிக்கை கொண்டுவிட்டார்
கண்ணெதிர் ராகவேந்த்ரர் கருணையை நாடி நித்தம்
எண்ணியே வணங்கலானார் இரவினில் தூங்கும் போது
கண்ணெதிர் நின்றார் ராக வேந்திரர் கனவிற் தோன்றி 8

அறுவையே செய்தாலன்ப அற்றிடுந் துன்பமெல்லாம்
பெருமையே சேர நீரும் பிழைப்பது உறுதியாகும்
மறுமையுந் துன்ப மில்லா மகத்துவங் கொண்டு வாழ்வாய்
உரிமையின் வந்து சொன்னார் உற்றது மகிழ்ச்சியம்மா ! 9

அடுத்தநாள் டாக்டர் வந்தார் அவரிடம் கனவைச் சொன்னார்
கெடுத்திட்டார் காரியத்தைக் கிடைத்திடா துறுதி என்றார்
மடுத்தவர் சொன்னபோதும் மதித்துளேன் மகானை நாளை
தடுத்திட வேண்டாம் நீங்கள் தவறாது அறுவை செய்வீர் 10

அறுவையே செய்யச் சொன்னார் ஆகிடும் நன்மை யென்றும்
மறுமையே யுரைத்த ராக வேந்திரர் மகிமை நாடி
பெருமையே கொண்டார் ராக வேந்திரர் பிழையைச் செய்யார்
உறவையே யெண்ணி ராகவேந்திரர் உறுதி பூண்டார் 11

நம்பிக்கை யில்லை யென்றும் நாந்தரோம் உத்ர வாதம்
அம்மவிவ் வறுவை தானும் ஆயுளைத் தராதே யென்றார்
உம்முடைக் கனவால் நாங்கள் ஒருப்படோம் சிகிச்சைக் கென்றார்
தெம்புடன் செட்டியாரே செய்யென்றார் திகைத்து நின்றார் 12

அறுவையை முடித்தார் டாக்டர் அதிசயம் பிழைத்து விட்டார்
சிறுபிழை யுண்டேயென்ன தீர்ந்தில நோய்தான் என்றார்
மறு முறை யறுவை யென்றார் மறுத்திலர் செட்டியாரும்
இருமுறை முறையே யாக யெண்ணினார் பதின் மூன்றாக 13

ஒருமுறை அறுவைக் கேநாம் உயிர்பெறார் என்றே சொன்னோம்
இருமுறை மும்முறைதான் எத்தனை முறை செய்தாலும்
அறுவையே வேண்டா மென்றார் அதிசயம் செய்யச் சொன்னார்
திருவருள் செயலே நோய்தான் தீர்ந்தது என்றார் டாக்டர் 14

காரண மூலன் ராக வேந்திரர் அருளினாலே
பூரண குணம டைந்தார் புத்துயிர் பெற்று விட்டார்
சீரணி யுலகில் ப்ருந்தா வனத்திடைச் செட்டியாரும்
தாரணி புகழும் வண்ணம் தான் வந்தே வணங்கலானார் 15

செயம்பெற்றேன் ராக வேந்த்ரர் திருவருள் துணையினாலே
பயமற்றே வாழுகின்றேன் பாரில் நும் பக்தனாக
சுயமீந்த்ர தீர்த்தர் தாளைத் தொன்முறை வழாது போற்றி
செயலேயான் செய்வதற்குச் செப்புவீர் என்றே தாழ்ந்தார் 16

மடத்தினின் பொறுப்பை யேற்றா ரம்மடத் தலைவர் எண்ணம்
நடத்திடும் விழாவிற் காக நல்லதோர் ரதமே நீங்கள்
கொடுத்திட்டா லதுவே போதுங் குறையெலாந் தீரும் என்றார்
அடுத்தொரு வார்த்தை பேசார் ஆவன செய்வே னென்றார் 17

அருள்மிகு ராக வேந்த்ரர் அவருக்கு ரதமே செய்யப்
பொருள்மிக வுடையேன் என்றன் பொறுப்பினில் செய்கின்றேன்யான்
மருளுடை மனத்தை மாற்றி மாண்பொடு வாழச் செய்தார்
தெருளுடை மனத்தின் அன்னார் செப்பிட்டார் தெண்டனிட்டார் 18

பெருமிதங் கொண்டே சென்றார் பெருமையாய்ச் செட்டியாரும்
மறுமுறை செல்ல வேண்டி மனத்தினில் நினையாவண்ணம்
வருகின்ற வணிகர்க் கெல்லாம் வாணிபஞ் செய்யலானார்
அருமையாம் மனைவி சொன்னார் அவருடை ரதத்தைப் பற்றி 19

நினைவினை எடுத்துச் சொன்னார் நேர்மையாம் மனைவி சொல்லப்
பினைநாமுஞ் செய்வோ மென்றார் பெரும் பொருள் வரவைச் சொன்னார்
தனையென் றும் மறவா நல்ல தாரத்தின் வார்த்தைக்கெல்லாம்
நினைவெனக் குண்டு நல்ல நேரத்தைப் பார்ப்பேனென்றார் 20

ஒப்பிலா ராக வேந்திரர் உயர்ரதச் செய்கை பற்றி
செப்பிடும் போது என்னே சிம்லாவின் செய்தி வந்த
கப்பலின் பொருள்கள் எல்லாம் காணாமற் போயிற்றென்ன
அப்போது செட்டியாரும் அதிர்ச்சியே யடையலானார் 21

தெய்வத்தின் குற்றம் என்றே தெளிவித்தாள் துணைவியாரும்
உய்விக்கும் வழியை யோர்ந்தாள் உறு புகழ் ராக வேந்த்ரர்
மெய்வழி காட்டிச் செல்வர் மேன்மையையடைய வேண்டிச்
செய்வகை யறிந்து நன்கே செட்டியார் ரதத்தைச் செய்தார் 22

வெள்ளியால் ரதத்தைச் செய்தார் வெகுபொருள் ஆனதம்மா!
நள்ளிர வதனில் ஓர் நாள் நலம் பெறக் கனவில் தோன்றி
கள்ளத்தால் இதற்கு முன்பு காணாத பொருள்கள் மீண்டும்
வள்ளியோய் ராம நாத வந்துமே சேரும் என்றார் 23

எள்ளள வாயின் ராக வேந்திரர் பேரைச் சொல்லி
கள்ளமில் உள்ளங் கொண்டே கடமையைச் செய்வாராகில்
தள்ளரும் புகழ்மிக் கோங்கி தரணியின் மக்கள் போற்ற
வள்ளலாய் வாழ்வர் என்றும் வையகத்தின்பம் உற்றே 24

ஆக பாடல் தொகை – 1738

## தாசிக்கு அருள் செய் படலம்

முக்தியே யளிக்க வல்லார் முழுதருள் ராக வேந்த்ரர்
சக்தியை மிகவே கொண்ட சமரச ஞானி யாவரா்
பக்தியால் வணங்கு வோரைப் பார்த்தருள் செய்யும் வள்ளல்
மக்களுக் காக மந்த்ரா லயந்தனில் வாழ்கின்றாரே 1

ஊர் ஆர புரத்தில் தாசி ஒருமகள் வாழ்ந்து வந்தாள்
பேர் பெரி தாக வாகப் பிடித்தது குட்ட ரோகம்
ஆரினி நாடு வார்கள் அனைவருந் தூற்றினார்கள்
தேரோடுந் தெருவோ மற்றத் தெருவிலுஞ் செல்ல வில்லை 2

குட்ட நோய் கொண்டன்னாளைக் குறைத்தது அங்கமெல்லாம்
பட்டது பட்டு விட்டாய் படநாங்கள் விடவே மாட்டோம்
இட்டமாய் எவ்விடத்தும் இயங்கவே முடியாதானாள்
கட்டத்தைத் தாங்கா தென்னே கடந்திட்டா ளந்தவூரை 3

மற்றவர்க் கிடையூ றாக மற்றவ்வூர் வாழ வில்லை
சற்றவள் யோசித் தாளே தயாபரன் ராக வேந்த்ரர்
உற்றவர்க் கென்றும் அன்னார் உறுதுணையாவரென்றே
மற்றவள் எண்ணம் மந்த்ரா லயமதை நாடிற்றன்றே 4

மூடினாள் போர்வையாலே முழுதுடல் தெரியா வண்ணம்
ஓடினாள் ராக வேந்த்ரர் உயர் பிருந் தாவனத்தை
நாடினாள் அருளை யென்றுந் நலம்பெற வேண்டுமென்றே
பாடினாள் உள்ளத் துள்ளே பரமனின் நாமந் தன்னை 5

தனியாகச் சேவை செய்தாள் தனியிடத் துறைவதானாள்
இனியாருமில்லை யென்றாள் ராகவா அருள் செய்வாயே
நனியாய்ந்து முடிவெ டுத்தாள் நலம் பெறு நாமந் தன்னை
கனியாகக் காலமெல்லாங் கழறிடக் கனவில் வந்தார் 6

நச்சினார்க் கருளை யென்று நல்கிடு ராக வேந்த்ரர்
பச்சிலை தனையே கூறப் பறித்துமே உண்டு வந்தாள்
மெச்சினாள் ராக வேந்த்ரர் மேன்மையைக் கண்டுவிட்டாள்
வச்சிர தேகம் பெற்றாள் வடிவழகதனைப் பெற்றாள் 7

அறவேதான் குட்ட ரோகம் அடியோடு மறைந்த தாலே
பெறவரும் பேறு பெற்றாள் பிறவியில் குருட னாவான்
உறப்பெறும் ஒளியால் கண்கள் உற்றிடு மகிழ்ச்சி கொண்டாள்
வரத்தினைப் பெற்று விட்டாள் வழங்குவ தறியா தானாள் 8

புரத்தினில் மூலை யோரம் போர்வையைப் போட்டிருந்தாள்
மறைத்திட வேண்டு மென்றும் மண்தோண்டிப் புதைக்க எண்ணி
தரத்தினில் மேலா யுள்ள தயாபரன் அருளைப் போற்றி
சிரத்தினைத் தாழ்த்த ராக வேந்திரர் கனவிற் தோன்றி 9

சென்றதே ரோகம் என்ன செப்பினாள் தாசியப்போ
என்றுமே மறவேன் ராகவேந்திரா உன்றன் பேரால்
பொன்றாது உலகில் நல்ல பொலிவினைப் பெற்றுள்ளேன் யான்
நன்றிக்கு யாது செய்வேன் நலம்பெறக் கூற வேண்டும் 10

கேட்டது தருவாயோ நீ கனவென்று மறுப்பாயோ நான்
வேட்டது உன்னிடத்தில் வீணாகப் போகும் நீயே
போட்டிட்ட போர்வையொன்றே போர்த்திடு வெனக்கேயென்னே
வாட்டமே யுற்றாள் தாசி வருத்தமே யடையலானாள் 11

நல்லதோர் பொன்னா டைதான் நான் போர்த்த வெண்ணங் கொண்டேன்
அல்லது அவர் விருப்பம் அதையே நான் செய்வே னென்றேன்
பொல்லாத வினையின் வந்தே போர்வையைப் போர்த்தச் சொன்னார்
நல்லதோ யிதனைச் சொல்ல நாகூசும் என்றே சென்றாள் 12

அடுத்த நாட் காலை தன்னில் அர்ச்சகர் கேட்க நேற்று
படுத்திட்டேன் கனவு கண்டேன் பயந்துமே கூறலானாள்
தடுத்தனர் பேசுதற்கே தவறு நீ செய்து விட்டாய்
கடுத்தவவ் வர்ச்சகர்க்குக் கழறுவதறியா தானாள் 13

சென்றிட்டாள் தாசியென்னே சிறந்திடும் ராக வேந்த்ரா
நின்றிட்டே ணர்ச்சகர்முன் நிலையினை யறிவா யின்றே
பொன்றிடா துலகில் யானும் புகழிலா வாழ்கின்றேனே
இன்றியான் செலவைக் கொள்வேன் ஏதுன்றன் எண்ணம் என்றாள் 14

அன்றிரா அர்ச்சகர் தாம் அலைமோதி மனமுஞ் சோர்ந்தார்
நின்றிட்டார் கனவில் ராகவேந்திரர் தோன்றிச் சொன்னார்
ஒன்றிட உள்ளங் கொண்டே உவந்தெனை வணங்கின் தாசி
நன்றியாய் அவளின் ஆடை நலம் பெறப் போர்த்து வாயே 15

அர்ச்சக ரிடம் நாம் சென்றே அவரிடம் வணங்கித் தாழ்ந்து
தற்செய லாலே யென்றன் தவற்றினைப் பொறுப்பீரென்று
நிச்சயம் விடையைப் பெற்றே நில்லேனிவ் வூரில்என்று
நச்சரித் திடவே வுள்ளம் நண்ணினாள் அடுத்த நாளும் 16

தரிசனம் செய்யும் போது தவற்றினைப் பொறுக்கச் சொன்னால்
எரிகுணங் கொள்ளார் தம்மை யிகழ்ந்திடார் அர்ச்சகர்தாம்
பரிவுடன் பக்தர் தம்முள் பகர்பிருந் தாவனத்தே
வரிசையி லர்ச்சகர் முன் வந்துமே நிற்க லானாள் 17

அம்மணி உங்கள் சொல்லை அறியாமல் எரிந்து வீழ்ந்தேன்
எம்முடைக் கனவில் நேற்று ராகவேந்திரரே வந்து
சம்மதித் தவரே யுன்றன் சால்வையைப் போர்த்தச் சொன்னார்
நிம்மதி யடைந்தேன் நின்றன் வரவினைப் பார்த்திருந்தேன் 18

என்றதுந் தாசிக் கேதான் இருகண்ணீர் ஆறே யென்னச்
சென்றதே யர்ச்சகர்தாம் செய்வது அறியா தாக
நன்றென அட்ச தைத்தான் நல்கிட வவளுஞ் சென்றாள்
கன்றெனக் கரைந்தாள் ராக வேந்திரர் கருணை யெண்ணி 19

எள்ளள வாகில் வஞ்சம் இருக்குமேல் நெஞ்சில் என்றால்
வள்ளலாய்ப் பொருளை வாரி வழங்கினும் அருளைத் தாரார்
கள்ளமில் உள்ளத் தோடே கருதினால் ராக வேந்த்ரர்
உள்ளன் பாய் அனைவர்க்குந்தான் உதவியே செய்வார் என்றும் 20

ஆக பாடல் தொகை – 1758

## மேலைநாடு புக்கப் படலம்

பொன்னாலே பொருளினாலே புவியுளோர்க் காகா தொன்றைத்
தன்னையே யுணர்ந்த ராக வேந்திரர் தயையைக் கொண்டு
தன்னாலே முடியு மென்றித் தரணியில் காட்சி தந்தே
என்னாளும் வாழ்ந்து யார்க்கும் இனிதருள் செய்கின்றாரால் 1

முன்னாளில் எம்பி யாவார் முழுதுந்தன் அலுவலாக
அன்வாரி மாத வர்ராவ் அமெரிக்கா செல்ல லானார்
தன்னெஞ்சு வலித்த தென்னே தான் செய்வதறியா தானார்
தன்னிக ரிலாத ராக வேந்திரர் தனை நினைந்தார் 2

அப்போதும் வலியே யின்னும் அதிகமாய் வலிக்கக் கண்டார்
தப்பேதுங் செய்ய வில்லைத் தன்னெஞ்சு வலிப்ப தென்னே
முப்போதும் ராக வேந்த்ரர் முழுதருள் வேண்டு நீரார்
செப்பாதே யிருக்கைக் கண்ணே சிரந்தாழ வீழ்ந்து விட்டார 3

அருகிலே யிருந்த நண்பர் அந்நகர் வாழுகின்றார்
பெருமைசேர் மருத்து வத்தில் பேர்பெற்ற மனையின் கண்ணே
இருந்திடச் செய்தா ராங்கே எண்ணற்ற டாக்டர் வந்தார்
வருந்தினார் நிலையைக் கண்டு வந்திடா துயிரே என்றார் 4

தன்னாலே முடியு மென்றுத் தான் சொல்லத் திடமேயில்லை
முன்னாலே வந்தா ரென்றால் முயற்சியால் பிழைத்தே வாழ்வார்
என்னாலிங் காவ தில்லை என்றனர் மருத்துவர் தாம்
கண்ணாலே நிலையைக் கண்டு காப்பது அரிதே யென்றார் 5

அன்வாரி மாத வர்தான் அல்லலே கொண்டார் என்னே
தன்னுடை நினைவி ழந்தே தரையினில் வீழ்ந்து விட்டார்
என்னாயிற் றென்றே நண்பர் ஏக்கந்தான் மிகவே கொண்டார்
சொன்னார்கள் டாக்டர் வந்தார் சுகப்படா தினியே யென்றார் 6

ஆதலால் பிணத்தினூடே பிணமாகப் போட்டுவிட்டார்
போதாத காலம் என்றே புகன்றனர் புவியுளோர்கள்
சோதனை யென்றே நண்பர் துக்கமே கொண்டா ரன்னார்
ஏதமே கொண்டார் தன்னையென் செய்வ தென்றே சென்றார் 7

கள்ளமே யில்லார் ராக வேந்திரர் கருது நீரார்
நள்ளிர வதனைத் தாண்ட நலம் பெற்றார் மாதவர்ராவ்
மெள்ளத் தன் நினைவு கொண்டரிர் மிரட்சியே கொண்டு பார்த்தார்
தள்ளினாய் ராகவேந்த்ரா சவங்களுக் கிடையே யென்றார். 8

யானென்ன செய்வேன் யென்றன் விதியினை யெண்ணு கின்றேன்
தேனெனு ராக வேந்த்ரா திருநாமஞ் செப்பியேதான்
நானெனும் கர்வ மற்றே நலம் பெறத் தியானம் செய்தார்
வானுள தெய்வம் என்னே வந்தனர் ராகவேந்த்ரர் 9

அன்வாரி மாத வர்ரால் ஆனந்தம் மிகவே கொண்டார்
பொன்மாரி பொழிந்ததேபோல் புவியிடைத் தோற்றங் கொண்டீர்
என் மீதே கருணை யாலே யிவ்விடத் தென்னே வந்தீர்
என்னநான் செய்வ தென்றே எழுந்திட எத்தனித்தார் 10

அருளுளங் கொண்ட ராக வேந்திரர் அருகில் வந்தே
மருளுளங் கொள்ளாய் நீரும் மனதிடங் கொண்டு வாழ்வாய்
தெருளவே திரேகந் தன்னைத் திருக்கையால் நீவிச் சென்றார்
குருராஜா மாத வர்ரால் கூறினார் குணமும் பெற்றார் 11

சற்றுநே ரத்தில் வந்தாய் சங்கடந் தீர்த்துச் சென்றாய்
பற்றுநான் கொள்ளேன் உன்றன் பற்றென்றே பற்றி விட்டேன்
மற்றுநீ வந்தே யென்னை மனிதனாய் ஆக்கிச் சென்றாய்
ஏற்றே நின் கருணையென்றே யிணையடி போற்றி செய்தார் 12

மருத்துவர் வந்து பார்த்தார் மகானது வரலைக் கேட்டார்
சரித்திரத் திதுபோல் வேறு சங்கதி நடக்கவில்லை
பெருத்தவாச் சரியத் தோடே பேசினர் டாக்டர் எல்லாம்
திருத்தமாய்க் குறிப்பு நோட்டில் திறமுடை மகானைச் சொன்னார் 13

எழுதியே வைத்தார் என்னே இப்பெரும் அற்பு தந்தான்
பழுதிலா ராக வேந்த்ரர் பரிவினால் ஆன தென்றே
அமுதமு தன்வா ரித்தன் அனுபவமுரைக்கத் தீயின்
இழுதென டாக்டர் அன்னார் இணையடி போற்றி செய்தார் 14

ஆக பாடல் தொகை – 1772

## தங்கக் கவசப் படலம்

மாகமேல் மழையைப் போன்று மனிதருக் கருளும் வள்ளல்
ராகவேந் திரரின் முன்னூ றாண்டுகள் நிறைவின் தங்கத்
தேகமாய் கவசத் தாலே செய்யவே யெண்ணங் கொண்டார்
ஆகவே சுஜயீந்த்ரரும் ஆவன செய்ய லானார் 1

கடமையை யறிந்த தீர்த்தர் சுஜயீந்த்ரர் ஆவார் பொன்னின்
உடமையை பக்தர் மூலம் உருவாக்க எண்ணங் கொண்டார்
திடமுடை மனதைக் கொண்ட திருமிகு பக்தர் பல்லோர்
இடமதிற் கூறிவந்தார் இயல்வன கொடுத்தார் பக்தர் 2

பொன்னோடு பொருளுஞ் சேரப் புகழுடை ராக வேந்த்ரர்
தன்னுடைக் கவசஞ் செய்யுந் தகுதியாங்கலைஞர் தம்மால்
நன்மையாம் நாளில் நல்ல கவசமே செய்யவேண்டி
உன்னினார் உற்ற தங்கம் ஒருவழிச் சேர்ந்த தென்னே 3

முன்னூறு நூறு ஆக முயற்சியில் பக்தர் சேர்த்தார்
முன்னூறு ஆண்டாங் கால மேல்பிருந்தாவனத் தார்க்
கென்னூறு முப்பான் தோலா என்றனர் கலைஞர் என்னே
பன்னூறு சேர்த்தாரேமுப் பதுதோலா குறையே யென்றார் 4

குறையெனக் கூற லாமோ குறையிலா ராக வேந்த்ரர்
நிறையுறு வாண்டுதன்னில் நீணில பக்தர் தம்மால்
திரையுல கதனில் சேர்த்துச் செய்ததே யென்று சொல்லக்
குறைவிலா தாக்கத் தீர்த்தர் கொள்கையின் குறையற்றானை 5

வேண்டினார் வேண்டு வோர்க்கே வேண்டிய தளிக்கு நீரார்
ஆண்டுமுன் னூறு தம்மின் அன்பினிற் குறையலாமோ
ஈண்டியாம் செய்வ தென்னே யிக்கணம் பொன்னே வேண்டித்
தூண்டினார் கலைஞர் அன்னார் துயரினைக் கண்டார் தீர்த்தர் 6

எக்காலும் ராக வேந்த்ரர் இனிதருள் செய்யும் நீரார்
முக்காலுங் கவச வேலை முடிந்தது முப்பான் தோலா
தற்காலம் இருந்தால் நாங்கள் தடையின்றி முடிப்போம் என்றார்
அக்காலங் கலைஞருக்கே ஆவன செய்யத் தீர்த்தர் 7

குருராஜா உன்றன் வேலை குந்தகம் அடையலாமோ
பெருமையாய் நாங்க ளெல்லாம் பேணியிப் பணியைச் செய்தோம்
உரிமையாய் உங்களுக்கே உயர் தங்கக் கவசந் தன்னை
பொருந்திட உலகோர் போற்றச் செய்திட்டோம் சேர்ப்பிப்பாயே 8

என்றனர் தீர்த்தர் ஆங்கே எதிரிலே ஒருவர் வந்தார்
நன்றென தீர்த்தர் தாளை நலம் பெற வணங்க லானார்
ஒன்றிய வுள்ளங் கொண்டே வுரைக்கின்றார் வுரையின் தீர்த்தர்
கன்றெனக் கதறி யன்னார் கனவினைக் கேட்கலுற்றார் 9

அரி கிருஷ்ணன் என்றே என்னை அழைக்கின்றார் அகிலத்தோரே
அரி கிருஷ்ணன் பேரைச் சொல்லி அனுதினம் வணங்கு கின்றேன்
அரி கிருஷ்ணன் என்றே வந்தார் கனவினில் ராகவேந்த்ரர்
அரி கிருஷ்ண உன்னால் ஒன்றே ஆவன வேண்டுமென்றார் 10

உலகவர் போற்ற வேண்டி உயர்வுடைக் கவசம் செய்வர்
உலகவர் உன்றன் பேரே ஒவ்வொரு நாளும் சொல்வர்
உலகவர் போற்ற முப்பான் உயர் தோலாத் தங்கம் ஈந்தால்
உலகமே போற்றும் உன்னை உதவிட வேண்டுமென்றார் 11

ஆதலின் ஐய யானே அரிகிருஷ்ண னாவே னின்று
காதலின் வந்தேன் தங்கள் கண்முன்னே முப்பான் தோலா
சாதலின் துன்பம் நீங்க சந்ததம் உலகோர் போற்ற
வேதனை யின்றி வாழ விரும்பியே யீந்தேனீதோ 12

அரியினின் பெயர் கொண்டுமே வந்தவர்
அரியினம் சமே ராகவேந்திரரவர்
அரிய வுலகினில் ஆற்றி வருகின்றார்
அரிய வற்புதம் போற்று முலகெலாம் 13

ஆக காண்டம் ஏழனுக்கு பாடல் தொகை – 1785



## வணக்கமும் வாழ்த்தும்

ஞானமு ம் தவமும் சான்றா நல்லறம் துணையா யென் றும்
வானமும் வையம் தானும் வளம்பெற வாழ்வு சேர
தானமந் ராலய த்தில் தனியாட்சி செய்யும் தேவே
யானரா கவேந்த்ரர் தாளை அனுதினம் வணங்கு வோமே.

வையகம் வாழ மாரி மலிவளம் சுரக்க மக்கள்
கையகப் பொருள்கள் எல்லாம் கனிவினால் தருக மேலாம்
மெய்யகத் துயர்க என் றும் மேன்மை சேர் அறங்கள் பல்க
துய்யநல் ராக வேந்த்ரர் துணையடி வளர்க வாழ்க!

உ

# பாடல் முதற் குறிப்பு அகராதி

## அ


| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| அகங்காரமடங்க வேண்டி | 131 | 28 |
| அகத்திலே பெற்ற மேலாம் | 71 | 2 |
| அகத்தினில் அவரைத் | 14 | 14 |
| அகமது சிறக்க வாழ்ந்தார் | 126 | 2 |
| அகமிக மகிழ்ந்தே | 102 | 63 |
| அகமிகவே மகிழ்ந்தார் | 312 | 15 |
| அகவைதான் ஏழே | 78 | 38 |
| அகழ்ந்திடச் சொன்னார் | 308 | 7 |
| அக்கணம் மதுரையின் | 244 | 12 |
| அக்கரைதனிலேவாழும் | 349 | 7 |
| அக்கரைதனில் | 14 | 12 |
| அங்கவர் சென்ற பின்னே | 114 | 60 |
| அங்கவன் கேட்டபோதே | 298 | 30 |
| அங்கிருந்தே சென்றாரே | 271 | 2 |
| அங்குளசாலகிராம் | 47 | 43 |
| அங்குள பெரியோரெல் | 90 | 3 |
| அங்குள பொருள்கள் எல்லாம் | 296 | 18 |
| அங்குவந்த அப்பன்ன | 335 | 5 |
| அச்சபையுள்ளோர் | 90 | 4 |
| அச்சமேயடைந்தார் | 15 | 15 |
| அஞ்சனநிறத்தார்க் | 45 | 32 |
| அஞ்சனநிறத்தான் உந்தன் | 46 | 35 |
| அஞ்சனநிறத்தான் தன்னை | 244 | 3 |
| அஞ்சமுகத்துடன் | 321 | 6 |
| அஞ்சொலார்துணைவிதாலும் | 137 | 56 |
| அடக்கமாம் பண்புதானே | 80 | 7 |
| அடக்கினார்கடலையன்றே | 136 | 49 |
| அடியனைபெற்றபேறும் | 302 | 8 |
| அடுத்தநாட்... அர்ச்சகர் | 359 | 13 |
| அடுத்தநாட்... அறிவித்தார் | 266 | 7 |
| அடுத்தநாட்காலை பூசை | 144 | 93 |
| அடுத்தநாள் டாக்டர் வந்தார் | 354 | 10 |
| அடுப்பின் பாங்கமைந்த | 297 | 25 |
| அட்டதிக்கயங்கள் | 243 | 8 |

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| அணிகொள் இந்நகர் | 29 | 14 |
| அணிந்தனன் காவி | 168 | 24 |
| அண்டினார்...அருளுளம் | 195 | 5 |
| அண்டினார்...அருள்கொடு | 273 | 15 |
| அன்னனாங் குருராசன்கள் | 103 | 2 |
| அன்னனாம் குருராசன்தன் | 82 | 18 |
| அண்மை நாரணன் | 27 | 4 |
| அதன் பின்னே விஜயேந்த்ர | 16 | 20 |
| அதன் பின்னர் ரெய்ச்சூர் | 212 | 62 |
| அதிகாரி ஒருவர் வாழ்வார் | 120 | 2 |
| அதிசயப் பொருளே யன்னான் | 190 | 67 |
| அத்தகு கலைஞானம்தான் அவர் | 129 | 17 |
| அத்தகு கலைஞானந்தான் அவன் | 82 | 16 |
| அத்தகுகுருவைக் காண | 105 | 12 |
| அத்தகு கோத்திரத்தில் | 86 | 13 |
| அத்தகுஞானம் தானும் | 125 | 11 |
| அத்தகுதீர்த்தர் | 13 | 8 |
| அத்தகுநல்சந்யாசர் | 149 | 16 |
| அத்தகுநன் மார்க்கங்கள் | 20 | 20 |
| அத்தகுநன் னாளின்கண் | 94 | 24 |
| அத்தகுபக்தியான | 274 | 2 |
| அத்தகுபத்தினியாம் | 12 | 3 |
| அத்தகுபதியில் சென்றார் | 130 | 22 |
| அத்தகு பெருமைவாய்ந்த | 242 | 3 |
| அத்தகுமேன்மை கொண்ட | 347 | 10 |
| அத்தகை இல்லறத்தை | 137 | 54 |
| அத்திருப்பதியில் | 39 | 3 |
| அத்துணையளவேயன்றி | 240 | 205 |
| அத்யாயம் நான்கினிலே | 254 | 7 |
| அந்தகாரத்தில் மிக்கே | 64 | 47 |
| அந்தணர் அறவோர் அன்றே | 136 | 50 |
| அந்தணர் ஆசி கூற | 102 | 62 |
| அந்தணராவாரில்லை | 209 | 48 |
| அந்தணர்களிலே | 177 | 5 |
| அந்தணர் சுதீந்திர | 116 | 1 |
| அந்தணர் நிலமனைத்தும் | 166 | 4 |
| அந்தணர் மூவர் நாளும் | 228 | 140 |
| அந்தணனவன் என்முன் | 235 | 178 |
| அந்தண்மைகொண்ட | 210 | 51 |

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| அந்தண்மைமிக்கதூய | 329 | 35 |
| அந்த நகரத்தின் | 29 | 18 |
| அந்தவூர் தன்னில் வாழும் | 293 | 4 |
| அந்திப்போழ் தானதாலே | 194 | 85 |
| அப்படி யானால் அம்மா | 78 | 36 |
| அப்படி யானால் சாமி | 248 | 6 |
| அப்படி யானால் நீயும் | 231 | 158 |
| அப்பண்ணச்சாரியர்தான் | 337 | 15 |
| அப்பத்தைக் குரங்குபங்கு | 258 | 19 |
| அப்பூதம் வந்தும் என்னே | 233 | 165 |
| அப்பூரென் றழைக்கும் | 42 | 15 |
| அப்பெரும்பட்ட | 319 | 32 |
| அப்பையதீட்சர் | 242 | 5 |
| அப்பொருள் வைரமாலை | 224 | 119 |
| அப்போதில் அவர்கள் எல்லாம் | 240 | 203 |
| அப்போது பாதுஷாவின் | 284 | 22 |
| அப்போது பீஜப்பூரை | 272 | 10 |
| அப்போதும் வலியே யின்னும் | 361 | 3 |
| அப்போதே அரசன் சொன்னான் | 237 | 188 |
| அமரர்போல் தோற்றங் | 22 | 28 |
| அமுதமாம் பாடியத்தை | 147 | 7 |
| அமைவுறக் கல்வியெல்லாம் | 79 | 1 |
| அம்புபோல்வன | 32 | 31 |
| அம்புவிதனிலே போற்று | 177 | 6 |
| அம்புவி போற்றும் | 16 | 23 |
| அம்மணி உங்கள் சொல்லை | 360 | 18 |
| அம்மணி சரஸ்வதியாய் | 101 | 59 |
| அம்மணி பலரும் வந்தே | 101 | 58 |
| அம்முறை மூச்சடக்கி | 185 | 41 |
| அரக்கனின் மகன் | 311 | 10 |
| அரசராய் பொறுப்பை | 53 | 70 |
| அரசரின்...அடைந்து | 63 | 43 |
| அரசரின்...யற்றவர் | 66 | 56 |
| அரசரின் அவையில் | 74 | 15 |
| அரசரின் ஆணை தன்னை | 164 | 5 |
| அரசவைக் கவிஞர் | 243 | 9 |
| அரசவைக் கவிஞர் நீல | 243 | 7 |
| அரசவைக் கவிஞர் மன்னர் | 252 | 17 |
| அரசவை...ஆணை | 87 | 16 |
| அரசவை...அவர் | 92 | 11 |
| அரசன்றன் அரண் மனைக்கே | 289 | 9 |
| அரசியோ அதற்கு மாறாய் | 236 | 183 |
| அரசடைத்திலானே | 307 | 2 |
| அரம்பையைக் கொடு | 165 | 10 |
| அரணம்போல்வதாய் | 30 | 20 |
| அரண்மனைப் பொருளில் | 12 | 2 |
| அரிகிருஷ்ணன் என்றே என்னை | 365 | 10 |
| அரியவன் தோற்றம்கூறி | 115 | 66 |
| அரியினதம்சமானார்க் | 77 | 31 |
| அரியினம்சமே | 26 | 3 |
| அரியின் நல் அடியை | 74 | 19 |
| அரியின் நல் அம்சம் | 197 | 12 |
| அரியின் நல்கீர்த்தனங் | 72 | 7 |
| அரியினி பாதம் போற்றும் | 240 | 202 |
| அரியினின் பெயர் | 366 | 13 |
| அருகிருந்தோர் நாள் | 301 | 5 |
| அருகிலே யிருந்த நண்பர் | 361 | 4 |
| அருகிலே உள்ளவூராம் | 293 | 3 |
| அருகில் வந்தனர் | 331 | 50 |
| அருக்கன் தான் மறையும் | 193 | 83 |
| அருட்கொடி கொண்டாய் | 136 | 52 |
| அருந்தாதே யுணவு | 303 | 12 |
| அருந்திலேன் உணவுதாங்கள் | 172 | 4 |
| அருந்துவீர் உணவு | 328 | 31 |
| அருமையாம் பூஜைப்பூரில் | 273 | 11 |
| அருமையாம் பூசனைக்கே | 290 | 17 |
| அருவியாய்த்தொழுகும் | 184 | 37 |
| அருளினார்பொருளைக் | 264 | 48 |
| அருளெனுங் கொண்ட ராகவேந்திரர் | 363 | 11 |
| அருள்மிகு ராகவேந்திரர் | 355 | 18 |
| அர்ச்சனை செய்து நீயும் | 226 | 132 |
| அர்ச்சகரிடம் நாம் சென்றே | 360 | 16 |
| அலங்காரப் பொருள்கள் ஈந்தார் | 246 | 14 |
| அலைகடல்தும் | 25 | 11 |
| அல்லலுற் றுழந்த மக்கள் | 238 | 191 |
| அல்லல்தான் நிறைந்த | 195 | 2 |
| அல்லல்...கொண்டவர் | 316 | 17 |
| அல்லல்...கொண்டீர் | 318 | 25 |

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| அல்லவையடிய | 42 | 17 |
| அல்லிமலர்களே | 31 | 29 |
| அவத்தினை அறுக்கவந்தார் | 201 | 9 |
| அவரவர் உண்டபின்னே | 112 | 48 |
| அவரவர் கடமையாற்ற | 119 | 12 |
| அவனியின் இல்லறத்தை | 117 | 4 |
| அவளுடன் எழுந்துவந்தான் | 272 | 7 |
| அவ்வப்போமுறையாமர் | 297 | 21 |
| அவ்வியமற்றநல்ல | 105 | 15 |
| அழகிலா அரிவைதன்னை | 139 | 66 |
| அழகுடைநகரா | 26 | 2 |
| அழிந்ததே குகயோகம் | 53 | 73 |
| அழியாத புகழ்பெற் | 21 | 25 |
| அழிவிலாப்புகழ்பெற்றோங்கி | 141 | 75 |
| அழுக்காறுமிஞ் சிலிட்ட | 61 | 31 |
| அழைத்தனர் வேங்கடன்தான் | 145 | 94 |
| அளகாபுரி செல்வம் | 169 | 29 |
| அளவிலாப்புகழ் | 332 | 54 |
| அளவிலாப் புகழ் கொண்டவர் | 334 | 54 |
| அளவிலா உயிர்கள் தம்முள் | 207 | 39 |
| அளிசிறந்தவராயினர் | 325 | 16 |
| அளிமிகு ராகவேந்திரர் | 325 | 15 |
| அறத்தைநன் காற்றுதற்கே | 118 | 10 |
| அறந்தலையழிந்தநாதர் | 158 | 12 |
| அறந்திறம்பாத நல்ல | 56 | 9 |
| அறந்திறம்புமிக் | 38 | 26 |
| அறமழிந்துறல் | 33 | 4 |
| அறம்பொருள் இன்பந்தான் | 160 | 20 |
| அறம்பொருள் இன்பம் எல்லாம் | 137 | 55 |
| அறம்பொருள் இன்பமென்னும் | 138 | 62 |
| அறம்பொருள் இன்பம்வீடு | 102 | 61 |
| அறவழியின்பம் கண்டார் | 162 | 31 |
| அறவிய நெஞ்சம் பெற்றே | 87 | 18 |
| அறவேதான் குட்டநோகம் | 358 | 8 |
| அறனெனப் பட்டதெல்லாம் | 158 | 11 |
| அறிவிலேகடல் போன்றாய் நீ | 134 | 42 |
| அறிவினால் அறிந்துகொள்ளும் | 190 | 65 |
| அறிவுதான் கூர்மை | 75 | 23 |
| அறிவொன்றே இன்பங்காண | 257 | 13 |
| அறுபான் நால்கலைகள் | 20 | 21 |
| அறுவையே செய்தாலன்ப | 354 | 9 |
| அறுவையே செய்யச் | 354 | 11 |
| அறுவையை முடித்தார் டாக்டர் | 354 | 13 |
| அறைந்தவர் யாரோ அவரே | 122 | 11 |
| அறையினில் புகுந்த போது | 219 | 95 |
| அற்புதச் சக்தியைத்தான் | 348 | 1[illegible] |
| அற்புதம் அற்புதமே | 340 | [illegible] |
| அற்றமில் அரசனானான் | 16 | 24 |
| அனுதினம் ராகவேந்திரர் | 342 | 18 |
| அனைத்துமே ராகவேந்திரர் | 277 | 17 |
| அனைவரும் உண்டியுண்ண | 121 | 7 |
| அனைவர்தம் இடத்தில் நீயும் | 268 | 18 |
| அன்பர்தம் கட்டளைக்கே | 269 | 3 |
| அன்பினால் ஏற்றார் தீர்த்தர் | 129 | 14 |
| அன்புடன் ராகவேந்திரர் | 278 | 24 |
| அன்புடன் பக்தர்க்காக | 201 | 8 |
| அன்புறத்தும் பக்தர்கள் | 333 | 57 |
| அன்புறயில்லறத்தான் | 162 | 32 |
| அன்வாரி மாதவர்தான் | 362 | 6 |
| அன்வாரி மாதவர்ரால் | 363 | 10 |
| அன்றவர் பாலையின் கண் | 270 | 9 |
| அன்றாடம் தமதுசீடர் | 255 | 2 |
| அன்றியும் சொன்னார்மக்கள் | 241 | 206 |
| அன்றியுமாங்கள் | 318 | 29 |
| அன்றியும் ஒரு | 24 | 5 |
| அன்றியும் மனத் | 318 | 27 |
| அன்றியே ஆதிசக்தி | 59 | 24 |
| அன்றிராமுழுதும் தூக்கம் | 145 | 98 |
| அன்றிரா முழுதும் ஆவி | 174 | 17 |
| அன்றிரா அர்ச்சகர் நாம் | 360 | 15 |
| அன்னதன்மையதே | 47 | 41 |
| அன்னதன்மையதைக் கண்டார் | 268 | 17 |
| அன்னதன்மையதைக் கேட்டார் | 305 | 24 |
| அன்னவர் உரைத்த | 155 | 46 |
| அன்னவர் கங்கையாற்றின் | 175 | 18 |
| அன்னவர் சென்ற பின்னே | 52 | 66 |
| அன்னை கோபிகாம்பாள் தன்னை | 77 | 33 |
| அன்னை கோபிகாம்பாள் பெற்ற | 71 | 1 |

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| அன்னை சரஸ்வதி பாய் | 171 | 1 |
| அன்னையருள் செய்வாய் | 313 | 16 |
| அன்னையும் பிதாவும் போன்றே | 62 | 40 |
| அன்னையும் பிதாவும் | 58 | 19 |
| அன்னையும் பிதாவே யென்ன | 84 | 2 |
| அன்னை யென்னவே | 311 | 8 |

ஆ

| | | |
|---|---|---|
| ஆகமபாகபொருள்கள் எல்லாம் | 266 | 5 |
| ஆகவேயறிவொன்றே | 257 | 12 |
| ஆகுமிச்சம்பிரதாயம் | 215 | 76 |
| ஆகுஞ்செயலதோ | 312 | 12 |
| ஆங்கள் சேர்ந்தனர் | 316 | 16 |
| ஆங்கவர் செல்லுங்காலை | 152 | 33 |
| ஆங்கவர் பக்தர்தம்மை | 325 | 17 |
| ஆங்கவர் யாரோவென்ன | 256 | 8 |
| ஆங்கவனறிவு நோக்கி | 79 | 40 |
| ஆங்கவன் பிறக்கு | 41 | 14 |
| ஆங்கில அரசின் கண்ணே | 346 | 2 |
| ஆங்கொருமகானே நின்றார் | 256 | 7 |
| ஆசாரசீலர் என்றால் | 274 | 4 |
| ஆசியேகூற கல்தான் | 306 | 29 |
| ஆசைக்கோர் அளவே | 261 | 33 |
| ஆசைதான் துன்பம் எல்லாம் | 256 | 10 |
| ஆசையாம் பாலன் தானும் | 300 | 36 |
| ஆடல்கொண்ட | 3 | 14 |
| ஆடல்கொண்டார் | 332 | 51 |
| ஆடி மாதம் ஒன் பதாம் | 4 | 2 |
| ஆண்டகையாக ராகவேந்திரர் | 272 | 8 |
| ஆண்டவன் ஒருவன் உண்டு | 343 | 21 |
| ஆண்டவன் முன்பு யாருஞ் | 214 | 71 |
| ஆண்டவன் மேலே நல்ல | 241 | 207 |
| ஆண்டுகள் பலவாய் வாழ்ந்தும் | 344 | 28 |
| ஆண்டுகள் பலவே சென்ற | 345 | 1 |
| ஆண்டுகள் பன்னிரண்டில் | 43 | 22 |
| ஆண்டு சக்கில | 4 | 3 |
| ஆதரவுடைய ராகவேந்திரர் | 208 | 40 |
| ஆதலால் அரசனானவன் | 221 | 107 |

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| ஆதலால் அவர்க்கு | 116 | 68 |
| ஆதலால் எனக்குத் | 291 | 24 |
| ஆதலால் சேர்ப்பீர் என்றார் | 215 | 77 |
| ஆதலால் தாசர் பின்பே | 345 | 33 |
| ஆதலால் பிணத்தினூடே | 362 | 7 |
| ஆதலால் பேழை தன்னை | 235 | 175 |
| ஆதலினாலே யுங்கள் | 137 | 58 |
| ஆதலினிற் சந்யாசம் | 148 | 13 |
| ஆதலின் ஐயயானே | 366 | 12 |
| ஆதலின் தங்கள் அன்பின் | 245 | 7 |
| ஆதலின் மாஞ்சாலத்தை | 309 | 12 |
| ஆதலின் நீங்கள் | 10 | 4 |
| ஆதவன் இன்றேல் | 113 | 55 |
| ஆதிசேடன் மேல் மாயோன் | 196 | 8 |
| ஆதித்தன் அன்பின் மிக்கான் | 191 | 74 |
| ஆதித்தன் கிரணர் | 191 | 71 |
| ஆதிமூலனின் | 100 | 52 |
| ஆதிமூலனின் அருளை | 183 | 29 |
| ஆதிமூலனை அழைத்த | 182 | 27 |
| ஆதியில் மனிதர் தம்மை | 291 | 23 |
| ஆதியேயானாய் | 179 | 14 |
| ஆதினைக்கவினுறாக | 129 | 18 |
| ஆதோனிசமஸ்தான | 280 | 1 |
| ஆமிதையெல்லாம் | 347 | 7 |
| ஆமிவன் அர்ஜுனன் தான் | 215 | 79 |
| ஆமுமதடியின் கண்ணே | 206 | 33 |
| ஆயர்பாடியிலே கண்ணன் | 73 | 13 |
| ஆயிர நாவால் | 12 | 11 |
| ஆயிரமாயிரம் | 324 | 10 |
| ஆரணங்கற்றாரென்றே | 293 | 2 |
| ஆரணங்கூறும் ஆதி | 208 | 44 |
| ஆரணங் கூறும் மேனான் | 193 | 82 |
| ஆரணம் சொல்லும் | 49 | 53 |
| ஆரணம் ஓதுவாரும் | 92 | 14 |
| ஆராதனைகற்பூர ஆரத்தி | 194 | 88 |
| ஆரிதைக் கண்டார் | 296 | 20 |
| ஆர்த்தெழுகுசுயோகஞ் | 64 | 49 |
| ஆலவாய்ப் பதியில் | 241 | 1 |
| ஆழ்ந்திடுங் கடலதே | 25 | 10 |

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| ஆற்றல் பிரமனே | 35 | 10 |
| ஆனந்ததாசர் ஏற | 350 | 9 |
| ஆனந்ததாசர் தானே | 350 | 10 |
| ஆனந்ததீர்த்தர்கூறும் | 124 | 6 |
| ஆனந்தமாக உண்டார் | 122 | 9 |
| ஆனாலும் சீனிவாசாச் | 275 | 10 |
| ஆனாலும் அருகிருந்தோர் | 249 | 11 |
| ஆனாலும் மூன்றாமர் | 277 | 19 |
| ஆனாலும் ராகவேந்திரர் | 275 | 7 |
| ஆஷாட மாதந்தன்னில் | 275 | 6 |
| ஆஷாட மாதமாக | 215 | 75 |

## இ

| | | |
|---|---|---|
| இகபர இன்பம் நல்கும் | 51 | 61 |
| இக்கலியுகத்தில் இன்னார் | 69 | 71 |
| இக்கலியுகத்திலே | 340 | 8 |
| இங்கெனதாவிதன்னை | 174 | 15 |
| இசைக்கலை வீணை | 87 | 15 |
| இசையில் மங்களம் | 166 | 12 |
| இடப்பாகங் கொடுத்தான் | 201 | 7 |
| இட்டமாய்ராகவேந்திரர் | 338 | 19 |
| இதற்குமுன் குழந்தை | 234 | 170 |
| இத்தரு கூடிடும் | 285 | 25 |
| இத்தரு நிலையை | 127 | 8 |
| இத்தரு பீடத்தின் | 308 | 11 |
| இத்தரு ராகவேந்திரர் | 26 | 14 |
| இத்தருவுபதேசத் | 155 | 49 |
| இத்தரை மக்கள் | 205 | 25 |
| இந்த நன்னாள் | 27 | 6 |
| இந்த பிறவியில் | 312 | 11 |
| இந்த மாநகர் | 27 | 8 |
| இந்திரனவன் | 28 | 12 |
| இந்திரன் திசையிற் | 200 | 4 |
| இப்படிக்கேட்டு | 255 | 5 |
| இப்படியீதில் உள்ள | 303 | 15 |
| இப்படி வாழுநாளில் | 40 | 6 |
| இப்படி வாழ்வில் | 117 | 2 |
| இப்புவி தனிலேயென்றன் | 143 | 88 |

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| இப்புவிதனில் சந்யாசம் | 150 | 23 |
| இப்புவி மக்கள் | 242 | 6 |
| இப்புவி வாழும் | 338 | 17 |
| இப்புவி வாழ்க்கை | 338 | 18 |
| இப்பொழுதென்ன | 304 | 19 |
| இப்ராகிம் அடில்ஷா | 273 | 13 |
| இயக்குவர் ஒருவரன்றி | 346 | 5 |
| இருக்கைதான் ஞானியர்க்கு | 149 | 20 |
| இருக்கையிலமர்ந்திருந்தே | 115 | 65 |
| இருக்கையிலிருத்திப் | 96 | 34 |
| இருக்கையே கேட்டீர் | 351 | 13 |
| இருமையாம் உலகந் | 117 | 6 |
| இருவரும் மகிழ்ந்தே | 102 | 64 |
| இருளை யொத்தது | 32 | 33 |
| இலக்குமி அருளைப்பெற்றார் | 201 | 6 |
| இலக்குமி இல்லம் | 120 | 18 |
| இல்லவன் மாண்பு | 161 | 27 |
| இல்லறத் துறவறத்தில் | 157 | 6 |
| இல்லறந் தனையே | 40 | 5 |
| இல்லறந் துறவறந் | 156 | 2 |
| இல்லறம் பெருமையே | 136 | 53 |
| இல்லற வாழ்க்கைக் | 161 | 26 |
| இவ்வாறிசையொலி | 94 | 23 |
| இவ்வாறு குருராசர் | 85 | 7 |
| இவ்வாறு திம்மண்ணார் | 76 | 25 |
| இளையவன் இன்னல் | 77 | 34 |
| இறந்தவக் குழந்தை | 300 | 39 |
| இறந்தவர் உலகில் | 240 | 204 |
| இறந்தவன் போலே | 240 | 201 |
| இறுதியே யடைந்தான் | 284 | 18 |
| இறைவனின் பேரைச் | 276 | 15 |
| இறையருள் மிக்கே | 89 | 27 |
| இற்றைக்கே ஏழாம் | 105 | 13 |
| இற்றை நாள் | 99 | 48 |
| இன்மெழுந்திய | 179 | 12 |
| இன்மொழி | 109 | 32 |
| இனிப்புப் பண்டம் | 228 | 141 |
| இன்பத்தினின்பம் | 160 | 19 |
| இன்பமாய்க் கண்ணன் | 48 | 47 |

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| ...ன் பமுந்—இயைந்ததித் | 142 | 79 |
| ...ன் பமுந்—இயைந்திடும் | 73 | 14 |
| இன்பமும் துன்பமெல்லாம் | 343 | 22 |
| இன்றுநாம் செல்வதெங்கே | 307 | 6 |
| இன்று நான் படும் | 143 | 87 |
| இன்று நீ சென்று | 140 | 70 |
| இன்றை நாள் தொட்டு | 326 | 24 |
| இன்னதன்மையதாய்ச் | 290 | 16 |
| இன்னதன்மையினிற் | 82 | 15 |
| இன்னம் இரண்டா | 256 | 9 |
| இன்னமுங் கும்பகோணத் | 228 | 142 |
| இன்னவாறனை வருந் | 219 | 94 |
| இன்னவாறுரைத்த | 62 | 36 |
| இன்னவா...இவர்பின்னே | 65 | 52 |
| இன்னவா...இவர்புகழ் | 45 | 30 |
| இன்னவாறொழுகுநாளில் | 46 | 37 |
| இன்னறுங் கங்கைக் | 175 | 21 |
| இன்னுஞ் சற்று நேரத்தில் | 327 | 28 |
| இன்னநீரிருக்கின்றீர் | 229 | 147 |
| இன்னுநீர் தயங்கவேண்டா | 234 | 172 |

ஈ

| | | |
|---|---|---|
| ஈசனின் ஆடல் | 19 | 13 |
| ஈதோதான் வந்துவிட்டார் | 288 | 7 |

உ

| | | |
|---|---|---|
| உகந்தோறும் அவதரித்தே | 200 | 1 |
| உகமொனாந்தோன்றி | 84 | 1 |
| உங்களில் சிறந்தோர் | 198 | 4 |
| உங்களின் காணிக்கை | 292 | 28 |
| உங்களின் சோக | 266 | 6 |
| உங்களின் வைரமாலை | 225 | 125 |
| உங்களை மகானே | 267 | 10 |
| உடலோடு சேர்ந்த | 199 | 8 |
| உடனிருந்தவரு | 15 | 18 |
| உடனுறை சீடரெல்லாம் | 247 | 5 |

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| உடனுறை வாழ்வினாலே | 130 | 20 |
| உடன் பிறந்தவருள் | 258 | 20 |
| உணர்த்தினார் பரமாத்மா | 191 | 70 |
| உணர்விலாதுழல்வன் | 134 | 43 |
| உணவுடன் உடையும் | 262 | 39 |
| உணவொடு நீரும் உன்னை | 272 | 9 |
| உணவொடுவுடையுமில்லை | 126 | 3 |
| உண்டனர் ஒருங்கமர்ந்தே | 122 | 8 |
| உண்மையில் இறந்தார் | 239 | 196 |
| உண்மையில் ராகவேந்த்ரர் | 228 | 143 |
| உண்மையும் இன்மை | 227 | 138 |
| உண்மையே கொண்டு | 328 | 30 |
| உண்மையை யறியவேண்டும் | 292 | 26 |
| உத்தமராகவேந்திரா | 55 | 2 |
| உத்தமராகவேந்திரா | 309 | 14 |
| உத்தமராகவேந்திரா | 346 | 4 |
| உத்தமராகவேந்திரா | 293 | 1 |
| உத்தமனாக வாழ்வீர் | 328 | 33 |
| உம்முடைப் பாதம் | 206 | 31 |
| உம்மைசெய்புண்ணிய | 176 | 23 |
| உம்மைநற்பிறவி | 72 | 5 |
| உம்மையிற்பிறவி | 100 | 54 |
| உயர்கயிலையே | 25 | 9 |
| உயர்ந்தபட்டாச்சார்யார் | 132 | 31 |
| உயர்வினால் மூலராமர் | 295 | 15 |
| உயர்வும் தாழ்வும் உடையவர் | 25 | 12 |
| உயர்வும் தாழ்வும் உலகவர்க் | 24 | 6 |
| உயிருடன் வாழ்ந்தாலென்ன | 173 | 12 |
| உய்வகையறிந்து | 249 | 13 |
| உரத்தின் எண்ணின | 182 | 28 |
| உருகுகின்ற வுணர்ச்சி | 329 | 38 |
| உருவினில் மாந்தரானார் | 71 | 81 |
| உரைசெயற்கரிய | 246 | 12 |
| உரைசெயாத வருள்னெமு | 336 | 6 |
| உரைத்தவர் வாசகந்தான் | 106 | 20 |
| உரைத்தனர் ராகவேந்த்ரர் | 309 | 13 |
| உலகநல் லாட்சி பெற்றே | 147 | 8 |
| உலகமெங்கணும் | 33 | 1 |
| உலகம் நலமுறும் | 312 | 13 |

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| உலகோர் போற்ற | 366 | 11 |
| உலகியல் சுகவேண்டும் | 259 | 23 |
| உலகிலே வாயு | 10 | 1 |
| உலகிற்கே ஒருவனாகி | 111 | 43 |
| உலகினில் இருளகற்றும் | 207 | 35 |
| உலகினில் பிறந்தோரெல்லாம் | 106 | 21 |
| உலகுக்கே யில்றைத் | 157 | 8 |
| | 138 | 63 |
| உலகுண்டபெம்மான் | 62 | 39 |
| உலகெலாம் படைத்துக | 55 | 5 |
| | 69 | 74 |
| உவமையற்ற நல் | 32 | 35 |
| உழவொடு தொழிலும் | 262 | 38 |
| உழைக்காமல் உலகில் | 261 | 32 |
| உழைக்காமற் பொருளும் | 262 | 37 |
| உழைத்துத் தான் | 260 | 29 |
| உளநிறையவன் பின் | 304 | 16 |
| உளமதிற் கருணை | 12 | 1 |
| உள்ளமும் சிலிர்த்தனர் | 47 | 44 |
| உள்ளமு நிறைந்தார் | 276 | 14 |
| உள்ளுறச் சந்யாசந் | 149 | 18 |
| உறக்கத் திலிருந்தான் | 282 | 10 |
| உறக்கமே கொண்ட | 344 | 25 |
| உறவினாலுணர்வு | 124 | 4 |
| உறுதியாக் கொண்டார் | 124 | 3 |
| உறுதியைச் சொன்னான் | 153 | 40 |
| உற்றாரும் உறவின் | 84 | 4 |
| உன் முகமழகே | 207 | 37 |
| உன்றன் விருப்பினை | 316 | 18 |
| உன்னால்தான் மகிழ்ச்சி | 150 | 22 |
| உன்னுடையர்த் | 169 | 63 |
| உன்னைவிட்டபெலைக்கு | 330 | 43 |

ஊ

| | | |
|---|---|---|
| ஊரவர் கூடுகின்றார் | 70 | 80 |
| ஊரறுபுறத்தில் நாசி | 357 | 2 |
| ஊராரும்பாவம் என்றார் | 286 | 30 |
| ஊருஞ் சுதமல | 172 | 3 |
| ஊர்பெயர் கூறார் | 196 | 5 |

எ

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| எக்காலும் ராசவேந்திரர் | 365 | 7 |
| எங்களும் உன்னோர் | 95 | 27 |
| எங்களும் பக்தர் கூட்டம் | 333 | 60 |
| எங்களின் நவாபசித்தி | 291 | 19 |
| எங்களின் அறியாமையால் | 249 | 15 |
| எங்களின் நாடே வந்தீர் | 250 | 5 |
| எங்குறை தீர்ப்பாயென்றே | 89 | 26 |
| எஞ்சலில் பாகம் | 164 | 3 |
| எஞ்சிய சந்தனத்தை | 123 | 14 |
| எடுத்துமே வாரீர் | 300 | 37 |
| எட்டொடும் ஆறும் | 185 | 40 |
| எட்டொடு இரண்டுமான | 72 | 8 |
| என்னரும் கொண்டார் | 141 | 76 |
| என்னவிழிப்பங்கினார் | 336 | 8 |
| என்னவினை யென்னவெல்லாம் | 339 | 1 |
| என்னவினைநெறியும் | 133 | 34 |
| என்னவினார் சீவிகாசர் | 279 | 27 |
| என்னவினார் ராசவேந்திரர் | 299 | 31 |
| என்னவினார் மனத்துக்குள்ளே | 289 | 13 |
| என்னவினான் மன்னன் என்னே | 223 | 117 |
| என்னவினான் வேங்கடநாம் | 129 | 16 |
| எத்திக்கும் புகழ் | 216 | 84 |
| எத்துணைக் காலம் நீயும் | 138 | 61 |
| எத்துணையாண்டானாலும் | 326 | 22 |
| எத்தனைக் காப்பாய் முகுந்தா | 329 | 39 |
| எந்தன் மனம் நொந்துள் | 329 | 40 |
| எந்தையாம் இறைவர்க் | 45 | 34 |
| எந்நாட்டுள் இறைவனெல்லாம் | 22 | 31 |
| எப்படிமுடியுமென்றே | 262 | 40 |
| எம்முடைத்தெய்வம் | 288 | 5 |
| எம்முடை வீட்டிற்கே | 294 | 10 |
| எரிமனந்துன்பத் | 271 | 4 |
| எல்லையற்ற மகிழ்ச்சி | 169 | 26 |
| எல்லையில் பரமாத்மாவே | 187 | 54 |
| எழுதிய நூலைத்தானே | 278 | 23 |
| எழுதியே வைத்தார் | 363 | 14 |
| என் வாழ்வாகில் வஞ்சம் | 361 | 20 |
| என் வாழ்வாயினர் | 359 | 24 |

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| எற்றேயிவர் | 44 | 28 |
| எனக்கருள் செய்தே | 2 | 6 |
| எனக்குநீர் ஏற்றவாறு | 214 | 70 |
| எனக்குநீர் நன்மை | 235 | 179 |
| எனவெவர் கருதி | 104 | 7 |
| என் உடன் ஒன்றன் | 85 | 5 |
| என்றதுந் தாசிக்கே | 360 | 19 |
| என்றதும் தாமதந்தான் | 237 | 189 |
| என்றதும்...இருந்தவம் | 249 | 14 |
| என்றதும்...இருந்திடச் | 225 | 128 |
| என்றதும்...இனிநாமும் | 238 | 195 |
| என்றதும்...இன்னகை | 211 | 57 |
| என்றதும்...என்மீது | 279 | 30 |
| என்றதும்...ஏறெடுத் | 267 | 12 |
| என்றந்த சீடன் தானும் | 189 | 62 |
| என்றந்தப் பெரியோர் | 89 | 29 |
| என்றந்தவாசகந் | 113 | 56 |
| என்றவைச் சபையோர் | 99 | 49 |
| என்றவர் உரைத்தபோதச் | 163 | 34 |
| என்றவர் உரைத்தபோது | 154 | 41 |
| என்றவர் உள்ளத் துள்ளி | 128 | 13 |
| என்றவர் களவில் தோன்றி | 144 | 92 |
| என்றவர் கூறியாங்கே | 239 | 199 |
| என்றவர் சொன்னகை | 119 | 16 |
| என்றவர்க் கெடுத்துக்கூறி | 111 | 44 |
| என்றவர் சொன்னார் | 123 | 13 |
| என்றவர் விளக்கங் | 226 | 131 |
| என்றவற் கெடுத்தே | 53 | 74 |
| என்றன் அருகிலே என்றும் | 312 | 14 |
| என்றனர் தீர்த்தர் ஆங்கே | 365 | 9 |
| என்றனர் மாயாவாதி | 131 | 26 |
| என்றனன் சங்குகர்ணன் | 63 | 41 |
| என்றன் மகன் உம்தம்மனை | 99 | 47 |
| என்றாலும் ராகவர்தம் | 313 | 3 |
| என்றாலும் ராகவேந்திரர் | 350 | 8 |
| என்று எண்ணியே | 143 | 86 |
| என்று நான்முகன் தான் | 61 | 32 |
| என்று பிரமனே | 34 | 8 |
| என்றுமே கடமை | 119 | 13 |
| என்றுமே தேசாமில்லான் | 298 | 27 |
| என்றுமே நினைத்தார் | 303 | 13 |
| என்றுமேயாசான் நல்ல | 116 | 69 |
| என்றுமே இளையாய் போற்றி | 310 | 3 |
| என்றுமே வெண்ணிமன்னன் | 290 | 15 |
| என்றுமே யேக்கத்தோடு | 287 | 3 |
| என்றுரை வேங்கடர்தான் | 108 | 31 |
| என்றென்றும் ஞானி | 21 | 26 |
| என்றென்றும் ராகவேந்திரர் | 345 | 31 |
| என்றேயான் கருத்திற் | 241 | 209 |
| என்றைக்கும் | 22 | 29 |
| என்னடாயினியுந்துக்கம் | 239 | 200 |
| என்னதான் அரசிதானும் | 236 | 185 |
| என்னவென் றீந்தோம் | 224 | 121 |
| என்னிலைகண்டாய் | 145 | 96 |
| என்னுளேபுக்காய் | 17 | 1 |
| என்னேசங்கு கர்ணர் | 37 | 23 |
| என்னேயவர் சென்றி சில | 142 | 82 |
| என்னேயான் பாவம் | 114 | 61 |
| என்னேயிப் பாரதத்தில் | 18 | 9 |
| என்னேயிவர் இசை | 48 | 46 |


## ஏ


| | | |
|---|---|---|
| ஏகனாய்யிருந்தே | 228 | 39 |
| ஏகனாய் இறையின் | 101 | 56 |
| ஏதுவம் .. வாதிட்ட | 139 | 68 |
| ஏதுவம் .. வாதினிற் | 81 | 14 |
| ஏதேனும் சேதியுண்டோ | 275 | 8 |
| ஏலவேயெம்ம | 36 | 18 |
| ஏழும் படிக்குங்க | 327 | 29 |
| ஏழுடைப் பிறவிபோக்கும் | 100 | 51 |
| ஏழொடே எட்டுந் | 254 | 8 |
| ஏற்றுக்கொண்டார் | 341 | 11 |
| ஏன்ற தீர்த்தர் | 169 | 28 |


## ஐ


| | | |
|---|---|---|
| ஐந்துடனிரண்டு | 42 | 18 |
| ஐயராந்தீர்த்தரானவர் | 172 | 6 |

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| ஐயனே நாங்கள் | 50 | 55 |
| ஐயன் மூலராமரின் | 323 | 6 |
| ஐயோயாரென் என்ன | 238 | 193 |
| ஐவகைக்குறியை | 186 | 45 |

## ஒ

| | | |
|---|---|---|
| ஒக்கவே மக்களெல்லாம் | 249 | 12 |
| ஒப்பிலா...உயர்ந்தநற் | 335 | 1 |
| ஒப்பிலா...உயர்மூல | 214 | 72 |
| ஒப்பிலா...உயர்தச் | 356 | 21 |
| ஒப்பிலா வேங்கடன் நீ | 149 | 19 |
| ஒருங்கிணி திருந்தார் | 154 | 43 |
| ஒரு தனியாழியன் | 180 | 15 |
| ஒரு தனிவிதையே | 80 | 5 |
| ஒரு நாமமில்லா | 250 | 2 |
| ஒருநாளில் மரத்தின் | 282 | 8 |
| ஒருபெரு நாடா | 86 | 12 |
| ஒரு பெரு மகானென் | 317 | 20 |
| ஒரு மணவிழாவே | 165 | 8 |
| ஒரு மணி தாலிச் | 101 | 57 |
| ஒரு முறைகற்ற | 79 | 4 |
| ஒருமுறை யறுவைக்கே | 355 | 14 |
| ஒருமுறை வேங்கடன் | 143 | 84 |
| ஒருவருக்கொருவர் | 290 | 14 |
| ஒருவரையொருவர் | 160 | 21 |
| ஒருவனே உலகிற் | 113 | 52 |
| ஒவ்வொரு நாளும் | 268 | 16 |
| ஒளியினில் மூழ்கிப் | 194 | 86 |
| ஒற்றுமையாளோமென்றே | 205 | 26 |
| ஒன்பதின் பதிற்றி | 54 | 76 |
| ஒன்றிய உள்ளங்கொண்டார் | 297 | 23 |
| ஒன்றியவுள்ளங் கொண்டே | 301 | 4 |
| ஒன்றியுள்ளம் | 319 | 34 |
| ஒன்றின் அழகினை | 31 | 27 |
| ஒன்று நாள் ... உயர்சங்கு | 61 | 34 |
| ஒன்று நாள் ... உறையை | 57 | 13 |
| ஒன்றும் அறியா | 171 | 36 |
| ஒன்றே யானை | 182 | 25 |

## ஓ

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| ஓங்காரத் துட்பொருள் | 139 | 65 |
| ஓங்கார மந்திரத்தை | 185 | 42 |
| ஓதநீர்தனில் | 30 | 23 |
| ஓதியேயுணர்ந்தார் | 193 | 84 |

## க

| | | |
|---|---|---|
| கசடறக்கற்றல் | 80 | 8 |
| கடந்துதான் வந்தே | 337 | 14 |
| கடமது குடமதெல்லாம் | 113 | 54 |
| கடமைதான் கருத்தில் | 60 | 29 |
| கடமையைக் ... கொண்டே | 108 | 27 |
| கடமையைக் ... கொள்வார் | 273 | 12 |
| கடமையைச் செய்யும் | 262 | 41 |
| கடமையையறிந்த | 364 | 2 |
| கடமையையாற்ற | 121 | 4 |
| கடலினைக் கண்டார் | 202 | 11 |
| கடவுளின் வணக்கம் | 254 | 6 |
| கடுகினைச் சேர்த்தார் | 277 | 20 |
| கடுந்தவங் கொண்டார் | 200 | 2 |
| கடுந்தவம் வேண்டாம் | 57 | 14 |
| கணவர்தான் இறந்த | 40 | 8 |
| கண்கள் போல் இருவர் | 160 | 22 |
| கண்டதும் பார்ப்பா | 210 | 52 |
| கண்டாரே பிள்ளையைத் | 298 | 26 |
| கண்டாரே ராகவேந்திரர் | 270 | 6 |
| கண்ணனின் தரிசனம் | 216 | 83 |
| கண்ணிலான் தனையே | 139 | 64 |
| கதவினைச் சார்த்தி | 298 | 28 |
| கமண்டலநீரைச் சீடர் | 292 | 27 |
| கமண்டலநீரையேந்திக் | 175 | 22 |
| கம்பனாற் கவிதாசன் | 59 | 21 |
| கம்பன் கண்ட நாடென்றே | 203 | 15 |
| கரவிலா முறைமார் | 295 | 12 |
| கரவிலா வெண்கண்ணு | 304 | 17 |
| கருங்குழல் தாழ்ந்த | 207 | 36 |
| கருத்தின் மண்ணைப் | 230 | 153 |

## கீ


| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| கீதநாயகன் கீர்த்தி | 141 | 77 |
| கீதையில் கிருட்டிணன் | 46 | 36 |


## கு


| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| குலயோக பீடை | 52 | 69 |
| குலயோகம் என்னும் | 64 | 50 |
| குடும்பத்தைக் கும்பகோணம் | 75 | 20 |
| குடும்பநற் பாரந் தன்னைக் | 135 | 46 |
| குட்டநோய் | 357 | 3 |
| குணமிகுதிம்மன்னர் | 88 | 22 |
| குதிரைமேலிருந்த சித்தி | 285 | 23 |
| கும்பகோணத்தில் வாழும் | 105 | 14 |
| கும்பகோணத்தின் | 26 | 1 |
| குரல்வந்த திக்கை | 271 | 3 |
| குருகுலம் சென்றே | 68 | 67 |
| குருகுலந்தனிலே | 111 | 46 |
| குருக்களில் | 202 | 10 |
| குரு ராகவேந்திரா | 337 | 11 |
| குரு ராஜா உன்றன் | 365 | 8 |
| குருவவர் கூறுஞ் | 115 | 64 |
| குருவவர் வாழுகின்ற | 103 | 6 |
| குருவினின் வார்த்தை | 154 | 44 |
| குருவின் நாளிலே | 4 | 4 |
| குருவுடன் வெங்கடன் | 110 | 37 |
| குருவெனு நிலையை | 234 | 52 |
| குருவொடு குழவித் | 145 | 97 |
| குலமொடு கோத்திரந் | 96 | 30 |
| குழலுங் கண்ண | 47 | 42 |
| குளத்திலும் உள்ளான் | 174 | 14 |
| குறளின் உருவினைக் | 27 | 7 |
| குறிப்பினால் அறிந்தார் | 133 | 38 |
| குறைத்திட வேண்டும் | 56 | 8 |
| குறைபோகக் கூறனமோ | 364 | 5 |
| குறைவிலாதருள் பெற் | 230 | 149 |
| குன்றின் மேலொரு | 320 | 3 |


## கூ


| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| கூடாத ஒழுக்கத்தை | 159 | 15 |
| கூடியிருப்பாரே | 340 | 9 |
| கூடியே வாழ்ந்தால் | 363 | 42 |
| கூட்டினைக் கூட்டியே | 252 | 12 |
| கூர்த்தநல்மதியுங் | 17 | 3 |
| கூறும் வார்த்தை | 188 | 58 |
| கூறுவீர் சாதகத்தில் | 198 | 3 |


## கெ


| | | |
|---|---|---|
| கெண்டை மீன் களே | 31 | 28 |


## கே


| | | |
|---|---|---|
| கேரள சோதிடத்தார் | 255 | 3 |
| கேட்டது தருவாயோ | 359 | 11 |


## கை


| | | |
|---|---|---|
| கைகளால் அருந்த | 14 | 10 |


## கொ


| | | |
|---|---|---|
| கொடிக் கம்பத்தருகே | 213 | 65 |
| கொடுத்திட்ட பொருளைப் | 214 | 73 |
| கொடுத்திட்டார் குருவே | 351 | 17 |
| கொல்லைப்புறந்தனிலிருந்தே | 236 | 182 |


## கோ


| | | |
|---|---|---|
| கோபியாம்பாளே என்னில் | 70 | 77 |
| கோலமே கொண்டு | 72 | 6 |
| கோவிந்தன் நாமந்தன்னை | 51 | 62 |
| கோமேறும் எருது | 14 | 11 |

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| கருநாடகமென்றே | 39 | 1 |
| கருப்புடனிருக்கக் கண்டார் | 276 | 12 |
| கலியுகத்தின் தன்மை | 24 | 3 |
| கலியுக முடிந்ததென்றே | 203 | 18 |
| கலைபயில் மாந்தரெல்லாம் | 64 | 48 |
| கலைபல பெற்றான் | 77 | 32 |
| கலை பலவும் கற்பதற்குக் | 94 | 21 |
| கல்லது போமினென்னே | 281 | 7 |
| கல்விடைக்குறிச்சி | 209 | 47 |
| கல்வியல் தேர்ந்தோ | 278 | 22 |
| கல்வியை யெனக்கே | 310 | 4 |
| கழறிய வார்த்தை | 134 | 41 |
| களத்திரம் அன்பு | 159 | 18 |
| களவியலுற்றான் | 280 | 2 |
| களைப்பொடு வந்தாய் | 106 | 19 |
| கள்ளமே யில்லார் | 362 | 8 |
| கள்ளாரும் மலர்ச் | 92 | 13 |
| கற்பகத்தருவே | 55 | 1 |
| கற்றதும் கண்டதும் | 241 | 208 |
| கற்றநல் ஆரணத்தில் | 126 | 13 |
| கற்றறிவுடையர் | 187 | 53 |
| கற்றறிவுடையோர் | 110 | 41 |
| கற்றாரிவர் கல்வி | 44 | 27 |
| கனவில் நான் கண்ட | 153 | 39 |
| கனவோமிது நனவோ | 331 | 46 |
| கனிவுடன் கொண்டு | 214 | 74 |
| கன்னட நாட்டதாகும் | 244 | 4 |
| கன்னட நாட்டில் | 90 | 1 |
| கன்னடமே கன்னிக் | 63 | 45 |
| கன்றிடாப் பழங்கள் | 292 | 30 |
| கன்றினைப் பிரிந்த | 288 | 4 |
| கன்று பிரிந்த | 318 | 28 |
| கன்னியாம் சரஸ்வதியாய் | 90 | 2 |


## கா


| | | |
|---|---|---|
| காட்சியே கொடுத்தான் | 347 | 11 |
| காட்டிற்குச் செல்வதெங்கன் | 107 | 26 |
| காண்டகு முறைமையர் | 218 | 91 |
| காண்டக [illegible] | 251 | 6 |
| காதலினாலே நல்ல | 57 | 15 |
| காத்தது உயிரை | 352 | 19 |
| காரண மூலர் சங்குநாள் | 288 | 8 |
| காரணமூலன் ...அருளைப் | 208 | 41 |
| காரணமூலன் ...புகழே | 332 | 55 |
| காரணமூலன் சங்கு ... பூரண | 197 | 14 |
| காரண மூலன் ராசவேந்திரர் | 356 | 15 |
| காரிருள் போன்ற யானை | 206 | 34 |
| காலங்கழிந்த தென்றே | 202 | 14 |
| காலத்தில் மழையே | 317 | 23 |
| காலம்மூன்றின் | 342 | 15 |
| காலம் மூன்றும் | 341 | 12 |
| காலனை வெல்லவேண்டின் | 134 | 39 |
| காலனை வென்றாய் | 177 | 8 |
| காலினில் விழலை அன்னாள் | 73 | 12 |
| காலும் இன்றியே | 29 | 15 |
| காலையும் மாலையும் | 93 | 18 |
| காவாய் நீ யென்றே | 172 | 7 |
| காவியே கொண்டு | 229 | 148 |
| காவிரிக் கரையிலுள்ள | 183 | 32 |
| காவிரிதனில் | 186 | 46 |
| காவிரி நதியில் | 185 | 44 |
| காவிரிப் பெண்ணூன் | 183 | 34 |
| காற்றின் கடவுளே | 35 | 11 |
| காற்றைப் பிடித்துக் | 336 | 9 |
| காளகம் போன்றே | 349 | 5 |
| கான் முளையாகத் | 184 | 39 |
| கான் வழிச் சென்றார் | 314 | 6 |


## கி


| | | |
|---|---|---|
| கிடத்தினார் உடலைந் | 220 | 100 |
| கிருட்டின தேவராயர்கீர்த்தி | 52 | 67 |
| கிருட்டின தேவராயன் சபைதனில் | 65 | 51 |
| கிருட்டின பட்டர் | 65 | 53 |
| கிருட்டினன் மதுரை | 19 | 12 |
| கிருதயுகத்தில் | 347 | 9 |
| கிழக்கொடு மேற்குக் | 208 | 42 |
| கின்னர விசையில் | 86 | 10 |
| கின்னர வீணை | 85 | 9 |

## ச

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| சகந்தனில் மிகு | 217 | 85 |
| சகந்நாததாசர் | 345 | 30 |
| சகமெலாந் தழைக்கத் | 180 | 16 |
| சகலமாகலைகள் | 51 | 64 |
| சக்திதானில்லை | 239 | 198 |
| சங்கடம் உற்றதாலே | 210 | 50 |
| சங்கடம் வந்தபோது | 285 | 26 |
| சங்கத்துப் புலவர் | 21 | 24 |
| சங்கரர் மத்வர் | 20 | 17 |
| சங்கரன் அவனே | 59 | 25 |
| சங்கரன் உதித்தான் | 18 | 11 |
| சங்குகள்ளரே அங்கு | 311 | 6 |
| சங்குசக்கரம் | 37 | 19 |
| சங்கு பட்டங்கள் | 170 | 32 |
| சதுர்மாத விரதம் | 246 | 10 |
| சதுர்முகன் படைத்த | 244 | 1 |
| சதுர்முகன் றனால் | 37 | 20 |
| சதுர்முகன் றனை | 35 | 14 |
| சத்தர் காவலி | 11 | 9 |
| சத்துவகுணத்தினாரைச் | 150 | 21 |
| சத்துவகுணமே | 253 | 1 |
| சந்திரன் தனைச் | 32 | 34 |
| சமமென்றே உருவில் | 175 | 20 |
| சமரசமில்லா | 26 | 13 |
| சம்சாரசாகரத்தைத் | 181 | 21 |
| சருகுகள் எரிந்தே | 112 | 51 |
| சருக்கமே பத்துச் | 253 | 5 |
| சற்றேரத்தில் | 363 | 12 |
| சற்றுமே துறந்து | 162 | 29 |
| சற்றேறக் குறைய | 322 | 3 |

## சா

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| சாகாவரம் பெற்றேன் | 147 | 9 |
| சாதி சமயச் சார்பில் | 319 | 33 |
| சாத்திரக் கலை பயின்றார் | 22 | 30 |
| சாத்திரங்கற்ற சன்னியாசி | 98 | 45 |
| சாத்திரம் கற்ற நல்ல | 173 | 8 |
| சாத்திரம் கற்ற மேலாந் | 338 | 16 |
| சாத்திரங் கற்றிச் | 336 | 10 |
| சாத்திரங் கற்றுயர்ந்த | 159 | 16 |
| சாத்திரங் கற்றோமென்றே | 204 | 23 |
| சாத்திரப்படி நீர்தானும் | 279 | 29 |
| சாலக்ராமம் வைத்தாரவர் | 329 | 37 |
| சாலநீங்கள் சாற்றிய | 341 | 10 |
| சாலயான் பிருந்தாவனம் | 315 | 14 |
| சாலவேயவன் | 317 | 24 |
| சாலிவாகனச் சகத்தினம் | 322 | 1 |
| சாளுக்கியரசனின் | 49 | 50 |
| சாற்றினார் ராகவேந்தரர் | 337 | 12 |

## சி

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| சித்தமுந் தெளிவேயாகிச் | 152 | 32 |
| சித்தராய் உரை | 188 | 55 |
| சித்தரில் உயர்ந்தோராகச் | 301 | 1 |
| சித்தரின் சித்தராய் | 320 | 4 |
| சித்தர்கள் உலகில் | 19 | 16 |
| சித்தர்கள் உலவினார்கள் | 196 | 10 |
| சித்தம் தூக்கத்தின் கண்ணே | 247 | 1 |
| சித்தி மதத்காறுக்குச் | 285 | 27 |
| சித்திரப் பாவையென்னத் | 80 | 6 |
| சித்திரை செல் வைகாசி | 96 | 33 |
| சிந்தாகுலம் கொண்டே | 99 | 46 |
| சிரத்தினி லுருச்சலைப் | 194 | 89 |
| சிரந்தாழ்த்தி வணங்கி | 106 | 17 |
| சிரீபுராணந்ததாசர் | 348 | 1 |
| சிலபல ஆண்டுகாலம் | 89 | 25 |
| சிலையினில் தெய்வத் தன்மை | 251 | 11 |
| சிலையினில் தெய்வம் ஏற்றிச் | 251 | 14 |
| சிவனவன் பிறவான் | 19 | 14 |
| சிவன் வாழும் | 18 | 6 |
| சிறந்தமைதுறில் உள்ள | 245 | 8 |
| சிறந்திடும் கிருத | 56 | 7 |
| சிறந்திடுவிபு | 15 | 19 |
| சிறிது சிறிதாகு | 324 | 12 |
| சிறுமதி கொண்டோர் | 107 | 24 |
| சிற்றரசரில் | 284 | 20 |
| சின்மதி சீடர் | 112 | 47 |

## சீ


| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| சீடரின் திருமணந் | 218 | 92 |
| சீடரின் துன்பந் | 219 | 98 |
| சீடரின் மனைவிஎப்ப | 270 | 5 |
| சீடரின் மனைவி தானும் | 270 | 8 |
| சீடரே யநேகர் | 247 | 2 |
| சீடர்கள் பக்தர்கள் | 340 | 6 |
| சீடர்தாம் ஒருவர் | 229 | 144 |
| சீடர்தான் இறந்தா | 220 | 99 |
| சீடனாய் ஏற்றுக் | 14 | 13 |
| சீதையே ராவணன் | 62 | 38 |
| சீரணி பெற்றே | 98 | 42 |
| சீராகுங் குடும்பம் | 172 | 5 |
| சீலங்கொண்டு நீவிருஞ் | 328 | 32 |
| சீலங் கொண்டு பூசை | 148 | 12 |
| சீலங் கொள் சீனிவாசா | 274 | 5 |
| சீலமே கொண்டறாதர் | 115 | 62 |
| சீவான் மாபரமான்மா | 188 | 59 |


## சு


| | | |
|---|---|---|
| சுன்னத்தால் இல்லம் | 92 | 15 |
| சுதாபரிமளத்தை | 121 | 6 |
| சுதாபரிமளந்தான் | 342 | 19 |
| சுதிந்தரதீர்த்தர் | 117 | 5 |
| சுந்தரவரனிப் பாரில் | 209 | 45 |
| சுவைத்திடச் சொன்ன | 125 | 7 |
| சுற்றி சுமங்கலி | 98 | 41 |
| சுற்றியுள்ள | 2 | 8 |


## சூ


| | | |
|---|---|---|
| சூத்திர பாடிய | 10 | 5 |
| சூரென் அச்சங் | 191 | 73 |


## செ


| | | |
|---|---|---|
| செகத்தினில் சிவனுக்கும் | 130 | 23 |
| செகத்தினிற் சென்று | 62 | 37 |
| செந்தன்மை பூண்டே | 101 | 60 |
| செந்தமிழின் பாவாலே | 1 | 1 |



| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| செப்பருமனின் | 154 | 45 |
| செப்பிய வார்த்தை | 283 | 17 |
| செம்பினால் சிலையைச் | 251 | 7 |
| செம்பிலும் உள்ளான் | 251 | 10 |
| செம்மையாய் | 126 | 1 |
| செயம் பெற்றேன் | 355 | 16 |
| செய்தியைக் கேட்டு | 305 | 21 |
| செய்வகையறியாய் | 190 | 69 |
| செலவுநான் | 353 | 6 |
| செல்லவுற்றேன் | 318 | 26 |
| செல்வத்தைக் கண்டான் | 234 | 173 |
| செல்வந்தான் | 352 | 2 |
| செல்வமும் நிலையா | 257 | 14 |
| செல்லப்ப நாயக்கன் | 66 | 59 |
| செழிப்பினை மாஞ் சாலந் | 307 | 5 |
| சென்றதே ரோகம் | 359 | 10 |
| சென்றநற் பிறவி | 213 | 68 |
| சென்றபின் நவாபு | 305 | 25 |
| சென்றயுகத்திலுஞ் | 23 | 2 |
| சென்றவக் காரியந் | 335 | 3 |
| சென்றவக் குழந்தை | 296 | 19 |
| சென்றவர் நாமம் | 347 | 8 |
| சென்றிட்டான் | 359 | 14 |
| சென்றுகனைதானச் | 320 | 2 |
| சென்றுமே செய்யவன் | 181 | 22 |
| சென்றுமே திருவடி | 293 | 5 |
| சென்னையின் கவர்னராவார் | 348 | 13 |


## சே


| | | |
|---|---|---|
| சேட் சென்ற வரார் | 295 | 11 |
| சேரனன் சேதனமாம் | 76 | 29 |
| சேர..ன் நாட்டில் | 198 | 2 |
| சேர்ந்..பாதோனி | 286 | 28 |


## சொ


| | | |
|---|---|---|
| சொல்லவே சான்னார் | 303 | 11 |
| சொன்னதும் கா..தி | 305 | 23 |
| சொன்னதும் ராக..வந்தர் | 267 | 13 |

## சோ

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| சோகமே யுருவாய் நின்றார் | 299 | 34 |
| சோகமே யுருவாய் நின்றான் | 283 | 15 |
| சோதிடக் கலை பயின்றார் | 83 | 20 |
| சோதிடங் கற்ற | 255 | 4 |
| சோழ மண்டலத்தின் | 223 | 114 |

## ஞா

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| ஞாலமீதினில் | 165 | 9 |
| ஞாலமேபுகழ | 114 | 59 |
| ஞானமாங் கடலின் | 135 | 45 |
| ஞானமாங் கடலே | 11 | 6 |
| ஞானமாயறிந்தார் | 300 | 38 |
| ஞானமாய் நீரும் | 280 | 31 |
| ஞானமே யுலகுக் | 21 | 22 |
| ஞானியர் முதல் வறானார் | 195 | 3 |
| ஞானியர் வந்தார் | 156 | 3 |

## த

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| தக்கதாம் நல்ல | 322 | 11 |
| தக்கநல் லுணவா | 196 | 9 |
| தக்கவக் கணத்தே | 329 | 36 |
| தக்கவக் காலத்தின் | 223 | 116 |
| தக்கவக் காலந்தன் னில் | 195 | 1 |
| தக்கவப் பெரியர் | 232 | 162 |
| தங் கடனாற்றப் | 298 | 29 |
| தங்களின் அரண்மனைக் | 291 | 22 |
| தங்களின் தயவால் | 304 | 20 |
| தங்களின் திருப்பணிக்கு | 313 | 4 |
| தஞ் சமாய் அன் னார் | 248 | 8 |
| தடுத்திரை மாயாவாதி | 189 | 61 |
| நடைசெய்வ தெங்ஙன் | 53 | 72 |
| நண்டத்தன் கையிலேந்து | 192 | 75 |
| நண்டம் ஏந்திய தண்ணளி | 230 | 152 |
| நண்ணளி ராகவேந்திரர் | 184 | 35 |
| நத்துவமசியின் | 252 | 14 |
| நத்துவ விளக்கத் | 13 | 7 |
| நத்வமஞ் சரியே | 212 | 61 |
| தப்பேதுமில்லான் | 273 | 14 |
| தமக்கெனவாழா | 253 | 2 |
| தமக்கையின் | 78 | 39 |
| தமையனாங் | 81 | 12 |
| தமையனும் | 78 | 37 |
| தம்பியின் | 83 | 22 |
| தம்மிடம்பொருள் | 127 | 6 |
| தயையினைப் பெற்றே | 69 | 75 |
| தரணியை யாளும் | 87 | 17 |
| தரத்தினிலுயர்ந்த | 334 | 63 |
| தரமுயர்தாள்கள் | 184 | 36 |
| தரிசனம்செய்யும் | 360 | 17 |
| தருக்க தாண்டவ | 54 | 75 |
| தருக்கெனும் அற்ற | 185 | 43 |
| தருணத்தான் இதுதான் | 289 | 12 |
| தலத்தினிற்றோன் று | 176 | 1 |
| தலத்தில் திருமணந் | 232 | 163 |
| தலத்தில் நாமச் | 15 | 17 |
| தலயாத்திரைகொண்ட | 238 | 192 |
| தலைமுடிதனைப் | 350 | 11 |
| தலைமையாம் | 284 | 19 |
| தவமது செய்வா | 109 | 33 |
| தவமுடிந்தது | 321 | 8 |
| தவமுடையார்க்கே | 43 | 24 |
| தவமுடையார்க்கே ஆகுந் | 135 | 48 |
| தவமுடை ராகவேந்த்ரர் | 268 | 15 |
| தவவாழ்க்கை கொண்டார் | 129 | 15 |
| தவிக் [illegible] | 145 | 95 |
| தனக்கெனக் கொடுத்த | 224 | 120 |
| தனதுநல் வருகை | 187 | 52 |
| தனவந்தரென்றே | 352 | 1 |
| தனிப்பெருந் | 18 | 7 |
| தனியாகச் சேவை | 358 | 6 |
| தனியொரு சித்தனாவான் | 196 | 6 |
| தனைத் துதிக்கவே | 151 | 27 |
| தன் னலத் துறவு | 161 | 25 |
| தன் னலம் அகல | 257 | 15 |
| தன் னாலே முடியு | 362 | 5 |
| தன் னிடங் கமண்டல | 211 | 58 |

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| தன்னிடமுள்ள | 223 | 118 |
| தன்னுடைக் கமண்டல | 220 | 101 |
| தன்னுடைக் குலத்தில் | 82 | 19 |
| தன்னுடைச் சாதகத்தின் | 199 | 9 |
| தன்னுடைப் பதவி | 348 | 14 |
| தன்னுடை நாடே | 245 | 5 |
| தன்னுடை மூல | 212 | 64 |
| தன்னுடை யடியை | 174 | 16 |
| தன்னுடை யாசான் | 46 | 39 |
| தன்னெஞ்சை | 45 | 33 |
| தன்னைத்தான் அறிந்து | 264 | 53 |
| தன்னையுணர்ந்த | 217 | 87 |
| தன்னையே படிக்கச் | 285 | 24 |
| தன்னையே மறந்தார் | 297 | 22 |
| தன்னையே வணங்கி | 222 | 110 |

## தா

| | | |
|---|---|---|
| தாசர்தாம் கனவிற் | 345 | 32 |
| தாந் துதி செய்தாரென்றே | 337 | 13 |
| தாமரைக் கண்ணனின் | 34 | 6 |
| தாமரை போன்ற | 192 | 77 |
| தாமரை மலரில் வாழ்வாள் | 146 | 5 |
| தாமரை மலரின் தேனைத் | 183 | 31 |
| தாமரையெனும் | 32 | 30 |
| தாரக மந்திரத்தைத் | 252 | 13 |
| தாரணியில் தமிழ் | 148 | 11 |
| தாரம் ஆனவள் | 171 | 2 |
| தாவாத யாகஞ் | 117 | 3 |
| தாவிலா ராகவேந்த்ரர் | 231 | 156 |
| தாவிலா ஒழுக்கங் | 183 | 33 |
| தாழும் உலகைத் | 25 | 8 |
| தாழ்விலாச் செல்வர் | 294 | 8 |
| தாளினை வணங்கக் | 123 | 1 |
| தானதை உள்ளத் | 41 | 10 |
| தானமர் கல்லின் | 314 | 8 |
| தானமாய்க் கொடுத்த | 225 | 127 |
| தானொரு தொழிலைக் | 259 | 22 |
| தான் பொழுந் தேகந் | 344 | 26 |

## தி

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| திக்கெலாஞ் சென்றார் | 201 | 5 |
| திங்கள் வைகாசி | 99 | 50 |
| திடத்தன் மையற்ற | 141 | 78 |
| திண்மமாய் எண்ணி | 133 | 35 |
| திம்மண்ண பட்டர்தானும் | 65 | 55 |
| திம்மண்ண பட்டர்சொன்னார் | 84 | 3 |
| திம்மண்ண பட்டர் மேலாந் | 92 | 12 |
| திம்மண்ண பட்டருடனே | 75 | 22 |
| திம்மண்ணர் கூறும் | 73 | 10 |
| திம்மண்ணர் திருமடத்தில் | 75 | 21 |
| திம்மண்ணர் மகனாய் | 82 | 17 |
| திம்மண்ணர் வளர்ந்தே | 88 | 21 |
| திருடுபொய் சூதுவஞ்சம் | 260 | 31 |
| திருடுபொய் வஞ்சம் சூது | 261 | 35 |
| திருட்டியால் மிகுமே | 52 | 68 |
| திருப்பதிகளிலே | 45 | 31 |
| திருப்பதி செல்ல | 51 | 60 |
| திருப்பதி தனிலே | 88 | 20 |
| திருமகள் உடையான் | 68 | 68 |
| திருமடக் காவியாடை | 229 | 146 |
| திருமடத் தாதரவாய் | 128 | 10 |
| திருமடந் தனிலே | 128 | 9 |
| திருமடப் புனிதத் | 140 | 73 |
| திருமணம் செய்து | 232 | 159 |
| திருமாலின் அவதாரந்தான் | 18 | 10 |
| திருமாலின் பூசனையைத் | 34 | 7 |
| திருமால் வாழ்கோயில் | 200 | 3 |
| திருமிகு நூல்கள் | 242 | 4 |
| திருமிகு ராகவேந்த்ரர் | 23 | 1 |
| திருமிகு ராகவேந்த்ரர் சேர்ந்துடன் | 335 | 2 |
| திருமிகு ராகவேந்த்ரர் திருவருள் | 353 | 7 |
| திருமிகு விசயராசர் | 103 | 4 |
| திருவருட் பெருமையை | 5 | 1 |
| திருவருள் கொண்ட | 112 | 49 |
| திருவருள் துணையே வேண்டி | 130 | 21 |
| திருவருள் ராகவேந்த்ரர் | 317 | 21 |
| திருவிழாக் கோலங் | 165 | 6 |
| திருவுடை சீனுவாசர் | 276 | 13 |

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| திருவுடை ராகவேந்த்ரர் | 209 | 49 |
| திரேதாயுத்திலும் | 38 | 24 |
| திரையற்றுத் தெளிந்த | 113 | 53 |
| திறமெலாம் வாய்க்கப் | 221 | 108 |


## தீ


| | | |
|---|---|---|
| தீரமிலேன் நானுன் | 330 | 41 |
| தீர்க்கமாய் | 199 | 6 |
| தீர்த்தமுரங் | 210 | 53 |
| தீர்த்தம் வழங்கினார் | 332 | 52 |
| தீர்த்தரில் பத்ம | 11 | 8 |
| தீர்த்தரும் சுதாவை | 343 | 20 |
| தீர்த்தர்கள் பலருந் | 342 | 17 |
| தீர்த்தர்தம் மடத்தை | 120 | 19 |


## து


| | | |
|---|---|---|
| துக்கமும் மகிழ்ச்சி | 164 | 2 |
| துங்கபத்திரைதொன் னதிக் | 310 | 1 |
| துங்கபத்திரையின் கண் | 322 | 4 |
| துங்கபத்திரையைத் | 349 | 3 |
| துதிப்பதே கருமம் | 140 | 72 |
| துப்புரவில்லையென் றே | 159 | 17 |
| துவராடையுடைய | 168 | 23 |
| துறவறங் கொண்டா | 132 | 33 |
| துறவறத்தின் பெருமை | 158 | 13 |
| துறவறந்தனையே | 43 | 20 |
| துறவறமேற்றற் | 321 | 9 |
| துறவறம் பூண்பான் | 144 | 89 |
| துறவினைக் கொண்ட | 161 | 24 |
| துறவுதான் கும்பகோணத் | 164 | 1 |
| துன்றுபாவமே | 34 | 9 |


## தூ


| | | |
|---|---|---|
| தூயநற்பத்தியோடு | 327 | 26 |
| தூயநெஞ் சந்தனைக் | 202 | 13 |
| தூயராகவர் | 4 | 1 |


## தெ


| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| தெங்கிளநீரின் | 93 | 16 |
| தெய்வத்தின் அம்சம் | 236 | 184 |
| தெய்வத்தின் குற்றம் | 356 | 22 |
| தெரிந்திட வேண்டுந் | 327 | 27 |
| தெருட்ட வந்தவன் | 97 | 40 |
| தெருட்டிட வேண்டும் | 97 | 36 |
| தெருவின் பாங்கமைந் | 233 | 164 |
| தெளிவிலார் நேற்று | 153 | 36 |
| தென்னரு ஞானத்தால் | 151 | 29 |


## தே


| | | |
|---|---|---|
| தேகமே நலங் | 144 | 91 |
| தேசாயின் மனைவியப்போ | 299 | 35 |
| தேசாயின் மனைவியென்னே | 295 | 14 |
| தேடியே ராகவேந்த்ரர் | 197 | 13 |
| தேவரே ராகவேந்த்ரர் | 246 | 13 |
| தேவர்கள் ஆண்டு | 18 | 8 |
| தேவியல் நூல்கள் | 278 | 21 |


## தொ


| | | |
|---|---|---|
| தொடர்ந்திடுந் துவாபரத்தில் | 56 | 10 |
| தொடர்ந்திடும் அவதாரந் | 38 | 25 |
| தொடுத்திட்டார் சேதி | 276 | 11 |
| தொட்டிலில் கிடந்த | 73 | 11 |
| தொண்டு செய்யுமுன் | 36 | 15 |
| தொன்மரபதனில் | 207 | 38 |


## தோ


| | | |
|---|---|---|
| தோன்றிய தவர்க்கு | 42 | 19 |
| தோன்றினான் காவிரிப் | 183 | 30 |


## ந


| | | |
|---|---|---|
| நகரின் மத்தியில் | 30 | 2 |
| நக்கலே செய்கின் றானோ | 286 | 32 |
| நங்கையிற்சிறந்த | 91 | 9 |
| நங்கையின் துன்பம் | 174 | 13 |

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| நச்சினார்க்கருணை | 358 | 7 |
| நடந்ததையறிவித்தற் | 237 | 190 |
| நடமாடக் கூடாத | 142 | 83 |
| நடுக்கமேகொண்டான் | 233 | 166 |
| நடையினைப் பெறுவ | 280 | 33 |
| நண்பர்தாம் கூறக் | 353 | 8 |
| நந்தம் புலவர்கள் | 31 | 26 |
| நந்தம் லோகத்தை | 30 | 22 |
| நரசிம்மகபில | 349 | 4 |
| நர்த்தனம் ஆடக் | 330 | 44 |
| நலக்குரியராம் மூல | 325 | 18 |
| நலமிகு மாதர் | 166 | 15 |
| நலமில் நாத்திகர் | 205 | 28 |
| நலமுடன் வாழ்கின்றோமே | 317 | 22 |
| நலம்பயக்கினும் | 37 | 21 |
| நலம்பெற வேண்டி | 307 | 4 |
| நல்லதாம் ஓரை | 90 | 5 |
| நல்லதுந்தீயதுந் | 220 | 102, |
| நல்லதோர் இந்த | 326 | 20 |
| நல்லதோர் குருவை | 264 | 50 |
| நல்லதோர் நாளில் | 307 | 3 |
| நல்லதோர் பொன்னாடை | 359 | 12 |
| நல்லபிருந்தா வனத்தில் | 67 | 63 |
| நல்லவர் வரவால் | 221 | 106 |
| நல்லவர் வாழவும் | 33 | 3 |
| நல்லறங்கொண்டே | 157 | 7 |
| நல்லறிவில்லேன் | 108 | 30 |
| நல்லுரைதனையே | 314 | 7 |
| நல்லோர்செய் | 63 | 44 |
| நவநவ அறிஞர் | 132 | 30 |
| நம்பிக்கையில்லை | 354 | 12 |
| நம்பிக்கை வைத்து | 67 | 65 |
| நம்பியாம் வேங்கன் | 149 | 17 |
| நம்பினோர் வாழ்வார் | 87 | 19 |
| நம்புவர்க்குத் துணை | 203 | 16 |
| நயமுடன் திருத்தி | 282 | 12 |
| நளன் துறந்தேகி | 137 | 57 |
| நன்னென் யாம்த்து | 151 | 28 |
| நறுமண மலரணிந்தே | 100 | 53 |

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| நற்கலைவிளை | 81 | 11 |
| நற்குரு ராச | 76 | 27 |
| நறைமலர்தூவி | 155 | 48 |
| நன்மதிப்பதுதான் | 110 | 38 |
| நன்றதெம் குலம் | 50 | 56 |
| நன்றந்த வாசகந் | 104 | 9 |
| நன்றாக விருந்தான் | 237 | 186 |
| நன்று நன்றுங்கள் செய்கை | 59 | 23 |
| நன்று நன்றுங்கள் வார்த்தை | 110 | 40 |
| நன்று நன்று நலம் | 321 | 7 |
| நன்று நும் வார்த்தை | 61 | 35 |
| நன்றுரைத்தார் | 314 | 5 |
| நன்றெற்றன் பதிலே | 343 | 24 |
| நன்றெனத் தீர்த்தரின் | 170 | 35 |
| நன்றென ஏற்றார் | 41 | 13 |
| நன்னயக் கல்வி | 80 | 9 |
| நன்னயமுடையநாத | 147 | 6 |


## நா


| | | |
|---|---|---|
| நாங்களே பொதுக்கி | 211 | 55 |
| நாடெங்கும் வாழ்வ | 263 | 45 |
| நாடெலாங் | 178 | 9 |
| நாட்டிற்கே | 288 | 6 |
| நாதத்தின் உலகம் | 206 | 32 |
| நாதரைச் சீடராக | 163 | 35 |
| நாதர்காதிலே | 150 | 25 |
| நாதனைக் குருவும் | 112 | 50 |
| நாமுமோம் நாரண | 333 | 56 |
| நாமுன்பு விட்டாச | 213 | 66 |
| நாம் சாதித்தோம் | 131 | 24 |
| நாயக்கர் ஆட்சி | 66 | 58 |
| நாயினுங் கடைய | 105 | 16 |
| நாரணன் அம்சமான | 167 | 18 |
| நாரணன் அம்சம் என்றே | 96 | 35 |
| நாரணன் அம்சம் சங்கு | 77 | 30 |
| நாரணனை ருணனாவான் | 176 | 3 |
| நாரணன் துணையை | 49 | 54 |
| நாரதன் தனக்குத் | 126 | 12 |

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| நாலுயுகத் திலும் | 33 | 5 |
| நாலு வேதமே | 30 | 19 |
| நால்வர்கள் | 20 | 18 |
| நால் வேதம் | 17 | 5 |
| நாளுக்கு நாளிவர் | 48 | 49 |
| நாளையே வேங்கடன் | 144 | 90 |
| நானவார் குழலி தன்னை | 146 | 2 |
| நானவார் குழலியுந் தான் | 55 | 3 |
| நாளிற் ததர்மம் | 326 | 23 |
| நானிலந் தனில் | 205 | 27 |
| நானீயே யென்றதாலே | 252 | 16 |
| நானுள்ளே வருதற் | 213 | 67 |
| நானென்ற உணர்வே | 189 | 60 |
| நானென்னும் அகந்தை | 124 | 5 |
| நானே நீயாக வுள்ளேன் | 251 | 9 |
| நானே நீயாகவே | 13 | 5 |
| நான் மட்டும் வாழ்வேன் | 263 | 46 |
| நான்முகன் வணங்கு | 61 | 33 |

## நி

| | | |
|---|---|---|
| நித்தியமாதுயிரே | 173 | 11 |
| நித்திரை நீங்கி | 151 | 30 |
| நிமலன் தன் கரங்கள் | 176 | 4 |
| நிம்மதியென்ப | 352 | 3 |
| நியமமுமியற்றிப் பூசை | 142 | 81 |
| நியமித்த விதியை | 216 | 82 |
| நிருவிளர்ப் பத்திலானார் | 272 | 6 |
| நிர்க்குணப் பிரம்மம் | 189 | 64 |
| நிலவுலகதனில் | 209 | 46 |
| நிறைந்தநற் பத்தி | 333 | 59 |
| நிற்கின்ற நிலையைக் | 231 | 157 |
| நினைக்கின்றார் | 133 | 37 |
| நினைத்தநல் இனிப்புப் | 229 | 145 |
| நினைப்பவர் மனதில் | 236 | 181 |
| நினைவினைக் கொண்டார் | 306 | 1 |
| நினைவினை எடுத்துச் | 356 | 20 |
| நினைவோடு வாழ்வார் | 95 | 29 |

## நீ

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| நீங்களும் உங்கள் | 292 | 25 |
| நீங்கள் யார் என்றே | 350 | 12 |
| நீங்கட வறுமை | 69 | 72 |
| நீங்கிடும் குறைகள் | 41 | 12 |
| நீண்ட வாயுள் நீ | 219 | 96 |
| நீதியை யுரைப்ப | 56 | 6 |
| நீதியொழிந் திடும் | 148 | 14 |
| நீத்தாரேயில் | 158 | 14 |
| நீயென்று சொன்ன | 13 | 6 |
| நீயென்றும் வாழ | 260 | 27 |
| நீராடி வந்தார் | 194 | 87 |

## நூ

| | | |
|---|---|---|
| நூலறி புலவன் | 254 | 9 |

## நெ

| | | |
|---|---|---|
| நெக்குநெக்குருக | 287 | 1 |
| நெடிதிலைகரை | 335 | 4 |
| நெடுநேரம் தியானம் | 206 | 30 |
| நென்னல்யாம் | 114 | 58 |

## நே

| | | |
|---|---|---|
| நேயமாய் நியமங் | 218 | 89 |

## நொ

| | | |
|---|---|---|
| நொந்துமே வந்தார் | 152 | 35 |

## ப

| | | |
|---|---|---|
| பகருமப்சா என்னும் | 131 | 27 |
| பகலவன் உதித்த | 168 | 21 |
| பகுத்துண்டு வாழ்தல் | 118 | 11 |
| பக்குவமடையா | 344 | 27 |
| பக்குவமில்லாத் | 152 | 31 |
| பக்தராய் வந்தோர் | 351 | 15 |
| பக்தர்கள் குறை | 330 | 45 |

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| பக்தனில் வாரு | 232 | 160 |
| பக்தியால் சாலக்ராமம் | 192 | 79 |
| பக்தியால் பயமுறன் | 274 | 1 |
| பக்தியால் மதுரை | 243 | 11 |
| பக்தியின் பாலராகிப் | 166 | 14 |
| பக்தியே கொண்டு | 281 | 5 |
| பங்குனி மாதந் | 167 | 19 |
| பசியின் துன்பமாப் | 98 | 44 |
| பஞ்சந்தான் மிகவே | 127 | 4 |
| படித்ததில் பிழை | 286 | 29 |
| படித்துறையிறங்கி | 351 | 16 |
| படியினில் மிக்க | 248 | 7 |
| பட்டதும் பிரம்ம | 235 | 176 |
| பட்டமும் பெற்றார் நல்ல | 119 | 15 |
| பட்டமும் பெற்றார் மேலோர் | 163 | 36 |
| பட்டறவுடையார் | 86 | 11 |
| பட்டுப்போம் மரந் | 268 | 14 |
| பணமென்ற | 260 | 30 |
| பண்ணையில் வேலை | 296 | 16 |
| பதஞ்சலிமுனி | 11 | 10 |
| பதியினில் தூய | 351 | 14 |
| பதுமத்தின் தோன்றி | 60 | 26 |
| பத்தியாளைந்த | 348 | 2 |
| பத்தொடு ஒன் பான் | 181 | 19 |
| பந்தமேயகற்றித் | 168 | 22 |
| பந்தனையறுக்கும் | 102 | 1 |
| பந்தியில் அவனை | 210 | 54 |
| பரசுவின் விசைப் | 170 | 34 |
| பரதகண்டத்தில் | 244 | 2 |
| பரத்தினையெள்ளி | 349 | 6 |
| பரந்தனவிரி | 28 | 10 |
| பரந்தநல் நெற்றி | 75 | 24 |
| பரந்தாமன் அவனின் | 181 | 20 |
| பரமன் பாற்கடல் | 28 | 13 |
| பரிமள பட்டம் | 116 | 70 |
| பரிமேதயாகம் | 193 | 81 |
| பலிபீடம் ஒன்றை | 308 | 9 |
| பல்லக்கேயிருந்தாலும் | 269 | 2 |
| பழியின்றிப் | 118 | 8 |

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| பறக்கும் பர்வதம் | 31 | 24 |
| பற்பல பொருள்கள் | 292 | 29 |
| பற்றற்றான் பற்றினை | 138 | 60 |
| பற்றினார் நல்ல | 124 | 2 |
| பற்றினால் அன்றோ | 107 | 23 |
| பற்றுவேறில்லா | 125 | 8 |
| பன்னருவியாச | 44 | 26 |
| பன்னிரண்டாண்டு கல்வி | 44 | 29 |
| பன்னிரண்டாண்டு காலம் | 43 | 21 |
| பன்னிரண்டாழ்வார் | 19 | 15 |
| பன்னிளன் பகவன் | 58 | 20 |
| பன்னூல் கலையை | 48 | 48 |


## பா


| | | |
|---|---|---|
| பாகமேயில்லா | 352 | 18 |
| பாக்கியம் பெற்றேன் | 213 | 69 |
| பாடியம்பல | 11 | 7 |
| பாடினானவன் | 217 | 86 |
| பாண்டவர் துவாபர | 308 | 10 |
| பாண்டுரங்களின் | 51 | 63 |
| பாபந்தான் | 211 | 59 |
| பாப்பராய் | 287 | 33 |
| பாமகன் மந்திர | 150 | 24 |
| பாமரர்பக்தர் | 167 | 17 |
| பாரதத்தின் பெருமை | 64 | 46 |
| பாரத நாடு | 17 | 2 |
| பாரதப் பெருமை | 23 | 34 |
| பாரதிதானும் | 59 | 22 |
| பாரதி வாழ்ந்தார் | 204 | 22 |
| பார்த்தனின் | 330 | 42 |
| பார்த்திட்டீர் | 237 | 187 |
| பாலகன் தனக்கே | 78 | 35 |
| பாலபீடம் | 186 | 48 |
| பால்குணமாகும் | 70 | 79 |
| பால்குண மாதத் | 168 | 25 |
| பாளையக் காரர்தம்மால் | 265 | 3 |
| பாளையக் காரன் தன்பால் | 269 | 19 |
| பானுவின் கதிர் | 48 | 45 |

## பி

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| பிட்டுக்கு...பட்டான் | 242 | 2 |
| பிட்டுக்கு...யேற்றான் | 60 | 28 |
| பிணத்தின் மேற்பட்ட | 41 | 11 |
| பிதாகரஸ் என்ற | 308 | 8 |
| பிரமதீர்த்தரை | 40 | 9 |
| பிரமன் அண்டத்தை | 27 | 5 |
| பிரமனவன் சாபத்தை | 36 | 17 |
| பிரம்ம தண்டத்தால் | 270 | 7 |
| பிரம்மத்தின் உணர்வு | 190 | 68 |
| பிரம்மத்தைக் கண்டு | 233 | 168 |
| பிறநலங் கொண்டு | 161 | 23 |
| பின்னரே ராகவேந்த்ரர் | 277 | 18 |

## பீ

| | | |
|---|---|---|
| பீஜப்பூர் நகரிருந்தே | 212 | 60 |

## பு

| | | |
|---|---|---|
| புகழ்பெற்ற ராகவேந்த்ரர் | 245 | 9 |
| புகன்றிட்ட வார்த்தை | 138 | 59 |
| புங்கவ பிழையை | 302 | 9 |
| புங்கவர் புவியைப் | 140 | 69 |
| புண்ணியத் துறைகள் | 130 | 19 |
| புண்ணிய வசத்தினாலே | 261 | 36 |
| புதுவாரும் மாலைக் | 95 | 28 |
| புதியுறன் மலர்கள் | 193 | 80 |
| புதுப்புவம் தோன்றிற் | 203 | 19 |
| புயல்மிகத்தாக்கு | 109 | 34 |
| புரத்தினல் மூலை | 358 | 9 |
| புரந்தரதாசர் | 50 | 57 |
| புலமையை நன்கு | 81 | 13 |
| புலியின் துன்ப | 35 | 13 |
| புவிபுனவெல்லாம் | 226 | 130 |
| புழுவொன்றே | 252 | 15 |
| புறம்பலபேச | 118 | 7 |
| புனிதமாம் யாத்திரை | 271 | 1 |
| புனிதறாம் ராகவேந்த்ரர் | 291 | 20 |
| புனுகு சந்தனம் | 166 | 11 |

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| புன்னகை...அன்னார் | 115 | 63 |
| புன்னகை...கேட்டு | 190 | 66 |
| புன்னகை புரிந்து | 215 | 78 |

## பூ

| | | |
|---|---|---|
| பூசினார் சந்தனத்தை | 122 | 10 |
| பூசையே முடியுநேரம் | 297 | 24 |
| பூசையைத் தொடங்கு | 291 | 21 |
| பூண்டபேறன்பின் | 226 | 129 |
| பூதமாம் உடலோடின்று | 326 | 21 |
| பூபாலநரசிம்மன் புலம்பலைக் | 50 | 59 |
| பூபால நரசிம்மன் பூமியை | 52 | 65 |
| பூபாலனுடைய | 49 | 52 |
| பூப்புனைந்தொளிரும் | 97 | 37 |
| பூரண ரஜ்ஞர் | 13 | 9 |
| பூவின் புறவிதழ் | 3 | 13 |

## பெ

| | | |
|---|---|---|
| பெரியவர் ஆசி | 40 | 7 |
| பெரியவர்தம்மை | 281 | 6 |
| பெரியவர் தாங்கள் | 153 | 38 |
| பெரியவர் ராகவேந்த்ரர் | 283 | 13 |
| பெருந்தல சிரேட்ட | 43 | 23 |
| பெருமணம் பெற்றார் | 88 | 24 |
| பெருமனைப் பரப்பின் | 271 | 5 |
| பெருமனையதனில் | 120 | 1 |
| பெருமிதங் கொண்டே | 356 | 19 |
| பெருமையாம் ஆஷாடத்தின் | 277 | 16 |
| பெருமையாம் இறையே | 15 | 16 |
| பெருமையாம் மாஞ்சாலத்தை | 306 | 26 |
| பெற்றோரையுற்றோ | 281 | 3 |

## பே

| | | |
|---|---|---|
| பேசினார்சீடர் | 110 | 39 |
| பேசுதற்கரிய | 44 | 25 |
| பேதமற்றிப் | 331 | 47 |
| பேதமேயிலாப் | 319 | 31 |
| [illegible] | 33 | 2 |

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| பேரருள் ஞானி | 187 | 50 |
| பேரறிவாளன் | 294 | 9 |
| பேரிடபகம் | 331 | 49 |
| பேழையை யெடு | 234 | 174 |

## பை

| | | |
|---|---|---|
| பையலே பிறந்து | 238 | 194 |

## பொ

| | | |
|---|---|---|
| பொங்குமன் பின் | 316 | 15 |
| பொதுநலம் என்றால் | 258 | 17 |
| பொதுநலம் என்றே | 257 | 16 |
| பொய்யினில் உருவ | 139 | 67 |
| பொருளிலா இல் | 119 | 14 |
| பொருளிலார்க்குலகம் இல்லை | 176 | 2 |
| பொருளிலார்க்குலகே | 261 | 34 |
| பொருளிலே நாட்டங் | 109 | 35 |
| பொருளினைத் தேடி | 258 | 21 |
| பொருளுடையோரை | 125 | 10 |
| பொருள் கொண்டு | 264 | 49 |
| பொலன் நிறங் கொளும் | 37 | 22 |
| பொலிவாகும் என்றே | 128 | 12 |
| பொலிவினைப் பெற்று | 71 | 3 |
| பொலிவுடன் விளங்கி | 225 | 124 |
| பொறித்திடும் உருவஞ் | 314 | 9 |
| பொன்றிடாப் புகழ் | 111 | 45 |
| பொன்னாலே பொருளினாலே | 361 | 1 |
| பொன்னின் ஆசை | 315 | 10 |
| பொன்னுமெய்...அன்னார் | 63 | 42 |
| பொன்னுமெய்...சேர்ந்தால் | 263 | 52 |
| பொன்னே மணியே | 181 | 23 |
| பொன்னையே பொருளே | 146 | 1 |
| பொன்னொடு ... அற்றார் | 231 | 155 |
| பொன்னொடு... ஈவேன் | 234 | 171 |
| பொன்னொடு ... சேரப் | 364 | 3 |
| பொன்னொடு... வேண்டான் | 216 | 81 |

## போ

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| போர்த்திணார் வேங்கடர் | 114 | 57 |
| போலியாய்ச் சொல்லி | 275 | 9 |
| போலியைக் கண்டு | 239 | 197 |
| போற்றிசெய் புகழ் | 111 | 42 |
| போற்றி செய் ராகவேந்திரர் | 192 | 78 |
| போற்றியென் னாவியிற் | 177 | 7 |
| போனமுன் ஜென்மத் | 287 | 34 |

## ம

| | | |
|---|---|---|
| மகவாஞ் சற்புத் | 20 | 19 |
| மகாபாடியத்தை | 132 | 29 |
| மகானின் முன் | 306 | 27 |
| மகிழ்ச்சிமீதூற | 218 | 93 |
| மக்களாற் போற்ற | 125 | 9 |
| மக்களில் ஒருவராக | 1 | 2 |
| மக்களில் சிலர் | 29 | 17 |
| மக்களின் ஆட்சி | 60 | 30 |
| மக்களின் செல்வம் | 68 | 70 |
| மக்களின் தீர்ப்பே | 57 | 12 |
| மக்களும் மன்னர்தாமும் | 222 | 113 |
| மக்களும் மன்னன் எல்லாம் | 324 | 14 |
| மக்களே வாழ வேண்டி | 259 | 26 |
| மக்களைப் பெற்றார் | 157 | 9 |
| மக்கள் விழித்தா | 203 | 17 |
| மங்கலமகளிர் | 97 | 38 |
| மங்கலவிசை | 295 | 13 |
| மங்கையாம் | 91 | 7 |
| மஞ்செனக் குளிர் | 315 | 12 |
| மஞ்செனு மழை | 227 | 136 |
| மடத்தில் நன் | 132 | 32 |
| மடத்தினில் நீர் | 247 | 3 |
| மடத்தினில் மூல | 133 | 36 |
| மடத்தினில் வாழுஞ் | 141 | 74 |
| மடத்தினின் பொறுப்பை | 355 | 17 |
| மட்டிலா மகிழ்ச்சி | 243 | 10 |
| மணங்கொளுநல் | 94 | 22 |

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| மணங் கொளு மலரே | 250 | 3 |
| மணவணியணிந்த | 219 | 97 |
| மணவினை முடித்தற் | 94 | 25 |
| மண்டுகாதலின் | 311 | 7 |
| மண்ணினில் மக்களெல்லாம் | 108 | 28 |
| மண்ணினில் மக்கள் கொண்ட | 108 | 29 |
| மண்ணினில் வாழ்வு | 263 | 44 |
| மதமெலாங் கடந்தெம் | 178 | 11 |
| மதுரை மாநகரிருந்தே | 250 | 1 |
| மதுரையம் பதிக்கு | 79 | 2 |
| மதுரையம் பதியில் | 67 | 64 |
| மதுரையும் வேலூர் | 221 | 105 |
| மத்தளவோசை | 96 | 32 |
| மத்துவ சீடராக | 91 | 8 |
| மத்துவச்சாரி | 103 | 3 |
| மத்துவச் சீடனாக | 173 | 9 |
| மத்துவச் சுரேந்திரர் | 67 | 62 |
| மத்துவ மடத்தின் தீர்த்தர் | 171 | 37 |
| மத்துவ மடத்தில் உள்ள | 180 | 17 |
| மத்துவ மரபின் | 156 | 5 |
| மத்துவர் ஆஞ்சனேயர் | 10 | 2 |
| மத்துவரின் நல்மகிமை | 66 | 60 |
| மத்துவர் தத்துவத்தை | 166 | 13 |
| மத்துவர் திருமடத்தின் | 74 | 18 |
| மத்துவர் தோன்ற | 253 | 3 |
| மத்துவர் நெறிகள் | 96 | 31 |
| மத்துவர் வணங்கும் | 186 | 47 |
| மத்துவர் விளக்கற் | 188 | 56 |
| மந்திரத்தாலே | 267 | 9 |
| மந்திரத்தன்னால் | 267 | 11 |
| மந்திரம் ஓதி | 184 | 38 |
| மயிர்ரும் முழந்த | 221 | 104 |
| மரத்தடிபடுத்தே | 282 | 11 |
| மரபுளோர் வந்தார் | 155 | 47 |
| மருத்துவர் வந்து | 363 | 13 |
| மலரின் செல்வியும் | 28 | 11 |
| மலர்ந்தன முகமும் | 104 | 10 |
| மலையம் மாருதம் | 323 | 9 |
| மலையிலே சிறந்த | 17 | 4 |

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| மல்லல் ஞாலத்து | 325 | 19 |
| மல்லல் மாஞ் சால | 320 | 1 |
| மறதியே யற்றனாய் | 135 | 47 |
| மறவாதே ராகவேந்த்ரர் | 313 | 1 |
| மறுத்திட்டான் | 143 | 85 |
| மறுவறுகுண | 95 | 26 |
| மறுவார்த்தை | 232 | 161 |
| மற்றவர்க்கிடையூறாக | 357 | 4 |
| மனங்கொண்ட | 258 | 18 |
| மனமது நெகிழ்ந்த | 140 | 71 |
| மனமெனுங் கருவி | 58 | 17 |
| மனமெனும் விழிப்பை | 180 | 18 |
| மன்றவைப் பூசை | 294 | 6 |
| மன்னரே பிழை | 302 | 10 |
| மன்னர்கள் பலருந் | 346 | 6 |
| மன்னவன் திவானும் | 323 | 7 |
| மன்னவன் மதி | 224 | 122 |
| மன்னனுஞ் சென்றான் | 301 | 2 |
| மன்னாயில்வுலகில் | 118 | 9 |
| மன்னித்தே யருள | 225 | 126 |
| மன்னுமூலராமர் | 227 | 134 |
| மன்னும் மைசூர் | 39 | 2 |


## மா


| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| மாகமேல்மழைமுகிலும் | 32 | 32 |
| மாகமேல் மழையே | 253 | 4 |
| மாகமேல்... போன்றார் | 302 | 6 |
| மாகமேல்... ராகவர் | 227 | 137 |
| மாகமேல்...ராகவேந்திர | 364 | 1 |
| மாஞ்சாலமென்னும் | 346 | 3 |
| மாஞ்சாலம் வேண்டாம் | 304 | 18 |
| மாஞ்சாலியம்மனாக | 310 | 5 |
| மாஞ்சாலியம்மன் தன்னை | 310 | 2 |
| மாஞ்சாலியம்மன் மகத்துவத்தை | 1 | 3 |
| மாஞ்சாலியம்மன் மகத்துவம் | 1 | 4 |
| மாடுமேய்த் தெனக்கே | 287 | 2 |
| மாட்சிமையுடைய | 152 | 34 |
| மாணவர் வழக்கம் | 254 | 1 |
| மாணவி என்னும் | 212 | 63 |

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| மாதும் ஆவணி | 322 | 2 |
| மாதவச் சிரேட்டர் | 269 | 1 |
| மாதவுயிர்த்தர் | 12 | 4 |
| மாதவமுடைய | 192 | 76 |
| மாதவம் பெற்றதாலே | 70 | 76 |
| மாநில வாழ்வில் | 264 | 51 |
| மாந்தரில் மிகுந்து | 83 | 21 |
| மாமனும் சிறுவரோடு | 282 | 9 |
| மாமுனி மைதிலி | 16 | 21 |
| மாயக்கள் வளைவளை | 205 | 29 |
| மாயத்தைமொழி | 195 | 4 |
| மாயவன் அருளால் | 88 | 23 |
| மாவிலைத் தோரணத் | 165 | 7 |
| மாறும் பூஜை | 324 | 11 |
| **மி** | | |
| மிக்கதாங் கலக்கத் | 286 | 31 |
| மிக்கபெரும் கலை | 93 | 19 |
| மிக்கபோர்நடந்த | 65 | 54 |
| மிக்கவல் வெழுத்தின் | 72 | 9 |
| மிஞ் சியசந்தனத் | 123 | 15 |
| மிஞ் சியே மிருக்கு | 315 | 13 |
| மிருதங் கமுதலா | 187 | 51 |
| **மு** | | |
| முக்காலந் தனை | 313 | 2 |
| முக்காலம் உயர்ந்த | 198 | 1 |
| முக்குணங் கொளு | 29 | 16 |
| முன்றியே மளிக்க | 357 | 1 |
| முடிசார்ந்த மன்னர் | 107 | 25 |
| முடிந்தது முறைமார் | 299 | 32 |
| முடிந்தனன் அட்சதைக் | 283 | 16 |
| முடியின் மேல் | 175 | 19 |
| முத்தியென் பது | 148 | 15 |
| முத்தியையளிக்க | 247 | 4 |
| முத்திறன் மடத்திலுள்ள | 218 | 90 |
| மூத்திய ஆசிரமதில் | 339 | 3 |
| மூப்படுதோடாரு | 339 | 4 |
| முப்போதும் அதிர்த | 230 | 151 |
| முப்போது முணர்ந்த | 222 | 109 |
| மும்முறைவலம் | 248 | 10 |
| மும்மையா முக | 55 | 4 |
| முராவெனும் அரக்கன் | 202 | 12 |
| முறைமொடுதமதுர் | 235 | 180 |
| முற்பகல் ஜெடித்து | 191 | 72 |
| முற்படித் திவரவே | 341 | 14 |
| முற்பெறு தவத்தால் | 146 | 3 |
| முற்பெறு மில்லைத்தின் | 321 | 10 |
| முற்று ஞான | 3 | 11 |
| முற்றுணர்ந்த | 2 | 7 |
| முனிவருள் முடி | 169 | 30 |
| முன்சென்ற பிறவி | 234 | 169 |
| முன்சொல் ராகவர் | 3 | 12 |
| முன்புதாம் கொண்டு | 280 | 32 |
| முன்னதாம் யுகத்தில் | 341 | 13 |
| முன்னதாம் விபுதேந்திர | 245 | 6 |
| முன்னதாய்ச் சென்ற | 57 | 11 |
| முன்னதாய் எழுந்தார் | 323 | 5 |
| முன்னதாய் எழுவன் | 79 | 3 |
| முன்னதாய் வந்தே | 305 | 22 |
| முன்னவர் பொருளை | 74 | 16 |
| முன்னாளில் எம்பி | 361 | 2 |
| முன்னான் முதலை | 182 | 24 |
| முன்னிலை வகித்தார் | 156 | 1 |
| முன்னூறு நூறு ஆக | 364 | 4 |
| முன்னையுகத்திலும் | 311 | 9 |
| முன்னைவினையினால் அன்னை | 151 | 26 |
| முன்னைவினையினால் முழுதருள் | 331 | 48 |
| முன்னைவினையினால் முற்பெறு | 319 | 30 |
| முன்னைவினையின் | 315 | 11 |
| முன்னெருகாலத் | 47 | 40 |
| முன்னோர்கள் வாழ்ந்த | 263 | 47 |
| **மூ** | | |
| மூடனாய் அவனை | 281 | 4 |
| மூடினான் போர்வை | 358 | 5 |
| [illegible] | 134 | 40 |

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| மூல காரணன் முழுதருள் | 340 | 5 |
| மூலகாரணன் முழுதுணர் | 35 | 12 |
| மூலமே புணர்ந்த | 179 | 13 |
| மூலராமர் ஆசி | 306 | 28 |
| மூலராமரின் மந்திரம் | 320 | 5 |
| மூலராமரின் முழுதருள் | 324 | 13 |
| மூலராமரையே | 274 | 3 |
| மூலராமர் பூசையை முடித்து | 299 | 33 |
| மூலராமர் பூசையை யேற்கவே | 169 | 27 |
| மூலராமர் மந்திர | 2 | 9 |
| மூலராமர் முதல் | 170 | 33 |
| மூலராமர் முழுதருள் | 226 | 133 |
| மூலனாம்...முனிவராம் | 290 | 18 |
| மூலனாம்...மூச்சென | 294 | 7 |
| மூலனாய் விளங்கு | 16 | 22 |
| மூவகையாக உள்ள | 116 | 67 |
| மூவரும் சாதகத்தால் | 199 | 7 |
| மூவாண்டுறு றெல் | 100 | 55 |

## மெ

| | | |
|---|---|---|
| மெத்தகு சீர்மை | 39 | 4 |
| மெத்துவைகாசி | 91 | 6 |
| மெய்யில் கோபியே | 98 | 43 |
| மெய்வகை கண்டு | 333 | 58 |

## மே

| | | |
|---|---|---|
| மேகம் போல் அருளும் | 197 | 15 |
| மேகம் போலருள் | 336 | 7 |

## மை

| | | |
|---|---|---|
| மைந்தனின் புகழ் | 42 | 16 |

## மொ

| | | |
|---|---|---|
| மொழியெனாங் | 178 | 10 |

## மோ

| | | |
|---|---|---|
| மோகந்தவிர்ந்த | 204 | 21 |
| மோட்சமே வேண்டி | 216 | 80 |

## யா

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| யாகத்தினின்று | 224 | 123 |
| யாகமே செய்தார் | 223 | 115 |
| யாகமே செய்வதாக | 266 | 8 |
| யாதவச் சாரியர் | 279 | 26 |
| யாதே செய்வ | 182 | 26 |
| யாத்திரை கொண்டார் | 265 | 2 |
| யாத்திரை கொள்ள | 142 | 80 |
| யார்நீ தான் என்று | 235 | 177 |
| யாழின் நரம்பென | 147 | 10 |
| யாளென்றும்...கோளென்றும் | 107 | 22 |
| யாளென்றும்...வாளென்றும் | 256 | 11 |
| யாளென்ன செய்வேன் | 362 | 9 |
| யான் செய் பிழையை | 2 | 5 |

## யோ

| | | |
|---|---|---|
| யோகசாதனத் | 208 | 43 |
| யோமுத்திரை | 334 | 61 |

## ரா

| | | |
|---|---|---|
| ராகவர்பேரைச் | 233 | 167 |
| ராகவர் வந்தாரென் றே | 204 | 20 |
| ராகவேந்திரர் | 231 | 154 |

## வ

| | | |
|---|---|---|
| வஞ்சனையற்றோர் | 54 | 78 |
| வடக்கின் கண் | 24 | 7 |
| வடதிசை | 24 | 4 |
| வடவையாக்கினி | 53 | 71 |
| வந்தவர்தம்மை | 128 | 11 |
| வந்தவர் பலரும் | 155 | 50 |
| வந்தனர் அரண்மனை | 289 | 10 |
| வந்தனை செய்தார் | 186 | 49 |
| வந்தாரிவர் வந்த | 67 | 61 |
| வயங்குறுங் கண்ணி | 162 | 30 |
| வயித்தியராலும் | 353 | 5 |
| வயித்தியர் பலரும் | 353 | 4 |
| வரண்டு போன | 227 | 135 |

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| வருவோர்க்கும் | 222 | 112 |
| வல்லவனாக | 81 | 10 |
| வழுவிலாதுலகோர் | 327 | 25 |
| வழுவிலாவரசன் | 222 | 111 |
| வளம்பல கொழிக்கும் | 303 | 14 |
| வளர்ந்தனர் ஓளி | 70 | 78 |
| வளர்பிறைமுன்றாம் | 167 | 20 |
| வள்ளல் ராகவேந்திரர் | 339 | 2 |
| வறுமையின் உச்சி | 127 | 7 |
| வறுமையே உற்றார் | 120 | 17 |

## வா

| | | |
|---|---|---|
| வாகைசூடுநல் | 97 | 39 |
| வாங்கினார் அட்சதை | 278 | 25 |
| வாசி நடத்தும் வல்லமை | 332 | 53 |
| வாஞ்சையாலவன் | 217 | 88 |
| வாடுந்தாமரை | 31 | 25 |
| வாட்டமேயற்று | 328 | 34 |
| வாதித்தார் மாயா | 131 | 25 |
| வாயுவானவன் | 36 | 16 |
| வாரி தன்னிடை | 3 | 10 |
| வாலகில்லியப் | 196 | 7 |
| வாலறிவினன் | 342 | 16 |
| வாமுநன் முறை | 260 | 28 |
| வாழையும்மாவின் | 93 | 17 |
| வாழ்வதற்காக | 259 | 25 |
| வாழ்வியல் அறிந்து | 162 | 28 |
| வாழ்வியல் நூல் | 23 | 32 |
| வாழ்விலே களங்கங் | 211 | 56 |
| வாழ்வெனக் கூறுந் | 163 | 33 |
| வானுளோர்போற்றும் | 85 | 6 |
| வானுறு தெய்வம் | 171 | 38 |
| வான்மீகி வகுத் | 21 | 23 |

## வி

| | | |
|---|---|---|
| விசயநகரசமஸ் | 49 | 51 |
| விசயநல்சாம்ராஜ்யந் | 85 | 8 |
| விடியும்முன்னே | 323 | 8 |
| விட்டுணுவான | 188 | 57 |
| விண்ணதில் வேதன் | 66 | 57 |
| வித்தகம்பேச | 204 | 24 |
| வித்தகரென்றே | 86 | 14 |
| வித்தியாபீடத் | 46 | 38 |
| வித்துவச்சபை | 74 | 17 |
| விரிசடைக்கடவுள் | 60 | 27 |
| விருந்தினைப்போற்று | 157 | 10 |
| விரைவினில் மூவர் | 230 | 150 |
| விரைவினில் சென்றார் | 153 | 37 |
| விலங்குகள் பறவை | 259 | 24 |
| விலங்குபோல் மனிதன் | 58 | 18 |
| விழுந்தது துளவ | 334 | 64 |
| விளக்கமே கேட்க | 279 | 28 |
| விளங்கிட விழுந்த | 255 | 6 |
| விளையினால் ஆகும் | 343 | 23 |

## வீ

| | | |
|---|---|---|
| வீடிலேன் காணி | 197 | 11 |
| வீரமும் உடையாய் | 136 | 51 |

## வெ

| | | |
|---|---|---|
| வெகுபாலைவனத்தின் | 269 | 4 |
| வெகுபுகழ் சுதீர்ந்த | 220 | 103 |
| வெங்கடதேசாயில்லாள் | 296 | 17 |
| வெங்கடபதிராயர் | 250 | 4 |
| வெங்கணர் விருப்பை | 289 | 11 |
| வெங்கணா பயப்படாதே | 283 | 14 |
| வெங்கணா விசேடமுண்டோ | 302 | 7 |
| வெங்கணான் அவரும் | 316 | 19 |
| வெங்கணான் கிராமத் | 284 | 21 |
| வெங்கணான் சொல்வ | 301 | 3 |
| வெள்ளியால் ரதத்தைச் | 356 | 23 |
| வெல்வினை போக்க | 76 | 26 |

## வே

| | | |
|---|---|---|
| வேகமாகவே | 28 | 9 |
| வேங்கடகிரியின் | 69 | 73 |
| வேங்கடர்நாராக்கே | 164 | 4 |

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| வேங்கடநாதர் கட்டும் | 127 | 5 |
| வேங்கடநாதர் கண்டார் | 146 | 4 |
| வேங்கடநாதர் தம்மை | 122 | 12 |
| வேங்கடநாதர் தாளில் | 123 | 16 |
| வேங்கட நாதர் தாளும் | 104 | 8 |
| வேங்கட...விரும்பி | 106 | 18 |
| வேங்கட... வேண்டியாம் | 68 | 69 |
| வேங்கட...வேண்டிவேன் | 154 | 42 |
| வேங்கடன் அருளால் | 91 | 10 |
| வேங்கட நாதனுக்கு | 76 | 28 |
| வேங்கடநாதனை | 50 | 58 |
| வேங்கடநாதன் தன்னை | 71 | 4 |
| வேங்கடநாதன் விண்ட | 103 | 5 |
| வேங்கடர்மனைவி | 156 | 4 |
| வேங்கடவா வேண்டுகிறேன் | 93 | 20 |
| வேங்கடனை வேண்டி | 173 | 10 |
| வேண்டினார் வேண்டு | 365 | 6 |
| வேதகோஷங்கள் | 167 | 16 |
| வேதத்தை வகுத்து | 10 | 3 |
| வேதநெறி தழைத்தோங்க | 265 | 1 |
| வேதமந்திர | 170 | 31 |

| | பக்கம் | பாடல் |
|---|---|---|
| வேதமும் கலைகள் | 68 | 66 |
| வேதமுங் கற்றோன் | 246 | 11 |
| வேதமே கற்று | 121 | 3 |
| வேதவித்தகன் | 135 | 44 |
| வேதனை மிக்க | 58 | 16 |
| வேதாந்த சித்தாந்த | 23 | 33 |
| வேதாந்த விளக்க | 109 | 36 |
| வேதியர் கூடி | 248 | 9 |
| வேலை நீ செய்த | 121 | 5 |


## ஹ


| | | |
|---|---|---|
| ஹம்பிக்கு அருகே | 54 | 77 |


## ஸ்ரீ


| | | |
|---|---|---|
| ஸ்ரீவைகுண்டத் | 22 | 27 |